வந்துவிட்டார்! திகம்பர சாமியார்

# மேனகா




2

வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மேனகா

இரண்டாம் பாகம்

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், B.A.,

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிவு
ஜெனரல் பப்ளிஷர்ஸ்
முதற் பதிப்பு - 2004

© பதிப்பகத்தார்

மொத்த பக்கங்கள் : 336

**விலை: ரூ. 125.00**

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

Laser Typeset by – **KLM Printers,** Chennai **& Print Point Graphics,** Chennai – 20.
Printed by – **Jai Ganesh Offset Printers,** Chennai – 4.

## 17 வது அதிகாரம்

# அணாங்கோ ? ஆய்மயிலோ ?

(தொடர்ச்சி.....)

தன்னை மேனகா உற்று நோக்குவதைக் கண்ட நூர்ஜஹான் கன்றிற் கிரங்கும் தாயைப்போல அன்பும் இனிமையும் பெய்த முகத்தோடு அவளது கன்னத்தைத் தடவிக் கொடுத்து, "அம்மா! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? இன்னமும் மயக்கமாக விருக்கிறதா?" என்று கேட்டாள்.

உடனே மேனகா ஏதோ வார்த்தை சொல்லத் தொடங்கினாள்; ஆனால், அவள் பேசியது ஒருவன் கிணற்றுக்குள்ளிருந்து பேசுதலைப்போல விருந்தது. "அம்மா! நான் ஏதோ உடம்பு அசௌக்கியப்பட்டுக் கிடப்பதாய்த் தெரிகிறது. நீ என் விஷயத்தில் காட்டும் அந்தரங்கமான அன்பையும், படும் பாடுகளையும் காண என் மனம் உருகுகிறது. என்னைப்பெற்ற தாய்கூட இவ்வளவு அருமை பாராட்டிக் காப்பாற்றுவாளோ வென்ற சந்தேகம் உதிக்கிறது. நீ மகா உத்தமியென்பதை உன் முகமே காட்டுகிறது. ஆகையால், உன்மேல் எவ்விதமான சந்தேகங் கொள்ளவும் என் மனம் இடந்தரவில்லை என்றாலும் சில விஷயங்களை அறிந்து கொள்ள என் மனம் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறது. தயவு செய்து நான் கேட்பதைத் தெரிவிப்பாயா?" என்றாள். உடனே நூர்ஜஹான் முகமலர்ச்சி யடைந்து, "எல்லா விஷயங்களையும் சந்தோஷமாகத் தெரிவிக்கிறேன். எதை வேண்டுமானாலும் கேட்கலாம்" என்று கூறினாள்.

முற்றிலும் அந்தரங்கமான அபிமானத்தைக் காட்டிய அந்தச் சொல்லைக் கேட்ட மேனகா சிறிது ஆறுதலும் துணிவு மடைந்து, "நான் இப்போது எங்கிருக்கிறேன்? நேற்றிரவு நான் கண்ட மகம்மதியருக்கு நீ அநுகூலமாயிருப்பவளா? அல்லது, எனக்கு அநுகூலமாயிருப்பவளா? என் தேகம் இப்போது களங்கமற்ற நிலைமையிலிருக்கிறதா? அல்லது, களங்க மடைந்து, தீயில் சுட்டெரிக்கத்தக்க நிலைமையிலிருக்கிறதா?" என்று மிகவும் நயந்து உருக்கமாகக் கேட்டாள்.

அவளது சொற்கள் மிக்க பரிதாபகரமாக விருந்தன; வாய் குழறியது. கண்களினின்று கண்ணீர் பெருகி வழிந்தது. நூர்ஜஹானது வாயிலிருந்து எவ்விதமான மறுமொழி வரப்போகிறதோ வென்று அவளது வாயையே உற்று நோக்கினாள். அந்த ஒரு நொடியும் ஒரு யுகமாய்த் தோன்றியது. இயற்கையிலேயே மேன்மையான குணமும் இளகிய மனமும் பெற்ற நூர்ஜஹான் அந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்டு நைந்திளகி மேனகாவினண்டையில் நன்றாக நெருங்கி அவளை அன்போடு அணைத்து, அவளது கண்ணீரைத் தனது முந்தானையால் துடைத்து, "அம்மா! அழாதே, உனது கற்பிற்குச் சிறிதும் பங்க முண்டாகவில்லை. நீ கத்தியால் குத்திக்கொள்ளப் போனதைக் கண்டு நானே உனது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கினேன். உடனே நீ பயத்தினால் மூர்ச்சையடைந்து, உயிரற்றவள் போலக் கீழே விழுந்து விட்டாய். நானும் என்னுடைய அக்காளும் உன்னை எடுத்து வந்து விட்டோம். இப்போது நாம் அந்த வீட்டிலில்லை. இது மைலாப்பூரிலுள்ள என் தகப்பனாருடைய பங்களா. நீ இனி கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்" என்று உறுதி கூறினாள். அந்த சந்தோஷகரமான செய்தியைக் கேட்டவுடனே மேனகாவின் தேகம் கட்டிற் கடங்காமல் பூரித்துப் புளகாங்கித மடைந்தது. நூர்ஜஹானது பேருதவியைப்பற்றி அவள்

மனதிலெழுந்த நன்றியறிவின் பெருக்கினால், உள்ளம் பொங்கி யெழுந்தது. கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. தென்றலால் நடுங்கும் மாந்தளிர்போல, அவளது மேனி துடித்தது. "அம்மா புண்ணியவதி! என்னுடைய கற்பைக் கொள்ளை கொள்ள நினைத்த கள்வனிடமிருந்து என்னைக் காப்பாற்றியதன்றி, என் உயிரைக்கவர்ந்து சென்ற எமனிடமிருந்தும் அதை மீட்ட பேருபகாரியாகிய உனக்கு நான் எனது நன்றியறிவை எவ்விதம் காட்டப்போகிறேன்!" என்று விம்மி விம்மி உருக்கமாகக் கூறினாள்.

**நூர்:-** நன்றா யிருக்கிறதே! கரும்பைத் தின்பதற்கு வாய் கூலி கேட்பதைப்போல இருக்கிறதே இது! விலை மதிப்பற்ற கற்பினாலேயே பெண்மக்களுக்கு இவ்வளவு மேன்மையும் பெருமையும் மதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால், ஒவ்வொரு ஸ்திரீயும் தனது உயிரைக் காட்டிலும் கற்பையே உயர்ந்ததாக மதித்து அதைக் காப்பாற்றக் கடமைப் பட்டிருக்கிறாள். நம்முள் ஒருத்தியின் கற்புக்குத் துன்பம் நேரிடுமாயின் அதை மற்றவள் தன்னுடைய துன்பமாகக் கருதி விலக்கக் கடமைப் பட்டிருக்கிறாள். அப்படிச் செய்யத் தவறுவாளானால் ஒருத்தியின் இழிவில் மற்றவளுக்கும் பங்கு கிடைக்குமென்பது நிச்சய மல்லவா! என்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொள்ள நான் எவ்வளவு தூரம் கடமைப் பட்டவளோ, அவ்வளவுதூரம் உன்னுடைய மானத்தைக் காப்பாற்றவும் நான் கடமைப்பட்டவள். நாம் உண்பதைக் குறித்து, கைக்கு வாயும், வாய்க்கு வயிறும், வயிறுக்கு எல்லா அவயவங்களும் உபசார வார்த்தை சொல்லி நன்றி செலுத்துதல்போல இருக்கிறது, இவ்விடத்தில் நாம் ஒருவருக்கொருவர் நன்று செலுத்துவது" என்றாள்.

நூர்ஜஹானது கண்ணிய புத்தியையும் உயர்ந்த குணங்களையும் ஜீவகாருண்யத்தையும் கண்ட மேனகா பெரு

விம்மிதங்கொண்டு தாங்க மாட்டாமல் மெய்ம்மறந்து சிறிது மௌனமாயிருந்தபின், "ஈசுவரன், மலைபோல வந்த என் ஆபத்தை, மகா உத்தமியான உன்னுடைய நட்பைக் காட்டி, பனி போல விலக்கிவிட்டான் போலிருக்கிறது. அம்மா! முதலில் இந்த மஸ்லின் துணியை விலக்கி விட்டு; என்னுடைய புடவையை உடுத்திக் கொண்டால், எனது கவலையில் முக்காற் பங்கு தீரும். இந்தத் துணி துணியாகவே எனக்குத் தோன்றவில்லை. நான் ஆடையின்றி வெற்றுடம் போடிருப்பதாகத் தோன்றுகிறது" என்று நயந்து கூறினாள்.

**நூர்:-** "மேனகா! கவலைப்படாதே; இங்கே புருஷர் எவரும் வரமாட்டார்கள். கீழே விழுந்த உன்னை வேறு அறைக்குக் கொணர்ந்த உடன் டாக்டர் துரைஸானியை வரவழைத்தோம். அவள் வந்து நாடியைப் பார்த்தவுடன் முதலில் உனது புடவை, நகைகள் முதலியவற்றை விலக்கிவிட்டு இந்த மஸ்லின் துணியை அணிவிக்கச் சொன்னாள். அப்படிச் செய்யாவிடில், தடைபட்டு நின்றுபோன இரத்த ஓட்டம் திரும்பாதென்று கூறினாள். இன்றைக்கு முழுவதும் இதே உடையில் இருக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறாள்" என்று நயமாகக் கூறினாள். ஆனால், நூர்ஜஹான் மேனகாவுக்கு மஸ்லினை யுடுத்தி மருந்துகளை உபயோகித்து ஸோபாவில் படுக்க வைத்து, துரைஸானியையும், தனது சகோதரியையும் அவளண்டையிலிருக்கச் செய்து, தான் மேனகாவின் உடைகளையணிந்து, தனது கணவனது அந்தரங்கமான சயன அறைக்குப் போன விஷயத்தை அவளிடம் அப்போது கூறுதல் தகாதென நினைத்து அதை மறைத்து வைத்தாள். தனது கணவனுடன் தான் சச்சரவு செய்து, அவனால் துரத்தப்பட்டு ஓடி வந்தவுடன் மேனகாவை மோட்டாரில் வைத்து மூவருமாக மைலாப்பூருக்குக் கொணர்ந்ததையும், அந்நேரம் முதல் துரைஸானி பங்களாவிலேயே தம்முடன் கூடவிருந்து

அப்போதே போனாளென்பதையும் தெரிவித்தாள். அம் மூவரும் தன்னைக் காப்பாற்றும் பொருட்டு செய்த காரியங்களை யெல்லாம் கேட்ட மேனகாவின் மனதிலெழுந்த நன்றியறிவின் பெருக்கை எப்படி விவரிப்பது! அவளது கண்கள் கண்ணீரைப் பெருக்கின. வாய்பேசா மௌனியாய் அப்படியே சிந்தனையில் ஆழ்ந்தாள். அவளது அதிகரித்த சந்தோஷம் திடீரென்று துக்கமாக மாறியது. முகம் மாறுபாடடைந்தது. அதைக்கண்ட நூர்ஜஹான், "ஏனம்மா விசனப்படுகிறாய்? உன் விஷயத்தில் நாங்கள் ஏதாயினும் தவறு செய்தோமா? எங்கள் மேல் கோபமா?" என்றாள்.

அதைக் கேட்ட மேனகா, "ஆகா! மகா பேருபகாரிகளான உங்கள் மேல் கேவலம் சண்டாளகுண முடையோர்களே கோபங் கொள்வார்கள். நான் அதை நினைக்கவில்லை. நீங்கள், என் கற்பையும் என் உயிரையும் காத்தது எனக்கு ஒப்பற்ற பெரிய உதவி யென்று செய்தீர்கள். ஆனால், இன்னொரு காரியம் செய்திருந்தீர்களானால், அது எல்லாவற்றிலும் மேலான பரம உதவி யாயிருக்கும். என்னுடைய கற்பை மாத்திரம் காப்பாற்றியபின், என்னை மூர்ச்சை தெளிவிக்காமல், அப்படியே இறந்துபோக விட்டிருந்தால், ஆகா! அந்த உதவிக்கு இந்த உலகம் ஈடாயிராது. ஆனால், அந்த உதவியைப் பற்றி நன்றி கூற நான் உயிருடனிருந்திருக்க மாட்டேன்; என்னுடைய ஜீவன் மாத்திரம், எத்தனை ஜென்மமெடுத்தாலும் உங்களை மறந்திராது. இத்தனை நாழிகை எனது உயிர் இவ்வுலகத்தின் விஷயங்களை மறந்து எங்கேயோ சென்றிருக்கும். எனது கற்பு அழியாமல் காப்பாற்றப்பட்டதைப்பற்றி நான் அடைந்த இன்பத்தைக்காட்டிலும், என் கணவனை விட்டுப் பிரிந்ததால் இனி நான் அநுபவிக்க வேண்டியிருக்கும் நரக வேதனை எனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. அதைக் குறித்த துயரம் இப்போதே மேலிட்டு வதைக்கத் தொடங்கிவிட்டது. நான் என்ன செய்வேன்?" என்று கூறிப் பரிதவித்தவளாய் தனது கண்களை மூடிக்கொண்டு சாய்ந்தாள். திரும்பவும்

இரண்டொரு நிமிஷத்தில் கண்களைத் திறந்து, "அம்மா! என் விஷயத்தில் இவ்வளவு உபகாரம் செய்த குணமணியான உனது பெயர் இன்னதென்று அறியவும், உனக்கும் , நேற்றிரவு என்னை வற்புறுத்திய அந்த மனிதருக்கும் என்ன உறவு முறை யென்பதையறியவும் என் மனம் பதைக்கிறது. அவைகளைத் தெரிவிக்கலாமா?" என்று நயந்து வேண்ட நூர்ஜஹான் விசனத்தோடு, "என்னுடைய பெயர் நூர்ஜஹானென்பது. ஆனால், நீ கேட்ட இரண்டாவது விஷயத்திற்கு மறுமொழி தர எனக்கு மனமில்லை. அந்த மனிதர் இதுவரையில் எனக்கு உறவினராயிருந்தது உண்மையே. நேற்றிரவு முதல் அவருக்கும் எனக்கும் எவ்வித •உறவும் இல்லாமற் போய்விட்டது. ஆகையால், இப்போது அவரை நான் அன்னியராகவே மதிக்கிறேன்" என்று துக்கமும் வெட்கமும் பொங்கக் கூறினாள்.

அதைக் கேட்ட மேனகாவிற்கு அதன் கருத்தொன்றும் விளங்கவில்லை. ஊன்றி யோசனை செய்து அதன் கருத்தை அறிய முயன்றாள். களைப்படைந்திருந்த அவளது மூளை அதனால் பெரிதும் குழம்பியது. பெரிதும் ஆவலுடன், "நூர்ஜஹான்! நீ சொல்வது இன்னதென்பது எனக்கு விளங்கவில்லை; அவர் உனக்கு நெருங்கிய உறவினர் இல்லையென்றால், நீ அந்த வீட்டிலிருந்திருக்க மாட்டாய். நடந்தது நடந்துபோய்விட்டது. என்னிடம் உண்மையை மறைப்பதேன்? அந்த மனிதருடைய துர் நடத்தையால் உன் மனது அவர் மீது மிகவும் வெறுப்படைந்திருப்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இப்போது உறவு ஒன்றுமில்லை யென்றே வைத்துக் கொள்வோம்; இதற்கு முன்னிருந்த உறவு முறைமையைத் தான் தெரிவிக்கக் கூடாதா?" என்று அன்பாக வற்புறுத்திக் கூறினாள்.

நூர்ஜஹான் வெட்கத்தினால் தனது முகத்தைக் கீழே தாழ்த்தினாள். "அம்மா மேனகா! அந்தக் கெட்ட மனிதரை

எனது உறவினரென்று சொல்லிக் கொள்ள வெட்கமாயிருக் கிறது. தவிர ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அயல் மாதை விரும்பி அலையும் இழி குணமுடைய ஒரு மனிதரை ஒரு ஸ்திரீ தனது கணவரென்று சொல்லிக்கொண்டால் உலகம் நகைக்கு மல்லவா? அந்த இழிவான நிலைமையிலேயே நான் இப்போதிருக்கிறேன்" என்று கூறினாள். அதிகரித்த வெட்கத்தினாலும் துயரத்தினாலும் அவளது தேகம் துடித்தது. கண்ணீர் வழிந்தது. அவளது மனதும், கண்களும் கலங்கின. அந்தப் பரிதாபகரமான நிலைமையைக் கண்ட மேனகா, "அடடா! எனக்குப் பேருபகாரம் செய்த மனிதருக்கு நான் நல்ல பதிலுதவி செய்தேன்! ஐயோ! பாவமே! மூடத்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டு உன்னைத் துக்கத்தில் ஆழ்த்தி விட்டேனே! ஆகா!" என்று பெரிதும் பச்சாதாபமும் விசனமும் அடைந்தாள். விரைவாக எழுந்து நூர்ஜஹானது கண்ணீரைத் துடைத்துத் தேற்ற நினைத்து நலிந்த தனது மேனிக்கு வலுவைப்புகட்டி எழுந்திருக்க முயன்றாள். அவளது மெலிந்த நிலையில் அது அளவு கடந்த உழைப்பாய்ப்போனது. உடனே கண் இருண்டு போனது. மூளை குழம்பியது. மயக்கங்கொண்டு உணர்வற்று, அப்படியே சயனத்தில் திரும்பவும் வீழ்ந்து விட்டாள். முன்னிலும் அதிகரித்த மூர்ச்சையடைந்து பிணம்போலானாள்.

அதைக்கண்ட நூர்ஜஹான் பெரிதும் கவலைகொண்டு, அவளுக்கு எவ்விதமான தீங்குண்டாகுமோ வென்று மிகவும் அஞ்சி, தனது கணவனைக் குறித்த நினைவையும் விடுத்து அவளைத் தெளிவிப்பதே அலுவலாய்ச் செய்யத் தொடங்கினாள். திரும்பவும் மருந்தை மார்பில் தடவினாள். அவள் விழித்திருந்தபோது, உள்புறம் அருந்தும் மருந்தைக் கொடாமல் தான் ஏமாறிப் போனதை நினைத்து வருந்தினாள். அந்த முறை மேனகாவின் மூர்ச்சைத் தெளிவிக்க நூர்ஜஹான் எவ்வளவு பாடுபட்டாளாயினும் அவளது உணர்வு அன்று மாலைவரையில் திரும்பவில்லை. அப்போதைக் கப்போது

மேனகாவின் கண்கள் மாத்திரம் இரண்டொரு விநாடி திறந்து மூடிக்கொண்டனவன்றி அவள் உலகத்தையும் தன்னையும் மறந்து கிடந்தாள்.

அவள் நன்றாகக் குணமடையும் முன்னர் தான் அவளிடம் அதிகமாக உரையாடி, அவள் மனதிற்கு உழைப்பைக் கொடுத்து விட்டதைக் குறித்து தன்னைத் தானே தூற்றிக்கொண்டவளாய் நூர்ஜஹான் தனிமையில் உட்கார்ந்திருந்தாள். அதிக மூர்க்கமாகப் பொங்கியெழுந்து வதைத்த எண்ணிறந்த நினைவுகளால், சூறாவளிக் காற்றில் அகப்பட்ட சருகைப் போல அவளது மனம் தடுமாறியது. மேன்மையும் இரக்கமுமே வடிவாய்த் தோன்றிய அந்தப் பொற்கொடி என்ன செய்வாள்! எதைக் குறித்து வருந்துவாள்! மேனகாவிற்கு வந்த விபத்தைக் குறித்து வருந்துவாளா? அன்றி, தனது கணவனது இழிகுணத்தையும் வஞ்சகச் செயலையும் நினைத்து வருந்துவாளா? தான் நல்ல கணவனை யடைந்து அது காறும் பேரின்ப சுகமடைந்ததாக நினைத்திருந்த தனது எண்ணமெல்லாம் மண்ணாக மறைந்ததையும், தனது எதிர்கால வாழ்க்கையே இருள் சூழ்ந்த பாழ் நரகாய்ப் போனதையும் நினைத்து வருந்துவாளா? மேனகா எவ்விதமான களங்கமுமற்றிருந்தாள் என்பதை ருஜுப்படுத்தி அவளது கணவனிடம் எப்படிச் சேர்ப்பது என்பதைக் குறித்து வருந்துவாளா? தனது உயர்ந்த கல்வியாலும், அறிவாலும், புத்தியாலும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் தான் தனது நாதனை இன்புறுத்தி, அதனால் தானும் இன்புற நினைத்திருந்த தனக்கு, நற்குணம், விவேகம், முதலியவற்றின் அருமையை ஒரு சிறிதும் உணராதவனும் கேவலம் அழகை மாத்திரம் கருதி அயல் வீட்டுப் பெண்களின் மீது மோகங்கொண்டு தீமைகள் இயற்றும் காமாதுரன் புருஷனாக வந்து வாய்த்ததை நினைத்து வருந்துவாளா? தான் இனி தனது ஆயுட் காலத்தை எவ்வாறு கடத்துவதென்பதை யெண்ணி

வருந்துவாளா? தான் உண்ணும் கவளத்தையும் தனது புத்திரிக்கு அருமையாக ஊட்டி உயிரை போல மதித்து வளர்த்துக் கல்வி முதலிய சிறப்புகளை யுண்டாக்கி ஏராளமான செல்வத்தையும் வாரிக்கொடுத்து இன்புறும் பொருட்டு கணவன் வீட்டுக்குத் தன்னை அனுப்பிய தந்தை அந்த வரலாறுகளைக் கேட்டு எவ்வாறு பொறுப்பாரோ, அல்லது மனமுடைந்து மரிப்பாரோ வென்னும் நினைவினால் வருந்துவாளா? எதைக் குறித்து வருந்துவாள்? எதை மறந்திருப்பாள்? அத்தனை நினைவுகளும் ஒன்றன் பின் னொன்றையும், ஒரே காலத்திலும் மகா உக்கிரமாக எழுந்து அவள்து மனதை அழுத்தி ஒவ்வொன்றும் முதன்மை பெற நினைத்து உலப்பியது. பல மலைப்பாம்புகள் ஒரு ஆட்டுக்கடாவின் உடம்பில் கால்முதல் நெஞ்சுவரையிற் சுற்றிக்கொண்டு தயிர் கடைவதைப்போல அது திணறிப்போம் படி அழுத்தி அதன் எலும்புகளை யெல்லாம் நொறுக்குதலைப் போல அவளது மனதை அத்தனை எண்ணங்களும் கசக்கிச் சாறு பிழிந்தன.

அந்த நிலைமையில் அவளது சகோதரி அலிமா என்பவள் அப்போதைக்கப்போது அங்கு தோன்றி உணவருந்த வரும்படி அவளை அழைத்தனள். நூர்ஜஹான் தனக்குப் பசியில்லை யென்று சொல்லி அவளை அனுப்பிவிட்டுத் தனிமையில் உட்கார்ந்திருந்தாள். இரண்டொரு நாழிகைக்கொருமுறை மேனகாவின் கண்கள் திறக்கும் போது, அவளுக்கு மருந்து கொடுக்க முயன்றும், ஏதாயினும் ஆகாரம் கொள்ளும்படி அவளை வேண்டியும், அவளுக்குக் குணமுண்டாக்க தன்னால் இயன்றவற்றையெல்லாம் புரிந்தவண்ணம் இருந்தாள். அவள் கண்களை மூடிய பிறகு, இவள் தனது விசனங்களான படைகளால் தாக்கப்பட்டு, அதைப் பொறாமல் தத்தளித் திருந்தாள். பூங்கொம்பிலிருந்து பூக்களும் பனித்திவலைகளும் உதிர்தலைப்போல, அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் கீழே வீழ்ந்து, பெருகி, அவளது ஆடைகளை நனைத்தன.

துக்கமும், வெட்கமும் ஆத்திரமும் பொங்கி யெழுந்து வதைத்தன. தேம்பித் தேம்பி அழுது நெடுமூச்செறிந்து உயிர்சோர ஓய்வடைந்து உயிரற்ற ஓவியம் போல இருந்தாள். அன்றைப் பகல் முற்றிலும் தண்ணீரும் அருந்த நினைவு கொள்ளாமல் துயரமே வடிவாக உட்கார்ந்திருந்தாள். வஞ்சகனான தனது கணவன் முகத்தில் தான் இனி எப்படி விழிப்பதென்றும், அவனுடன் எப்படி வாழ்வதென்றும் நினைத்து அவனிடம் பெருத்த அருவருப்பை அடைந்தாள். தனது துர்பாக்கியத்தை நினைத்துத் தன்னையே வைதுகொண்டாள். தனது தந்தையினிடத்தில் விஷயங்களை வெளியிட்டு தனது கணவனை இழிவு படுத்தவும் அவளுடைய பேதை மனது இடங்கொடுக்க வில்லை. ஆனால் அவரது உதவியினாலேயே மேனகாவை அவளது கணவனிடம் திருப்திகரமாகச் சேர்க்க முயலவேண்டும்; தனது கணவன் குற்றத்தைக் கூடிய வரையில் மறைத்துக் குறைவுபடுத்திக் கூறுவ தென்றும், மேனகா தனது கணவனை யடைந்தவுடன், தான் விஷத்தைத் தின்று உயிரை விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டாள். அன்று மாலையில் டாக்டர் துரைஸானி வரவில்லை. அவள் தவறாமல் காலையில் வருவதாயும், அது வரை கவலைப்படாமல் அதே மருந்தை பிரயோகிக்கும்படியும் செய்தி சொல்லியனுப்பினாள்.

அதைக்கேட்ட நூர்ஜஹான், மேலும் துன்பக்கடலில் ஆழ்ந்தனள்; மறுநாட்காலையில் துரைஸானி வரும்வரையில், மேனகா பிழைத்திருப்பாளா வென்று பெரிதும் அஞ்சினாள். வேறு துரைஸானி யொருத்தியைத் தருவிக்கலாமா வென நினைத்தாள். ஆனால், அந்த இரகசியங்களைப் பலருக்குத் தெரிவிப்பது தவறென எண்ணினாள். இத்தகைய எண்ணிறந்த வேதனைகளில் ஆழ்ந்து அன்றிரவையும் ஊணுறக்க மின்றிப் போக்கினாள். அவளது சகோதரியும் அவளுடன் அன்றிரவு முற்றிலுமிருந்து அவளை உண்ணும்படியும், சிறிது

நேரமாயினும் துயிலுக்குச் செல்லும்படியும் வற்புறுத்தி வேண்டியதெல்லாம் வீணாயிற்று. அந்தப் பயங்கரமான இரவு மெல்லக் கழிந்தது; மறுநாட் பொழுது புலர்ந்தது. மேனகாவின் உணர்வை கிரகணம்போல் மறைத்திருந்த இரவு கழிந்தவுடன், அவளது உணர்வு தெளிவடைந்து மதியும் பிரகாசிக்கத் தொடங்கியது. அவள் கண்களை நன்றாகத் திறந்து கொண்டாள். முதல் நாள் முற்றிலும் ஆகாரமின்றி இருந்தமை யால் அவளது தேகம் நிலைத்துநில்லாமல் பறந்தது. கண்கள் இருண்டன. தலை சுழன்றது. தேகம் அசைக்க வொண்ணாமல் மரத்துப் போயிருந்தது.

அத்தகைய சமயத்தில் ஒரு மோட்டார் பைசைக்கில் வந்து அந்த அறைக்கு வெளியில் நின்றது. அடுத்த நிமிஷத்தில் டாக்டர் துரைஸானி மிகவும் சுறுசுறுப்பாக உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டவுடன் நூர்ஜஹான் விரைந்தெழுந்து துரைஸானியை வரவேற்று ஆசனத்தில் அமரச்செய்தாள். துரைஸானி உடனே நாடி பார்க்கும் குழாயை எடுத்து மேனகாவின் மார்பு முதலிய இடங்களில் வைத்து ஆராய்ச்சி செய்து விட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள். ஆனால், அவளது முகம் திருப்திகரமாகக் காணப்படவில்லை. முதல்நாட் காலையில் அவள் அவ்விடத்தை விட்டுப் போன பின்னர் நிகழ்ந்தவற்றையும், மேனகாவின் நிலைமையிலுண்டான மாறுபாடுகளையும், அவள் ஆகாரமே கொள்ளாமலும், கண்களை திறவாமலும் ஒரே நிலைமையில் கிடப்பதையும் நூர்ஜஹான் அவளிடம் உடனே விரிவாய்க் கூறித் தனது அச்சத்தை வெளியிட்டாள். அதைக் கேட்ட துரைஸானி, "நான் நேற்றைய தினம் மிகவும் அருமையான மருந்தைக் கொடுத்தேன். அதனாலேயே இவள் தனது இயற்கை நிலைமையை அடைந்திருப்பாள். நீங்கள் இருவரும் சம்பாஷணை செய்ததனாலேயே இவளுடைய நிலைமை

கெட்டுப்போயிருக்கிறது. அவிந்து போகும்போது விளக்குச் சுடர் துடிப்பதைப் போல இவளுடைய நாடி இப்போது மிகவும் கேவலமாக இருக்கிறது; இனியாவது இரண்டொரு நாளைக்கு இவளிடம் அதிகமாகப் பேசவேண்டாம்; இப்போது மிகவும் அருமையான ஒரு மருந்துக்கு சீட்டெழுதிக் கொடுக்கிறேன்; அதை உடனே வரவழைத்துக் கொடுங்கள்; விரைவில் தெளிவடைந்துவிடுவாள். இன்று மாலையில் இவளை மோட்டார் வண்டியில் வைத்துக் கொஞ்சநேரம் கடற்கரைக்குக் கொண்டுபோங்கள். நான் தவறாமல் மாலை ஆறுமணிக்கு வருகிறேன். பயப்படவேண்டாம்" என்று கூறியவண்ணம் ஒரு காகிதத்தில் மருந்துகளின் பெயரை எழுதிக் கொடுத்து, "நான் போய்விட்டு வருகிறேன். பார்லி அரிசிக் கஞ்சியையாவது காப்பியையாவது கொஞ்சம் கொடுங்கள். ஆகாரம் அதிகமாகச் செல்லவில்லையே என்னும் கவலை வேண்டாம்" என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கொண்டு எழுந்து சென்றாள் துரைஸானி.

உடனே நூர்ஜஹான் சீட்டிற் காட்டப்பட்ட மருந்தையும் வரவழைத்து மிகவும் பாடுபட்டு மேனகாவுக்கு அருந்து வித்தாள். அதன் பிறகு நான்கு நாழிகை வரையில் அவள் நன்றாகத் துயின்று அப்புறம் கண்ணை விழித்தாள். அவளுடம்பில் புதிய மாறுபாடு உண்டாயிற்று. பசியும் களைப்பும் தோன்றின. முகம் மார்பு முதலியவிடங்களில் வியர்வை கசிந்தது; சிறிது நேரம் கழிந்தது; சயனத்தில் ஒரு நிலைமையிலிருப்பது அவளுக்கு அருவருப்பாகவும் துன்பமாகவும் தோன்றியது. அப்புறம் இப்புறம் புரண்டு படுத்து, மெல்ல எழுந்து அருகிலிருந்த திண்டில் சாய்ந்து கொள்ள முயன்றாள். அதைக்கண்ட நூர்ஜஹான், "மேனகா! நான் பிடித்துக் கொள்ளுகிறேன்; மெல்ல எழுந்து சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறாயா? அதில் சாய்ந்து கொண்டால் சுகமாயிருக்கும்" என்று அன்போடு கேட்க,

அவள், "ஆகட்டும்" என்று தலையை அசைத்தாள். அருகிலிருந்த, மெத்தை தைக்கப்பட்ட அழகான சாய்மான நாற்காலியொன்றைக் கட்டிலிற்கு அருகில் இழுத்தாள். அதன் கால்களில் சகடைகளிருந்தமையால், அது ஓசையின்றி எளிதில் வந்தது; உடனே மேனகா தானே எழுந்து விடுவதாய்க் கூறித் தனது உடம்பை நிமிர்த்தி எழுந்திருக்க முயன்றாள். ஆனால், தேகம் கட்டிலும் நில்லாமல் கீழே தள்ளிவிட்டது. பொத்தென்று தரையில் வீழ்ந்து விட்டாள். அதைக் கண்டு சகியாத நூர்ஜஹான் பெரிதும் திகிலடைந்து பாய்ந்து, குழந்தையை எடுப்பதைப் போல வாரி எடுத்துச் சாய்மான நாற்காலியில் விடுத்தாள். அவளின் மஸ்லின் உடையை ஒழுங்காக அணிவித்தாள். உடம்பில் கசிந்த வியர்வையைத் தனது பட்டுத் தாவணியால் துடைத்த பின்னர் அந்த அறையை விட்டு வெளியிற் சென்றாள். உடனே ஒரு பிராம்மணப் பரிசாரகன் வெள்ளிச் செம்பில் வென்னீர், பற்பொடி முதலியவற்றை உட்புறம் கொணர்ந்து, அவளுக் கெதிரிலிருந்த மேஜையைச் சுத்தம் செய்து, அதன் மீது வைத்து விட்டு வெளியிற் சென்றான். அதைக் கண்ட மேனகா திடுக்கிட்டு அவனை உற்று நோக்கி மிகவும் வியப்படைந்தாள். தன் விஷயத்தில் அந்த மகம்மதியப் பெண் அளவிறந்த அபிமானத்தையும், அன்பையும் கொண்டு செய்துள்ள ஏற்பாடுகளைக் கண்டு நன்றி சுரக்கப் பெற்றவளாய் அவளது வருகையை ஆவலுடன் எதிர் பார்த்தாள். அடுத்த நொடியில் நூர்ஜஹான் உள்ளே நுழைந்து, "அம்மா! முகத்தைச் சுத்தம் செய்து கொள்" என்றாள்.

**மேனகா:-** "ஆகா! என் விஷயத்தில் நீ எவ்வளவு பாடுபடுகிறாய்! என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்! உனது மனப்பூர்வமான அன்பைக் காண என் ஹிருதயம் பொங்கி எழுகிறது. ஆனால், இத்தனையும் விழலுக் கிறைத்த நீராயிருக்கிறதே யென்றுதான் ஒரு விதமான விசனம் என்னை

வதைக்கிறது. பயனற்ற இந்த உடம்பை இப்படியே மடிந்துபோகவிடாமல் நீ எதற்கு இவ்வளவு உபசரணை செய்து இதை வீணிலே காப்பாற்றி என்ன செய்யப்போகிறாய்? என் உடம்பு தேறி நல்ல நிலைமைக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். அதன் பிறகு நான் எங்கே போகிறது? என் புருஷன் வீட்டிற்குப் போவதற்கு வழியில்லை. தகப்பனார் வீட்டிற்குப் போய் நடந்தவற்றைச் சொன்னால் அவர்கள் என் சொல்லை நம்பி என்னை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், புருஷன் வீட்டார் என்னைப்பற்றி எவ்விதமான தூஷணை சொல்லுகிறார்களோ தெரியவில்லை. ஒரு வேளை நானே உன் புருஷனிடம் ஓடிவந்து விட்டேனென்று கட்டுப்பாடாகச் சொன்னாலும் சொல்வார்கள். அவ்வளவு அவமானத்தை நானுமடைந்து என் பெற்றோருக்கும் உண்டாக்கி உயிர் வாழ்வது தகுமா? அதைக்காட்டிலும் உயிரை விட்டுவிடுவதே மேலல்லவா! அம்மா! இந்த உபசரணைகளை யெல்லாம் விடுத்து, என்னை ஒரே நொடியில் கொல்லும் விஷத்தில் கொஞ்சம் துரைஸானியினிட மிருந்து வாங்கிக் கொடுப் பாயானால் உனக்குப் பெருத்த புண்ணியம் உண்டாகும்; அதுவே பெருத்த உதவியுமாகும். எத்தனை ஜென்ம மெடுத்தாலும் அதை நான் மறக்கமாட்டேன்!" என்று நயமாகக் கூறி வேண்டினாள். அம்மொழியைக் கேட்ட நூர்ஜஹானது மனமும் கண்களும் கலங்கின. கண்ணீர் விடுத்தாள். அவளுடன் சம்பாஷித்தல் கூடாதென துரைஸானி கண்டித்துக் கூறியுள்ளது நினைவிற்கு வந்தது. என்றாலும், மேனகாவிடம் இரண்டொரு வார்த்தைகள் கூறி அவளது மனதைச் சாந்தப்படுத்தி நம்பிக்கை உண்டாக்கவேண்டுவ தவசியமென்று கருதினவளாய், "அம்மா! மேனகா! நீ சொல்லுவதெல்லாம் உண்மைதான். இருந்தாலும், இன்னொரு விஷயம் இருக்கிறது. இவ்விதமான விபத் தெல்லாம் உண்டாகுமென்று நாம் கனவிலும் எதிர் பார்த்தோமா? இல்லையல்லவா! அடுத்த நிமிஷத்தில் நமக்கு

என்ன தீமை சம்பவிக்குமோ! அதை நாம் அறியோம்; நேற்றிரவு நீ தத்தளித்து முடிவில் எமன் வாயிலிருந்தபோது உன்னைக் காப்பாற்ற ஆண்டவன் என்னைக் கொணர்ந்து விட வில்லையா? நீங்காதது போலத் தோன்றும் பயங்கரமான விபத்தையும் நீக்கக்கூடிய ஆண்டவன் எங்கிருந்து நம்மெல்லோரையும் பாதுகாத்து வருகிறான். அவனையே முற்றிலும் நம்பி, நாம் ஒழுங்கான வழியிலே செல்வோம். பிறகு ஏற்படும் முடிவு அவனருளைப் பொருத்ததாகும். ஏதோ ஒரு நோக்கத்துடன் நம்மை விபத்தில் விடுத்தவன் அதை விலக்குவதற்கும் வழி காட்டுவான். ஆகையால் மனந்தளர விடாதே யம்மா! மேலே நடக்க வேண்டுவன வற்றைப் பற்றி அப்புறம் யோசனை செய்வோம். இப்போது உனது உடம்பை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவது முக்கியமான விஷயம். நீ இப்போது அதிகமாய்ப் பேசுவதும், வருந்துவதும் கூடாதென்று துரைஸானி சொல்லியிருக்கிறாள். ஆகையால், பல்லைத் தேய்த்துக்கொள். பிராமணப் பரிசாரகர் காப்பித் தயாரித்திருக்கிறார். இந்த பங்களா மிகவும் பிரமாண்டமானது; நாங்களெல்லோரும் வசிக்குமிடம் நெடுந்தூரத்திற்கு அப்பாலிருக்கிறது. இது, நானும் என்னுடைய அக்காளும் ஏகாந்தமாயிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் சிறிய சவுக்கண்டி. இங்கே எவ்வித அசுத்தமுமில்லை. பரிசாரகர் காப்பி தயாரித்திருக்கிறார். முன்னால் அதில் கொஞ்சம் சாப்பிடு" என்றாள்.

அதைக் கேட்ட மேனகா தனக்குக் கடவுளின் உதவி ஏற்படுமென்றும், தான் பழையபடி தனது கணவனுடன் திருப்திகரமாகச் சேர்ந்து வாழ்க்கை செய்தல் கூடுமென்றும் நம்பிக்கை கொள்ள வில்லையேனும், மருந்தைப் பருகியதனால் தனது வாய் முதலியவை அருவருப்பாகத் தோன்றின வாகையால், முகத்தை சுத்தி செய்து கொள்ள நினைத்தாள். எதிரிலிருந்த தண்ணீரை எடுத்து வாய், முகம், கை, கால்கள் முதலியவற்றை சுத்தி செய்து கொண்டு நாற்காலியிற்

சாய்ந்தாள். அவ்வாறு எழுந்து உட்கார்ந்ததனாலும், கை, கால்களுக்கு உழைப்பைக் கொடுத்ததனாலும், தேகத்தில் தண்ணீர் பட்டதனாலும் ஒரு விதமான களைப்பு மேலிட்டதனால் மயக்க மடைந்து நாற்காலியிற் சாய்ந்து உறங்கினாள். மேல் நடந்த விஷயங்களை யெல்லாம் விரிவாகக் கூறுவது மிகையாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அன்று மாலை ஐந்தேகால் மணிக்கு ஒரு மோட்டார் வண்டி அவர்களிருந்த சவுக்கண்டியின் வாசலில் வந்து நின்றது. அதில் மேனகா தனது சொந்த உடையையும் ஆபரணங்களையும் அணிந்தவளாய் வாடித் துவண்டு சாய்ந்திருந்தாள். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் துப்பட்டியால் தன்னை மறைத்துக் கொண்டு நூர்ஜஹான் அருகில் உட்கார்ந்திருந்தாள். வண்டி நிற்கு முன் அலிமா அங்கு வந்து ஆயத்தமாக நின்றாள். வண்டி நின்றவுடன் இரண்டு மகமதியப் பெண்களும் மேனகாவை மெல்லத் தாங்கி உட்புறம் அழைத்துப் போய் சாய்மான நாற்காலியில்விட அவள் அதில் சாய்ந்து கொண்டாள். நூர்ஜஹானது தேகம் படபடத்துத் தோன்றியது. உஸ்ஸென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். மேனகாவின் மேனியில் குளிர்ந்தகடற் காற்றுப் பட்டதனாலும், வண்டியின் ஓட்டத்தினாலும் இரண்டு நாட்களாக மரத்துப்போயிருந்த அவளது தேகத்தில் சுறுசுறுப்பும் ஊக்கமும் உண்டாயின; இரத்தமும் நன்றாக ஓடத் தலைப்பட்டது. இரண்டு நாட்களாக ஆகாரங் கொள்ளாமையால் ஏற்பட்ட களைப்பு அப்போதே மேலிட்டுத் தோன்றியது. அந்த நிலைமையில் கடற்கரையில் ஒரு மனிதருக்கு நேர்ந்த விபத்தைக் கண்டதனால் அவள் மனது பொங்கி எழுந்து இன்னமும் தத்தளித்தது. அவ்விருவரது தோற்றமும் சந்தேகப்படத் தக்கதாய்க் காணப்பட்டமையால், அலிமாபி நூர்ஜஹானைப்பார்த்து என்ன விசேஷமென்று

கேட்க, நூர்ஜஹான், "ஆகா! என்ன வென்று சொல்லுவேன்! நாங்கள் உலாவி விட்டு வரும்போது பாதையில் ஒருவர் மீது மோட்டார் வண்டி ஏறிவிட்டது. அடடா! எவ்வளவு இரத்தம்! பாதை யெல்லாம் சேறாய்ப் போய் விட்டது. அதை கண்டவுடன் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. ஏது! இனி அந்த மனிதர் பிழைக்கமாட்டார்" என்றாள்.

அதைக் கேட்ட அலிமாபி திடுக்கிட்டு அச்சங்கொண்டு, "நம்முடைய வண்டியா ஏறியது?" என்றாள்.

நூர்ஜஹான், "இல்லை. வேறு வண்டி; நம்முடைய வண்டி அப்போது அருகில் வந்தது. நமக்கு ஏதாவது துன்பம் உண்டாகுமோ வென்று நினைத்து நாங்கள் வேகமாய் வந்துவிட்டோம். தவிர நியாயஸ்தலத்தார் இந்த விஷயத்தில் எங்களை சாட்சியங்களாகக் கோருவார்களானால், மேனகா கச்சேரிக்குப் போக நேரும்; அதனால் உபத்திரவம் உண்டாகு மென்றும் நினைத்து வண்டியை விரைவாக விடச் சொன்னேன். அந்த இரத்தத்தைக் கண்டவுடன் மேனகாவும் மயங்கி விழுந்துவிட்டாள். இப்போது விரைவாக துரைஸானியை அழைத்துவந்து இதனால் மேனகாவின் உடம்பில் எவ்வித விபரீதமும் ஏற்படாமல் நாம் முன்னெச்சரிக்கையாகச் செய்ய வேண்டும். நம்முடைய மோட்டார் வண்டியை அனுப்பு" என்றாள். அவள் உடனே வெளியிற் சென்று வண்டியை அனுப்பினாள்.

ஆறுமணிக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப்போன துரைஸானியை அதற்கு முன்னமாகவே அழைத்துவர நினைத்து, அவர்கள் தமது மோட்டார் வண்டியை ஐந்தேகால் மணிக்கு அனுப்பினார்களாயினும், துரைஸானி வரவில்லை; மணி ஆறாயிற்று . அப்போது அவள் தவறாமல் வந்துவிடுவா ளென்று நினைத்து நூர்ஜஹான் அவளது வருகையை

ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். மேனகா தனது சுய உணர்வுடன் இருந்தாளாயினும், அயர்வினால் வாய் திறந்து பேசமாட்டாமல் கண்களை மூடிக்கொண்டே படுத்திருந்தாள். மணி ஆறுக்கு மேலும் நகர ஆரம்பித்தது. ஆறே கால், ஆறரை, ஆறேமுக்காலும் ஆனது; நூர்ஜஹானது ஆச்சரியம் அதிகரித்துக் கொண்டே வந்தது. மணி ஏழு அடித்தது. வாசலில் மோட்டார் வண்டி, 'கிர்' றென்று வந்து நின்றது. நூர்ஜஹான் எழுந்து வந்தாள். விரைவாக உட்புறம் நுழைந்த துரைஸானி, "நூர்ஜஹான்! மன்னிக்க வேண்டும். உன்னுடைய வண்டி ஐந்தரை மணிக்கு முன்னாகவே வந்து விட்டது. நான் புறப்படப்போன சமயத்தில் மிகவும் ஆபத்தான நிலைமையில் ஒருவர் கொண்டுவரப்பட்டார்; ஆகையால் நான் வரக்கூடாமல் போய்விட்டது. அவர் மேல் மோட்டார் வண்டி ஏறிவிட்டதாம். அவர் பிழைப்பாரோ மாட்டாரோவென்னும் நிலைமையில் வந்தார்; எங்கள் வைத்திய சாலையில் தலைமை உத்தியோகஸ்தரான துரை உடனே அந்த மனிதருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். அவருடன் நானும் கூட எப்போதும் இருக்க வேண்டும் ஆகையால் இதற்குமுன் வரக்கூடாமல் போய்விட்டது. இந்தப் பெண்ணுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? அவசரமாக வண்டி அனுப்பினாயே" என்று சொல்லிக் கொண்டே மேனகாவின் நாடியைச் சோதனை செய்தாள்.

அப்போது நூர்ஜஹான், "எவ்விடத்தில் வண்டி ஏறியது?" என்றாள்.

**துரை:-** கடற்கரைப் பாதையில் சென்னை துரைத்தனத்தாரின் சர்வகலாசாலைக் கெதிரில் ஐந்து மணிக்கு - என்றாள்.

**நூர்:-** அவர் பிழைத்தாரோ இல்லையோ?

**துரை:-** ஏது! பிழைப்பது சந்தேகம்! உடம்பிலுள்ள இரத்த

மெல்லாம் போய்விட்டது! நாளைக்குக் காலையிலேதான் எதையும் நிச்சயமாகச் சொல்லக் கூடும். அதிருக்கட்டும். இந்தப் பெண்ணின் உடம்பு இவ்வளவு படபடத்திருப்பதன் காரணமென்ன? நான் சொன்னபடி கடற்காற்றிற்கு அழைத்துப் போனாயா?

**நூர்:-** ஆம்! அழைத்துப்போனேன். அதனால் உடம்பு சிறிது தெளிவடைந்தது. ஆனால் நீங்கள் இப்போது குறித்த விபத்தை நாங்கள் நேரில் கண்டோம். அங்கே ஓடிய இரத்த வெள்ளத்தைக் கண்டு மேனகா மூர்ச்சித்து விட்டாள். இங்கே வந்தவுடன் மருந்தை உபயோகித்தேன். இப்போது சிறிது குணமாயிருந்தாலும் அந்தப் படபடப்பு மாத்திரம் இன்னமிருக்கிறது. இதனால் ஏதாவது துன்பம் சம்பவிக்குமோ வென்று உங்களை சிறிது முன்னாகவே வரவழைக்க வெண்ணி வண்டி யனுப்பினேன்.

**துரை:-** அப்படியானால் அந்த மனிதரின் மேல் ஏறிய வண்டி யாருடைய தென்பது உங்களுக்குத் தெரிந்ததா.

**நூர்:-** இல்லை. அந்த வண்டி மிகவும் வேகமாய்ப் போய் விட்டது. நாங்களும் உடனே வந்து விட்டோம்.

அப்போது துரைஸானி தனது கையிலிருந்த ஒரு மருந்தை மேனகாவின் இமையில் தடவிவிட்டு, "மேனகா! மேனகா!" வென்று இரண்டு முறை கூப்பிட, அவள் உடனே தனது கண்களைத் திறந்து கொண்டு மெல்ல, "ஏன்" என்றாள்.

**துரை:-** ஏதாவது ஆகாரம் சாப்பிட்டாயா? - என்றாள்.

மேனகா மெதுவாக, "இல்லை" என்றாள்.

துரைஸானி, "இனிமேல் ஆகாரம் சாப்பிடாமல் இருப்பது பிசகு. வெறும் பாலாகிலும் கொஞ்சம் சாப்பிடத்தான் வேண்டும்; ஆகாரமில்லாமலேயே இந்தக்

களைப்பு தோன்றி யிருக்கிறது; நூர்ஜஹான் பால் தயாராக இருந்தால் கொஞ்சம் வரவழை" என்றாள்.

அடுத்த நிமிஷம் காய்ச்சப்பட்ட நல்ல பசுவின் பால் வந்து சேர்ந்தது. துரைஸானி அதைக் கையில் எடுத்துக்கொண்டு மேனகாவின் வாய்க்கருகில் கொண்டுபோய், "மேனகா வாயைத் திற" என்றாள். அவள் கண்ணைத் திறவாமலே வாயைத் திறந்தாள். உடனே துரைஸானி பாலில் சிறிது அருந்துவித்தாள். "சரி! இதுபோதும்! நாளைக்குள் உடம்பு குணமடைந்துவிடும். இப்போது நான் அவசரமாகப் போக வேண்டும். இன்று ராத்திரி முழுவதும் அந்த மனிதருக்கருகில் இருந்து கவனிக்க ஒரு தாதியை அமர்த்தவேண்டும். நான் போகிறேன். நாளைக்குக் காலையில் நான் இங்கு வரவேண்டுமானால் ஆளனுப்பு" என்று சொல்லிக்கொண்டு வாசலை நோக்கி நடந்தாள்.

**நூர்:-** அப்படியே செய்கிறேன். அந்த மனிதர் யாரென்பது தெரிந்ததா? - என்றாள்.

**துரை:-** ஆம் தெரிந்தது; அவர் தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவிலுள்ள ஒரு வக்கீலாம், பிராமண ஜாதியைச் சேர்ந்தவராம். அவருடைய பெயர் என்னவென்றோ சொன்னார்கள். (சிறிது யோசனை செய்து) ஆம், ஆம். வராகசாமி ஐயங்காராம் - என்றாள். அந்த சொல்லைக்கேட்ட மேனகா, "ஐயோ! என் புருஷனல்லவா!" என்று அலறிக் கொண்டு நாற்காலியை விட்டு விசையாக எழுந்தாள். நூர்ஜஹானும் துரைஸானியும் முற்றிலும் திகைப்படைந்து அவளிடம் ஓடிவந்தார்கள்.

*************

## 18 வது அதிகாரம்

# டம்பாச்சாரி விலாசம்

"நண்டுக்குத் திண்டாட்டம்; நரிக்குக் கொண்டாட்டம்" என்று ஜனங்கள் ஒரு பழமொழியை வழங்குதல் உண்டு. அவ்வாறு வராகசாமி வண்டியில் அறைபட்டு, முழங்காலை ஒடித்துக் கொண்டு, வைத்தியசாலையிற் கிடந்து உயிருக்கு மன்றாடிய தருணத்தில், அவனது அரிய சகோதரிமாரிருவரும் சாமாவையரும் அவனுக்கு மறுகலியாணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் அவன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் பங்களாவை வாங்கிக்கொண்டு அதற்குப் போய்விடுவதற்குரிய காரியங்களையும் செய்யத் தொடங்கினர். வராகசாமி அவசியம் பிழைத்துக்கொள்வானென்றும், பத்துப் பதினைந்து நாட்களில் அவனைப் பங்களாவிற்கு அழைத்துவந்து விடவேண்டு மென்றும் அவர்கள் நினைத்தனர். வராகசாமி வீட்டிலிருந்தால் அவன் பொருட்டு ஒவ்வொரு நாளும் இரண்டு முறை சமையல் செய்வதில் அப்பெண்டீர் தமது பொழுதைப் பெரும்பாலும் போக்குவர். இப்போது அவனில்லாமையால் விடுமுறை பெற்றவர் போல, தாமே அரசாய்க் காரியங்களை நடாத்தி மூன்று நாட்களுக் கொருமுறை சமையல் செய்வதும், பட்சணம் பலகாரங்களைத் தயாரித்துத் திண்பதும், சாம்பசிவம், கனகம்மாள் முதலியோருக்குச் சென்னையில் நேரிட்ட துன்பங்களைப்பற்றிப் புரளிசெய்து கைகொட்டி நகையாடு வதும், பங்களாவில் கலியாணத்தை ஆடம்பரமாகச் செய்வது பற்றி சாமாவையரிடம் வாதுகள் செய்வதும், வண்டியில் அறைபட்ட வராகசாமியின் மூடத்தனம் குறித்து ஏளனம் செய்வதும் வேலைகளாகச் செய்து தமது பொழுதை நித்திய கலியாணமாகப் போக்கிக் கொண்டிருந்தனர்.

சாமாவையரோ தமது சொந்த நலத்தைக் கருதாது, அவர்களது நன்மையையே மனதிற் கொண்டவரைப்போல நடித்தாராயினும், தம்மிடமிருந்த ஒன்பதினாயிரத்தைந்நூறு ரூபாயையும் அப்படியே தமக்கு அருப்பணம் செய்து கொள்ள நினைத்தார். பங்களாவை தமது பேரில் விலைக்கு வாங்கி சந்தேகத்திற்கு இடமின்றி அவர்களை ஐந்தாறு மாதகாலம் அதில் குடியிருக்க விடுத்து, அதற்குள் அவர்களிடம் ஏதாவது முகாந்திரத்தை முன்னிட்டு சண்டையிட்டு பிரிந்துபோய், வக்கீல் மூலமாக நோட்டீசனுப்பி அவர்களை பங்களாவி லிருந்து வெளியேற்ற நினைத்திருந்தார். நிற்க, அவரது சொந்த ஊராகிய கோடாலிக் கறுப்பூராரான தமது நண்பர் ஒருவரது பெண்ணை வராகசாமிக்கு மறுமணம் புரிந்து விட்டு அதனால் ஏதாவது பொருள் சம்பாதித்துக் கொள்ளவும் நினைத்திருந்தார்.

வராகசாமி வைத்தியசாலைக்குச் சென்று ஒரு வாரமானது. கும்பகோணத்தில் குடியிருந்த சம்பந்தியிடம் சென்று, முகூர்த்த நாளை நிச்சயித்துக் கொண்டு, நாகைப்பட்டணம் போய் பங்களாவை விலைக்கு வாங்கிக் கொண்டு, விரைவில் வந்துவிடும்படி பெருந்தேவியம்மாள், கோமளம்மாள் ஆகிய இருவராலும் சாமாவையர் அனுப்பப்பட்டார். அவர், சென்னையிலிருந்து புறப்படும் ரயிலில் அன்றிரவு ஏறி மறுநாட் காலையில் கும்பகோணம் வந்து சேர்ந்தார். அவர் தமது வருகையைப்பற்றி முன்னாகவே தமது ஆப்த நண்பரான சம்பந்திக்குக் கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தி யிருந்தார். ஆகவே, சம்பந்தி வரதாச்சாரியார் சாமாவையரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

வராகசாமியின் முதல்மாமனாரான சாம்பசிவையங்காரது குணத்தையும், முதல் மனைவியான மேனகாவின் குணத்தையும் நமது வாசகர்கள் நன்றா யறிவார்களல்லவா.

அவனுக்கு இரண்டாவது மாமனாராக வரப்போகும் **வரதாச்சாரியாரின்** நிலைமை, குணம் முதலியவற்றையும்,

மேனகாவிற்கு பதிலாக வரப்போகும் நாட்டுப்பெண் **பங்கஜவல்லி**யின் அழகு, குணம் முதலியவற்றையும் அறிந்துகொள்ள, நமது வாசகர்கள் அவாவுவது இயற்கையே. ஆகலின், அவர்களைக் குறித்த சில விவரங்களை இங்கு கூறுவது அவசியமாகிறது.

கும்பகோணத்திற்கு அருகில் ஓடும் கொள்ளிட மென்னும் ஆற்றங்கரையின் மீது கோடாலிக் கறுப்பூர் என்று ஒரு சிறிய ஊரிருக்கிறது. அதுவே நமது சாமாவையர் திருவவதரித்த புண்ணிய ஸ்தலமாகும். அந்த ஸ்தலத்தில் வரதாச்சாரியார் என்னும் பெயரைக் கொண்ட ஒரு சீமானிருந்தார். அவருக்கும் சாமாவையருக்கும் இரகசியமான பல காரணங்களால், ஆழ்ந்த நட்பு ஏற்பட்டு நெடுநாளா யிருந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அந்த வரதாச்சாரியாரே இப்போது வராகசாமிக்கு இரண்டாவது மாமனாராக வர விருப்பங்கொண்டவர். அவரை பெரிய அகத்து (வீட்டு) வரதாச்சாரி என்று யாவரும் அழைப்பது வழக்கம். அவரது முன்னோர் மிகுந்த செல்வவந்தராயும், ஏராளமான விலையுயர்ந்த நிலம், கால் நடைகள் முதலியவற்றை உடையோராயும், அவ்வூருக்கே தலைவராயும், ஆசார ஒழுக்கங்களில் இணையற்றவராயும் இருந்தனராம். அவ்வளவு பெருத்த செல்வமும், அவரது பாட்டனார் காலத்திலேயே, "செல்வோம்" என்று சொல்லிக் கொண்டு போய்விட்டதாம். அவர் கும்பகோணத்தில் தனலட்சுமி என்ற ஒரு அழகிய தாசியினிடம் சரணம் புகுந்தமையால், அவரது வீட்டிலிருந்த தனலட்சுமியும் கும்ப கோணத்திற்குப் போய்விட்டாள். அவளிடம் அவருக்கிருந்த ஆசையை இவ்வளவு அவ்வளவென்று அளவிட்டுக் கூறுதல் முடியாத காரியம். அவரது கடைசிக் காலம் வரையில் அந்த மோகம் அதிகரித்துக் கொண்டே வந்ததன்றி அது ஒரு சிறிதும் குறையவில்லை. தாம் இறக்குந் தருணத்தில் அவளது மடியில்

தலையை வைத்துக்கொண்டு, உயிரை விட வேண்டுமென்பது அவருடைய கடைசி வேண்டுகோள். அந்தப் புண்ணியவதி அதை அவருடைய விருப்பின்படி நிறைவேற்றி வைத்தாள். அவருடைய புத்திரர் (வரதாச்சாரியாரின் தந்தை) நன்றாகப் படித்த மேதாவி; மகா வைதிகர்; தந்தை எவ்வளவுக் கெவ்வளவு தனலட்சுமியின் மீது வாஞ்சை வைத்தாரோ அவ்வளவுக் கவ்வளவு புத்திரர் ஊரிலுள்ள ஜனங்களின் மீது அன்பை வைத்து மகா குணசீலகுணமுடையவரென்று நற்பெயரெடுத்தார். அவரது காலத்தில் அரைவயிற்றுக்குப் போதுமான வருமானமுடைய நிலமும், பெரிய மாடி வீடு ஒன்றும் மிகுதியாய் நின்றன. எதை இழக்கினும் தமது மாடிவீட்டை மாத்திரம் இழக்க மனமற்றவராய் அவர் அதிலேயே குடியிருந்து ஊர் ஜனங்களால் ஆதரிக்கப் பெற்று, தமது காலத்தை நல்ல காலமாய்க் கடத்தினார். அவர் தமது புத்திரரான வரதாச் சாரியை வைதிகத் துறையிலேயே திருப்பிவிட எவ்வளவு பாடுபட்டாராயினும் அவர் பாட்டனாரின் குணத்தைக் கொண்டவரா யிருந்தார். அவர் தந்தைக்குத் தெரியாமல், கும்பகோணத்திற்குப் போய் இங்கிலீஷ் பள்ளிக் கூடங்களில் பயின்று, எண்ணிறந்த கெட்ட நண்பர்களின் தொடர்பினால், செய்யத்தகாத காரியங்களை யெல்லாம் செய்து கெட்டலைந்து, பரீட்சைகள் ஒன்றிலேனும் தேறாமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். கிழவரது கடைசி விருப்பம் வரதாச்சாரிக்கு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து வைத்துவிட்டுப் போக வேண்டு மென்பதாகும். அவர் விண்ணுலக மடைந்தார். புத்திர சிகாமணி, உலக விஷயம் யாவற்றையும் அறிந்தவரா யிருந்தார். ஆனால், எத்தகைய தொழிலையும் செய்து ஜீவனஞ் செய்ய வகையறியாது தவித்தார். தந்தையைப் போலப் பொருள்தேட அவர் வைதிகரல்லர்; வெளியூர்களில் சர்க்கார் உத்தியோகம் பெற, இங்கிலீஷில் தக்க திறமையும் பட்டப்பேறு மில்லை. ஆகையால், அவர் எதை போஜனஞ் செய்தார்? தம்முடைய

வீட்டிலேயிருந்து வீட்டையே போஜனஞ்செய்ய ஆரம்பித்தார். வீட்டை அடமானம் வைத்து, பணத்தில் ஒரு பாகத்தை வைத்துக் கொண்டு வெளி வேஷம் போட ஆரம்பித்தார். அவரது ஆசையோ ஆகாயத்தை அளாவியது. தாம் ஏழை யென்பதை அவர் நம்பவே இல்லை. பிறர் அவ்வாறு குறித்துக் கூறியதையும், அவர் கடுமையாகக் கண்டித்து வந்தார். ஆகையால், அவருக்கு அவ்வூரார் எத்தகைய சிறிய உதவியும் செய்ய முன் வரவில்லை. தாம் பெரிய அகத்து வரதாச்சாரியார் என்பதை அவர் மறக்கவே இல்லை. அவர் பெரிய அகத்தில் குடியிருந்ததன்றி, அவர் மனதிலும் பெரிய அகம் குடிகொண்டிருந்தது. அவர் எப்போதும், ஒரு சாண் அளவு அகன்ற ஜரிகையுள்ள வஸ்திரங்களை அணிவார். வெள்ளிப் பூண் கட்டப்பட்ட வழுவழுப்பான கருங்காலித் தடி யொன்றும், இங்கிலீஷ் சமாச்சாரப் பத்திரிகையும் அவரது கையில் எப்போதும் இருந்தன. காலில் உயர்ந்த ஜோடு அணியாமல் காலைக் கீழே வைக்க மாட்டார். அவருடைய சிவப்புத் தோலும் மடிப்புத் தொந்தியும் அவர் பெரிய மனிதர் என்று பொய் சாட்சி கூறின. அவர் எதைச் சொன்ன போதிலும் அழுத்தந் திருத்தமாகவும், அதற்குமேல் அப்பீலில்லை யென்று நினைத்தும் பேசுவார். அவர் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களின் விஷயங்களைப் பற்றிப் பேசுவாரன்றி, சென்னை கும்பகோணம் முதலிய ஊர்களின் செய்தியைப் பேசுதல் தமக்குச் சிறப்பல்லவென்று கருதினார். அவரது உண்மை மதிப்பை உள்ளபடி உணர்ந்த அவ்வூர் ஜனங்களிடம் அவரது சரக்கு அதிகமாக விற்பனையாக வில்லை. ஜனங்கள் அவரை வரதாச்சாரி யென்பதற்குப் பதிலாக டம்பாச்சாரி என்ற பெயரால் குறித்தனர்.

அவருக்கு வாய்த்த மனைவியோ, அவரைவிடப் பதின்மடங்கு தேர்ச்சிபெற்ற பகல் வேஷக்காரியாயிருந்தாள். அவள் எப்போதும் வாசற் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு உட்புறத்திலேயே இருப்பாள். அயல் வீட்டுப் பெண்டீர், " ஏன்

இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டால், பெண்பிள்ளைகள் தமது வீட்டின் படியைவிட்டு அப்புறம் போவது கற்புக்கு அழகல்லவென்று அவர்களுக்குப் புராணங்களிலிருந்து பதிவிரதைகளின் வரலாறுகளைச் சொல்ல ஆரம்பிப்பாள். ஆனால், உண்மைக் காரணம் அதுவன்று. அவள் காதறுந்த ஓர் ஊசியின் பொருட்டுக் கூட, தனது கற்பையும், ஆத்மாவையும், அடகு வைக்கத் துணிந்த உத்தமி. அவள் வெளியில் வராத காரண மென்னவெனில், அவளுக்கிருப்பவை விலையுயர்ந்த இரண்டு பட்டுப்புடவைகளே யாகும். அவை, வீட்டை விட்டுவெளிப்படும்போது மாறி மாறி யணியப்படுபவை. வீட்டிற்குள் ஒரு கந்தையால் இலை மறைவு காய் மறைவாய் தனது உடம்பை மறைத்துக் கொண்டிருப்பாள். அவளுடைய அடுப்பு மூன்று நாளைக்கொருமுறை புகையும். ஆனால் காலை வேளையில் வீட்டின் வாசலில் சாணித் தண்ணீர் தெளிக்க வரும்போது நூறு ரூபாய் விலை மதிப்புள்ள பட்டுப்புடவை, சில ஆபரணங்கள் முதலியவற்றை அணிந்திருப்பாள். பெருத்த வெள்ளிச் செம்பில் சாணித் தண்ணீர் கொணர்ந்து, சந்திரமதி காலகண்டையர் வீட்டில் வேலைசெய்ததைப் போல, அவ்வாறு செய்வது தனது மேன்மைக்குக் குறைவாயினும் கால வித்தியாசத்தால் அதைச் செய்ய நேரிட்டதென்பதை தனது முகத்தின் வருந்திய தோற்றத்திற் காட்டித் தண்ணீர் தெளிப்பாள். வரதாச்சாரியார் பிற்பகல் வேலைகளில் நடைத் திண்ணையில் திண்டில் சாய்ந்துகொண்டு தெருவில் செல்வோரை அமர்த்தலாகப் பார்த்துக்கொண்டிருப்பார். அவருடைய மனைவி அவருக்கு வெள்ளிக் கிண்ணியில் சிற்றுண்டி கொணர்ந்து கொடுப்பாள். அதற்குள்ளிருக்கும் சிற்றுண்டியை எவரும் பார்க்கா வண்ணம் அவர் மறைத்துச் சாப்பிடுவார். அவர் நல்ல உயர்ந்த பட்சணங்களைச் சாப்பிடுவதாக ஜனங்கள் முதலில் நினைத்துக்கொண்டனர். அவர் சாப்பிடுவ தென்னவென்பதை அறிய ஆவல் கொண்ட

எதிர்த்த வீட்டு இிராஜகோபாலன் ஒரு நாள் ஒளிந்திருந்து, அவர் மனைவி வெள்ளிக் கிண்ணியை வைத்துவிட்டுப் போனவுடனே தடதடவென்று வரதாச்சாரியிருந்த இடத்திற்கு வந்து, "இன்றைக்குப் பத்திரிகையில் என்ன விசேஷம்?" என்று கேட்ட வண்ணம் கிண்ணியைப் பார்த்து விட்டான். வரதாச்சாரி திகைத்து அதை மறைக்க முயன்றது பலியாமற் போயிற்று. வறுக்கப்பட்ட பத்துப் பதினைந்து மொச்சைக் கொட்டைகள் கிண்ணியிலிருந்ததைக் கண்டு எதிர்த்த வீட்டுக் காரன் ஏமாறிப் போய்த் திரும்பினான். அவ்விஷயம் அன்று மாலைக்குள் ஊர் முற்றிலும் பரவியது. அன்றுமுதல் வரதாச்சாரியின் மனைவிக்கு ஜனங்கள் மொச்சைக்கொட்டை யென்று பெயரிட்டனர்.

இவ்விரு வேதசாரிகளும் ஒத்துழைத்துப் பல வருஷங்கள் இம்மாதிரி நாடகம் நடித்து வந்தனர். அவர்களுக்கு ஒரு சிறிய பெண்ணிருந்தது. நமது கதை நிகழ்ந்த காலத்தில் அதற்கு வயது பதின்மூன்றென்று அவர்கள் ஜாதகம் தயாரித்து வைத்துக் கொண்டிருந்தனர். தந்தையும் தாயும் செயற்கை வேஷதாரிகளா யிருந்ததைப்போல பெண் இயற்கையிலேயே வேஷதாரியாய் ஜனித்திருந்தது. அதன் உடம்பு சிவப்பாயும், குள்ளமாயும், கரணை கரணயான குண்டுக் கைகளையும், கால்களையும் பெற்று பெருச்சாளியைப் போலத் திணிந்த அங்கங்களைக் கொண்டிருந்தது. அதன் தோற்றம் உரலுக்குச் சேலை உடுத்தியதைப்போலிருந்தது. உடம்பின் கீழ்ப்பாகம் இளமையையும் மேல்பாகம் முதிர்ச்சியையும் காட்டின. அதன் முகம் இருபத்தைந்து வயதான தருணியின் முகம்போல முற்றிப்போயிருந்தது. அதற்கு இன்னம் கலியாணம் ஆக வில்லை. அந்தப் பெண்ணை பி.ஏ., பி.எல்., பட்டம்பெற்ற ஒரு பிள்ளைக்குக் கொடுக்க வேண்டுமென்பது மொச்சைக் கொட்டை யம்மாளின் விருப்பம். அத்தகைய மணமகன். கிடையாவிடின், டிப்டி கலெக்டர் பிள்ளைக்காயினும்,

அல்லது, நூறுவேலி நிலத்திற்கதிபதியின் பிள்ளைக் காயினும், கொடுக்கவேண்டுமென்பது டம்பாச்சாரியின் நினைவு. ஆனால், அவ்வூர்ப் பெண்டீரான கோடிவீட்டுக் கோமாளி யம்மாளும், நடுவீட்டு நாச்சியாரம்மாளும், அடுத்த வீட்டு அலர்மேலம்மாளும் தாமரைக்குளத்தில் நீராடுகையில், இவ்விஷயங்களைக் குறித்து சந்தேகமறப் பேசிக்கொண்டனர்.

**கோமாளி:-** ஏனடி! நாச்சிக்குட்டி! மொச்சக்கொட்டை யகத்துப் பெண்ணும் என்னுடைய பிள்ளை குப்பனும் பார்த்திப வருஷப் பஞ்சத்திலே ஒரே ராத்திரியிலே பிறந்தவர்கள். குப்பனுக்கு இப்போதுதான் ஜாதகம் பார்த்தோம். அவனுக்கு இருபத்துநான்கு வயதாகிறது, இந்த பங்கஜவல்லிக்குப் பதினாலு வயதாமே! என்ன அதிசயமடி! - என்று தனது வலது கையை மோவாயில் மாட்டி வியப்புக்குறி காட்டிக் கூறினாள்.

**நாச்சி:-** அடி பைத்தியமே! போ; அது இருசியென்பது உனக்குத் தெரியாதா? நூறு வயசானாலும் அது ருதுவாகாது.

**அலர்:-** அதைப் பார்த்தாலே கடுவன் பூனை மாதிரி பயமாயிருக்கிறதே! அதை எந்தக் கட்டையிலே போவான் தாலிக்கட்டித் தடுமாறி நிற்கப்போறானோ! வண்ணாரச் சுப்பிக்கு அது ஒரு நாள் இடுப்புத் துணியை விழுத்துப் போட்டதாம். அது ஆணுமில்லையாம், பெண்ணுமில்லை யாம்; அலியாம்- என்றாள்.

இவ்வாறு அவ்வூர் மகளிர் பங்கஜவல்லியைப் பற்றி வம்புகள் பேசிவந்தனர். அந்தப் பெண்ணின் தோற்றமும் அதற்கு ஒத்ததாகவே இருந்தது. அவள் பிறந்ததும் உண்மையில் இருபத்து நான்கு வருஷங்களாயின. அவள் பிரவிடை யாகவுமில்லை. புருஷன் என்ற நினைவையே அது கொள்ளவு மில்லை.அவ்வதந்தி ஊர்முற்றிலும் பரவியது. அவ்வூரார் எவரும் தமது புத்திரற்கு அந்தப் பெண்ணை மணம் புரிவிக்க

நினைக்கவில்லை. அந்த இரகசியத்தை அறியாத அயலூரார் எவரேனும் பெண்ணைப் பார்க்க வருவாராகில் உடனே விஷயம் அவரது காதிற்கு எட்டிவிடும். வந்த வண்டியிலேயே திரும்பிப் போய்விடுவர். அவ்வூர் ஜனங்கள் இந்த உண்மையை யறிந்திருந்தன ரென்றாலும் வரதாச்சாரியார் அவர் மனைவி ஆகிய இருவரின் செருக்கையும் வேஷத்தையும் கண்டு மிகவும் அருவருப்பைக் கொண்டு, அவர் விஷயத்தில் பலவாறு புரளி செய்யத் தொடங்கினர். பிரவிடையான பெண்ணை அவர்கள் கலியாணம் செய்து கொடுக்காமல் வைத்துக்கொண்டிருப் பதாகப் பறையடிப்பதுபோல, ஓயாமல் அதையே கூறி, அவர்களை ஜாதியைவிட்டு விலக்கி வைத்தனர். எவரும் அவர்களது வீட்டிற்குப் போவதையும் நிறுத்திவிட்டனர். ஊரில் நடக்கும் நன்மை தீமைகளுக்கு அவரை அழையாமலும், அவரைப் பந்தியில் வைத்துக் கொண்டு போஜனம் செய்யாமலும் ஒதுக்கி விட்டனர்.

அந்த அவமானத்தைப் பொறாமல், அவர் அவ்வூரை விட்டு, கும்பகோணத்தில் வந்து குடியேறினார். நமது சாமாவையர் இந்தக் குடும்பத்திற்கு அநுகூலமான நண்பராத லால், அவர் வரதாச்சாரியாருக்கு ஒரு உத்தியோகமும் செய்து வைத்தார். என்ன உத்தியோகம்? சாமாவையருடைய எஜமான் நைனா முகம்மதுவின் கம்பெனியில் சீமைத்துணிகள் வியாபாரம் நடத்தப்பட்டது என்பதை இவ்விடம் குறிக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கம்பெனிக்கு வரதாச்சாரியார் கும்பகோணத்துக்கு பிரதி நிதியாக (ஏஜெண்டாக) நியமிக்கப் பட்டார். அதற்குச் சம்பளம் கிடையாது. எந்த வியாபாரிகளா யினும் துணிகள் தேவை யானால், அந்த உத்தரவை வரதாச்சாரியார் வாங்கி சென்னைக்கு அனுப்பினால், அதில் நூற்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் அவருக்கு லாபம் கிடைத்தது. அதில் மொத்தத்தில் மாதம் முப்பது ரூபா வரையில் வந்து கொண்டிருந்தது. வரதாச்சாரியார் அத்துடன் நிற்கவில்லை.

அவர் தமக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 500- சம்பளமென்றும் அந்தக் கம்பெனியில் ஜனங்கள் பணத்தொகைகளை வட்டிக்குக் கொடுத்தால் நூற்றுக்கு இரண்டு வட்டி கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு வந்தார். அவர், அவருடைய மனைவி ஆகிய இருவரின் வெளிப்பகட்டைக் கண்டு பலர் ஏமாறிப் போய், தாம் எவ்வளவோ பாடுபட்டு நெடுங்காலமாய்ச் சேர்த்து வைத்திருந்த பணங்களை அவரை நம்பி அவரிடம் கொடுத்திருந்தனர். அவர்கள் இரகசியமாகச் சேர்த்து வைத்திருந்த சிறுவாடுகளை வரதாச்சாரியார் சென்னைக்கு அனுப்பாமல் தாமே பலகாரம் செய்துவிட்டு அவர்களுக்கு வட்டிப்பணத்தை மாத்திரம் காலத்தில் கொடுத்து எண்ணிறந்த ஏழைகளை வஞ்சித்து தமது வயிற்றை வளர்த்து வந்தார்.

நமது சாமாவையர் இவருடைய பெண்ணைத்தான் வராகசாமிக்குக் கட்டிவிட நினைத்து, இவரைப் பற்றி பெருந்தேவியம்மாள் கோமளம்மாள் ஆகிய இருவரிடமும் இந்திரன் சந்திரன் என்று பெரிதும் புகழ்ந்து கூறி அவர்களை ஏமாற்றிக்கொண்டு வந்தார். இவரிடத்திற்கே சாமாவையர் இப்போது வந்து சேர்ந்தார்.

சாமாவையர் வந்து உள்ளே நுழைந்த சமயத்தில் வரதாச்சாரியார், ஒரு தோசைக்காரக் கிழவி நாற்பது வருஷ காலமாக இடியாப்பம் சுட்டு விற்றுச் சேர்த்து வைத்திருந்த தொகையான ரூபா ஐந்நூறை அவளிடத்திலிருந்து அபகரித்துக் கொண்டிருந்தார். அவள் அவ்வளவு பெருத்த தொகையை எவ்வித தஸ்தாவேஜு மில்லாமல் அவரை நம்பி அவரிடம் கொடுப்பதைப் பற்றி ஒரு சிறிது அஞ்சி பணத்தைக் கொடுக்கத் தயங்கியிருந்த தருணத்தில் சாமாவையர் ஒரு பெருத்த சாவகாரி வருவதைப்போல ஆடம்பரமாக உள்ளே நுழைந்தார். அவரைக் கண்ட வரதாச்சாரியார் எழுந்து மரியாதையாகவும் அன் போடும், "வாருங்கள் வாருங்கள்" என்று கூறி வரவேற்று

அவரை ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். உடனே இடியாப்பக்காரியை நோக்கி, "ஏ கிழவி! நீ இந்த ஐந்நூறு காசுக்கு இவ்வளவு யோசனை செய்கிறாயே! இவர்களைப் பார்த்தாயா? இவர்கள் யார் தெரியுமா?" என்றார். கிழவி திகைப்படைந்து சாமாவையரைப் பார்த்தாள். "இவர்கள் கீழ்ப்பாதி மங்கலம் மைனர். இவர்களுக்கு 549 வேலி நிலம் இருக்கிறது. லெட்சலெட்சமாய்ப் பணத்தை எங்கள் கம்பெனியில் வட்டிக்குப் போட்டிருக்கிறார்கள். இவர்கள் கூட தஸ்தாவேஜு கேட்கவில்லையே! இந்தா நான் முடிவாகச் சொல்லுகிறேன்; உனக்குத் தைரியமிருந்தால் கொடுத்து விட்டுப்போ. இல்லாவிட்டால் எடுத்துக்கொண்டு போ. நான் இவர்களுடன் பேசவேண்டும்" என்று உறுதியாக மொழிந்தார்.

கிழவி திகைப்பும் குழப்பமுமடைந்து தயங்கி நின்றாள். உடனே சாமாவையர், "பாட்டி! இந்த இடத்தில் பணம் கொடுத்தால் பயமே இல்லை. இவர்களுடைய சொல்லே போதுமானது; பத்திரம் எதற்கு? சாட்சி எதற்கு? ஒன்றும் தேவையில்லை. இதோ பார் நான் இருபதினாயிரம் ரூபா கொணர்ந்திருக்கிறேன். பத்திரமில்லாமலே கொடுக்க போகிறேன்" என்று தமது ரயில்வே பாக்கை (தோல் பையை)த் திறந்து அதிலிருந்த ஒரு பெருத்த துணி மூட்டையை அவிழ்த்துக் காட்டினார். அம்மூட்டை முழுவதிலும் பவுன்களே நிறைந்து கண்ணைப் பறித்தன. அதைக் கண்ட கிழவி வாயைப் பிளந்தாள்; வரதாச்சாரியும் திகைத்தார்; ஆனால், அவர் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. கிழவியின் மனதில் உடனே பெருத்த நம்பிக்கை பிறந்தது. தனது கந்தைத் துணி மூட்டையை அவிழ்த்து, ரூபா ஐந்நூறையும் கலகலவென்று வரதாச்சாரியின் முன்னர் கொட்டிவிட்டு, போதாதற்கு அவரையும் சாமாவை யரையும் வணங்கி நமஸ்காரம் செய்துவிட்டு விடை பெற்றுக் கொண்டு வெளியில் நடந்தாள். வஞ்சகரிருவரும் தமது வெற்றியை நினைத்து மகிழ்வடைந்து ஒருவரையொருவர்

பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

உடனே சாமாவையர், "அடே வரதாச்சாரி! நீ பலே சாமர்த்தியசாலியடா! ஒரு நிமிஷத்தில் ரூபாய் ஐநூறு தட்டிவிட்டாயே! உன்னுடைய உத்தியோகம் நல்ல உத்தியோகம்" என்றார்.

வரதாச்சாரி நன்றியறிவைக்காட்டி, "எல்லாம் நீ கொடுக்கும் பிச்சையல்லவா? உன் பெயரைச் சொல்லிப் பிழைக்கிறோம்; இனி மேலும் உன்னாலேயே பிழைக்க வேண்டும். உன்னுடைய கடிதம் நேற்றுக் காலையில் வந்தது. உனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை யாரிடம் சம்பாதிக்கலாமென்று பார்த்தேன். இந்தக் கிழவி காவிரி யாற்றங்கரைப் பாலத்தடியில் ஆப்பம் சுட்டு விற்பவள். அந்த வழியாக நான் போகும்போதெல்லாம் இவள், "சுவாமி! தெண்டம்" என்று ஒரு கும்பிடு போடுவாள். நான் வட்டிக்குப் பணம் வாங்குகிறவனென்பதை யறிந்துகொண்டே இவள் அப்படிச் செய்துவந்தாளென்றும், இவளிடம் பணம் இருக்கிற தென்பதையும் நான் யூகித்துக்கொண்டேன். பக்த சிரோன்மணியான இவள் காணிக்கை வைத்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுதல் செய்வதை மறுப்பது பாவமல்லவா? "சுவாமி! தண்டம்" என்று இவள் சொல்லும் போதெல்லாம், "கவலைப்படாதே! ஒருநாளைக்கு தெண்டம் வைக்கிறேன்" என்று நான் நினைத்துக்கொண்டு போவதுண்டு. இவள் நல்ல சமயமாக இன்று வந்து உதவினாள். அது இருக்கட்டும், வராகசாமிக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்றார்.

**சாமாவையர் :-** முக்கால் பாகம் குணமடைந்துவிட்டான்; அவனை வீட்டுக்கு அனுப்பும்படி நாம் இப்போது விரும்பினாலும் வைத்தியசாலை அதிகாரிகள் அவனை அனுப்பத் தடையில்லை. ஆனால், நல்ல காற்று ஓட்ட முள்ள

விசாலமான வீட்டிலேதான் அவன் இப்போதிருக்க வேண்டுமாம். இப்போது அவர்கள் குடியிருப்பது மிகவும் சிறிய வீடு; காற்று ஓட்டம் இல்லாதது. கரையோரத்தில் ஒரு பங்களா இருக்கிறது. அதை அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டு இன்னம் இரண்டு மூன்று நாட்களில் கிரகப் பிரவேசம் செய்யப் போகிறார்கள். அந்தப் பங்களாவுக்கு நாலைந்து நாளில் வராகசாமியை அழைத்து வரப்போகிறோம். கடற்காற்று வீசினால் அவன் சீக்கிரம் குணமடைந்துவிடுவான்.

**வரதா:-** இந்த நிலைமையில் கலியாணம் செய்துகொள்ள அவன் சம்மதிப்பானா?

**சாமா:-** அதைப்பற்றி கவலைப்படாதே! நானும் அவன் தமக்கையும் சொல்வதை அவன் ஒரு நாளும் மீறமாட்டான். தவிர, இந்த விஷயத்தில், நாங்கள் இன்னொரு யோசனை செய்திருக்கிறோம். இப்போது நாங்கள் வாங்கப்போகும் பங்களாவின் விலை ரூபா பதினாயிரம். அவனுடைய தமக்கை, அவனுக்குத் தெரியாமல் பதினாயிரம் ரூபா சிறுவாடு சேர்த்து வைத்திருந்தாள். அவன் வருமுன், இந்தப் பணத்தைக் கொடுத்து பங்களாவை என் பேருக்கு வாங்கப்போகிறோம். கலியாணத்துக்காக, நீ பதினாயிரம் ரூபா கொடுத்ததாகவும் அதனால் பங்களாவை வாங்கினதாகவும் சொல்லப் போகிறோம். உன்னிடம் வாங்கின பிறகு, கலியாணம் வேண்டாமென்று அவன் சொல்ல மாட்டானல்லவா - என்றார்.

**வரதா:-** பங்களாவை உன்பேரில் ஏன் வாங்கப் போகிறீர்கள்?

**சாமா:-** பங்களாவுக்குச் சொந்தக்காரன் நம்முடைய நைனா முகம்மதுவின் சிற்றப்பன். அவன் மற்றவருக் கென்றால் அதை பன்னிராயிரம் ரூபாய்க்குத்தான் கொடுப்பான். எனக்கு இரண்டாயிரம் ரூபா குறைப்பான். அதனால் என்பேரில்

வாங்கப்போகிறோம். அப்புறம் பெருந்தேவி பேரில் மாற்றப்போகிறோம்.

**வரதா:-** அப்படியானால், கலியாணத்துக்காக நான் கொடுக்க வேண்டிய பதினாயிரம் ரூபாயைக் கொடுக்க வேண்டாமா?

**சாமா:-** நல்லகாரியம் செய்தாய்! நாங்கள் வராகசாமிக்காக இந்தக் கட்டுக்கதையைச் சொல்லப்போகிறோம். உன்னிடமிருந்து பதினாயிரம் ரூபா வாங்கவேண்டு மென்னும் பேராசையினாலே தான் பெருந்தேவி கலியாணத்துக்கு ஒப்புக்கொண்டிருக்கிறாள். பணத்தை ரகசியமாக உன்னிடமிருந்து வாங்கி தன்னிடம் கொடுக்க வேண்டு மென்று அவள என்னிடம் சொல்லியிருக்கிறாள். பணம் வராவிட்டால், பெண் அழகாயில்லை என்று ஏதாயினும் காரணம் சொல்லி கலியாணத்தை நிறுத்திவிடுவாள். ஆகையால் தந்திரமாக அவளை ஏமாற்ற வேண்டும்.

**வரதா:-** எப்படி தந்திரம் செய்கிறது?

**சாமா:-** அவளிடம் உன்னைப்பற்றி நான் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறேன். நீ ஒரு வேலை செய்; இருநூறு, முன்நூறு ரூபாயை அரையணா, காலணாவாக மாற்றி ஒரு சாக்கு மூட்டையில் அதைப்போட்டு இன்னமும் ஒட்டுத்துண்டுகளையும், அதில் போட்டு பெருத்த மூட்டையாகப் போட்டுக்கொண்டு வந்துசேர். பணம் தேவையான போதெல்லாம் அதிலிருந்து அலட்சியமாக எடுத்து வீசி ஆடம்பரம் செய். அதைக் கண்டு அவள் ஏமாறிப்போவாள். அவளுக்கெதிரில், நான் உன்னிடம் வந்து வரதட்சணை எங்கேயென்று கேட்பேன். "இதோ அடுத்த ரயிலில் பெண்ணின் அம்மான் பணம் கொண்டு வருவார்; காரியம் நடக்கட்டும், தாலி கட்டுமுன் வந்துவிடும்" என்று சொல்லிக் கொண்டிரு. அவள் சந்தேகப்படாதபடி நானும் அவளுக்கு உறுதி சொல்லி

வைத்திருக்கிறேன். தாலி கழுத்தில் ஏறியவுடன் "ரயில் தவறிப்போய்விட்டது போலிருக்கிறது. நான் ஊருக்குப் போய் உடனே அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லி விட்டு நீ ஊரைப் பார்த்துக் கம்பியை நீட்டிவிடு. அப்புறம் யோசித்துக் கொள்வோம். நீ பங்களாவுக்குப் பணம் கொடுத்து விட்டாயென்று முதலில் அவர்கள் வராகசாமியிடம் சொல்லி விடுவார்கள். ஆதலால் அப்புறம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லமாட்டாமல், திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி சும்மா இருந்து விடுவார்கள்.

**வரதா:-** அது நல்ல யோசனை தான். கலியாணம் பங்களாவிலா நடக்கும்?

**சாமா:-** அதையும் பேசி முடித்துவிட்டேன். கலியாணத்தை வீட்டில் நடத்தினால் ஐந்து நாள் ஆகும். உனக்குப் பணச்செலவும் அதிகமாகும். ஏதாவது ஒரு கோவிலில் செய்தால், ஒரு நாழிகையில் ஐந்து நாளைக் காரியத்தை முடித்துக் கொண்டு வந்துவிடலாம். அதனால் ஒரு தந்திரம் செய்திருக்கிறேன். இந்த பங்கஜவல்லி குழந்தையாயிருந்த போது மாந்தம் வந்ததாயும், இவள் பெரியவளான பின், திருப்பதி கோவிலில் வந்து கலியாணம் செய்து வைப்பதாய் அப்போது நீங்கள் பிரார்த்தனை செய்துகொண்டதாயும், அதன் படி கலியாணத்தைத் திருப்பதியில் செய்யவேண்டுமென்றும் சொல்லிவிட்டேன். அவர்கள் இணங்கிவிட்டார்கள். உனக்குக் கொஞ்சமும் துன்பமில்லாமல், எல்லா விஷயங்களையும் நான் முடித்துவிடுகிறேன். இதோ என்னிடம் ரூபா 9500 இருக்கிறது. பங்களா வாங்க 500 குறைவாகிறது. அதை மாத்திரம் நீ கொடுத்து விடு. மற்றதை முடித்து வைப்பது என்னுடைய பொறுப்பு.

**வரதா:-** சரி; இதைக் கிழவி கொடுத்த பணத்தை இப்படியே நீ எடுத்துக்கொள் - என்று தமக்கெதிரிலிருந்த

பணத்தைக் கொடுக்க, சாமாவையர் அதை வாங்கித் தமது மூட்டையில் சேர்த்து கட்டிக்கொண்டார்.

**வரதா:-** முன் கலியாணம் செய்திருந்த பெண் இனிமேல் வருவாளா?

**சாமா:-** அவள் ஏன் வருகிறாள்? அவள் தான் ஒரு நாடகக்காரனோடு ஓடிப்போய்விட்டாளே! அந்தக் கவலை வேண்டாம்.

**வரதா:-** அப்படியா! அதுவும் நல்ல அதிர்ஷ்டம் தான். எப்படியாவது நமது பங்கஜவல்லி வக்கீலைக் கலியாணம் செய்துகொண்டு பங்களாவுக்கு எஜமானியாக இருந்து வாழ்வதை நாம் ஒரு நிமிஷமாவது கண்ணாரப் பார்த்து சந்தோஷப்படுவது போதும் - என்றார்.

இவ்வாறு அவ்விரு நண்பரும் நெடுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தனர். அதற்குள் வரதாச்சாரியின் மனைவியும் அங்கு வந்து, அப்போதே மலர்ந்த தாமரை மலரைப் போன்ற இனிய முகத்தோடு சாமாவையரை வரவேற்று, க்ஷேமம் விசாரித்து, பல விஷயங்களைப்பற்றி உசாவி, மகிழ்ச்சியடைந்து, அளவளாவியிருந்தாள். அவருக்குரிய விருந்து முதலியவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகளை மிகுந்த பரபரப்போடும் உவப்போடும் செய்து முடித்தபின் ஒரு நிமிஷமும் அவரை விடுத்து அப்புறம் செல்லாமல் மிகவும் குழைவாக அவரோடு சம்பாஷணை செய்தவண்ண மிருந்தாள். அன்றைய மாலை வரையில் ஐயரவர்கள் வரதாச்சாரியின் இல்லத்தில், அம்மாளின் வரம்பு கடந்த அன்பினால் சகலவித சுகங்களையும் அநுபவித் திருந்தார். கணவன் மனைவி ஆகிய இருவரும் அவருக்கு இராஜஉபசாரம் செய்து, முதல்தரமான விருந்தளித்து, இன்பக் கடலிலாட்டி, அவர் மனம் குளிரும்படி நடந்துகொண்டனர். மாதுரியமான

சிற்றுண்டிகளைத் தயாரித்து, அந்தப் பெருந் தெய்வத்திற்குப் படைத்து நிவேதனம் செய்வித்தனர். எவ்விதமாயினும் தமது பெண்ணை உயர்வான இடத்தில் கொடுக்கவும், தம்மீதுள்ள ஜாதிக் கட்டை விலக்கிக் கொள்ளவும் அவர்கள் மிகுந்த ஆவல் கொண்டிருந்தனர். தவிர, தமது பெண் அலியாதலால் பிறக் காலத்தில் புருஷனோடு அவள் வாழ்க்கை செய்யாவிடினும், அவளுடைய சவரட்சணைக்குத் தேவையான பெரும் பொருளாயினும், அவளது புக்ககத்திலிருந்து கிடைக்குமென்று நினைத்தனர். இந்த மூன்று காரணங்களினால் அவர்கள் இந்தச் சம்பந்தத்தையே கொண்டுவிட உறுதி செய்து கொண்டு, அதற்குத் தகுந்த கருவியாகிய சாமாவையரை சரணாகதரக்ஷ கராக அடைந்து அவருக்குத் தொண்டு புரிந்தனர்.

சாமாவையர் அன்றிரவு போஜனத்தை மாலை ஏழரை மணிக்கே முடித்துக்கொண்டார். நாகைப்பட்டணம் சென்று பங்களாவின் விக்கிரயப் பத்திரத்தை மறுநாளே முடித்துக் கொண்டு, சென்னைக்குத் திரும்ப நினைத்தவராய், இரவு ஒன்பது மணிக்குக் கும்பகோணத்திலிருந்து புறப்பட்ட ரயிலுக்கு வந்து சேர்ந்தார். கையில் ரயில் பைக்குள் ரூபா பதினாயிரம் பவுன்களாகவும், நோட்டுகளாகவும், ரூபாயாகவும் மூட்டை கட்டப்பட்டிருந்தன. அதை மிகுந்த எச்சரிக்கையோடு வைத்துக் கொண்டு வண்டியிலேறினார். ஒருவர் கும்பகோணத்திலிருந்து நாகைப்பட்டிணம் போக வேண்டுமானால், கும்ப கோணத்தில் ரயிலேறி மாயவரத்தில் இறங்கவேண்டும். அவ்விடத்தில் வந்துள்ள வேறு ரயிலில் ஏறித் திருவாரூர் போய்ச்சேரவேண்டும். அவ்வூரில் வந்துள்ள வேறு ரயிலிலேறி நாகைப்பட்டணம் செல்லவேண்டும். கும்பகோணத்தில் வண்டியில் ஏறிய சாமாவையர், அதில் ஜனநெருக்க மில்லாமையால் உல்லாசமாகப் பலகையின் மீது காலை நீட்டி விட்டு, பக்கத்தில் சாய்ந்துகொண்டார். ரயில் புறப்பட்டு

கிடுகிடாயமாகப் பறக்க வாரம்பித்தது. சாமாவையரும் தமது மனக்குதிரையைத் தட்டிவிட்டார். அதுவும் தனது வேலையைச் செய்யத் தொடங்கியது. அவர் இன்பகரமான நினைவுகளில் ஆழ்ந்தார். சென்ற சின்னாட்களாக அவர் பிறவிக்குருடன் திடீரென்று பார்வை பெற்றதைப்போல விருந்தார். பிறந்த நாள் முதலாக, நித்திய தரித்திர நிலைமையி லிருந்துவந்த ஐயரவர்கள் தம்முடைய தென்று ஒரு பவுனைக் கூடக் கண்டவரன்று. திடீரென்று புதையல் அகப்பட்டதைப்போல, அவரிடம் ரூபா பதினாயிரம் வந்து சேருமானால், அவர் மனதிலுண்டாகும் களிப்பும், பூரிப்பும், ஆநந்தமும் அளவில் அடங்கியவை யாமோ? ஒரு நிமிஷத்தில் அவர் தமது பழைய நிலைமையை மறந்து, புது மனிதராக மாறிவிட்டார். அந்தப் பணத்தை என்ன செய்வது? வட்டிக்குக் கொடுப்பது நல்லதா, அல்லது அதை வைத்துக்கொண்டு வர்த்தகம் செய்வது நல்லதா, அன்றி பங்களாவை வாங்குவதே உசிதமா வென்று பல நாட்கள் இரவுகளில் தனிமையிலும் தமது மனைவியோடு கலந்தும் யோசனை செய்தார். "பங்களா பாதி விலைக்கு வருகிறது. அதில் துரை மாரைக் குடி வைத்தால் மாதம் ஒன்றுக்கு ரூ.200 - கிடைக்கும். அதில் உற்பத்தியாகும் பழமரங்களின் மகசூல் வருஷத்தில் ஆயிரம் ரூபா கொடுக்கும். ஆகையால், பங்களாவை வாங்குவதே சிறந்தது என்று நினைத்து அவ்வாறே முடிவு கட்டிக்கொண்டார். தவிர பங்களாவில் பெருந்தேவி முதலியோரைச் சிறிது காலமாயினும் குடிவைக்காமல், பணத்தை அப்படியே அபகரித்துக்கொண்டால் மூடர்களான அவ்விரு சகோதரி மாரும் ஆத்திரமடைந்து, தம்மோடு பெருத்த சண்டை யிடுவரென்றும், மேனகாவை விற்றது முதலிய இரகசியங்கள், அதனால் வெளிப்பட்டு விடுமென்றும், பிறகு தமக்குப் பல துன்பங்கள் சம்பவிக்குமென்றும் நினைத்தார். ஆகையால் பங்களாவை தமது பேருக்கு வாங்கிக்கொண்டு, அவர்களைச் சில மாதங்கள் வைத்திருந்து, பிறகு வக்கீல் மூலமாக நோட்டீஸ் கொடுத்து அவர்களை

வெளியேற்றிவிடவும், அதன் பிறகு தாமும் தமது மனைவியும் பெருஞ் செல்வத்துடன் சுகமாக வாழலாமென்று செய்யப்பட்ட இவ்வித நினைவுகளில் இப்போது ரயிலில் சாய்ந்திருந்த வண்ணம் தமது சிந்தையைச் செலுத்தி அவைகளில் ஈடுபட்டவராய் இரவு பத்தரை மணிக்கு மாயாவரம் வந்து சேர்ந்து வண்டியை விட்டு இறங்கினார். திருவாரூருக்குப் போக ஆயத்தமாக வண்டிகள் வெற்று வண்டிகளாக இருந்தன. சிலவற்றில் இரண்டொரு மனிதர் உட்கார்ந்தும், படுத்து மிருந்தனர். வெறுமையாயிருந்த ஒரு வண்டியில் சாமாவையர் மூட்டையை வைத்தார். அந்த ரயிலில் திருவாரூர் போய்ச் சேர இரவு ஒரு மணியாகும் ஆதலால், தாம் வெற்று வண்டியிலிருந்தால், கவலையின்றி சிறிது துயிலலாமென்று நினைத்தே ஐயரவர்கள் ஏகாந்தத்தை நாடினார். வேறு எவரும் வராமல் தடுக்கும் நோக்கத்துடன் அவர், காலடி வைக்கும் பலகையில் நின்றார். முதல் மணி அடிக்கப்பட்டது. புகை வண்டி ஊதியது. இரண்டாவது மணியும் அடிக்கப்பட்டது. அதற்குமேல் எவரும் வரமாட்டார்களென்று நினைத்த சாமாவையர் உட்புறம் சென்று கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு கதவி லண்டையில் உட்கார்ந்தார். அடுத்த நிமிஷத்தில் ஒரு யௌவன மங்கை, "இதோ இந்த வண்டியில் ஏறலாம்" என்று சொல்லிக்கொண்டே விரைவாக வந்து, சாமாவையர் இருந்த வண்டியின் கதவைத் திறந்து வண்டிக்குள் ஏறினாள். சாமாவையர் உடனே எழுந்து கடைசி யிடத்தில் உட்கார்ந்து கொண்டார். முதலிடத்தில் அந்த அணங்கு உட்கார்ந்தாள். அவளுக்குப் பின்னால் வந்த இன்னொரு மனிதன் ஒரு டிரங்குப் பெட்டியையும் ஒரு கூஜாவையும் உட்புறம் வைத்து விட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டவனாய் வெளியில் நின்று, "அம்மா கமலம்! பத்திரமாகப் போய்ச் சேர். நாளைக்கு வருகிறேன். ஸ்டேஷனில் இறங்கும்போது சாமான்களை விட்டு விடாதே! தூங்கி விடாதே!" என்று சொல்லி எச்சரித்துவிட்டு, சாமாவையரைப் பார்த்துக் கைகுவித்து வணங்கி, "சுவாமிகள் எந்த ஊருக்குப்

போகிறீர்கள்?" என்று பணிவாகக் கேட்டான். அவர், "நாகைப்பட்டணம் போகிறேன்" என்றார். அந்த மனிதன், "சரி! நிரம்ப சந்தோஷம், இந்தக் குழந்தை திருவாரூர் வரையில் வருகிறாள். இவளை அதுவரையில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். சாமாவையர் மிகுந்த பரோபகார குணம் பிரகாசித்த இனிய முகத்தைக் காட்டி, "அப்படியே செய்கிறேனப்பா! கவலைப்படாதே; என் தங்கையைப்போலப் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். அப்போது வண்டி ஊதிக்கொண்டு நகர்ந்தது. அந்த அழகிய பெண்மணி சகிக்க வொண்ணாத நாணத்தினால் தனது தேகத்தை நெளித்துக்கொண்டு, "நான் போய் வருகிறேன்" என்று குயிலைப்போல மொழிந்து, வெளியிலிருந்த மனிதனிடம் விடைபெற்றுக் கொண்டாள். அதற்குள் வண்டி விசையாக ஓடியதால், அந்த மனிதன் நெடுந்தூரத்திற் கப்பால் பின் தங்கிவிட்டான்.

★★★★★★★★★★

## 19 வது அதிகாரம்

## மலையாள பகவதி

அந்த வண்டியில் ஏறுமுன் அப்பெண்பாவை பல வண்டிகளை ஆராய்ந்துகொண்டே வந்தாள். தான் தனிமையாகச் செல்லுவதால் அவள் வெற்று வண்டியில் ஏற அஞ்சினாள். மனிதர் இருந்த வண்டிகளில் பார்வைக்கு அருவருப்பை உண்டாக்காத, திருப்திகரமான சகாப்பிரயாணி எந்த வண்டியில் இருக்கிறான் என்று ஆராய்ந்து சாமா வையரைக் கண்ணுற்றாள். உடனே அவளது மனதில், அந்த

வண்டியிலேயே ஏறவேண்டு மென்னும் ஒரு விருப்பம் உண்டானது. நமது சாமாவையரது தோற்றத்தை வருணித்துச் சொல்வது மிகையல்லவா! அவர் ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இருதிறத்தாரும் கண்டு, முதல் பார்வையிலேயே மோகம் கொள்ளத் தகுந்த சுந்தரவடிவினர். உருண்டு, திரண்டு, மன்மதகாரமான சிவந்த மேனியின் தளதளப்பும், பரந்த வட்டவடிவமான வதனமும், வெள்ளைக் கடுக்கனும், ஜரிகை வஸ்திரங்களும் பட்டு உருமாலையும், தங்கக்கொடியில் தொங்கிய ஒற்றை உருத்திராட்சமும், மோதிரங்களும் ஒன்று கூடி கம்பீரத் தோற்றத்தையும் பெரிய மனிதத்தன்மையையும் உண்டாக்கி, காண்போரை வசீகரித்தன. அவரைக் கண்டு உள்ளூற மகிழ்ச்சிகொண்ட கமலம், வண்டி புறப்பட்டபின் மிகவும் நாணத்தைக் காண்பித்து, கடைசியாக விடை பெற்றுக்கொள்ள வெளியில் நீட்டிய தனது சிரத்தை உட்புறம் இழுத்துக்கொள்ளாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவளது கரத்தில் வெற்றிலை பாக்கு நிறைந்த பையூர் பிரம்புச் சாயப் பெட்டியொன்றிருந்தது. அவள் கதவிற்கருகில் உட்கார்ந் திருந்தாள். சாமாவையர் அவளுக்கு எதிர்ப்புறப் பலகையின் கடைசியில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டு, அவளிருந்த கதவு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். முதலில் சாமாவையர், அந்தப்பெண்ணும் அவளுடன் வந்த மனிதனும் ஏறப்போவதாக நினைத்து, ஒருவாறு அருவருப்புற்றிருந்தார். ஆனால், பெண் மாத்திரம் தனிமையில் தம்முடன் திருவாரூர் வரையில் வருகிறாள் என்பதை உணர, அவரது மனம் பெருங்களிப் படைந்து, இனிமையே வடிவாகத் தோன்றிய அப்பெண்ணழகி அந்த இரவில் தம்முடன் இருப்பதைப்பற்றி ஆநந்தங் கொண்டார்.

மேல் நிகழவிருக்கும் சம்பவங்களைக் கூறப்போகுமுன், அந்தப் பெண்ணின் வயது, தோற்றம் முதலிய விவரங்களைச் சிறிதளவு விளக்குவது அவசியமாகிறது. அவளது வயது

பதினாறு அல்லது பதினேழு என்று மதிக்கலாம். நல்ல பக்குவ காலத்தின் எழிலும் ஒளியும் இனிமையும் ஒன்றாக விகசித்து விரிந்து உன்னத நிலையிலிருந்து கண்டோர் கண்களையும் மனதையும் கொள்ளைகொண்டன. நடுத்தரமான உயரமும் பருமனும் கொண்ட அவளது மேனி பத்தரைமாற்றுப் பைம்பொன்னோ, எலுமிச்சைப் பழமோ தந்தமோ வென்று ஐயுறும் அழகிய நிறத்தை உடையதாயிருந்தது. நகம் முதல் சிகம் வரையிலுள்ள ஒவ்வொரு அங்கமும் அச்சில் கடைந்து பொருத்தப்பட்டதைப்போல அற்புதமாயும், இலட்சணப் பழுதின்றியும், குற்றங்கூறுதற் கிடமின்றியும் அமைந்திருந்தது. நீலம் பச்சை முதலிய பலவிதமான நிறங்களையும், நீரோட்டத்தையும் சொரியும் சில நட்சத்திரங்களைப்போல அவளது வதனத்தில் வசீகரமும் களையும் ஜிலுஜிலென்று வீசின. தந்தத் தகட்டைப்போலிருந்த நெற்றியும், கறுத்ததடர்ந்த புருவ விற்களும், பெருத்த சுத்தமான நீலோற் பல விழிகளும், மாதுளம்பூவின் செவ்விய நிறத்தைக் கொண்டு தேன்கசிந்த தீங்கனிப்போலப் பிளவுபட்ட அதரங்களும் நல்முத்தின் பதிப்பைப்போல வொளிர்ந்த பற்களும் ஒன்றுகூடி, அது முகமோ, அல்லது காண்போர் மதியை மயக்கி, மனதை வதைத்து பித்தமுறச்செய்யும் மந்திர உச்சாடனச் சக்கரமோ, மன்மதவேளின் பாணங்களது அணிவகுப்போ வெனத் தோன்றியது. நெற்றியின் உச்சியில் தொடங்கி வளைந்து வளைந்து பாலத்தின் கண்களைப்போல இரு புறங்களிலும் அற்புதமான வேலைப்பாடு தோன்ற இயற்கையில் சென்றிருந்த கருங்கூந்தலின் கற்றையை வாரிப் பின்னலிட்டு, தேருருளையோ அல்லது திண்டோவெனத் தோன்ற வளைந்து, ரோஜா, மல்லிகை முதலிய மலர்களால் அதை அலங்கரித்தாள். இருபுருவ விற்களி னிடையிலிருந்த திலகமண்டலத்தில் மூன்றாம் பிறை தவழ்ந்ததைப்போல ஜவ்வாதினால் கீற்றிட்டு, இரண்டு விற்களையும் ஒன்றாய்ச் சேர்த்திருந்தாள். கயல்

மீனிலும் அதிகரித்த சுறுசுறுப்பும் பிறழ்ச்சியும் கொண்ட கண்களில் கரிய மை தீட்டப்பட்டிருந்தது. செவிகளிலிருந்த வைரக் கம்மல்களும், அவற்றைக் கேசத்தோடு இணைத்த வைரமாட்டல்களும் சுடர் விட்டெரிந்தன. கரை காணாது கடல்களில் தவிக்கும் கப்பல்களை தீப ஸ்தம்பத்திலுள்ள பெருஞ்ஜோதி கைகாட்டி அழைப்பதுபோல அவளது நாசியின்மீதிருந்த ஒற்றை வைரக்கல் தனது கிரணக் கற்றைகளான கரங்களை விரித்து, அண்டுவோர்க் கெல்லாம் அபயஸ்தம் காட்டி யழைத்தது. ரோஜாப்பூவை பச்சையான இதழ்கள் மறைத்திருப்பதைப்போல அவள் தனது மேனியில் ஜரிகைப் புட்டாக்கள் அணிந்திருந்தாள். இடையிலிருந்த தங்க ஒட்டியாணம் அவளது தேக அமைப்பை ஆயிரம் மடங்கு வனப்பித்துக் காட்டியது. உச்சி முதல் உள்ளங்கால் வரையில் இயற்கையழகும் செயற்கையழகும் ஒன்றுபட்டிழைந்து ஜ்வலிக்க, அவள் அப்படியே மணப்பந்தலில் உட்கார ஆயத்தமாக வந்துள்ள புதிய சோபனப் பெண்ணைப்போல யௌவனமும், புதுமையும், கட்டழகும் நிருத்தனம் செய்ய, நவரத்தினங்களை மலர்களாய் ஏந்திய பூங்கொம்பைப்போல அவளிடம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் பெண் குணம் பொலிந்தனவாயினும், அக்குணங்கள் காண்போர் மனதைச் சின்னாபின்னமாக்கிச் சீர்குலைத்து, அவரது நினைவை அவள்மீது திருப்பினவன்றி அமைதியுண்டாக்க வில்லை. அவள் இயற்கையில் நாணமுடையவளா யிருந்தா ளேனும், அவளது கூரிய கண்கள் கபடமாக அங்கு மிங்கும் கடைக்கணித்து அண்டையில் இருந்தோரைப் பற்றி விவரங்களை விரைவில் கிரகித்தன. ஆதலின், அந்த நாணம் குடும்ப ஸ்திரீகளின் களங்கமற்ற நாணமாகத் தோன்றவில்லை. அவள் தன் வலது கையின் மணிக்கட்டில் ஒருசிறிய கடிகாரத்தைக் கட்டிக்கொண்டிருந்தது அவள் புது நாகரீக மறிந்த பெண்ணென்பதைக் காட்டியது. அன்னிய மனிதருக்கருகி

விருந்தலால் பயிர்ப்பைக் காட்டும் பதிவிரதா ஸ்திரீகளைவிட அதிகமாக அவள் மேனியின் நெளிப்பையும், அமைதி யின்மையையும் காட்டி உடைகளையும் ஆபரணங்களையும் நொடிக்கு நூறுமுறை சீர்திருத்திக் கொண்டாள்.

அவள் அறிந்தோ அறியாமலோ தொடுத்த அத்தனை அம்புகளும் விலக்கவொண்ணாவகையில் பசுமரத் தாணிபோல் சாமாவையரது உள்ளத்திற் பதிந்து ஊடுருவிச் சென்றன. ஆதலின், அவரது பாடு தொல்லையாய் முடிந்தது. முதலில் அவள் தனிமையில் தம்முடன் வரப்போவதாக உணர்ந்தவுடனே அவரது மனதில் ஒருவித இன்பமும், அமரிக்கையின்மையும், லஜ்ஜையும் சுரந்தன. அவளோடு வந்த மனிதன் அவளைத் தமது பாதுகாப்பில் ஒப்புவித்த பிறகோ, அவரது மநோவேதனை மலையாக வளர்ந்து அனர்த்தம் செய்யத் தொடங்கியது. சகிக்கவொண்ணாத ஒருவகை இன்பமும், துன்பமும் ஒருங்கே எழுந்து, அவரது மனதைப் புண்படுத்த ஆரம்பித்தன. அவள் யாவளோ வென்பதை முதலில் அறிய அவரது மனம் பதறியது; அவளது அதிகரித்த நாணத்தைக் கண்டு, அவள் குடும்ப ஸ்திரீயே யென்று நினைத்துக்கொண்டார். மாணிக்கக் கட்டியோ, கற்கண்டுக் கட்டியோவெனத் தோன்றிய அந்தக் கந்தருவ மங்கை வேறு எவனுக்காயினும் தன்னை அர்ப்பணம் செய்து விட்டவளோ வென்பதை யறிய, அவளது கழுத்தில் தாலி இருக்கிறதோ வென்று உற்று நோக்கினார். காசுமாலை, வைர அட்டிகை, கடியாரச் சங்கிலி முதலியவை அவளது அழகிய மார்பில் காணப்பட்டனவன்றி, மாங்கலியம் காணப்படவில்லை.

அவள் திருவாரூருக்குச் செல்பவளென்பதையும், அவளது பெயர் கமலமென்பதையும் சந்தேகமற உணர்ந்தார். அந்த ஊர் அவளது பிறந்தவிடமோ அல்லது புகுந்தவிடமோ என்பதே அவரது சந்தேகமாய் வதைத்தது. கோடீசுவரனது செல்வப்

புதல்வியைப் போலக் காணப்பட்ட அந்த யௌவன மின்னாள் நடு இரவில் தனியாகப் பிரயாணம் செய்யத் துணிந்ததே அவருக்குப் பெருத்த விந்தையாக இருந்தது. பாலியப் பருவத்தினரான சாமாவையர் என்ன செய்வார்? ஏதோ பெருத்த விபத்தில் அகப்பட்டவரைப்போலத் தமது மதியை இழந்து தவிக்கிறார். தீயின்மேல் வெண்ணெயென உருகி உட்கார்ந்து போனார். அவளது ஒவ்வொரு அங்கத்தையும் பார்த்து அதன் அழகிலேயே ஈடுபட்டு, தேனில் வீழ்ந்த ஈயைப்போலத் திகைத்து வாயைப்பிளந்து அசைவற்று உட்கார்ந்து ஏங்கினார். அவள் வெளிப்புரத்தில் விட்டிருந்த தனது முகத்தை எப்போது உட்புறம் வாங்கித் திரும்புவாளோ வென்றும், அதை எப்போது கண்ணாரக் கண்டு மனதார உண்டு களிக்கலாமோ வென்றும் ஆவல் கொண்டு பதறினார். அதுகாறும் பொன்னாசையில் நெடுந்தூரஞ் சென்றிருந்த அவரது மனதை அந்தப் பெண்ணாசையில் மிகுந்த உரத்தோடு தாக்கித் திரும்பியது. அந்த அதிர்ச்சியினால் அவரது மனவுரமும் தரித்திரக் குணமும் சிதறிப்போயின. உள்ளமும் உடம்பும் நெகிழ்வடைந்து, தயாள குணமும் கண்ணிய புத்தியும் உண்டாயின. அவள் திருவாரூரில் இறங்கிப்போவதற்குள் அவளுடன் ஒரு சொல்லாயினும் பேசாவிடில் தமது ஜென்மம் கடைத்தேறாதென வெண்ணினார். தம்மை புலியோ கரடியோ வென்று நினைத்து அஞ்சி, பிடிவாதமாய் தனது முகத்தை வெளியில் வைத்துக் கொண்டிருந்த அந்த மங்கையுடன் தாம் எதைக் குறித்துப் பேசுவது என்பதையும் எப்படிப் பேசுவது என்பதையும் அறியாதவராய் மிகவும் தத்தளித்தார். அவரது மனோவேதனையை ஒரு சிறிதும் அறியாத துஷ்ட ரயில்வண்டி கிடு கிடு குடு குடு கிலு கிலு குலு குலுவென்று தாளம், மத்தளம், கஞ்சிரா முதலிய வாத்தியங்களின் முழக்கங்களைச் செய்து கொண்டு ஓடி திருவாரூருக்கும் அதற்குமுள்ள இடைத் தூரத்தைக் குறைத்துக்கொண்டே யிருந்தது. அவர்களிருந்த ரயில்

வண்டி ஒரு கட்டிலைப்போலவும், நீல நிறத்தைக் கொண்ட களங்கமற்ற ஆகாயப் பரப்பு, அக்கட்டிலின் மேல் விரித்த அஸ்மான கிரிபோலவும் காணப்பட்டன. ஆகாயத்தில் அதிவேகமாக யோடிய சந்திரன் சாமவையரைப்பார்த்து, "ஒய்! ஐயரே! நீ நினைக்கும் திருட்டு நினைவை நான் நன்றாக அறிந்துகொண்டேன். இதோ ஓடிப்போய் இந்த விஷயத்தை உம்முடைய மனைவி மீனாட்சியம்மாளிடம் சொல்லி விடுகிறேன். பாரும்" என்ற கூறி, அவரை மிரட்டுவதைப்போல இருந்தது. ரயில் வண்டியிலிருந்த மற்ற யாவருக்கும் அந்தக் குளிர்மாமதி இனிமையையும்; சுகத்தையும் குளிர்ச்சியையும், அமுதத் துளிகளையும் வாரி வாரி வழங்கினதாயினும், என்ன காரணத்தினாலோ சாமாவையர் ஒருவரிடம் மாத்திரம் வருமம் பாராட்டி, அவர்மீது நெருப்பு மழை பொழிந்து அவரது தேகத்தைச் சுட்டெரித்தது. நிலவு பகலைப் போலவும் பாலைப்போலவும் எங்கும் தவழ்ந்தது. இரு புறங்களிலும் செழித்து வளர்ந்திருந்த நெற்பயிர், ஒவ்வொரு படி நெல்லைக் கொண்ட கதிர்களைச் சுமந்து தென்றற் காற்றிலசைந்து ஒலித்துக் கீழே சாய்ந்தது. "சாமாவையரே! உம்மைப் பார்க்கவும் கண் கூசுகிறதே!" என்று ஓலமிட்டு வெட்கத்தினால் தலையைக் கீழே தாழ்த்திக் கொள்வதுபோ லிருந்தது. இடையிடையே தோன்றிய தென்னஞ்சோலைகளிலும், மாஞ்சோலைகளிலும், குயில் முதலிய பறவைகளும் ஏனைய ஜெந்துகளும் இயக்க மொடுங்கியவையாய் உணர்வற்று துறவிகளைப்போலப் பரம்பொருளி லீடுபட்டு, மெல்ல வீசிய தென்றலால் தாலாட்டப்பட்டு சிற்றாறுகள், நீரோடைகள் முதலியவற்றி லுண்டான சங்கீத வொலியால் மயங்கி அநந்தத் துயிலில் ஆழ்ந்திருந்தன வாயினும் சாமாவையரது வருகையால் திடுக்கிட்டு விழித்து அவரது நடத்தையைக் கண்டு பொறாமல் சிலும்பின. தென்னந் தோப்புகள் இளநீர்க் குலைகளால் அலங்கரிக்கப்பட்ட கலியாணப் பந்தலைப்போலவிருந்தன.

அருகிலிருந்த வாழைத் தோட்டங்களில் இரதங்களின் கீழ் அழகிய தாதியர் சாமரையைத் தாங்கி நிற்றலைப்போல அகன்ற இலைப்பரப்பின் கீழ் வாழை மரங்கள் பழத்தாறுகளையும் பெருத்த பூக்களையும் தாங்கி நின்ற காட்சி, சாமாவையரையும் கமலத்தையும் ஊர்வலமாக அழைத்துச் செல்ல, வரிசைகளுடன் கலியாணப் பந்தலுக் கருகில் நிற்கும் இரதக் கோலத்தைப் போல விருந்தது. பெருத்த தேன் இறால்களைக் கொண்ட கரும்புப் பயிர், ஈட்டி கேடயம் முதலிய படைகள் ஊர்வலத்திற்கு அணி வகுக்கப்பட்டு நிற்றலைப்போல இருந்தது. இடை யிடையே தோன்றிய நந்தவனங்களிலும் பங்களாக்களிலும் இருந்தெழுந்த பூக்களின் நறுமனங்களையும், மகரந்தப் பொடியையும், தண்ணீர்த் திவலைகளையும் தென்றல் சுமந்து, வண்டிக்குள் புகுந்து ஒவ்வொருவருக்கும் ஊர்வலத்தின் பொருட்டு பன்னீர் தெளித்து வாசனை யூட்டித் தாம்பூலம் கொடுப்பது போல இருந்தது. இத்தகைய இனிய பொருட்களின் காட்சியிலும், எண்ணிறந்த இன்பங்களின் பெருக்கிலும் ஆழ்ந்து, ரயில் வண்டியிற் என்ற ஏனைய ஜனங்கள் யாவரும் துயிலாகிய கள்ளையுண்டு, மயங்கி பிரம்மாநந்த நிலை யடைந்து அசைந்தாடி பக்கத்திலிருந்த பலகைகளிலும் ஒருவர் மீதொருவர் மோதிக்கொண்டனர். நமது இரத்த கலப்பு (Blood Relations ) சந்ததியாரான மூட்டை பூச்சிகள் சாமாவையர் வந்த வைபவத்தைக் குறித்துப் பெருத்த விருந்துண்டு கொண்டிருந்தன. ஆனால் நமது கமலாவோ, மூன்று நாட்கள் ஒரே மூச்சாகத் துயின்று அப்போதே விழித்தவள் போல சிறிதும் கலக்கமும் அயர்வு மின்றித் தனது கண்களை நன்றாக விழித்துக்கொண்டு தன் மனதை ஏதோ ஒரு நினைவில் செலுத்தியிருந்தாள். அன்றிரவில் தனக்குக் கிடைக்கப்போகும் பெரும் பாக்கியத்தைப்பற்றி அவள் கனவில் நினையாதவளா யும், தனது மன்மதபாணங்கள் சாமாவையரது மனதில் எவ்வித மான அநர்த்தங்களை விளைவித்தன வென்பதை உள்ளவாறு

உணராதவளாயும் உட்கார்ந்திருந்தாள். சாமாவையர் மாத்திரம் விவரிக்கவொண்ணாத ஏதோ ஒருவித சங்கடமடைந்தவராய் அவ்வளவு இரமணீயமான காட்சியினிடையில் பெருத்த வேதனை யடைந்தவரா யிருந்தனர்.

அந்த நிலைமையில் வண்டி அடுத்த ஊரை அடைந்து நின்றது. அப்போது மணி பதினொன்றாதலால், ஒருவரும் வண்டியில் ஏறவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர் போர்ட்டர் முதலியோர் கண்களை மூடித் துயின்றுகொண்டே தமது வேலைகளைச் செய்தனர். ஆனால், அவ்வூரில் முதல்தரமான நல்ல பெங்களூர் கமலாப்பழம் விற்றது. வண்டியிலிருந்து கமலாக்கனிக் கருகில் செல்லவேண்டுமென்னும் நினைவைக் கொண்ட சாமாவையர் வெளியில் விற்கப்பட்ட கமலாப் பழத்தை வாங்க வெண்ணினார். "அடே கமலா! இங்கே கொண்டுவா" என்று சொல்லிக்கொண்டே எழுந்து வாசற் கதவண்டை ஓடிவந்தார். அந்தப் பெண் உடனே தனது கால்களை மேலே வாங்கிக் கொண்டு அவருக்கு நெடுந்தூரத்திற்கு அப்பால் மரியாதையாக விலகிக்கொண்டு சாய்மானப் பலகையோடு ஒட்டிக் கொண்டாள் என்றாலும் அவள் மீது கமழ்ந்த மல்லிகை, ரோஜா, முதலிய அரிய மலர்களின் நறுமணமும், ஜவ்வாது கூந்தல் தைலம் முதலியவற்றின் பரிமள கந்தமும் ஒன்று கூடி அவரது நாசியில் புகுந்து, அவரைப் பரவசப்படுத்தி இன்பக்கடலி லாழ்த்தின. தாம் அவ்வளவு நெருக்கமாக அவளிடம் நின்றதைப்பற்றி அவர் ஒருவகை லஜ்ஜை அடைந்தார். அவளுடைய புதிய பட்டுப்புடவை சரசரவென்று ஓசை செய்ததும், கையில் அணியப்பட்டிருந்த பம்பாய் வளையல்கள் கலகலவென்று ஒலித்ததும் சங்கீத ஓசையைப்போல அவர் மனதில் பாய்ந்து இன்பமும் துன்பமும் உண்டாக்கின. அவள் மீதிருந்த குற்றமற்ற ஒவ்வொரு சிறிய பொருள்கூட, அவளுடன் சேர்ந்து கொண்டு அவர் கமலாப்பழக்காரனை அமர்த்தலாக அழைத்து,-"அடே

என்னடா விலை?" என்றார். அவன், "சாமீ! இது குடகு கிச்சலிப்பழம் ஒரு அணா" என்றான். சாமாவையர், "அடே! எனக்கு ஒரு டஜன் பழம் வேண்டும். என்ன விலை சொல்லுகிறாய்?" என்று ஆடம்பரமாகக் கேட்டார். அவன் அதுவரையில் டஜன் கணக்கில் விற்றவனல்லன். அவன் தூக்கத்திலும் இருந்தமையால் கணக்கு சரியாக விளங்க வில்லை. "எடுத்துக்கொள் சாமி! சகாயமாய்த் தருகிறேன். ஒரு ரூபாய்க்குக் குறையாது; ரயில் புறப்பட்டுவிடும். சீக்கிரம் ஆகட்டும்" என்றான். சாமாவையருடைய நினைவு முற்றிலும் பக்கத்தில் சுவர்ண விக்கிரகம்போல இன்பமே வடிவாய் உட்கார்ந்திருந்த உயிர்க்கமலாக் கனியின் மீது சென்றிருந்த மையால், அவர் மனது கணக்கில் செல்லவில்லை. சில்லரை கேட்டுக்கொண்டு, அவனிடம் அதிகமாக பேச்சை வளர்த்திக் கொண்டிருக்கவும் அவருக்குப் பொறுக்கவில்லை. அவன் முழு ரூபாயாகக் கேட்டதைப் பற்றி மகிழ்வடைந்தவராய் உடனே பன்னிரண்டு பழங்களை வாங்கி, அந்தப் பெண்ணிருந்த இடத்திற்கு எதிர்ப்புற பலகையில் அழகாய்ப் பரப்பினார். தாம் பணக்காரர் என்பதைக் காட்டிக்கொள்ள நினைத்தவராய், அவர் பலகையில் உட்கார்ந்துகொண்டு ரயில்பையைத் தமக்கருகில் இழுத்து அதைத் திறந்து உள்ளே இருந்த பளுவான மூட்டையைத் தூக்காமாட்டால் தூக்கி, "அப்பாடா எவ்வளவு கனம்!" என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே பக்கத்தில் வைத்து அதை அவிழ்த்து, அதிலிருந்து ஒரு ரூபாயையெடுத்து கதவண்டை சென்று பழக்காரனிடம் கொடுத்தார். அதற்குள் அந்த அழகிய மங்கை தனது கடைக்கண் பார்வையை அவரது பணமூட்டையில் செலுத்தினாள். அங்கு ஏராளமான பவுன் குவியலும், நோட்டுகளும், ரூபாய்களும் இருக்கக் கண்ட பெண்மணி பெருந்திகைப்பும் வியப்பும் அடைந்து, அந்தமனிதர் யாரோ லட்சப்பிரபு வென்று தீர்மானித்துக் கொண்டாள். அவர் பழக்காரனிடம் ஏமாறிப்போனதை அவள்

அறிந்தவளாயினும், அதை அவரிடம் தெரிவிக்க அஞ்சி மௌனம் சாதித்தாள். பணமூட்டையைத் தான் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடா தென்று நினைத்து அவள் தனது முகத்தை வேறுபுறத்தில் திருப்பிக்கொண்டாள். அப்போது தனது ஆசனத்தில் ஒழுங்காக அமர்ந்து கால்களை முன்போலக் கீழே தொங்கவிட்டிருந்தாள். பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய சாமாவையருடைய வஸ்திரமும் அந்த பெண்பாவை யின் பட்டுத் துயிலும் உராய்ந்து யோக க்ஷேமம் விசாரித்துக் கொண்டன. அதைக் கண்ட சாமாவையரது தேகம் பரவச மடைந்தது; மெல்ல ஆடியசைந்து அழகுநடை நடந்துவந்து தமது பணமூட்டைக் கருகில் உட்கார்ந்து அதை அதிகமாகப் பரப்பிக்காட்டிய பிறகு அதைக் கட்டிப் பைக்குள் வைத்த பின்னர் உல்லாசமாகச் சாய்ந்துகொண்டார். ஒரு பழத்தை எடுத்துத் தோலை உரிக்கத் தொடங்கியவராய் அந்தப் பெண்மணியுடன் எப்படிப் பேசுவதென்பதைப் பற்றிச் சிந்தனை புரிந்தார். துணிந்து தாமே அவளுடன் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை யென்று உறுதி செய்துகொண்டார்.

"ஏனம்மா! திருவாரூருக்கு வண்டி எவ்வளவு மணிக்குப் போகிறது?" என்று மிகுந்த அன்பையும் பட்சத்தையும் புகுத்திக் கேட்டுவிட்டு அவள் முகத்திலுண்டாகும் மாறுதல்களை நன்றாகக் கவனித்தார். அந்தத் தாக்கலை எதிர்பார்க்காத மங்கை சிறிது திகைப்பும் நாணமுமடைந்து தனது முகத்தை அப்புறம் திருப்பினாள். ஆனால், அவர் அவளோடு பேசியதைப்பற்றி அவள் ஆயாசமடைந்ததாகத் தோன்றவில்லை; ஒருவகை இன்பமுற்றதாகவே தோன்றியது. அப்புறம் திரும்பிய வண்ணம், தனது அழகிய வாயைத் திறந்து கிளி கொஞ்சுதலைப்போல மொழிந்து, "ஒரு மணிக்குப் போகிறது" என்றாள். அது வீணையின் ஒலியைப்போல விருந்ததன்றி மென்மேலும் பேசும்படி சாமாவையரைத் தூண்டியதாக

இருந்தது. தம்முடன் உரையாட அவளுக்கு விருப்ப முண்டென யூகித்துக் கொண்ட சாமாவையர் அதிகரித்த உற்சாகமும், ஆவேசமும், அவளுடன் நெருங்கிப்பழக வேண்டுமென்னும் ஆவலும் கொண்டார். தமது ஆசனத்தை விட்டு அவள் பக்கமாக அரைச்சாண் நகர்ந்து உட்கார்ந்த வண்ணம், "திருவாரூர் ஸ்டேஷனுக்கும் உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரமிருக்கும்? நடுராத்திரியில் நீ தனியாக ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்குப் போகவேண்டுமோ? வழியில் திருடரின் பயமுண்டோ?" என்று அவளுடைய விஷயத்தில் அந்தரங்க மான அபிமானத்தைக் கொண்டவராய்க் கேட்டார்.

அவ்வணங்கு முன்னிலும் அதிகரித்த குலுக்குத் தளுக்கு நாணம் முதலியவற்றைக் காட்டி, "எங்கள் வீடு கமலாலயம் தெற்குவீதியிலிருக்கிறது. குதிரை வண்டிகள் ஏராளமாய்ப் போகும்; பயமில்லை" என்று முன்னிலும் அதிகரித்த இனிமை, வசீகரம், மகிழ்வு முதலியவற்றைக் காட்டி மறுமொழி கூறினாள். அவளது சொல்லழகும், அபிநயத்தினழகும் அவர் மனதைக் கொள்ளைகொண்டன. மிகவும் மதிமயக்கமும், மோகவெறியுங் கொண்டார். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணித் தவித்தார். அவரது மனது பல இனிமையான கனவுகளைக் கண்டு இன்பக்கோட்டை கட்டிக் கொண்டி ருந்தது. யாவரும் தூங்கிய அந்த இராக்காலத்தில் கமலாப்பழம் விற்கப்பட்டதும், அதை தாம் வாங்கியதும் தெய்வத்தின் செயலாகத் தமக்கு ஏற்பட்டன வென்றும், அந்த உயிர்க் கமலாக் கனியைத் தாம் பெறுவதற்கு, அது சகுனமென்றும் நினைத்து அளவளாவியிருந்தார். அப்போது பலகையிலிருந்த ஒரு மூட்டைப்பூச்சி, மாம்பழத்தைப்போல விருந்த அவரது தேகத்தில் வாயை வைத்து ஒரு வாய் இரசம் உறிஞ்சியது. அது, "ஐயரே! சின்னக் கமலாவை வாங்கியதில் ஏமாறிப்போய் நான்கணா இழந்தீர். பெரிய கமலாவினால் எவ்வளவு ஏமாறுவீரோ! ஜாக்கிரதை; இது நல்ல சகுனமல்ல,

அபசகுனம்" என்று அவரை எச்சரிப்பதைப்போல விருந்தது. சாமாவையர் புன்னகை செய்தவராய் எழுந்து கீழே பார்த்து, "அப்பாடா! எவ்வளவு சுகமாக மூட்டைப் பூச்சி கடிக்கிறது? இந்த எஸ்.ஐ.ஆர். வண்டியே எப்போதும் மூட்டை பூச்சிக்கு பேர்போனது" என்று சொல்லிவிட்டு இன்னும் ஒரு முழம் அவள் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டார். அவள் அப்புறம் திரும்பிய முகத்தோடு, "ஆம், ஜனங்கள் தூங்கிவிட்டதால் இறங்க வேண்டிய இடம் தெரியாதல்லவா? அதற்காக கம்பெனியார் இவைகளை நியமித்திருக்கிறார்கள். இவைகளுக்கு நாம் சாப்பாடு போடவேண்டாமா?" என்று தனது நகைப்பை யடக்கிக் கொண்டே கூறினாள். அதைக்கேட்ட சாமாவையர் பெரிதும் மகிழ்வடைந்து விழுந்து விழுந்து சிரித்தார். இரண்டு நிமிஷம் மௌனமாக இருந்தார்; பிறகு "ஏனம்மா! இப்படி ராத்திரி காலத்தில் நீ துணைக்காக இன்னும் வேறு மனிதரை அழைத்துக்கொண்டு வரக்கூடாதா! இப்படித் தனிமையில் வரலாமா?" என்று உண்மையான உருக்கத்தோடு கேட்டார். உடனே அம்மடந்தை, "திடீரென்று புறப்பட்டு திருவாரூர் போகவேண்டியிருந்தது. சரியான துணை கிடைக்கவில்லை. அதனாலேதான், நான் வேறு வண்டிகளில் ஏற மன மில்லாமல் இங்கு வந்தேன்; தக்க மனிதரிருக்கும் இடமாகப் பார்த்து ஏறிவிட்டால் பயமில்லை யென்று தனிமையில் வந்தேன்" என்றாள்.

தகாத மனிதராகிய தம்மை, அவள் தக்க மனிதரென்று மதித்திருப்பதாக வெளியிட்டதை யுணர்ந்த ஐயர் பூரித்துப் புளகாங்கிதம் எய்தினார். குனிந்து தமது மார்பையும் உடைகளையும் பார்த்துக் கொண்டார். முதலில், அவளுடன் பேச்சுக்கொடுப்பதே கடினமாய்த் தோன்றியது. ஐந்து நிமிஷத்தில் அவளுடன் மிகவும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுப்போனதை நினைத்து உற்சாகமடைந்து, தாம் பிரிவதற்குள் அந்த நட்பு பழுத்துப் பலனைத் தருமென்று

உறுதியாக நினைத்து உவகை கொண்டார். மேலும் உரையாடத் தொடங்கி, "இப்போது உன்னைக் கொணர்ந்து ஏற்றிவிட்டவர் யார்?" என்ற வண்ணம் அவள் பக்கம் நகர்ந்தார். "அவர் என்னுடைய மாமன்" என்றாள் பெண்ணரசி.

ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் வால்வைப்பது போல ஐயரவர்கள் நகர்ந்து கொண்டே தனக்கருகில் வந்ததை, அந்த இன்பவல்லி உணர்ந்தா ளாயினும், அதைக் கவனியா தவளைப் போலிருந்தாள்.

ஆனால், சாமாவையர், அவளுக்குத் தெரியாமல் தாம் சாமர்த்தியமாக நகர்ந்து வருவதாக நினைத்து தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டவராய், "ஏனம்மா! திருவாரூர் உன்னுடைய சொந்த ஊரா?" என்றார்.

"ஆம்;அதுதான் என்னுடைய தாய்வீடு" என்று இனிமை யாக விடையளித்தாள் மடமங்கை. சில நிமிஷங்களுக்கு முன்பே சாமாவையர் கமலாப்பழத்தோலை உரித்துவிட்டார். அதை அவளுக்கு முதலில் நிவேதனம் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம். அதன் பொருட்டு அவளிடம் நெருங்கிப் பல கேள்விகளைக் கேட்டு, வழிசெய்து கொண்டார். பிறகு, "ஆகா! வண்டியிலிருப்பது எவ்வளவு வெப்பமா யிருக்கிறது! தாகம் அதிகமாக உண்டாகிறது. உனக்கு எப்படி இருக்கிறது? வியர்க்கவில்லையா?" என்றார்.

"ஆம், ஆம், நிரம்பவும் புழுக்கமாகத்தானிருக்கிறது. வெயில் காலமல்லவா?" என்றாள் மங்கை.

அவள் தமது மனதிற்கு உகந்தவிதம் விநயமாய்ப் பேசுவதைக் கண்ட சாமாவையர், மிகுந்த மகிழ்வையும், துணிவையும் அடைந்தார். அவளுடன் நெடுங்காலம் பழகிய நண்பரைப்போல தயக்கமின்றி தமது கரத்தை அவளுக்கருகில் நீட்டி, "இந்தா! இந்தப் பழத்தைச் சாப்பிடு; தாகத்திற்கு

நல்லது" என்று தோல் உரிக்கப்பட்ட ஒரு பழத்தைக் கொடுக்க, அவள் மிகவும் நாணமும், லஜ்ஜையும் அடைந்தவள் போலக் காட்டித் தனது உடம்பை நெளித்துக் கொண்டவளாய்த் தயங்கி, "இல்லை; வேண்டாம், வேண்டாம்" என்று அரைமனதோடு கூறினாள். ஆனால், அவள் தனக்கு உறுதியாக வேண்டாமென்று சொல்வதாகத் தோன்றவில்லை. பழத்திற் கருகிலிருந்த தனது கையையும் அவள் அப்புறம் இழுத்துக்கொள்ளவில்லை. சாமாவையர், "பாதகமில்லை யம்மா! வாங்கிக்கொள். எல்லோருக்கும் கொடுக்கலாமென்று தானே இத்தனை பழங்கள் வாங்கினேன்" என்று அன்போடு வற்புறுத்திய வண்ணம் பழத்தை அவளுடைய கையில் வைத்தார். "எனக்கு அவ்வளவு தாகமில்லை. நீங்கள் சாப்பிடுங்கள்" என்று லஜ்ஜையோடு மொழிந்தவளாய் பழத்தை தன் கையால் பிடித்துக் கொண்டாள். அப்போது அவள் மிகுந்த இன்பமுந் துன்பமு மடைந்தாளென்பது அவளது அழகிய முகத்தில் நன்றாகத் தெரிந்தது. அதைக் கண்ட சாமாவையருடைய மனது எண்ணாததை யெல்லாம் எண்ணியது. தேகம் ஆவேசத்தால் துடி துடித்தது. எவ்வித இடையூறுமின்றி தமது எண்ணம் நிறைவேறிக்கொண்டே வருவதையும், அந்தப் பெண்ணுடைய நட்பு முற்றிக் கொண்டே வருவதையும் கண்ட சாமாவையர், தாம் சுவர்க்கலோகத்திலிருப்பதாக நினைத்துக் கொண்டார். அவளுக்கெதிரில் கதவண்டையிலேயே உட்கார்ந்து கொண்டார். பெண்மணி முதலிற் காட்டிய நாணமும் குறைந்து போனமையால், அவளும் காலைக் கீழே விடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். எதிரில் உட்கார்ந்திருந்த சாமாவையர் இன்னம் ஏழெட்டு பழங்களை வாரி, அவளுக்கருகில் பலகையில் போட்டுவிட்டு நயமாக "சாப்பிடம்மா! வெட்கப்படாதே!" என்று கூறியவாறு தாமும் ஒரு பழத்தை எடுத்துத் தோலை உரித்துவிட்டு சுளைகளை வாயிற் போட்டுக் கொண்டு அவளை மேன் மேலும் ஊக்கினார். அவள் தனது முகத்தை வண்டிக்கு

வெளியில் விடுத்து, சுளைகளைக் தின்ன ஆரம்பபித்தாள். ஆனால், வாயில் போட்டுக் கொண்டதும், மென்றதும், விழுங்கியதும் வெளியில் தெரியாமல் அவ்வளவு மறைவாகக் காரியத்தை நடத்தினாள். இரண்டொரு நிமிஷத்தில் பழம் தீர்ந்துபோன தாகையால், உட்புறம் சிரத்தை வாங்கிக் கொண்டாள். அதற்குள் சாமாவையர் மூன்று பழங்களை ஒழித்துவிட்டார். உட்புறம் திரும்பிய பெண்ணைப் பார்த்து, "பழம் ருசியாக விருக்கிறது. இன்னொன்று சாப்பிடு" என்று தனது கையிலிருந்த பழத்தை நீட்ட, அவள், "வேண்டாம் வேண்டாம்; அப்புறம் ஆகட்டும்; இன்னம் நாம் நெடுந்தூரம் போக வேண்டும்" என்று உறுதியாகக் கூறி மறுக்க, அவள் திரும்பவும் எடுத்துக் கொள்வதாக வாக்களித்ததை உத்தேசித்து, சாமாவையர், மேலும், அவளை வற்புறுத்தாமல் தமது கையை இழுத்துக்கொண்டார். பழத்தைப் பற்றிய உபசரணை அவ்வளவோடு நின்றது.

பிறகு ஐயர் திடீரென்று எதைக் குறித்தோ நினைத்துக் கொண்டவரைப்போல, தமது பையைத் திறந்து தடபுடலாக அதன் உட்புறமெல்லாம் சோதனைசெய்தார். அங்கு பார்த்தார்; இங்கு பார்த்தார். அவர் எதைத் தேடுகிறாரென்பதை அறிந்து கொள்ளும் எண்ணத்துடன் பெண்மணியும் அவர் செய்ததைக் கடைக்கண்ணால் உற்று நோக்கியவாறிருந்தாள். அடுத்த நிமிஷம் அவர், "பைத்தியக்காரன்; முக்கியமான சாமானை வைக்க மறந்துவிட்டான். வேலைக்காரப் பயல்களெல்லாம் முட்டாள்கள்; வெற்றிலைப் பெட்டியை வைக்க மறந்து போக வேண்டாமென்று ஆயிரந்தரம் சொன்னேன். அதை வைக்க மறந்தே போய்விட்டான்" என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டு அதிருப்தியாகப் பையைப் பூட்டினார். அதைக் கேட்ட மடந்தை தனக்கருகிலிருந்த அழகிய வெற்றிலைப் பெட்டியை எடுத்து அவரிருந்த பலகையில் மெல்ல வைத்து, "இதில் நிறைய வெற்றிலை இருக்கிறது. போட்டுக்

நேரத்தில் ஐந்து வருஷம் பழகினவரைப்போலாயினர். அந்த நிலைமையில் வண்டி அடுத்த ஊரில் வந்து நின்றது. எப்போது புறப்படுமென்னும் ஆவலினால் சாமாவையரது மனம் துடித்தது. மங்கையும் ஒருவகையான அமரிக்கையின்மையைக் காட்டி, "இந்த முள்ளிக்காய் ஸ்டேஷனில் வண்டி இவ்வளவு நேரம் நிற்கிறதே!" என்று கூறி நெடுமூச் செறிந்தாள். தமது மனநிலைமையைப் போலவே அந்த மோகனாங்கியின் நிலைமையும் இருத்தலைக்கண்ட ஐயர் இன்பக்கனவு கண்டு மனக்கோட்டை கட்டினார். "இந்த எஸ்.ஐ.ஆர் வண்டியே இப்படித்தான்; சுத்தப் பிணம். இதற்கு ஏற்படும் ஸ்டேஷன் மாஸ்டர்களும் தூங்கு மூஞ்சிகள். ஓட்டுகிறவர்களோ அன்றாடங்காய்ச்சிகள்" என்று சரமாரியாகத் திட்ட ஆரம்பித்தார்.

அவரது மனம் குளிரும்படி வண்டி உடனே நகர்ந்தது. "அப்பாடா! அது புறப்பட்டதையா!" என்று குதூகலத்தைக் காட்டினார் ஐயர்.

சென்ற சில நிமிஷங்களாக ஐயரின் பாதங்கள் அவளது பாதங்களை நோக்கி நகர்ந்து மெல்லப் பிரயாணம் செய்து கொண்டே யிருந்தன. அந்த நிலைமையில் அவர் அவளிடம் சம்பாஷணையை வளர்த்துக் கொண்டிருந்தவர் வண்டி புறப்பட்ட பின்னர், "ஏனம்மா! நீ இப்போது எந்த ஊரிலிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். "நான் கொறநாட்டிலிருந்து வருகிறேன்" என்றாள் தையல். "கொறநாடு தான் உன்னுடைய புருஷன் வீடோ?" என்று ஐயர் நயமாகக் கேட்க, அம்மாள் சிறிது நாணித் தயங்கி, "இல்லை அது மாமன் வீடு; எனக்கு இன்னம் கலியாண மாகவில்லை" என்றாள். அந்த நல்ல செய்தியைக் கேட்ட ஐயருக்குப் பேருவகையால் அங்கம் பூரித்தது; அவரது பாதங்கள் இன்னம் சிறிது தூரம் முன்னுக்குச் சென்றன. "உன்னுடைய பெயரென்ன அம்மா? ஆம் ஆம்; நான் மறந்துவிட்டேன். கமலமென்று உன்னுடைய மாமன்

சொன்னதை மறந்துவிட்டேன்'' என்றார். அதுவே குதபகாலம். ஏனெனில் அவரது வலது பாதத்தின் விரல்கள் அந்த வடிவழகியின் மிருதுவான விரல்களை முத்தமிட்டு அவைகளோடு உறவாடின. ஆகா! இமைப்பொழுதில் மின்சார சக்தி பரவுதலைப் போல அவரது பாதத்தின் வழியாக ஆநந்த வெள்ளம் பரவி அவரது சிகையை உலுக்கியது. மயிர் பொடித்தது. தேகம் பரவச மடைந்தது. தாம் ஜென்ம மெடுத்த நாள் முதல் அதுவரையில் தாம் அத்தகைய இணையற்ற சுகத்தை அடைந்ததே இல்லையென்று ஐயர் நினைத்து அளவளாவினார். தமது கால் தீண்டியது குறித்து அந்தப் பூங்கோதையின் முகத்தில் கோபக்குறி உண்டானதோ வென்பதை அறிய வெண்ணி அவளது வதனத்தை அவர் உற்று நோக்கினார். அது காறும் ஜ்வலித்துவந்த மகிழ்ச்சியே அப்போதும் மாறுபடாமல் தாண்டவ மாடியது. முகம் முன்னிலும் அதிகமாக நெகிழ்ந்து உருக்கத்தைக் காண்பித்தது. அதைக் கண்ட ஐயரது மனதில் பெரிதும் துணிவுண்டாயிற்று. என்றாலும், விவரிக்க இயலாத அச்சம் ஒரு புறம் அவரைப் பின்புறம் இழுத்துக்கொண்டே இருந்தது. தேகமோ கட்டினில் நில்லாமல் தடுமாறியது. அதற்குமேல் என்னவிதமாக மொழிவதென்பதை யறியாமல் அவர் தயங்கினார். அவளது விஷயத்தில் தாம் கொண்டுள்ள எண்ணத்தை இனி வெளிப்படையாகக் கூறுவதைத் தவிர, சொல்வதற்கு வேறொன்றும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. அவள் குடும்ப ஸ்திரீயா அல்லது தாசியா என்னும் சந்தேகம் எழுந்து அவரை உலப்ப வாரம்பித்தது. ஆனால், அதை அவளிடம் கேட்கவும் அஞ்சினார். அவள் தாசியாயிருந்தால், இன்னமும் தாராளமாகவும், சிறிதும் நாணமின்றியும் இருப்பதன்றி தான் தாசி என்பதை நன்றாகக் காட்டிகொள்வாள். கலியாண மாகாத குடும்ப ஸ்திரீயா யிருந்தால், அவள் தனிமையில் வந்திருக்க மாட்டாள். அன்னியப் புருஷனோடு இரவில் அவ்வாறு பழகியுமிருக்க

மாட்டாள். ஆகையால், அவர் எவ்வித முடிவிற்கும் வர மாட்டாமல் தவிர்த்தார். ஒருகால் அவள் குடும்ப ஸ்திரீயில் வேசையோ என்று சந்தேகித்தார். திரும்பவும் கேள்வி கேட்கத் தொடங்கினார். "ஏனம்மா! இந்த வண்டி திருவாரூர் போனவுடன் அங்கிருந்து நாகைப்பட்டணத்துக்கு வேறே வண்டி புறப்படுகிறதா?" என்றார்.

அந்தப் பெண், "இல்லை. இந்த வண்டி ஒரு மணிக்குத் திருவாரூர் போகிறது. அங்கிருந்து விடியற்காலம் ஐந்து மணிக்குத்தான் நாகைப்பட்டணத்திற்கு வேறே வண்டி புறப்படுகிறது" என்றாள்.

அதைக் கேட்ட ஐயர் பெரிதும் துன்பமடைந்த வரைப்போல நடித்து, "அப்படியானால் நான் விடியற்காலம் ஐந்து மணி வரையில் கண் விழித்துக் கொண்டு ரயிலடியிலே தான் உட்கார்ந்திருக்க வேண்டும். அடாடா! பெருந் துன்பமா யிருக்கிறதே! இந்தச் சங்கதி முன்னமே தெரிந்திருந்தால் பகல் வண்டியி லாகிலும் வந்திருக்கலாமே; கையில் பணமூட்டை யிருக்கிறது. ஸ்டேஷனில் திருடர் பயமிருந்தாலும் இருக்கும்" என்றார்.

அவர் அவ்வாறு பேசியபோது அவரது கால் விரல்களும் சுறுசுறுப்பாக ஊமை ஜாடைகள் காட்டி அவளது விரல்களுடன் தந்தி பேசின. பெண் தனது காலை இழுக்காமல் அப்படியே வைத்துக்கொண்டு, "ஆம் ரயிலடியில் திருடர் பயமும் அதிகம்; மூட்டை பூச்சிக் கடியும் அதிகம். படுக்கவும் சுகமான இடமில்லை. தங்களுக்கு விருப்பமானால், எங்கள் வீட்டுக்கு வரலாம்; ஐந்து மணி வரையில் வசதியாகவும், பத்திரமாகவும் படுத்துவிட்டு ரயிலுக்கு வரலாம்; என்னுடைய தாயார் சரியான காலத்தில் தங்களை எழுப்பி விடுவாள்" என்றாள். எத்தனை யுகம் தவம் செய்தாலும் காணக்கிடைக்காத உன்னதமான அழகையுடைய அந்த மங்கை தம்மோடு அவ்வளவு பட்சமாக

பேசியதையும், தனது வீட்டிற்கு வரும்படி அழைத்ததையும் காண, அவர் தம்மைப்போன்ற பாக்கியவான் இவ்வுலகில் வேறு எவனும் இருக்க மாட்டானென்று நினைத்து, நேரில் பரமபதம் அடைந்தவரைப்போலானார். அந்த மின்னாள் தமது அழகைக் கண்டு தம்மீது மோகங்கொண்டிருக்கிறாள் என்றும் நினைத்து விட்டார்; உடனே அவளது கையைப் பிடித்துக் கொள்ளலாமா வென்றும், அப்படியே பாய்ந்து கட்டிப்பிடித்து அவளை ஆலிங்கனஞ் செய்து கொள்ளலாமோ வென்றும் நினைத்துத் துடித்தார். ஒருகால் அவள் கூச்சலிடுவாளோ வென்றும் அஞ்சினார். அவள் தம்மை வீட்டிற்கு வரும்படி அழைத்தது சாதாரணமான பரோபகாரச் சிந்தையினால் இருக்குமோ வென்று நினைத்தார். ஆனால், தமது கால் அவள் காலில் படுவதை யறிந்தும் அவள் அதை இழுத்துக்கொள்ளாம லிருந்ததே அவருக்கு ஒரு விதமான துணிவை உண்டாக்கியது. உடனே ஐயர் புன்சிரிப்போடு, "யார் இப்படி உதவி செய்யப் போகிறார்கள்! நீ சொன்னபடியே உன்னுடைய வீட்டுக்கே வருகிறேன். உங்கள் வீட்டில் வேறு யார் இருக்கிறார்கள்?" என்றார்.

கமலம் புன்னகை தவழ்ந்த முகத்தோடு, "என் தாயார் மாத்திரம் இருக்கிறாள். வேறு ஒருவருமில்லை. நீங்கள் சுகமாக இருந்து வரலாம்" என்று கூறி நெடுமூச் செறிந்தாள்; அவளுடைய மார்பு விம்மித் தணிந்தது.

அப்போது ஏராளமான மூட்டைப் பூச்சிகள் கடித்து வருத்தின வாகையால், அவர் எழுந்து நின்று கீழே குனிந்து பலகையைப் பார்த்தார். அப்போது அவளது பட்டுச்சேலை அவர்மீது வருடியது அவருக்குப் பிரம்மாநந்த மாயிருந்தது. பிறகு அவர் உட்கார்ந்து கொண்டு, "இந்த மூட்டைப் பூச்சிகள் என்னை மாத்திரம் கடிக்கின்றனவே" என்று உற்சாகத்தோடு பரிகாசமாகக் கூறினார். அவள் அதற்குப் பின் வாங்கியவளன்று;

"பெரிய மனிதர் இருக்கு மிடத்தை நாடி நான் இந்த வண்டியில் ஏறியதைப் போல் மூட்டைப் பூச்சிகளும் பெரிய மனிதர்களையே நாடுகின்றன; அது நியாயந்தானே.அங்கே அவ்வளவு உபத்திரவமாயிருந்தால் இந்தப் பலகையில் உட்கார்ந்து கொள்ளலாமே" என்றாள். அதைக் கேட்ட ஐயர் அவளுக் கருகில் உட்காருவதை விட எதிரில் உட்கார்ந் திருப்பதே அநுகூலமானதென்று நினைத்துக் கொண்டு, "இல்லை இல்லை. நான் அந்தப் பக்கம் வந்தால் என்னை நாடிவரும் மூட்டை பூச்சிகள் உன்மேலும் திரும்பும்; துன்பமெல்லாம் எனக்கு இருக்கட்டும்" என்று சூரத் தனமாகப் பேசிக் கொண்டே முன்போல அவளுக்கெதிரில் உட்கார்ந்தார். அப்போது அடுத்த ஸ்டேஷன் நெருங்கியது. ஆனால், அதன் கைகாட்டி மரம் இறக்கப் படாமையால் வண்டி ஒரு சோலைக்குள் நின்று விட்டது. இஞ்சின் ஊதிக் கூச்சல் செய்து தூங்கிக் கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டரையும், போர்ட்டரையும் தட்டி எழுப்பியது. "வண்டி ஏன் நின்று விட்டது?" என்று கேட்டுக்கொண்டே கமலம் எழுந்து நின்று குனிந்து தலையைக் கதவிற்கு வெளியில் நீட்டி ஸ்டேஷன் பக்கமாகப் பார்த்தாள். சாமாவையர் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபடியே தமது தலையை ஜன்னல் வெளியில் நீட்டி அவரும் ஸ்டேஷன் பக்கம் பார்த்தார். கமலத்தின் தலைப் பின்னலுருக்கருகில் ஐயரது நாசியிருந்தது. அங்கிருந்துண்டான பரிமளகந்தம் ஆநந்தத்தை உண்டாக்கியது. அவரது முழங்கால்களில் அவளது கால்கள் பட்டன. அந்த இரு வகையான இன்பத்திலும் ஈடுபட்டு அவர் மெய்மறந்திருந்த தருணத்தில், கைகாட்டி மரம் இறக்கப்பட்டது. வண்டி ஊதியது. "சரி; வண்டி புறப்படப் போகிறது" என்று சொல்லிக்கொண்டு கமலம் தனது சிரத்தை உட் புறத்தில் வாங்கிக் கொண்டாள். அப்போது வண்டி சடக்கென்று புறப்பட்டது; திரும்பி தன்னிடத்தில் உட்கார முயன்ற கமலம் அந்த விசையினால்

தள்ளிவிடப்பட்டு சாமாவையரது மார்பின் மீது படேரென்று விழுந்தாள். அதனால், அவருடைய விரல்கள் பலகையில் நசுங்கின. அதனால் வலி உண்டாயிற்று; அவளது இனிய மேனி தம்மீது பதிந்த இன்பத்தில் அவர் அதைக் கவனிக்க வில்லை. அவள் கீழே விழுந்து விடாமல் பிடித்துக் கொள்பவரைப் போல பட்சமாக அப்படியே அவளை இருகைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்ட வண்ணம், "அடாடா! மூடப் பயல்கள் இப்படித்தானா வண்டியை விசையாக சொடுக்கி இழுக்கிறது!" என்று சொல்லி அதிக உருக்கமான குரலில், "ஏன் கமலா! எங்கேயாவது அடிபட்டதா?" என்று அன்போடு கேட்க, அவள் நாணம் அடைந்தவளைப்போலப் பாசாங்கு செய்து அவரது அணைப்பிலிருந்து விடுபட முயன்றாள். அவர் அவளை விடாமல், "கையில் காயம்பட்டதா? நெற்றியில் அடிபட்டதா?" என்று கூறி, அவளது கை நெற்றி முதலிய இடங்களைத் தமது வலது கையால் தடவிக் கொடுத்தவண்ணம் இடதுகையால் அவளை இறுகப் பிடித்தார். அவள் முன்னிலும் அதிகமாகத் தத்தளித்து, "விடுங்கள்; விடுங்கள்! ஸ்டேஷன் வந்துவிட்டது, யாராகிலும் பார்க்கப்போகிறார்கள். அப்புறம் ஆகட்டும், இப்போது விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சினாள். அதற்குள் வண்டி ஸ்டேஷனை அடைந்தது. சாமாவையர் மிகவும் துணிந்து அவளுடைய கன்னத்தில் ஒரு முத்தமிட்டு அவளை அவளது இடத்தில் உட்கார வைத்தார். அப்போது "பூந்தோட்டம்! பூந்தோட்டம்" என்று போர்ட்டர் அந்த ஊரின் பெயரைச் சொல்லி, தூக்கத்தில் அழுதுகொண்டே வந்ததைக் கண்ட சாமாவையர் சிறிது சாந்தமடைந்து தமது இடத்தில் உட்கார்ந்தார். என்றாலும் அப்போது அவரது மனம் பட்டபாட்டை என்னவென்று விவரிப்பது; அவரது மனோநிலைமையை வருணிப்பதைவிட யூகித்துக் கொள்வதே நல்லது. எவருக்கும் கிடைக்காத ஒப்புயர்வற்ற அந்த இன்பத்தைத் தாம் அநுபவித்திருந்த சமயத்தில் அந்த ஸ்டேஷன்

வந்து கெடுத்து விட்டதைக் குறித்து ஆத்திர மடைந்து தவித்தார். அங்கிருந்து வண்டி எப்போது புறப்படும் புறப்படும் என்று ஆவல்கொண்டு துடித்தார். அன்றிரவு தமது வெற்றி நிச்சயமென்று மனப்பால் குடித்தார். வண்டி நின்ற அந்த இரண்டொரு நிமிஷங்களும் நெருப்புத் தணல் மீதிருந்தவரைப் போலத் தத்தளித்தார். கிடடாத பாக்கிய மெல்லாம் தமக்குக் கிட்டுவதால் அப்போது தமக்குச் சுக்கிர தசையாகவே இருக்க வேண்டுமென்று நினைத்தார். சில நாட்களுக்குள் பதினாயிரம் ரூபாய் கிடைத்ததும், இப்போழுது தெய்வரம்பை போன்ற ஒரு பெண் பாவை வந்து வாய்த்ததும், தமக்கு வேண்டு மென்றே ஈசுவரனால் அளிக்கப்பட்ட அதிர்ஷடமென்று நினைத்து அளவளாவினார். அந்தப் பூங்கோதையின் நட்பு தமக்குக் கிடைக்கப் போவதைக் குறித்துப் பேரின்பமும், வண்டி நின்றதைக் குறித்துப் பெருந்துன்பமும் அடைந்தார். அவளிடம் தாம் அடையப்போகும் பேரின்பச் சுகத்தை மனதால் பாவித்து அதிலீடுபட்டு இன்பமாய் ஆத்திரமே வடிவாய் உட்கார்ந் திருந்தார். வாய் பாட்டுப் பாடியது. கை தாளம் போட்டது. கால்கள் ஆட்டம் போட்டன. இமை கொட்டாமல் அவளது முகத்தையும் , மேனியையும் ஏற இறங்கப் பார்த்துப் புன்னகை மழையால் அவற்றை அபிஷேகம் செய்தார். தாம் வாங்கும் பங்களாவில் அவளை வைத்துவிடவும், தமது ஆயுட் காலம் முழுதையும் அவளுக்கு அடிமையாயிருந்து கழிக்கவும் உறுதி செய்து கொண்டார். வண்டி புறப்பட்டவுடன் அவளைத் தூக்கி மடியில் உட்கார வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவ நினைத்து, முற்றிலும் பித்த முற்றவரா யிருந்தார்.

அந்த வடிவழகியோ தனது முகத்தில் எத்தகைய மாறு பாட்டையும் காட்டாமல் தமது சிரத்தைக் கீழே கவித்துக் கொண்டு ஒன்றையும் அறியாத நற்குணவதியைப் போலவும் சித்திரப்பாவை போலவும் உட்கார்ந்திருந்தாள்.

வண்டி புறப்பட ஆயத்தமாகி ஊதியது. மணியும் அடிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் ஒரு பிரயாணி ஓடி வந்து சாமாவையரிருந்த வண்டியின் கதவை விசையாகத் திறந்தான். அந்த மனிதனுக்கு வயது இருபத்தைந்திருக்கலாம். அவனும் சுந்தர புருஷனாகக் காணப்பட்டான். அவனும் அந்த வண்டிக்குள்ளிருந்த காந்தத்தினால் கவரப்பட்டே, அதில் ஏற உறுதி செய்து கொண்டு கதவைத் திறந்தான். திரிசங்கு சுவர்க்கத்திலிருந்த சாமாவையர், தமக்கு அவனால் நேரும் விபத்தை உணர்ந்து திடுக்கிட்டவராய் வண்டியின் கதவை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, "ஐயா! அடுத்த வண்டி காலியா யிருக்கிறது. தயவு செய்து அதில் ஏறிக்கொள்ளும். நாங்கள் இரவில் நெடுந்தூரம் போகிறவர்கள்; இருவரும் இரண்டு பலகைகளிலும் படுத்துக் கொள்ள வேண்டும்" என்றார். வந்தவன் ஆத்திரத்தோடு, "சரிதானையா! கதவை விடும். வண்டி போய்விடும்போலிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே கதவை வேகமாய் வெளியில் இழுத்தான்.

அவன் ஏறுவதைப் பலவந்தமாகத் தடுத்துவிட நினைத்த சாமாவையர் உடனே வேகமா யெழுந்து தமது முழு பலத்தையும் உபயோகித்து கதவை உள்ளே இழுத்துப் பிடித்துக்கொண்டு ஓங்கிய குரலில், "இங்கே பெண்பிள்ளை தனிமையில் இருக்கிறாள் என்று சொல்லுகிறேன். என்ன ஐயா முரட்டுத்தனம் செய்கிறீர்? நீர் இங்கே ஏறக்கூடாது. ஏராளமான நகைகளும் பணமும் இருக்கின்றன. ஏதாவது காணாமற்போனால் நீர் உத்திரவாதி யாவீரா? போமையா அடுத்த வண்டிக்கு" என்று அதட்டிக் குரல் செய்து, அவனது மார்பில் கையைக் கொடுத்து முரட்டுத் தனமாகத் தள்ளினார். கீழே விழ விருந்த அந்த மனிதன் சிறிது தத்தளித்து ஒருவாறு சமாளித்துக் கொண்டு வீராவேச மடைந்து திரும்பவும் பாய்ந்தான். அதைக் கண்ட பெண் முதலிடத்திலிருந்து, கடைசிக்கு நகர்ந்துவிட்டாள். வந்த மனிதன், "அடே! என்னைக்

கீழே தள்ளி விடுகிறாயா! இது உன் பாட்டன் வீட்டு வண்டியா? ஏறாதே என்று சொல்ல நீயா எஜமான்? இதிலேதான் நான் ஏறுவேன். வா ஒரு கை பார்க்கலாம்; ஆகா! அவ்வளவா!" என்ற கூக்குரலிட்டுப் பாய்ந்து சாமாவையரது கழுத்தில் கையைக் கொடுத்து உள்ளே தள்ளினான். ஐயர் அவனை வெளியில் தள்ளினார். இருவரும் ஒருவரையொருவர் நாயே என்றும், கழுதையே என்றும், வேறு பலவிதமாகவும் அருச்சனை செய்து கொண்டனர். அதனால் அங்கு பெருத்த ஆரவாரம் உண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, மற்றவர் முதலிய பலர் கூடிக் குறிக்கிட்டு அவர்களது சண்டையை விலக்கி, வெளியிலிருந்த மனிதனை சாமாவையரி ருந்த வண்டிக்குள் ஏற்றிவிட்டு கதவைச் சாத்திற் தாளிட்டுக் கொண்டு சென்றனர். உடனே வண்டி புறப்பட்டது.

சாமாவையர் பதறுகிறார்; அவரது தேகம் வெடவெட வென்று ஆடுகிறது. தமது மனக்கோட்டையை ஒரு நிமிஷத்தில் இடித்து, தாம் அநுபவிக்க இருந்த இன்பதைப் போக்கடித்த அந்த துன்மார்க்கனைக் கசக்கிச் சாறுபிழிந்து ஊதி விட நினைத்து வாயில் வந்த விதம் திட்ட ஆரம்பித்தார். அவர் கூறியதற்கு ஒன்றிற்குப் பத்தாக அந்த மனிதன் திருப்பி மறுமொழி கொடுக்க, இருவரும் வாய்ச்சண்டையிலிருந்து கைச்சண்டைக்கு ஆயத்தமாய் முஷ்டிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார். வண்டியும் ஸ்டேஷனை விட்டு நெடுந் தூரம் வந்து விட்டது; அவர்களை விலக்குவோர் எவருமில்லை. அதைக் கண்ட கமலம் பெரிதும் அச்சங்கொண்டவளாய் சண்டையை விலக்க நினைத்து சாமாவையரைப் பார்த்து, "போனது போகட்டும்; உட்காருங்கள். கொஞ்சமும் மரியாதை பாராமல் அவ்வளவு பிடிவாதம் செய்து நுழைந்த மனிதரோடு சண்டையைச் செய்வதில் என்ன பலன்? விட்டுவிடுங்கள். நாம் ஒரு ராத்திரி விழித்துக்கொண் டிருப்பதனால் செத்தா போய்விடுவோம்; இப்படி வந்துவிடுங்கள்" என்று

அழுத்தமாகக் கூறி அழைக்க, ஐயர் உடனே பெட்டிப் பாம்புபோல அடங்கிப் போய் அவளிருந்த கடைசி இடத்திற்கு எதிரில் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டார். வந்த மனிதன் இரண்டொரு நிமிஷ நேரம் ஏதோ வாய்க்குள் முணுமுணுத்து விட்டுப் பிறகு மௌனமாக இருந்தான். சாமாவையரும் சாந்தமாக இருப்பவரைப்போலக் காணப்படினும், அவரது மனம் ஆத்திரத்தால் கொதித்தது. அந்தப் படுபாவி வராதிருந்தால் அந்நேரம் தாம் எவ்வளவு சுகமநுபவித் திருக்கலாமென்று நினைத்து அவனை அப்படியே வாரி வெளியில் எறிந்துவிட நினைத்தார். ஆனால், தாம் தூக்கி எறிகிற வரையில் அவன் சும்மா இருக்கவேண்டுமே என்னும் கவலையும் வதைத்தது. இவ்வாறு அவர் நெடுந்தூரம் வரையில் கோபத்தைப் பாராட்டிக் கொண்டே வந்து கடைசியில் ஒருவகையான முடிவிற்கு வந்தார். அவன் அநேகமாய் அடுத்த ஊரில் இறங்கிவிடுவானென்றும், அதன் பிறகு தாம் இன்ப முறலாமென்றும் நினைத்து அமரிக்கை யடைந்து அடுத்த ஊரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். அவனிருக்கையில் அந்தப் பெண்ணோடு கொஞ்சிக் குலாவிப் பேச மனமற்றவரா யிருந்தார். அடுத்த ஸ்டேஷனும் வந்தது. ஆனால், அந்த மனிதன் இறங்கவில்லை. சாமாவையரது மனம் ஏங்கித் தவித்தது. அவன் எந்த ஊர் வரையில் வருவான் என்பதை அறிந்து கொள்ளவும் வழி இல்லை! என்ன செய்வார்! தமது மனதைப் புண்ணாக்கி வதைத்தவராய் நெருப்பின்மீது இருப்பவரைப் போலத் தத்தளித்திருந்தார். ஒருகால் அந்த மனிதன் அடுத்த ஊரில் இறங்குவானென்று எண்ணி, மிகவும் பாடுபட்டு அடுத்த ஊர்வரையில் பொருத்திருந்தார். அங்கும் அவன் இறங்க வில்லை. மிகுந்த விசனத்தில் ஆழ்ந்து குரங்கைப் பறிகொடுத்த ஆண்டியைப் போல ஏங்கி உட்கார்ந்து விட்டார். "அடுத்த ஊரில் இறங்குவான் அடுத்த ஊரில் இறங்குவான்" என்னும் நம்பிக்கையே உறுதியாகப் பிடித்துக் கொண்டு காத்திருந்தார்;

அவ்வாறு பல ஊர்கள் சென்றன. அவரது ஆசையும் நிராசையானது; கடைசியில் மனமுடைந்தவராய் கமலத்தை அழைத்துக் கொண்டு, கீழிறங்கி வேறு வண்டியில் ஏறிக்கொள்ள நினைத்து, அவளை நோக்கி, "நாம் வேறே வண்டிக்குப் போகலாமா?" என்று தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கேட்க அவள், "திருவாரூர் வந்துவிட்டது. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய வீட்டுக்கே போய்விடுவோம்" என்று இரகசியமாக மறுமொழி கூறினாள். அதற்குமேல் எதையும் சொல்ல அறியாமல் சாமாவையர் ஓய்ந்து கண்மூடிக்கோட்டானைப் போல உட்கார்ந்திருந்தார். கமலம் தனது தாயிடத்தில் அச்சங்கொண்டவளாகத் தோன்றவில்லை. அன்னிய மனிதராகிய தம்மை, அவளறிய, வீட்டில் படுக்க வைத்து உபசரிப்பதென்றால், கமலம் தாசியாகத்தான் இருக்கவேண்டு மென்று அவர் நினைத்தார். அவளோடு இரண்டு மூன்று நாட்கள் உல்லாசமாக இருந்துவிட்டு, அவள் தம்மோடு வர விரும்புவாளாகில், அவளையும் அழைத்துக்கொண்டு சென்னைக்குப் போகத் தீர்மானித்துக் கொண்டார். எப்போது திருவாரூர் வரும் வருமென்று வழிபார்த்துக் கண்களும் மனதும் புண்ணாயின; மேனி பசத்தது; அவர் நரகவேதனை யடைந்தவராய் உட்கார்ந்திருந்தார்.

ஆயிரங்காத தூரத்திற்கப்பால் இருப்பதாய்த் தோன்றிய திருவாரூரும் வந்தது. சனியன் பிடித்ததைப்போல் அது வரையில் அவர்களுக்கருகில் உட்கார்ந்திருந்த மனிதனும் இறங்கிச் சென்றான். எவ்விடத்திலோ மறைந்து கிடந்த சந்தோஷமும் சாமாவையரது வதனத்தில் தோன்றி நடனம் செய்தது. பழைய உற்சாகமும், மோகாவேசமும், ஒன்றிற்கு நூறுமடங்காய்ப் பெருகி யெழுந்து சாமாவையரது மனத்திலும் தேகத்திலும் மிகுந்த சுறுசுறுப்பையும், துடிதுடிப்பையும் உண்டாக்கின. கமலத்தின் முகமும் கமலத்தைப் போலவே

மலர்ந்து இனிமையையும், குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும், புன்னகையையும் சொரிந்து, ஐயரது மனதில் புதிய நம்பிக்கையையும் பெருங்களிப்பையும் அடங்கா மோகத்தையும் கிளப்பின.

இருவரும் வண்டியை விடுத்துக் கீழிறங்கினார்கள். ஐயர் தமது பணப்பையை ஒரு கையிலும், கமலத்தின் பெட்டியை மற்றொரு கையிலும் எடுத்துக்கொண்டார். அவளையே தோள் மீது தூக்கிக் கொள்ளவும் அவருக்கு விருப்பமே! ஆனால், பெண்ணரசி அதற்கு இணங்கமாட்டா ளென்று நினைத்து, அதைப் பிரரேபிக்காமல் விடுத்தார். அவர் பெட்டியை எடுத்த போதே, அவள், "வேண்டாம்; வேண்டாம்; கூலியாளை அமர்த்தலாம்" என்றாள். "இது எவ்வளவு பெரிது! இதற்காகக் கூலியாள் பார்த்துக்கொண்டு இங்கே உட்கார்ந்திருப்பதேன். வா போகலாம்" என்று அதை எடுத்துக் கொண்டு புறப்பட, அவளும் மயில் அடி பெயர்த்து வைப்பது போல நடந்து அவரைத் தொடர்ந்தாள்.

"அவருக்கு அவளே இணை, அவளுக்கு அவரே இணை" என்று கூறத்தகுந்தவாறு இருவரும் மணப்பந்தலில் அமரப்போகும் சதிபதிகளைப் போல அழகு நடை நடந்து மனமதனும் இரதியும் உலாவிப் பவனி வருவதைப்போலச் சென்று ஸ்டேஷனை விடுத்து வெளியேறினர். வெளியில் குதிரை வண்டிகள் பல ஆயத்தமாக நின்றன. வண்டிக்காரர்கள், வருவோரின் மூட்டைகளையும், பெட்டிகளையும் பிடுங்க ஆரம்பித்தனர். ஒருவன் சாமாவையரது கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கிக் கொண்டுபோய் தனது வண்டியில் வைத்துவிட்டு, "எஜமானே! இந்த வண்டியில் ஏறுங்கள். இதோ இருக்கிறது" என்று ஐயரையும், அம்மாளையும் உபசரித்து அழைத்துச் செல்ல, அவர்கள் அதில் ஏறிக் கொண்டனர்; வண்டி புறப்பட்டது; சிறிது தூரத்திற்கப்பால்

கடைத்தெரு வந்தது. சாமாவையர் வண்டியை அவ்விடத்தில் நிறுத்தச் செய்து ஐந்து ரூபாயை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி கடைகளில் புகுந்து மிட்டாய்கள், பட்சணங்கள், தாம்பூலம், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை வாங்கிவந்து வண்டியில் நிரப்பினார். உடனே வண்டி புறப்பட்டு ஒரு மயிலுக்கப்பால் இருந்த அவளுடைய வீட்டை நோக்கிச் சென்றது. வண்டியில் விளக்கிருந்தமையாலும், வண்டிக்காரன் அருகிலிருந்தமையாலும், சாமாவையர் வண்டியில் எவ்வித விஷமமும் செய்யாமல், வீட்டின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

சில நிமிஷங்களில் வண்டி அவளது வீட்டின் வாசலில் வந்து நின்றது. ஐயரும், அம்மாளும் கீழே இறங்கினார்கள். கமலம் உடனே கதவை இடிக்க, சிறிது நேரத்தில் ஒரு கிழவி கதவைத் திறந்தாள். கமலம் வண்டிக்காரனைப் பார்த்து, "அடே சாமானை உள்ளே கொண்டு போய் வை" என்றாள். அவன் அப்படியே செய்துவிட்டுத் தனது கூலியைப் பெற்றுக்கொண்டு சென்றான். உடனே மங்கை, "வாருங்கள் உள்ளே போகலாம்" என்று மரியாதையாக உபசரித்து உட்புறம் அழைத்துச் சென்றாள். மிகவும் ஆடம்பரமாக வந்திருந்த ஐயரவர்களைக் கண்டவுடன் கிழவியின் தூக்கமும் கலக்கமும் பறந்தன. அவள் இரகசியமாகப் பெண்ணைக் கடைக்கணித்தாள். பெண் தனது கண் சிமிட்டலால் தந்தி பேசினாள். உடனே கிழவியும் மிகுந்த வணக்கமும், அன்பும், மகிழ்ச்சியும் காட்டி, அந்த வரவேற்பில் கமலத்தோடு கலந்துகொண்டு, "சுவாமி! உள்ளே வாருங்கள்" என்று அழைத்தாள். அவளது அன்பைக் கண்டு பெரிதும் உவகை கொண்ட சாமாவையர் மகாராஜன் உலாவ எழுந்ததைப்போல ஆடி அசைந்து பொன்னடி பெயர்த்து உட்புறத்தில் நுழைந்தார்.

மூவரும் கூடத்திற்குச் சென்றனர்; அந்த வீடு மிகவும் வசதியான பெருத்த மச்சுவீடு; கூடம், தாழ்வாரம், முற்றம்

முதலியவை அகன்றும், சுத்தமாகவும் இருந்தன. கூடத்தில் நாற்காலிகள், விசிப்பலகை, ஊஞ்சற்பலகை முதலியவை கிடந்தன. சுவரில் அழகிய படங்கள், மணியடிக்கும் பெருத்த கடியாரம், மான் தலைகள் முதலியவை காணப்பட்டன. கமலம் ஒரு சாய்வான நாற்காலியைக் காட்டி அதில் உட்காரும்படி அந்தரங்க அன்போடு சாமாவையரை வேண்ட, அவரும் களிப்படைந்து அதில் அமர்ந்து சுகமாகச் சாய்ந்துகொண்டார். கிழவி கண்ணாடி விளக்கை சுவரில் மாட்டிவிட்டு உட்புறம் சென்றாள். உடனே கமலம், "இதோ வந்துவிட்டேன்" என்று சாமாவையரிடம் கூறிவிட்டு உட்புறம் நுழைந்தாள். தாயும் மகளும் இரண்டாம் கட்டிற்குள் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்றனர். அங்கு தாயினிடம் மகள், நடந்த விவகாரங்களை யெல்லாம் ஒளியாமல் கூற, அவள் பெரிதும் சந்தோஷ மடைந்தவளராய், "அப்படியானால் பவுன்களும், ரூபாயும் எவ்வளவிருக்கும்?" என்றாள். கிழவி சிறிது யோசனை செய்து, "இதுவும் நம்முடைய பாக்கியந்தான்! ஸ்ரீதேவி நம்முடைய வீட்டைத் தேடி வந்திருக்கிறாள். ஆளைப் பார்க்கையில் டம்பாச்சாரியைப்போல விருக்கிறது. இந்த விஷயங்களில் நன்றாக அடிபட்டவனாகத்தான் இருக்க வேண்டும். இவன் எளிதில் ஏமாற மாட்டான். அதிருக்கட்டும்; நாம் தாசித் தொழில் செய்கிறவர்கள் என்பதைச் சொன்னாயா?" என்றாள்.

**கமலம்:-** இல்லை; இல்லை. குடும்ப ஸ்திரீ போலவும் அவருடைய அழகைக் கண்டு மோகித்தவள் போலவும் நடித்து அழைத்து வந்தேன்; மனிதனும் அப்படியே சொக்கிப்போய் வந்திருக்கிறான். நாம் எவ்வளவு கேட்டாலும் கொடுக்கத் தடையில்லை.

**கிழவி:-** அடிபோ பைத்தியமே! இந்தத் தொழிலில் இந்த மாதிரி தவித்த எத்தனையோ ஆள்களை நாம் பார்த்தாகி விட்டது; முதல் ஆவேசத்தில் இப்படித்தான் தாராளமாக

இருப்பார்கள்; பொழுதுவிடிந்தால் புது மனிதராக மாறிப்போய்விடுவார்கள். நீ தாசி என்பதை இவன் அறிந்தால் 20-ரூபா அல்லது 25 - ரூபா கொடுப்பான். அல்லது குடும்ப ஸ்திரீ என்று பாசாங்கு செய்தால் ரூபா 100 - அல்லது 200 - க்கு மேல் பெயராது. அதனால் நம்முடைய தரித்திரம் விடிந்து போகாது. குட்டுப்பட்டால் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும். மூட்டையை அப்படியே அடித்து விட்டால், ஆயிசுக் காலமெல்லாம் சுகப்பட்டுப் போகலாம்.

**கமலம்:-** (சிறிது அச்சமடைந்து) அது எப்படி முடியும்? நாம் வீணாக ஜெயிலுக்குத்தான் போய்ச் சேரவேண்டும்; ஏதோ வந்ததைக் காப்பாற்றுவோம்; நாமென்ன கொடுத்தா வைத்தோம்; அவனை நான் நன்றாக மயக்கி, அவன் இங்கேயே நாலைந்து நாள்களாகிலும் இருக்கும்படிச் செய்து ஆயிரம் ரூபாய் வரையில் பிடுங்கிக் கொண்டு அனுப்பி விடுகிறேன்.

**கிழவி:-** முட்டாளே போ; உனக்கு என்ன தெரியும்? சின்னப்பயலைக் கண்டால் சிறுக்கிக்கும் ஆசைதான் என்பதைப் போல உனக்கும் கொஞ்சம் சபலம் உண்டாகிறதோ? பதில் பேசாமல் நான் சொல்வதைச் செய். நம்முடைய கலியே நீங்கிப்போகும். போய் அவன் சந்தோஷமடையும்படி பேசிக்கொண்டிரு. நான் பால் வாங்கிக்கொண்டு வரப்போன தாகச் சொல்லிவை. நான் கொல்லை வழியாக நம்முடைய கள்ளு குடிக்கி வீரபத்திரனிடம் போய் இதற்குத் தகுந்த ஏற்பாடுகளுடன் சீக்கிரம் வருகிறேன்.

**கமலம்:-** (சிறிது யோசனை செய்து) சரி; உன்னுடைய இஷ்டம்போலச் செய்; நான் அவனிடம் போகிறேன் என்றாள்.

உடனே கிழவி ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கொல்லைப் பக்கமாக வெளியிற் போய்விட்டாள். கொல்லைக்

கதவைச் சாத்தித் தாளிடாமல் வைத்துவிட்டு, கமலம் மிகவும் விரைவாகவும் அதிக உற்சாகத்தோடும் குதித்துக்கொண்டு ஓடிவந்து சாமாவையரை யடைந்து தனது அழகிய பல் வரிசைகள் வெளியில் தோன்றப் புன்னகை செய்து, "தங்களுக்கு போஜனம் ஆனதோ இல்லையோ?" என்று அன்போடு கேட்டாள். அவளது தோற்றம் நடையுடை பாவனை சொற்கள் முதலியவை சாமாவையரது மார்பில் ஆயிரம் மன்மத பாணங்களை ஒரே காலத்திற் சொருகி அவர் மனதை மயக்கின. தேன் குடித்த நரியைப் போலிருந்த சாமாவையர் புன்னகை செய்து, "போஜனம் ஆய்விட்டது. வயிற்றில் பசியில்லை. மனப் பசிதான் பற்றி எரிகிறது" என்றார்.

அதைக் கேட்ட அந்த மோகனவல்லி கலகலவென்று நகைத்து மகிழ்வே உருவாய் மாறி, "அதற்குத் தகுந்த வைத்தியன் நானிருக்கிறேன். மருந்து செய்கிறேன்; பயப்படவேண்டாம்" என்று சொல்லியவாறு, அவர் வாங்கியிருந்த மிட்டாயி, பட்சணம், தாம்பூலம் முதலியவற்றை சாயத் தட்டுகளில் எடுத்து ஒழுங்காக வைத்து அதை ஒரு கையிலும், விளக்கை மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டு, "வாருங்கள்; படுக்கை யறைக்குப் போவோம்" என்றாள். சுவர்க்க வாசலுக்கு அருகிலிருந்து அதற்குள் நுழையப் போகும் நிலைமையிலிருந்த சாமாவையர் மிகவும் துடிப்பாக எழுந்து அவளுடன் சென்றார். அவ்விருவரும் இரண்டோர் அறை களைக் கடந்து, மிகவும் அழகாக அமைக்கப் பட்டிருந்த அவளது சயன அறையை அடைந்தனர். அவ்வறை, வீட்டின் நடுப்பாகத்திலிருந்தது. அதன் ஒரு புறத்தில் உன்னதமான வில்வைத்த விலையுயர்ந்த பித்தளைக் கட்டிலொன் றிருந்தது. அதன் மேல் பிரமாண்டமான மெத்தை, திண்டுகள், தலையணைகள், கொசுவலை, அஸ்மானகிரி முதலியவை நிறைந்திருந்தன. தின்பண்டம், தாம்பூலம் முதலியவை வைப்பதற்கு கட்டிலுக்கருகில் ஒரு மேஜை கிடந்தது.

இன்னொரு புறத்தில் இரண்டு நாற்காலிகளும், ஒரு சோபாவும் இருந்தன. கட்டிலினருகில் சுவரில் ஒரு பெருத்த நிலைக் கண்ணாடி மாட்டப் பட்டிருந்தது. எங்கும் படங்களும், பதுமைகளும் நிறைந்து கண்ணைக் கவர்ந்தன. தான் கொணர்ந்த பொருட்களை மேஜைமீது வைத்த கமலம் ஐயரைப் பார்த்து, "இதுதான் என்னுடைய வைத்தியசாலை; மருந்து கொடுக்கிறேன். இப்படிக் கட்டிலின்மேல் அமருங்கள்" என்று கூற, அவர் பிரம்மாநந்தம் அடைந்தவராய்க் கட்டிலின்மேல் உட்கார்ந்தார். அது வில் வைக்கப்பட்ட கட்டிலாகையால், மகாகனம் பொருந்திய ஐயரவர்கள் ரப்பர் பந்தைப் போலத் தணிந்து தணிந்து உயர்ந்தார். அப்போது கமலம், "என்னுடைய தாயார் பால்வாங்க அடுத்த வீட்டிற்குப் போயிருக்கிறாள். சீக்கிரம் வந்துவிடுவாள். அதுவரையில் இந்தக் காரியம் ஆகட்டும்" என்று சொல்லி விட்டு அருகிலிருந்த மிட்டாயி பட்சணங்கள் முதலியவற்றை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அவரது வாயில் அன்போடு ஊட்ட ஆரம்பித்தாள். அதைக் கண்டு ஆனந்தபரவச மடைந்த ஐயர் அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டே பலகாரங்களைத் தின்ன ஆரம்பித்தார். அவள் எதையும் உட் கொள்ளா திருந்ததைக் காண அவருக்குச் சகிக்கவில்லை. உடனே அவரும் சிலவற்றை எடுத்து அவளது வாயில் போட முயல, அவள், "எனக்கு வேண்டாம். உங்களுடனிருப்பதே எனக்கு மிட்டாயிக்கும் அதிகமான இனிப்பைத் தருகிறது. நான் இப்போது அடைந்து கொண்டிருக்கும் பிரம்மானந்த சுகத்திற்கு இந்த மிட்டாயின் ருசி உறைபோடக் காணுமா? நீங்கள் என் கட்டிக்கரும்பல்லவா! அத்தனையும் முத்து அதிமதுரக் கற்கண்டல்லவா!" என்று கூறி மிகுந்த மோகாவேசத்தோடு அவரைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள். சாமாவையர் பேரின்ப சாகரத்தில் மிதக்க ஆரம்பித்தார். அப்போது கமலம், "அதிருக்கட்டும்; நாம் இவ்வளவு அந்தரங்க நண்பர்களாகி விட்டோமே. நீங்கள்

யாரென்பதை நானும் அறிந்து கொள்ளவில்லை. நான் யாரென்பதை நீங்களும் கேட்கவில்லையே. இது வேடிக்கையல்லவா. இதுதான் உண்மையான காதல்; இதைத்தான் கண்டதும் காதலென்று கவிகள் வருணிப்பது இருக்கட்டும். இப்போதாவது விவரத்தை அறிந்து கொள்வோம். தங்களுடைய ஊர் எது? தங்களுடைய திருநாமம் என்ன? இவற்றையெல்லாம் சொல்லலாமா?" என்றாள்.

**சாமா:-** ஆகா! அவசியம் சொல்லுகிறேன். நான் சென்னப் பட்டணத்தில் ஒரு பெருத்த வியாபாரி; என் பெயர் சாமாவையர் என்பார்கள்.

**கமலம்:-** தாங்கள் பெருத்த வியாபாரியாகத்தான் இருக்க வேண்டும் என்பதை நான் பார்வையிலேயே அறிந்து கொண்டேன். அதெல்லாம் இருக்கட்டும். இன்னொன்று கேட்கிறேன்; உண்மையைச் சொல்லுவீர்களா? - என்று குழந்தையைப்போலக் கொஞ்சினாள்.

**சாமா :-** ஆகா! நீ எதைக் கேட்டாலும், அதை அவசியம் உள்ளபடி சொல்லுகிறேன்.

**கமலம்:-** தங்களுக்குக் கலியாணம் ஆய்விட்டதா?... என்று மிகவும் இழுத்துக் கொஞ்சிக் கேட்டாள்.

சாமாவையர் சிறிது தடுமாற்ற மடைந்தாராயினும், துணிவுகொண்டு, "கலியாணம் ஆனாலென்ன? அதைப்பற்றி நமக்கென்ன கவலை? தாலி கட்டுகிறவ ளெல்லாம் ஆசைநாயகி ஆய்விடுவாளா? இப்போது எனக்கு மனைவியா யிருப்பவள் சமையல் செய்துபோட உபயோகப்படுகிறாள். உண்மையான ஆசையோடு புருஷன் பெண்ஜாதியாக இருந்து சந்தோஷமடையத் தகுந்த மனைவியை நான் இன்னம் கலியாணம் செய்து கொள்ளவில்லை. அந்தப் பாக்கியம் இன்று தான் கிடைக்கப் போகிறது" என்றார்.

கமலம்:- "அது இன்றைக்கு மாத்திரந்தானா அல்லது எப்போதும் நீடித்திருக்குமா? கையிலோ நாகைப் பட்டணத்துக்கு டிக்கட்டு இருக்கிறது; விடியற்காலம் ஐந்து மணிக்கு இதெல்லாம் பழைய கதையாகிவிடும். நமது நட்பு ஒரு ராத்திரியோடு மறைந்து போகும் கனவாயிருந்தால், அதற்கு என்னுடைய தாயார் சம்மதிக்கமாட்டாள். எத்தனையோ பெரிய மனிதருடைய பிள்ளைகளுக்கு என்னைக் கட்டிக் கொடுக்கும்படி கேட்டார்கள். ஆனால், அவர்கள் ஒருவர் மேலும் என் மனம் செல்லவில்லை. இன்று தாங்கள் என் புத்தியையும் கெடுத்து இப்படி பைத்தியம் பிடிக்கச் செய்துவிட்டீர்கள். இனி உங்களை விட்டுப் பிரிந்து நான் ஒரு நிமிஷமும் உயிரை வைத்துக் கொண்டிருக்க முடியாது; நீங்கள் இப்படி விடியற்காலம் போய் விடுவீர்கள் என்பதை உணர்ந்திருந்தால், தங்கள் முகத்தையே நான் பார்த்திருக்க மாட்டேன்" என்று கூறினாள். அப்போது தண்ணீர்க் குழாய் திறக்கப்பட்டவாறு அவளது இரு கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. நெடுமூச்செறிந்து தேம்பித்தேம்பியழ ஆரம்பித்தாள். அதைக் கண்ட சாமாவையரது தேகம் பதறிப்போனது. தமது முழு அன்பையும் காட்டி அவளை அருகில் இழுத்து இருகைகளாலும் அணைத்து, தமது வஸ்திரத்தால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு, "கமலம்! பயப்படாதே; உன்னை நான் இன்றோடு விட்டுவிடுவேனென்று நினைக்காதே; உன் தலையில் அடித்துச் சத்தியம் செய்கிறேன், இனி நீயே என் எஜமானி; என்னுடைய செல்வத்தை உன்னிடம் ஒப்புவித்து விடுகிறேன். நீயும் நானும் எப்போதும் இணைபிரியாதிருந்தே நம்முடைய நாட்களை நாம் சுகமாய்க் கழிக்கவேண்டும். நாகைப்பட்டணத்தில் இருக்கும் ஒரு கப்பல் வியாபாரிக்கு பட்டணத்தில் ஒரு பங்களாவிருக்கிறது; அதை நான் விலைக்கு வாங்கப் போகிறேன்; நாளையதினம் தஸ்தாவேஜை முடித்துவிடுவதாக

எழுதியிருந்தேன்; அதை முடித்துக்கொண்டு இங்கே வந்துவிடுகிறேன். எத்தனை நாள் நீ இங்கிருக்கச் சொன்னாலும் இருக்கிறேன். போகும்போது, நீயும், உன் தாயாரும் என்னோடு கூடவே வந்துவிடுங்கள்; என் உயிர்போகும் வரையில் நான் உன்னை விடுவதில்லை. இது நிச்சயம்; இது சத்தியம்" என்று உறுதியாகவும் உருக்கமாகவும் கூறினார். அதற்குள், "கமலம்! கமலம்! விளக்கெங்கே?" என்று கிழவி பேசிய சப்தம் உண்டானது. கமலம் சுறுசுறுப்பாக விலகி, "சரி! அம்மாள் பால் கொண்டுவந்திருக்கிறாள். கூடத்திலிருந்த ஒரே விளக்கை நாம் எடுத்து வந்துவிட்டோம்; அவள் இருளில் இருக்கிறாள். நமக்கு இனி விளக்கு வேண்டாம். பாலை வாங்கிக்கொண்டு ஒரே முடிவாக வந்துவிடுகிறேன். நேரமாய்விட்டது" என்று சொல்லிவிட்டு, அருகிலிருந்த விளக்கை எடுத்துக் கொண்டு வெளியில் போய்விட்டாள். சாமாவையர் இருந்த அறையை இருள் மூடிக்கொண்டது. அவர் இன்பக் கனவு கண்டு இளகி உருகி ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்து தமக்குத்தாமே இணையென உட்கார்ந்திருந்தார். திடீரென்று தமக்கு உண்டான பெருத்த அதிர்ஷ்டத்தை நினைத்து விம்மித மடைந்தார். இன்னம் சில நாட்களில், தாமும் அந்த மடமயிலாளும் சென்னைக் கடற்கரை பங்களாவில் இரதியும் மதனும்போல சுகவாரிதியி லாடித் திளைத்திருக்கலாம் என்று நினைத்தார். இன்னம் இரண்டொரு நிமிஷத்தில் அந்தக் காமக்களஞ்சியமாகிய கட்டழகி தமது ஆலிங்கனத்திற்கு வந்துவிடுவாளென்று நினைத்து மனோரதிய மான சுவர்க்கத்தில் கொலுவீற்றிருந்தார். அவரது மனதின் ஆசைகள் அப்போதே உச்சநிலையில் இருந்தன. அவள் தம்மீது கொண்ட ஒப்புயர்வற்ற மையலை எவருக்கும் கிடைக்காத பெரும் பேறாக எண்ணி இன்பமயமாக விருந்தார்.

அப்போது கமலத்தின் கால் பாதரசங்கள் கலீர் கலீரென்று ஒலித்தது, "ராஜாத்தி வருகிறாள்; எச்சரிக்கை, பராக்கு" என்று கட்டியங் கூறின. அந்த ஓசையைக் கேட்க சாமாவையரது

உரோமம் சிலிர்த்தது; வந்தாள் வந்தாள் அருகில் நெருங்கி வந்து விட்டாள். அவளது கையில் விளக்கில்லை. கமலம் இருளில் வந்து தனது இடக்கரத்தால் ஐயரது கன்னத்தைத் தடவினாள். வலக்கரத்தில் பால் இருந்தது. வந்தவள் அவள்தானோ வென்பதை உணர நினைத்த ஐயரும் தமது கையை நீட்டினார். கமலம், "பால் கொட்டிப்போகும்; விஷமம் ஒன்றும் செய்ய வேண்டாம். வாயைத் திறவுங்கள்; நான் பாத்திரத்தை வாயில் வைக்கிறேன். அப்படியே பாலை குடித்துவிடுங்கள்" என்றாள். இடக்கரத்தால் அவரது சிரத்தை மேல்நோக்கித் திருப்பி சிறிதளவு பாலை வாயில் விடுத்து, "பால் வாயில் விழுகிறதா?" என்றாள். ஐயர் "விழுகிறது" என்றார். "நன்றாக திறவுங்கள்" என்றாள் கமலம். அவர் அப்படியே செய்தார். அப்போது அவளது கைகளினிடையில் இன்னொருவரது கை நுழைந்தது. கமலம் மெல்ல ஒரு புறமாக நகர்ந்தாள். ஐயரின் வாயில் பாலுக்கு பதில் ஒரு துணி பந்து (Ball) நுழைக்கப்பட்டது. அவர் உடனே திடுக்கிட்டுக் கூச்சலிட முயன்றார். அதற்குள் துணிப்பந்து வலுவாக வாய்க்குள் நுழைந்துகொண்ட தாகையால் சத்தம் வெளிப்படவில்லை. கமலம் அப்பால் போய்விட்டாள். உடனே ஏழெட்டு முரட்டுக் கைகள் ஐயருடைய கால்களையும் கைகளையும் இறுக்கப்பிடித்துக் கயிற்றினால் கட்டிவிட்டன. இரும்புப் பொறியில் அகப்பட்ட எலியைப்போல ஐயரது தேகம் நடுங்குகிறது. மூச்சு விட மாட்டாமல் ஐயர் தத்தளித்து பிரம்மாநந்த சுகமநுபவிக்கிறார். அப்போது ஒருவன் விளக்குடன் உள்ளே நுழைந்தான். என்ன விந்தை! கமலம் காணப்படவில்லை. பனமரங்களைப்போலக் கருத்துப் பெருத்த தேகங்களைக் கொண்ட நான்கு மனிதர் தனக்கருகில் நின்றுகொண்டிருந்ததைக் காண, ஐயருக்குக் குலை நடுக்க மெடுத்தது. அப்போது சிறிதும் அசையமாட்டாமல் மூட்டையைப் போலத் தரையிற் கிடந்தார். அவர் மீதிருந்த ஆடையாபரணங்கள் யாவும் விலக்கப்பட்டன. அவரது கோவணத்தை மாத்திரம் திருடர்கள் மிகுதியாக விடுத்தார்கள். இருவர் ஒரு பெருத்த கோணிப்பையை விரித்தனர்.

மூட்டையைப் போலக்கிடந்த சாமாவையரை வேறிருவர் தூக்கி அதற்குள் புகுத்திக் கயிற்றைக் கொண்டு நன்றாக கட்டினர். அடுத்த நிமிஷம் ஐயரவர்கள் இரண்டு மனிதர்களின் கைகளின் மீது ஆரோகணித்தவராய் ஊர்வலம் செல்ல எழுந்தார். கொல்லைப்புற வாசலின் வழியாக விரைந்து சென்று, சிறிது தூரத்தில் குறுக்கிட்ட **ஓடம்போக்கி** ஆற்றை அடைந்தனர். அதில் தண்ணீர் இடுப்பளவு ஓடிக் கொண்டிருந்தது. திருடர்கள் மூட்டையை அதில் போட்டுவிட நினைத்தனர். அப்போது அவர்களில் ஒருவன் ஆற்றில் போட்டால், ஒரு வேளை கரையில் ஒதுக்கப்பட்டு அவன் பிழைத்துக் கொள்வானென்றும், அதனால் கமலத்துக்குத் துன்பமுண்டாகுமென்றும், ஆகையால் அருகிலிருந்த ரயில் பாதையில் தண்டவாளத்தின் மீது வைத்துக் கட்டிவிட்டால் மனிதன் நிச்சயமாக துகையலாய் விடுவானென்றும் கூற, மற்றவர் அதுவே சரியென்று ஒப்புக்கொண்டனர். அடுத்த நிமிஷம் அவர்கள் ரயில் பாதையை யடைந்து மூட்டையை ஒரு தண்டவாளத்தினடியில் விடப்பட்டிருந்த இடைவெளியில் ஒரு கயிற்றைக் கொடுத்து அதனால் மூட்டையைத் தண்டவாளத் தோடு சேர்த்து இறுக்கிக் கட்டிவிட்டு திருடர்கள் போயினர்.

ஐயர் மூச்சுவிட மாட்டாமல் தத்தளித்து மரண வேதனையடைந்து தண்டவாளத்தின் மீது கிடந்தார். கை கால்களில் இரத்த ஓட்டம் நின்று போனதாகையால் பெருந்துன்பம் அநுபவித்தார். அப்போது நெடுந்தூரத்திற் கப்பால் ரயில் வருவதைப்போல,ஓசை உண்டானதைக் கேட்டார். அவருடைய மனோ மெய்களின் அப்போதைய நிலைமை எப்படி இருந்திருக்கும். இன்னம் சில நிமிஷங்களில் தாம் ரயிலில் அகப்பட்டுத் துகையலாய் விடுவோமென்று நினைத்துப் பேரச்சங்கொண்டு நரகவேதனை அநுபவித்தார்.

************

## 20 வது அதிகாரம்

# சமயசஞ்சீவி ஐயர்

மைலாப்பூரில் கடற்கரையின் ஓரத்தில் சென்ற அகன்ற சாலையில் அழகிய பெருத்த பல பங்களாக்கள் அடுத்தடுத்து அமைந்திருந்தன. அவற்றின் வாயில்கள் கடல்முகமாய் இருந்தமையின், இனிய காற்று, பங்களாக்களின் உட்புறத்தில் எப்போதும் ஜிலுஜிலென்று வீசி, அவற்றில் வசிப்போரை ஆநந்த சாகரத்தில் ஆழ்த்தி வந்தது. இத்தகைய உன்னதமான பங்களாக்கள் ஒன்றிலேதான் பெண்ணரசியான நமது நூர்ஜஹானுடைய தந்தை **கான் பகதூர் பெரிய தம்பி மரக்காயர்** வசித்து வந்தார். அவர் தலைமுறை தலைமுறையாகப் பெருத்த செல்வந்தராக இருந்தவர்களின் குடும்பத்தில் தோன்றிய சீமான்; நற்குணம், நல்லொழுக்கம், திறமை, கல்வி முதலிய சிறப்புகள் வாய்ந்த உண்மையான பெரிய மனிதர்; முன்னரே கூறப்பட்டபடி அவர் சென்னை துரைத்தனத் தாரின் நிருவாக சபையில் ஒரு அங்கத்தினராவர்; அவர் அதற்குமுன் பல ஜில்லாக்களில் கலெக்டர் உத்தியோகம் செய்து யாவராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். அவருக்கு வயது ஐம்பதிருக்கலாம். கட்டுத்தளர்வடையாத தடித்த உடம்பையும் சிவப்பு நிறத்தையும் கொண்டவர். பதற்ற மில்லாத நிதானகுணமும் உண்மையான மனவுருக்கமும் வாய்ந்தவர். அவருக்கு ஆண்மக்கள் பிறக்கவில்லை. அலிமாபீவி, நூர்ஜஹான் என்னும் இரண்டு அரிய பெண் மக்களையே அவர் பெற்றிருந்தார். அவர்களை அவர் இரண்டு உலகங்களாக மதித்து, தமது உயிரையே அவர்களின்மீது வைத்திருந்தார். அவர்களை ஊட்டி

வளர்த்து, கல்வி, நல்லொழுக்கம் முதலியவற்றில் பயிற்றி, இரண்டு ஒப்பற்ற நட்சத்திரச் சுடர்களைப்போல் மதித்துப் பாதுகாத்து வந்ததன்றி, அவர்கள்தான் தமது மேலான பாக்கியமென்று நினைத்து நினைத்து அளவளாவி யிருந்தார்.

இருவரையும் நெருங்கிய உறவினர்களின் புத்திரருக்கு மணம் புரிவித்தனர். ஆனால், அலிமாபீபியின் கணவன் இறந்து போயினன். அவர் அதைக் குறித்துப் பெரிதும் விசனத்தில் ஆழ்ந்தாராயினும், இளைய குமாரியான நூர்ஜஹானும் நைனா முகம்மதுவும் மனமொத்த காதலோடு வாழ்ந்து வருவதாக நினைத்து ஒருவாறு ஆறுதலடைந்தார். நைனா முகம்மது மிகவும் யோக்கியமான நடத்தை வாய்ந்தவனென்றும், தமது புதல்வி அவனிடம் இன்புற்று வாழ்ந்து வருகிறாள் என்றும் நினைத்துப் பெருமகிழ் வடைந்து வந்தார்.

அந்த நிலையில் மேனகாவின் விஷயம் அவர் செவிகளில் பேரிடியைப் போல வந்து தாக்கியது. அவளை அவன் தன் வீட்டிற்கு வரவழைத்து வற்புறுத்தியதையும், அன்று அவன் வாயினாலேயே வெளிவந்த பல இரகசியங்களையும் அலிமா பீவி சொல்லக் கேட்டபோது, அவர் அவற்றை உண்மை யென்று நம்பவில்லை; ஏதோ தவறுதலாக, அவள் அந்தச் செய்தியைத் தெரிவிப்பதாக நினைத்தார். ஆனால், தமது பங்களாவில், மேனகா நோய் கொண்டு கிடந்ததையும், டாக்டர் துரைஸானி வந்து வைத்தியம் செய்ததையும் கண்ட பிறகே அவர் மனதில் அச்செய்தி உண்மையானதென்று பட்டது. பெருத்த வியாகுலத்தில் ஆழ்ந்தார். தாம் எல்லாவற்றிலும் சிறந்த பாக்கியமாக மதித்துப் பாராட்டி வந்த தமது செல்வப் பெண்கள் இருவரும் கணவன் விஷயத்தில் துர்பாக்கிய முடையவர்களாய்ப் போனதை நினைத்து நினைத்து உருகி உட்கார்ந்துபோனார். பெருத்த விசனத்தினால் புண்பட்ட அவரது மனம் தமது உத்தியோகத்திலும் செல்லவில்லை; அவர் வேறு எத்தகைய சௌகரியத்தையும் தேடவில்லை.

மேனகாவைப் பற்றியும் பெருத்த கவலைகொண்டு தமது மனதை முற்றிலும் அதே விஷயத்தில் செலுத்தினார்; கவரிமானிலும் சிறந்த மானத்தையும், புருஷனிடம் வைத்த காதலையும் கொண்டவளான தமது புதல்வி தன் உயிருக்கு ஏதேனும் தீங்கு செய்து கொள்வாளோவென நினைத்தவராய், தாம் மூன்று நாட்கள் வரை துரைத்தன உத்தியோக சாலைக்கு வரக்கூடவில்லை. ஆகையால், தமது உத்தரவுபெற வேண்டிய காகிதங்களைப் பங்களாவுக்கே அனுப்பும்படி கவர்னருக்குச் செய்தியனுப்பினார். நூர்ஜஹானை பந்தோபஸ்தாக பாதுகாத்து அவள் மீதிலேயே கண்ணாக இருந்தார். தாம் நேரிலும் தமது முதிய புத்திரியின் மூலமாயும், அவளுக்குத் தேவையான ஆறுதல்களைச் சொல்லி வந்தார்.

சாம்பசிவம், கனகம்மாள் ஆகிய இருவரும் சென்னைக்கு வந்து பல துன்பங்களிற் பட்டு, தஞ்சைக்குத் திரும்பச் சென்ற அன்றைய தினம் இரவு எட்டு மணி நேரமாயிற்று; பெரியதம்பி மரக்காயர் தமது பங்களாவின் மேன்மாடியிலிருந்த ஒரு சிங்காரமான அறையில் சோபாவின்மீது உட்கார்ந்திருந்தார்; பெருத்த ஹுக்கா வொன்று நெடுந்தூரத்திற்கப்பால் இருந்தது. பட்டுத் துணியால் அமைக்கப்பட்ட அந்த ஹுக்காவின் காம்பு அநுமாரின் வாலைப்போல வளர்ந்து சுருண்டு சுருண்டு அவரிருந்த சோபாவிற்கு வந்திருந்தது; பங்களாவிலிருந்த சம்பங்கி, ரோஜா, முதலிய புஷ்பங்களின் பரிமள காந்தத்தைச் சுமந்து உட்புறம் நுழைந்து வீசிய கடற்காற்றின் இனிமையினால் பரவச மடைந்திருந்த மரக்காயர், அப்போதைக்கப் போது ஹுக்காவின் காம்பை வாயில் வைத்துக்கொண்டு குடுகுடு குளுகுளு குடுகுடு குளுகுளு வென்று ஓசை செய்து, பிரம்மாநந்த சாகரத்தில் மிதந்து கொண்டிருந்தார். அவருடைய கண்கள் சொக்கிப்போய் ஆநந்த சாகரத்தில் நீந்துவன போலத் தோன்றின; வெளித் தோற்றத்திற்கு அவர் இன்பத்தில் ஆழ்ந்திருப்பதாய்த் தோன்றினும், உண்மையில் அவர் மனது

பெருத்த அல்லல்களின் திரள்களினால் உலப்பப்பட்டு மிக்க சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தது. மாறி மாறி ஹுக்காவுடன் சம்பாஷணை செய்வதும், எதிரிலிருந்த ஒரு நாற்காலியில் துயரமே வடிவாக உட்கார்ந்திருந்த நூர்ஜஹானிடம் ஏதோ விஷயங்களைப் பற்றி மொழிவதுமாய் இருந்தார்.

**பெரிய தம்பி மரக்காயர்:-** எல்லாம் சரிதான்; வி.பி. ஹாலில் நாடகம் பார்க்க அழைத்துக்கொண்டு போவதாய் குமாஸ்தா சாமாவையரும், வக்கீலின் அக்காளும் பாசாங்கு செய்து, அங்கப்பநாயக்கன் தெருவிலுள்ள நமது வீட்டிற்குத் தன்னை அழைத்துக்கொணர்ந்து, இரகசியமான ஒரு அறையில் விட்டதாக இந்தப் பெண் சொன்னாள் என்றாயே, இவள் அங்கு வந்ததை நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?

**நூர்:-** அறையில் விட்டபிறகு குமாஸ்தாவும், வக்கீலின் அக்காளும் மிகவும் அவசரமாக அறைகளின் வழியாய் நுழைந்து வெளிப்பட்டதை தற்செயலாக அக்காள் பார்த்துவிட்டாள். உடனே அவளுக்குப் பெருத்த சந்தேகம் தோன்றிவிட்டது. விஷயத்தை என்னிடம் வெளியிட்டாள். நான் முதலில் இதைப் பற்றி எவ்விதமான கெட்ட யூகமும் செய்யவில்லை. என்றாலும் அன்னியரான அவர்கள் இரவு ஒன்பது மணிக்கு நமது வீட்டிற்குள் வந்ததும், மிகவும் அச்சங் கொண்டவரைப்போல விரைந்தோடியதும் ஆச்சரியத்தை உண்டாக்கின. ஆகையால், நானும் அக்காளும் மெல்ல நடந்து உட்புறத்திலுள்ள அறைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு போனோம். ஓர் அறையின் கதவுகள், யாவும் வெளிப்புறத்தில் தாளிடப் பட்டிருந்தன. ஆனால், அதற்குள் வெளிச்சமும் மனிதர் சம்பாஷித்த குரலும் உண்டாயின. நாங்கள் சந்தேகப்பட்டு கதவுகளின் இடுக்கால் உட்புறம் பார்த்தோம். இந்தப் பெண் தனிமையில் நின்று தவித்துக்கொண்டிருந்தாள். உங்களுடைய

மருமகப்பிள்ளை இவளிடத்தில் தகாத சொற்களைக் கூறிக்கொண்டிருந்தார். அப்புறந்தான் மற்ற சங்கதிகள் வெளிவந்தன.

**பெரிய:-** நடந்த காரியங்களை நினைக்க நினைக்க இவைகளெல்லாம் எனக்குப் பெருத்த அதிசயமாகவே இருக்கின்றன. இந்த குமாஸ்தாவும், வக்கீலின் அக்காளும் சேர்ந்துகொண்டு எவ்வளவு சாமர்த்தியமாகக் காரியம் செய்திருக்கிறார்கள்! நாடகம் பார்க்கப் பெண்ணை அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்லி, பெண்ணை ஏமாற்றி நம்முடைய வீட்டில் கொணர்ந்து விட்டதும், புருஷன் உண்மையை அறிந்துகொள்ளாமல் இருக்கும்படி நாடகக் காரன் எழுதியதைப் போலப் பொய்க் கடிதம் எழுதி பெட்டியில் வைத்திருந்ததும் சாதாரணமான ஜனங்கள் செய்யத் தகுந்த காரியங்களா! அவர்கள் எதற்கும் துணிந்த பெருத்த ஆசாமிகள்! ஆகா! கடிதத்தைப் பற்றிய விஷயங்களையெல்லாம் டாக்டர் துரைஸானி சொன்னாள் என்றாயே! அவளுக்கு இந்த ரகசிய மெல்லாம் எப்படித் தெரிந்தது?

**நூர்:-** துரைஸானி நேற்று மாலை 7மணிக்கு இங்கே வந்தாள். மோட்டார் வண்டியில் அறைபட்ட மனிதரைப்பற்றி அப்போது பிரஸ்தாபம் ஏற்பட்டது; அந்த மனிதரே இந்தப் பெண்ணின் புருஷன் என்பது உடனே தெரியவந்தது; தனது புருஷனுக்கு நேர்ந்த விபத்தைக் கண்டு பொறாமல், இந்தப் பெண் மூர்ச்சித்து விழுந்தாள். இவளுக்குத் தேவையான மருந்தைக் கொடுத்துவிட்டு துரைஸானி அவசரமாக வைத்திய சாலைக்குப் போய்விட்டாள். இன்று காலையில், இந்தப் பெண்ணின் தகப்பனாரான தஞ்சாவூர் டிப்டி கலெக்டரும் அவருடைய தாயாரும் சாமாவையரும் அங்கே வந்து வண்டியில் அறைபட்டவரைப் பார்த்தார்களாம்.

**பெரிய:-** ஆ! என்ன ஆச்சரியம்! இவள் சாம்பசிவையங்காருடைய பெண்ணா?

**நூர்:-** ஆம்.

**பெரிய:-** அவர் யாரென்பது உனக்குத் தெரியுமா? நான் சேலத்தில் கஜானா டிப்டி கலெக்டராக யிருந்தபோது, அவரும் சேலத்தில் டிப்டி கலெக்டரா யிருந்தவர்; ஆகா! அவர் மகா யோக்கியரல்லவா! அவரைப்போன்ற பரிசுத்தமான மனிதர் ஒருவரும் கிடைக்க மாட்டார்களே! அவர் என்னுடைய அந்தரங்க நண்பரல்லவா! அடாடா! அவருடைய பெண்ணா இந்தக் குழந்தை! என்ன துர்பாக்கியம்! நான் சேலத்திலிருக்கும் போது அவருடைய வீட்டில் இந்தக் குழந்தையைப் பார்த்திருக்கிறேன்; அவர் இந்தக் குழந்தையை எவ்வளவோ அருமையாக வளர்த்தாரே! கடைசியில் இந்த துஷ்டர் வீட்டிலா கொண்டுவந்து கொடுத்தார்! ஆகா! அவருடைய தாயாரைப் போல நல்ல பெண்பிள்ளை உலகத்திலிருப்பது சந்தேகம்! அந்த அம்மாள் மகா விவேகி! அப்படியானால், அவர்கள் இந்த ஊருக்கு வந்திருந்தார்களா?

**நூர்:-** அவர்கள் இன்று காலையில் வைத்தியசாலைக்கு வந்து மாப்பிள்ளையைப் பார்த்தார்களாம்; அவர்களுக்குப் பதினைந்து நிமிஷநேரம் சாவகாசம் கொடுக்கப்பட்டதாம்; அவ்வளவு நேரமும் விசனித்து அழுதே தீர்த்தார்களாம்; கூடவிருந்த குமாஸ்தா சாமாவையர், மாப்பிள்ளை நேற்று அணிந்திருந்த சட்டையிலிருந்து இரண்டு கடிதங்களை எடுத்து டிப்டி கலெக்டரிடம் கொடுக்க, அவரும் அம்மாளும் படித்தார்களாம். உடனே இருவரும் மிகவும் ஆத்திரமடைந்து பைத்தியம் கொண்டவர்களைப்போல மாறி, அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார்களாம்; அங்கே நியமிக்கப் பட்டிருந்த வெள்ளைக்கார தாதி இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தாளாம்; டாக்டர் துரைஸானி வந்ததும்

அவளிடம் விஷயத்தைத் தெரிவித்தாளாம்; உடனே துரைஸானி அந்தக் கடிதங்களை எடுத்து அவற்றில் எழுதப்பட்டிருந்த விவரங்களை அறிந்துகொண்டாளாம்; இன்று மாலையில் சாமாவையர் திரும்பவும் வைத்திய சாலைக்கு வந்தாராம்; துரைஸானி அவரைத் தனிமையான ஓரிடத்திற்கு அழைத்துப்போய் தந்திரமாக விசாரித்தாளாம்; அவர் முதலில் சரியான மறுமொழி கொடாமல் தயங்கினாராம்; பிறகு துரைஸானி கடிதங்களைக் காட்டிக் கேட்க, அவர் எல்லா விஷயங்களையும் தெரிவித்தாராம்; கடிதங்களில் எழுதப்பட்டிருந்த சங்கதிகள் நிஜமானவை யென்றும், இந்தப் பெண் நாடகக்காரனோடு ஓடிப்போய் விட்டாளென்றும், கடிதங்களை இவளுடைய பெட்டியிலிருந்து எடுத்த புருஷன் அவமானத்தினால் தற்கொலை செய்துகொள்ள வேண்டு மென்னும் எண்ணத்துடன் மோட்டார் வண்டியின் கீழ் தாமே போய் வீழ்ந்தாரென்றும் சாமாவையர் சொன்னாராம்.

**பெரிய:-** ஆகா! என்ன தந்திரம் என்ன தந்திரம்! அவர்களே எல்லாவற்றையும் செய்துவிட்டு பெண்ணின் மேல் பழியைப் போட்டு விட்டார்களே! அப்பா மகா மோசக்காரர்கள்! பெண் இங்கிருக்கும் சங்கதியைத் துரைஸானி ஒரு வேளை சாமாவையருக்குச் சொல்லியிருப்பாளா?

**நூர்:-** இல்லை இல்லை. அதை எவரிடமும் சொல்ல வேண்டாமென்று நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எவரிடமும் அவள் சொல்லவே மாட்டாள்.

**பெரிய:-** அவர் பிழைப்பாரா? துரைஸானி என்ன சொன்னாள்?

**நூர்:-** அவர் இன்னும் கண்ணைக் கூடத் திறக்கவில்லை யாம். அங்கே அவருடைய நிலைமை அப்படி இருக்கிறது; இங்கே இந்தப்பெண்ணிருக்கும் நிலைமையோ பரிதாபகர

மாக இருக்கிறது; உட்கார நினைத்துப் படுக்கையை விட்டு எழுவாளானால் மயங்கிக் குப்புற விழுந்து விடுகிறாள். இவளுடைய நிலைமையைக் காண கல்லும் கரைந்துருகும்; கட்டைகளும் வாய்விட்டுப் புலம்பும். தன் புருஷனே வண்டியில் அறைபட்டவர் என்பதை யறிந்தவுடன் இவளுடைய உயிர் அநேகமாய்ப் போய்விட்டது. துரைஸானியின் பெருமுயற்சியால் உயிர் நிற்கிறது. இந்த நிலைமையில் இவள் தன்னுடைய புருஷனைப் பார்க்கவேண்டுமென்று பதறுகிறாள்; தான் பார்ப்பதற்குள் அவர் உயிர் துறந்து விடுவாரோ என்று துடிதுடிக்கிறாள். அதே பித்தாக நிமிஷத்துக்கு நிமிஷம் வேண்டிக் கெஞ்சுகிறாள். கடிதங்களைப்பற்றிய விவரங்களை நாங்கள் இவளிடம் தெரிவித்தோம். புருஷன் இவள் மேல் அருவருப்புக் கொண்டிருப்பதாயும், இப்போது அவரைப் பார்த்தால் அவர் ஆத்திரப்படுவார் என்றும், அதனால் இந்த ஹீனஸ்திதியில் அவருடைய உயிருக்கே மோசம் வந்துவிடுமென்றும் துரைஸானி சொன்னாள். கடிதங்களின் வரலாற்றைக் கேட்க, அவள் இடியோசையைக்கேட்ட நாகமென்ன திடுக்கிட்டு கலங்கினாள்; இந்த அபவாதத்திற்கு ஆளானபின், தான் உயிரை வைத்துக் கொண்டிருக்கக் கூடாதென்றும், அவரை ஒருமுறை பார்த்துவிட்டு அவருடைய காலடியிலேயே விழுந்து உயிரை விட்டுவிடவேண்டுமென்றும், தன்னை அவரிடம் அழைத்துப் போகும்படியும் சொல்லி மன்றாடுகிறாள். இவளைக் கண்டால் அவர் பிழைக்கமாட்டாரென்றும், இல்லையானால் பிழைத்துக் கொள்ளலாமென்றும், வீணில் ஆத்திரப்பட்டு அவரைக் கொல்லக்கூடாதென்றும் துரைஸானி வற்புறுத்திச் சொல்லுகிறாள்; நோயாளியான தன்னையும் கொண்டுபோய் அவருக்கருகில் ஒரு படுக்கையில் விட்டு வைத்தால், அவரைப் பார்த்துக்கொண்டு அருகிலாயினும் இருப்பேனென்று இவள் சொல்லுகிறாள்; அப்படிச் செய்வது இருவருக்கும் ஆபத்தானதென்றும், இன்னம் ஒரு

வாரமாகிலும் கழியுமுன் இவளை அழைத்துப்போவது பிசகென்றும் துரைஸானி முடிவாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அவள் மிகவும் ஏங்கிப்போய்ச் சோர்ந்து படுக்கையில் வீழ்ந்துவிட்டாள்; என்ன செய்வதென்பது தோன்றவில்லை; அது சகிக்க முடியாத காட்சியாக இருக்கிறது - என்றாள்.

அப்போது தந்தை, மகள் ஆகிய இருவரது தேகங்களும் பதறின. இருவரது கண்களினின்றும் கண்ணீர் வழிந்தது; மேலும் பேச மாட்டாமல் விசனத்தினால் உருகி இருவரும் உட்கார்ந்து போயினர்.

**பெரிய:-** (மிகவும் வருந்திய குரலில்) ஆகா! காதால் கேட்கவே சகிக்கவில்லையே! மனிதருக்கு இப்படியும் ஆபத்து வருமோ! இன்னதைச் செய்வ தென்பது தோன்றவில்லையே!- என்றார். உடனே யோசனையில் ஆழ்ந்தார்; பிறகு நூர்ஜஹானை நோக்கி, "அம்மா! நாம் ஒரு காரியம் செய்யலாம்; இன்று வந்த டிப்டி கலெக்டர் எந்த இடத்தில் தங்கியிருக்கிறார் என்பதை நாளைக்குக் காலையில் சாமாவையர் மூலமாக அறிந்துகொண்டு, அவரிடம் போய் விஷயங்களைச் சொல்லி பெண்ணையும் அவரிடம் ஒப்புவித்து விடுவோம்; அதுதான் சரியான காரியம்."

**நூர்:-** (மிகுந்த விசனத்தோடு) அவரைப்பற்றியும் துரைஸானி சாமாவையரிடம் கேட்டாளாம். அவர் திரும்பி ஊருக்குப் போய்விட்டாராம்; இன்று காலையிலே தான் அவர் இந்த ஊருக்கு வந்தாராம்; அவருக்கு உத்தியோக விஷயத்தில் பெருத்த ஆபத்து வந்து விட்டதாம்; அவர் இன்று வைத்திய சாலைக்கு வரும்போது, நடுவழியிலிருந்த போலீஸ் ஸ்டேஷனில் அவரை இறங்கச் செய்து உள்ளே அழைத்துப் போனார்களாம்; கமிஷனர் துரை தஞ்சை கலெக்டர் துரையிடத்திலிருந்து வந்திருந்த தந்தி உத்தரவை அவரிடம்

கொடுத்தாராம்; அதில் அவரை வேலையிலிருந்து நீக்கி வைத்திருப்பதாக உத்தரவு செய்யப்பட்டிருந்ததாம்; அதை வாங்கிக்கொண்டபின் அவர் வைத்தியசாலை, நாடகக்காரன் வீடு முதலிய இடங்களுக்குப் போனாராம்; நேற்று இராத்திரி அவருடைய வீட்டில் பெருத்த கொள்ளை நடந்ததாகவும், அவருடைய மனைவி கடுமையாக அடிபட்டுக் கிடப்பதாகவும் தந்தி வந்ததாம்; உடனே அவரும் அவருடைய தாயாரும் புறப்பட்டுப் போய்விட்டார்களாம் - என்றாள்.

அதைக் கேட்ட பெரிய தம்பி மரக்காயரது தேகம் கிடுகிடென்று ஆடியது; அவர் பெருத்த வியப்பும் திகைப்பும் அடைந்தார். "ஆ! என்ன ஆச்சரியம்! இது உண்மைதானா! ஒரு மனிதருடைய தலையின் மேல் இத்தனை இடிகள் விழுமோ! அவருக்காவது வேலைபோகவாவது! அவர் எவ்விதமான குற்றமும் செய்யமாட்டாரே! எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் உத்தரவு கொடுத்தார்களாம்?"

**நூர்:-** பீட்டர் சாலையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தார்களாம்; அதன் விவரம் தெரியவில்லை - என்றாள்.

அதைக் கேட்ட பெரியதம்பி மரக்காயர் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்தார்; தமது ஹுக்காவின் காம்பை வாயில் வைத்து வலுவாக நாலைந்து முறை இழுத்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு ஐந்து நிமிஷநேரம் நிஷ்டையில் இருந்தார். பிறகு ஏதோ நினைவைக் கொண்டு திடுக்கென்று எழுந்து எதிரிலிருந்த ஒரு மேஜைக்குச் சென்றார்; டெலிபோன் (Telephone) என்னும் செய்தியனுப்பும் கருவி அதன் மீதிருந்தது; அதை எடுத்து வாயிலும் செவியிலும் வைத்துக்கொண்டு பீட்டர்சாலைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்த சமய சஞ்சீவி ஐயருடன் பேசினார். உடனே புறப்பட்டு தமது பங்களாவுக்கு வரும்படி ஐயரிடம் சொல்லிவிட்டுத் திரும்பவும் வந்து தமது ஆசனத்தை அடைந்தார்; "என்ன செய்வ தென்பது தோன்ற

வில்லை. இந்தப் பெண்ணின் தகப்பனார் இங்கிருந்தால்; அவரிடம் பெண்ணை ஒப்புவித்து விடலாம்; நம்முடைய கவலையெல்லாம் தீர்ந்துபோகும். அவரோ ஊருக்குப்போய் விட்டார்; இவளுடைய புருஷன் வீட்டில் கொண்டுபோய் விடுவோமானால், இவளுடைய நாத்திமார்கள் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்; ஒருக்கால் சேர்த்துக் கொண்டாலும் இந்த நிலைமையில் விஷமிட்டுக்கொன்றாலும் கொன்று விடுவார்கள்; வைத்தியசாலையிலுள்ள புருஷனோ இன்னும் கண்ணைக்கூடத் திறக்கவில்லை; பிழைப்பதே சந்தேகமாக யிருக்கிறது. அவர் கொஞ்சம் தேறி குணமடைந் தாலும், இவளைப் பார்த்தால் அவருக்குப் பெருத்த ஆத்திரமுண்டாவது நிச்சயம். அது அவருடைய தேகத்திற்குத் தீங்கை விளைவிக்கும்; இப்போது நாம் என்ன செய்வ தென்பது தோன்றவில்லை" என்றார் பெரியவர்.

**நூர்:-** இவள் இதற்கு முன் பாலையாகிலும் கொஞ்சம் குடித்தாள். இப்போது தன்னுடைய புருஷனைக் காண வேண்டு மென்னும் கவலையில் பாலும் வேண்டாமென்றும் விலக்கி விட்டாள். இவள் இப்படியே இரண்டொரு நாள்களிருந்தால் இவ்விடத்திலேயே உயிரை விட்டுவிடுவாள் போலிருக்கிறது. இது நமக்குப் பெருத்த வதையாக இருக்கிறது. பார்க்கச் சகிக்க வில்லை. என்னைக் காணும்போதெல்லாம் இவள் கெஞ்சி மன்றாடுவாள்; என் மோவாயைப் பிடித்து வேண்டிக் கொள்ளுகிறாள். எப்படியாகிலும் தான் தன்னுடைய புருஷனைப் பார்க்கவேண்டும் என்கிறாள். பைத்தியங் கொண்டவளைப்போலப் பிதற்றுகிறாள் - என்றாள்.

பிறகு இருவரும் சிந்தனையில் ஆழ்ந்து தம்மை மறந்து பத்து நிமிஷ நேரம் மௌனமாக இருந்தனர்.

அப்போது ஒரு வேலைக்காரி அவ்விடத்திற்கு வந்து, வெளியில் பைசைக்கிலில் யாரோ ஒருவர் வந்திருப்பதாகவும்,

அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று சொன்னதாகவும் கூறினாள். மரக்காயர், "அவரைக் கச்சேரி மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டு வா!" என்று கூறி அவளை அனுப்பிவிட்டு, எழுந்து வெளியிற்சென்று தாம் கச்சேரி செய்யும் உத்தியோக மண்டபத்திற்குப் போய் நாற்காலியில் அமர்ந்துகொண்டார். அடுத்த நிமிஷம் சமய சஞ்சீவி ஐயர் தோன்றி மரக்காயருக்கு வணக்க வொடுக்கமாக சலாம் செய்து மரியாதையாக நின்றார். உடனே மரக்காயர் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும்படி அன்போடு ஐயரை உபசரிக்க, அவர் மிகவும் தயங்கி கடைசியில் ஒரு விசிப்பலகையின்மீது உட்கார்ந்துகொண்டார். மரக்காயர், சென்னைத் துரைத்தனத்தில் யாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் மும்மூர்த்திகளான பெருந் தெய்வங்களில் ஒருவராதலால், அற்ப உத்தியோகஸ்தரான தம்மை அவர் அவ்வளவு தூரம் மதித்து அழைப்பதன் காரணமென்னமோ வென்று ஐயமுற்று சஞ்சீவி ஐயர் பெரிதும் கலக்கமும், அச்சமு மடைந்து வந்திருந்தார்; தாம் ஏதாகிலும் குற்றம் செய்து விட்டோமோ என்று கவலைகொண்டார். அப்படி யிருந்தால் தமது மேலதிகாரியின் மூலமாக வன்றோ அத்தகைய உத்தரவு அனுப்பப்பட வேண்டுமென்று நினைத்து, குழப்பமும் பலவாறான சஞ்சலங்களையும் அடைந்து மரக்காயர் எந்த விஷயத்தைப்பற்றி பேசப்போகிறாரோ வென்று ஆவல் கொண்டு, அவரது வாயைப் பார்த்தவண்ண மிருந்தார்; முதலில் அவர் தம்மைக் காணும்போதே தம்மீது விழுந்து கடிந்து விடப் போகிறாரென்று நினைத்து வந்தார். ஆனால், அவர் தம்மை நாற்காலியில் அமரும்படி அன்போடு உபசரித்ததைக் காண, சஞ்சீவி ஐயரின் மனது ஒருவாறு அமரிக்கை யடைந்தது. என்றாலும், அவ்வளவு உயர்வான பதவியிலிருக்கும் பெரிய மனிதர் தம்மை ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தின் பொருட்டே வரவழைத்திருக்க வேண்டுமென்று நினைத்தார்.

அடுத்த நிமிஷத்தில் மரக்காயர், "ஐயரே! இன்று காலையில் தஞ்சாவூர் டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் உம்முடைய ஸ்டேஷனுக்கு வந்தாரா?" என்றார்.

அதை கேட்ட சஞ்சீவி ஐயர் மேலும் துணிவடைந்தவராய், "ஆம் வந்தார்" என்றார்.

**பெரிய:-** என்ன காரியமாக வந்தார்?

**சஞ்சீ:-** நேற்று ராத்திரி தஞ்சாவூர் கலெக்டரிடமிருந்து போலீஸ் கமிஷனருக்கு ஒரு தந்தி வந்தது; டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் இன்று காலையில் எழும்பூரில் இறங்கி, தொளசிங்கபெருமாள் கோவில் தெருவிலுள்ள வக்கீல் வராகசாமி ஐயங்கார் வீட்டிற்கு வருவாரென்றும், அவர் ரஜா இல்லாமல் இரண்டு முறை பட்டினத்திற்கு வந்த குற்றத்திற்காகவும், பொய்யான செலவுப் பட்டி தயாரித்து சர்க்கார் பணத்தை வாங்கிக்கொண்ட குற்றத்திற்காகவும், லஞ்சம் வாங்கின குற்றத்திற்காகவும், தமது விசாரணை முடியும் வரையில் அவரை வேலையிலிருந்து நீக்கி வைப்பதாகவும் அவர் உடனே தஞ்சாவூருக்கு வந்து தமது சீல் முகர் முதலியவற்றை கஜானா டிப்டி கலெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இந்தச் செய்தியை கமிஷனரே நேரில் அவருக்கு அறிவித்து அவரிடம் கையெழுத்துப் பெறவேண்டு மென்றும் அந்தத் தந்தியில் கலெக்டர் எழுதியிருந்தார். நான்கு நாள்களுக்கு முன் அவர் இந்த ஊருக்கு வந்து தம்முடைய பெண்ணை ரகசியமாக அழைத்துப்போனாராம்; அதன் விவரத்தைப் பற்றி வக்கீல் வீட்டிலும் விசாரணை செய்து; கிடைக்கக் கூடிய சாட்சியத்தையும் அனுப்பும்படி தந்தியில் கமிஷனருக்குத் தனியாக கலெக்டர் எழுதியிருந்தார். நான் இன்று காலையில் அவர்களுடைய வீட்டில் போய் விசாரணை செய்தேன். டிப்டி கலெக்டர் நான்கு நாள்களுக்கு முன் வந்தது

உண்மைதானென்று வக்கீலின் அக்காள் சொன்னாள்; அவர்களுக்கு நண்பரான அடுத்த வீட்டு சாமாவையரும் அதற்கு அநுகூலமாக வாக்குமூலம் கொடுத்தார். இருவரின் வாக்குமூலங்களையும் டிப்டி கலெக்டர் கையெழுத்தையும் இன்று நாங்கள் தஞ்சாவூர் கலெக்டருக்கு அனுப்பிவிட்டோம்.

**பெரிய:-** (பெரிதும் வியப்படைந்து) என்ன ஆச்சரியம்! ஒரே அம்பினால் இரண்டு பட்சிகளைக் கொன்றிருக்கிறார்களே! மூளை இருந்தாலும் இப்படியல்லவா இருக்கவேண்டும்; கடிதங்களை எழுதி இங்கே வைத்துவிட்டு, தஞ்சாவூர் கலெக்டருக்கும் எழுதி யிருக்கிறார்கள் போலிருக்கிறது! இந்த மாதிரியான அற்புதத்தை நான் இதுவரையில் காதாலும் கேட்டதில்லை; பலே! பலே! (சிறிது மௌனம்) அதிருக்கட்டும்; வராகசாமி ஐயங்கார் மோட்டார் வண்டியில் அறைபட்டு வைத்தியசாலையிலிருப்பது உமக்குத் தெரியுமா?

**சஞ்சீ:-** தெரியும், அதையும் சாமாவையரிடம் கேள்விப் பட்டேன். மாமனாரின்மேல் கோபமாக வக்கீல் கடற்கரைக்குப் போனபோது வண்டி ஏறிவிட்டதென்று சாமாவையர் சொன்னார்.

**பெரிய:-** ஓகோ! உம்மிடம் ஒருவிதமாகவும், டாக்டர் துரைஸானியிடம் வேறுவிதமாகவும் சொல்லி யிருக்கிறாரோ! சரிதான்; எல்லாம் பொருத்தமாகத் தானிருக்கிறது. அது இருக்கட்டும். உம்மிடம் நான் சில ரகசியங்களைத் தெரிவிக் கிறேன்; ஆனால், நான் உத்தியோக முறையில் அவைகளைத் தெரிவிக்கவில்லை. உம்மை ஒரு நண்பராக மதித்து உம்மிடம் விஷயங்களைச் சொல்லுகிறேன். நீர் எனக்குச் சில உதவிகள் செய்ய வேண்டும். செய்வீரா?

**சஞ்சீ:-** கேவலம் சேவகனான என்னைத் தாங்கள் இவ்வளவு தூரம் மதித்து அழைத்து, சரிசமமாக உட்காரவைத்து உத்தரவு கொடுப்பதைப் பெருத்த அதிர்ஷ்டமாகவே நான்

நினைக்கிறேன். விஷயங்களை நீங்கள் சொல்லலாம்; என்னால் என்ன காரியம் ஆக வேண்டுமோ, அதை நான் உடனே செய்து முடிக்கிறேன். தங்களுக்குப் புலிப்பால் தேவையானாலும் உடனே கொண்டு வருவேன்-என்று உறுதியாகக் கூறினார்.

அந்த உறுதியான மொழியைக் கேட்ட பெரியதம்பி மரக்காயர் மிகவும் நம்பிக்கையடைந்தார்; சஞ்சீவி ஐயரோடு அரைநாழிகை வரையில் இரகசியமாகப் பேசி, மேனகாவின் பெட்டியிலிருந்து அகப்பட்ட கடிதங்கள் முதலிய பல விஷயங்களை அவரிடம் தெரிவித்து, மேல் ஆகவேண்டிய வற்றிற்கு அவரது யோசனைகளைக் கேட்டும், தமது எண்ணங்களை வெளியிட்டு மிருந்தார். முடிவாக சஞ்சீவி ஐயர், "கவலை வேண்டாம்; தாங்கள் சொன்னபடி காரியத்தை நான் நிறைவேற்றுகிறேன்" என்று உறுதியாகக் கூறிவிட்டு சலாம் செய்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். பெரிய தம்பி மரக்காயர் எழுந்து நூர்ஜஹானிடம் விரைவாகச் சென்றார்.

★★★★★★★★★

## 21 வது அதிகாரம்

## முற்றும் நனைந்தவர்க்கு ஈரமுண்டோ?

தஞ்சை போலீஸ் இன்ஸ்பெக்டரான புளுகுமலைப் பிள்ளையும் தாந்தோனி ராயரைப்போலவே, சாம்பசிவத்தின் மீது பெருத்த பகைமை கொண்டிருந்தார். அதன் காரண மென்ன வென்பதை இரண்டொரு சொற்களில் சொல்லிவிடுவோம்; பிள்ளையவர்கள் பெருத்த படிப்பாளியல்லர்; என்றாலும் அவரது கற்பனா சக்தியோ அபாரமானது; அவரது மூளையோ

மயன், விசுவகருமன் முதலிய தெய்வலோகத்தின் இஞ்சினீர்களது நிருமாணச் சக்தியைக் கொண்டது. அவர் கட்டும் கதைகளோ அரபிக் கதைகளிலும் அற்புதமான காற்று மூட்டைகள்; அவரது புத்தியும் விவேகமும், மகா தீவிரமும் கூர்மையும் பொருந்தியவை. நூலாசிரியர்கள் தமது மனோ வல்லமையால் பலவகைப்பட்ட மனிதரையும், விஷயங் களையும் சம்பவங்களையும் நிஜம்போல நிருமாணித்துக் காகிதத்தில் காட்டுவதைப் போல, பிள்ளையவர்கள் உண்மை மனிதரை எடுத்துக் கொண்டு பொய்யான விஷயங்களை சிருஷ்டித்து அதனால் பல திருவிளையாடல்கள் செய்து வந்தார். உண்மையான குற்றவாளி கச்சேரிக்கே வருவதில்லை. அவனிடம் பெருத்த அபராதத்தொகையை அவரே வசூலித்து எடுத்துக்கொள்வார். வேறு மனிதரைக் கொணர்ந்து சாம்பசிவத்தின் கச்சேரியில் நிறுத்துவார். அவரிடம் கொண்டு வரப்படும் ஆயிரம் பொய்க் கேஸ்களில் ஒன்றாகிலும் ஊத்துக்கு நிற்பதில்லை. யாவும் பொய்யாகவே புகைந்துபோம். சாம்பசிவத்தின் பகுத்தறிவின் முன் அவரது புளுகு மூட்டைகள், நீர்க்குமிழிகளைப் போல உடைந்து வெறுமையாய்ப் போவதே வழக்கமா யிருந்தது; குற்றமற்றவர்கள் யாவரும் விடுபட்டு சாம்பசிவத்தை வாழ்த்திக் கொண்டுசென்றனர். அதனால் பிள்ளையவர்கள் மேலதிகாரிகளிடத்தில் கடுமையான கண்டனங்கள் பெற்று வந்தார்; அவருக்குக் கிடைத்திருந்த கரும்புள்ளிகள் (Black Marks) சோளக்கொல்லைப்பானைகளின் புள்ளிகளிலும் அதிகமாக இருந்தன. அவரது சம்பளமோ ரூபாய் இரு நூறிலிருந்து நூற்றைம்பதாகச் சுருங்கி விட்டது. இவ்வாறு அவர் டிப்டி கலெக்டரால் பெருத்த துன்பங்களுக்கு ஆளாய் வேலையை இழக்கும் நிலைமையிலிருந்தார். ஆகையால் அவர் சாம்பசிவத்தின் மீது கடும்பகைமை கொண்டிருந்தார். பிள்ளையவர்களின் ஆத்திரம் வடவாமுகாக் கினிக்கும், நரகத்தீய்க்கும் ஒப்பிடத்தக்கதாயிருந்தது.

சாம்பசிவத்திற்கும் அவரது குடும்பத்தாருக்கும் எவ்வளவு கொடுந் துன்பங்கள் இழைக்கக் கூடுமோ, அவ்வளவையும் செய்ய பிள்ளையவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார். தமக்குத் தகுந்த துணைவரான தாந்தோனி ராயருடன் சேர்ந்துகொண்டு பல சூழ்ச்சிகளைச் செய்ய ஆரம்பித்தார். ராயர் கலெக்டர் துரையின் மனதில் பகைமையை மூட்டி சாம்பசிவத்திற்குத் துன்பங்களை உண்டாக்கினது முன்னரே தெரிந்த விஷயம். டிப்டி கலெக்டர் அவரது மைத்துனனான கிட்டன் மூலமாகவும் பலரிடம் லஞ்சம் வாங்கினா ரென்று அநேகம் சாட்சிகளைத் தயாரித்து அவர்களிடம் வாக்குமூலமும் பெற்று பெரிய கலெக்டரிடம் கொடுத்திருந்தார். கிட்டனது அறியாமையினால், கேஸ்களின் தீர்மானங்களை உணர்ந்த சேவகர்களிற் சிலர் சாம்பசிவத்தின் பெயரைச்சொல்லிப் பணம் வாங்கினதாக முன்னரே சொல்லப்பட்ட தல்லவா. அவ்வாறு பணம் கொடுத்தவர்களில் சிலரும் சாட்சி சொல்லத் தயாராக இருந்தனர்.

அந்த நிலைமையில் சாம்பசிவமும் கனகம்மாளும் பெண் காணாமல் போனதுபற்றி தந்தி வந்தவுடன் சென்னைக்குப் போன தினத்தன்று பிள்ளையவர்கள் ராயருடன் அவசரமாகத் தனிமையில் பேசவேண்டு மென்று செய்தி அனுப்பினார். ராயர் இரவு 8-மணிக்கு வருவதாகச் சேவகன் மூலமாகச் செய்தி சொல்லி அனுப்பினாரல்லவா. அவ்வாறே காலந் தவறாமல் ராயர் பிள்ளை அவர்களின் வீட்டிற்குச் சென்று, அன்று நிகழ்ந்த சம்பவங்களையும்,தாம் சாம்பசிவத்தின் விஷயத்தில் சொன்ன கோள்களையும், அதனாலுண்டான பலன்களையும் விரித்துக் கூற, புளுகும்மலைப் பிள்ளையின் மனம் குளிர்ந்தது. தங்களது பகைவரின் வீழ்ச்சியைக் குறித்து இருவரும் கரைகடந்த மகிழ்வெய்தி, அவரையும் அவரது குடும்பத்தினரையும் மிகவும் பழித்து ஏளனம் செய்து பலவாறு தூற்றி நகைத்துக் கொண்டிருந்தனர். சாம்பசிவத்தை வேலையினின்று நீக்கி

அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்புவது போதுமென்பது தாந்தோனி ராயரின் கொள்ளை. அந்தத் தண்டனை போதாதென்பது இன்ஸ்பெக்டரின் எண்ணம். சாம்பசிவத்தின் வீட்டிலிருந்த பொருளை யெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விடவும், அவரையும் அவரது வீட்டிலுள்ள தாய் மனைவி முதலியோரையும் நன்றாக அடித்து, கால்களையும் கைகளையும் ஒடித்துவிடவும் தக்க ஆட்களைத் தயாரித்து அன்றிரவு அவர்கள் அந்தக் காரியத்தை முடிக்க வேண்டுமென்று உறுதி செய்து கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். தெற்குச் சீமையின் பிரபலக் கள்ளர்களான சங்கிலி, கட்டாரி என்ற கொள்ளைக்காரர்களே அதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். அவர்களது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஜனங்கள் உளறி யடித்துக்கொண்டு ஒளிந்துபோவார்கள். உடனே ஜுரமும், சீதபேதியும் உண்டாய்விடும். அவ்விருவரும் அவ்வளவு மகா கொடிய பாதகர்கள். அவர்கள் வீட்டிற்குள்ளிருக்கும் மாடுகளை யெல்லாம் மூட்டையாகக் கட்டி கூரையின் வழியாகவே ஏற்றி வெளிப்படுத்திவிடக்கூடிய அவ்வளவு திறமை வாய்ந்த அரக்கர்கள். சமயம் நேர்ந்தால் தமது தாய்களையும், பிள்ளைகளையும், மனைவிமாரையும் ஆடுகளைப்போல வெட்டி பலியிடக் கூடியவர்கள். அவர்களிடம் தாம் செய்திருந்த ஒப்பந்தத்தை பிள்ளையவர்கள் ராயரிடம் கூற, அவர் மிகவும் சந்தோஷமடைந்து அதை ஆமோதித்தார். ஆனால், அந்தப் பெருத்த மண்டகப்படியில் சாம்பசிவத்திற்கு நிவேதன மில்லாமல் போகிறதே என்பது மாத்திரம் அவரது மனதிற்குக் குறையாக இருந்தது. என்றாலும், ராயரும் இன்ஸ்பெக்டரும் பெருமகிழ்வடைந்து அன்றிரவு இன்பக் கனவு கண்டு நன்றாக துயின்றனர்.

அன்று விடியற்காலம் மூன்று மணிக்கே தாந்தோனி ராயர் எழுந்து தமது குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு பத்து மைல் தூரத்திற்கப்பாலுள்ள சாலியமங்கலம் என்ற ஊருக்கு சர்க்கியூட்

போய்விட்டார். பொழுது விடிந்தது. டிப்டி கலெக்டர் வீட்டில் நடந்த பயங்கரமான கொள்ளையைப்பற்றி செய்தி மிகவும் சீக்கிரமாக ஊர் முற்றிலும் பரவியது. தமது ஸ்டேஷனிலிருந்த இன்ஸ்பெக்டர் புளுகுமலைப் பிள்ளை கொள்ளை நடந்ததென்பதைக் கேட்டு, வியப்பும் திகைப்பும் விசனமு மடைந்து, உடனே புறப்பட்டு டிப்டி கலெக்டருடைய வீட்டிற்கு ஓடோடியும் வந்தார்; வீட்டின் உட்புறத்தையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார். வாசலிலிருந்த காலடிச் சுவடுகளின் மீது காகிதங்களை வைத்து அவற்றின் வடிவத்தை அப்படியே சித்திரமாக எழுதிக்கொண்டார். எதிர்த்த வீட்டு ஏகப்பன், நடுவீட்டு நாகப்பன், அடுத்தவீட்டு அங்கப்பன் முதலியோரிடம் வாக்கு மூலங்களை வாங்கினார். வைத்தியசாலையிலிருந்த கிட்டன், தங்கம்மாள் முதலியோரிடம் சென்று கிட்டனிடம் வாக்குமூலம் வாங்கிக் கொண்டார். அவனது உடம்பிலும் தங்கம்மாளது உடம்பிலுமிருந்த காயங்களைப் பற்றிய விவரங்களை யெல்லாம் டிப்டி கலெக்டர் வீட்டில் நடந்த கொடிய கொள்ளையைப் பற்றி வருந்திப் பேசி வாய்ச் சொற்களாலும், கண்ணீரின் ரூபமாகவும் மிகுந்த அனுதாபத்தை ஓட விட்டார். அங்கு மிங்கும் ஓடினார். மாஜிஸ்டிரேட்டிடம் சென்று அவரைக் கட்டிக்கொண்டழுதார்; டிப்டி கலெக்டர் ஊரில் இல்லை யென்னும் சங்கதியை அறிந்த உள்ளாளின் உளவினால் அந்தக் கொள்ளை நடந்திருப்பதாகக் கூறினார். டிப்டி கலெக்டர் ரஜா வாங்கிக் கொண்டு போன விஷயம், அவரது சேவகர்களுக்கு மாத்திரமே தெரிந்ததென்றும், அவர்கள் மீது தாம் சந்தேகங்கொள்வதாகவும் கூறி சேவகர்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று விசாரணை செய்தார். சேவக ரெங்கராஜுவின் வீட்டிற் கெதிரில் அன்று பகலில் சில பள்ளர்கள் மீன் விற்றுக்கொண்டிருந்ததாக அவரது விசாரணையில் இரகசியம் வெளியாயிற்று; தஞ்சாவூர் கீழ்க்கோட்டை வாசலிலிருந்து மாரியம்மன் கோவிலுக்குப்

போகும் பாதையிலுள்ள பள்ளத் தெருவில் குடியிருந்த பதினைந்து பள்ளர்களைக் கைதி செய்து, தமது ஸ்டேஷனில் சிறைப்படுத்தி, உண்மையைச் சொல்லும்படி குட்டைத் தடியால் அவர்களது மண்டையில் மொத்தி வாயாலும் மூக்காலும் இரத்தம் கக்கும்படி அவர்களை அன்று பகல் முழுதும் மர்த்தனம் செய்து கொண்டிருந்தார். டிப்டி கலெக்டர் பலரிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு எவ்வித அனுகூலமும் செய்யாமையால், அவர்மீது ஆத்திரமடைந்த கட்சிக்காரர்கள் பள்ளர்களை விட்டு அந்தக் கொள்ளையை நடத்தி இருக்கிறார்கள் என்றும், தாம் அதற்குத் தக்க நடவடிக்கை களைச் செய்து வருவதாகவும் பெரிய கலெக்டருக்குத் தமது சப் இன்ஸ்பெக்டர் மூலமாகச் செய்தி சொல்லியனுப்பினார்.

கொள்ளையின் விவரங்களையும், தங்கம்மாள் படு வதை செய்யப்பட்டதையும் கேட்ட பெரிய கலெக்டர் துரை மிகவும் விசனித்து இரங்கினார். சாம்பசிவையங்கார் அவரது அபிப்பிராயத்தில் மிகவும் பொல்லாத துஷ்டராகத் தோன்றினா ராயினும், தமது கீழ் உத்தியோகஸ்தரான அவருக்குப் பிறர் அத்தகைய தீங்கு செய்ததைப் பொறாமல் பதைபதைத்து பறந்தார். வெள்ளைக்காரர் பெண் மக்களிடம் உண்மை யிலேயே அதிகமதிப்பும், அன்பும் வைப்பது இயல் பாதலால், தங்கம்மாளுக்கு நேர்ந்த விபத்தைக் கேட்டு துரை டிப்டி கலெக்டர் விஷயத்தில் பச்சாதாபமும், க்ஷமையும் கொண்டார். உடனே தமது பைசைக்கிலில் ஏறிக்கொண்டு வைத்திய சாலைக்குப் பறந்து சென்று, வேடனால் சுடப்பட்ட பஞ்சவர்ணக்கிளிபோல மிகவும் பரிதாபமான நிலையில் அங்கு கிடந்த வடிவழகியான தங்கம்மாளைப் பார்த்தார். அவரது மனதும் கண்களும் கலங்கின. அந்தத் துயரமான சம்பவம் அவருடைய மனதில் மாறாமல் நிரந்தரமாக பதிந்துபோனது. மிகவும் ஜாக்கிரதையாக வைத்தியம் செய்து காப்பாத்தும்படி கிட்டனிடம் வற்புறுத்திச் சொல்லிவிட்டு அவர், தமது

பங்களாவை யடைந்தார். அவர் மனதில் இரக்கமும், தயாளமும், அநுதாபமும் நிறைந்திருந்தன. அந்த நிலையில் அவர் தமது காலைத் தபால்களை உடைத்துப் பார்த்தார். தபால்களில், சென்னை போலீஸ் கமிஷனரால் அனுப்பப் பட்டிருந்த, சாமாவையர் பெருந்தேவியம்மாள் ஆகிய இருவரது வாக்குமூலமும், தந்தி உத்தரவைப் பெற்றுக் கொண்டதற்குச் சாம்பசிவம் கையெழுத்திட்ட காகிதம் முதலியவை ஒரு உறையில் இருந்தன. துரை அவற்றைப் படித்தார்; அப்போது சாம்பசிவத்தின் மீது அவ்வளவு கோபமும் அருவருப்பும் தோன்றவில்லை. அவர்மீது தாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை நிறுத்தி விடலாமா வென்று நெடுநேரம் எண்ணமிட்டார். ஆனால், தாம் முதல் நாள் இரவிலேயே சென்னை துரைத்தனத்தாருக்கு ஒரு தந்தி அனுப்பி, அதில் டிப்டி கலெக்டர் செய்துள்ள குற்றங்களையும், அதற்காக அவரைத் தாம் வேலையினின்று நீக்கி வைத்திருப்பதையும், விசாரணைகள் தீர்ந்த பின் முடிவான அறிக்கை யொன்றை அனுப்புவதாயும் எழுதி யிருந்தார். ஆகையால், இப்போது பரோபகாரத்தைக் கருதி திடீரென்று நடவடிக்கைகளை நிறுத்தி விட்டால், அது தமக்கே துன்பமாய் முடியுமென்று நினைத்தார். மிகவும் அயோக்கியமான நடத்தையுள்ள சாம்பசிவம், தாம் செய்யும் நன்மையை நினையாமல், தம்மீது திருப்பிப் பாணம் தொடுப்பாரென்றும் கலெக்டர் நினைத்து அஞ்சினார். அவர் குற்றங்களைச் செய்யும் துஷ்ட மனிதரென்பதை கலெக்டர் உறுதியாக நம்பி யிருந்தார். என்றாலும், அவருக்குண்டான பயங்கரமான ஆபத்தை நினைக்க, அவரது விஷயத்தில் பெருங்கருணை தோன்றியது. சாம்பசிவத்தின் பொல்லாத வேளையில், அவர் ரூ.200,300 தம்மிடம் பெற்றுக் கொள்ளுவதாயினும், அதைக் கொடுத்து உதவத் தயாராக இருந்தார். வேறுவிதமான எத்தகைய உதவியையும் செய்ய ஆயத்தமாக இருந்தார். ஆனால்,

சென்னை துரைத்தனத்தாருக்கு எழுதிவிட்ட விஷயத்தில் பொய்சொல்லி அதை முற்றிலும் மாற்ற அவர் விரும்ப வில்லை. மாற்றுவதும் தமக்குத் தீங்காய் முடியுமென்று நினைத்தார்; மின்னற்கொடியான தங்கம்மாளின் பொன்னைப் பழித்த மேனியில் உண்டாயிருந்த காயங்கள் யாவும் வாய் திறந்து அவருடன் பேசிக் கெஞ்சி மன்றாடி அவளது கணவனை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்வதைப் போல கலெக்டரது மனதில் தோன்றி அவரை வதைத்தமையால், தாம் அவருக்கு ஏதாகிலும் உதவி செய்ய வேண்டுமென்னும் இரக்கமும் ஒருபுறம் வதைத்தது. அவ்வாறு அன்றைய பகலையும் இரவையும் அவர் சிந்தனை செய்வதிலேயே போக்கி மறுநாள் ஒருவித முடிவுடன் விழித் தெழுந்தார். சாம்பசிவையங்காரோ கொடிய பாவங்களையும், குற்றங்களையும் செய்தவர். அவற்றின் பொருட்டு கடவுள் அவரை அந்தக் கொள்ளை யினால் மிகவும் கடுமையாகத் தண்டித்துவிட்டார். ஒரு மனிதன் அதைவிட அதிகக் கடுமையான தண்டனையை அடைய முடியாது. ஆகையால், தாம் அவரது விஷயத்தில் தம்மாலான கருணையைக் காட்டி உதவி செய்வது அவசியமென்று நினைத்தார். லஞ்சம் வாங்கின கேஸ்கள் ருஜுவாக்கப் பட்டால், அது அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பத்தக்க பெரிய குற்றமாகும். ரஜா இல்லாமல் ஊரை விட்டுப் போனதும், பொய்யான செலவுப் பட்டி தயாரித்ததும், அதன்படி பணம் வாங்கியதும் அவரை வேலையினின்று விலக்கப் போதுமான குற்றங்கள்; ஆகையால், அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பாமல் வேலையிலிருந்து நீக்குவதோடு விட்டுவிடத் தீர்மானித்தார். தவிர, அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டால், அவருடைய மனைவியின் பரிதாபகரமான நிலைமையில் அவளை ஆதரித்துக் காப்பாற்ற மனிதரில்லாது போவதைக் கருதியும், அவரை வேலையினின்று நீக்குவதோடு விட்டு விடத் தீர்மானித்தார். கலெக்டர், துரைத்தனத்தாருக்கு எழுதி அனுப்பிய தந்தியில் சாம்பசிவையங்கார் லஞ்சம்

வாங்கியதாக யூகிக்க இடமிருக்கிறதென்று சந்தேகமாக எழுதியிருந்தாரேயன்றி அதை உறுதியாக எழுதவில்லை; ஆகையால், அது மாத்திரம் ருஜுவாகவில்லையென்று நழுவ விட்டுவிடுவது அவருக்கு எளிதாகத் தோன்றியது. இந்நினைவுகளுக்கிணங்க, சாம்பசிவத்தின் மீது முடிவான குற்றப்பத்திரிகையைத் துரை உடனே தயாரித்தார். அதில் அடியிற் காணப்பட்ட குற்றங்களைக் குறித்தார் :-

1) நான்கு நாட்களுக்கு முன் அவர் ரஜா இல்லாமல் சென்னைக்குப் போனது. (இதற்குச் சாட்சியம்; பெண்ணை அழைத்து வந்ததாக சென்னையிலிருந்து வந்த தந்தி, பெருந்தேவியம்மாள் சாமாவையர் ஆகிய இருவரது வாக்கு மூலம்)

2) அன்றைய தினம் அம்பாள் சமுத்திரம் முதலிய ஊர்களில் இருந்ததாக பொய்யான செலவுப்பட்டி தயாரித்து சர்க்கார் பணத்தைப் பெற்றுக்கொண்டது. (இதற்குச் சாட்சியம்; செலவுப்பட்டியும் மேற்கண்ட தஸ்தாவேஜுகளும்)

3) முதல்நாள் தாம் ரஜாக் கொடுக்க மறுத்திருந்தும், அந்த உத்தரவை மீறி சென்னைக்குப் போனது. (இதற்குச் சாட்சியம்; சென்னையில் போலீஸ் கமிஷனர் முன் கையெழுத்திட்ட காகிதம்)

இம் மூன்று குற்றங்களுக்காகவும் சாம்பசிவத்தை ஏன் வேலையிலிருந்து அறவே நீக்கிவிடக் கூடாதென்பதற்குத் தக்க முகாந்திரங்களை இரண்டு நாட்களுக்குள் அவர் எழுதி யனுப்ப வேண்டிய தென்று கலெக்டர் குற்றப்பத்திரிகை தயாரித்து வைத்துக்கொண்டு சென்னையிலிருந்து சாம்பசிவத்தின் வருகையை எதிர்பார்த்திருந்தார்.

இங்கு நிலைமை இப்படியிருக்க, சென்னையிலிருந்து புறப்பட்ட சாம்பசிவமும் கனகம்மாளும் பித்தமும் பேயும்

கொண்டவரைப் போல தலைவிரிகோலமாக தஞ்சை ரயிலடியி லிறங்கி, ஒரு குதிரை வண்டியி லேறிக்கொண்டு காற்றாகப் பறந்து ஓடிவந்து தமது வீட்டை யடைந்தனர்; அவர்கள் தங்களது உடம்பையும், மற்ற எல்லாவிதமான கவலைகளையும், உலகத்தையும் மறந்தவர்களாய், தங்கம்மாள் உயிருட னிருக்கிறாளோ, அன்றி இறந்து போய்விட்டாளோ என்ற ஒரே கவலையைக் கொண்டு அவளைப் பார்க்கவேண்டு மென்னும் ஆவலொன்றினாலேயே தள்ளப்பட்டு வந்து சேர்ந்து வீட்டின் வாசலில் வண்டியைவிட்டிறங்கினர். திண்ணையில் சேவகர் ஒருவரேனும் காணப்படவில்லை. வெளிக்கதவு தாளிடப் படாமல் வெறுமையாக மூடப்பட்டிருந்தது. அதைத் திறந்து கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்து தாழ்வாரம், கூடம், அறைகள், மேன்மாடி முதலிய எல்லா இடங்களிலும் புகுந்து புகுந்து தேடினர். மனிதருக்குப் பதிலாக கம்பங்களும், சாமான்களுக்குப் பதிலாக வெறுவெளியும் காணப்பட்டன வன்றி அசையும் பொருட்கள் ஒன்றும் காணப்படவில்லை. அது ஒழித்து விடப்பட்ட காலி வீட்டைப்போலிருந்தது. எங்கும் இரத்தக் குறிகள் காணப்பட்டன; அவைகளைக் காண இருவருக்கும் மூளை குழம்பியது. பெருங் கலக்க மடைந்து செய்யவேண்டுவதை அறிய மாட்டாமல் திகைத்து வாசலி லிருந்த வண்டியடியில் வந்து நின்றனர். அவர்களைக் கண்டு இரக்கங்கொண்ட எதிர்த்த கடையின் சொந்தக்காரன் எழுந்து ஓடிவந்து அவர்களிடம் விவரங்களைச் சொல்லி, தங்கம்மாள் வைத்தியசாலையில் இருப்பதாகக் கூற, அவர்கள் உடனே வண்டியில் ஏறிக்கொண்டு வைத்தியசாலையை யடைந்து, வண்டியை விட்டிறங்கி உட்புறம் நுழைந்தனர். அங்கிருந்த ஓரறையின் வாசலில் கிட்டனும், ரெங்கராஜுவும் மிகுந்த விசனத்தோடு இருக்கக் கண்டனர். அப்போது அவர்கள் தாம் எந்த உலகத்தில் இருக்கின்றோம் என்பதை மறந்தனர்; இருதிறத்தார்களும் ஒருவரை ஒருவர் கண்ட காட்சி, பிரிந்து போன கன்றும் தாயும் கூடியதைப் போல இருந்தது.

இருதிறத்தாரின் தேகங்களும் பதறின; இருதிறத்தாரும் கண்ணீர்விட்டு விம்மி விம்மிப் பொருமினர்.

சாம்பசிவம் தஞ்சைக்கு வந்த தொடக்கத்தில் ரெங்கராஜுவை வைததும், அடித்ததும், தெரிந்த விஷயம். அதன் பிறகும் அவர் முன் கோபத்தைக் காட்டிப் பேசுவதே வழக்கம். என்றாலும், ரெங்கராஜு மிகவும் நற்குணமும் விவேகமும் உள்ள மனிதன். அவன் டிப்டி கலெக்டரது குடும்பத்தில் பழகப் பழக அவர்களது பெருந்தன்மை, உள்ளார்ந்த குணம், அன்பு, நீதிநெறி தவறாத சீலம் முதலியவற்றைக் காணக் காண அவன் சாம்பசிவத்தினிடமும் மற்றையோரிடமும் ஆழ்ந்த அபிமானமும், வாஞ்சையும் வைத்து அவர்கள் பொருட்டு தனது உயிரையும் கொடுக்கக் கூடியநிலைமையில் இருந்தான். திடீரென்று கொள்ளை நடந்ததையும், டிப்டி கலெக்டர் வேலையிலிருந்து நீக்கப் பட்டதையும் கேட்ட ஏனைய சேவகர்களும் ஜனங்களும் டிப்டி கலெக்டரைப்பற்றி பலவாறு தூற்றிப் பேசிப் புரளி செய்தனர். அவரது வீட்டில் காவல் காத்திருந்த சேவகர்கள் யாவரும் அதை விட்டுக் கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தனர். ரெங்கராஜு ஒருவனே, கிட்டன் தங்கம்மாள் முதலியோரது காயங்களைக் கட்டி, அவர்களுக்குரிய அவசர சிகிச்சைகளைச் செய்தான்; உடனே தனது வீட்டிற்கு ஓடி தனது மனைவியின் தாலிக்கு இரு புறங்களிலுமிருந்த மணிகளைக் கழற்றி அடகு வைத்துப் பணம் வாங்கி வந்து தந்தியடித்ததன்றி, அவர்களுக்குத் தேவையான உடைகளையும் கொணர்ந்து கொடுத்தான்; தங்கம்மாளை வைத்தியசாலைக்கு எடுத்து வந்து சிகிச்சை செய்வித்து, தண்ணீர் கூட அருந்த மனமற்றவனாய் பதைபதைத்து கிட்டனுடன் கூட வாசலிலேயே இருந்தான்; சாம்பசிவம், கனகம்மாள் ஆகிய இருவரையும் கண்டவுடன் பதறி எழுந்து கண்ணீர் விடுத்தான்; கனகம்மாளைப் பார்த்து, “பாவிப்பயங்க எஜமானியம்மாளே அடிச்சுப்புட்டாங்க, பெரியம்மா!” என்று

வீறிட்டுக் கூற, அவனது பரிதாபகரமான குரலானது, அவர்களது மனதில் அம்பைப்போல சுருக்கென்று தைத்தது. இருவரும் நெருப்பின் மீதிருப்பவரைப்போல தத்தளித்தனர். உடனே கனகம்மாள், "அவள் எங்கே இருக்கிறாள்?" என்ற கேட்க, அவன் அவ்விருவரையும் அருகிலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றான். அங்கு தங்கம்மாள் ஒரு கட்டிலின் மீது கிடத்தப் பெற்றிருந்தாள். செவிகள், நாசி, சிரம், கைகள், கால்கள் முதலிய இடங்களில் பெருத்த இரணக்கட்டு களிருந்தன. அவள் கண்களைத் திறவாமல் உணர்வற்று, அசைவற்றுக் கிடந்தாள். அவளைக் கண்ட இருவரும் ஆவலோடு பாய்ந்து ஓடிக் கட்டிலையடைந்து அவளை உற்று நோக்கினர். அதற்குள் கிட்டன் தனது வாயில் கையை வைத்து மூடி தங்கத்திற்கருகில் பேசவேண்டாமென்று சைகை செய்தான்; டாக்டர் துரை அவ்வாறு உத்தரவு செய்திருப்பதாகத் தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கூறினான். என்றாலும், கனகம்மாள் தனது ஆத்திரத்தில் எதையும் கவனியாமல், தங்கம்மாளின் மார்பு, கை, கால் முதலிய இடங்களை அன்போடு தடவிப் பார்த்தாள். உடம்பில் சூடுமில்லை, குளிர்ச்சியுமில்லை, ஹிருதயத்தின் அடிப்பும் காணப்படவில்லை, சுவாசம் வெளிப்பட்டதும், உட்சென்றும் புலப்படவில்லை. அவளது உடம்பில் உயிரிருந்ததா இல்லையா என்பது தோன்ற வில்லை; மிகவும் சந்தேகித்த கனகம்மாள் கிட்டனைப் பார்த்துத் தணிவான குரலில், "இவள் பேசவே இல்லையா?" என்றாள்; "ஆம்; ராத்திரி அடிபட்ட முதல் இப்படியே இருக்கிறாள்; கண்ணைத் திறக்கவுமில்லை; பேசவுமில்லை; அசையவுமில்லை; மூச்சு விடவுமில்லை" என்றான் கிட்டன். அதைக் கேட்ட அவ்விருவரும் திகைத்து அப்படியே திக்பிரமை கொண்டனர். மூன்று நாட்களாக ஆகாரம், தண்ணீர், துயில், ஓய்வு முதலிய எதையும் கொள்ளாமையாலும், சென்னையில் பயங்கரமான பல சம்பவங்களிற் பட்டு தத்தளித்து வந்தமையாலும்,

அவர்களது நிலைமை விவரிக்க வொண்ணாததாயும், மனிதரால் ஒரு நொடியேனும் சகிக்க வொண்ணாததாயும் இருந்தது. மனமோ பெரும் புண்ணாக இருந்தது. தேகமோ கட்டிற் கடங்காமல் பறந்தது. கீழே குனிந்து நிமிர்வார் களானால், கண்கள் இருண்டன; மயங்கி விழுந்து தட்டுத் தடுமாறி சுவரைப் பிடித்துக் கொள்ளும் நிலைமையிலிருந்தனர். தங்கம்மாளின் கோரமான தோற்றத்தைக் காண, இருவரும் தள்ளாடிக் கீழே வீழ்ந்துவிடும் தருணத்தில் இருந்தனர். கனகம்மாள் மாத்திரம் தமது அன்பின் பெருக்கினால் சிறிது சமாளித்துக் கொண்டாள். சாம்பசிவம் இடுப்பொடிபட்ட வரைப்போல கீழே உட்கார்ந்துவிட்டார்; உட்கார்ந்தவர் பேசும் வல்லமையற்று ஊமையனைப்போல மாறி உருட்டி உருட்டி விழித்துக்கொண்டு பைத்தியக்காரனோவென்னும்படி யிருந்தார். தேகம் நெருப்புக் குவியலானது. தாம் இருந்தது ஆகாயமோ பூமியோவென்பது தோன்றவில்லை. கனகம் மாளோ தன்னையும் தானிருக்கும் இடத்தையும் மறந்து நாட்டுப்பெண்ணின் உடம்பை அன்போடு தடவிக்கொடுத்த வண்ணம் கண்ணீர் பெய்து கரைந்து பிரலாபித்து அழத் தொடங்கினாள். "ஐயோ! என் கண்ணே! உனக்கும் இந்த கதி வந்ததா! என் குடியை விளக்க வந்த மஹா லக்ஷ்மியல்லவா நீ! உன்னைப் போன்ற நாட்டுப் பெண்ணை நான் இனி பெறுவேனா! என் தங்கமே! உன் வாயை இனி திறப்பாயோ திறக்க மாட்டாயோ! அத்தனையும் தங்கமல்லவா நீ! என் ராஜாத்தி! உன்னை அருந்ததி யென்றாலும் தகுமே! அடி உத்தமியே! உன்னை அடித்தவன் வீடு இந்நேரம் பாழாய்ப் போயிராதா! அவன் குடும்பம் ஏழேழு தலைமுறைக்கும் நசித்து நரகத்தில் வசிக்காதா? ஆகாசத்திலுள்ள இடிகளெல்லாம் அவர்கள் தலையில் விழாதா? என் கண்ணே! என்னப்பா! என் துரை சிங்கத்துக்கு வந்து வாய்த்த மகா லக்ஷ்மியே! ஐயோ! என் குடியைக் கெடுத்து வடுவாயோ! என் வீட்டு விளக்கை அவித்து விடுவாயோ! என் பாக்கிய லக்ஷ்மியை அழைத்துக்

கொண்டுபோய் விடுவாயோ! என் பிள்ளை கூட என்னிடத்தில் அவ்வளவு பிரியமும் மரியாதையும் வைக்கவில்லையே! எத்தனை ஜென்மமெடுத்தாலும், என்ன தவம் செய்தாலும் உன்னைப் போன்ற நாட்டுப் பெண் எனக்கு வருவாளா! பாவியாகிய எனக்கு நல்லது நிலைக்காதோ! கிழவியான என்னை அந்த எமன் கொண்டு போகக்கூடாதா! பட்டணத்தில் குழந்தையைப் பறி கொடுத்தோம்! இங்கே உன்னைப் பறி கொடுத்தோம்! இனி நாங்கள் ஒரு நிமிஷமும் உயிரோ டிருப்போ மென்று நினைக்காதே!" என்று பிரலாபித்து தேம்பித்தேம்பி யழுது அனலிடு மெழுகாய் உருகினாள். அதைக் கண்ட சாம்பசிவம், கிட்டன், ரெங்கராஜு முதலிய யாவரும் தம்மை மறந்து ஓவெனக் கதறி அழத்தொடங்கினர். அது வைத்தியசாலை யென்பதையே அவர்கள் மறந்து விட்டனர். அந்தப் பெருத்த கூக்குரல் நெடுந்தூரம் கேட்டது.

அடுத்த நிமிஷத்தில் பெரிய டாக்டர் துரை, "என்ன இது? என்ன இது?" என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்து, அவர்களது அழுகைக்கு சடக்கென்று முற்றுப்புள்ளி வைத்தார்; என்றாலும் டிப்டி கலெக்டர் அவ்வூரில் முக்கியமான உத்தியோகஸ்தராதலாலும், அவரது துக்ககரமான விபத்தைக் கருதியும் டாக்டர் அவர்களைக் கண்டியாமல் டிப்டி கலெக்டருக்கு வந்தனம் செலுத்தினார். சாம்பசிவமும் டாக்டருக்கு வந்தனம் செய்து, தமது மனைவியின் கதி எப்படி முடியுமென்று கேட்டார். துரை மிக்க இரக்கமான குரலில், "ஐயா! தங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி நான் மிகவும் விசனமடைகிறேன். தங்கள் மனைவியின் தேகநிலைமை முற்றிலும் நம்பிக்கையற்றதாயிருக்கிறது. திருடர் முரட்டுத் தனமாகப் பல விடங்களில் அடித்துவிட்டார்கள். அதனால் மார்பில் இரண்டு எலும்புகள் முறிந்துபோய் ஹிருதயத்தில் குத்திக்கொண்டிருக்கின்றன. மார்பைக் கீறி ஆபரேஷன் செய்து அந்த எலும்புகளை மிகவும் சாமர்த்தியமாக எடுத்தா லன்றி,

தங்களுடைய சம்சாரம் பிழைப்பது கடினம். இன்று மாலைக்குள் ஸ்மரணையை நான் திரும்பித்தருகிறேன். மார்பைக் கீறி உட்புறத்தை ஒழுங்குபடுத்தி, திரும்பவும் தைப்பது எளிய காரியமல்ல. அதில் அற்பமான தவறு ஏற்பட்டாலும் உடனே மரணம் நேருவது திண்ணம். அந்த அபாயகரமான வேலை எல்லோராலும் செய்யத்தக்கதல்ல. கைதேர்ந்த நிபுணர்களாலேயே அதை நாம் செய்விக்க வேண்டும். உண்மையை மறைப்பதில் பயனில்லை. அந்த அரிய காரியத்தைச் செய்வதில் எனக்கு அவ்வளவாக பழக்க மில்லை. இங்கே எனக்குக் கீழிருக்கும் இரண வைத்தியர்கள் ஆட்டை அறுப்பதற்கே தக்கவர்கள். அந்த அபாயகரமான காரியத்தை அவர்களிடம் ஒப்படைப்பது ஆபத்தாகும்; சென்னை **புரசைப் பாக்கத்தில் டாக்டர் வில்லியம்ஸ்** என்ற பெயருடைய துரை ஒருவர் இருக்கிறார். அவர் இந்த விஷயத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற மேதாவி; வேறு பலரிடத்திற்குப் போய் வீண் காலதாமதம் செய்ய வேண்டாம். உடனே அவரிடம் கொண்டு போவீர்களானால், அவர் ஒரு நொடியில் குணப்படுத்தி விடுவார். ஆனால் அவர் அதிகமாகப் பணம் கேட்கக் கூடியவர். இந்தக் காரியத்துக்கு அவர் குறைந்தது முன்னூறு ரூபா கேட்பார். அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை அவரிடம் சேர்ப்பித்தால், அவர் அதிகமான சிரத்தை எடுத்துக் கொண்டு இந்தக் காரியத்தை முடிப்பார்; இருநூறு ரூபாய் பெற்றுக்கொள்வார்" என்றார். அப்படியே செய்வதாக சாம்பசிவம் ஒப்புக்கொண்டார்; உடனே டாக்டர், "சரி; மாலையில் ஏழு மணிக்குப் புறப்படும் வண்டியில் இன்றைக்கே போங்கள். போகும்போது நான் கடிதம் தருகிறேன்; நீங்கள் இவ்விடத்திலிருந்து நோயாளியை அலட்டுதல் கூடாது. சாயுங்காலம் வரையில் வெளியிலே போயிருங்கள்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு அப்புறம் சென்றுவிட்டார். பிறகு சேவகன் ஒருவன் வந்து, "சுவாமிகளே!

தயவு செய்து வெளியில் வந்துவிடுங்கள்; கதவை மூடவேண்டும்" என்று நயமாகக் கூறினான். நால்வரும் அரை மனதோடு வெளியில் வந்தனர்; உடனே கதவும் சாத்தி மூடப்பட்டது.

வெளியில் போடப்பட்டிருந்த ஒரு விசிப்பலகையில் சாம்பசிவம் ஒய்ந்து உட்கார்ந்து கொண்டார். கனகம்மாள் தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள். கிட்டனும், ரெங்கராஜுவும் சிறிது தூரத்தில் நின்றார்கள். யாவரும் கால் நாழிகை நேரம்வரையில் என்ன பேசுவதென்பதையறியாமல் ஏக்கங்கொண்டு திகைத்து உட்கார்ந்து விட்டனர். எதற்கும் அஞ்சாத தீரரான சாம்பசிவம் செயலற்று தமது பெருமையை இழந்து ஒரே நாளில் சாதாரண மனிதராய் மாறி, பெருத்த துன்பங்களுக்கும் துயரத்திற்கும் ஆளாய், ஓய்ந்து பரதேசியைப் போல உட்கார்ந்திருந்ததைக் காண, ரெங்கராஜுவின் மனம் பதறியது. அவன் உள்ளத்திலிருந்து பொங்கி யெழுந்த பல உணர்ச்சிகளால் அவனது கண்ணிமைகள் உதடுகள் முதலியவை காற்றிலசையும் மாந்தளிர்போலத் துடித்தன. சாம்பசிவமும் கனகம்மாளும், பல நாட்களாக போஜனம் செய்யவில்லை யென்பதை அவர்களது விகாரமான தோற்றமே எளிதில் காண்பித்தது. ரெங்கராஜு கனகம்மாளை நோக்கிப் பணிவாக, "பெரியம்மா! பட்டணத்தில் குழந்தை சவுக்கியமா?" என்று அந்தரங்கமான அபிமானத்தோடு கேட்டான். அவன் அன்பின் பெருக்கினால் கேட்ட கேள்வி அவர்களுக்குப் பெருத்த துன்பமாய் முடிந்தது. சிலநாழிகையாக மறந்திருந்த சென்னையின் நினைவு அவர்களிருவரது மனதிலும் உடனே திரும்பிவிட்டது; முதல் நாள் சம்பவித்த விஷயங்கள் யாவும் அப்போதே கண்ணெதிரில் நடப்பனபோல் அவர்களுக்குத் தோன்றின; அப்படியே மெய்ம்மறந்து கல்லாய்ச் சமைந்து போயினர்; தனது கேள்விக்கு மறுமொழி இல்லாது

போனதைக் கண்ட ரெங்கராஜு, சென்னையில் பெண்ணின் நிலைமையும் சரியாக இல்லையென்று யூகித்துக் கொண்டான். அவர்களது முகவாட்டத்தையும், மிதமிஞ்சிய அயர்வையுங் கண்ட நற்குணம் பெற்ற அந்தச் சேவகன், அவர்கள் போஜனம் செய்யவில்லை யென்பதை கிட்டனிடம் சைகையின் மூலமாகக் காட்டினான். கிட்டன், "பாட்டீ! நீங்கள் இன்னம் பல்கூடத் தேய்க்கவில்லைபோலிருக்கிறதே. நாம் அகத்துக்குப் போய்விட்டு வருவோமே. சாயுங்காலம் வரையில் தான் நம்மை உள்ளே விடமாட்டார்களே. இங்கே நாமென்ன செய்யப்போகிறோம்?" என்றான். அவர்களிருவரும் அப்போது ஆகாரத்தையும், தமது உடம்பையும், உலகத்தையும் மறந்து, தங்கம்மாள், மேனகா, வராகசாமி ஆகிய மூவரின் வடிவங்களையே மனதில் கொண்டிருந்தனர். ரெங்கராஜுவின் கேள்விக்கும், கிட்டனது பிரரேபணைக்கும் கால் நாழிகை வரையில், எவ்விதமான மறுமொழியும் கிடைக்கவில்லை. பிறகு கனகம்மாள் திடீரென்று தனது சுய உணர்வைப் பெற்று சாம்பசிவத்தை நோக்கி, "ஏனடா! உன் கையில் எவ்வளவு பணம் மிகுதி இருக்கிறது?" என்றாள். அவர் தமது பையிலிருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்து ரூபா 87-5-0 இருக்கிற தென்றார். உடனே கனகம்மாள், "சரி; இன்று நாம் ரயிலேறுவதற்குள் ரூபா முன்னூறாவது வேண்டுமே; அதற்கென்ன வழி?" என்றாள். தலையை நிமிர்த்திய சாம்பசிவம் உடனே கீழே குனிந்து யோசனை செய்தார். மூன்றாம் நாள் மாலையில் அவருடைய வீட்டில் இருந்த பணம், நகைகள், உடைகள், சாமான்கள் முதலியவற்றின் பெறுமானம் இருபதினாயிரத்திற்கு மேலிருக்கும். அவ்வளவு பொருட்களும் கொள்ளைகாரர்களால் அபகரிக்கப்பட்டுப் போயின. அவரது தகப்பனாரது காலத்திலிருந்த நிலம் வீடு முதலியவற்றை விற்று, அவற்றைக் கொண்டே அவர் கல்வி கற்றுக்கொண்டாராதலின், அவருக்குப் புராதன பொருள்

ஒன்றும் கிடையாது. ஆனால், ஒரு ஜீவாதாரநிதியில் (Life Insurance Fund)அவர் பணம் செலுத்திக்கொண்டு வந்திருந்தார். அவருக்கு 50-வயதாகும் போது அதிலிருந்து முப்பதினாயிரம் ரூபா கிடைக்கும். ஆனால், அவருடைய வயது இன்னம் அவ்வளவு ஆகவில்லை. அந்த நிதியிலிருந்து அவசர நிமித்தம் ஏதாவது சொற்பத் தொகையைக் கடனாக வாங்க அவருக்கு உரிமை யிருந்தது. ஆனால், அந்த நிதியின் நிருவாகஸ்தரால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பத்திரமும் மற்றப் பொருட்களுடன் களவாடப்பட்டுப் போனமையால், அதை அடமானம் வைத்துக் கடன் வாங்குவதும் கூடாமல் போய்விட்டது. ஆகையால், சாம்பசிவையங்காரின் அப்போதைய பெறுமானம் ரூபா 87-5-0 தான். அவ்வளவு சொற்ப காலத்தில் தாம் ஏழையிலும் பரம ஏழையாய்ப் போனதை நினைத்து, "ஆகா! பண மில்லாதவன் பிண மென்பது இப்போது நன்றாகத் தெரிந்தது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை, அருளில் லார்க்கு அவ்வுலகமில்லை என்றவர் பரமஞானி யல்லவா; அவர் சொன்னது ஒரு நாளும் பொய்யாகாது" என்று நினைத்து ஏங்கி உட்கார்ந்துவிட்டார். ஆனால், உண்மையில் அவரது நிலைமை அவ்வளவு கேவலமான தன்று, கனகம்மாளுக்கு அவளது தந்தையால் மஞ்சற் காணியாகக் கொடுக்கப்பட்ட நிலமும் வீடும் இருந்தன. அவை இரண்டும் எண்ணாயிரம் ரூபா பெறும். ஆனால், அவை செங்கற்பட்டிற்கு மேற்கில் பதினைந்து மைல் தூரத்திற்கு அப்பாலிருந்த பகற் கொள்ளைப்பாக்கம் என்னும் ஊரிலிருந்தன. அவை தமக்குச் சொந்த மல்ல வாதலால் சாம்பசிவத்திற்கு அவற்றின் நினைவு உண்டாக வில்லை. தாம் செய்ய வேண்டுவதைப்பற்றி கனகம்மாளது மனதில் முன்னரே தீர்மானம் ஏற்பட்டு விட்டது. தனது நிலத்தையும் வீட்டையும் அந்த அவசரத்திற்கு விற்க முடியாதாயினும், அவற்றை அடமானம் வைத்தாகிலும் ஆயிரம் ரூபா வாங்கித் தமது

அவசரமான செலவுகளுக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவள் தீர்மானம் செய்து கொண்டாள். ஆனால், சாம்பசிவம் அதை நினைக்காமல், வேறு எவரிடமாயினும் கைமாற்றாக வாங்கலாமா என்று நினைத்துப் பார்த்தார். அவருக்குப் பணம் கொடுக்கக் கூடியவராக ஒருவரும் காணப்படவில்லை. அந்த நிலையில் அவருக்கு அவரது மாமனாரின் நினைவு வந்தது. அவர் தஞ்சைக்கு ஐந்தாறு மைல் வடக்கிலிருந்த தில்லை ஸ்தானம் என்னும் ஊரிலிருந்த ஒரு வைதிகப் பிராம்மணர். அவரது புத்திரனான கிட்டன் நெடுங்காலமாக இவர்களது வீட்டில் வளர்ந்து வந்தா னென்பது தெரிந்த விஷயமல்லவா? அந்த வைதிகரிடம் நிலத்தைத் தவிர பணமாகவும் நகைகளாகவும் ரூபா இரண்டாயிரத்திற்குச் சொத்து இருந்தது சாம்பசிவம், கிட்டன் முதலிய யாவருக்கும் தெரியும்; பொதுவாக தமது பெண்ணான தங்கம்மாளிடம் அவருக்கு அவ்வளவு உள்ளார்ந்த அபிமானம் இருந்ததாக அவர் அது வரையில் காட்டிக் கொண்டதில்லை; பெண்வீட்டிலிருந்து ஏதாகிலும் பொருளை அப்போதைக்கப்போது அபகரித்துக் கொண்டு போவதில் அவர் கண்ணுங்கருத்துமா யிருந்தாரன்றி, பெண்ணிடத்தில் ஒரு அன்பான மொழியையும் வழங்கி யறிந்தவரன்று. என்றாலும் தமது பெண்ணுக்கு வந்துள்ள பிராணாபாயமான அந்தப் பெருத்த ஆபத்துக்காலத்தில் அவர் அவசியம் இரக்கங்கொள்வாரென்று சாம்பசிவம் நினைத்தவராய், கிட்டனை நோக்கி, "ஏனடா இந்தச் சங்கதியைப் பற்றி தில்லை ஸ்தானத்துக்கு எழுதினாயா?" என்றார். "ஆம்; உடனே புறப்பட்டு வரும்படி கடிதமெழுதி ஓர் ஆளிடம் நேற்றைக்கே அனுப்பினேன்; என்னவோ அவர் இன்னம் வரவில்லை; வேண்டுமானால் நான் நேரில் போய் அவரையும் அழைத்துக்கொண்டு நானூறோ, ஐந்நூறோ கிடைக்கக்கூடிய பணத்தையும் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றான். சாம்பசிவம் அதில் உண்மையில் நம்பிக்கை

வைத்தார். கனகம்மாளுக்கு அந்தக் கிழவரது குணம் நன்றாகத் தெரியும்; அந்த ஆபத்துக் காலத்தில் பணச்செலவாகுமென்று கருதியே அவர் வரவில்லையென்று கனகம்மாள் யூகித்துக் கொண்டாள்; எனினும் அவள் தனது மனதை வெளியிட வில்லை. ஏனெனில், அவரிடமிருந்து ஒருகால் தெய்வச் செயலாகப் பணம் கிடைத்துவிடுமானால், தங்கம்மாளது காரியத்தைத் தாமதமின்றி நடத்தலாமென்று நினைத்தே மௌனம் சாதித்தாள். அவர்களிருவரும் தனது பிரரேபணையை ஆமோதிப்பதாக நினைத்த கிட்டன், தான் போய் விட்டு வருவதாகக் கூறிவிட்டு வெளியிற் சென்று ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு வேகமாய் போய்விட்டான். உடனே ரெங்கராஜு, "பெரியம்மா! எஜமான் ரொம்பவும் களைப்பா யிருக்கிறாங்க; இங்கே நாம்ப சும்மாத்தானே இருக்கப்போறோம்; ஊட்டுக்குப் போயி பூசையை முடிச்சுக்கிட்டு வந்துடலாமே; எஜமான் பசி தாங்க மாட்டாங்கம்மா!" என்று உருக்கமாக மிருதுவாய்க் கூறினான். அதைக் கேட்ட கனகம்மாளின் மனதிலும் இனி சாம்பசிவத்தைப் பட்டினியா யிருக்க விடுவது தவறென்பது தோன்றியது; "சரி; நாம் அகத்துக்குப் போய்விட்டு வந்து விடுவோம்; குதிரை வண்டி கொண்டுவா!" என்றாள். அடுத்த நிமிஷம் வண்டி வந்து நின்றது; மூவரும் அதில் ஏறிக்கொண்டு வீட்டை அடைந்தனர்.

உடனே வேலைக்காரி புரோகிதர் முதலியோர் வரவழைக்கப் பட்டனர்; வேலைக்காரி வீட்டை மெழுகிச் சுத்தி செய்தாள்; புரோகிதர் புண்ணியாகவாசனம் செய்தார்; அதற்குள் சாம்பசிவத்தினிடம் ரூபா பத்தை பெற்றுக்கொண்டு போன ரெங்கராஜு தேவையான பாத்திரங்கள், சாமான்கள் முதலியவற்றைக் கொணர்ந்து நிரப்பினான். இருவரும் ஸ்நானம் செய்து கொண்டனர். கால்நாழிகையில் சமையல் சாப்பாடு முதலியவை முடிந்தன; இருவரும் சிறிது நேரம்

ஒய்ந்து உட்கார்ந்தனர். அப்போது பகல் மணி இரண்டாயிற்று; கிட்டன் வியர்த்து விருவிருத்த மேனியோடு விரைவாக உட்புறம் நுழைந்தான். இருவரும் அவனது முகத்தை நோக்கினர். அது விசனத்தையும், வெட்கத்தையும் காட்டியது. கனகம்மாள், "என்ன சங்கதி?" என்றாள். கிட்டன், "பணமில்லை" என்று உதட்டைப் பிதுக்கினான். "அவர் வரவில்லையா?" என்றார் சாம்பசிவம். "அவர் ஏன் வருவார்? பணத்தாசை பிடித்த மனிதனுக்குப் பெண்ணேது? பிள்ளையேது? இங்கே பெண் ஏதாவது கொடுப்பதனால் வாங்கிக் கொண்டு போக வருவார்" என்றான். அதைக் கேட்ட சாம்பசிவம், "பெண்ணைப் பெற்ற தகப்பன் அப்படியும் கிராதகனா யிருப்பானோ!" என்று நினைத்து வியப்பும் திகைப்பும் அடைந்து அசைவற்று, சித்திரப் பதுமைபோல அப்படியே உட்கார்ந்து போனார். கனகம்மாள் அதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைகொள்ளாமல், "போனால் போகிறது; நீ குளித்துவிட்டு சாப்பிட வா!" என்று கூறினாள். அவனும் முதல் நாளிலிருந்து பட்டினியிருந்தவனாதலால் உடனே ஸ்நானத்திற்குச் சென்றான், சிறிது நேரத்தில் அவனுடைய சாப்பாடும் முடிந்தது.

உடனே கனகம்மாள் சாம்பசிவத்தைப் பார்த்து, "அப்பா! ஏன் கவலைப் படுகிறாய்? தலைக்குமேல் வெள்ளம் போகுமானால், முழம் போனாலென்ன? சாண் போனாலென்ன? எல்லாம் போய்விட்டது; இனி ஏன் கவலை? என் பேரிலிருக்கும் நிலத்தையும் வீட்டையும் அடமானம் வைத்து ரூபா ஆயிரம் வாங்கிக்கொண்டு வா; உத்தியோகம் இனி திரும்ப வரும் வரையில் நம்முடைய செலவுக்குப் பணம் வேண்டும்; பட்டணத்தில் வைத்தியச் செலவு, படிச் செலவு எவ்வளவு ஆகுமோ; எல்லாவற்றிற்கும் கையில் ரூபா ஆயிரம் இருக்க வேண்டும்" என்றாள். சாம்பசிவம் திகைத்து, "எப்போது ஊருக்குப் போகிறது? கடன் வாங்க சாவகாசம் எங்கே இருக்கிறது?" என்றார்.

**கனகம்மாள்:-** நாமெல்லோரும் தங்கம்மாளை எடுத்துக் கொண்டு சாயுங்கால வண்டியில் பட்டணம் போவோம். நீ செங்கற்பட்டில் இறங்கி, பொழுது விடியுமுன் கிராமத்துக்குப் போய் நாட்டுக்கோட்டை நீலகண்ட செட்டியாரிடம் அடமானம் வைத்து உடனே பணத்தை வாங்கிக்கொண்டு நாளை சாயுங்காலம் பட்டணத்துக்கு வந்துவிடு. நான் டாக்டரிடம் தங்கம்மாளைக் கொண்டுபோய், "இதோ பணம் வருகிறது" என்று சொல்லி ஆபரேஷன் செய்யச் சொல்லுகிறேன்.

**சாம்ப:-** அது நல்ல யோசனைதான். ஆனால், அதில் ஒரு இடைஞ்சல் இருக்கிறது.

**கனக:-** என்ன இடைஞ்சல்?

**சாம்ப:-** நிலம் வீடு முதலியவை உன் பேரிலல்லவா இருக்கின்றன. நான் எப்படி அடமானப் பத்திரம் எழுதிக் கொடுக்கிறது? (சிறிது யோசனை செய்து) இருக்கட்டும். அதற்கு ஒரு காரியம் செய்வோம். உன்பேரில் இருக்கும் நிலத்தையும் வீட்டையும், அடமானம் வைக்க நீ எனக்கு ஒரு அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக இப்போதே ஒரு தஸ்தாவேஜு எழுதி ரிஜிஸ்டர் செய்துகொள்வோம் - என்றார்.

**கனக:-** சரி; சீக்கிரம் ஆகட்டும்; ரெங்கராஜுவை அனுப்பி முத்திரைக் காகிதம் வாங்கிக்கொண்டு வரச்சொல் - என்றாள். அவ்வாறே முத்திரைக் காகிதம் வரவழைக்கப்பட்டது. அதிகாரப் பத்திரம் தயாராய் ரிஜிஸ்டர் கச்சேரியில் பதியவும் செய்யப்பட்டது. அதற்குள் மாலை ஐந்து மணி சமயம் ஆய்விட்டது.

சேவக ரெங்கராஜு அவர்களுடன் சென்னைக்கு வரவேண்டு மென்னும் ஆசை கொண்டவனாய் கச்சேரிக்குப் போய் மானேஜரைக் கண்டு தனக்கு எட்டு நாளைக்கு ரஜா

வேண்டு மென்று கேட்டான். அவனுக்கு ரஜா கொடுத்தால், தாமும் சாம்பசிவத்திற்கு உளவாக இருப்பதாய் பெரிய கலெக்டர் நினைத்து, தமக்கும் ஏதாகிலும் கெடுதல் செய்வாரோ வென்று நினைத்து மானேஜர் சுப்பிரமணிய ஐயங்கார் ரஜா கொடுக்க மறுத்துவிட்டார். சாம்பசிவம் தங்கம்மாள் முதலியோரை அந்த ஆபத்துக்காலத்தில் கைவிட்டு தனது உத்தியோகமே பெரிதென்று இருந்துவிட ரெங்கராஜு விரும்பவில்லை; ஆகையால், முன்பின் யோசனை செய்யாமல் அவன் ஒரே நொடியில் ஒருவித முடிவிற்கு வந்தான். தனது வேலையை ராஜிநாமா செய்துவிட்டதாக ஒரு கடிதத்தில் எழுதி மானேஜரிடம் கொடுத்துவிட்டு சாம்பசிவத்தினிடம் வந்து சேர்ந்தான்.

உடனே யாவரும் சென்னைக்குப் போக ஆயத்தமாய் குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு வைத்தியசாலையில் வந்திறங்கி டாக்டர் துரைக்குச் செய்தி சொல்லி யனுப்பிவிட்டு தங்கம்மாளைப் பார்க்கவும் அவளது அப்போதைய நிலைமையை அறியவும் ஆவல்கொண்டு துடிதுடித்து நின்றனர். அப்போது டாக்டர் தங்கம்மாளுக்குச் சிகிச்சைகளைச் செய்துகொண்டிருந்தார். கால் நாழிகைக்குப் பிறகு அவர் வெளியில் வந்து சாம்பசிவத்தினிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, "இதைப் பட்டணம் டாக்டரிடம் சேர்ப்பித்து ரூபா இருநூறு கொடுங்கள். அவர் ஆகவேண்டியதைச் செய்வார். கொஞ்சமும் தாமதமானால், அது ஆபத்தாய்முடியும். கையில் சில மருந்துகளையும் தருகிறேன். அவற்றைப் பிரயோகித்துக் கொண்டே போங்கள்; நாளைக் காலையில் நீங்கள் தவறாமல் வைத்தியரிடம் போய்ச் சேர வேண்டும்; ஜாக்கிரதை" என்றார்.

அப்படியே செய்வதாக சாம்பசிவம் ஒப்புக்கொண்டார்.

டாக்டர், "சரியாக ஆறரை மணிக்கு நோயாளியை அனுப்புகிறோம்; அதுவரையில் இவ்விடத்திலேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு உட்புறம் போய்விட்டார்.

அவர்கள் நால்வரும் வெளியிலேயே நின்றனர். டாக்டரது சொற்களிலிருந்து தங்கம்மாளின் தேக நிலைமையில் முன்னிலும் அதிகமான கெடுதல் ஏற்படவில்லை யென்று ஊகித்துக்கொண்டவரா யிருந்தனர்; கால்நாழிகை வரையில் எவரும் வாய்திறக்க வில்லை. பிறகு கனகம்மாள், “அடே ரெங்கராஜு! நீ எங்களுடனேயே இருக்கிறாயே! கச்சேரிக்கு வரும்படி உனக்கு உத்தரவு வரவில்லையா?” என்றாள். ரெங்கராஜு, தான் வேலையிலிருந்து விலகிக்கொண்டதை அப்போது தெரிவித்தால் அவர்கள் தன்மீது கோபமுற்று, தன்னை சென்னைக்கு அழைத்துப் போகாமல் விட்டு விடுவார்களோ வென்று அஞ்சி உடனே ஒரு பொய்மொழி கூறினான்; “நான் நேத்து காலையிலேயே கச்சேரிக்குப் போயி ஒரு வாரத்துக்கு ரஜா வாங்கிப்புட்டேன்; பட்டணத்துக்கு நானும் வாரேனுங்க; என் மனது தாளல்லீங்க” என்று உருக்கமாகக் கூறினான்; அவனது உண்மையான அன்பையும், ஆபத்தில் உதவும் நற்குணத்தையும் காண, சாம்பசிவம் கனகம்மாள் ஆகிய இருவரது மனமும் பொங்கிப் பூரித்தது. தமது கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டனர்.

உடனே கனகம்மாள் சாம்பசிவத்தினிடமிருந்து ஐந்து ரூபா நோட்டொன்றை வாங்கி ரெங்கராஜுவிடம் நீட்டி, “நீ எங்களோடு வந்துவிட்டால், உன்னுடைய வீட்டில் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு ஒரு வாரத்துக்கு வேண்டிய சாமான்களுக்கு என்ன செய்வார்கள்; இந்தப் பணத்தையாவது கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வா!” என்றாள்.

ரெங்கராஜு நோட்டை வாங்காமல், “சாமங்க ஙிறைய இருக்குதுங்க; இப்பதான் சம்பளம் வந்துச்சு; வாங்கிப் போட்டேன். அதைப்பத்தி கவலையில்லீங்க; சாமி புண்ணியத்துலே தங்கம்மாளும் பொழைச்சு ஒங்க கலியும் நீங்கினா அதுவே போதுங்க” என்றான். தங்களுக்கு நேர்ந்த

அத்தனை துன்பங்களிலும் அவ்வளவு ஆழ்ந்த அபிமானமுள்ள ஒரு மனிதன் தமக்கு உதவி செய்ய மிகுதி யிருப்பதை நினைத்து பெருமகிழ்வடைந்து பேசமாட்டாமல் இருவரும் மௌன மாயிருந்தனர்.

அப்போது பெரிய கலெக்டர் துரையின் சேவகனொருவன் டிப்டி கலெக்டரிடம் வந்து மரியாதையாக வணங்கி நின்று ஒரு கடிதத்தை நீட்டினான். சாம்பசிவம் திடுக்கிட்டு நிமிர்ந்து, "என்ன இது?" என்று கேட்க, அவன், "தொரெ குடுக்கச் சொன்னாங்க" என்றான். உடனே சாம்பசிவம் அதை வாங்கிப் பிரித்துப் படித்து அது குற்றப்பத்திரிகை என்று உணர்ந்தார்; முன் குறிக்கப்பட்ட மூன்று குற்றங்களும் அதில் விவரிக்கப் பட்டிருந்தன; பிறகு அதில் அடியில் வரும் வாக்கியங்களும் எழுதப்பட்டிருந்தன.

" இம் மூன்று குற்றங்களையும் நீங்கள் செய்ததாக நன்றாக ருஜுவா யிருக்கிறது. நீங்கள் மிகவும் பொறுப்பு வாய்ந்த பெருத்த உத்தியோகஸ்தர். நாதனில்லாமல் உங்களுடைய கச்சேரியையும், அதிகார எல்லையையும் விடுத்துப் போவதும், பொய்க் கணக்குத் தயாரிப்பதும், துரைத்தனத்தார் பணத்தை அபகரிப்பதும் உத்தியோகத்தை இழந்து, சிறைச்சாலைக்குப் போகத்தக்க குற்றங்களாகின்றன. இவற்றிற்காக உங்களை ஏன் வேலையிலிருந்து விலக்கக் கூடாதென்பதற்கு முகாந்திர மெழுதி நாளை மாலைக்குள் அனுப்ப வேண்டியது. அனுப்பத் தவறுவீர்களானால் சொல்லிக்கொள்ள யாதொரு சமா தானமும் இல்லையென்றும், குற்றங்களைச் செய்ததாக நீங்கள் ஒப்புக்கொள்வதாயும் கருதப்படும். நிற்க; உங்களிடமுள்ள சர்க்கார் சீல், முகர் முதலியவற்றை கஜானா டிப்டி கலெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டியது."

என்று எழுதப்பட்டிருந்த பத்திரிகையை சாம்பசிவம் படித்தார். கருத்தை கனகம்மாளிடம் கூறினார். அதற்குள் அந்தச்

சேவகன் ஒரு புஸ்தகத்தைக் காட்டி அதில் கையெழுத்துச் செய்யும்படி கூறி பௌண்டன் பேனா (Fountain Pen) வை நீட்டினான். சாம்பசிவம் அதை வாங்கிக்கொண்டார். ஆனால், உடனே கையெழுத்துச் செய்யவில்லை. தாம் மறுநாள் எங்கிருக்க வேண்டுமோ, எப்பாடு பட நேருமோ என்பதை அறியக் கூடவில்லை. ஆகையால், தமது சமாதானத்தை உடனே எழுதிக் கொடுத்துவிட நினைத்தார். அருகிலிருந்த கடையில் ஒரு காகிதம் வாங்கிவரச் செய்து, அதில் அடியில் வருமாறு மறுமொழி எழுதினார்:-

"ஐயா! தங்களுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டேன். அதில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் வியப்பை உண்டாக்கு கின்றன. அதில் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் ஒன்றையேனும் நான் செய்யவில்லை. முதலாவது பகுதியில் கூறப்பட்டபடி நான் சென்னைக்குப் போனதே இல்லை. நான் போனதாகக் கிடைத்திருக்கும் சாட்சியும் உண்மையானதல்ல. இரண்டாவது பகுதியில் கண்டபடி, நான் அனுப்பியது பொய்க் கணக்கன்று; அதில் சொல்லப்பட்டபடி நான் அம்பாள் சமுத்திரம் முதலிய இடங்களிலேதான் முகாம் செய்திருந்தேன். மூன்றாவது பகுதியில் குறிப்பிட்டபடி நான் நேற்று சென்னையி லிருந்தது உண்மையே; முந்திய நாள் நான் ரஜா கேட்டதும் தாங்கள் மறுத்ததும் உண்மையே. ஆனால், அதன் பிறகு நான் வேறு மனு எழுதி தாசில்தார் தாந்தோனிராயர் மூலமாகத் தங்களுக்கு அனுப்பி, எனக்கு ரஜா கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அந்த மனுவைத் தங்களிடம் எடுத்துவந்த தாசில்தார், தாங்கள் எனக்கு ரஜா கொடுத்து விட்டீர்களென்று செய்தியனுப்பினார். என்னுடைய அவசரத்தில் அதை உண்மையென்று நம்பி நான் போய்விட்டேன். தாந்தோனிராயர் கண்ணியமான மனிதர்; பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்; ஆதலால், அவருடைய சொல்லை நிஜமென்று மதித்தேன். அவரை நீங்கள் கேட்பீர்களானால், அவர் இதை உண்மையென்றே ஒப்புக்

கொள்வார். அவர் ஒப்புக்கொள்ளா விடில், இதன் பொருட்டு நான் எவ்வித சிட்சைக்கும் உடன்படுகிறேன். நிற்க, என் வீட்டிலிருந்த சீல், முகர் முதலியவை நேற்று என் வீட்டில் நடந்த கொள்ளையில் களவு போய்விட்டன. ஆகையால், நான் ஒப்புக்கொடுக்கக்கூடிய சர்க்கார் சாமான்கள் ஒன்றும் என்னிடமில்லை. கச்சேரி வேலையை கஜானா டிப்டி கலெக்டரே பார்த்துக்கொள்ளலாம்" என்று மறுமொழி எழுதி அதைச் சேவகனிடம் கொடுத்து புஸ்தகத்திலும் கையெழுத்துச் செய்து சேவகனை அனுப்பினர்.

அப்போது மணி ஆறரை ஆயிற்று; ரயிலுக்குப் புறப்பட வேண்டிய காலம் வந்தது. அறையின் கதவு திறக்கப்பட்டது. மெத்தை, தலையணைகள் முதலியவற்றைக் கொண்ட ஒரு அடக்கமான நீண்ட தொட்டிலில் தங்கம்மாள் விடப்பட்டிருந் தாள். நான்கு வேலைக்காரர்கள் அந்தத் தொட்டிலோடு தங்கம்மாளை அசையாமல் தூக்கி வந்து வாசலில் நின்ற ஒரு மோட்டார் வண்டியில் தொட்டிலோடு வைத்தனர். சில மருந்துகளும் சாம்பசிவத்தினிடம் கொடுக்கப்பட்டன. உடனே அவர்கள் நால்வரும் வேறொரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டனர். இரண்டு வண்டிகளும் புறப்பட்டு மெல்லச் சென்று ரயிலடியை அடைந்தன. ஐந்து நிமிஷ நேரத்தில் ரயிலும் வந்தது. வேலைக்காரர்கள் தங்கம்மாளை தொட்டிலோடு கொணர்ந்து இரண்டாவது வகுப்பு வண்டியொன்றில் வைத்துவிட்டுச் சென்றனர். சாம்பசிவம், வேலைக்காரருக்கும், மோட்டார் வண்டிக்கும் உரிய பணத்தைக் கொடுத்துவிட்டு டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டார். அவரும் கனகம்மாளும் தங்கம்மாளிருந்த இரண்டாவது வகுப்பில் உட்கார்ந்து கொண்டனர். கிட்டனும், ரெங்கராஜுவும் பக்கத்திலிருந்த மூன்றாவது வகுப்பு வண்டியில் உட்கார்ந்து கொண்டனர்; ரயில் புறப்பட்டது.

பெருந்தேவி அம்மாள் கலெக்டருக்கு ஏதோ கடிதமெழுதி யிருக்கிறாளென்றும், அதைக்கொண்டே கலெக்டர் அவ்வாறு

உத்தரவு செய்திருக்கிறா ரென்றும், அதுவரையில் சாம்பசிவமும், கனகம்மாளும் நினைத்திருந்தனர். நிற்க, தந்தி உத்தரவு தாம் சென்னைக்கு வந்ததைக் குறித்தோ அல்லது வேறு எந்த விடத்திற்கேனும் போனதைக் குறித்தோ வென்பது அவர்களுக்கு அதுவரையில் சந்தேகமாகயிருந்தது. இப்போது தாந்தோனிராயர்மீதும் சந்தேகம் உதித்தது. அவர் தம்மீது பகைமை கொண்டு அவ்வளவு தூரம் தீம்பு செய்யக் காரணமென்ன வென்று நினைத்துப் பெரிதும் வியப்படைந் தனர். கலகம் முற்றிலும் தாந்தோனிராயரால் செய்யப் பட்டதாகவும் தோன்றவில்லை; ஏனெனில் முதல்தடவை தாம் சென்னைக்கு வந்து பெண்ணை அழைத்து வந்ததாக ஏற்பட்ட அபவாதம் தாந்தோனிராயருக்குத் தெரியாது; ஒருக்கால் அது பெருந்தேவியால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லது தமக்கு வந்த தந்தியை தாந்தோனிராயர் பார்த்திருக்க வேண்டும் என்று பலவாறு சிந்தித்தனர். இருவரும் ஆட்சேபனை செய்து ஒருவர்க்கொருவர் சமாதானம் சொல்லிக்கொண்டனர்; லஞ்சம் வாங்கினதாக ஏற்பட்ட குற்றம் இப்போது ஏன் எடுபட்டுப் போன தென்பது தெரியவில்லை. தமக்கு நேர்ந்த எதிர்பாராத எத்தனையோ கொடிய தீங்குகளில் சாம்பசிவத்திற்குச் சிறைச்சாலைப் பிரவேசம் இல்லாமல் போனதைப் பற்றி இருவரும் பெருத்த சந்தோஷமும் ஒருவகையான ஆறுதலும் அடைந்தனர். தமது சொத்துக்கள் போனதற்காகவும், உத்தி யோகம் போனதற்காகவும் அவர்கள் வருந்தவில்லை; தமது புத்திரியான மேனகா, தமக்கு அவமானம் உண்டாக்காத நிலைமையில், எவ்விதமான களங்கமும் அற்றவளாகத் திரும்பி வரவேண்டுமே என்றும், தமது மருமகப்பிள்ளையும் தங்கம்மாளும் பிழைக்கவேண்டுமே யென்றும், மேனகா திரும்பவும் தனது கணவருடன் சுகமாக வாழவேண்டுமே என்றும் பெரிதும் கவலையும் ஏக்கமும் கொண்டவர்களாய், தலையில் வைத்த கையும், தங்கத்தையே இமை கொட்டாமல்

நோக்கிய விழியுமாக துயரமே வடிவெடுத்ததைப்போல அசைவற்று இருவரும் தொட்டிலிற் கருகில் உட்கார்ந்திருந் தனர்.

தங்கம்மாள் உயிருடனிருப்பவள் போலத் தோன்ற வில்லை. கண்கள் மூடப்பட்டே இருந்தன. எவ்வித அசைவும் மூச்சும் தோன்றவில்லை. அதைக் கண்டு பெரிதும் அஞ்சிய கனகம்மாள் அப்போதைக்கப்போது தங்கம்மாளின் மார்பில் கையைவைத்து ஹிருதயம் அடித்துக் கொள்ளுகிறதோ வென்பதைப் பார்த்தாள். உடம்பில் சூடு சிறிது புலப்பட்டது. பிறகு கனகம்மாள் கைபிடித்து நாடி பார்த்தாள். நிற்கப்போகும் கடியாரத்தைப்போல, நாடி நெடுநேரத்திற் கொருதரம் மெல்ல அடித்துக்கொண்டது. உயிரிருப்பதாக நினைத்து இருவரும் ஒரு சிறிது துணிவடைந்தனர்.

அவர்கள் ரயிலில் அவ்வாறு இருக்க, சாம்பசிவத்தின் மறு மொழிக் கடிதத்தை எடுத்துச் சென்ற சேவகன், அதை பெரிய கலெக்டர் துரையிடம் சேர்த்தான். துரை கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்தார்; குற்றப் பத்திரிகையிற் கண்ட மூன்றாவது குற்றத்திற்கு டிப்டி கலெக்டர் எழுதியிருந்த சமாதானத்தை இன்னொரு முறை படித்தார். முந்திய நாள் தாம் ரஜா கொடுக்க மறுத்த பிறகு சாம்பசிவம் திரும்ப ஒரு மனு எழுதி தாந்தோனிராயரிடம் கொடுத்த தாகவும், அதை எடுத்து வந்த ராயர், ரஜா கிடைத்து விட்டதாகச் சொல்லியனுப்பினதாகவும் சாம்பசிவம் எழுதியிருந்த விஷயம் துரையின் மனதைக் கலக்கியது. ஒரு கால் அது உண்மையா யிருக்குமோ வென்று அவர் சந்தேகித்தார். அப்படி இருந்தால் ரஜா கொடுக்கப்பட்டதாக தாந்தோனிராயர் பொய்யான செய்தி சொல்லி செய்தி யனுப்ப முகாந்தரமென்ன வென்று யோசித்தார். தாந்தோனிராயர் சாம்பசிவத்தின்மீது கொண்ட அருவருப்பினால் ஒருகால் அவ்வாறு செய்திருப்பாரோ

என்றும் நினைத்தார். உடனே தாந்தோனியை வரவழைத்து உண்மையை அறிந்து கொள்வதே நல்லதென்று நினைத்து, அவரை உடனே அழைத்து வரும்படி துரை சேவகனை அனுப்பினார். சாலியமங்கலத்திலிருந்து அப்போதே வீட்டிற்கு வந்த ராயர் டிப்டி கலெக்டருடைய சங்கதிகளை தமது சேவகர்களிடம் கேட்டு அறிந்து கொண்டார். சாம்பசிவம் தங்கம்மாளை சென்னைக்கு அழைத்துச் சென்றது முதலிய செய்தியனைத்தையும் உணர்ந்து, "இன்றோடு ஒழிந்தான் சனியன்" என்று உல்லாசமாக அவர் தமது சாய்மான நாற்காலியிற் படுத்தார். அப்போது கலெக்டருடைய சேவகன் வந்து துரை அழைத்துவரச் சொன்னதாகக் கூறினான். என்ன சம்பவித்ததோ, எந்த ரகசியம் வெளியானதோ என்று சந்தேகித்துக் கலங்கிய ராயர், உடனே எழுந்து உத்தியோக உடைகளையணிந்துகொண்டு, ஓடோடியும் சென்று பங்களாவை யடைந்து குனிந்து துரைக்கு சலாம் செய்தார். துரை உடனே சாம்பசிவத்தின் சமாதானத்தின்மேல் தமக்குண்டான சந்தேகத்தை தெரிவிக்க, ராயர் மிகவும் வியப்படைந்தவரைப்போல காண்பித்து, "அடாடா! இது முழுப் புரட்டாயிருக்கிறதே! நானாவது மனுவை வாங்கி வரவாவது! ரஜா கொடுக்கவில்லை யென்று அவரும் அவருடைய தாயாரும் தங்களை மிகவும் இழிவாகப் பேசினார்கள். சர்க்கியூட் போவதாகச் சொல்லிவிட்டு பட்டணம் போகப் போகிறோ மென்று சொன்னார்கள். எனக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை; நான் எழுந்து நேராக தங்களிடம் வந்துவிட்டேன். பிறகு நாம் இருவரும் ரயிலடிக்குப் போய், அவர்கள் பட்டணத்துக்குப் போனதைப் பார்த்தோம். ரஜா கொடுக்கப்பட்ட தென்று அவருக்கு நான் சொல்லி யனுப்ப எனக்குச் சாவகாசமேது? தாங்கள் ரஜா கொடுக்க மறுத்ததை நான் அறிந்தவன். அப்படி இருக்க, மறுபடியும், அவர் மனுக் கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டுவர

நான்தான் துணிவேனா? இந்த மனிதன் ஜெகஜாலப்புரட்டனா யிருக்கிறானே! கிட்ட நெருங்குவோர் மேலெல்லாம் பழி போடுகிறானே! அப்பப்பா! இது பெருத்த மோசடியா யிருக்கிறதே! அவர் என்னிடம் மனுவும் கொடுக்கவில்லை; ரஜா கொடுக்கப்பட்டதென்று நான் செய்தியும் அனுப்ப வில்லை; உத்தரவானால், அப்படியே நான் காகிதத்தில் வாக்குமூலம் எழுதித் தருகிறேன். அதை மற்ற காகிதத்தோடு ஆதாரமாக சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றார். "பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால் மெய் போலும்மே" என்றபடி, ராயர் அழுத்தந் திருத்தமாகச் சொன்னதைக் கேட்ட துரை அதை உண்மை யென்று நம்பி விட்டார். அவ்வாறே ஒரு காகிதத்தில் அவரிடம் வாக்குமூலம் எழுதி வாங்கிக்கொண்டு, குற்றப்பத்திரிகையின் நகலொன்றை யும், எல்லா வாக்கு மூலங்களையும், சாம்பசிவத்தின் சமாதானத்தையும் துரை சேர்த்துத் தைத்து, அதனுடன் ஒரு அறிக்கையும் எழுதி, யாவற்றையும் சென்னை துரைத்தனத் தாருக்கு அனுப்பி விட்டார். அந்த அறிக்கையில் சாம்பசிவம் தாம் அறிந்த வரையில் அயோக்கியதை, அகம்பாவம், பொய், சூது முதலிய வற்றிற்கு இருப்பிடமானவ ரென்றும் கீழ் அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் நடத்தும் திறமை யற்ற முட்டாளென்றும், முன்கோபத்தால் தாசில்தார் முதல் தலையாரி வரையிலுள்ள யாவரையும் அடித்தும் திட்டியும் கொடுமை செய்வாரென்றும், மேம்பட்ட பதவியான டிப்டி கலெக்டர் உத்தியோகத்தை வகிக்கும் கண்ணியமற்ற அற்ப மனிதரென்றும், அக்கிரமங்களைச் செய்ய அஞ்சாதவரென்றும் துரை விரிவாக எழுதினார். அவர் லஞ்சம் வாங்குவதில் மகா சமர்த்தரென்றும், அதைப்பற்றி ஊர் முற்றிலும் பெருத்த புரளியாக இருப்பதாயும், ஆனால், அதை ருஜுப்படுத்தப் போதுமான அளவில் சாட்சிகள் இன்னும் முன் வரவில்லை யென்றும் எழுதினார். அவர் வீட்டில் நடந்த பயங்கரமான கொள்ளையும், அவரது மனைவிக்கு நேர்ந்த பெருந் துன்பத்தையும் பற்றி, விரிவாக

எழுதினார். இவ்வாறு அவருக்கு நேர்ந்த விபத்துக்களைக் கருதி துரைத்தனத்தார் அவர் மீது கருணை கூர்ந்து அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பாமல், வேலையிலிருந்து விலக்குவ தோடு விடவேண்டுமென்று பலமாக சிபாரிசு செய்து எழுதி அதை ராயருக்குப் படித்துக் காட்டினார். அவர் துரையின் காருண்ணிய குணத்தைக் குறித்துப் புகழ்ந்து பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டு, வெளியிற் சென்று நிகழ்ந்த விஷயங்களை புளுகுமலைப் பிள்ளையிடம் கூறி மகிழ்வடைய நினைத்து ஒடோடியும் சென்றார்.

இவ்வளவோடு நாம் அவரை விடுத்து ரயிலிற் சென்ற அதிர்ஷ்ட ஹீனர்களான சாம்பசிவம், கனகம்மாள் முதலி யோரைப் பின்பற்றிச் செல்வோம். அன்றிரவு முற்றிலும் அவ்விருவரும் கண்ணிமைக்காமலும், தலையைச் சாய்க்கா மலும் ஒரே நிலையில் சுவரிலெழுதப்பட்ட உயிரற்ற சித்திரங்களைப்போல இருந்தனர். தங்கம்மாள் படுத்த சவம்போலவும், மற்றவரும் உட்காந்திருந்த சவங்களைப் போலவும் காணப்பட்டனரென்று சொல்வதைத் தவிர, வேறு கூறுதல் பொருந்தாது; அந்த இரவோ குறுகாத இரவாயும், தூரமோ தொலையாத் தூரமாயு மிருந்தது சகிக்க வொண்ணா வேதனை செய்து அவர்களை வதைத்தன. மாறி, மாறி மேனகா தங்கம்மாள் வராகசாமி ஆகிய மூவரையும் நினைத்து நினைத்து, அவர்களது மனம் தாமரை இலையின் நீரைப்போலத் தத்தளித்தவண்ண மிருந்தது. மயக்கத்தினால் அவர்களது தேகம் கிரு கிரென்று சுழன்று ஆகாயத்திற்குப் போய் திரும்புவதாய்த் தோன்றியது. அவர்களது உடம்பிலிருந்த நீரெல்லாம் கண்ணீராய் வெளிப்பட்டுப் போனமையால், நாவறண்டு போயிற்று, தேகம் நெருப்பாய்ப் பற்றி எரிந்தது. இனி அழுது சிந்துவதற்குக் கண்ணீரும் இல்லாமல் போனது. தலைநோய் ஒருபுறம் கொன்றுகொண்டிருந்தது. அத்தகைய கோரமான நிலைமையில் விடியற்காலம் ஐந்தரை மணிக்கு வண்டி செங்கற்

பட்டை யடைந்தது. போர்ட்டர் தலையில் கையை வைத்துக் கொண்டு, "செங்கல்பட்டு, செங்கல்பட்டு" என்று தூக்கத்தில் அழுதுகொண்டு வந்ததைக் கேட்டு தமது உணர்வைப் பெற்ற சாம்பசிவம், "சரி; நான் போய்விட்டு வருகிறேன். இன்று சாயுங்காலத்துக்குள் தவறாமல் பட்டணம் வந்து சேருகிறேன். கட்டாயமாக வந்து விடுகிறேன். ஜாக்கிரதையாகக் கொண்டுபோய் சேருங்கள். சர். சவலை இராமசாமி முதலியார் சத்திரத்தில் ஒரு அறையை வாடகைக்குப் பேசி அதில் ஜாகை செய்துகொள்ளுங்கள். பணம் அடுத்த இரயிலில் வருவதாக டாக்டரிடம் சொல்லி, காரியத்தை முடிக்கும்படி செய்; இந்தப் பணத்தை யெல்லாம் நீ கொண்டுபோ; எனக்கு ரூபா இரண்டு போதும்; ஜாக்கிரதை ஜாக்கிரதை" என்று சொல்லி இரண்டு ரூபாயை எடுத்துக்கொண்டு மிகுதிப்பணத்தை தாயினிடம் கொடுத்து விட்டு வண்டியிலிருந்து கிழே இறங்கினார். கனகம்மாள் அவருக்கு ஆயிரம் முறை, "ஜாக்கிரதை" சொல்லி அனுப்பினாள். கீழே இறங்கிய சாம்பசிவம் அடுத்த வண்டிக்குச் சென்று கிட்டனுக்கும் ரெங்கராஜுவுக்கும் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொண்டிருக்கையில் வண்டி சென்னையை நோக்கி நகர்ந்தது. வண்டியிலிருந்த தமது மனைவியின் வடிவத்திலேயே தமது முழுமனதையும் செலுத்தி யிருந்த சாம்பசிவம் யாவற்றையும் மறந்து பைத்தியக்காரனைப் போல ரயில் போன திக்கைப் பார்த்துக்கொண்டே நெடுநேரம் நின்றார்.

தங்கம்மாளை எடுத்துச் சென்ற வண்டியோ காலை ஏழரை மணிக்குச் சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தது. உடனே, ரெங்கராஜு, சில கூலியாட்களை அமர்த்தி அவர்களது உதவியால் தங்கம்மாளைத் தொட்டிலோடு கீழே இறக்க, தொட்டில் பிளாட்பாரத்தில் மறைவான ஓரிடத்தில் வைக்கப்பட்டது. கூலிக்கு மோட்டார் வண்டி யொன்றை அமர்த்தும்படி ரெங்கராஜு அங்கு மிங்கும் தலைதெறிக்க

ஓடினான். அதற்குள் நூற்றுக்கணக்கான பிரயாணிகள், அதென்ன காட்சியோ வென்று வேடிக்கை பார்க்க வந்து தொட்டிலைச் சுற்றிக் கூடிவிட்டனர். அதில் மயிலோ மடவன்னமோவெனப் படுத்திருந்த சுவர்ண விக்கிரகத்தைக் கண்டவுடன், ஜனங்களின் வியப்பும் திகைப்பும் நிரம்பவும் பெருகின. அதிலிருந்த மாதரசி மூச்சுப் பேச்சின்றி கண் திறவாமல் படுத்திருந்ததையும், அவளது சுந்தர மேனியில் ஏராளமான இரணக்கட்டுக ளிருப்பதையும் காண அவர்களது மனமிளகியது; ஒவ்வொருவரும் கனகம்மாளிடம் கேட்டு நிகழ்ந்ததை அறிந்தனர்; உடனே கண்ணீர் விடுவோரும், "இந்த அம்மாளுக்கு என்ன காலகதி வந்ததப்பா" என்போரும், "ஐயோ பாவம்! அழகுவழிகிறதே! இந்த மஹாலக்ஷுமியை அடிக்க அந்தக் கொலைகாரப் பயல்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?" என்போரும் , அதைக் காணப் பொறாமல் லபோ லபோ என்று வாயிலடித்துக்கொண்டு, "அட பாவி! இந்தப் பச்சைக்கிளியை இப்படி கொல்வானா! அவன் வீடு குட்டிச்சுவராய்ப் போக" என்போரும் "அந்த டாக்டரிடம் கொண்டுபோங்கள்" என்போரும், "இந்த டாக்டரிடம் கொண்டுபோங்கள்" என்போரும், "இந்த நிலைமையில் இவ்வளவு தூரம் கொண்டுவந்திருக்கக் கூடாது" என்போரும், தாம் ஒருகால் கச்சேரிக்குச் சாட்சியாகப் போக நேரிடுமோவென்று, அஞ்சி நெடுந்தூரத்திற்கு அப்பா லிருந்தபடியே முகத்தை வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டு குடுகுடென்று ஓடுவோருமா யிருந்தனர். அந்தச் சமயத்தில் தமது அதிகாரத்தைக் காட்டினால் ஏதாகினும் பணம் பெயருமென்று நினைத்து ரயில்வே சிப்பந்திகளிற் பழைய பெருச்சாளிகளான சிலரும் போலீஸாரும், "இங்கே என்ன இவ்வளவு கூட்டம்? போங்கள், போங்கள். தொட்டிலை ஏன் இங்கே வைத்திருக்கி றீர்கள்? சீக்கிரம் எடுத்துக்கொண்டு போங்கள். இங்கே வைக்க வேண்டாம்" என்று அதட்டி, பிணம்

பிடுங்கிப் பருந்தைப்போல வட்ட மிட்டனர். ஐந்து நிமிஷத்தில் ரெங்கராஜு மோட்டார் வண்டி யொன்றில் வந்து சேர்ந்தான்; பரோபகார குணம் நிறைந்த ஜனங்கள் தொட்டிலைத் தூக்கி வைக்க, "நான் நீ" என்று முன்னுக்கு வந்தனர். அடுத்த நிமிஷம் தொட்டில் மோட்டாரில் வைக்கப்பட்டது. மற்ற மூவரும் அதிலேயே தொற்றிக்கொள்ள, வண்டி மெல்ல நகர ஆரம்பித்தது. தொட்டில் அசையுமோ வென்று அஞ்சிய ரெங்கராஜு, "மெதுவாகப் போகட்டும்; மெதுவாகப் போகட்டும்" என்று நிமிஷத்திற்கு நிமிஷம் வண்டிக்காரனிடம் கட்டியம் கூறிக் கொண்டே யிருந்தான். கால் நாழிகை நேரத்தில் வண்டி புரசைப் பாக்கத்திலுள்ள டாக்டர் வில்லியம்ஸ் துரை வீட்டின் வாசலில் வந்து நின்றது.

வில்லியம்ஸ் என்னும் பெயரைக் கொண்ட அந்த துரை சுத்தமான ஐரோப்பியரல்லர். ஐரோப்பியத் தந்தைக்கும், இந்திய தாய்க்கும் பிறந்தவர்களான யூரேஷிய ரென்னும் வகுப்பைச் சார்ந்தவர். அந்த் வகுப்பினரை ஜனங்கள் சட்டைக் காரரென்று குறிப்பது வழக்கம். வில்லியம்ஸ் துரையிடத்தில் இந்திய அம்சத்தைக் காட்டிலும் ஐரோப்பிய அம்சம் அதிகமா யிருந்தமையால், அவர் இரண வைத்தியத்தில் மகா நிபுணரா யிருந்தார். பணம் வாங்குவதிலோ அதற்குமேல் நிபுணர். அவரது பிடிவாதத்தைக் குரங்கின் பிடிக்கே ஒப்பிடவேண்டும். அவர் எதைச் சொன்னாலும் அது முடிவு. யுகமே மாறினாலும், ஜெகமே பிறந்தாலும், அவருடைய தீர்மானம் மாத்திரம் மாறாது. பிறர் அதைப்பற்றி ஏதாகிலும் ஆட்சேபனை கூறினால், அவருக்கு உடனே மூக்கின் மேல் கோபம் பிறந்துவிடும். எழுந்து அடிக்கப்போய்விடுவார். குரங்கினிடம் பூமாலை அகப்பட்டுக்கொண்டதைப்போல, அவரிடம், அந்த அருமையான வித்தை அகப்பட்டுக்கொண்டு விழித்தது. ஜனங்கள் அவரிடம் வைத்தியம் செய்து கொள்ளவருவதற்கு அஞ்சி நடுங்குவார்கள். என்றாலும், இரண வைத்தியத்தில்;

அவரை விட்டால், வேறுகதியில்லாமல் இருந்தது. அத்தகைய மனிதரான வில்லியம்ஸ் துரை வீட்டின் வாசலில் மோட்டார் வண்டி வந்து நின்றது. உடனே கிட்டனும், ரெங்கராஜுவும் வண்டியினின்று இறங்கி உட்புறம் நுழைந்து, கடிதத்தை துரையினிடம் நீட்டினார். துரை மூக்குக் கண்ணாடி பளபளவென்று மின்னிய தமது பறங்கிப்பழ முகத்தால் அவர்களை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு கடிதத்தை வாங்கி அதை அலட்சியமாகத் திறந்து படித்தார். ஆனால் அவரது முகத்தில் எவ்வித மாறுபாடேனும், இரக்கமேனும் துடிப்பேனும், கவலையேனும் காணப்படவில்லை. கடிதத்தை அருகிலிருந்த மேஜையின் மீது அலட்சியமாக எறிந்தார். வேறுதிசையில் தமது முகத்தைத் திருப்பிக்கொண்டு, "அடே நடேசா! வண்டி தயாராக இருக்கிறதா?" என்றார். அவரது வேலையாளான நடேசன், "தயாரா யிருக்கிறது; புறப் படலாம்" என்றான். உண்மையில், அவர் அப்போது ஒரு அவசர காரியத்தின் பொருட்டு வெளியே போக ஆயத்தமாக இருந்தார். அந்தச் சமயத்தில் நம்மவர்கள் வந்து தோன்றியது, அவருக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது. என்றாலும் தஞ்சையிலிருந்து வந்த கடிதத்தை மதித்து தமது கோபத்தை ஒரு சிறிது அடக்கிக் கொண்டு கிட்டனை நோக்கி, "அந்த அம்மாள் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டார்; வாசலில் மோட்டாரில் இருப்பதாக அவன் கூற, உடனே அழைத்து வரும்படி துரை உத்தரவளித்தார். அடுத்த நிமிஷம் , தங்கம்மாளிருந்த தொட்டிலை கிட்டன், ரெங்கராஜு, கனகம்மாள், மோட்டார் வண்டிக்காரன் ஆகிய நால்வரும் தூக்கிக்கொண்டு வந்து உட்புறத்தில் வைத்தனர். உடனே துரை அவர்கள் நால்வரையும் வெளியில் இருக்கச்செய்து கதவை மூடித்தாளிட்டுக்கொண்டு கால் நாழிகை நேரம் தங்கம்மாளின் உடம்பைச் சோதனை செய்து பார்த்தார்; தமது சிப்பந்தியை அழைத்து, காயங்களை அலம்பிச் சுத்தி செய்து மருந்துகள்

வைத்துக் கட்டச் செய்தார்; ஏதோ ஒருவகையான திராவகத்தைத் தயாரித்து மூக்கின் வழியாக பீச்சாங்குழல் வைத்து அம்மருந்தை உட்புறம் செலுத்தினார். இன்னம் பல முக்கிய சிகிச்சைகளைச் செய்தார்; வெளியிலிருந்த கிட்டன் முதலியோரை உள்ளே வரவழைத்தார்; தங்கம்மாள் முன்னிருந்த மாதிரியே தொட்டிலில் எவ்வித மாறுபாடின்றியே கிடந்தாள். துரை அவர்களைப் பார்த்து, "சரி; பணமெங்கே?" என்றார். உடனே கனகம்மாள், "நாங்கள் மிகவும் அவசரமாக முன்னால் வந்துவிட்டோம். இதோ அடுத்த வண்டியில், இந்தப் பெண்ணின் புருஷன் பணத்தோடு வருவார். அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்கள் நடக்கட்டும்; பணத்தைப் பற்றிக் கொஞ்சமும் யோசனை செய்ய வேண்டாம். இதோ, வருகிறது" என்றாள். அதைக் கேட்ட துரைக்குப் பெருத்த கோப மூண்டது. "நல்ல காரியம் செய்தீர்கள்! பெண்ணின் புருஷனில்லாமல் நீங்கள் மாத்திரமா வந்தீர்கள்! மார்பைக் கீறி ஆபரேஷன் செய்யவேண்டும். இன்று சாயுங்காலத்திற்குள் இதைச் சரிப்படுத்தாவிட்டால், உயிர் போய்விடும்; உடம்பு மிகவும் அபாயகரமான நிலைமையில் இருக்கிறது. எலும்புத் துண்டுகள் ஹிருதயத்தில் குத்திக்கொண்டிருக்கின்றன. ஹிருதயத்திலிருந்து வரும் இரத்த ஓட்டம் தாறுமாறா யிருக்கிறது; இன்று சாயுங்காலத்துக்குள் இரத்த ஓட்டமே நின்றுபோம்; உடனே மார்பைக் கீறி எலும்பை எடுக்க வேண்டும்; மார்பைக் கீறுவதில் உயிர் போனாலும் போய்விடும். அப்படி உயிர் போனால் என்னை உத்திரவாதியாக ஆக்குவதில்லை யென்று பெண்ணின் புருஷன் முதலில் எனக்கு ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். பணத்தையும் நீங்கள் உடனே கொடுக்கவேண்டும். பெண்ணின் புருஷனில்லாமல் நீங்கள் ஏன் வந்தீர்கள்? பெண்ணை எடுத்துக்கொண்டு போங்கள்" என்று ஆத்திரத்தோடு மொழிந்தார். கனகம்மாள் திகைப்பும் அச்சமு மடைந்து, "ஐயா!

அவர் அடுத்த வண்டியில் அவசியம் வருவார். நான் இந்தப் பெண்ணின் மாமியார்; அவசரமாக ஆபரேஷன் ஆகவேண்டு மானால், நான் பத்திரம் எழுதிக்கொடுக்கிறேன்; தயவு செய்து வேலையை நடத்துங்கள்" என்று நயந்து கூறி வேண்டிக் கொண்டாள். துரைக்குப் பொறுக்கக்கூடாத ஆத்திரம் உண்டாயிற்று." Damn nonsense; you talk bloody rot. இதென்ன புத்தியில்லாத பேச்சு! நீ பத்திரம் எழுதிக்கொடுத்தால், அது குப்பையில் போடத்தான் உபயோகப்படும்; அவர் எழுதிக் கொடுக்காவிட்டால் நான் ஆபரேஷன் செய்யத் தயாராக இல்லை. சாயுங்காலத்துக்குள் அவரையும் அழைத்துக்கொண்டு வந்து சேருங்கள். நான் அவசரமாக வெளியில் போக வேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு, ஏதோ ஒருவகையான மருந்தைத் தயாரித்து, அதைத் தங்கம்மாளது மூக்கின் வழியாக உட்புறம் செலுத்தி விட்டு, "சரி; எடுத்துக்கொண்டு போங்கள்" என்று மூர்க்கமாகப் பேசிவிட்டு வெளியில் நடந்தார்; அவரிடம் இனி நயப்பதில் பயனுண் டாகா தென்பது நன்றாக விளங்கியது. தொட்டில் உடனே வண்டிக்குப் போய்ச் சேர்ந்தது; அதே காலத்தில் தமது வண்டியில் ஏறிக்கொண்ட துரை கிட்டனைப் பார்த்து, "ஏன் ஐயா! நீங்கள் எந்த இடத்தில் இறங்கி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். கிட்டன், "சர். சவலை இராமசாமி முதலியார் சத்திரத்தில் இறங்கப்போகிறோம்" என்றான். அதைக் கேட்டுக்கொண்ட துரை அலட்சியமாகப் போய்விட்டார்; மோட்டார் வண்டி, சர். சவலை இராமசாமி முதலியார் சத்திரத்திற்குச் சென்றது. அதில் வசதியான இரண்டு அறைகள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த ஜாகையில் தொட்டில் வைக்கப்பட்டது. கனகம்மாள், கிட்டன், ரெங்கராஜு ஆகிய மூவரும் என்ன செய்வது என்பதை அறியமாட்டாமல் ஏங்கி பெருங் கவலையால் பீடிக்கப்பட்டு மூலைக்கொருவராக உட்கார்ந்து விட்டனர். எவருக்கும்

சாப்பாட்டிலும், வேறு எந்த விஷயத்திலும் புத்தி செல்லவில்லை; அன்று சாயுங்காலத்திற்குள் சாம்பசிவம் வரவேண்டுமே என்றும், அவர் பணத்துடன் வரவேண்டுமே என்றும் அவர்கள் எண்ணி எண்ணி ஆவல் கொண்டு ஓய்ந்து உட்கார்ந்து விட்டார்கள். அப்போது கிட்டன், "ஏன் பாட்டீ, இந்த டாக்டர் கொஞ்சமும் இரக்கமற்ற பாவியா யிருக்கிறானே; வேறு யாரிடத்திலாவது கொண்டுபோனால் என்ன?" என்றான்.

உடனே கனகம்மாள், "சேச்சே! அது பிசகு; இந்த ஆபரேஷன் செய்வதில் இவரைப்போல சாமர்த்தியமாகச் செய்பவர் எவருமில்லையாம். இவருக்குச் சிபாரிசுக் கடிதம் கொண்டுவந்தோம்; இவரே இவ்வளவு அலட்சியம் செய் கிறாரே; இன்னும் மற்றவர்கள் வாயைத் திறந்து பேச கூடமாட்டார்கள்; இருக்கட்டும்; சாயுங்காலத்துக்குள் அவன் வந்து விடுவான்; துரையும் ஏதோ மருந்து கொடுத்திருக்கிறாரே; பார்ப்போம்" என்று கூறினாள். அன்று பகற்பொழுது முற்றிலும், சாம்பசிவம் இந்த வண்டியில் வருவார், அடுத்த வண்டியில் வருவார் என்று சொல்லிச் சொல்லி வழிபார்த்துக் கொண்டே அவர்கள் இருந்தனர். பார்க் என்னும் ரயில்வே ஸ்டேஷன், சத்திரத்திற்குப் பின்புறத்தில் இருப்பதால், ஒவ்வொரு வண்டியும் வந்தபோதெல்லாம், ரெங்கராஜு ஸ்டேஷனுக்குப் போய்விட்டு ஏங்கிய முகத்தோடு திரும்பினான். இரவு மாத்திரம் வந்தது; சாம்பசிவம் வரவில்லை. கனகம்மாள், கிட்டன், ரெங்கராஜு ஆகிய மூவரும் நெருப்பின்மேற் புழுவெனத் துடிக்கின்றனர். கைகளைப் பிசைந்து கொள்ளுகின்றனர். அன்று மாலைக்குள் ஆபரேஷன் செய்யாவிடில் தங்கத்தின் உயிர் நின்று போய்விடுமோ வென்று அஞ்சித் தவித்தனர். அப்போதைக்கப் போது தங்கம்மாளின் நாடியை கனகம்மாள் பிடித்துப் பிடித்துப் பார்த்தாள்; வரவர நாடி தடதடவென்று அடித்துக் கொண்டது;

மரணகாலத்திலிருப்போரது நாடி அவ்வாறு விசையாக அடித்துக்கொள்வது வழக்கமென்று கனகம்மாள் கேள்வி யுற்றிருந்தாள் ஆதலின், அவளது மனம் பட்டபாட்டையும், அதன் தவிப்பையும் விவரித்துக் கூறுதல் எளிய காரியமல்ல. அவள் அனுபவித்த துன்பத்தை நரக வேதனை என்றே சொல்ல வேண்டும். அந்த நிலைமையில் பொழுதும் விடிந்தது; சாம்பசிவமோ வருவதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு ரயிலும் மோசம் செய்துவிட்டது. ஆனால், தங்கம்மாளின் உயிர் இன்னும் தேகத்தில் நின்றது; இனி தாமதமின்றி ஆபரேஷன் செய்யாவிடில் அன்று தங்கம்மாளது உயிர் போவது நிச்சயமென்று கனகம்மாள் நினைத்தாள். அன்று மாலைக்குள் தங்கம்மாள் பிழைப்பாளோ அல்லது பட்டணத்து மண்ணுக்கு இரையாவாளோ என்று அவள் நினைத்து நினைத்து மனமாழ்கினாள், தங்களது எதிர்காலத்து சந்தோஷமும், துயரமும் அந்த ஒருநாளிலேதான் தெரிய விருந்ததாக எண்ணி யெண்ணிப் பரிதபித்தாள். அந்த நிலைமையில் கதவைத் திறந்துகொண்டு டாக்டர் வில்லியம்ஸ் உள்ளே நுழைந்தார். உள்ளே யிருந்த மூவரும் திடுக் கிட்டெழுந்து நின்றனர். கிட்டன் துரைக்கு வந்தனம் செலுத்தினான். உடனே டாக்டர், "நேற்று சாயுங்காலமே இந்தப் பெண்ணின் புருஷன் வருவதாகப் பொய் சொன்னீர்களே; என்னை ஏமாற்றத்தானே பார்த்தீர்கள்?" என்றார். அதற்கு மறு மொழி கூற எவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. கனகம்மாள் சிறிது தத்தளித்த பிறகு, "ஐயா! எங்களுக்கு இது பொல்லாத காலமாயிருக்கிறது; நினைக்காத ஆபத்துகளெல்லாம் வருகின்றன. பணத்தோடு நேற்று சாயுங்காலத்துக்குள் வருவதாகச் சொன்ன பையன் வரவில்லை. அவனுக்கு என்ன துன்பம் சம்பவித்ததோ தெரியவில்லை. அவனைத் தேடிப் பார்த்து அழைத்து வரும்படி மனிதரை அனுப்புகிறேன். பெண்ணுக்கு அதற்குள் உயிர் போய்விடுமோ வென்று பயமாக இருக்கிறது. பெரிய மனதோடு நீங்கள் இவளுடைய உயிரைக் காப்பாற்ற

வேண்டும். உங்களுக்கும், உங்களுடைய பெண்டு பிள்ளைகளுக்கும் ஆயிரம்கோடி புண்ணியம் உண்டாகும். ஈசுவரன் உங்களைக் காப்பாற்றுவார். நாங்கள் உங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட மாட்டோம். நாங்கள் நன்றி கெட்டவர்களன்று, தயவு செய்யுங்கள்" என்று கூறி மன்றாடினாள். அதைக் காதில் வாங்காதவரைப்போலத் தோன்றிய துரை தொட்டிலினருகில் சென்று தங்கம்மாளது நாடி முதலியவற்றின் நிலைமையை ஆராய்ந்து பார்த்தார். அதற்குள் அவரது வேலைக்காரனொருவன் அங்கு தோன்றி தங்கம்மாளின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, காயங்களை அலம்பி மருந்து வைத்துத் திரும்பவும் கட்டினான். உடனே துரை கனகம்மாளைப் பார்த்து, "என்னவோ தெய்வச் செயலாக உயிர் இதுவரையில் நின்றிருக்கிறது. நேற்று சாயுங்காலத்துக்குள் பிராணன் போயிருக்க வேண்டும். நான் உள்ளுக்குக் கொடுத்த மருந்தின் ஆதாரத்தினால் உயிர் நின்றது. அதே மருந்தை இப்போது ஒரு முறை உள்ளே செலுத்துகிறேன். அந்த மனிதர் வந்து பத்திரம் எழுதிக் கொடுத்துப் பணமும் செலுத்துமுன் ஆபரேஷன் செய்வது என் மேல் குற்றமாகும். ஆகையால் ஓர் ஆளை அனுப்பி அவரை உடனே வரவழையுங்கள்" என்று சொல்லி விட்டு, முதல்நாள் மூக்கின் வழியாக உட்செலுத்திய மருந்தை இன்னொருமுறை உட்புறம் செலுத்தி விட்டு எழுந்து சென்றார். கதவிற் கருகில் போனவர் முகத்தைத் திருப்பி, "அலட்சியமாயிருப்பீர்களானால், இன்று சாயுங்காலத்துக்குள் உயிர் போய்விடும்; கண்டிப்பான விஷயம், விளையாட்டல்ல, ஜாக்கிரதை; நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன்; பிறகு என்மேல் குறை சொல்லக்கூடாது; என்னுடைய மருந்தினால் கூட இனிமேல் உயிர் நிற்பது சந்தேகம்" என்று சொல்லிவிட்டு வெளியிற் போய்விட்டார்.

துரையின் விஷயத்தில் கனகம்மாளுக்கு இருந்த அருவருப்பு ஒருவாறு குறைந்தது. முதல்நாள் இரக்கமற்றவராய்த்

தோன்றிய அவர், அன்று தமது இருப்பிடத்திற்கு வந்ததைப்பற்றி அவள் சந்தோஷ மடைந்தாள். ஆபரேஷனைத் தவிர, மற்ற சிகிச்சைகளை யெல்லாம் செய்ததை நினைத்து, அவர் முற்றிலும் இரக்கமில்லாத மனிதரல்ல ரென்றும், மனிதரிடத்தில் உண்டாகும் இரக்கத்தை அவர் வெளியில் காட்டாமல் காரியத்தைச் செய்பவரென்றும், பத்திரமில்லாமல் ஆபரேஷன் செய்ய அவர் உண்மையில் அஞ்சுகிறாரென்றும் நினைத்தாள். அன்றைய பகலிற்குள்ளாகிலும் சாம்பசிவம் வந்து விடுவாரென்று நிச்சயமாக நினைத்திருந்தாள். அவரோ வரவில்லை. அப்பொழுது ரெங்கராஜு, "அம்மா! இது என்னவோ சந்தேகமா யிருக்கிறது. நான் உடனே ரயிலேறி செங்கற்பட்டுக்குப் போய் எஜமானை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்றான். கனகம்மாள் அதை ஆமோதித்து அவனை அடுத்த வண்டியில் செங்கற்பட்டுக்கு அனுப்பினாள். அவன் சென்ற ரயில் பகல் மூன்று மணிக்குச் செங்கற்பட்டை அடைந்தது. வழியில் எதிர்ப்பட்ட வண்டிகளில் அவர் வருகிறாரோவென்று எச்சரிக்கையாகப் பார்த்துக்கொண்டே ரெங்கராஜு சென்றான். எந்த வண்டியிலும் சாம்பசிவம் காணப்படவில்லை. செங்கற்பட்டில் இறங்கி, ரயிலடியில் ஜனங்கள் தங்குமிடங்களிலெல்லாம் போய் அவன் தேடினான். பிறகு ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு அவர்களது சிற்றூருக்கு மாலை ஆறு மணிக்குப் போய்ச் சேர்ந்தான். கனகம்மாளால் குறிக்கப்பட்ட நீலகண்டம் செட்டியாரிடம் சென்று, டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் பணம் வாங்க வந்தாரா வென்றும் அவர் எங்கிருக்கிறார் என்றும் விசாரிக்க, செட்டியார், "நீ யார்?" என்று கேட்டார். "நான் அவருடைய சேவகன். அவரை அவசரமாக அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்றான் ரெங்கராஜு. உடனே செட்டியார், "அவர் பணம் வாங்கிக்கொண்டு நேற்றைக்குச் சாயுங்காலமே புறப்பட்டு பட்டணம் போய்விட்டாரே! நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றார். அதைக் கேட்ட ரெங்கராஜு பெருத்த

திகைப்படைந்தவனாய், "நான் பட்டணத்திலிருந்துதானே வருகிறேன். அவர் அங்கே வரவில்லையே! இங்கே யிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டார்?" என்றான். "அவர் சாயுங்காலம் ஐந்து மணிக்கு குதிரை வண்டி வைத்துக்கொண்டு போய்விட்டார்; பட்டணத்துக்குப் போவதாகச் சொன்னார்; எங்கே போனாரோ எனக்குத் தெரியாது" என்றார் செட்டியார். ரெங்கராஜுவின் மனதில் இன்னதென்று விவரிக்கக் கூடாத பல சந்தேகங்களும், திகிலும், கவலையும் குடிகொண்டன. சாம்பசிவம் எங்கு சென்றாரோ, அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ, குதிரை வண்டியில் போகும்போது வழிப்பறி ஏதேனும் நடந்திருக்குமோ வென்று பலவாறு நினைத்து, வந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டு செங்கற்பட்டை நோக்கித் திரும்பினான்.

கனகம்மாள் முதலியோருடன் வந்து முந்திய நாள் விடியற் காலையில் செங்கற்பட்டில் இறங்கிய சாம்பசிவம் எங்கு சென்றார், என்ன செய்தார் என்பனவற்றைக் கவனிப் போம். தங்கம்மாளை எடுத்துச் சென்ற வண்டி மறைந்து போன பின்னரும் நெடுநேரம் வரை ஒரே நிலையில் நின்றிருந்த சாம்பசிவத்தின் மனதில், தாம் சீக்கிரம் போய் பணம் வாங்கி வாராவிடில், தமது மனைவியின் ஆபரேஷன் ஒழுங்காக நடைபெறா தென்னும் நினைவு தோன்றியது. அவர் விரைவில் தமது ஊருக்குப் போய் பணத்தை வாங்கிவர வேண்டுமென்னும் ஆவல் கொண்டவராய் ஸ்டேஷனைவிட்டு வெளியில் வந்து, குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு பதினைந்து மையிலுக்கப்பாலிருந்த பகற் கொள்ளைப்பாக்கம் என்னும் சிற்றூரை அடைந்தார். அவ்வூரில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்த நீலகண்டம் செட்டியாரிடம் சென்று தமது வரலாறுகளைச் சுருங்கக் கூறி, தமக்கு ரூபாய் ஆயிரம் அப்போதே வேண்டுமென்றும், ரூபா மூவாயிரம் பெறத்தக்க தமது வீட்டை அடமானம் வைப்பதாகவும் தெரிவித்தார். அந்த

நிஷ்டகண்டகம் செட்டியார் மேலும் கீழும் பார்த்தார்; மொட்டைத் தலையைத் தடவிக்கொண்டார்; மிகவும் அமர்த்த லாகத் திண்டில் சாய்ந்தவண்ணம், "பணமாவது காசாவது! இப்போ காலம் இருக்கிற இருப்பு ஒங்களுக் கென்ன தெரியும். பணத்தைக் கண்ட மூளியாரையா? எங்கேயும் இப்ப சுணக்கமா இருக்குது; பணம் பெறுகிறது குதிரைக் கொம்பாயிருக்கிறது எளவு; ஒங்களுக்கு ஒடனே வேணும். எங்க வூட்டுல பணம் காச்சா தொங்குது. இப்போ சரிப்படாதுங்க. அடுத்த மாஷம் சிங்கப்பூரிலே யிருந்து ஊண்டியல் வருதுங்க; அதுக்குப் பொறவால வாங்க; பார்த்துக்கிடலாம்" என்றார். அதைக் கேட்ட சாம்பசிவம் தமது அவசரத்தை மென்மேலும் திரும்பத் திரும்ப விளக்கி செட்டியாரிடம் கெஞ்சி மன்றாடினார். அதிகமான வட்டி தேவையானலும் கொடுப்பதாகக் கூறினார். உடனே செட்டியார், "இதென்ன ஐயா எளவு! தொல்லையா போச்சு; பணமில்லேன்னா விடமாட்டேங்கிரே! அந்த முள்ளிக்கா யத்ததென வூட்டுக்கு எவன் ஐயா ஆயிரம் ரூவா கொடுப்பான். மூணுகாசுகூட அது தாளாதையா; வேலெயப் பாரையா" என்றார். உடனே சாம்பசிவம் வீடு, நிலம் முதலிய எல்லாவற்றையும் அடமானம் வைப்பதாகவும் இரண்டு வட்டி கொடுப்பதாகவும் ஆயிரத்துக்கு இரண்டாயிரமாக எழுதிக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொள்ள, செட்டியார் அரை மனதோடு அதற்கு இணங்கினார். பிறகு அதற்குத் தேவையான தஸ்தாவேஜு எழுதப்பட்டது. அந்த ஊருக்கு நான்கு மயிலுக்கப்பாலுள்ள சப்ரிஜிஸ்டரார் கச்சேரியில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. மாலை 5-மணிக்கு, செட்டியார் ரூபா ஆயிரத்தையும் பணமாக எண்ணிவிட்டார்; சாம்பசிவம் அதை எடுத்து பெருத்த மூட்டையாகக் கட்டிக் கொண்டு குதிரை வண்டியில் உட்கார்ந்தார். இரவு ஒன்பது மணிக்கு வண்டி செங்கற்பட்டு வந்து சேர்ந்தது. சாம்பசிவம் கீழே இறங்கி பணமூட்டையையும் கையிலெடுத்துக்கொண்டு ரயில்

ஸ்டேஷனுக்குள் போய், சென்னைக்குப் போக டிக்கெட் கேட்டார். உள்ளே இருந்த குமாஸ்தா சாம்பசிவையங்காரைப் பார்த்து நகைத்து ஏளனம் செய்து, "அதோ அடுத்த அறையில் டிக்கெட்டு கொடுக்கிறார்கள்; போய் வாங்கிக்கொள்ளும்" என்றார். அதை உண்மையென்று நம்பிய சாம்பசிவம் அடுத்த அறைக்குப் போய் பார்க்க, அதற்குள் மனிதரே காணப்பட வில்லை, அதில் விளக்குகள், எண்ணெய், கயிறுகள், கடப்பாரைகள் முதலிய பலவகைப்பட்ட சாமான்கள் நிறைந்திருந்தன. அவர் அதை பார்த்துவிட்டுத் திரும்பிவந்து ஸ்டேஷன் மாஸ்டரிருந்த அறைக்குப்போய் கேட்க , அவர் "இனிமேல் நாளைக்குத்தான் வண்டி. சென்னைக்குப் போகும் வண்டி விடியற்காலம் ஐந்தரை மணிக்கு இங்கே வரும்" என்று சொல்லிவிட்டு ஜன்னல்கள், கதவு முதலியவற்றை மூடி உட்புறம் தாளிட்டுக்கொண்டார். அந்த மறுமொழியைக் கேட்ட சாம்பசிவம் தவிக்கிறார்; உடனே இரண்டு இறகுகள் தமது புஜங்களில் முளைத்திருந்தால், அப்போதே பறந்து போய்விடலாமே என்று நினைக்கிறார். அப்போது தமது மனைவி, உயிருடன் இருக்கிறாளோ, அல்லது விண்ணுலக மடைந்தாளோ; டாக்டர் துரை மார்பைக் கீறி எலும்புகளை எடுத்தாரோ இல்லையோ என்று பலவாறு நினைத்து வண்டிக்காரர்களிடம் கேட்டார். அங்கிருந்து சென்னை நெடுந்தூரமாதலால், ஒருவரும் வரத் துணியவில்லை. அவ்வூரில் வாடைகைக்கு மோட்டார் வண்டி அகப்படுமோ என்று விசாரித்தார். அது மருந்துக்கும் அகப்படாது என்னும் மறுமொழி கிடைத்தது. என்ன செய்வார்! இன்னதைத்தான் செய்வதென்று அறியமாட்டாமல் நெடுநேரம் அங்கு தமது பளுவான மூட்டையைத் தூக்கிக்கொண்டே அலைந்தார். விடியற்காலம் ஐந்தரை மணிவரையில் ஸ்டேஷனில் இருப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை. அவர் தமது பண மூட்டையை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு

மாற்றும்போது ரூபாய்கள் கலகலவென்று ஓசை செய்ததைப் பலர் கேட்டு, யாரோ பெரிய மனிதர் பெருத்த பண மூட்டையோடு ஏதோ வியாபாரத்தின் பொருட்டு செல்கிறா ரென்று நினைத்துக்கொண்டனர். கடைசியில் சாம்பசிவம் கீழே உட்கார்ந்துகொள்ள நினைத்தார். அவர் முதல்நாட் பகலில் போஜனம் செய்தவர்; மூன்று நாட்களாக கண்களையே மூடி யறியாதவர்; பெண்ணையும், மனைவியையும் , மருமகப்பிள்ளையையும் நினைத்து நினைத்துச் சோர்வடைந்திருந்தார். அவரது மூளை முற்றிலும் குழம்பிக் போயிருந்தது. அப்போதைக்கப்போது அவரது தெளிந்த அறிவும் பிறழ்ந்துகொண்டே வந்தது. தேகமும், மனமும் கட்டினில் நில்லாமல் தவித்தன. அந்த நிலைமையில் அவர் மூன்றாவது வகுப்பு வழிப்போக்கர்கள் தங்கும் இடத்திற்குச் சென்று கீழே உட்கார்ந்துகொண்டார். அந்த இடமோ மாட்டுக் கொட்டிலைப்போல இருந்தது. அதில் குப்பை, செத்தை, வெற்றிலைப் பாக்குத் தாம்பூலம், வாழைப்பழத்தோல், பட்டாணிக் கடலைத் தோல் முதலிய சாமான்கள் நிறைந்திருந்தன. மேலே ஆறுபட்டை லாந்தலொன்று முணுக்கு முணுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அதில் எரிந்துகொண்டிருந்த சுடர் எங்கிருந்த தென்பதை இன்னொரு விளக்கின் உதவியாலேயே அறிதல் வேண்டும்; அங்கு அப்போது வேறு எவரும் இருக்கவில்லை. சாம்பசிவம் கீழே உட்காந்தவுடன், அவரது தேகத்தில் களைப்பு மேலிட்டது. ஆகையால், படுத்துக்கொள்ள வேண்டுமென்னும் விருப்ப முண்டாயிற்று; தலையணையைப் போல மிகவும் பருமனாயிருந்த பண மூட்டையைத் தலையின் கீழ் வைத்துக்கொண்டு படுத்தார். அந்தப்பணமே தங்களது உயிராதலால் அதை ஜாக்கிரதையாகக் கொண்டுபோக வேண்டுமே யென்னும் கவலை கொண்டவராய், படுத்தபடியே தமது இரண்டு கைகளாலும் மூட்டையை அணைத்து இரு கைகளின் விரல்களையும் ஒன்றாகப் பின்னிக்கொண்டார்.

உடனே ஐந்து நிமிஷத்தில் துயில்வந்து அவரை அழுத்தியது. என்றாலும், அவர் மிகவும் வருந்திச் சமாளித்துக் கொண்டு, துயிலாமல் அன்றிரவு முற்றிலும் அவ்வாறே கண்விழித்து இருக்க வேண்டு மென்று உறுதி செய்து கொண்டிருந்தார். அவ்வாறு கால் நாழிகை கழிந்தது. அப்போது ஒரு பெண்பிள்ளை ஒரு சிறிய மூட்டையை எடுத்துக்கொண்டு அங்கு வந்து, சாம்பசிவத்தின் காலடிக் கருகில் உட்கார்ந்து வெற்றிலைபாக்குப் போட்டுக் கொண்ட வண்ணம், "சாமி! கூடுவாஞ்சேரிக்கு வண்டி எப்ப வரும்?" என்றாள். சாம்பசிவம் "விடியற்காலையில் வரும்" என்றார். அவள் வெற்றிலைப் பாக்கைப்போட்டுக்கொண்டு அவரது காலடிக்கருகில் படுத்துக்கொண்டாள். அதன் பிறகு கால்நாழிகை கழிந்தது. அவள் அந்த ஊரையே பெயர்த்தெறியும் படியான குறட்டைகளை தன் நாசிகளின் வழியாக வெளிப்படுத்த ஆரம்பித்தாள். அப்போது பிரயாணியைப் போலக் காணப்பட்ட ஒருவன் அங்கு வந்து, சாம்ப சிவத்தினருகில் வலப்பக்கமாக உட்கார்ந்து பட்டாணிக்கடலை தின்ன ஆரம்பித்தான். அவன் அந்த வேலையை கால் நாழிகை வரையில் செய்துவிட்டு அவரது தலைப்பக்கத்தில் இரண்டு முழத்திற்கப்பால் படுத்துக்கொண்டு பாட்டுப் பாட ஆரம்பித்தான். தேவாரம், திருப்புகழ், இந்துஸ்தானி, கெஜல் முதலிய பாட்டுகளை ஒரு நாழிகை நேரம் பாடிய பின் அவன் கடைசியில் ஓய்ந்து போய் குறட்டை விடத்தொடங்கினான்.

அப்போது இரவு மணி ஒன்றாயிற்று; சாம்பசிவம் மூன்றாம் ஜாமம் நித்திரையி லாழ்ந்திருந்தார். பட்டினியாலும், நெடுநாட்கள் துயிலாமையாலும், அலட்டலினாலும், அயர்ந்திருந்த மனிதராதலின், அவர் ஆழ்ந்த நித்திரையில் பிரம்மாநந்தமாக அழுந்திக் கிடந்தார். ஆனால், அவர் துயிலுவதாக எவருக்கும் தெரியவில்லை. அவரது ஆழ்ந்த துயில் சிறுகச் சிறுகக் கலைய வாரம்பித்தது. அரைத்துயிலும் அரை உணர்வுமாக விருந்தது. அப்போது வலது உள்ளங்காலில்

ஒருவகையான குறுகுறுப்பு உண்டாயிற்று; ஒரு நாய் தனது நாக்கால் நக்குவதால் உண்டாகும் குறுகுறுப்பும் கூச்சமும் ஒருவகையான இன்பமும் துன்பமும் கலந்து தோன்றின. அதனாலேயே அவரது ஆழ்ந்த துயில் கலைந்தது. மேன்மேலும் அந்த இன்பகரமான உணர்ச்சி அதிகரித்துத் தோன்றியது. அது கனவோ என்று அவர் நினைத்தார்; அதனாலுண்டான குறுகுறுப்பைத் தாங்கமாட்டாது அவர் சிறிது நேரம் தவித்தார். ஏதோ நாய் தான் அவ்வாறு தமது காலை நக்குவதாக நினைத்து "சூ" என்று அதட்டிக்கொண்டு சடக்கென்று எழுந்து உட்கார்ந்து தமது கண்களைத் துடைத்துக் கொண்டு கால்பக்கம் பார்த்தார். நாய் காணப்படவில்லை. அவரது காலடியில் படுத்திருந்த ஸ்திரீ குறட்டை விட்டுத் துயின்றுகொண்டிருந்தாள். ஒருகால் நாய் ஓடிப்போயிருக்குமோ வென்று அவர் நினைத்தார். ஆனால், அவ்வளவு சீக்கிரமாக அது ஓடி மறைந்து போனதைப் பற்றி வியப்படைந்த வராய் முன்போலவே படுத்துக்கொண்டார். அவர் மூட்டையின் மேல் வைக்கப்போன தலை கருங்கல் தரையில் படேரென்று மொத்துண்டது. மூட்டை அப்பால் நழுவி போயிருக்குமோ வென்று கைகளால் தரையைத் தடவி மூட்டையைத் தேடினார். அது கைகளில் தட்டுப்படவில்லை. திடுக்கிட்டு, பெரிதும் வியப்படைந்தவராய் சாம்பசிவம் எழுந்து தலைப் பக்கம் பார்த்தார். பணமூட்டையும் காணப்பட வில்லை, அங்கு படுத்திருந்த மனிதரும் காணப்படவில்லை. நாற்புறங்களையும் சுற்றிப்பார்த்தார். எங்கும் ஒரு மனிதராகிலும் காணப்படவில்லை. மூட்டை போன விடமும் தெரியவில்லை. தமது காலடியில் பெண்பிள்ளை மாத்திரம் குறட்டை விட்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளிடமும் பணமூட்டை காணப்படவில்லை. தாம் கனவிலிருக்கிறோமோ, அல்லது விழித்திருக்கிறோமோ வென்று சந்தேகப்பட்டார். இரண்டொரு நிமிஷநேரம் வரையில் உருட்டி உருட்டி விழித்து நாற்புறங்களையும் பார்த்தார். மிகவும் குழம்பி சிதறிப்போய்க்கிடந்த அவருடைய

மூளையை அந்தப் பயங்கரமான அதிர்ச்சி வலுவாகத் தாக்கி சின்னாபின்னமாக்கிவிட்டது. அது எந்த இடம் என்பதும், தாம் யாரென்பதும், எங்கிருக்கிறோ மென்பதும் அவருக்குத் தோன்றவில்லை. அவரது பழைய நினைவுகளே மறைந்து போய், புத்தியும் பேதுற்றது; அவர் உண்மையில் சித்தப்பிரமை கொண்டுவிட்டார். கீழே விரிக்கப்பட்டிருந்த அங்க வஸ்திரத்தையும் எடுக்காமல் எழுந்து இடுப்புத் துணியோடு வெளியில் நடந்தார்; எங்கும் இருள் சூழ்ந்திருந்தது; அந்த ஊருக்கு வடக்குத் திசையில் சென்னை இருந்தது. அவர் அந்த ஊருக்குத் தெற்குத் திசையாக நடந்து வயல்களிலும் வரப்புகளிலும் விழுந்தெழுந்து போக ஆரம்பித்தார்; தாம் இன்னவிடத்திற்குத் தான் போகி றோமென்பதை அறியாமல் பைத்தியங்கொண்டு போய்விட்டார்.

அவரது காலடியிற் படுத்திருந்தவளே நாயைப்போல அவரது உள்ளங்காலை நக்கிவிட்டு, அவர் எழுந்திருக்கும் சமயத்தில் அப்பால் நகர்ந்து படுத்துக் குறட்டை விடுவதாகப் பாசாங்கு செய்தாள். அவர் எழுந்து கால்பக்கம் பார்த்தபோது, தலைப்பாகத்தில் தயாராக இருந்த மனிதன் மூட்டையை எடுத்துக்கொண்டு ஓசையின்றி விரைவாகப் போய்விட்டான்; ஸ்டேஷன் மாஸ்டர் சென்னைக்கு இப்போது வண்டி கிடையாதென்று சாம்பசிவத்தினிடம் சொன்ன பிறகு அவர் பணமூட்டையைத் தூக்கிக்கொண்டு வண்டிக்காக அலைந்த போது, பணம் கலகலவென்று ஓசை செய்ததென்று சொன்னோமல்லவா? அப்போது அதைக் கவனித்திருந்த ஒரு போர்ட்டரே தன் மனைவியின் உதவியால் அவ்வளவு சாமர்த்தியமாகத் திருடிக்கொண்டு போனவன்.

★★★★★★★★★★

22வது அதிகாரம்

# வேம்போ கரும்போ

இராயப்பேட்டை வைத்தியசாலையில் மிகுந்த நீளமும் அகலமுமான கூடங்கள் பல இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் இருபது அல்லது இருபத்தைந்து இரும்பு கட்டில்கள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டிலிலும் ஒவ்வொரு நோயாளி படுத்திருந்தான். நோயாளிகளின் தேவைகளைக் கவனித்து அவர்களுக்குரிய பணிவிடைகளைப் புரியும் பொருட்டு ஒவ்வொரு அறைக்கும் இரண்டிரண்டு மாதர் நியமிக்கப்பட்டிருந்தனர். சென்னை வைத்திய சாலைகளில் அவர்கள் பெரும்பாலும் வெள்ளைக்கார (சட்டைக்கார) வகுப்பைச் சேர்ந்த யௌவன மடந்தையராகவே இருந்தனர். அவர்கள் நிரம்பவும் அழகுவாய்ந்த பக்குவகாலப் பெண்களாக விருந்தமையாலும், முகவசீகரம், அன்பு தளரா முயற்சி, சலியா உழைப்பு, இரக்கம் முதலிய அம்சங்களைத் தோற்றுவித்துத் தமது கடமைகளைச் செய்யவேண்டு மென்பது வைத்தியசாலையின் முறைமை யாதலாலும், சாதாரணமாக உலக நடவடிக்கைகளில், இந்திய மக்களோடு கூடிப்பழகாத வெள்ளைக்கார மாதர், இங்கு அன்பே வடிவாகக் காணப்பட்டு, பணி புரிவது முற்றிலும் புதுமையா யிருத்தலினாலும் பிணியாளருக்கு அந்த ஸ்திரீகள் அமுத சஞ்சீவியோ, கந்தருவ மங்கையரோ, காமதேனுவோ, கற்பகத்தருவோ வென்னக் காணப்பட்டு காலத்திற்குரியவாறு உதவி புரிந்து இன்பங் கொடுத்து வந்தனர்; மருந்தினால்

குணமடைவோரினும், இத்தகைய அணங்குகளின் மனமார்ந்த உபசரணையினால் குணமடைபவரே பெரும்பாலாரென மதித்தல் வேண்டும்.

இத்தகைய அறையொன்றில் விடிப்பட்டிருந்த வராகசாமி உயிருட னிருக்கிறானோ, அல்லது உயிர் துறந்து விட்டானோ வென்று ஐயுறத் தகுந்த நிலைமையில் கட்டிலொன்றில் படுத்திருந்தான். அவனது உடம்பில் ஏராளமான காயங்கள் நிறைந்திருந்தன. சாம்பசிவம், கனகம்மாள், சாமாவையர் ஆகிய மூவரும் வந்து அவனைப் பார்த்து விட்டுச் சென்றபிறகு, அவன் கட்டிலோடு தனிமையான வேறோர் அறைக்கு நகர்த்தப்பட்டான். அவ்விடத்தில், அவனது முழங்காலில் முறிபட்டுப் போயிருந்த எலும்பு சரியாக வைத்துக் கட்டப் பட்டது. அந்த நிலைமையில் அவனை மேலும் அலட்டுதல் கூடாதென நினைத்த டாக்டர், அவனை அவ்விடத்திலேயே தனிமையில் விடுத்திருந்தார். அவன் கண்களைத் திறவாமலும், அசையாமலும் அவ்வாறே இரவு பகலாய் உணர்வற்றுப் படுத்திருந்தான். அவன் இனி பிழைக்கமாட்டா னென்பதும், பிழைத்தால் அது தெய்வச் செயலென்பதும் பெரிய துரையின் அபிப்பிராயம். பெரியதம்பி மரக்காயரது பங்களாவில் நோய் கொண்டு படுத்திருந்த மேனகா வென்னும் பெண்ணின் கணவனே அவனென்பதை அறிந்த பிறகு டாக்டர் துரைஸானி, அவனிடம் பெரிதும் இரக்கங்கொண்டு அவனது விஷயங்களை மிகுந்த அபிமானத்தோடு பார்த்து வந்தாள். டாக்டர் துரையினிடத்தில் அவனது குடும்ப விஷயங்களை யெல்லாம் கூறி, அவனுக்கு எண்ணிறந்த வசதிகளையும் ஏற்பாடுகளையும் செய்வித்தாள்; மிகவும் விலையுயர்ந்த மருந்துகளைப் பிரயோகிக்கும்படி செய்தாள்; தனிமையிலிருந்த அறையிலேயே அவர்கள் அவனைச் சந்தடியும், சலனமுமின்றி, சுகமாக விடுவித்து வைத்தனர். அவனுக்குரிய பணிவிடைகளைச் செய்யவும், இரவு

பகலாய்க் காத்திருந்து மணிக்கு மணி மருந்துகளைச் செலுத்தவும் ஆயத்தமாக ஒரு வெள்ளைக்கார பணிமகள் அவனுக்காகப் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்டாள். அவ்வாறு இரண்டு மூன்று நாட்களாயின. கடுமையான ஜுரம் தலைகாட்டியது. இரணங்கள் யாவும் சீழ் கோர்த்துக்கொள்ளும் நிலைமை யடைந்தது, விண் விண்ணென்று தெறித்து பொறுக்கலாற்றா நோவை யுண்டாக்கின. மூளை சிதறிப்போயிருந்தது. அவன் பிதற்ற வாரம்பித்து , "அடி சண்டாளி! துரோகி! தப்பியோடிப் போய்விட்டாயோ! என்மேல் மோட்டார் வண்டியை வேண்டு மென்றே ஏற்றி என்னைக் கொல்ல நினைத்தாயோ! ஆகா! மாயாண்டிப் பிள்ளையின் மயக்கமா! ஒரே அடியில் மண்டையைப் பிளந்திருப்பேனே! திண்டென்ன! தலையணை களென்ன! அலங்காரமென்ன! என்னைக் கண்டு கண்ணை மூடிக்கொள்ளு கிறாயோ?" என்று கூறுகிறான். பற்களை நற நறவென்று கடித்து ஓசை செய்கிறான். முக்கல், முனகல் முதலிய விகாரக் குறிகள் உண்டாக்கின. உடம்பு சிறிதளவு புரளுகிறது. வெள்ளைக்காரப் பணிப்பெண்ணோ இமை கொட்டாமல் அருகில் உட்கார்ந்திருந்து விலையுயர்ந்த அரிய மருந்துகளை விடாமுயற்சியோடு செலுத்தி, நிமிஷத்திற்கு நிமிஷம் காணப்பட்ட முகமாறுபாடுகளை மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்தவண்ணம் பெரிதும் கவலை கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். காலையிலும் மாலையிலும் பெரிய டாக்டரும், டாக்டர் துரைஸானியும் வந்து அவனது நிலைமையை நன்றாக ஆராய்ச்சிசெய்து புதிது புதிதான மருந்துகளைத் தயாரிக்கச்செய்து பலவாறு பிரயோகிக்கச் செய்தனர்; சாமாவையர், பெருந்தேவியம்மாள் முதலியோர் எவரும் நாலைந்து நாட்கள் வரையில் அங்கு வரக்கூடாதென்று கட்டளையிட்டனர். அந்தப் பயங்கரமான நிலைமை ஏழெட்டு நாட்கள் வரையில் நீடித்திருந்தது. ஓயாமல் செலுத்தப்படும்

திறமையான மருந்துகள் அவனது புண்களைச் சிறுகச்சிறுக ஆற்றிக்கொண்டுவந்தன; உடம்பில் முற்றிலும் ஓய்ந்து போயிருந்த இரத்த ஊற்றையும் ஊக்கிப் பெருக்கின. சீர் குலைந்து கிடந்த மூளையும் அறிவும் சிறிது செவ்வைப்பட்டன. அவனும், தனது உணர்வைப் பெற்று கண்களைத் திறந்து நாற்புறங்களையும் நோக்கினான். மின்சார விளக்கின் வெளிச்சம் பளிச்சென்று பிரகாசித்துக் கண்ணைப் பறித்தது. அதைத் தாங்கமாட்டாமல் அவனது கண்கள் சோர்வடைந்து உடனே மூடிக்கொண்டன. தான் நோய் கொண்டு ஏதோஓர் அறையில் கட்டிலில் படுத்திருப்பதாக அவன் நினைத்தான்; அவ்வாறு சிறிது நேரம் கழிந்தது. தனது நினைவு அப்போது நன்றாக உண்டாயிற்று. தான் கடற்கரையில் மேனகாவைக் கொல்ல முயன்றதும், அப்போது தான் கீழே விழுந்து மோட்டார் வண்டியில் அறைபட்டதும் நினைவிற்கு வந்தன. தனது கட்டிலிற்கருகில் யாரோ ஒருவர் உட்கார்ந் திருப்பதாகவும், அவர் பல நாட்களாக அருகிலிருந்து தனக்கு இன்பமுண்டாக்கி வருவதாகவும் அவனது மனதில் கனவைப்போன்ற ஓர் எண்ணம் உண்டாயிற்று. அத்தகைய பேருபகாரி யாவர் என்பதை அறிய நினைத்து, அவன் தனது கண்களை இன்னொரு முறை திறந்து அவரிருந்த பக்கத்தில் நோக்கினான். கட்டிலினருகில் போடப்பட்டிருந்த நாற்காலி யொன்றில் தொப்பி முதலியவற்றை யணிந்த ஓர் அழகிய வெள்ளைக்கார பெண் மயிலாள் மிகவும் கவலைகொண்ட முகத்தோடு உட்கார்ந்திருக்கக் கண்டான். அந்தப் பெண் அவன் மனதில் எழும் நினைவை வெளியிடாமுன்னரே ஞான திருஷ்டியால் அதையுணர்ந்து அவனுக்குத் தேவையான வற்றைச் செய்ய ஆயத்தமா யிருப்பவளாய்க் காணப்பட்டாள். அவளது முகம் கபடமற்றதும் நிரம்ப வசீகரமானதுமாய்க் காணப்பட்டது. எனினும், பல நாட்களாக இரவு பகல் காத்திருப்பதனால் அவளது முகம் வாட்டமடைந்திருப்பது

போலத் தோன்றியது. அவன் தன்னை உற்று நோக்கியதைக் கண்ட அப்பெண்மணி, சுருக்கென எழுந்து கட்டிலிற்கருகில் நெருங்கி நின்று, "என்ன வேண்டும்?" என்று அன்பொழுகக் கேட்டாள். அவளது குரல் அமுதம் சொரியப்படுதலைப்போல செவிகளுக்கு இனிமை யூட்டியது. வராகசாமி உடனே தனது கண்களை மூடிக்கொண்டான். உலகிலுள்ள பெண்கள் யாவரும் கற்பென்பதே அற்ற வஞ்சகரென்று நினைத்து அவன் அருவருப்புற்று அவளது முகத்திலும் விழிப்பது பாபமென உறுதியாக எண்ணி யிருந்தவனாதலின், அவன் தனக்கருகில் பூரண சந்திரோதயம்போலக் காணப்பட்ட கட்டழகியை, கூற்றுவனிலும் கொடியவளென மதித்து தனது கண்களை இறுக மூடிக்கொண்டான். நிற்க, இவன் இந்திய மாதரைக் காட்டிலும், ஐரோப்பிய மாதர் மீது அதிகமான பகைமை கொண்டிருந்தான். ஏனெனில், ஐரோப்பிய மாதர் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் பெண் தன்மைகளை விடுத்து அன்னிய மனிதரோடு பழகி நமது தேசத்துப் பெண்களுக்குத் துர் ஆசாரங்களில் ஆசை யுண்டாகும்படி செய்கிறார்களென்ற நினைவைக் கொண்டவனாதலின், அவன் வெள்ளைக்கார மகளிரை விஷத்தினும் கொடியவரென நினைத்து அவர்களின் மீது தீராப்பகைமை கொண்டிருந்தான். ஆதலின், அவளது அன்பு நிறைந்த கேள்வி அவனது மனதின் அமைதியைக் குலைத்துப் புண்படுத்திவிட்டது. அவன் திரும்பவும் களைப்படைந்து கண்களை மூடிக்கொண்டு அயர்ந்தான். அருகில் நின்ற வெள்ளைக்கலை உடுத்திய வெள்ளை மடவன்னம், பஞ்சினும் பூவிதழ்களினும் மிருதுவான தனது கரத்தால் அவனது நெற்றி, கன்னங்கள் முதலியவற்றைத் தடவினாள். ஜுரநோய் கொண்டவன் மார்பில் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, பன்னீர் முதலியவை கலக்கப்பட்ட சந்தனம் பூசப்படுதலைப்போல அந்த வருடல் அவனை இன்பக் கடலில் ஆழ்த்தியது ஆயினும், தெய்வகானம் போன்ற அவளது

தீங்குரலே, மந்திர உச்சாடனம் போல, அவனது பிணியைத் துரத்தியதாயினும், அவனது மனம் மாத்திரம் மிகுந்த ஆத்திரமடைந்தது. "எங்கே போனாலும் பெண் பீடைகள் மனிதரை விடமாட்டேனென்கின்றனவே! இவர்களுக்குப் பயந்து மனிதர் எமலோகத்தில் ஓடி ஒளிந்து கொண்டாலும் இவர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறதே! சே! சே! என்ன உலகம்! வைத்திய சாலையில் கூடவா இவர்களுடன் கூட இருந்து அழவேண்டும்! ஏன் ஆண்பிள்ளைகளை இங்கு நியமிக்கக் கூடாது? இந்த வேலைக்காரரே மகா காமதுரர்கள். ஒரு நொடியேனும் பெண் பிள்ளைகளை அப்பால் விடுவதில்லை. பெண் பித்துப் பிடித்தவர்கள்! இப்படி நோயாளிக் கருகில் யௌவனப் பெண்களை வைத்தால், அவர்களுடைய பலஹீனமான நிலையில் அவர்களுடைய மனதில் ஸ்திரீ சபலம் ஏற்படுமானால், அவர்களுடைய நோய் அதிகப்படுமன்றி விலகுமா? ஆண்பிள்ளைகளின் பணிவிடைகளிலும் பெண் பிள்ளைகளின் பணிவிடைகள் சிறந்தனவாயினும், பின்னவர் களால் உண்டாகும் தீமையே பெரிய தென்பதை இந்த இங்கிலீஷ் வைத்தியர்கள் உணராது போனதென்ன! நோயாளிகள் எப்படி நாசமாய்ப் போனால் அவர்களுக்கென்ன! தாங்கள் வேலை செய்யும் இடங்களில் கூட பெண்கள் எதிரில் நிற்பது அவர்களுக்குச் சுகமாக இருக்கிறது. அவ்வளவே அவர்களுடைய கோரிக்கை; இந்த வெள்ளைக் காரப் பெண்ணின் துடுக்கையும் துணிவையும் என்னவென்று சொல்வது! நான் இவளைப் பார்த்தவுடன் எனக்கு என்ன தேவை என்று இவள் கேட்டது நியாயமே; அதன் பிறகு நான் கண்களை மூடியதைக் கண்ட இவள் என்னுடைய நெற்றியையும், கன்னங்களையும் தடவிக் கொடுத்ததன் காரணமென்ன? அவ்வாறு செய்யும்படி இவளைக் கேட்டவர் யார்? அது இவளுடைய கடமையி லொன்றோ? இவர்கள் நோயாளிகளிடத்தில் அவ்வளவு அந்தரங்கமான அன்பைக்

காட்டுகிறார்களாம்! வேஷக்காரர் கள்! பெண்களே, வெளிப்பகட்டு வடிவம்; அதிலும் வெள்ளைக் காரப் பெண்களோ சாகசத்தில் கைதேர்ந்து முதற்பட்டம் பெற்ற கபட நாடக வேஷங்கள். நான் யாரோ அன்னியன்; என்னை முன்பின் அறியாதவளான இவள், ஆயிரம் வருஷகாலம் பழகியதாய், மனைவி முதலியோரைப்போல வித்தியாசமின்றி அருகில் வந்து தடவிக் கொடுக்கிறாளே! இந்த வைத்திய சாலையில் தினம் ஒவ்வொருவனுக்கு இப்படித் தடவிக் கொடுத்து இவளுடைய அன்பு ஆதாரங்களையெல்லாம் செலவழித்து விட்டு வீட்டுக்குச் செல்வாளாயின் அதன்பிறகு கணவனிடம், இவள் எவ்வளவு அன்பைக் காட்டப்போகிறாள். அவனுடன் சந்தோஷமாக ஒரு வார்த்தை பேசத்தான் இவளுக்குப் பொறுமை இருக்குமா! ஆகா! இவளைப் பெண்டாட்டியாக அடைபவன் வாழ்ந்துபோவான்!" என்று பல்வேறு நினைத்து அந்தப் பெண்ணைத் தன் மனதிற்குள் இகழ்ந்தவண்ணம் அவன் துயிலில் ஆழ்ந்தான். அதன்பிறகு இரண்டொரு நாழிகை நேரம் கழிந்தபின் அவன் விழித்துக்கொண்டு கண்களைத் திறப்பான். ஜெகஜ் ஜோதியைப்போலத் தன்னை விட்டு அகலாமல் அறையிலிருந்த அந்த வெள்ளை மடமயிலை அவன் ஒரு பெருத்த பூச்சாண்டியாக மதித்து அவளைப் பார்க்கவே அஞ்சினான். அவளிருந்த பக்கம் நோக்கவும் அவனது கண்கள் கூசின; உடனே கண்களை மூடுவான்; பழைய நினைவுகள் புற்றிலிருந்து எழும் ஈசல்களைப்போல மனதில் எழுந்தன; தனது மனைவியின் விபச்சாரச் செயல்களும், மாயாண்டிப் பிள்ளையின் காதற் கடிதங்களிலுள்ள சொற்களும் அகக்கண்ணின் முன்னர் தோன்றி நின்று தாண்டவமாடின; அந்த நினைவுகளைத் தாங்கமாட்டாமல் அவன் மயங்கி உணர்வற்று வீழ்ந்து விடுவான்; காம்பொடிபட்ட மலரென அவனது சிரம் வாட்டமுற்று தலையணையில் சாய்ந்து கிடக்கும். அந்த மடந்தை மாறிமாறி மருந்துகளையும், பாலையும் செலுத்தி,

அயர்வின்றி எப்போதும் மாறுபடா ஆதாரத்தோடு அவனைக் குணப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள். அவளாற் செலுத்தப் படும் மருந்து அவனது பலஹீனத்தைப் போக்கடித்து அங்கங்களுக்கு வலுவூட்டிக்கொண்டே வந்தது. முதலில் அடிக்கடி உண்டான சோர்வும், உறக்கமும் நெடுநேரம் இடைவிட்டு வரத் தொடங்கின. அவளால் திரும்பிக் கொணரப்படும் நல்ல நிலைமை, அவன் அவளைப் பார்த்த மாத்திரத்தில் கெட்டுப்போய்க்கொண்டிருந்தது. அவளைக் காணும்போதெல்லாம் அவனது மனதில் பழைய நினைவுகளே தோன்றி வதைத்தன. முற்றிலும் வஞ்சகியான தனது மனைவி மேனகா தஞ்சையிலிருந்து தனக்கு அனுப்பிய கடிதத்தை தான் உண்மையென்று நம்பி ஏமாறிப்போனதை நினைத்து நினைத்து தனது மூட மதியை நிந்தித்துக்கொண்டான்; அவள் கல்லால் அடிபட்டு இறவாமல் தப்பி இன்னமும் உலகில் உயிருடன் இருப்பதை நினைத்து ஆத்திரங்கொள்வான். தான் முற்றிலும் குணமடைந்து வெளியிற்போன பின் எப்பாடு பட்டாகிலும் அவளைக் கண்டுபிடித்து அவளைக் கொன்று விட்டு தானும் விஷத்தைத் தின்று மறிப்பதே முடிபென உறுதி செய்துகொண்டான். அவள் உயிருடனிருக்கும் வரையில் தனக்கும், தனது குடும்பத்திற்கும் நீங்காத அவமானமே உண்டாகுமென்று நினைத்துத் துடி துடித்தான். அவளைக் கொன்ற பின் தான் உயிர் வாழ்வதில் பயனில்லை யென்று நினைத்தான்; தான் அப்புறம் இன்னொரு பெண்பேயை மணக்கநேருமென்றும், அவளும் மேனகாவைப்போலவே வேசையாயிருப்பாள் என்றும் நினைத்தான். அப்போது கண்கள் தாமாகத் திறந்துகொள்ளும். உடனே எதிரிலிருந்த வெள்ளைக் காரப் பெண்ணின்மீது அவனது திருஷ்டி படும்; அவள் மகாபரிசுத்தமான குணவொழுக்கம் உடையவளைப்போல அன்பேவடிவாக உட்கார்ந்திருப்பதை அவன் காண்பான். அது புண்ணில் மிளகாய் விழுதை அப்புதலைப்போல இருக்கும்;

"எவ்வளவோ சிறந்த அழகை ஈசுவரன் இவளுக்குக் கொடுத்திருந்தாலும், வாசனையில்லாத பொன் மலரைப் போலவும், பணத்திற்காக ஆசைகாட்டும் பரத்தையைப் போலவும், பெண்களுக்குரிய அச்சம், பயிர்ப்பு முதலிய குணங்களின்றி அன்னியனாகிய என்னிடம் இருக்கிறாளே! இது என்ன ஜென்மமோ!" என்று அவன் பலவாறு நினைப்பதும், சோர்வடைந்து கண்ணை மூடுவதும், துயில்வதும், உணர்வடைவதும், எண்ணிறந்த நினைவுகளினால் வதை படுவதுமாய் மாறிமாறிச் செய்துகொண்டிருந்தான். அவ்வாறு அவனது மனத்திலும் தேகத்திலும் பெருத்த போர் நடந்துகொண்டிருந்தது. மேலும் இரண்டொரு நாட்கள் கழிந்தன. நன்றாகத் திரும்பிப் படுக்கவும், எழுந்திருக்கவும் இன்னம் அவனுக்கு வல்லமை உண்டாகா திருந்தது; உடம்பின் புண்களும் காற்பங்கே ஆறி யிருந்தன. அருகிலிருந்த தாதியைக் காண்பதனால் அவன் தனது குடும்பத்தின் நினைவைப் பெற்றுப் பெற்று மிகவும் தவித்த வண்ணம் படுத்திருந்தான்.

ஆனால், அந்த வெள்ளைக்காரப் பணிப் பெண்ணோ, ஓய்வு துயிலின்றி, இரவு பகலாய் அவனுக்கருகிலேயே இருந்து ஈன்ற தாயினும் சிறந்த அன்னையாய் அமைந்து, அவனுக்குரிய காரியங்களைச் செய்து கைம்மாறு கருதாத பேருதவி புரிந்து வந்தாள்; பல் தேய்த்துவிட்டுப் பால்புகட்டுவது முதல், இடையில் நழுவிப்போகும் வஸ்திரத்தை இருக்கிக் கட்டி உடம்பில் உட்கார்ந்து வதைக்கும் ஈயை ஓட்டுதல் வரையிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் சலிப்பின்றி உவப்போடு செய்து வந்தாள். வராகசாமியின் அறிவு தெளிவடைய அடைய, அந்தப்பெண்மணி அவனுக்குச் செய்துவந்த பணிவிடைகளின் அருமை அவனது மனதில் படவாரம்பித்தது. பெண்பாலர் யாவரும் வஞ்சகரென்னும் நினைவு அவன் மனதில் வேரூன்றி இருந்ததாயினும், அந்த வெள்ளைக்காரியின் பணிவிடைகள்

மாத்திரம் அவனுக்கு அவசியமானவையாயும் இன்பகரமான வையாயும் தோன்றின. ஆரம்பத்தில், அவளது பணி விடைகளை ஏற்றுக்கொள்ளவே அவன் மனமற்றிருந்தான். அவள் ஐந்து நிமிஷமேனும் தன்னைவிட்டு அப்புறம் போகமாட்டாளா வென்று சுவாமியை வேண்டுவான். அந்த வெறுப்பு படிப்படியாகக் குறைந்து, அவள் அப்போதைக்கப் போது கேட்ட கேள்விக்கு மறுமொழி கூற மனமற்று அவன் மௌனம் சாதித்தான். என்றாலும் அந்த தாதி தனது விஷயத்தில் பெருத்த பாடுபட்டு வருவதை அவன் நாளடைவில் நன்றாக உணர்ந்தான். அவள் சம்பளத்திற்கு வேலை செய்யும் கூலிக்காரியானாலும், தனது வேலையை அவ்வளவு திறமையாகவும் பிறர் மனதைக் கவரும்படியும் செய்வதைக் கண்டு, அவளது விஷயத்தில் ஒருவகையான நல்ல அபிப்பிராயமும், நன்றியறிவும் அவன் கொள்ள ஆரம்பித்தான். தான் அந்த வைத்தியசாலையில் இருக்கப்போகும் இன்னம் சில சொற்ப நாட்களும், அவளுடன் சாதாரணமாக இருந்துவிட்டுப் போவதனால் தனது கொள்கைக்கு எவ்விதமான கெடுதலுமில்லை யென்று அவன் நினைத்தான். தன் விஷயத்தில் எவ்விதமான குற்றமும் செய்யாதவளும், நன்மைகளையே புரிந்து உயிரை மீட்பவளுமான அவளோடு தான் பேசாமலே வருமம் பாராட்டுவது கேவலம் மிருகத்தனமென்றும், நன்றி கெட்டவன் செய்யும் காரிய மென்றும் நினைத்தவனாய், மெல்ல அவளிருந்த பக்கமாகத் திரும்பி அவளது முகத்தை உற்று நோக்கினான். அவன் தன்னோடு ஏதோ விஷயத்தைப் பற்றிப் பேச விரும்புகிறா னென்று கண்ட அந்த வெள்ளை கிள்ளை, "என்ன வேண்டும்?" என்று வினவினாள்.

உடனே வராகசாமி பலஹீனமடைந்த குரலில், "இரவிலும் பகலிலும் நீ ஒருத்தியே இங்கே இருக்கிறாயே!

உனக்கு ஓய்வு வேண்டாமா? நீ தூங்க வேண்டாமா? பகலுக்கு ஒருத்தி இரவுக்கு ஒருத்தி என்கிற ஏற்பாடு இங்கே கிடையாதா? எங்களைக் குணப்படுத்து முன் நீங்கள் வியாதியாய்ப் படுத்துக்கொள்வீர்கள் போலிருக்கிறதே! இப்படிப்பட்ட பெருத்த அக்கிரமம் நடக்குமோ! இப்படியும் வேலை வாங்குவார்களா!" என்று கூறிவிட்டு அவளது முகத்தை நோக்கினான். தான் கேட்ட கேள்விக்கு அவள் ஏதாகிலும் துடுக்கான விடை தருவாளோவென்று அவன் அஞ்சினான். அதைக் கேட்ட அந்த மங்கை ஒருவாறு கிலேசமடைந்தவளாய், அப்பாலிருந்த ஏதோ வஸ்துவை கவனிப்பவளைப்போல வேறு பக்கத்தைப் பார்த்துக்கொண்டு, "ஏராளமான சம்பளங் களை வாரிக் கொடுத்துவிட்டு எங்களைச் சும்மா உக்கார வைப்பார்களா? இப்படி ஆபத்துக் காலத்தில் இராப்பகலாய் உட்கார்ந்து உபசரணை செய்வதற்காகத் தானே எங்களுக்கு அதிமான சம்பளம் கொடுக்கிறார்கள். நல்ல தேகஸ்திதியிலிருப் பவர்கள் கஷ்டப்படாவிட்டால் நோயாளிகள் எப்படி பிழைப்பார்கள்? ஒருவர் கஷ்டப்பட்டால் தான் இன்னொரு வருக்குச் சுகமுண்டாகும். நாங்கள் இப்படிச் செய்து செய்து பழகியிருக்கிறோம். இது துன்பமாகவே தோன்றவில்லை. முதலில் இது எங்களுடைய கடமை; இரண்டாவது, இது பரோபகாரமான காரியம். பிறர் துன்பப்படுவதைக் கண்டு இரக்கங்கொள்ளாத மனிதர் மனிதராக இருக்கமாட்டார். மூன்றாவது, இந்தக் காரியம் பெண்களுக்கு இயற்கையானது. வீட்டில் புருஷன் குழந்தைகள் முதலியோர் வியாதிப் பட்டிருந்தால், அவர்களுடனிருந்து துன்பம் அநுபவிப்போர் ஸ்திரீகளே. ஆகையால், இது என் மனசுக்கு உகந்த வேலையாகவே இருக்கிறது; இதில் அக்கிரமம் ஒன்றுமில்லை" என்றாள்.

அவள் பேசியது மிக்க இன்பகரமாக இருந்தது. அவள் காரியத்தாலும், பேச்சாலும் புருஷரை ஒரு நொடியில்

மயக்கிவிடக் கூடிய மகா தந்திரி என அவன் நினைத்தான். ஆனால், உண்மையில் அவளது குணம் எப்படிப்பட்டதோ என்னும் சந்தேகம் அவனது மனதில் தோன்றியது; அவள்மீது ஒருவகை வெறுப்பும், விருப்பும் ஒருங்கே உதித்து அவன் மனதை வதைத்தன. தான் கேட்ட கேள்விக்கு அவள் துடுக்காக மறுமொழி கூறாமல், பெண் தன்மையோடு பேசியதைப்பற்றி ஒருவகையான திருப்தியும் தோன்றியது. அவன் தனது கண்களை மூடிக்கொண்டு சிறிது மௌனமா யிருந்தான். பிறகு கண்களைத் திறந்து கொண்டு, "நான் இங்கே வந்து எத்தனை நாளாகிறது?" என்று கேட்டான்.

**வெள்ளைக்காரி:-** பன்னிரண்டு நாட்களாகின்றன- என்றாள்.

**வராக:-** என்னுடைய சொந்தக்காரர்கள் யாராவது இங்கே வந்து என்னைப் பார்த்துப் போகிறார்களா?

**வெள்ளை :-** உங்களுடைய அக்காளும், சாமாவையர் என்ற இன்னொரு மனிதரும் அப்போதைக்கப்போது வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இவ்விடத்துக்கு வந்த தினத்துக்கு மறுநாள் உங்களுடைய மாமனாரும், அவருடைய தாயாரும், சாமாவையரும் வந்தார்கள் - என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி, அவர்கள் வந்தபோது என்ன நடந்ததென்பதை அறிய ஆவல் கொண்டவனாய், "அவர்கள் வந்து என்ன செய்தார்கள்? அவர்களும் தினம் தினம் வந்து கொண்டிருக்கிறார்களா?" என்றான்.

வெள்ளைக்காரப்பெண், "அவர்கள் அன்றைக்கு மாத்திரந்தான் வந்தார்கள்; இங்கே வந்தவுடன் உங்களுடைய பரிதாபகரமான நிலைமையையும் உடம்பு முற்றிலும் நிறைந்திருந்த புண்களையும் கண்டு இருவரும் விசனித்து அழுதார்கள்; கண்ணீர்விட்டுக் கதறினார்கள்; சாமாவையர்

உங்களுடைய சட்டைப் பையிலிருந்த இரண்டு கடிதங்களை எடுத்து அவர்களிடம் கொடுக்க, அவர்கள் அதிலுள்ள விஷயங்களை அறிந்து கொண்டவுடன் மிகவும் ஆத்திரமடைந் தார்கள். அவர்களுக்குப் பதினைந்து நிமிஷம் சாவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது; அது முடிந்து போன தாகையால், அவர்களை உடனே நாங்கள் வெளியிற் போகச் சொல்லி விட்டோம். அதற்கப்புறம் அவர்கள் இன்னம் வரவில்லை" என்று கூறினாள்.

அதைக் கேட்ட வராகசாமி ஒருவகையான அருவருப்பை யடைந்தான்; மேனகாவின் மீது அவன் கொண்ட வெறுப்பு அவர்கள் மீதும் சென்றது. அவர்கள் கெட்டவர்களாகையாலும், தஞ்சையில் சுயேச்சையாக அவர்கள் அவளை நாடகம் பார்க்க விட்டிருந்ததாலும், மேனகா அவ்வாறு ஓடிப்போனா ளென்றும், தங்களுக்குண்டான அவமானத்திற் கெல்லாம் அவர்களே காரணமென்றும் நினைத்து அவன் பெரிதும் ஆத்திரமடைந்தான். அந்தப் பெண்ணிடம் எதைச் சொல்லலாம் எதைச் சொல்லக்கூடாது என்பதை யோசனை செய்யாமல், அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசத் தொடங்கினான். "அவர்களுடைய விசனம் அந்த ஒரு நாளோடு முடிந்து விட்டது போலிருக்கிறது. எல்லாம் பெண்ணுக்காகப் போடும் வேஷம். மாப்பிள்ளையைப் பற்றி மாமனார்களுக்கு அந்தரங்கத்தில் அபிமானம் ஏது? பெண் இருக்கிறாளென்று நினைத்து, அவளுக்காக முதலில் பாசாங்கு செய்தார்கள் போலிருக்கிறது. பெண் போய்விட்டாள் என்பதை அறிந்தவுடன் இனிமேல் மாப்பிள்ளையின் தயவு எதற்கென்று போய்விட்டார்கள். அப்புறம் அவர்கள் ஏன் வருவார்கள்?" என்று மிகவும் குத்தலாகவும் அதிருப்தியோடும் கூறிக்கொண்டான். அதைக் கேட்ட அந்த வெள்ளைக்காரப் பெண்ணின் முகம் ஒருவகையாக மாறுதல் அடைந்தது. அவள் தனது முகத்தை அப்புறம் திருப்பி

வேறு எதையோ கவனிப்பவள்போல இருந்து விட்டு மறுபடியும் முகத்தை அலட்சியமாக அவனது பக்கம் திருப்பி, "அவர்களுக்கு என்னென்னவோ ஆபத்துக்கள் வந்து விட்டனவாம். ஆகையால், அவர்கள் உடனே ஊருக்குப் போய்விட்டார் களாம். சாமாவையர் என்பவர், டாக்டர் துரைஸானியம்மாளிடம் சொன்னாராம்?" என்றாள். அதைக் கேட்ட வராகசாமி திகைப்படைந்து, "அவர்களுக்கு என்ன ஆபத்து வந்ததாம்? அந்த விவரத்தை சாமாவையர் சொல்லவில்லையா?" என்று பரிகாசமாகக் கேட்டான்.

**வெள்ளை:-** எல்லா வற்றையும் சொன்னாராம். அவர்கள் உங்களைப் பார்க்க இங்கே வரும்போது வழியில் போலீஸார் உங்கள் மாமனாரை ஸ்டேஷனுக்குள் அழைத்துப்போய், அவரை தஞ்சை கலெக்டர், வேலையிலிருந்து விலக்கி வைத்திருக்கிறதாக அனுப்பி யிருந்த தந்தி உத்தரவைக் கொடுத்தார்களாம்.

**வராக:** - (அதிக வியப்படைந்து) என்ன ஆச்சரியம்! ஏன் அவரை வேலையிலிருந்து நீக்கினார்களாம்?

வெள்ளை:- அவர் ரஜா இல்லாமல் இந்த ஊருக்கு வந்து தம்முடைய பெண்ணை யழைத்துக்கொண்டு போனாராம். அதற்காகவும் இன்னம் ஏதோ காரணத்துக்காகவும் வேலையிலிருந்து நீக்கினார்களாம் - என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமி மிகவும் ஆச்சரியமடைந்தான். மாமனார் சென்னைக்கு வந்து பெண்ணையழைத்துப் போனாரென்பதே பொய்; அம்மாதிரி தானும், தனது சகோதரிமாரும், சாமாவையரும் நினைத்திருந்தவர்கள். மாயாண்டிப்பிள்ளையின் கடிதங்கள் கிடைத்த பிறகு அந்த எண்ணம் விலகிவிட்டது. அப்படி இருக்க, அவர் சென்னைக்கு வந்தார் என்னும் பொய்யான அவதூறு தஞ்சை கலெக்டருக்கு

எப்படி எட்டி யிருக்கும் என்று அவன் யோசித்துப் பார்த்தான்; தான் அனுப்பிய தந்தி ஒருக்கால் கலெக்டரிடம் போய்ச் சேர்ந்திருக்குமோ வென்று நினைத்தான். வேறு எத்தகைய காரணமும் தோன்றாமையால், விஷயம் அப்படித்தானிருக்க வேண்டு மென்றே அவன் உறுதியாக நினைத்து, இரண்டொரு நிமிஷம் மௌனம் சாதித்தான்; " அப்புறம் இன்னம் என்ன ஆபத்து வந்ததாம்?" என்று கேட்டான்.

**வெள்ளை:-** அவர்கள் தஞ்சையிலிருந்து புறப்பட்ட அன்று ராத்திரி, அவர்களுடைய வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து, சொத்துக்களை யெல்லாம் கொண்டுபோனது மன்றி, உங்களுடைய மாமியாரை மிகவும் முரட்டுத்தனமாக அடித்துப் போய்விட்டார்களாம். அந்தச் செய்தியும் உடனே தந்தியின் மூலமாகக் கிடைத்ததாம். உங்கள் மாமியார் பிழைக்க மாட்டார்களென்றே செய்தியைக் கேட்டு உடனே அவர்கள் போய்விட்டார்களாம் - என்றாள்.

அந்த மகா துக்ககரமான விஷயத்தைச் சொல்ல மாட்டாமல், தயாள குணமுள்ள அந்த வெள்ளைக்காரப் பெண் மிகவும் வருந்திக் கூறினாள். அவளது கண்களிலும் கண்ணீர் துளித்தது. அவள் அப்புறம் திரும்பி அதைத் துடைத்துக் கொண்டாள். அந்த விவரத்தைக் கேட்ட வராகசாமியின் மனம் ஒருவாறு கலங்கியது. அறிவும் சோர்வடைந்தது. அவன் உடனே தனது கண்களை மூடிக்கொண்டு கால்நாழிகை நேரம் உறங்கியபின் விழித்துக் கொண்டான். அப்போது அவனுக்கு மருந்தும் பாலும் கொடுக்க வேண்டிய தருணம் வந்தமையால், பணிமகள் மிகவும் அன்போடு மருந்தை உட்செலுத்தினாள். அம்மருந்து வயிற்றைப் புறட்டிய தாகையால், அவன் வாந்தி யெடுக்க முயன்றான். அவள் அனுக்கருகில் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, "வாந்தி எடுக்கவேண்டாம். சமாளித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டு அவனது மார்பைத்

தடவிக் கொடுத்தாள். அவள் தனக்கருகில் உட்கார்ந்ததால், அவன் சகிக்கவொண்ணாத ஒரு வகையான கிலேசத்தை அடைந்தான். உடனே வாந்தி சிறிதளவு வெளிப்பட்டது. அந்தப் பெண் சிறிதும் அருவருப்பின்றி அதைத் தனது கையாலேந்தி அப்புறமிருந்த பாத்திரத்தில் போட்டுவிட்டுத் தனது கையைச் சுத்தி செய்துகொண்டு வந்து அவனது வாய் முதலியவற்றைத் தனது பட்டுச் சவுக்கத்தால் துடைத்து அருகில் உட்கார்ந்து மேலும் மார்பைத் தடவிக் கொடுத்தாள். அவனது வாந்தி அவ்வளவோடு ஓய்ந்தது. அந்தப் பெண் கட்டிலை விட்டு எழுந்து எப்போது நாற்காலியில் உட்கார்ந்து கொள்வாளென்று அவன் நினைத்தான். அவள் அருமையான அழகுவாய்ந்த பதினாறு வயது பருவ மடந்தையாக இருந்தாளாயினும், மிகவும் பாக்கியம் பெற்றவனுக்கே கிடைக்கக்கூடிய தெய்வ ரம்பையைப் போல அவள் இருந்தாளாயினும், அவள் அன்னிய மாது என்னும் நினைவினால் அவன் அவளைத் தொடவும் அஞ்சினான். அவள் அன்போடு தனக்குச் செய்த உபசரணைகளைப் பற்றி, அவன் மனதில் நன்றியறிவு சுமந்த தாயினும், அவள் முற்றிலும் நாணமின்றியும், தான் அன்னியப் பெண்ணென்பதை மறந்தும் நடந்துகொள்வதைக் கண்டு, அவளது விஷயத்தில் அவன் இழிவான அபிப்பிராயம் கொண்டான். அவள் செய்ததைப்போல தனது மனைவியான மேனகா அதற்கு முன் உபசரணை செய்ததெல்லாம் உடனே நினைவிற்கு வந்தது. "எல்லாம் வேஷம்! பெண்பிள்ளைகள் இயற்கையிலேயே பாசாங்கு செய்யும் அவதாரங்கள்!" என்று அவன் நினைத்தான். உடனே அவளை நோக்கி, "நான் இனி வாந்தி எடுக்கமாட்டேன். நீ நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளலாம். என்னால் உனக்கு எவ்வளவு சிரமம்!" என்றான். அதைக் கேட்ட மங்கை உடனே எழுந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சற்று முன் உட்கொண்ட மருந்தினால் வராகசாமி ஒரு விதமான சோர்வையும், சிறிதளவு

மயக்கத்தையும் அடைந்து கண்களை மூடிக்கொண்டு அரை நாழிகை நேரம் தூங்கி முன்னிலும் அதிகமாகத் தெளிவடைந்து விழித்துக்கொண்டான். அந்தப் பெண் சுவரில் தீட்டப்பட்ட பதுமைப்போல அசைவின்றி தன்னையே கவனித்த வண்ணம் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனது நினைவு தன் மாமனாரின் விஷயங்களிற் சென்றது. அவர்களைப் பற்றி அந்தத் தாதிக்கு இன்னமும் ஏதேனும் விவரம் தெரிந்திருக்கலாம் என்று நினைத்தவனாய், "மாமனாரைப்பற்றி அப்புறம் ஒரு செய்தியும் கிடைக்க வில்லையா?" என்றான் வராகசாமி.

**வெள்ளை:-** ஒன்றும் தெரியவில்லை - என்றாள்.

**வராகசாமி:-** சரி; எப்படியாவது போகட்டும். கெட்டவர்களை சுவாமி எப்படியும் தண்டித்து விடுவார் - என்றான்.

அதைக் கேட்ட வெள்ளைக்காரப் பெண், "நீங்கள் அப்படிச் சொல்வது சரியல்ல; உங்களுடைய மாமனாருக்கு நேர்ந்த விபத்துக்களைக் கேட்ட அன்னியர்களான எங்களுக்கே சகிக்கவில்லையே. நம்முடைய பகைவனுக்கு எவ்விதமான துன்பம் வந்தாலும், நாம் வருத்தப்படுவோமே. அப்படி இருக்க, உங்கள் விஷயத்தில் எவ்விதமான குற்றமும் செய்யாத மாமனார் விஷயத்தில் நீங்கள் இரக்கங்கொள்ளாமல் அதைப் பற்றி திருப்தியடைவது தருமமல்ல" என்றாள்.

**வராகசாமி:-** நீ சொல்வது உண்மைதான்; பொதுவான தருமமும் அதுதான்; நீ மிகவும் தயாளமான மனதைக் கொண்டவள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால், அவர்களுடைய ரகசியமான செய்கைகளை நீ அறிந்தால், அவர்கள் மேல் உனக்கு இவ்வளவு இரக்கம் தோன்றாது. அந்த ரகசியங்களை யெல்லாம் வெளிப்படுத்த எனக்கு மனமில்லை. பொதுவாக மனிதரோ, அல்லது வேறு எந்த ஜீவனோ துன்பப்படுவதைக் காணும்போது மனதிளக வேண்டியது

அவசியந்தான். ஆனால், குற்றம் செய்தவர்களை நியாயாதிபதி தண்டித்தால், அந்தத் தண்டனை பொருத்தமான தென்று தானே எல்லோரும் மதிக்கிறார்கள். விஷமுள்ள பாம்பு, தேள் முதலிய ஜெந்துக்களை இரக்க மின்றி மனிதர் அடித்துத் துகைய லாக்குகிறார்களே! அவைகள் மரணவேதனை அடையும்போது நம் மனம் வருத்தமடைந்தாலும், அந்தத் தண்டனையை நாம் நியாயமான தென்றே நினைக்கிறோ மல்லவா! அதைப்போல, அவர்களும் அவர்களுடைய பெண்ணும் எவ்விதமான மனிதர்கள் என்பது மற்றவர்களைவிட எனக்கு அதிக நன்றாகத் தெரியும் ஆகையால், என் மனம் அப்படி நினைத்தது. மனச் சாட்சியை விலக்க முடியுமா? - என்றான்.

அதைக் கேட்ட அந்த வெள்ளை மடமங்கை ஒருவகையான கிலேசம் அடைந்தாள். அன்னிய மாதாகிய தான், தனக்கு எவ் விதமான சம்பந்தமுமற்ற அவர்களது குடும்ப விஷயங்களைப் பற்றி அதிகமாகப் பேசுவதால், அந்த மனிதருக்கு ஆயாசம் உண்டாகுமோ வென நினைப்பவள் போல அவள் ஒருவகையான நாணமும் சஞ்சலமும் அடைந்தாள். அந்த விஷயத்தில் எவ்விதமான சிரத்தையும் இல்லாதவளைப் போலவும், உலகத்தின் பொது நியாயத்தைப் பேசுகிறவள் போலவும் காட்டிக் கொண்டவளாய், “உலகத்தில் மாமனார் மாமியார்களின் மேல் அதிருப்தியும் ஆத்திரமுங் கொள்ளாத மாப்பிள்ளைகளே இல்லை; நீங்கள் உங்களுடைய மனைவி வீட்டார் மேல் தப்பான அபிப்பிராயம் கொண்டிருப்பதற்குத் தகுந்தாற்போல அவர்களுக்குப் பல துன்பங்கள் வந்து நேர்ந்தன. அதைக்கொண்டு அவர்கள் கெட்டவர்களென்றும், ஆகையால் தண்டிக்கப்பட்டார்க ளென்றும் சொல்வது காகதாலி நியாயமேயாகும். உலகத்தில் குற்றமற்ற மனிதர்களுக்கு ஆபத்துகளும் துன்பங்களும் வருவதில்லையா? அப்படி துன்பப்படுவோர் நியாயமாகவே

சிக்ஷிக்கப் படுகிறார்களென்று நாம் நினைப்பது தருமமாகுமா? இப்போது நீங்கள் மோட்டார் வண்டியில் அகப்பட்டுக் கொண்டு பிழைக்கக்கூடாத நிலைமையிலிருந்து பிழைத்தீர்களே! நீங்கள் செய்த ஏதோ குற்றத்துக்கு இது தண்டனையென்று நினைத்து மற்ற ஜனங்கள் சும்மா இருந்து விட்டார்களா? இம்மாதிரி நாம் செய்வதானால், உலகத்தில் துன்பம் அனுபவிக்கும் எவனையும் பிறன் காப்பாற்றவே கூடாது. ஏழைகளுக்குப் பிச்சையிடுவது கூடாது. ஏனெனில், அவர்கள் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகிறார்கள். ஆகையால், அவர்களுக்கு உதவி செய்வது, கடவுளின் விருப்பத்துக்கு விரோதமான காரியமாகிறது. நீங்கள் பெருத்த வக்கீலென்று சொல்லுகிறார்கள். சட்டங்களையும் நியாயத்தையும் நன்றாக நீங்கள் படித்திருப்பீர்கள். உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்லக்கூடாது. டாக்டர் துரைஸாணியம்மாளிடம் சாமாவையரென்பவர் உங்களிடமிருந்த கடிதங்களின் விவரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். கடித விஷயமாக நீங்கள் ஆத்திரப்பட்டு, தற்கொலை செய்துகொள்ளப் போய் மோட்டாரில் வீழ்ந்துவிட்டதாகவும் அவர் சொன்னார்; இவைகளைக் கேட்டவர்கள் யாவரும் நீங்கள், விஷயங்கள் பொய்யா, மெய்யா வென்பதை ஆய்ந்தோய்ந்து பாராமல் தற்கொலை செய்துகொள்ள முயன்றதைப்பற்றி உங்கள் மேலே தான் குறை சொன்னார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி வியப்பும் அவமானமும் அடைந்து, "கடிதங்களின் ரகசியத்தை எல்லோரிடமும் வெளியிட்டுவிட்டானா அந்த மடையன்! அவனுக்குப் புத்தியே கிடையாது" என்ற வண்ணம் தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு கால் நாழிகை நேரம் மௌனமா யிருந்தான். அவன் மேனகாவின்மீது கொண்டிருந்த கோபம் பொங்கி யெழுந்தது; அவளால் உண்டான மானக்கேட்டை அறிந்த அந்த

வெள்ளைக்காரப் பெண்ணின் முகத்தில் விழிக்கவிருப்பமற்ற வனாய் அவன் சிறிதுநேரம் குன்றிப்போய்க்கிடந்தான். அவனை மீறி ஆத்திரமான சொற்கள் வாயில் தோன்றின. "இந்த முட்டாள்கள் எதற்காக இரகசியமான விஷயத்தை விளம்பரப் படுத்துகிறார்கள்? சுத்த மானங்கெட்டவர்கள்! இன்னம் யார் யாரிடம் சொல்லிவிட்டார்களோ தெரியவில்லையே! ஐயோ! இனிமேல் நான் வெளியில் போய் மனிதருடைய முகத்தில் எப்படி விழிப்பேன்! ஆ! கொலை பாதகி! சண்டாளி என்றைக்கும் தீராத அவமானத்தைக் கொணர்ந்து வைத்து விட்டாயே! அடி துஷ்ட முண்டை! பாழாய்ப்போக உன்னுடைய உடம்பு நெருப்பில் வெந்தழியாதோ? நீயேன் சாகிறாய்! இது கெட்டவர்களுக்கல்லவோ காலமா யிருக்கிறது உலகத்தில் சாமி ஏது பூதமேது! இந்த மானக்கேட்டை உண்டாக்கின தேவடியாள் முண்டையான உன் மண்டையை ஒரே அடியில் கல்லால் உடைத்திருப்பேனே! தப்பித்துக் கொண்டாயே! கள்ளப் புருஷனோடு உல்லாசமாக வந்த உன்னை ஈசுவரன் தப்புவித்து விட்டான். சொந்தப் புருஷனாகிய நான் வண்டியில் அறைபட்டேன்" என்று பலவாறு தனக்குத்தானே பிரலாபித்து, ஆத்திரமும், அவமானமும் துக்கமும் அடைந்து கண்ணீர் விடுத்தான். அதைக் கண்ட பணிமகளும் இரக்கங்கொண்டு, துடிதுடித்து, தனது ஆசனத்தை விட்டு எழுந்து அவனுக்கருகில் சென்று, "நீங்கள் இப்படி விசனப்பட்டால், குணமடைந்த உடம்பு திரும்பவும் கெட்டுப்போய்விடும். டாக்டர் துரையும், துரைஸானியும் என்னைக் கண்டித்து வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். நான் இந்த விஷயத்தை உங்களிடம் தெரிவித்திருக்கக் கூடாது. என்னுடைய தவறை மன்னித்துக் கொள்ளுங்கள்; சாமாவையர் உங்களுடைய ரகசியத்தைப் பலரிடம் சொல்லியிருப்பாரோ என்று நீங்கள் சந்தேகப்பட்டு வருந்தவேண்டாம். இந்த விஷயத்தை சாமாவையர் முதலில் துரைஸானியிடம்

சொல்லவில்லை. துரைஸானிக்கு இந்தச் சங்கதி வேறு எந்த வகையிலோ தெரிந்து அவரிடம் கேட்க, அவர் அது உண்மைதானென்று ஒப்புக்கொண்டாராம். துரைஸானி இதை மிகவும் ரகசியமாகக் கூறி, உங்களை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள். இந்த விஷயம் எங்கள் இருவருக்குமே தெரிந்தது; நாங்கள் இதை வெளியிட மாட்டோம்; அதைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலை கொள்ளவேண்டாம்; துரைஸானி வந்தால் என்னுடைய உத்தியோகம் போய்விடும். நீங்கள் விசனப்பட வேண்டாம்" என்று கூறி மன்றாடிய வண்ணம் வராகசாமியின் முகம் கண்கள் முதலியவற்றை அன்போடு துடைத்துவிட்டு, ஏதோ ஒரு மருந்தை எடுத்து அவனது வாயில் வைத்து, சிறிது பருகுவித்தாள். அவளது அன்பையும், வேண்டுகோளையும், அவளுக்குத் துன்பம் உண்டாகும் என்பதையும் கருதி வராகசாமி தனது ஆவேசத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டான்.

உடனே அந்த அழகிய மடந்தை ஒருவாறு புன்னகை செய்து, "உங்களைப் பார்த்தால் ஒரு எறும்புக்கும் துன்பஞ் செய்யாத சாதுவைப் போலிருக்கிறதே; நீங்கள் உங்களுடைய மனைவியைக் கொல்லப் போனீர்கள் என்பதைக் கேட்க, எனக்கு நம்பிக்கையே உண்டாகவில்லை. படிக்காத மூடர்கள் செய்யத்தகுந்த காரியத்தை நீங்கள் செய்யத் துணிந்தீர்களா! ஆச்சரியம்! ஆச்சரியம்! அவளைக் கொல்ல நினைத்தீர்களே! கொலை செய்தவனுக்கு விதிக்கப்படும் தண்டனையை அல்லவா அவளுக்கு நீங்கள் விதிக்க நினைத்தீர்கள்! விபச்சார தோஷத்திற்கு உயிரை வாங்குவது மிகவும் கடுமையான தண்டனையாயினும், புருஷனுக்கு அவமானம் உண்டான சமயத்தில், அவர்கள் மனைவியைக் கொல்ல நினைப்பது இயல்பே. அப்படிக் கொன்றாலும் அது குற்றமாகாது; ஆனால், அவள் உண்மையில் விபசாரம் செய்தாள் என்பதை நீங்கள்

தெளிவாக அறிந்து கொண்டீர்களா? அல்லது அறிய முயன்றீர்களா? ஏதோ இரண்டு கடிதங்கள் அகப்பட்டன; அவைகளே முடிவான சாட்சிகள், அவைகளை வேதவாக்கியமாக வைத்துக்கொண்டு கொலை செய்யப் போய்விட்டீர்களே! உங்களுடைய கொடிய எண்ணம் நிறைவேறாதபடி ஈசுவரன் தடுத்ததிலிருந்தே இதில் எதோ சூதிருக்கிறதென்பது உங்களுக்குத் தோன்றவில்லையா? கடிதங்களை எடுத்தீர்களே! அவைகள் உண்மையான அந்த நாடகக்காரனால் எழுதப்பட்ட கடிதங்களா இல்லையா என்பதைத் தெளிவாக நிச்சயித்துக் கொண்டீர்களா? கச்சேரிகளில் எத்தனையோ கொலைக் குற்றங்கள் விசாரணைக்கு வருகின்றனவே; இம்மாதிரியான இரண்டு கடிதங்களின் ஆதாரத்தைக் கொண்டே நியாயாதிபதிகள் தண்டித்ததுண்டா? விரோதிகள் எவரேனும் பொய்யாக இந்த மாதிரி பொய்க் கடிதம் தயாரித்து வைத்திருக்கக் கூடாதா?" என்றாள்.

எதிர்பாராத அவளது சொற்களைக் கேட்ட வராகசாமி, சிறிது மௌனம் சாதித்தான். கடிதம் பொய்க் கடிதமாக இருந்தாலும் இருக்கலாம் என்னும் எண்ணம் அவனது மனதில் தோன்றியது. ஆனால், அது உடனே மின்னலைப்போல மறைந்து போனது. "நீ சொல்வது நியாயந்தான். ஆனால், அவள்மேல் அப்படி அபாண்டமான பழி சுமத்தக்கூடியவர்கள் எங்கள் வீட்டில் ஒருவருமில்லையே! என்னுடைய சகோதரிகள் அவளிடம் மிகவும் பிரியமுள்ளவர்கள். தவிர, அவளுடைய பெட்டியில் இந்தக் கடிதங்கள் இருந்தன. திறவுகோலைத் தாலிச்சரட்டைவிட்டு நீக்காமல் அவளே வைத்திருந்தாள். பெட்டி அவள் வைத்த நிலைமையிலேயே பூட்டப்பட்டிருந்தது. அதை நானே நேரில் உடைத்துக் கடிதத்தை எடுத்தேன். இது ஒன்றையே நாம் முடிவான ருஜுவாகக் கொள்ளலாம்" என்றான்.

**வெள்ளை:-** (புன்னகை செய்து) நீங்கள் வக்கீல் உத்தி யோகம் செய்பவர்கள். உங்களுடன் நான் வாக்குவாதம் செய்வது அதிகப் பிரசங்கித்தனமாகும்; இருந்தாலும், பெண் பேதையான ஒருத்தியின் மேல் அபாண்டமான குற்றம் சுமத்துவதைக் காண பெண்பிள்ளையான எனக்குச் சகிக்க வில்லை. அதனால் கேட்கிறேன். கோபிக்கக் கூடாது. பெட்டி பூட்டப்பட்டிருந்ததாகச் சொல்லுகிறீர்களே! டிரங்குப் பெட்டியின் பூட்டு உள்பக்கத்தில் இருப்பதல்லவா? ஒருவர் பூட்டை உடைத்து, அதற்குள் கடிதங்களை வைத்துவிட்டுப் பிறகு வேறு பூட்டு அதற்கு போட்டுவித்துப் பூட்டி வைத் திருக்கக்கூடாதா? நீங்கள் உடைத்தபோது இருந்த பூட்டை, அதற்கு முன் எப்போதும் இருந்த பூட்டென்பதை நீங்கள் நிச்சயமாக அறிந்துகொண்டீர்களா? - என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி இன்னமும் அதிகமான தடுமாற்றமடைந்து சிறிது யோசனை செய்தான்; "அப்படி உடைத்திருந்தால், அதை என்னுடைய சகோதரிகளே செய்ய வேண்டும். அவர்கள் ஒருநாளும் அப்படிச் செய்ய மாட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்ய வேண்டிய முகாந்திரமுமில்லை" என்றான்.

**வெள்ளை:-** அவர்கள் செய்யவில்லை என்றே வைத்துக் கொள்வோம், அவள் தஞ்சாவூரிலிருந்து இங்கே வருமுன் அவளுடைய தகப்பனார் வீட்டிலுள்ள மனிதர் யாராவது அவள்மேல் பகைமையினால் இப்பொய்க்கடிதம் எழுதி வைத்திருக்கலாமல்லவா? பிறகு புருஷன் அதைப் படித்தால் அவளுக்குத் துன்பம் சம்பவிக்கும் என்னும் கெட்ட நோக்கத்துடன் எவரேனும் வைத்திருந்தாலாகாதா? அங்கே அவளுடைய தாயாருடன் கூடப்பிறந்தவன் ஒருவன் இருப் பதாகவும், அவன் கொள்ளையரைப்பற்றி தந்தியனுப்பிய தாகவும் சாமாவையர் சொன்னாரே! அவனுக்கும் அவளுக்கும்

பகைமையிருந்ததனால் ஒருகால் பொய்க் கடிதங்களை அவன் வைத்திருக்கக் கூடாதா? ஆகையால், இந்தக் கடிதங்களை வைத்துக் கொண்டே ஒரு முடிவான தீர்மானம் செய்வது தருமமாகாது. நான் சொல்லுகிறே னென்று நீங்கள் ஆயாசப்படக்கூடாது. நான் வெறும் வாக்குவாதமாகப் பேசுகிறேன்; உங்களுடைய சகோதரிமார் அவள் விஷயத்தில் இப்படிச் செய்ய முகாந்திரமில்லை யென்கிறீர்களே! அவர்கள் அவளுடைய ஆபரணங்களை அபகரித்துக்கொள்ளவோ, அல்லது வேறு எந்தக் கருத்துடனோ அவளைக் கொன்றிருக்கக் கூடாதா? அல்லது அவளைப் பராதீனப்படுத்தியிருக்கக் கூடாதா?

**வராக:-** அவளை நான் கடற்கரையில் கண்டுதானே கொல்லப்போனேன்; அவள் பிறரால் கொல்லப்பட்டிருப்பாள் என்னும் சந்தேகம் ஏன் உண்டாகவேண்டும்? அவளுடைய மனதுக்கு விரோதமாக அவள் பராதீனப் படுத்தப்பட்டிருந்தால், சுயேச்சையாக மோட்டார் வண்டியில் காற்று வாங்க வந்திருக்க மாட்டாளல்லவா? அவள் தப்பித்து என்னிடமல்லவா வந்திருக்க வேண்டும். ஆகையால், அவள் கொல்லப்படவும் இல்லை; பராதீனப்படுத்தவுமில்லை யென்பது தெரிகிறதல்லவா?

**வெள்ளை:-** கடற்கரையில் நீங்கள் கண்ட பெண் அவள்தானென்பதற்கு ருஜுவென்ன? அவளைப்போல உலகத்தில் இன்னொருத்தி இருக்கக்கூடாதா? உங்களுடைய ஆவேசத்திலும், மோட்டார் வண்டியின் விசையிலும் அவள் உங்கள் மனைவியைப் போலக் காணப்பட்டிருக்கலாம். அல்லது அவளாகவே இருந்தாலும், அவள் அன்னியருடைய வசத்திலிருந்து தப்பிவரக்கூடாமல் கட்டாயப்படுத்தப் பட்டிருக்கலாம் அல்லது புருஷனிடம் மறுபடி எப்படி வருகிறது என்கிற அச்சத்தினால் எங்கேயாகிலும் இருக்கலாகாதா?

**வராக:-** நீ கேட்பதெல்லாம் சரியான கேள்விகளே; என்றாலும், அவள் என் மனைவி என்பதைப்பற்றி கொஞ்சமும் சந்தேகமே இல்லை. அவளல்ல வென்று சொல்வதற்கில்லை. அவள் அன்னியரால் பாதுகாப்பாக வற்புறுத்தி வைக்கப் பட்டிருக்கலாம். காரியம் அப்படி நடந்திருக்குமானால் அவள் இதுகாறும் அவசியம் களங்கமடைந்திருப்பாள். அப்படித்தான் தேக சுகத்தை இழந்த பெண்ணை எவன் திரும்பவும் அழைத்துக் கொள்வான்? அவள் உயிரோடிருந்து, இன்னமும் எனக்கு அவள் அவமானம் உண்டாக்குவதைக் காட்டிலும் சாவதே நல்லது.

**வெள்ளை:-** (புன்சிரிப்போடு) நீங்கள் சொல்லுவது எப்படி இருக்கிறதென்றால், கிணற்றில் விழுந்து தத்தளிக்கும் மனிதரைத் தண்ணீருக்குள் அழுத்திவிடுவதைப் போலிருக் கிறது. உலகத்தில் ஸ்திரீகளுக்கு ஆபத்து அதிகம். ஆண்பிள்ளை களோ பொல்லாதவர்கள். நல்ல அழகான பெண்களைக் கண்டுவிட்டால், யோக்கியர்கள் கூட அயோக்கியர்களாக மாறிவிடுவார்கள். பலவந்தத்தினாலோ, மோசத்தினாலோ உங்களுடைய மனைவியை அவள் மனதுக்கு விரோதமாக பிறர் அபகரித்துக்கொண்டு போயிருந்தால், அவளை மீட்க வேண்டியது, அவளுடைய நாயகனாகிய உங்களுடைய கடமையல்லவா? அவள் அன்னியரால் வஞ்சிக்கப்பட்டது அவளுடைய குற்றமாகுமா? அவளை அப்படியே விட்டுவிடுவது பாவமல்லவா? இன்னமும் அவள் மாசற்ற கற்புடையவளாயிருக்கலாம். நீங்கள் வந்து காப்பாற்று வீர்களென்று அவள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்க லாம். கற்பழிந்து போமாயின் உத்தம ஸ்திரீகள் உயிரை வைத்துக் கொண்டிருக்கவே மாட்டார்கள். உங்களுடைய மனைவி உயிரோடிருப்பதால், அவள் இன்னமும் களங்கமற்றவளா யிருக்கிறாளென்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவளை மீட்கவேண்டுமே என்பதை நினையாமல் நீங்கள்

அவளைக் கொல்லப்போனது நீதியாகுமா? உங்களுடைய ராமாயணத்தில் சீதையை ராமர் கவனிக்காமல் விட்டு விட்டாரா? அவளை மீட்ட பிறகல்லவா, அவளுடைய கற்பு அழிந்ததா இல்லையா என்பதைச் சோதனை செய்து ஏற்றுக் கொண்டார். அதுவல்லவா புருஷ தர்மம். நீங்கள் உங்களுடைய ஸ்திரீகளின் மன உறுதியைப் பற்றி இவ்வளவு கேவலமான அபிப்பிராயங்கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. வெள்ளைக்காரார்களாகிய எங்கள் ஜாதியில் புருஷர் தமது ஸ்திரீகளின் மேல் இவ்வளவு எளிதில் அவநம்பிக்கைப் படமாட்டார்கள். அவர்களுடைய மனதின் உறுதியை ஒருமுறை கண்டு கொள்வார்களானால், அவர்கள் எவ்விடத்துக்குப் போனாலும், அவர்களுடைய மனவுறுதியைப் பற்றி இப்படி சந்தேகப்படமாட்டார்கள். பெண் மக்களுக்கு மன உறுதி யில்லை யென்று நினைத்தீர்களா? உங்களுடைய மனதாகிலும் அழகிய ஸ்திரீகளைக் கண்டால் சலிக்கும். அவர்கள் மனதால் கூட வேறு புருஷரை நினைக்க மாட்டார்களே! - என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமியின் மனதில், அந்த வெள்ளைக்கார மடந்தை சொல்வது நியாயமான சங்கதி யென்று தோன்றினதாயினும், அவள்மீது ஒருவகையான கோபமும் அவனது மனதில் உண்டாயிற்று. நிச்சயமாக உண்மை யென்று தெரிந்த அந்த விஷயத்தைப்பற்றி, அவள் வெறும் தத்துவம் பேசி, வீண் வாக்குவாதம் செய்கிறாளென்று அவன் நினைத்துக்கொண்டவனாய், “நீ சொல்வதெல்லாம் சரிதான். என் வீட்டிலுள்ள சகோதரிகள் ஒருகாலும் என்னை வஞ்சிக்கக்கூடியவர்களல்ல. ஆகையால், அவர்கள் ஏதேனும் துன்பம் செய்திருப்பார்களென்று நினைக்கவும் முடியாது. அவர்களுடைய பாதுகாப்பில் வீட்டிலிருக்கையில், அன்னியர் அவளை வஞ்சித்து அழைத்துக்கொண்டு போயிருப்பார்கள் என்று நினைப்பதும் அசம்பாவிதம். ஆகையால், அவளே தன் முழு மனதோடு தன்னுடைய முயற்சியினாலேயே போயிருக்

கிறாள். அதைப் பற்றி சந்தேகமே இல்லை. ஆகையால், அவளை நாம் மீட்க நியாயமே இல்லை -என்றான்.

அதைக் கேட்ட அந்த வெள்ளைக்காரப் பணிப்பெண் மிகவும் இரக்கமும் விசனமுங்கொண்டு, "ஐயோ பாவம்! சகோதரிகள் வஞ்சம் செய்யமாட்டார்கள். ஆனால், உயிருக்குயிரான மனைவி மாத்திரம் செய்வாளா! ஆம் ஆம் உண்மைதான். அதிக ஆசையை எவர்கள் வைக்கிறார்களோ அவர்கள்மேல் சந்தேகம் கொள்வதே உலக வழக்கந்தானே! அதிருக்கட்டும். நீங்கள் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தீர்களா? அவள் தஞ்சாவூரில் இருந்தபோது சுயேச்சையாக நாடகம் பார்த்து வந்தாளென்பதும், தனிமையில் ஒரு வீடு வைத்துக்கொண்டு ரகசியமாக அவ்விடத்தில் நாடகக்காரனைச் சந்தித்து வந்தாள் என்பதும் கடிதத்திலிருந்து தெரிகின்றனவே! அங்கிருந்தபடியே நாடகக்காரனோடு பட்டணத்துக்கு ஓடிவந்து இரகசியமான ஓர் இடத்தில் இருப்பது சுலபமா? அல்லது தன்னை அழைத்துக் கொள்ளும்படி உங்களுக்குக் கடிதம் எழுதி, எவ்வளவோ பாடுபட்டு, உங்கள் வீட்டிற்கு வந்தபிறகு போகவேண்டிய காரணமென்ன? உங்கள் வீட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு போவது கடினமாயிருக்கும் என்பதை அவள் யோசித்திருக்க மாட்டாளா? நாடகக்காரன் மேல் ஆசை வைத்தவள் அப்படியே ஓடிப்போக நினைப்பாளேயன்றி அப்புறம் தன் புருஷனிடம் வர ஒருநாளும் விரும்பமாட்டாள். அப்படிப் பட்டவளுக்குச் சொந்தப்புருஷன் வேப்பங்கா யல்லவா?" என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி சிந்தனையில் ஆழ்ந்தான். அவனது மனதில் பெருத்த குழப்பம் உண்டாய்விட்டது. மேனகா குற்றவாளி என்ற நினைத்திருந்த அவனது மனஉறுதி ஒருவாறு தளர ஆரம்பித்தது. ஒருகால் அவள் குற்றமற்றவளா

யிருப்பாளோ வென்னும் சந்தேகம் அடிக்கடி அவனது மனதில் தோன்றித் தோன்றி மறைந்தது. சஞ்சலம் குடி கொண்டது. உண்மையில் அவள் எப்படித்தான் மறைந்து போனாளோ, கடிதங்கள் எப்படித்தான் வந்தனவோ வென்று பலவாறு நினைக்க ஆரம்பித்தான். தன்னைக் காட்டிலும் அந்த வெள்ளைக்காரப் பெண் கூரிய பகுத்தறிவைக் கொண்டிருப் பதை நினைத்து அவன் அவளுடன் மேலும் சம்பாஷிக்க விரும்பினான். தனது மனைவி விஷயத்தில் இன்னும் அனுகூலமான சங்கதி எதையேனும் அவள் வெளியிடக்கூடு மென்றும், அதனால், தான் பயனடையலாமென்றும் நினைத்து அவன் ஏதோ பேச ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்தில் அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. டாக்டர் துரையும், துரைஸானியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட வராகசாமி திடுக்கிட்டுத் தனது கட்டிலில் அமைதியாகப் படுத்துக் கொண்டான். பணிமகள் எழுந்து மரியாதையாக ஒதுங்கி நின்றாள்.

உடனே துரைஸானி கட்டிலிற்கு அருகில் வந்து வராகசாமியின் நாடியைப் பார்த்தாள்; பணிப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாள். "அடி எமிலி! நல்ல நிலைமையிலிருந்த இவருடைய உடம்பு இப்போது இவ்வளவு படபடப்பா யிருக்கவேண்டிய காரணமென்ன?" என்று அதிகாரமாகக் கேட்டாள்.

எமிலி என்ற பெயர் கொண்ட அந்தப் பணிப்பெண், "அதன் காரணம் எனக்குத் தெரியவில்லை" யென்றாள்.

**துரைஸானி:-** ஓகோ! உனக்குத் தெரியாதோ! நீ இவருடன் ஏதோ பேசிக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி இருக்காது; நீ பெருத்த வாயாடி. உன் வாய் ஒரு நிமிஷமும் ஓய்ந்திருக்காது; ஏதாவது பேசிக்கொண்டே இருப்பாய்; உன்னை இந்த அறையில் வைத்ததே பிசகு. வேறு

எந்த அறைக்காவது உன்னை அனுப்புகிறோம். நான் இவ்விடத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னதற்கா கவா நீ இப்படிச் செய்தாய்? இதோ போய் உத்தரவு அனுப்புகிறோம்; வேறு அறைக்குப் போகத் தயாராக இரு - என்று கோபமாகச் சொல்லிவிட்டு துரைஸானி துரையுடன் வெளியிற் சென்றாள். பணிமகள் மிகவும் அவமானம் அடைந்தவளைப்போலக் கீழே குனிந்து கொண்டாள். தமது மனதிற்கு உகந்தவிதமாய் நடந்துகொண்டிருக்கும் அந்த நற்குணவதி போய் விடுவாளோ வென்றும், வேறு எவள் வருவாளோ வென்றும் பலவாறு நினைத்து ஏக்கங்கொண்டு அவன் அந்த மங்கையின் முகத்தை நோக்கினான்.

★★★★★★★★★★

## 23 வது அதிகாரம்

## பாதாள எட்சினி வசியம்

பதினைந்தாவது அதிகாரத்தின் இறுதியில் நைனா முகம்மது தனது சயன அறையிலிருந்து ஓடிய நூர்ஜஹானைத் துரத்தியபோது உட்புறத்தில் அவளது அக்காள் இருந்ததைக் கண்டு திரும்பிவந்து, மிகவும் அச்சமும் கலக்கம் அடைந்து படுத்திருந்தான் என்பது சொல்லப்பட்டதல்லவா? அவன் அன்றிரவு முற்றிலும் துயிலே கொள்ளாமல் மிகவும் கவலை கொண்டு வருந்திக் கிடந்தான். மேனகாவின் விஷயத்தில் தான் கொண்ட எண்ணம் நிறைவேறாமல் போனது ஒருபுறம் வதைக்க, தனது மனைவி யாவற்றையும் அறிந்துகொண்டு தன்னை அவமானப்படுத்தியது, இன்னொரு புறம் பொறுக்க லாற்றாமல் அல்லல் படுத்த, அவன் அன்றிரவு முற்றிலும் வேதனைக் கடலில் ஆழ்ந்து கிடந்தான். ஆனால், நற்குண

வதியான தனது மனைவி தன்மீது கொண்ட அந்தரங்கமான வாஞ்சையினால், தன்னைக் காட்டிக் கொடுக்காமல் எப்படியும் காப்பாற்றி விடுவாளென்னும் ஒரு மூட நினைவு அப்போதைக்கப்போது அவனது மனதில் தோன்றி ஒருவகையான ஆறுதலை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அவ்வாறே அன்றிரவு கழிந்தது. நூர்ஜஹான் என்ன செய்கிறாள் என்பதையும், மேனகா தனது வீட்டில் இருக்கிறாளோ அல்லது எங்காகிலும் போய் விட்டாளோ வென்பதையும் அறிந்துகொள்ளும் பொருட்டு நைனா முகம்மது, தனது வேலைக்காரி ஒருத்தியை மெல்ல வரவழைத்து, கேள்விகளைச் சாமர்த்தியமாகக் கேட்கத் தொடங்கினான். நூர்ஜஹானும், அவளது அக்காளும் தங்களது தகப்பனாரின் பங்களாவிற்கு இரவிலே போய்விட்டார்கள் என்னும் சங்கதியை அவள் தெரிவித்தாள். அதுகாறும் தனது அநுமதியின்றி தகப்பனாரின் வீட்டிற்குப் போகாத தன் மனைவி, அன்று இரவிலேயே போய்விட்டதைக் கேட்க, அவனது மனம் திரும்பவும் கலக்க மடைந்து குழம்பியது; தனது மனைவி தனக்கு எவ்விதமான துன்பமுண்டாக்க மாட்டாளென்பது நிச்சயமாயினும், அவர்களால் விடுவிக்கப்பட்ட மேனகா யாவற்றையும் தனது புருஷனிடம் சொல்ல, அதனால் என்ன துன்பம் நேருமோ வென்னும் அச்சம் தோன்றி, அவனை வதைக்க ஆரம்பித்தது. மேனகாவின் புருஷன் தன்மீது மாஜிஸ்டிரேட்டின் கச்சேரியில் பிராது கொடுப்பானாகில், அதற்குப் பிடிவாரண்டு பிறக்கும் என்பதை நைனாமுகம்மது உணர்ந்தவன். ஆதலின், செய்வதின்னது என்பதை அறியாமல் தத்தளித்தான். அவனது வீட்டில் அவனுக்கு சையது இமாம் என்ற ஒரு வேலைக்காரன் இருந்தான்; நைனா முகம்மதுவுக்குப் புதிய ஆசை நாயகிகளை அமர்த்துவதிலும், அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து திருப்பி அனுப்புவதிலும் தேவையான சௌகரியங்களை யெல்லாம் அவனே செய்பவன். மேனகாவை அழைத்து வந்த

இரவில், வீட்டின் கதவைத் திறந்தவன் அவனே; தான் என்ன செய்வது என்பதைப்பற்றி நைனாமுகம்மது அந்த வேலைக்காரனிடம் நெடுநேரம் யோசனை செய்தான். கடைசியில் அவர்களிருவரும் ஒருவகையான முடிவிற்கு வந்தனர். அடுத்த தெருவிலிருந்து சையது இமாமின் வீட்டில் நைனா முகம்மது சில நாட்களுக்கு ஒளிந்துகொண்டிருப்ப தென்றும், ஆனால் அவன் வியாபார நிமித்தம் நாகைப் பட்டணத்திற்குப் போயிருப்பதாக சையது இமாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்து அப்படியே செய்தனர். ஒரு வாரமாக நைனாமுகம்மது அந்த இடத்தில் ஒளிந்துகொண்டிருந்தான். ஆனால், அவன் நாகைப்பட்டணம் போயிருப்பதாக வேலைக்காரன், குமாஸ் தாக்களிடத்திற்கூடப் பொய் சொல்லிக் கொண்டிருந்தான். ஒருவாரம் சென்றதும் தனது மனைவி தனது வீட்டிற்கு வரவில்லை என்பதை நைனாமுகம்மது உணர்ந்தான். மைலாப்பூர் பங்களாவில் அவர்களின் கருத்து எப்படி இருந்த தென்பதை அறிந்துகொண்டு வர சையது இமாம் எவ்வளவோ பாடுபட்டானாயினும், அது பலிக்காமல் போனது. ஆகையால், இன்னம் எத்தனை நாட்களுக்கு அப்படி மறைந்து கொண்டிருக்க வேண்டுமோ வென்று நைனாமுகம்மது நினைத்துத் தவித்து, சிறைச் சாலையில் வசிப்பவனைப்போல வதைப்பட்டுக்கொண்டிருந்தான். சையது இமாம் நைனா முகம்மதுவின் சாப்பாடு வசதிகளுக்கென்று ஒவ்வொரு நாளும் ஏராளமான பணத்தைப் பிடுங்கி புலால் முதலிய சிறந்த உணவுகளைத் தயாரித்துத் தின்றுவந்ததன்றி பெரும் பொருளையும் அபகரித்து வந்தான். ஆனால், நைனா முகம்மதுவைப் பயமுறுத்தி, தனது வீட்டில் அவன் இன்னும் பல நாட்களிருக்கும்படி செய்ய நினைத்து அதற்குத் தக்கபடி பல புளுகுகளைக் கூறி வந்தான்.

ஒரு நாள் அவன் நைனாமுகம்மதுவுடன் மிகவும் கவலையும் அச்சமும் கொண்டு பேசிக்கொண்டிருந்தான்.

அப்போது நைனா முகம்மது அவனை நோக்கி, "மாமனாரே போலீசுக்கு எழுதிவிட்டா ரென்றா மந்திரவாதி சொன்னார்? அப்படியானால் நான் தப்பமுடியாது. நூர்ஜஹானும் எனக்கு விரோதமாக சாட்சி சொல்லுவாள்" என்று மிகவும் அச்சங்கொண்டு கூறினான்.

**சையது இமாம்:-** அந்த மந்திரவாதிகள் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து உங்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பாதுகாக்கிறேனென்று சொல்லுகிறாரே! இனிமேல் அதைப் பற்றி கவலைப் படுவதேன்? அவர் மலையாளத்து மந்திரவாதி; மகா கெட்டிக்காரர்; என்னவோ ஆண்டவன் செயலாகத்தான் அவர் நம்முடைய வீடுதேடி வந்தார் - என்றான்.

**நைனா:-** அவர் மந்திரவாதி என்பதை நீ எப்படி அறிந்து கொண்டாய்?

**சையது :-** அவர் தெருவின் வழியாகவே வந்துகொண்டிருந்தார்; அப்போது வெயிலின் கொடுமை சகிக்க முடியாமலிருந்தது. கால் பொசுங்கிப் போனது. அப்போது தெருவின் வழியாக வெறுங்காலோடு வந்த மந்திரவாதி சூட்டைத் தாங்கமாட்டாமல் தவித்துப்போய், நம்முடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கொப்பளித்துப் போன தமது காலை எனக்குக் காட்டினார். வீட்டில் தேனிருந்தால் கொஞ்சம் கொப்புளத்தில் தடவுவதற்குக் கொடுக்கும்படி கேட்டார்; நான் கொஞ்சம் தேன் கொடுத்தேன். அதை வாங்கித் தடவிக்கொண்டு கால் நாழிகை நேரம் உட்கார்ந்திருந்தார். பிறகு எழுந்து போகுமுன், தாம் மலையாளத்து மந்திரவாதி யென்றும், அந்த வீட்டு எஜமான் அப்போது ஒரு பெருத்த ஆபத்தில் மாட்டிக்கொண்டு ஒளிந்துகொண்டிருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார். நான் திடுக்கிட்டு அவரை நோக்கி, "என்ன விதமான ஆபத்து என்று கேட்டேன். பெண் விஷயமான ஆபத்தென்றும், அதற்குத் தக்கபடி வேலை செய்யாவிட்டால்,

எஜமான் சிறைச் சாலைக்குப் போவது நிச்சயமென்று சொல்லிவிட்டு எழுந்து போனார். நான் அவரை விடாமல் தொடர்ந்து போய், அதன் விவரங்களை யெல்லாம் தெரிவிக்கும்படி கேட்டேன். இருபத்தேழில் குறைந்த ஓர் எண்ணைச் சொல்லும்படி கேட்டார்; நான் பத்து என்றேன். அவர் உடனே, "சரி அவருடைய மாமனாரே போலீசுக்கு பிராது எழுதி யனுப்பி விட்டார். இனி தப்பமுடியாது" என்று சொல்லிக் கொண்டே அவசரமாக நடந்தார். நான் அவரை விடாமல் தொடர்ந்து சென்று, இதற்கு ஏதாவது பரிகாரம் மாந்திரீகத்தின் மூலமாகச் செய்தால், எஜமானரிடம் பெருத்த வெகுமதி வாங்கித் தருவதாகச் சொல்லி வேண்டிக் கொண்டேன். அவர் தமக்கு வெகுமதி வேண்டாமென்றும், ஆனால் தாம் பரோபகாரமாக உதவி செய்வதாகவும், நாகூர் தர்காவுக்கு இரண்டு ஆயிரம் ரூபா கொடுத்துவிட வேண்டுமென்றும் சொன்னார். அப்படியே ஆகட்டு மென்றேன்; உங்களிடம் வரும்படி கேட்டுக் கொண்டேன்; இன்று காலையில் வருவதாகச் சொன்னார்; அவரும் வரும் நேரமாகிவிட்டது; உங்ளுடைய வீட்டு வாசலில் காத்திருப்பார். நான் போய் அழைத்துக் கொண்டு வருகிறேன்-என்றான்.

**நைனா:-** என்னவோ நல்ல காலத்துக்குத்தான் ஆண்டவன் இந்த மகானை அனுப்பியிருக்கிறான். வெயில் சுட்டதென்று நம்முடைய வீட்டில் அவர் உட்கார்ந்ததே ஆண்டவன் செய்த காரியம். நீ சீக்கிரம் போய் அவரை இங்கே அழைத்து வா! - என்றான்.

உடனே சையது இமாம் தன்னுடைய வீட்டை விட்டு வெளியிற் சென்று அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள நைனா முகம்மதுவின் வீட்டை அடைந்தான். அதன் பிறகு அரை நாழிகை நேரம் சென்றது. மந்திரவாதி பிரசன்னமானார். அவரும் முகம்மதியரே; அவருக்குச் சற்றேறக்குறைய

இருபத்தைந்து வயதிருக்கலாம். அவர் நன்றாய்ச் சிவந்த மேனியைக் கொண்டிருந்தார்; தலையில் ஒரு குல்லா அணிந்து அதற்குமேல் பெருத்த சீட்டுத் துணித் தலைப்பாகை அணிந்திருந்தார். கருத்தடர்ந்த தாடி பக்கங்களில் செவிகள் வரையிலும், கீழே மார்பு வரையிலும் எட்டி செழுமையாயிருந்தது. இடையில் கைலியும் (லுங்கியும்), அதற்குமேல் காஷாய அங்கியும் அவர் தரித்திருந்ததன்றி, கழுத்தில் ஜெபமணி மாலை, பளிங்குமணி மாலை முதலியவற்றை அணிந்திருந்தார். கண்களில் மைதீட்டிக் கொண்டிருந்தார்; கொளுத்தப்பட்ட ஊதுவர்த்தி யொன்றை வலது காதிற்கும் தலைபாகைக்கும் இடையில் சொருகிக்கொண்டிருந்தார். அதிலிருந்து வெளிப்பட்ட புகை பரிமள கந்தத்தை வெகுதூரம் வீசியது. கையில் ஒரு அர்த்த சந்திரக் கவைக் கோலும், ஒரு சிறிய துணி மூட்டையும், சுரைக்குடுக்கையிலிருந்து செதுக்கிச் செய்யப்பட்ட தூக்குச் செம்பொன்றும் ஓர் ஓலைச் சுவடியும் இருந்தன. அந்த மகானைக் கண்ட சையது இமாம் எழுந்து தரையோடு தரையாய்க் குனிந்து சலாம் செய்ய, அவரும் பணிவாக அவனுக்குச் சலாம் செய்தார். உடனே சையது இமாம் அவரை அழைத்துக்கொண்டு அடுத்த தெருவிலிருந்த தனது வீட்டையடைந்து உட்புறத்தில் அவரை அழைத்துச் சென்றான். அந்த மந்திரவாதி அவனோடு பேசாமல் பின் தொடர்ந்து சென்றாராயினும், அவர் ஏதோ மந்திரத்தை ஜெபித்து முணுமுணுத்துக் கொண்டே நடந்தார். அவ்விருவரும் வந்ததைக் கண்ட நைனாமுகம்மது விரைவாக எழுந்து மிகவும் பணிவோடு மந்திரவாதிக்குச் சலாம் செய்து, அவரை ஓர் ஆசனத்தில் அமரச்செய்து மரியாதையாக நிற்க, மகான் அவனுக்கு உட்காரும்படி தமது கையசைப்பால் அநுமதி கொடுத்தார். அவ்வாறே அவனும் உட்கார்ந்து கொண்டான். பிறகு மந்திரவாதி சையது இமாமைப் பார்த்து, "நீங்களிருந்த அந்த வீட்டுக் கதவைத் திறந்து போட்டு வந்தீர்களே! அங்கே

போகவேண்டாமா?" என்றார். அதைக்கேட்ட வேலைக்காரன் தன்னை மந்திரவாதி அங்கே இருக்க வேண்டாமென்று போகச் சொல்லுவதாக ஊகித்துக்கொண்டு, "ஆம்; நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியில் நடந்தான். பிறகு நைனா முகம்மது மந்திரவாதியை நோக்கி, "ஐயா பெரியவரே! தங்களுடைய சொந்த ஊர் எது? இந்த ஊருக்கு வந்து எத்தனை நாளாகிறது?" என்றான். மந்திரவாதி, "நானிருப்பது மலையாள தேசத்தில் திருச்சூர். இங்கே ஒரு பெரிய மனிதர் வீட்டில் ஒரு மாந்திரீக வேலை முடித்துக் கொடுக்க அழைத்து வந்தார்கள். நேற்றுதான் இந்த ஊருக்கு வந்தேன். ரயில் டிக்கெட்டு கூட என்னிடமே இருக்கிறது. டிக்கெட்டு வாங்குகிறவர்கள் என்னிடம் டிக்கெட்டுக் கேட்கவே இல்லை. இதோ பாருங்கள்" என்று தமது சட்டைப் பையிலிருந்த ஒரு டிக்கெட்டை எடுத்துக்கொடுத்தார்; அது திருச்சூரிலிருந்து (எர்னாகுளத்திலிருந்து) சென்னைக்கு இரண்டு நாளைக்கு முன் வாங்கப்பட்ட டிக்கட்டாக விருந்தது. சமீபகாலத்தில் வந்த மனிதராகிய அவர், பல நாட்களுக்கு முன் நிகழ்ந்தவையான தன்னுடைய விஷயங்களை யறிந்து சொல்லுவதால், அவர் உண்மையில் பெருத்த மகானே என்று நைனா முகம்மது நினைத்தவனாய், அவரிடத்தில் பெருத்த மதிப்பையும் மரியாதையும் வைத்துப் பேசத் தொடங்கி, "மகானே எனக்கு வந்துள்ள ஆபத்தை இன்னதென்றறிந்து சொல்லி, அதற்குத் தகுந்த பரிகாரமும் நீங்கள் தேடிச் செய்ய வேண்டும். உங்களுடைய ஆக்கினைப்படி நாகூர் தர்காவுக்கு இரண்டாயிரம் ரூபா இப்போதே காணிக்கை செலுத்தி விடுகிறேன்" என்றான்.

உடனே மந்திரவாதி ஆடம்பரமாக உட்கார்ந்துகொண்டு தமது மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்த சக்கரம் எழுதப்பட்ட சில பனை ஏடுகளையும் ஒரு மந்திரக் கோலையும் எடுத்து

வெளியில் பரப்பினார்; ஓலைச் சுவடிகளைக் கையில் வைத்துக் கொண்டு அதைச் சுழற்றி வெறுவெளியில் ஏதோ சக்கரம் போடுவதற்காகக் கையை ஆட்டி, கண்ணை மூடிக்கொண்டு முணுமுணுத்தார். அவ்வாறு கால் நாழிகை நேரம் சென்றது; அவர் உடனே கண்களைத் திறந்து கொண்டு, "அல்லா பெரியவன். ஆண்டவன் பெரியவன். உம்முடைய மாமனார் பிராது எழுதிப் போலீசுக்கு அனுப்பிவிட்டார். நீர் ரகசியமாகக் கொணர்ந்த பெண்ணின் புருஷன் மோட்டார் வண்டியில் அறைபட்டு வைத்திய சாலையில் கிடக்கிறான். அவன் இன்னம் இரண்டொரு நாளில் வீட்டுக்கு வரப்போகிறான். இன்னமும் உம்முடைய மாமனார் வீட்டிலிருக்கும் அந்த பிராமணப் பெண், புருஷன் வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன், போய்ச் சேரப்போகிறாள். அதன் பிறகு போலீசார் கேசை நடத்தப்போகிறார்கள். நீர் நாகைப்பட்டணத்தில் இருப்பதாக நினைத்து உம்மைப் பிடித்து வர போலீசார் அந்த ஊருக்குப் போயிருக்கிறார்கள். உம்முடைய மனைவியும் இனி உம்மிடம் வரமாட்டாள். நீர் துர்நடத்தையுள்ளவரென்று நினைத்து அவர்கள் உம்முடைய உறவு வேண்டாமென்று தள்ளிவிட்டார்கள்" என்றார்.

அதைக் கேட்ட நைனாமுகம்மது வியப்பும் திகைப்புமடைந்து, அச்சத்தினால் நடுநடுங்கிப்போனான். "மிகுந்த நற்குணமும், என்மேல் கரைகடந்த பிரியமும் கொண்ட என் மனைவி நூர்ஜஹான் கூட இதற்கு இணங்கினாளா? அதை மாத்திரம் என் மனம் நம்பமாட்டேனென்கிறது" என்று கூறினான்.

**மந்திரவாதி:-** நீர் நம்பினாலும் சரி; நம்பாவிட்டாலும் சரி; உண்மை அதுதான். பெண்டுகளின் உண்மையான குணம் உமக்குத் தெரியாது. தங்களுடைய புருஷன் விஷயத்தில் அவர்கள் தங்களுடைய உயிரைக்கூடக் கொடுத்துவிடுவார்கள்.

ஆனால், புருஷன் வேறொத்தியோடு நட்பா யிருப்பதைக் கண்டுவிட்டால், அவர்களுக்குத் தலைபோவதும் தெரியாது. அதன்பிறகு அவர்கள் தாட்சணியம் பார்க்கமாட்டார்கள்; எதற்கும் துணிந்து விடுவார்கள் - என்றார்.

அதைக் கேட்ட நைனா முகம்மது பெரிதும் கலங்கினான். தங்களது வீட்டு ரகசியங்களை யெல்லாம் அவ்வளவு தூரம் உணர்ந்த அந்தப் பெரியவர், தன்னை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற ஏதேனும் வழி தேடுவாரென்று அவன் நினைத்தான். என்றாலும் சந்தேகம் வருத்தியது. அவன் அவரை நோக்கி, "மகானே! என்னுடைய மாமனார் என்மேல் பிராது எழுதியதற்கு என்னுடைய சம்சாரம் சம்மதித்தாளா வென்பதே எனக்குப் பெருத்த சந்தேகமாக இருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட மந்திரவாதி, "சரி; உமக்கு நான் இப்போதே அதை ருஜுப்படுத்துகிறேன். உம்முடைய மாமனாரின் எழுத்து உமக்கு அடையாளம் தெரியுமா?" என்றார்.

**நைனாமுகம்மது:-** தெரியும்.

**மந்திர:-** சரி; அப்படியானால் இதோ நான் என்னுடைய எட்சினி தேவதையை அழைத்து, உம்முடைய மாமனார் போலீசாருக்கு அனுப்பியுள்ள பிராதை போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எடுத்துக்கொண்டு வரும்படி செய்கிறேன். இதோ பாரும் - என்றார். உடனே அவர் தமது சுவடியை எடுத்துப் பலவாறு சுழற்றி, சக்கரம் போட்டு கண்களை மூடிக்கொண்டு ஆகாயத்தைப்பார்த்து, வீட்டின் உச்சிமேட்டில் தயாராக காத்திருந்த பாதாள எட்சினி தேவதையை அழைத்து ஆக்ஞை செய்தார்; கால் நாழிகை வரையில் முணுமுணுத்து மந்திர உச்சாடனம் செய்தார்; சுவடியின் கட்டை அவிழ்த்து "பூ" வென்று ஊதினார். உடனே சுவடியிலிருந்து ஒரு காகித மடிப்பு வந்து எதிரில் விழுந்தது; அந்த அதிசயத்தைக் கண்ட நைனா

முகம்மது திகைத்து அசைவற்று உட்கார்ந்து போனான். உடனே மந்திரவாதி காகித மடிப்பை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்துவிட்டு, நைனா முகம்மதுவின் கையில் கொடுத்து, "இது யாருடைய எழுத்து என்று பாரும்" என்றார்.

அதை வாங்கிப் பார்த்தவுடனே நைனா முகம்மது பிரமித்து, "இது என் மாமனாருடைய எழுத்துத்தான்!" என்றான்.

**மந்திர:-** இதுதான் உம்முடைய மாமனாரால் போலீசாருக்கு எழுதி யனுப்பப்பட்ட பிராது; என்னுடைய பாதாள எட்சினி தேவதையை அனுப்பி வரவழைக்கிறேன். இதோ பாரும். போலீஸ் ஆபீஸ் முத்திரை இந்தக் காகிதத்தில் பதிந்திருக்கிறது; இதிலுள்ள விஷயத்தை நீர் படித்துப் பார்க்கலாம் - என்றார்.

ஆச்சரியத்தினால் பிணிக்கப்பட்டுப் போயிருந்த நைனா முகம்மது அந்தக் காகிதத்திலிருந்த போலீஸ் ஆபீஸ் முத்திரையைப் பார்த்தான். பிறகு அதை வாங்கிப் படிக்கத் தொடங்கினான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**பிராது**

**சென்னை துரைத்தனத்தின் நிருவாகசபை**

**அங்கத்தினரான கான் பகதூர் பெரியதம்பி**

**மரக்காயரிடமிருந்து,**

**போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு**

ஐயா!

திருவல்லிக்கேணி தொளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலுள்ள வக்கீல் வராகசாமி ஐய்யங்கார் என்பவருடைய மனைவியான மேனகா என்னும் பெண்ணை, அந்த வக்கீலின்

அக்காளான பெருந்தேவியம்மாள் என்பவளும், அவளுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டிலுள்ள சாமாவையர் என்பவரும், நாடகம் பார்க்கப்போவதாய்க் கூறி வஞ்சித்து அங்கப்ப நாயக்கன் தெருவில் - கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் நைனா முகம்மது மரக்காயரிடம் ரூ, 10,000-க்கு விற்றனர். அவன் அந்தப் பெண்ணிடம் காமாதுர நோக்கங் கொண்டு அவளைக் கற்பழிக்க முயலுகையில், அவள் கூச்சலிட்டு அங்கே அகப்பட்ட பழம் நறுக்குங் கத்தியால் தன்னைக் குத்திக் கொள்ள முயன்றாள். வீட்டிற்குள்ளிருந்த எனது குமாரத்தியும், மேற் குறிக்கப் பட்ட நைனாமுகம்மது மரக்காயரின் மனைவியுமான நூர்ஜஹான் பீபி அவ்விடத்திற்கு வந்து அந்தப் பெண்ணை விடுவித்து என்னுடைய பங்களாவிற்கு அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாள். அந்தப்பெண் பெருத்த பயத்தினாலுண்டான அதிர்ச்சியால் ஜுரநோய்கொண்டு என்னுடைய பங்களாவில் இருக்கிறாள். மேற் குறிக்கப்பட்ட மூன்று மனிதரும், இந்தியன் பீனல்கோட் 366-வது பிரிவுப்படி ஒருவருடைய மனைவியை வஞ்சகமாக விபச்சாரத்தின் பொருட்டு அபகரித்துப் போய் விற்றதும் வாங்கியதுமான குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். (Offence of Kidnapping a married woman for illicit intercourse) இந்த விஷயத்தில் நீர் உடனே தக்க விசாரணைகளைச் செய்து குற்றவாளிகளான மூவரையும் கைதியாக்கி சிறைப்படுத்த வேண்டியது.

**பெரியதம்பி**

-என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை நைனா முகம்மது முற்றிலும் படித்தான். அவனது மனம் மிகவும் குழம்பியது. பயத்தினால் கைகால்கள் நடுங்கின. முகத்தில் பிணக்களை தோன்றியது. அவன் தனது கண்களை நம்பாமல் கடிதத்தை மேலும் இரண்டு முறை படித்தான். எழுத்து தனது மாமனாருடைய எழுத்தே என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

போலீஸ் ஸ்டேஷன் முத்திரையும் அதில் பதிந்திருந்தது. அவர் முதல்தரமான மந்திரவாதி என்று நினைத்து அவன் அப்படியே மயங்கிப்போய் தடை கட்டப்பட்ட நாகப் பாம்பைப்போல அசைவற்று பிரமை கொண்டு விழித்தான். தனது மனைவி எல்லா விஷயங்களையும் தனது தகப்பனாரிடம் சொன்னாளென்பதும், அவர் தன்னிடம் சிறிதும் தாட்சணியமின்றி பிராது எழுதியனுப்பிவிட்டாரென்பதும் சந்தேகமறக் கண்ணெதிரில் ருஜுவாய்ப் போயின. அந்த ஆபத்து வேளையில் தான் என்ன செய்வதென்பதை அறிய மாட்டாமல் அவன் விழித்து மந்திரவாதியின் முகத்தை நோக்கி, "இவைகளிலிருந்து நீங்கள் தான் என்னை மீட்க வேண்டும்" என்று கூறி சலாம் செய்து அவரை வேண்டிக் கொண்டான்.

**மந்திர:-** "ஐயா! இதைப்பற்றி நீர் சிறிதும் கவலைகொள்ள வேண்டாம். இன்று ஒரு பொழுது பொறுத்துக் கொண்டிருந்து நாளைக்குக் காலையில் என்ன நடக்கிறதென்பது பாரும்; நீங்காத விபத்துக்களையெல்லாம் நீங்கவைத்து, பணியாதவர்களைப் பணியச் செய்வேன்; இன்று இரவில் பதினைந்து நாழிகை சமயத்தில் நான் சுடுகாட்டுக்குப் போய் ஜெபித்து காவுகொடுத்து பாதாள எட்சினியை உச்சாடனம் செய்துவிடுகிறேன். நீர் இன்றிரவே உம்முடைய வீட்டுக்குப் போய்ச் சேரும்; நாளைக்குக் காலையில் உம்முடைய மாமனாரும், மனைவியும் உம்மிடம் வந்து உம்முடைய காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்பதன்றி, அவர்கள் நீர் சொல்லுவது போல இனி எப்போதும் ஆடுவார்கள். நீர் எத்தனை வைப்பாட்டியை வைத்துக்கொண்டாலும், அவர்கள் அதற்கு அநுசரணையாகவே இருப்பார்கள். தவிர, மகா பதி விரதையைப் போல நடித்த அந்த பார்ப்பாரப் பெண்ணையும் வசியம் செய்து வைக்கிறேன். அவள் இனிமேல் தன்னுடைய வீட்டையும் புருஷனையும் நினைக்காமல் நீயே கதியென்று வந்து உம்மிடம் சேரும்படி செய்துவிடுகிறேன்; போதுமா?"

என்றார். அதைக் கேட்ட நைனாமுகம்மது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தவனாய், எழுந்து மந்திரவாதிக் கெதிரில் மண்டியிட்டு வணங்கி, "மகானே! நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்வீர்களானால், என்னைப்போன்ற பாக்கியவான் யாரிருக்கப் போகிறான். நீங்கள் என்னிடம் ரூபா பதினாயிரம் கேட்டாலும் தருகிறேன்; உங்களுக்குப் பணம் தேவையில்லை யேனும், நீங்கள் வேறு யாருக்குக் கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கத் தடையில்லை" என்று கூறி வேண்டினான்.

**மந்திர:-** இவைகள் எல்லாம் முடிந்து போனதென்றே நீர் நினைத்துக் கொள்ளலாம். எனக்குப் பணமே தேவையில்லை; நாளைக்குக் காரியம் முடிவான பின் மறந்து போகாமல் நாகூர் தர்காவுக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுப்பிவிடும். தவிர, இந்த ஊரில் பதினாயிரம் பக்கிரிகளுக்கு மூன்று நாட்களுக்கு சாப்பாடு போடும். அதுவே போதும்.

**நைனா:-** அவசியம் அப்படியே செய்கிறேன். அந்த பிராம்மணப் பெண்ணும் நாளை என்னிடம் வந்து விடுவாளா?

**மந்திர:-** ஆகா! அவசியம் வருவாள். அவள் விஷயத்தில் இன்னொரு காரியமும் உமக்குச் செய்து கொடுக்கிறேன். அந்தப் பெண் இனிமேல் உம்மிடமிருப்பதை எவரும் கண்டு பிடிக்க முடியாமல் ஒரு தடைக்கட்டுச் செய்து தகடு தயாரித்துத் தருகிறேன். அதை அவளை நீர் வைத்திருக்கும் வீட்டின் வாசற்படிக்குள் அடித்து வைத்தால், அவள் அந்த வீட்டிலிருப் பதை எவரும் காணமுடியாது. ஒருகால் அந்தத் தகட்டையே யாராகிலும் அபகரித்துக்கொண்டு போய் விட்டாலும், சட்டம் உம்மைத் தொடராதிருக்கும்படி உமக்கு இன்னொரு காரியமும் செய்து வைத்து விட்டுப் போகிறேன்- என்றார்.

அவற்றைக் கேட்ட நைனாமுகம்மது பூரித்துப் புளகாங்கித மடைந்து மெய்மறந்து அளவளாவினான். வணங்காமுடி

மன்னரான தனது மாமனாரும், நூர்ஜஹானும் தனது காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்பதாகவும், தான் அவர்களை அலட்சியம் செய்வதாகவும் அப்போதே மனதில் பாவித்துக் கொண்டான். மேனகாவை ஒரு தனியான பங்களாவில் வைத்து அவளோடு கொஞ்சிக் குலாவி, சரச சல்லாபம் செய்து இன்புற்று வாழ்வதாக நினைத்து மனக்கோட்டை கட்டினான். "சரி; சட்டமும் தொடராம லிருக்கும்படி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றான்.

**மந்திர:-** அதற்கு உம்மிடத்தில் ஒரு தஸ்தாவேஜு இருக்க வேண்டும். பெருந்தேவியம்மாள் பெண்ணுக்குத் தாயென்றும், சாமாவையர் பெண்ணுக்கு அண்ணனென்றும், பெண் கலியாணம் ஆகாத மைனரென்றும், அந்தப் பெண்ணை சவரட்சணை செய்யமாட்டாமையால் அவர்கள் அவளை உம்மிடம் விற்றுவிட்டதாகவும், அவளை நீர் மகம்மதியப் பெண்ணாக்கி மணந்துகொள்ள அவர்கள் உமக்கு அனுமதி கொடுத்திருப்பதாகவும் ஒரு கடிதம் அவர்களால் எழுதப்பட்டு, உம்மிடம் வந்து சேரவேண்டும். அதை நீர் வைத்துக் கொண்டிருந்தால், சட்டப்படி உம்மீது குற்றம் ஏற்படாது. அந்தப் பெண்ணின் புருஷன் உம்மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது.

**நைனா:-** (சிறிது யோசனை செய்து) இது நல்ல யுக்திதான். ஆனால் அவர்கள் அந்த மாதிரி கடிதம் எழுதிக் கொடுக்க மாட்டார்களே! சாமாவையர் ஒரு வேளை எழுதிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். அந்த அம்மாள் அதற்குச் சம்மதிக்க மாட்டாளே! அதற்கு என்ன தந்திரம் செய்கிறது?

**மந்திர:-** அதற்கு நான் இருக்கிறேன். கவலைப்பட வேண்டாம். என்னிடத்தில் ஒரு வகையான சொக்குப்பொடி இருக்கிறது. அவர்களிடம் போய் நான் பேசிக்கொண்டே யிருந்து அந்தப் பொடியில் சிறிதளவு காற்றில் வீசினால், நான்

சொல்லுவதுபோல அவர்கள் ஆடுவார்கள்; உடனே அந்த மாதிரியான கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு வருகிறேன். எல்லாவற்றிற்கும் நீர் சாமாவையருக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடும்.

**நைனா:-** அவருக்கு என்ன மாதிரி கடிதம் எழுதுகிறது?

**மந்திர:-** "பெண் சம்மதிக்கு மென்று சொல்லிவிட்டுப் போனீர்கள். அறையில் பெண்ணை நீங்கள் விட்டுப்போன பிறகு நான் அங்கே போனேன். என்னைக் கண்டு பெண் நடுநடுங்கி, விஷயம் ஒன்றையும் அறியாதவளைப் போல் நடித்து, தன்னை விட்டு விடும்படி வேண்டினாள். நான் இணங்காமையால் அவள் என்னைப் பலவாறு தூஷித்தாள். அவளை நான் பலவந்தமாகப் பிடிக்கப்போனபோது, அவள் எனக்கருகிலும் வராமல் ஓடி ஓடிக் கடைசியில் மாம்பழம் அறுக்கும் கத்தியை எடுத்து அதனால் தன்னைக் குத்திக் கொள்ளப் போனாள். நான் அவளுக்கு அருகிலும் நெருங்காமல் தூரத்தில் நின்று, குத்திக்கொள்ள வேண்டா மென்றும், அவளை நான் வெளியில் அனுப்பிவிடுவதாகவும் சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டேன். அவளுடைய கூச்சலைக் கேட்ட என் மனைவி உடனே வந்து அவளை அழைத்துக்கொண்டு என்னுடைய மாமனார் வீட்டிற்குப் போய்விட்டாள். இப்போதும் அவள் ஜுரத்தோடு அவ்விடத்திலிருக்கிறாள். அவள் திரும்பவும் உங்கள் வீட்டுக்கு வந்தால், அது உங்களுக்கு அபத்தமாய் முடியும். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிறவர் ஒரு மந்திரவாதி. இவருடைய உதவியால் அந்தப் பெண்ணை வசியம் செய்து திரும்பவும் நான் அழைத்துக் கொள்ளப் போகிறேன். மேல் விவரங்களை இந்த மனிதர் சொல்லுவார்" என்று ஒரு கடிதம் எழுதி என்னிடம் கொடும்; நான் இப்போதே போய் காரியத்தை ஒரு நொடியில் முடித்துக் கொண்டு வருகிறேன் - என்றார்.

அந்த யோசனையைக் கேட்ட நைனா முகம்மது மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தனக்கு எவ்வகையான துன்பமுமின்றி எல்லா விஷயங்களையும் எளிதில் முடித்துத் தனது துன்பங் களை யெல்லாம் தீர்த்துவைக்கும்படி நல்ல சமயத்தில் அந்த மந்திரவாதி வந்ததைக் குறித்து ஆநந்தங் கொண்டான்; தான் மிகவும் நற்குணமுள்ளவனாதலாலும், பலருக்கு உதவி செய்பவனாதலாலும் ஆண்டவன் தனது ஆபத்தில் அந்த மந்திரவாதியை அனுப்பி உதவி செய்திருக்கிறாரென்று நினைத்துக் கொண்டான்; உடனே எழுந்து அங்கிருந்த காகிதத்தை எடுத்து அவ்வாறே சாமாவையருக்கு ஒரு கடிதம் எழுதி அதை மந்திரவாதியினிடம் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட மந்திரவாதி உடனே தனது கண்களை மூடிக்கொண்டு ஞானதிருஷ்டியால் எதையோ பார்த்தார்; "சரி சாமாவையர் இப்போது அவருடைய வீட்டிலேதான் இருக்கிறார்; இன்னம் அரை நாழிகையில் வெளியில் போய்விடுவார்; அதற்குள் நான் அவரிடம் போய்க் காரியத்தை முடிக்கிறேன்; இன்று இரவில், நான் சுடலைக்குப் போய் ஜெபம் செய்யப்போகிறேன்; நாளைக்குக் காலையில் அவர்கள் மூவரும் உம்முடைய வீட்டிக்கு வந்து சேருவார்கள். நானும் அப்போது வந்து சாமாவையரால் கொடுக்கப்பட்ட பத்திரத்தைக் கொணர்ந்து கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டு மந்திரவாதி எழுந்து உத்தரவு பெற்றுக் கொண்டு வெளியிற் சென்றார். நைனாமுகம்மது தனது அதிர்ஷ்டத்தை நினைத்து நினைத்து மனக்கிளர்ச்சியும், பூரிப்பும் அடைந்தவனாய் எழுந்து அறையில் உல்லாசமாக உலாவி மேல் நடக்க வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி திட்டங்கள் போட்டுக்கொண்டு அன்றைப் பொழுது கழியவேண்டுமே என்று ஆவல் கொண்டு பொழுதைப் போக்கினான்.

அவன் அவ்வாறிருக்க, அந்த வீட்டை விட்டு வெளியில் வந்த மந்திரவாதி, இரண்டு மூன்று வீடுகளுக்கப்பால் சென்று

ஒரு திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, தனது பைக்குள்ளிருந்த ஒரு காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து, சாமாவையர், பெருந்தேவியம்மாள் ஆகிய இருவரும் எழுதிக் கொடுக்க வேண்டிய கடிதத்திற்கு ஒரு நகல் தயாரித்து எடுத்துக் கொண்டு எழுந்து சிறிது தூரம் நடந்து அப்பாற் சென்றார். அங்கு நின்ற குதிரை வண்டியொன்றைக் கண்டு அதை திருவல்லிக்கேணிக்கு அமர்த்திக்கொண்டு சென்றார். வண்டி பகல் பதினோரு மணிக்கு தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவில் உள்ள சாமாவையரது வீட்டு வாசலில் அவரை விட்டுச் சென்றது. மந்திரவாதி அந்த் வீட்டின் நடையில் நின்ற வண்ணம், "சாமி! சாமி!" என்று கூப்பிட்டான். உட்புறத்திலிருந்த சாமாவையரின் மனைவி மீனாக்ஷியம்மாள், "யார் அங்கே?" என்று கேட்டுக் கொண்டு நடைக்கு வந்தாள்.

மந்திரவாதிக்கும் மீனாக்ஷியம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையை விவரிக்குமுன், சாமாவையரைப்பற்றிய விவரங்கள் யாவற்றையும் கூறுதல் அவசியமாகிறது. திருவாரூரில் தாசி கமலத்தின் வீட்டில் கள்வர்களிடம் அகப்பட்டு, இரவில் தண்டவாளத்தில் கட்டப்பட்ட சாமாவையர், சாக்கு மூட்டைக்குள் உருண்டை வடிவமாயிருந்து ஹடயோகம் செய்துகொண்டிருந்தார். எந்த நிமிஷத்தில் இரயில் வண்டி தம்மீது ஏறுமோ, அருமையாக ஊட்டி வளர்த்த தமது அழகிய தேகம், எந்த நொடியில் சக்கரங்களுக்கு இரையாகுமோ என்று நினைத்து, பெருத்த திகிலும் அச்சமுங் கொண்டு மரணவேதனை அநுபவித்திருந்தார். அவரது வாய்க்குள் பெருத்த துணிப்பந்து வலுவாக நுழைந்து கொண்டிருந்தமையால், கன்னம் தொண்டை முதலியவை எப்போது கிழிந்துபோகுமோ வென்னும் நிலைமையில் இருந்தமையால், அவரது முகத்திலிருந்த இரத்தக் குழாய்களும் நரம்புகளும் விண்விண்ணென்று தந்தி மீட்ட ஆரம்பித்தன.

மூச்சு ஒழுங்காக உட்சென்று வெளிப்படாமையால் திக்குமுக்காடியது; வயிறு உப்புச மடைந்து வெடிக்கும் நிலைமையை அடைந்தது. ஊற்றுக் கண்களிலிருந்து தண்ணீர் வருதலைப்போல, அவரது தேகத்திலிருந்து வியர்வை வழிந்துகொண்டிருந்தது. அத்தனை துன்பங்களுக்கும் வட்டியாக, அவர் கட்டப்பட்டிருந்த இடத்தில் எறும்புப் பாழிகளிருந்தன; பாசறைக்கு அணிவகுத்துச் செல்லும் படைகளைப்போலச் சென்ற கட்டெறும்புகளின் ஒழுங்கை சாமாவையரது உடம்பு கலைத்தமையால் அவைகள் யாவும் அவர்மீது சினங்கொண்டு, அவரது உடம்பில் மொய்த்துக் கொண்டு கடிக்கவாரம்பித்தன. கயிற்றின் கட்டுகளால், அவரது தேகத்து இரத்த ஓட்டம் ஆங்காங்கு தடைபட்டுப்போயின. அதனால் அநந்தகோடி ஊசிகள் கொண்டு குத்துதல் போன்ற உணர்ச்சி, உடம்பு முற்றிலும் உண்டாயிற்று; அவர் அத்தகைய நரக வேதனையிலிருந்து, இரவு இரண்டு மணி முதல், வதைப்பட்டுத் தவித்திருந்தார். இரயில் வந்து தம்மைக் கொன்று விடுமோ வென்று ஆரம்பத்தில் நினைத்து அதைப்பற்றி பெரிதும் அச்சங்கொண்டிருந்த சாமாவையர் நாழிகை செல்லச் செல்லத் தமது தேகத்தின் நரகவேதனையைப் பொறுக்க மாட்டதவராய் தமது உயிர் உடனே போய்விடுவதே நல்லதென நினைத்தார்; இரயில் சீக்கிரம் வரவில்லையே என்று எண்ணி எண்ணி அதையே ஜெபமாகச் செய்கிறார்; இரயில் போவதன் ஓசையும், இஞ்சின் ஊதிய ஓசையும் அருகில் அடிக்கடி கேட்டன. இதோ ரயில் வந்துவிட்டது. அடுத்த நிமிஷம் தமது நரகவேதனை ஒழிந்து போகுமென்று நினைக் கிறார். அதே நிமிஷத்தில் அதற்கு மாறாக நினைக்கிறார். பூலோகத்தில் சுகங்களையெல்லாம் அநுபவியாமல் தாம் அகாலமரண மடையப்போவதை நினைத்து விசனமடைந்து விம்மி விம்மி அழுகிறார். மனதார அழவும் அவரால் கூடாமற்போனது. அவர் தம்மை விடுவித்துக் கொள்ளக்

கூடுமோ வென்று நினைத்து உருள நினைத்தார். மூட்டை தண்டவாளத்தோடு இறுகப் பிணைக்கப்பட்டிருந்தமையால், அவரது தேகம் சிறிதும் அசையவில்லை. "ஐயோ! இந்த ஓயா மரணவேதனையிலிருந்து தத்தளிப்பதை விட உடனே உயிரை விடுவதே நல்லது" என நினைக்கிறார். இரயில் வந்து தம்மீது மோதி தமது உடம்பை ஒரே அடியில் சக்கைசக்கையாகக் கிழித்தெறிந்துவிடாதோ வென்று தபசு செய்கிறார். அடிக்கடி இரயிலின் ஓசை அருகிலுண்டானதேயன்றி அவரது கோரிக்கை நிறை வேறவில்லை; திருவாரூர் நான்கு வண்டிகள் வந்து கூடும் நாற்சந்திப்பு ஆகையாலும், சாமான் வண்டிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றப்படவேண்டுமாதலாலும், அருகிலிருந்த ஸ்டேஷனிலிருந்து வண்டிகளின் ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது. தஞ்சையிலிருந்து திருவாரூருக்கு இரயில் போகும் பாதையிலேயே தாம் கட்டப்பட்டிருப்பதாக அவர் நினைத்தார். ஆனால், அதில் நெடுநேரமாக இரயில் வராமையால், இரவு இரண்டு மணிக்குப் பிறகு அந்தப் பாதையில் வண்டி வருவதில்லையோ வென்று அவர் ஐயமுற்றார். ஆனால், விடியற்காலம் ஐந்துமணிக்கு, திருவாரூரிலிருந்து தஞ்சைக்கு இரயில் போவதென்பதை அவர் நிச்சயமாக அறிவார். அந்த நேரம் வரையில் தாம் இவ்வாறு நரகவேதனை அடைந்திருக்க வேண்டுமே என்று நினைத்து மனமுடைந்தவராய் ஏங்கிக் கிடந்தார். விடியற்காலம் வரும் வண்டியில் தாம் ஒருகால் அரைகுறையாக நசுக்கப்பட்டு, இன்னம் அதிகரித்த சித்தரவதையை அநுபவிக்க நேருமோ வென்னும் சந்தேகமும் அப்போதைக்கப்போது அவரது மனத்தில் எழுந்து வாட்டியது. முதல் நாள் காலையிலிருந்து இரவு ஒருமணி வரையில் தாம் அநுபவித்த சுகங்களையும் தாமிருந்த உன்னத நிலைமையைப் பற்றி எண்ணி எண்ணி அவர் பரிதபித்தார்; வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைதலைப்போல, தாம் பங்களாவை வாங்கி அதில்

கமலத்தை வைத்துக் கொண்டு மகோன்னத தசையிலிருந்து சுகமநுபவிக்க நினைத்த காலத்தில், கள்வர் தோன்றி தமது எண்ணத்தில் மண்ணைப்போட்டு விட்டதைப்பற்றி நினைத்து நினைத்து அவர் உருகினார்; தமது அதிர்ஷ்டஹீனத்தையும் தம்மையும் மனங் கொண்டமட்டும் தூற்றிக்கொண்டார்; கள்வர் வந்தது கமலத்தின் தூண்டுதலினால் என்பதை அவர் நினைக்கவில்லை. அவர்கள் தற்செயலாக வந்தவர்களென்றே அவர் நினைத்திருந்தார். கொடியவர்களாகிய அக்கள்வர் தம்மை வதைத்ததைப்போல கமலத்தையும் அவளது தாயையும் கட்டிப்போட்டுவிட்டு, அவர்களது சொத்துக்களையெல்லாம் கொண்டுபோயிருப்பார் களென்று நினைத்து, அவர்களது விஷயத்தில் மிகுந்த இரக்கமும் விசனமும் கொண்டார். கண்கொள்ளா வனப்பையும் மனங் கொள்ளாக் காதலையும் கொண்டு இரதி தேவி போலிருந்த அந்தப்பெண்ணின்மீது தாம் கொண்ட விருப்பம் நிறைவேறாமல் போனதை நினைத்து அவர் உருகினார்; விடியற்காலம் ஐந்துமணி சமயம் வரவேண்டுமே என்றும், வந்து விடுமே என்றும் அவர் மாறிமாறி நினைத்து சகிக்க வொண்ணாத் துன்பகரமான நிலைமையிலிருந்தார். விடியற்காலம் ஐந்து மணியும் கழிந்தது. இரயிலோ அவர்மீது ஏறவில்லை. ஆனால், அது சென்ற ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. அன்றைக்கு தமது அதிர்ஷ்டத்தினால், தாமிருந்த பாதை பழுதுபட்டுப்போனதோ வென்றும் நினைத்தார். பொழுது மேன்மேலும் சென்றது; கதிரவனும் குணதிசையில் எழுந்தான்; படிப்படியாக வெயிலும் அவரது உடம்பில் எரிக்கத் தொடங்கியது. பகலின் ஆரவாரமும், மனிதரின் பேச்சுக் குரலும் எங்கும் எழுந்தன. மனிதர் போவது வருவதுமா யிருந்தது, அவர்களது சம்பாஷணையால் புலப்பட்டது. அவர் உடனே கூச்சலிட முயன்றார்; அது பலிக்கவில்லை. அவர் மூட்டையாகக் கட்டப் பட்டுக் கிடந்ததை எவரும் கவனித்ததாகவும் தோன்றவில்லை.

அவ்வாறே பகல் பத்து மணி சமயமானது. இரயில் சிப்பந்திகளான யாரோ இரண்டு மனிதர் அவருக்கு மிகவும் அருகில் பேசிய குரல் கேட்டது.

"அடே கண்ணுச்சாமி! இதென்னடா மூட்டை!" என்று ஒருவன் வியப்போடு கூறியவண்ணம் அருகில் ஓடிவந்தான்.

**கண்ணு:-** ஆமடா கந்தா! இது நேத்து இல்லேடா! யாரோட வேலையோ இது தெரியலடா.

**கந்தன்:-** தண்டவாளத்திலே கட்டியிருக்குதுடா! (காலால் மூட்டையைப் புரட்டி) அடேடோ! பொணம்மாதிரி இருக்குதுடா! கொலை நடந்திருக்குதுடா!-

**கண்ணு:-** அசையுதுடா! உசிர் இருக்குது. மூட்டையே அவுடா பார்க்கலாம் - என்றான்.

உடனே இருவரும் விரைவாக அந்த மூட்டைக்கருகில் நெருங்கி மிகவும் பாடுபட்டு அதன் கட்டுக்களையும் சாக்கையும் விலக்கினர். அதற்குள் துவண்டு வாடி வதங்கி மூச்சு விட மாட்டாமல் கண்களை மூடிக்கொண்டு அசைவற்று மூர்ச்சித்துக் கிடந்த ஐயரை கோணிப் பையிலிருந்து அவர்கள் உடனே வெளியில் இழுத்துக்போட்டனர்; அவரது வாயிலிருந்த துணிப்பந்தை விலக்கினர்; "அடே யாரோ பெரிய மனுசருடா! உசிர் இருக்குதுடா அடே கந்தா! ஓடிப்போயி தண்ணி கொண்டாடா!" என்றான் கண்ணுச்சாமி. அதைக் கேட்ட கந்தன் ஓட்டமாக ஓடி ஒரு செம்பில் தண்ணீர் கொணர்ந்தான். அந்த அமுத சஞ்சீவி உடனே ஐயரது வாயில் விடப்பட்டது; முகத்திலும் தடவப்பட்டது. அடுத்த நிமிஷத்தில் கைகால்களின் மரப்பு நீங்க ஆரம்பித்தது. மூச்சும் ஒழுங்குபட்டது. உணர்வைப் பெற்ற ஐயர் பிரம்மாநந்தம் அநுபவிப்பவரைப் போலானார். என்றாலும், வாயும் உடம்பும் பச்சைப் புண்ணாயிருந்

தமையால், பத்து நிமிஷநேரம் பேசமாட்டாமலும், அசைய மாட்டாமலும் அவர் அப்படியே தரையில் கிடந்தார்; பிறகு கண்களை மெல்லத் திறந்து அருகிலிருந்த உயிர் கொடுத்த பேருபகாரிகளை நன்றியறிதலோடு நோக்கினார்; நாற்புறங் களையும், தாமிருந்த விடத்தையும் கவனித்துப் பார்த்தார். தாம் அதுவரையில் இரயிலில் அறைபட்டுக் கொல்லப்படாததன் காரணம் என்ன வென்பதை அவர் அப்போதே அறிந்தார். அந்த ஸ்டேஷன் நான்கு ரயில்கள் கூடும் நாற்சந்தி யென்பது முன்னரே கூறப்பட்ட தல்லவா? அந்த ஸ்டேஷனில் இரயில் வண்டிகளும், சாமான் வண்டிகளும் ஒதுக்கப்படுவதற்கு, இருபது முப்பது பாதைகள் அரை அரை பர்லாங்கு தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தன. தஞ்சைக்கு இரயில் போகும் முக்கியமான பாதை, நெடுந்தூரத்திற்கு அப்பால் இருந்தது; அவரிருந்த பாதை, வண்டி ஒதுக்கப்படும் பாதைகளில் ஒன்று. கள்வர் குடிவெறியில் அதைக் கவனிக்காமல் முதலிலிருந்த பாதையில் அவரைக் கட்டிவிட்டுச் சென்றனர். அந்த உண்மையை அப்போதே கண்டறிந்த சாமாவையர் பெரிதும் சந்தோஷ மடைந்தவராய் மெல்ல வாயைத் திறந்து, "நீங்கள் இன்னும் ஐந்து நிமிஷ நேரம் வராதிருந்தால், என் உயிர் போயிருக்கும். எனக்கு உயிர் கொடுத்த மகா உபகாரிகளான உங்களுக்கு நான் என்ன பதிலுதவி செய்யப்போகிறேன். இந்த ராஜ்ஜியம் என்னுடையதா யிருந்தால், இதை அப்படியே உங்களுக்குக் கொடுத்திருப்பேன்" என்று கூறிய வண்ணம் எழுந்து உட்கார்ந்தார். இன்னமும் உடம்பு சரியான நிலைமைக்கு வராமைமாயல், அவர் நன்றாக எழுந்திருக்கக் கூடவில்லை. நிற்க, அவரது இடையில் கோவண மொன்றே யிருந்தமையால் எழுந்திருக்கவும் அவர் வெட்கினார்.

அவர் கூறியதைக் கேட்ட கந்தன், "யார் சாமி இப்படிச் செய்தது? உங்களுடைய ஊர் எது சாமி?" என்றான்.

சாமாவையர், "அப்பா! நானிருப்பது பட்டணம். வர்த்தக

விஷயமாக நாகைப்பட்டணத்துக்குப் போகிறவன். ராத்திரி ஒரு மணி வண்டியில் இறங்கி திருவாரூரில் ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கினேன். அங்கே கொள்ளையர்கள் வந்து, என்னிடமிருந்த பதினாயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு, என்னைக் கட்டிக்கொண்டு வந்து இங்கே போட்டுவிட்டார்கள். நீங்கள் எனக்கு உயிர் கொடுத்தது பெரிதல்ல. என்னுடைய மானத்தைக் காப்பாற்ற இரண்டு துணிகளும், நாகைப்பட்டணம் போக ஒரு டிக்கட்டும் வாங்கிக் கொடுப்பீர்களானால், நான் அதை மறக்கமாட்டேன். நாகைப்பட்டணம் போனவுடன் அவைகளின் கிரயத்தை அனுப்பிவிடுகிறேன்" என்று கூறிக் கெஞ்சி மன்றாடினார். அதைக் கேட்ட கந்தன், "ஐயோ பாவம்! ஐயருடா! பெரிய மனிசரு வந்து மாட்டிக்கிட்டாருடா! நீ நம்ப விசயபுரம் மாணிக்கம்பிள்ளை கடைக்கு ஓடி கடனா ரெண்டு துணி எடுத்துக்கிட்டுவா; நான் டிக்கட்டு வாங்கிக்கிட்டு வாறேன்" என்றான். உடனே இருவரும் தலைதெறிக்க ஓடி மறைந்து போனார்கள். தனிமையில் விடப்பட்ட சாமாவையர் உடனே எண்ணமிடலானார். தாம் அப்படியே நேராக நாகைப்பட்டணம் போகிறதா, அல்லது கமலத்தின் வீட்டுக்குப் போய் அவளது செய்தியை அறிந்துகொண்டு போகிறதா வென்று அவர் யோசனை செய்தார். எப்படியாகிலும் கமலத்தை இன்னொருமுறை தாம் பார்க்காவிட்டால், தமது ஆவல் தீராதென்றும், தமது ஜென்மம் கடைத்தேறாதென்றும் அவர் இன்னமும் நினைத்தார். ஆனால், தாம் அப்போது ஏழ்மை நிலையிலிருந்தமையால், அப்படியே அவளிடம் போனால், மதிப்பு ஏற்படாதென்றும், சென்னைக்குப்போய் பணம் கொண்டுவரவேண்டு மென்றும் முடிவுகட்டிக்கொண்டார். டிக்கெட்டை வாங்கிக்கொண்டு நாகைப்பட்டணம் போய் கப்பல் வியாபாரியிடத்தில், தமது பணம் களவாடப்பட்டதைக் கூறி, சென்னைக்குப் போகச் செலவாகும் பணத்தை அவரிடம் கடனாக வாங்கிக்கொண்டு ஊருக்குப் போக வேண்டுமென்று

தீர்மானித்துக் கொண்டார். அதன் பிறகு கால் நாழிகையில் கண்ணுச்சாமியும் கந்தனும் திரும்பி ஓடிவந்து, இரண்டு துணிகளையும் டிக்கட்டையும் அவரிடம் கொடுத்தனர். பரோபகார குணத்தையும் அன்பையுங் கண்ட சாமாவையர், "ஆகா! ஏழைகளே ஆபத்துக் காலத்தில் உதவி செய்பவர்கள். பணக்காரர்கள் கல் நெஞ்சர்கள்; அப்பா! உங்களுடைய நல்ல குணத்துக்கு, ஈசுவரன் ஒரு குறைவையும் வைக்கமாட்டான். நான் போய் உடனே பணத்தை அனுப்புகிறேன். எவ்வளவு பணம் அனுப்பவேண்டும்?" என்றார்.

கண்ணுச்சாமி, "எல்லாம் நாலேகால் ரூபா ஆச்சு சாமி!" என்றான்.

சாமாவையர், "சரி; நான் நாகைப்பட்டணம்போனவுடன் தபாலில் ரூ.10 அனுப்புகிறேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியவண்ணம் எழுந்து நின்று துணிகளை வாங்கியணிந்தார். டிக்கட்டை வாங்கிக்கொண்டு ஸ்டேஷனை நோக்கி நடந்தார். அந்த இரண்டு மனிதரும் அவர்மீது இரக்கங்கொண்டு அவரோடு வடவே சென்று அடுத்த இரயில் வருகிற வரையில் அவரோடு காத்திருந்து கும்பிடு போட்டு வழியனுப்பிவிட்டுத் திரும்பினர். சாமாவையர் மறைந்து போனபின், கந்தன், "ஏண்டா கண்ணுச்சாமி! ஐயரு பணம் அனுப்புகிறேன்னு சொன்னாரே, அவருக்கு நம்ப மேல் விலாசம் தெரியாதே, எப்பிடி அனுப்பப்போறாரு?" என்றான். அதைக் கேட்ட கண்ணுச்சாமிக்கும் அந்த விஷயத்தில் அப்போதுதான் பெருத்த சந்தேகம் உதித்தது; என்றாலும் அவன் தனது தைரியத்தை இழக்கவில்லை. "அடே! ஐயரு நல்லவருடா! பணத்தை எப்படியாவது கட்டாயம் அனுப்பு வாருடா! இல்லாமப் போனா நேருலேயாச்சும் வருவாருடா!" என்றான். கந்தசாமியும் அதை நம்பினான். அப்புறம் இருவரும் அதை மறந்து தமது வேலையைக் கவனித்தனர்.

இரயிலில் சென்ற சாமாவையர் நாகைப்பட்டணம் போய், கப்பல் வியாபாரியிடத்தில், தமது பணம் களவாடப்பட்டுப் போனதாகக் கூறி, சென்னைக்குப் போகத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொண்டு, இரயிலேறி னார்கள்; திருவாரூரிலிருந்து நாகைக்குப்போன போது அந்த இரண்டு மனிதரும் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்னும் நினைவோடுதான் அவர் சொன்னார். ஆனால், நாகைப்பட்டணம் போய் கப்பல் வியாபாரியிடத்தில் தமது சொந்த செலவுக்குப்பணம் கடனாக வாங்கிய போது, அந்த இரண்டு உபகாரிகளுக்குப் பணம் அனுப்ப வேண்டும் என்பதை அவர் மறந்து விட்டார் ஆகையால், அவர்களது மேல்விலாசத்தை அறிந்துகொள்ளாமல் வந்து விட்டோமே என்னும் விசனமும் அவருக்கு உண்டாக சந்தர்ப்பம் ஏற்படாமல் போய்விட்டது. அவர் அடுத்த வண்டியில் ஏறி மறுநாள் சென்னைக்கு வந்து ஏழையிலும் பரம ஏழையாகத் தமது வீட்டை யடைந்தார். கடற்கரை பங்களாவில் கமலத்துட னிருந்து சுவர்க்கபோக மநுபவிக்காவிடினும், தமது சொந்த வீட்டையடைந்து மீனாக்ஷி யம்மாளையாகிலும் கண்டு தமது பழைய சுகமான அற்ப சுகத்தையேனும் அடையமாட்டோமா வென்று அவர் ஏங்கி வந்தவராதலின், அவரது பழைய நிலைமையே அவருக்கு அப்போது பரமபதமாகத் தோன்றியது. என்றாலும், வெட்கம் ஒரு புறம் வதைத்தது; துக்கம் இன்னொரு புறம் வருத்தியது. அழுகை நெஞ்சை அடைத்தது. நெடுநாட் களாக எவ்வளவோ பாடுபட்டு, மூடர்களான பெருந்தேவி யம்மாள் முதலியோரை வஞ்சித்து அபகரித்த பெருத்த பொருள் ஒரு நிமிஷத்தில் கனவைப்போல மறைந்து போனதைப்பற்றி நினைத்து நினைத்து ஐயர் ஓலமிட்டு அழுதவராய், மூடி முக்காடிட்டு ஒரு மூலையில் படுத்தவர் மறுபடி எழுந்திருக்க இரண்டு நாளாயின. அந்த இரண்டு நாட்களுக்கு அவர் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினார்; புரண்டார்;

அழுதார்; கதறினார்; பதறினார்; அவர் பட்ட பாடுகள் அத்தனையும், களவாடப்பட்ட பொருளைத் திருப்ப வல்லமையற்றிருந்தன. அடிக்கடி பெருந்தேவியின் நினைவு அவரது மனதில் தோன்றியது. "நானோ பணத்தை எளிதில் அபகரித்து திருடனிடம் கொடுத்தேன். பெருந்தேவி, எத்தனையோ வருஷங்களாகச் சேர்த்துச் சேர்த்து முன்னூறு பவுன்களை இரவு பகலாய் இடுப்பில் கட்டிச் சுமந்தவள்; தவிர பணத்தின்மேல் கொண்ட பேராசையால் தன்னுடைய சொந்த தம்பியின் பெண்டாட்டியை துலுக்கனிடம் விற்றதான கேவலமான காரியம் செய்து பணம் சம்பாதித்தவள்; பணம் போய்விட்ட தென்பதை அவள் கேட்பாளானால், அவள் அதை நம்பவும் மாட்டாள்; உடனே தாடகை, சூர்ப்பனகை வேஷமெடுத்து என்னோடு மடிபிடித்து மல்ல யுத்தத்துக்கு வந்து விடுவாள், தெருவெல்லாம் சிரிக்கும். அதனால் ரகசியமெல்லாம் வெளியாய்விடும். கடைசியில் பெருத்த துன்பமும் ஜெயில் வாசமும் கிடைக்கும்" என்று அவர் நினைத்தார். ஆகையால், அவளை எப்படியாகிலும் வஞ்சித்து விட்டு, அவள் தம்மைக் கண்டுபிடிக்கமுடியாத வேறிடத்திற்குத் தாம் போய்விட வேண்டுமென்று தீர்மானித்தார். "பெருந்தேவியோ பங்களா பங்களா வென்று ஜெபம் செய்து, எப்போது அதற்குப் போவோம் என்று ஆவல் கொண்டிருக்கிறாள். ஆகையால் எப்படியாவது தந்திரம் செய்து அவளை பங்களாவில் குடிவைத்துவிட்டு, வரதாச்சாரியின் பெண்ணையும் வராகசாமிக்கு உடனே கலியாணம் செய்து வைத்து விட்டு சொல்லாமல் இராத்திரியே ஓடிப்போக வேண்டு" மென்று முடிவு செய்து கொண்டார். பங்களாவின் திறவு கோல் அதன் தோட்டக் காரனிடத்திலிருந்தது. சாமாவையர் சாயுபுவின் குமாஸ்தா வென்பதையும், கப்பல்காரருக்கு நட்பானவரென் பதையும், தோட்டக்காரன் அறிந்தவன். ஆகையால், அவர் உடனே அவனிடம் போய், கப்பல்காரரது அநுமதியின்மேல்

பங்களாவை ஒருவருக்கு வாடைகைக்கு விட்டிருப்பதாகக் கூறி; திறவுகோலை வாங்கிவந்து பெருந்தேவியிடம் கொடுத்து, அவளை அதில் உடனே குடிவைத்துவிடத் தீர்மானித்தார். தவிர, அவள் பங்களாவின் விக்கிரயப்பத்திரமெங்கே என்று கேட்பவ ளாதலால் அதற்கும் ஏதேனும் தந்திரம் செய்ய வேண்டும் என்று, அதைப்பற்றியும் அவர் இரவு முழுதும் சிந்தனை செய்து ஒருவகையான முடிவிற்கு வந்தார்; அவருக்கு மிகவும் நண்பனான ஓர் ஏழை முகம்மதியன் இருந்தான். அவனிடம் சென்று ரூபாய் நூறு கொடுத்து, ஒரு நாளைக்குக் கப்பல்கார சாயபுவாக நடிக்கும்படி அவர் தூண்டினார். அவன் தனது தரித்திரக் கொடுமையால் அதற்கிணங்கினான். ஓர் எழுத்துக் கூலிக்காரனால் விக்கிரயப்பத்திரமும் எழுதி முடிக்கப்பட்டது. மறுநாள் பத்துமணிக்கு ஐயர் நன்றாக உண்டு உடுத்திக் கொண்டு, விஷயங்களை ஒருவாறாக தமது மனைவியிடத்தில் சொல்லிவிட்டு, தாம் சப் ரிஜிஸ்டிரார் கச்சேரிக்குப் போய்விட்டு வருவதாக அவளிடம் சொல்லி விட்டுப் போய்விட்டார். அவ்வாறு அவர் போனபிறகு இரண்டொரு நாழிகை கழிய, நமது மலையாளத்து மந்திரவாதி, சாமாவையரது வீட்டிற்கு வந்து, முற்கூறப் பட்டவாறு அவரை அழைத்தார்; அதைக்கேட்டு, "யார் அங்கே?" என்று கேட்டுக் கொண்டு நடைக் கதவண்டை வந்து பார்த்த மீனாக்ஷியம்மாள், ஒரு முகம்மதியர் நின்றதைக் கண்டாள். ஆஜாநுபாகுவாக உயர்ந்து பெருத்திருந்த அவரது சாரீரம், பெருத்த தலைப்பாகை, அடர்ந்து நீண்ட தாடி, மை தீட்டப்பட்ட கண்கள் முதலியவற்றைக் கண்டு அம்மாள் ஒருவாறு அச்சங் கொண்டவளாய், "என்ன சங்கதி? நீர் யார்?" என்று மெல்லக் கேட்டாள்.

மந்திரவாதி, "ஐயர் இக்கிறாரா?" என்றார்.

அம்மாள், "இல்லை; நீர் யார்?" என்றாள்.

**மந்திர:-** நான் நைனாமுகம்மது எஜமானிடமிருந்து வந்திருக்கிறேன். அவர் நாலு நாளைக்கு முன் ஐயரை அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பினாராம்; ஐயர் மைலாப்பூர் பங்களாவை வாங்குவதற்கு நாகைப்பட்டணம் போயிருப்பதாகச் சொன்னீர்களாம். இப்போது ஐயர் வந்து விட்டாரா? பங்களாவை வாங்கிவிட்டாரா? என்பதை அறிந்து வரச்சொல்லி என்னை எஜமான் அனுப்பினார் - என்றார்.

அதைக் கேட்ட அம்மாள் யோசனை செய்யாமல் அவசரப்பட்டு, "பணமெல்லாம் ரயிலில் திருட்டுப்போய் விட்டதாம்; பங்களாவை வாங்கவில்லை; வந்து விட்டார்" என்று விசனத்தோடு கூறினாள்.

மந்திரவாதி மிகுந்த வியப்பைக் காட்டி, "என்ன ஆச்சரியம்! திருட்டுப் போய் விட்டதா! எத்தனை ரூபாய் போய் விட்டது?" என்றார்.

**மீனாக்ஷி:-** பதினாயிரம் ரூபாய் போய் விட்டது. ஐயர் இரயிலில் ஏறி மாயவரத்திலிருந்து திருவாரூருக்குப் போனாராம்; வழியில் கொஞ்சம் தூங்கிவிட்டாராம். யாரோ மூட்டையை எடுத்துக் கொண்டு போய்விட்டார்களாம்.

**மந்திர:-** அடாடா! அவ்வளவு பணம் போய்விட்டதாக எஜமான் கேட்டால், நிரம்பவும் விசனப்படுவார். இப்போது ஐயர் உள்ளே இருக்கிறாரா?

**மீனாக்ஷி:-** இல்லை; சப்ரிஜிஸ்டிரார் கச்சேரிக்குப் போயிருக்கிறார்; இன்னம் ஒரு நாழிகையில் வந்துவிடுவார். அப்படித் திண்ணையில் உட்கார்ந்து கொள்ளும்.

**மந்திர :-** உட்கார எனக்கு நேரமில்லை. சீக்கிரம் வருவாரோ? அதிக நேரம் பிடிக்குமோ? யாருக்காவது சாட்சி சொல்லப் போனாரா? அல்லது வேறு என்ன அலுவலாகப்

போனார்?

**மீனாக்ஷி:-** பங்களாவை வாங்கும் விஷயமாகத்தான் போயிருக்கிறார்; எனக்கு விவரம் தெரியாது. அவருடைய விசனத்தில் அதிகமாக ஒன்றையும் சொல்லவில்லை.

**மந்திர:-** நாகைப்பட்டணத்திலிருந்து கப்பல்கார மரைக்காயரும் வந்திருக்கிறாரா? அல்லது ஐயர் மாத்திரம் திரும்பி வந்தாரா?

**மீனாக்ஷி:-** வேறு யாரும் வரவில்லை. எல்லாவற்றிற்கும் நீர் திண்ணையில் இருந்தாலுஞ் சரி; வேறு எங்கேயாவது வேலையிலிருந்து போய்விட்டு வந்தாலுஞ் சரி; இன்னம் ஒரு நாழிகைக்குள் ஐயரைக் காணலாம்.

**மந்திர:-** சரி; நான் போய்விட்டு மறுபடியும் வருகிறேன்; ஐயர் வந்தால் இருக்கச் சொல்லுங்கள் என்று சொல்லி விட்டு வெளியில் நடந்தார். நடந்து நாலைந்து வீடுகளுக்கப்பால் சென்ற மந்திரவாதி சாமாவையருக்கு சப்ரிஜிஸ்டிரார் கச்சேரியில் என்ன வேலை யிருக்கலாமென்று சந்தேகித்தார். பங்களா விஷயமாகப் போயிருக்கிறாரென்றும், ஆனால், கப்பல் வியாபாரி வரவில்லை யென்றும் அம்மாள் சொல்லு கிறாள். கப்பல் வியாபாரி இல்லாமல் பங்களாவை அவர் எப்படி வாங்கக்கூடும் என்று நினைக்க நினைக்க, மந்திர வாதியின் சந்தேகம் வலுத்தது; சாமாவையரது வருகையை எதிர்பார்த்து ஓரிடத்தில் நின்று கொண்டிருப்பதைக்காட்டிலும், அருகிலிருந்த சப்ரிஜிஸ்டிராரின் கச்சேரிக்குப் போய்விட்டு வரலாமென்று தீர்மானித்துக் கொண்டவராய் மந்திரவாதி மேலே நடந்து சென்று ஐந்து நிமிஷத்தில் அந்தக் கச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் நூற்றுக்கணக்கில் மனிதர் கூடியிருந்தனர். தம்மைக் கண்டு எவரும் சந்தேகியாதபடி, மந்திரவாதி ஜனத்திரளில் கலந்து மறைந்து கொண்டார். ஒரு

மூலையில் சாமாவையரும் பெருந்தேவியம்மாளும் உட்கார்ந்திருந்ததை மந்திரவாதி கண்டு, தம்மை ஐயர் பார்க்காமலிருக்கும்படி வேறு திக்கில் தமது முகத்தைத் திருப்பிய வண்ணம், அவர்களது சம்பாஷணையைக் கவனித்தார். அரை நாழிகை சென்றது. அதுவரையில் வேறு பல பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. அதன் பிறகு சேவகன் வாசற்படியில் நின்று கொண்டு, "கப்பல்கார நூர்முகம்மது மரைக்காயர்" என்று கூவினான்; உடனே சாமாவையர் பெருந்தேவியம்மாள் ஆகிய இருவரும் தடபுடலாக எழுந்தனர். அப்போது கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு முகம்மதியர் உள்ளே நுழைந்தார்; அவருக்குப் பின்னால் சாமாவையரும், இன்னொரு மனிதரும் தொடர்ந்து உட்புறம் சென்றனர். அந்த முகம்மதியர் மிகவும் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். ஆனால், அவரது உடம்பு மிகவும் இளைத்து சுகவீனத்தைக் காண்பித்தது. தேகம் கருப்பாயும், தசைப் பிடிப்பற்றதாயும், முரடாயும், அநாகரீகமாயும் காணப்பட்டது: அவரது உடைகள் மாத்திரம், அவர் பெரிய மனிதரென்பதைக் காட்டியதன்றி அவரது தோற்றமோ பக்கிரித் தோற்றமாக இருந்தது. அவர் உள்ளே சென்று சப் ரிஜிஸ்டிராருக்கு எதிரில் நின்றவுடன், விசாரணை ஆரம்பமாயிற்று.

**சப்.ரி:-** நீர்தான் நூர் முகம்மது மரைக்காயரா?

**முகம்மதிய:-** ஆம் நான்தான்.

**சப்.ரி:-** உம்முடைய ஊர் எது?

**முக:-** நாகைப்பட்டணம்.

**சப்.ரி:-** தகப்பனார் பெயரென்ன?

**முக:-** கச்சி மொகிதீன் மரைக்காயர்.

**சப்.ரி:-** உம்முடைய தொழில் என்ன?

**மூக:-** கப்பல் வியாபாரம்.

**சப்.ரி:-** மைலாப்பூரிலுள்ள உம்முடைய புராதன பங்களாவை பெருந்தேவியம்மாளுக்கு விற்கிறீரா?

**மூக:-** ஆம்.

**சப்.ரி:-** எத்தனை ரூபாய்க்கு?

**மூக:-** 10,500 ரூபாய்க்கு.

**சப்.ரி:-** முழுத்தொகையும் பெற்றுக்கொண்டீரா?

**மூக:-** ஆம்; வாங்கிக்கொண்டேன்.

**சப்.ரி:-** பத்திரத்தைப் பதிவு செய்துவிடலாமா?

**மூக:-** ஓ! செய்யலாம்.

**சப்.ரி:-** சரி; இரண்டு சாட்சிகள் யார் யார்?

**மூக:-** இதோ ஐயர் ஒருவர்; அதோ செட்டியார் இன்னொருவர்.

என்று பக்கத்தில் நின்ற இருவரையும் சுட்டிக் காட்டினார். செட்டியாருக்கு அந்தக் கச்சேரியில் சாட்சி சொல்வதனாலேயே ஜீவனம் நடந்தது. ஒரு நாளைக்குப் பத்து பத்திரங்களுக்கு சாட்சி சொல்லுவார்; ஒவ்வொரு பத்திரத்திற்கும் நான்கணா எட்டணா வீதம் ஒவ்வொரு நாளைக்கு இரண்டு மூன்று ரூபாய் வரையில் சம்பாதிப்பார். ஆனால், ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய்க்கு நல்ல முதல்தரமான கள்ளாகப்பார்த்துக் குடிப்பார். மாலையில் அவர் வீட்டுக்கு வரும்போது, அவரோடு குடிக்கும் நண்பர்கள் அவரைத் தூக்கிக் கொணர்ந்து வீட்டில் விட்டுப் போவார்கள். அவரை சப் ரிஜிஸ்டிரார் நன்றாக அறிவாராயினும் அவர் அவ்வாறு குடிப்பதை அறியமாட்டார்; ஆனால், அவரைக்

காணும்போதெல்லாம், அவரிடம் புரளியாகப் பேசுவார்; என்னவோ ஏழை பிழைத்துப்போகட்டுமென்று, அவருடைய சாட்சியத்தை ஏற்றுவந்தார்; வழக்கப்படி அவரைக்கண்ட சப் ரிஜிஸ்டிரார் நகைத்து, "ஓகோ! செட்டியாரே! வாரும்; செட்டியார் இல்லாத பத்திரமுமில்லை; உலகத்தில் அவருக்குத் தெரியாத மனிதருமில்லை; கப்பல்காரர் முதல் பிச்சைக்காரர் வரையில் செட்டியாருக்குத் தெரியும். செட்டியாரே! வாரும் இப்படி; (சிரித்துக்கொண்டு) உமக்கு மரக்காயரைத் தெரியுமா? உம்மைக் கேட்கவே வேண்டியதில்லை; நீர் யாரைத் தான் தெரியாதென்று சொன்னீர்கள்? இந்த மரைக்காயரை உமக்கு எப்படி ஐயா! தெரியும்?" என்றார். செட்டியார் பல்லைப் பல்லைக்காட்டிக் கெஞ்சி நயந்து நிர்த்தனம் செய்தவராய், "தெரியும்; அடிக்கடி ஐயர் வீட்டுக்கு வருவார், பார்த்திருக்கிறேன்" என்றார்.

**சப் ரிஜிஸ்டிரார்:-** சரி; ஒழிந்து போகட்டும். இப்படி வாருங்கள், உங்கள் இரண்டுபேருக்கும் இந்த சாயுபுவைத் தெரியுமா!

செட்டியார், ஐயர் :- தெரியும்

சப்ரி:- இவர் கப்பல்கார நூர் முகம்மது மரைக்காயர்தானா?

செட்டியார், ஐயர் :- தெரியும்

**சப்ரி:-** இவர் பங்களாவுக்காக ரூ. 10,500 வாங்கிக் கொண்டது தெரியுமா?

செட்டியார், ஐயர் :- தெரியும்

**சப் ரிஜிஸ்டிரார்:-** சரி; அங்கே சேவகரிடம்போய் கையெழுத்துப் போடுங்கள்; போங்கள் - என்று அனுப்பி விட்டுப் பத்திரத்தில் தமது கையெழுத்தைச் செய்து சேவகனிடம் விசிறிப்போட்டார். பதிவுக்கட்டணம் உடனே வசூலிக்கப்பட்டது. மரைக்காயர், செட்டியார், ஐயர் மூவரும், ஒரு மூலையில் போடப்பட்டிருந்த மேஜைக்கருகில் நின்ற சேவகனிடம் சென்றனர். அவன் பத்திரத்தின் பின்புறத்தில் அவர்களது கையெழுத்து முதலிய விவரங்களை எழுதச் செய்ததன்றி, அவர்களது பெருவிரல் ரேகை அடையாளத் தையும் அழுத்தச் செய்தான். அப்போது சாமாவையர் ஒரு தந்திரம் செய்தார்; தகப்பனார் பெயரையும் போட்டுவிட்டார். அதாவது, மகாலிங்கையர் பிள்ளை சாமாவையர் என்பதற்குப் பதிலாக, சாமாவையர் பிள்ளை மகாலிங்கையர் என்று போட்டு விட்டார். ஏனெனில், பிறகு அந்தப் பொய்ப்பத்திரம் தயாரித்த விஷயமாக ஏதேனும் நேர்ந்தால், சாட்சியாக வந்தவர் தாம் அல்ல வென்று சொல்லிவிட, அந்தத் தந்திரம் செய்தார். அதை எவரும் கவனிக்கவில்லை. கால் நாழிகையில் பத்திரப் பதிவின் சடங்குகள் நிறைவேறின. பத்திரம் பெருந்தேவி யம்மாளிடம் கொடுக்கப்படவேண்டு மென்று மரைக்காயர் எழுதி வைத்தார். அது மறுநாள் காலையில் கொடுக்கப் படுமென்று சப் ரிஜிஸ்டிரார் சொல்ல, அதைக்கேட்டுக் கொண்ட அம்மூவரும் உடனே வெளிப்பட்டனர். அதுகாறும், வெளியில் நின்று, நிகழ்ந்தனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த பெருந்தேவியம்மாள், தான் பெருத்த பங்களாவிற்கு எஜமானியானதைப்பற்றி நினைத்துப் பெருமகிழ்வும் பெருமையும் பூரிப்பும் அடைந்தாள்; நால்வரும் கச்சேரியின் கட்டிடத்தை விட்டு வெளியிலிருந்த பாட்டைக்கு வந்தனர். அடுத்த பத்திரத்திற்கு சாட்சி சொல்ல, செட்டியார் போகவேண்டி யிருந்ததால், சாமாவையரால் கொடுக்கப்பட்ட எட்டணாவை வாங்கிக்கொண்டு செட்டியார் கச்சேரிக்குள்

ஓடினார். மற்ற மூவரும் கால் நடையாக தங்களுடைய ஜாகைகளை நோக்கிச் சென்றனர்.

அதுவரையில் நடந்தவற்றை யெல்லாம் நன்றாகக் கவனித்திருந்த மந்திரவாதியும் அவர்களுக்குப் பின்னால் நடந்தார். வெயிலுக்காக முகத்தை மறைத்துக் கொள்பவரைப் போல, அவர் தமது உருமாலையால் முகத்தை ஒருவாறு மறைத்துக் கொண்டு பின்தொடர்ந்தார். தீர்த்தாரப்ப முதலி தெருவிற்கருகில் அவர்கள் வந்தவுடன், மரைக்காயர், மற்ற இருவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு அந்தத் தெருவிற்குள் நுழைந்தார். சாமாவையரும் பெருந்தேவி யம்மாளும் தமது வீட்டை நோக்கி மேலும் நடந்து சென்றனர். மந்திரவாதியும் தீத்தாரப்பமுதலி தெருவிற்குள் நுழைந்த கப்பல்கார மரைக்காயரைத் தொடர்ந்து சென்றார். அது மிகவும் ஏழைகளான முகம்மதிய ஜனங்கள் வசிக்கும் சிறிய வீடுகளைக் கொண்ட தெரு. அதில் நாலைந்து வீடுகளுக்கப்பாலிருந்த ஒரு சிறிய வீட்டிற்குள் நமது கப்பல் காரர் புகுந்து மறைந்து போனார். மந்திரவாதி தெருவிலேயே கால்நாழிகை நேரம் நின்றபின்னர் அந்த வீட்டின் வாசலில் வந்து நின்று, "பாயி! பாயி!" என்று கூப்பிட்டார். உள்ளே இருந்த மரக்காயர், "யார் அது?" என்று கேட்டுக்கொண்டு வெளியில் வந்து வாசற்படியில் கதவிற்குப் பதிலாக விடப்பட்டிருந்த கோணித் திரைக்கு அப்பாலிருந்து தமது தலையை மாத்திரம் நீட்டினார். அப்போது வெளியில் நின்றவர் ஒரு முகம்மதியர் என்பதை அறிந்தவுடன் அவர் திரைக்கு வெளியில் வந்து, " என்ன சங்கதி? நீர் யார்?" என்று கேட்டார். அவர் அப்போது கப்பல் வியாபாரியின் உடைகளைக் கழற்றிவிட்டு கறுவாட்டு வியாபாரியின் உடைகளை அணிந்திருந்தமையால், துணியின் நாற்றம் குபீரென்று வீசியது; ஈலைப்பேன்கள் துணியின்மேல் உல்லாசமாகத் துள்ளி விளையாடின. அந்தத் துணியில் காற்று நுழையும் பொருட்டு, பலவிடங்களில் வாசற்படிகள்,

ஜன்னல்கள் முதலியவை நின்றிருந்தன. அரைப்பாகம் கடிபட்ட பன்ரொட்டித் துண்டொன்று அவரது கையிலிருந்தது. சப் ரிஜிஸ்டிரார் கச்சேரிக்கு வந்திருந்த கப்பல்காரர் அவர்தானோ வென்று மந்திரவாதி ஐயமுற்றார். ஆனால், அவர் தமது முகத்தில் எவ்விதமான சலனத்தையும் காட்டாமல், “பாயி! சலாம்! இதுதானே பதினேழாம் நம்பர் வீடு? இதில் ஆதம்சா ராவுத்தர் இருந்தாரே; அவர் உள்ளே இருக்கிறாரா?” என்றார்.

**மரைக்காயர்:-** (திகைப்பும் கோபமுமடைந்து) இதுதான் பதினேழாம் நம்பர் வீடு? இதில் பத்து வருஷமாக இருக்கிறேன். இங்கே ஆதம்சா என்று எவரும் இல்லையே!

**மந்திர:-** அப்படியா! பதினேழாம் நம்பர் வீட்டில் இருப்பதாகச் சொன்னாரே? தங்களுடைய பெயரென்ன பாயி?

**மரைக்காயர்:-** இது என்னுடைய வீடு; என் பாட்டனார் காலத்திலிருந்து எங்களுக்குச் சொந்தமானது. கலெக்டர் கச்சேரியில், பச்சா மொகிதீன் என்று என்பேரில் தாக்கலா யிருக்கிறது; சர்ட்டிபிகேட்டு காட்டட்டுமா? - என்று குறும்பாக மொழிந்தார்.

அதைக் கேட்ட மந்திரவாதி மிகவும் நயந்து, “பாயி! கோபித்துக்கொள்ள வேண்டாம்; என்னுடைய சிநேகிதர் நம்பரை தப்பாகச் சொல்லி விட்டார் போலிருக்கிறது. நீங்கள் போய் நாஷ்டா பண்ணுங்கள்; நானும் போகிறேன்; சலாம்” என்று சொல்லிவிட்டு அப்பால் நடந்தார். மரைக்காயரும் உட்புறம் போய்விட்டார்.

மந்திரவாதி நேராகச் சென்று தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவை அடைந்து சாமாவையரது வீட்டிற்கு வந்து முன் போலவே, “அம்மா! அம்மா! ஐயர் வந்துவிட்டாரா?” என்றார்.

சற்று முன் மந்திரவாதி வந்ததை மீனாக்ஷியம்மாள்

சொல்ல, முன்னரே அறிந்திருந்த சாமாவையர் உடனே நடைக்கு வந்து மந்திரவாதியைக் கண்டு நடைத்திண்ணையில் உட்காரும்படி அன்போடு அவரை உபசரிக்க, அவர் உடனே உட்கார்ந்துகொண்டார். ஐயரும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து அதிலிருந்த மண்திண்டில் சாய்ந்து கொண்டு "நீர் எஜமானிடத்தி லிருந்தா வருகிறீர்?" என்றார்.

**மந்திர:-** ஆம்.

**சாமா:-** அவர் நாகைப்பட்டணத்துக்குப் போனதாக சொன்னார். நானே சமீப காலத்தில் அங்கே போயிருந்தேன். அவர் வரவே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்போது எஜமான் எங்கே இருக்கிறார்? இங்கே வந்துவிட்டாரா அல்லது வெளியூரில் இருக்கிறாரா?

**மந்திர:-** அவர் நாகப்பட்டணத்துக்கே போகவில்லை. அங்கே போவதாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டார். நான் மலையாளத்தில் இருஞாலக்குடா என்னும் ஊரில் இருப்பவன். நெடு நாளாய் அவருக்கும் என்க்கும் பழக்கமுண்டு.

**சாமா:-** அப்படியா! மலையாளத்தில் நீர் வர்த்தகம் செய்பவரா?

**மந்திர:-** எனக்கு வர்த்தகம் ஒன்றுமில்லை. நான் மந்திரவாதி.

**சாமா:-** ஓகோ! அப்படியா! ஆனால், அவர் இன்னமும் உம்முடைய ஊரில்தான் இருக்கிறாரோ?

**மந்திர:-** இல்லை இல்லை; இங்கே வந்து விட்டார்; ஒரு ரகசியமான இடத்தில் இருக்கிறார்.

**சாமா:-** அவரோடு இன்னம் யார் இருக்கிறார்கள்?

**மந்திர:-** ஒருவருமில்லையே!

**சாமா:-** ஒரு பெண் இருக்க வேண்டுமே?

**மந்திர:-** பெண் ஏன் வருவாள்? நீர்தான் ஐயாயிரம் ரூபாயை வாங்கி கொண்டு, உனக்குச் சோறுபோடும் எஜமானையே ஏமாற்றி விட்டீரே! அவரோடு வரக்கூடிய பெண்ணையா நீர் அனுப்பினீர்? - என்றார்.

அதைக் கேட்ட ஐயர் அச்சமும் திகைப்பும் அடைந்து, "என்ன நடந்தது? பெண் எங்கே போனாள்? அவர் வீட்டில் தானே இருக்கிறாள்?" என்றார்.

மந்திரவாதி, "சங்கதி ஒன்றும் உமக்குத் தெரியாதோ? இதோ இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும். நீர் அனுப்பிய பெண்ணின் யோக்கியதையும், நீர் செய்த காரியம் எப்படி முடிந்த தென்பதும் தெரியும்" என்று கூறியவண்ணம் ஒரு கடிதத்தைக் கொடுக்க, சாமாவையர் மிகுந்த ஆவலோடு அதை வாங்கினார்; கடிதத்தைப் பிடித்த அவரது கை நடுங்கியது. மனம் கலங்கியது. அந்த ஒரு நொடியும் யுகமாய்த் தோன்றியது. அவர் அதைப் பிரித்துப் படித்தார். உடனே அவரது முகம் மாறுதலடைந்தது; அவர் ஏதோ சொல்ல நினைத்தார்; வாய் குழறியது. "ஆனால், பெண் தப்பித்துக்கொண்டு போய் விட்டாளா? எஜமானருடைய மாமனார் வீட்டிலா இருக்கிறாள்?" என்றார்.

**மந்திர:-** ஆம்.

**சாமா:-**அப்படியானால் விஷயம் வெளியாயிருக்குமே?

**மந்திர:-** இதுவரையில் வெளியாகவில்லை; இன்னம் இரண்டொரு நாளில் வெளியாய்விடும்.

**சாமா:-** வெளியானால்?

**மந்திர:-** நீங்கள் மூவரும் காராக்கிரகத்துக்குள் போக வேண்டியதுதான். அடுத்த சங்கதி நீர் சாதாரண காரியமா

செய்தீர்? பணத்தை வாங்கிக்கொண்டு முதலாளியைச் சந்தியில் யிழுத்துவிட்டீரே!

**சாமா:-** (நடுநடுங்கி) இப்படி நடக்குமென்று நான் நினைக்கவே இல்லை. இப்போது இதற்கு என்ன யோசனை செய்திருக்கிறீர்கள்? எஜமானருக்கு ஆபத்து வராமலிருக்க, என்ன செய்ய வேண்டு மென்றாலும் அதை நான் செய்யத் தடையில்லை. என்னுடைய உயிரைக் கேட்டாலும் கொடுக்கத் தயார் - என்றார்.

உடனே மந்திரவாதி, "இதோ பாரும்; இந்தக் கடிதத்தை நான் எட்சினி தேவதையின் மூலமாக போலீஸ் கச்சேரியிலிருந்து வரவழைத்தேன்" என்று இன்னொரு கடிதத்தை நீட்ட, சாமாவையர் மிகுந்த ஆவலோடு அதை வாங்கிப் படித்து, முன்னிலும் அதிகரித்த பயத்தையும், திகைப்பையும் அடைந்தார். "என்ன இது! எஜமானருடைய மாமனாரே பிராது எழுதி விட்டரே! இதற்கு நாம் என்ன செய்கிறது?" என்றார். அதற்குள் அவரது மனதில் கோடாநு கோடி எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அது பொய்யோ மெய்யோவென்று சந்தேகித்தார். அதில் போலீஸ் முத்திரை இருந்ததைக் கண்டார். அது உண்மையான பிராதென்றே நினைத்துக் கொண்டார். அது எட்சினி தேவதையினாலேதான் வந்திருக்க வேண்டுமென்று அவர் உறுதியாக நினைத்தார். மந்திரவாதியிடத்தில் அவருக்குப் பெருத்த மதிப்பும், பயமும், மரியாதையும் ஏற்பட்டன. அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை ஆவலோடு எதிர்பார்த்தார். மந்திரவாதி சிறிது நிதானித்தார்; "இதற்கு இன்று ராத்திரி முழுதும் சுடலையில் பிணத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு நான் மந்திரம் ஜெபித்து, காவுகொடுத்து எட்சினியை வரவழைத்து வசியம் செய்யப் போகிறேன். இதனால், அவருடைய மாமனாரும், சம்சாரமும் நாளைக்கு அவருடைய வசமாய் விடுவார்கள். மேனகா வென்னும் பிராமணப் பெண்ணும் அவர்மேல் மோகா

கொண்டு அவரிடம் வந்து சேருவாள். அவளை இனிமேல் இந்த ஊரில் வைத்துக்கொள்ளக் கூடாது; அடுத்த கப்பலில் எஜமானர் சிங்கப்பூருக்கு அவளை அழைத்துக் கொண்டுபோய் அங்கே வைத்துவிடுவார். அவர் இனிமேல் இந்த ஊரில் மூன்று மாசமும் சிங்கப்பூரில் மூன்று மாசமும் இருப்பார்; அவளை அவர் கோஷா ஸ்திரீயைப்போல மூடிக்கொண்டு போவாராதலால், அவளை எவரும் கவனிக்கவும் மாட்டார்கள்; ஆனால் தெய்வச் செயலாக, கப்பலிலோ சிங்கப்பூரிலோ அவளை யாராவது ஹிந்துப் பெண்ணென்று கண்டு கொண்டால், எஜமானுக்கு ஆபத்து நேரும்; அதற்காக நானும் அவரும் ஒரு யோசனை செய்து இதோ ஒரு நகல் தயாரித்திருக்கிறோம். அதைப்போல நீர் எழுதி அதில் நீரும், பெருந்தேவியம்மாளும், கையெழுத்திடச் செய்து வாங்கிவரச் சொன்னார். சாதாரணமாக இந்தக் கடிதம் உபயோகப்படப் போகிறதில்லை, இருந்தாலும், முன் னெச்சரிக்கையாக இது கையில் இருக்க வேண்டியது அவசிய மல்லவா?" என்றார்.

உடனே சாமாவையர் சிறிதும் யோசியாமல் மந்திரவாதி கொடுத்த நகலை வாங்கிப் படித்துவிட்டு, "சரி; இதுதானா பெரிய காரியம்; அப்படியே எழுதித் தருகிறோம். நீர் இங்கே இரும். நான் போய் இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து அடுத்த வீட்டிற்குச் சென்று நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் பெருந்தேவியம்மாள், கோமளம் ஆகிய இருவரிடத்திலும் வெளியிட்டு அவர்களை மிகவும் பயமுறுத்த, கடிதம் எழுதிக் கொடுப்பதற்கு அவர்களும் எளிதில் இசைந்தனர். மந்திரவாதி கொடுத்த நகலை சாமாவையர் படித்துக்கொண்டே வர கோமளம் வேறொரு காகிதத்தில் அப்படியே எழுதினாள்; அதில் பெருந்தேவியம்மாள் கையெழுத்துமிட்டாள். அடியில் சாமாவையரும் கையெழுத்திட்டு அதை எடுத்துக்கொண்டு தமது கிரகத்திற்கு வந்து அதை மந்திரவாதியிடம் கொடுத்தார்; மந்திரவாதி அதை வாங்கிப்

படித்துப்பார்த்து திருப்தி அடைந்தவராய், அதை மடித்துத் தமது சட்டைப்பையில் வைத்துக்கொண்டார்; சாமாவையருக்கு நைனாமுகம்மது எழுதியனுப்பிய கடிதத்தையும், பெரியதம்பி மரக்காயரின் பிரியாதையும் வாங்கி சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டு, "சரி; எஜமான் காத்திருப்பார்; நான் போகிறேன். நாளைக்கு எல்லாக் காரியமும் திருப்தியாய் முடிந்துபோகும். சலாம்" என்று சொல்லிவிட்டு எழுந்தார். சாமாவையரும் அவருக்கு சலாம் செய்தார். உடனே எழுந்து வெளியிற் சென்ற மந்திரவாதி திரும்பவும் நடைக்கு வந்து, "ஐயரே! இன்னொரு விஷயம் கேட்டுவரச் சொன்னார்; அதை மறந்துவிட்டேன்" என்றார்.

சாமாவையர் ஆவலோடு, "என்ன விஷயம்?" என்றார்.

மந்திரவாதி, "பெண்ணினுடைய பெட்டியில் நீங்கள் நாடகக் காரன் எழுதியதைப்போல இரண்டு கடிதங்களை எழுதி வைத்தீர்களே, அவைகளை எழுதிய மனிதரை நாம் கடைசி வரையில் நம்பலா மல்லவா? அவர் ஒருவேளை விஷயத்தை வெளியிட்டு விடப் போகிறாறென்று எஜமான் பயப்படுகிறார்; அவர் சொல்லிவிடக் கூடியவரானால் அவருடைய பெயரைச் சொல்லும். இன்று ராத்திரியே மரணமந்திரம் செய்து அவரைக் கொன்றுவிடுகிறேன்" என்றார். அதைக் கேட்ட சாமாவையர், "இல்லை இல்லை; அதைப் பற்றி பயமே வேண்டாம். அதை எழுதியது வேறுயாருமில்லை. என் தம்பிதான் எழுதினான். உயிர் போனாலும் அவன் நிஜத்தைச் சொல்லமாட்டான். எஜமானிடம் தைரியமாகச் சொல்லுங்கள். அவர் எங்கு மறைந்து கொண்டிருக்கிறார்? அவரிடம் நானும் வரலாமா?" என்றார்.

மந்திரவாதி, "அவர் நாளைக்குக் காலையில் தம்முடைய வீட்டுக்கே பகிரங்கமாக வந்துவிடுவார்; நீர் வீட்டுக்கே வந்து பார்க்கலாம்; இன்றைக்கு ஒரு நாள் பொருத்துக் கொள்ளும்"

என்று சொல்லிக்கொண்டே வெளியில் போய்விட்டார். விஷயங்கள் யாவும் திருப்திகரமாக நடந்து போனதைப் பற்றி சாமாவையர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, பகற் போஜனம் செய்யும் பொருட்டு வீட்டிற்குள் போய் விட்டார்.

அவரது வீட்டை விட்டு வெளிப்பட்ட மந்திரவாதி கெங்கைகொண்டான் மண்டபத்திற்கு எதிரில் திரும்பிச் சிறிது தூரம் சிங்கராசாரி தெருவில் போய் அங்கிருந்து வெங்கடாசலச் செட்டித் தெருவிற்குள் நுழைந்தார்; அதிலிருந்த பல மாடி வீடுகளைக் கடந்தார். அப்பாலிருந்த ஒரு வீட்டிலேதான் போலீஸ் இன்ஸ்பெக்டர் சமய சஞ்சீவி ஐயர் குடியிருந்தார் என்பதை மந்திரவாதி அறிவார். ஆதலின், அந்த வீட்டிற்குள் புகுந்து நடையைத் தாண்டி தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, "சாமி! சாமி!" என்று கூப்பிட்டார். "யார் அது?" என்று குயில் கூவுதலைப் போல ஒரு பெண்ணின் குரல் உட்புறத்தில் கேட்டது. அடுத்த நிமிஷம், தங்கப்பதுமைப்போன்ற வடிவழகினைக்கொண்ட ஒரு யௌவனப் பெண்மணி மந்திரவாதிக்கு எதிரில் பிரசன்னமானாள். அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கலாம்; தங்கமும், வைரக்கற்களும், பட்டுத்துயிலும், சிவப்பு மேனியும், முல்லையரும்பு போன்ற வெள்ளைப் பற்களும் ஜெகஜ்ஜோதியாய் ஒளிவீச, எதிரில் வந்து காட்சி கொடுத்த அந்த இன்பவடிவைக்கண்ட மந்திரவாதி புன்னகை செய்து, "இன்ஸ்பெக்டர் சாமி இருக்கிறாரா?" என்றார். அதைக் கேட்ட அந்த அம்மாளாகிய சமயசஞ்சீவி ஐயரது மனைவி, அவரை ஏற இறங்க உற்று நோக்கி, "இல்லை; போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறார். நீர் யார்?" என்று மிகவும் கம்பீரமாகக் கேட்டாள். மந்திரவாதி அவளிருந்த கூடத்தை நோக்கிப் புன்னகை செய்து நடந்தவண்ணம், "ஐயர் ஸ்டேஷனில் இல்லையே! இப்போது அவர் இங்கேதான் இருக்கிறாரென்று சொன்னார்களே!" என்றார். அவரது முகத்தில் போக்கிரிக்களையும் புன்னகையும்

பிரகாசித்தன. அவரது சொல்லைக் கேட்ட அம்மாள் சிறிது கோபங்கொண்டு அதட்டிய குரலில், "அவர் இங்கே இல்லை ஐயா என்கிறேன். மேலும் மேலும் கேட்கிறீரே; அவரை இங்கே அடுக்குப்பானையில் வைத்திருக்கிறோமோ; போமையா வெளியில்; திறந்த வீட்டில் என்னவோ நுழையும் என்பார்கள்; அதைப்போல கூடத்திற்கு வந்து விட்டீரே; சுத்தப் பட்டிக்காட்டு மனிதரா யிருக்கிறீரே!" என்றாள். அதைக்கேட்ட மந்திரவாதி, அதைக் காதில் வாங்காதவரைப் போல நடித்து மிரண்டு மிரண்டு பார்த்து. "இல்லை யம்மணி! கோபித்துக்கொள்ளவேண்டாம்; நான் ஐயரிடத்தில் வேலையாக வரவில்லை. அம்மாளிடத்திலேதான் வேலையாக வந்தேன்; நான் மலையாளத்து மந்திரவாதி" என்றார்.

அதைக்கேட்ட அம்மாள் முன்னிலும் அதிகரித்த ஆத்திர மடைந்து, "இப்போது நீ வீட்டை விட்டு வெளியில் போகிறாயா? அல்லது ஆர்டர்லியைக் கூப்பிட்டு மரியாதை செய்தனுப்பட்டுமா?" என்றாள்.

உடனே மந்திரவாதி நயமாகவும் பணிவாகவும் பேசத் தொடங்கி, "அம்மணியிடம் நல்ல சன்மானம் வாங்கிக் கொண்டு போக வந்திருக்கிறேன். என்னை எந்தச் சேவகன் தள்ளுவான்? அம்மணிக்கு நல்ல தங்கமான குணம்; முன்கோபம் மாத்திரம் கொஞ்சம் அதிகம். ஆனால், வெளுத்த தெல்லாம் பால்; கருத்ததெல்லாம் தண்ணீர்; என்ற எண்ணம். அதை அறிந்து தான் ஐயர் ஸ்டேஷனுக்குப் போவதாகச் சொல்லி ஏமாற்றி விட்டு பட்டப்பகலிலேயே தாசி ஞானாம்பாள் வீட்டுக்குப் போயிருக்கிறார். உங்களுக்கும் ஐயருக்கும் இந்த விஷயத்தில் வருத்தமென்பது எனக்குத் தெரியும்; நான் வசிய மருந்து செய்வதில் மிகவும் கை தேர்ந்தவன். இதோ ஒரு மை தருகிறேன்; அதை நீங்கள் புருவத்தில் தடவிக் கொண்டால் அடுத்த நிமிஷம் ஐயர்

உங்களுடைய காலடிக்கு வந்து சரணாகதி அடைவார்; இதை உடனே பரீட்சை செய்து பார்க்கலாம்" என்று மிகவும் உறுதியாகக் கூறினார். ஐயரது நடத்தையைப் பற்றி அம்மாளுக்கு நெடுநாட்களாக சந்தேகமிருந்தது உண்மையாதலால், அவளது கோபம் உடனே தணிந்தது. தனது கணவனை வசியம் செய்து விடவேண்டுமென்று அவள் உடனே நினைத்தாள். "அந்த மை என்னுடைய புருவத்திலிருக்கும் வரையில்தானே அவர் நான் சொன்னபடி கேட்பார். அது கூடாது; அவர் இனிமேல் எப்போதும் நான் சொல்வதையே செய்யவேண்டும். வேறு யாரிடத்திலும் அவர் ஆசை வைக்கக்கூடாது; நான் எழுந்திரு என்றால் எழுந்திருக்க வேண்டும். உட்கார் என்றால் உட்கார வேண்டும்; அப்படிப் பட்ட மருந்திருந்தால் கொடும்; நீர் கேட்கும் பணத்தை உடனே தருகிறேன்" என்றாள். அம்மாள் எளிதில் தமது வசப்பட்டதைக் கண்ட மந்திரவாதி, "மந்திர உச்சாடனம் செய்த ஒரு வேர் என்னிடம் இருக்கிறது. அதை இப்போதே தருகிறேன். தாலிச்சரட்டில் கட்டிக்கொள்ளுங்கள். அடுத்த நிமிஷம் ஐயர் என்ன செய்கிறாரென்று பாருங்கள்! ஆனால், எனக்குப் பணத்தின்மேல் ஆசையில்லை" என்றார்.

**அம்மாள்:-** அப்படியானால் ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல் இலவசமாகச் செய்கிறேன் என்கிறீரா?

**மந்திர:-** கூலியில்லாத வேலையுண்டா அம்மணி? தங்களுக்குத் தெரியாத காரியமா?

**அம்மாள்:-** அப்படியானால், என் உடம்பிலுள்ள நகைகளில் எதைக் கேட்டாலும் தருகிறேன். தங்கக் கொலுசு வேண்டுமா? இல்லாவிட்டால், என் காதிலிருக்கும் வைரக் கம்மல் வேண்டுமா?

**மந்திர:-** நல்ல காரியம் செய்தீர்கள். கம்மல் இரண்டாயிரம் ரூபாய், பெறுமே! உங்களுடைய ஐயரே இன்ஸ்பெக்டர்; அவர்

வசியமான பிறகு நான் கம்மலைத் திருடிக் கொண்டு போனதாகச் சொல்லி நகையையும் பிடுங்கிக்கொண்டு என்னையும் ஜெயிலில் போடப் பார்த்தீர்களா? நீங்கள் கம்மலைக் கொடுத்த பின், ஐயர் வந்து அது எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்?

**அம்மாள்:-** (புன்னகை செய்து) இந்த விஷயங்களில் புருஷரை ஏமாற்ற பெண்டுகளுக்குத் தெரியாதா? எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதற்காகக் கழற்றி வைத்தேன். காக்கை எடுத்துக் கொண்டு போய்விட்டதென்று சொல்லி விடுகிறேன். இதற்காக நாலைந்து அடி விழுந்தாலும் ஐந்து நிமிஷத்தில் வலி ஆறிப்போகிறது. காரியம் ஆனால் அதுவே போதும் - என்றாள்.

**மந்திர:-** (புன்னகை செய்து) அம்மாள் பலே தந்திரசாலி! எனக்குக் கம்மலும் வேண்டாம். அதனால் அம்மாளுக்கு அவ்வளவு துன்பமும் வேண்டாம்; என்னை ஆசையோடு கட்டிக்கொண்டு எனக்கு இரண்டு முத்தங்கள் கொடுத்து விடுங்கள்; வேறொன்றும் வேண்டாம்; உடனே நான் ஐயரை வசியம் பண்ணி வைத்து விடுகிறேன் - என்றார்.

எதிர்பாராத அந்த அசங்கியமான சொல்லைக் கேட்ட அம்மாள் கொடிய புலியைப்போலச் சீறி நிமிர்ந்தாள். "அடே தொடப்பக்கட்டை! என்ன சொன்னாய்? வீட்டை விட்டு வெளியில் போகிறாயா? சாணியைக் கரைத்து சந்தனாபிஷேகம் செய்யட்டுமா? அடே! வெளியில் யாரடா ஆர்டர்லி! "என்று உரக்கக் கூவினாள்.

அதைக் கேட்ட மந்திரவாதி சாந்த குணத்தோடு புன்னகை செய்து, "ஆகா! எஜமானி அம்மாளுக்கு எவ்வளவு கோபம் வருகிறது! ஐயரை வசியம் பண்ண அறிந்த எனக்கு அம்மாளை வசியம் பண்ணத் தெரியாதா! இதோபார்; சூ! மந்திரகாளி! அடுத்த நிமிஷம் அம்மாளே ஓடிவந்து என்னைக் கட்டிக்

கொண்டு முத்தமிடவேண்டும்" என்ற வண்ணம், தமது தலைப்பாகையை ஒரு கையால் கீழே தள்ளி விட்டார்; இடையிலிருந்த கைலியையும் மேலே இருந்த அங்கியையும் கழற்றிப்போட்டார்; தமது இடையிலிருந்த ஒரு பேனாக்கத்தியால் முகத்திலிருந்த ஒரு கயிற்றை அறுக்க, அவரது நீண்ட தாடி உடனே பறந்து கீழே விழுந்தது. அவன் பைத்தியக்காரனா யிருப்பானோவென்று அதுவரையில் நினைத்திருந்த அந்த யௌவன மாது, திகைப்பும் வியப்பும் அடைந்து அந்த வசிய ஜாலத்தில் ஈடுபட்டு மந்திரவாதியின் மீது உடனே மோகங்கொண்டவளாய் ஓடி வந்து மோகாவேசத்தோடு மந்திரவாதியின் மேல் பாய்ந்து அவரை அணைத்து முத்தமிட்டு, "சபாஷ்! நல்ல மந்திரவாதி! என்னை எவ்வளவு சீக்கிரமாக வசியப் படுத்திவிட்டீர்! முத்தம் முத்தமென்று பைத்தியம் பிடித்தலைகிறீர்? எத்தனை வேண்டுமானாலும் இதோ தருகிறேன்; எடுத்துக் கொள்ளும். அப்படியாவது என் புருஷன் வசியமாகட்டும்" என்று திரும்பவும் அவரை ஆலிங்கனம் செய்து கொள்ள, வேஷங் கலைத்த சமயசஞ்சீவி ஐயர் தமது மனையாட்டியின் சல்லாபங்களில், அகப்பட்டுக்கொண்டு திருட்டுவிழி விழிக்கிறார்.

★★★★★★★★★★

## 24 - வது அதிகாரம்

## புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே?

**சா**ம்பசிவத்தைத் தேடி அழைத்து வரும்பொருட்டு ரெங்கராஜு செங்கற்பட்டிற்கு அனுப்பப்பட்டபிறகு,

கனகம்மாள் தனது நாட்டுப் பெண் சயனித்திருந்த தொட்டிலிற் கருகில் உட்கார்ந்து கொண்டு இமைகொட்டாமல் உற்று நோக்கி, தங்கம்மாளின் முகமாறுதல்களைக் கவனித்த வண்ணம், தலையில் வைத்த கையும், தடுமாறித் தவித்த மனதுமாய், சித்திரப்பதுமைபோல அசைவற்றிருந்தாள். அவளது சரீரம் சலனமற்று ஜடத்தன்மை அடைந்தவளாய்த் தோன்றினதேனும், அவளது மனதோ, அப்போதே கூண்டிலடைக்கப்பட்ட காட்டுக் கிளியைப்போலத் துடி துடித்து அண்டபகிரண்டங்களுக் கெல்லாம் அரை நொடியில் சென்று திரும்பியது. ஆலகால விஷத்தைக் கொண்ட கொடிய நாகத்தினால் ' தீண்டப்பட்டவனது நிலைமை எவ்வாறிருக்குமோ அவ்வாறே அவளது நிலைமையும் இருந்தது. புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப்போல, அவளது மனதில் வேதனைகள் ஊற்று நீராய்ப் பெருகிப் பொங்கின. அவள் தங்களது அப்போதைய நிலைமையைப் பற்றி எண்ணமிடலானாள்; மேனகாவைக் கலியாணம் செய்து கொடுத்து அவளைச் சென்னைக்கு அனுப்பிய நாள் முதல் அந்த நிமிஷம் வரையில் அவர்களது குடும்பத்திற்கு நேர்ந்த துன்பங்களெல்லாம் ஒன்றன் பின்னொன்றாக அவளது மனதாகிய அரங்கமேடையில் தோன்றி நடிக்க வாரம்பித்தன. புராதனமாக எவ்வளவோ செல்வத்திலும் செல்வாக்கிலும் இருந்து மானத்தோடு வாழ்ந்துவந்த தாங்கள் பலவிதத்திலும் இழிவடைந்து கடைசியில் மிகவும் அற்பத் தொகையான இருநூறு ரூபாய் இல்லாமையால் படும் பாட்டையும், விலையற்ற மாணிக்க மான தங்களது நாட்டுப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற யோக்கியதையற்றிருப்பதையும், நினைத்து உருகினாள்; சாம்பசிவம் வரும்வரையில், நாட்டுப்பெண்ணின் உயிர் நிற்கவேண்டுமே என்று கவலையுற்று சோர்ந்தாள். கைகளைப் பிசைந்துகொண்டாள்; எவ்விதத்திலாகிலும் சிறிய ஓசையுண்டானால்,

சாம்பசிவந்தான் வந்துவிட்டாரோ வென்று திடுக்கிட்டுத் திரும்பிநோக்குவாள்; கோவில் களிலுள்ள தெய்வங்களை எல்லாம் மனதால் வணங்கி வாயால் துதித்துக் கைகூப்பி வேண்டினாள்; தங்களது குலதெய்வமான திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாளை நினைத்தாள்; நிமிஷத்திற்கு நிமிஷம், ஒவ்வொரு வகையான புதிய காணிக்கை செலுத்துவதாக பிரார்த்தனை செய்து கொள்வாள்; "ஸ்ரீ நிவாசப் பெருமாளே! வெங்கடாசலபதி! இன்னமும் உன் மனது இறங்கவில்லையா! இந்த ஏழைகள் படும்பாடு உனக்குத் தெரியவில்லையா! ஐயோ எங்களால் சகிக்கக்கூடவில்லையே! போதுமப்பா! தெய்வமே! இனியாகிலும் உன்னுடைய கருணாகடாக்ஷம் எங்களுக்கு உண்டாகாதா! முதலில் இந்த டாக்டருடைய மனசில் புகுந்து என் நாட்டுப்பெண்ணின் உயிரைக் கொடுக்கமாட்டாயா! இவள் பிழைத்தவுடன், அழைத்துவந்து உன் கோவிலில் அங்கப் பிரதக்ஷணம் செய்து வைக்கிறேன். மாவிளக்கேற்றுகிறேன். இவளைப் போல தங்கத்தினால் சிலை செய்து கொண்டுவந்து வைக்கிறேன்; இவளுக்குக் குழந்தை பிறந்தால் அதற்கு உன்னுடைய கோவிலில் முடி இறக்குகிறேன். அப்பா வெங்கடாஜலபதி! ஸ்ரீ நிவாசப் பெருமாளே! அநாதையான எங்களை நீதான் காப்பாற்ற வேண்டும். எங்களுக்கு உன் துணையன்றி வேறு துணையில்லையப்பா! ஏ கிருபாநிதி! தயாநிதி! கருணாநிதி! எவ்விதமான சூதையும் கபடத்தையும் அறியாத என்னுடைய பையனுக்கு எவ்வித ஆபத்துமில்லாமல் கொண்டு வந்து சேர்த்துவிடப்பனே!" என்று பலவாறு வேண்டுதல் செய்து கொண்டாள். தஞ்சைக்கு அருகிலுள்ள மாரியம்மன் கோவிலென்னும் ஊரிலுள்ள வரப்பிரசாதியான மாரியம்மனை நினைத்து வேண்டினாள்; "மாரியம்மாத்தாயே! ஆயிரங் கண்ணுடைய என்னம்மணீ! பரதேவதை என் வீட்டு விளக்கை அவித்துவிடாதே தாயே! உன் கோவில் முழுவதும் லட்ச தீபம்

ஏற்றி வைக்கிறேன். இவள் பிழைத்தவுடன் உன் கோவில் பெரிய பிரகாரத்தில் அடிப்பிரதக்ஷணம் செய்து வைக்கிறேன்; இந்த ஏழை முகத்தைப் பாரம்மா! எங்கள் இடரை யெல்லாம் நீக்கிவிடம்மா! கைநிறையப் பவுன்களாகவே காணிக்கை செலுத்துகிறேன்" என்று ஒவ்வொரு தெய்வமாக விளித்து உருக்கமாகப் பிரார்த்தித்துப் பணிந்தவளாய் உட்கார்ந்திருந்தாள்.

அன்றைக்கு முதல்நாளே வருவதாகச் சொன்ன சாம்பசிவம் என்ன காரணத்தினால் அதுகாறும் வரவில்லை யென்று எண்ணமிடலானாள். ஒருகால் பகற்கொள்ளைப் பாக்கம் நீலகண்ட செட்டியார் நமது ஊரில் இல்லையோ; அல்லது பத்திரம் எழுதிப் பதிவு செய்வதில் தாமதமோ; அல்லது பணத்தின் வருகைக்காக எதிர்பார்த்து அந்த ஊரிலேயே இருக்கிறாரோ; சாம்பசிவம் பணத்தை எடுத்து வரும்போது, கள்வர் அவரைக் கொன்றுவிட்டுப் பணத்தைப் பறித்துக் கொண்டிருப்பார்களோ; அல்லது தமது பெருத்த ஆபத்தையும், அவமானத்தையும் பொறுக்க மாட்டாமல் அவர் எங்காகிலும் தற்கொலை செய்துகொண்டாரோ; அல்லது லஞ்சம் வாங்கின குற்றத்திற்காக, தஞ்சை கலெக்டர் துரை, சாம்பசிவத்தை வாரண்டில் பிடித்து சிறைச்சாலையில் அடைத்து விட்டாரோ என்று எண்ணத்தை யெல்லாம் எண்ணி எதையும் நிச்சயமாக அறியமாட்டாமல் குழப்பமடைந்து தணல்மேல் புழுவெனத் தவிக்கிறாள். பாடகர்கள் பலவகையான சங்கதிகள் போட்டுப் பாடிப்பாடித் திரும்பவும் பல்லவிக்கு வருதலைப்போல ஒவ்வொரு விஷயத்தையும் வெங்கடாசலபதி ஸ்தோத்திரத்தில் கொண்டுபோய் முடிப்பாள். இடையில் மேனகா வராகசாமி ஆகிய இருவரைப்பற்றி நினைவு உண்டாகும். மேனகா உயிரோடிருக்கிறாளோ அல்லது மண்ணுலகைத் துறந்து விட்டாளோ; உயிரோடு இருந்தால், புருஷன் வீட்டிற்கு வந்துவிட்டாளோ, அல்லது வேறு எங்கு தவிக்கிறாளோ என்று பலவாறு நினைத்து நினைத்து ஏங்கினாள். இராயப்பேட்டை

வைத்திய சாலைக்குப் போய் வராகசாமியின் நிலைமை அறிந்து வரும்படி கிட்டனை அடிக்கடி அனுப்புவாள். வராகசாமி முழங்காலில் ஆபரேஷன் செய்து தனிமையான அறையில் விடப்பட்டிருந்தமையால் அவனைப் பார்க்க அநுமதி கிடைக்கவில்லை யென்பதைத் தெரிவிப்பான் கிட்டன். அதிலிருந்து வராகசாமி உயிரோடு இருக்கிறான் என்பதை யூகித்துக்கொண்டு கனகம்மாள் சிறிது ஆறுதலடை வாள், தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவிலிருந்த சாமாவையரிடம் சென்று மேனகாவைப்பற்றிய செய்தி ஏதேனும் கிடைத்ததா வென்பதை அறிந்து வரும்படி கிட்டனை அனுப்புவாள். அவன் அரை நாழிகையில் திரும்பி வந்து, அவளைப்பற்றி எவ்விதமான செய்தியும் கிடைக்க வில்லை யென்பான்.

அதைக் கேட்டவுடன் கனகம்மாள் பழைய பாட்டைத் துவக்குவாள். "ஐயோ! என் குடும்பம் இப்படியா சீர்குலைந்து போகவேண்டும்! நாங்கள் யார் குடியைக் கெடுத்தோமோ! யார் சொத்தை அபகரித்தோமோ! யாரை அடித்து சித்தரவதை செய்தோமோ! அத்தனை பாவங்களும் ஒன்றாகச் சேர்ந்து வந்து ஒரே காலத்தில் அமுக்கி விட்டனவே! ஐயோ! தெய்வமே! இத்தனை ஆபத்துகளிலிருந்தும் நாங்கள் எப்படி மீளப் போகிறோம்! என் பிள்ளை வரவேண்டுமே; என் மேனகா வரவேண்டுமே; என் தங்கம் பிழைக்கவேண்டுமே; என் வராகசாமி பிழைக்கவேண்டுமே; என் மேனகா புருஷனோடு வாழ வேண்டுமே; போன உத்தியோகமும் மானமும் திரும்ப வேண்டுமே; இத்தனையும் கைகூடுமோ? இத்தனையும் மனித சகாயத்தால் ஆகக்கூடியவைகளோ? ஜெகதீசா! ஜெகத்ரக்ஷகா! ஸ்ரீ நிவாசா! மலைப்பெருமாளே! உன் கிருபை எங்களுக்கு உண்டாகுமோ? உன் கடாக்ஷம் எங்கள் மீது விழுமோ? நாங்கள் செய்த பிழைகளுக்கு இன்னம் தண்டனை முடிவடைய வில்லையோ? அற்பமான ஒரு கொசுவின் தலையில் மலையை

வைப்பது போல பரம ஏழைகளாகிய எங்களை ஒரே காலத்தில் இத்தனை இடுக்கண்களும் சேர்ந்து அழுத்துவதை நாங்கள் எப்படிச் சகிப்போம்" என்று கனகம்மாள் மேன்மேலும் பிரலாபித்து சுவாமியை வேண்டி வேண்டி விசனமே வடிவாய் ஆத்திரமே உருவாய் ஆவலே மயமாய் ஊணுறக்கமின்றி வாடித் தத்தளித்து உருகி யிருந்தாள்.

முதல் இரண்டு நாட்களிலும் சவம் போலக் கிடந்த தங்கம்மாள் நன்றாக மூச்சு விடுத்து அப்போதைக்கப்போது முக்கி முனகத் தொடங்கினாள்; அதைக் கண்ட கனகம்மாள், அப்போதுதான் ஒரு வேளை உயிர் நிற்கப்போகிறதோ வென்று நினைத்துப் பெரிதும் அச்சமடைந்து கலங்கி, "தங்கம்! தங்கம்!" என்று மெல்லக் கூப்பிட்டாள். மறுமொழி கிடைக்கவில்லை. கண்ணும் திறக்கப்படவில்லை. கனகம்மாள் கைகளைப் பிசைந்து கொண்டாள். வேண்டுதல்களும், பிரலாபங்களும் முன்னிலும் அதிகரித்தன. தனது நாட்டுப் பெண் இனிப் பிழைக்கமாட்டாள் என்னும் நினைவு அவளது மனதில் தோன்றவே கண்ணீர் இருவிழிகளினின்றும் அருவிபோல வழிந்தது; சொற்கள் விசனத்தினால் திக்கித்திக்கி நடுங்கின. "ஐயோ தெய்வமே! இந்தப் பட்டணத்துச் சந்தியில் மனிதரில்லாமல் இப்படித் தவிக்க வேண்டுமா! ஈசுவரா! இது உன் கூத்தா! எனக்கு நல்ல பிள்ளை வந்து பிறந்தான்! பணமில்லாவிட்டாலும் பெண்டாட்டியையாவது கடைசி காலத்தில் பார்க்கக்கூடாதா! அடாடா! பாவி ஜென்மமே!" என்று மனமுடைந்து சாம்பசிவத்தைத் தூற்றுவாள். இவ்வாறு அவளிருந்த நிலைமை மிகவும் பயங்கரமாகவும் கண்டோர் மனதிளகிக் கதறச் செய்யத்தக்கதாகவும் பரிதாபமாகவும் இருந்தன.

மறுநாட்காலையில் மணி எட்டாயிற்று. வில்லியம்ஸ் திரும்பவும் வழக்கம்போல் பிரசன்னமானார். முதல்நாளைப்

போலவே அன்றைக்கும் அவரது வேலைக்காரன் காயங்களைக் கட்டுவதற்குத் தேவையான கருவிகளோடு வந்து சேர்ந்தான். துரையைக் கண்ட கனகம்மாளது மனதில் சிறிது தைரியமுண்டாயிற்று; விரைவாக எழுந்து மரியாதையாக அவரை வரவேற்றாள். அவளும், கிட்டனும் பரிதாபகரமாக நின்ற தோற்றமே ஆயிரம் நாக்குகள் கொண்டு அவரைக் கெஞ்சி மன்றாடி தங்கம்மாளைக் காப்பாற்றும்படி வேண்டுவதுபோல இருந்தது. கல்நெஞ்ச முடைய கிராதகரும் கண்டு இரங்கத் தக்க நிலைமையில் காணப்பட்ட அவர்களை வில்லியம்ஸ் துரை மிகவும் அலட்சியமாகப் பார்த்து, "என்னம்மா! பிள்ளை வந்துவிட்டாரா?" என்று புன்சிரிப் போடு புரளியாகக் கேட்டார். கனகம்மாள் அதற்கு எவ்வாறு மறுமொழி சொல்வதென்பதை உணராமல் இரண்டொரு நிமிஷம் சாதித்தபின், "அவன் வந்திருந்தால், நாங்கள் உடனே உங்களிடம் ஓடி வந்திருக்க மாட்டோமா? ஒரு நிமிஷம் தாமதிப்போமா? அங்கே அவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ என்னவோ தெரியவில்லை. அவனைத் தேடிக் கொண்டு போன சேவகனும் வரவில்லை. நீங்கள் தான் எப்படியாகிலும் தயவு செய்யவேண்டும். பெண்ணின் உயிர் போய்விடும்போலிருக் கிறது. எங்கள் மேல் இரக்கங்கொண்டு செய்யுங்கள்" என்று மென்மேலும் கெஞ்சி மன்றாடினாள். அவளது சொற்களைச் செவிகளில் வாங்காதவரைப்போலத் தோன்றிய துரை தங்கம்மாளுக்கருகில் நெருங்கி அவளது நாடியை ஆராய்ந்து பார்த்தார்; புண்களை அலம்பிச் சுத்தி செய்து மருந்து வைத்துக் கட்டச் செய்தார்.

பிறகு துரை கனகம்மாளைப் பார்த்து, "இந்த அம்மாள் பேசினாளா?" என்றார். அவள், "இல்லை" என்றாள்.

**டாக்டர்:-** கண்ணைத் திறந்தாளா?

கனகம்மாள்:- இல்லை; ஆனால் அப்போதைக் கப்போது முக்கி முனகினாள்.

**டாக்டர்:-** சரி; நாமென்ன செய்யலாம். நீங்களோ அலட்சியமாக இருக்கிறீர்கள். தம்முடைய சம்சாரத்தின் ஆபத்தான நிலைமையை உணராமல் புருஷன் இப்படி இருப்பானா! இது ஆச்சரியமாக இருக்கிறது! பணத்தைப் பற்றிக் கூடநான் கவனிக்கவில்லை. பெண்ணுக்குப் போஷக (Guardian)னான புருஷன் பத்திரம் எழுதிக் கொடுக்கு முன் நான் இந்த அபாயகரமான ஆபரேஷனைச் செய்யக் கூடாது. ஆகையால், தயவாகவாவது தருமத்திற்காவது நான் ஆபரேஷன் செய்வதும் பிசகு. இந்த மாதிரியான ஆபரேஷனுக்கு நான் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் வாங்குவது வழக்கம். நீங்கள் சிபாரிசு கடிதம் கொண்டு வந்தபடியால், இருநூறு ரூபாய்க்கு ஒப்புக்கொண்டேன். அதுவும் ஒழுங்காக வராவிட்டால் நான் என்ன செய்கிறது? முதலிலேயே ஏழையென்று நீங்கள் சொல்லியிருந்தால், நான் பணம் கேட்டிருக்க மாட்டேன். நீங்கள் ஆசை காட்டி ஏமாற்றுகிறீர்களோ என்று இப்போது நினைக்க வேண்டி யிருக்கிறது. இப்படி அநேகர் என்னை ஏமாற்றி இருக்கிறார்கள்.

**கனக:-** ஐயா! அப்படி நினைப்பது சரியல்ல. நாங்கள் அற்ப மனிதரல்ல. இரண்டு நாளைக்கு முன் எங்கள் வீட்டிலிருந்து கொள்ளைக்காரர் இருபதினாயிரம் 'ரூபாய் கொண்டு போய்விட்டார்கள். இந்தப் பெண்ணின் உடம்பிலிருந்து மாத்திரம் ஐயாயிரம் ரூபாய் பெறும்படியான நகைகளைக் கொண்டு போய்விட்டார்கள். அந்த நகைகளை இவளுக்குப் போடாதிருந்தால் இந்த ஆபத்தே வந்திராது; நான் சொன்னதை பாலியர்கள் கேட்கவில்லை. இப்போது புடவை கூட இரவல் புடவை கட்டும்படி நேர்ந்தது. என் பிள்ளையின் டிப்டி கலெக்டர் உத்தியோகமும் கொள்ளை நடந்த தினத்திலேயே போய்விட்டது. நான்கு நாளைக்கு முன் இவளுடைய பெண் காணாமல் போய்விட்டாள். காணாமல் போன பெண்ணின் புருஷன் மோட்டார் வண்டியில் அகப்

பட்டு, இராயப்பேட்டை வைத்தியசாலையில் கிடக்கிறான். எங்களுக்கு இத்தனை ஆபத்துகள் ஒரே காலத்தில் வந்து விட்டன. இந்த ஆபரேஷனுக்கு நாங்கள் பணம் கடனாக வாங்கியே ஆகவேண்டும். எங்களுக்கு ஒரு வீடும் நிலமும் இருக்கின்றன. என் பிள்ளை அவைகளை அடமானம் வைத்துப் பணம் வாங்கிவரப் போயிருக்கிறான். பணந்தான் கிடைக்க வில்லையோ, அல்லது வாங்கிக்கொண்டு வந்த பணத்தை திருடர் வழிப்பறி செய்து கொண்டு போய்விட்டார்களோ என்னவோ தெரியவில்லை; போன சேவகனும் திரும்ப வில்லை. இன்றைக்குள் சேவகனாவது எப்படியும் வந்து விடுவான்; நீங்கள் தயவு செய்யுங்கள்.

**டாக்டர்:-** (சிறிது கோபங்கொண்டு) பணத்துக்காக மாத்திரம் நான் தாமதிக்கவில்லை யென்று எத்தனை தடவை சொல்லுகிறது. கார்டியன் பத்திரம் எழுதிக் கொடுக்கு முன், நான் ஆபரேஷன் செய்வது கூடவே கூடாது. ஆயிரத்தோரு தரம் சொல்லுகிறேன்.

**கனக:-** தானாக இவள் சாவதைவிட, இவளைப் பிழைக்கும் பொருட்டு நாம் செய்த முயற்சியால் இவள் சாவதனால் கெடுதல் இல்லை. இந்த விஷயத்தில் என் பிள்ளை உங்கள்மேல் தொடராமலிருக்கும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். அதற்கு நான் உத்தரவாதி; என் பிள்ளை சற்புத்திரன்; என் சொல்லை ஒரு நாளும் மீறமாட்டான்; பெண்ணுடைய உயிருக்கு ஆபத்து வந்தாலும் வரட்டும்; செய்யுங்கள் - என்றாள்.

துரையின் கோபம் முன்னிலும் அதிகரித்தது. "உன் சொல்படி அவர் கேட்பாரென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது ஆகையால், இதைப்பற்றி திரும்பத் திரும்பச் சொல்வதில் பயனில்லை. வீணில் என்னை வதைத்தால், நான் இனிமேல் இங்கே வரமாட்டேன். தற்கால சாந்தியாக நான் கொடுத்து வரும் மருந்தையே இப்போதும் கொடுத்து விட்டுப்

போகிறேன். உயிரோ போய்க் கொண்டே இருக்கிறது; முக்கால் பாகம் போய்விட்டது. இவள் ஒருகால் கண்ணைத் திறந்து பேசினாலும் பேசுவாள். அதுதான் மரண காலத்தின் அறிகுறி; ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, அதே மருந்தை உட்புறம் செலுத்தி விட்டு, துரை வெளியிற் போக எழுந்தார்.

அப்போது அந்த அறைக்குள் ஒரு தபால்காரன் நுழைந்து, "கனகம்மாள் யார்?" என்றான்; அவள், "நான்தான்" என்றாள். அவன் உடனே ஒரு கடிதத்தை எடுத்துக் நீட்டி, "ஒரு அணா கொடுக்க வேண்டும்; தலை ஒட்டப்படவில்லை" என்றான். உடனே கிட்டன் ஒரு அணாவைக் கொடுத்துவிட்டு, கடிதத்தை வாங்கிக்கொண்டான். தபாற்காரன் வெளியிற் போய் விட்டான். கடிதம் எங்கிருந்து வந்தது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு துரை சிறிது தயங்கி நின்றார். கிட்டன் கடிதத்தைப் பிரித்தான்; அது பென்சலால் விகாரமாக அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

"நான் பட்டணத்திலிருந்து செங்கல்பட்டுக்கு வந்து பகற் கொள்ளைப்பாக்கத்திற்குப் போய் செட்டியாரைக் கண்டேன். எஜமான் வீட்டையும் நிலத்தையும் அவரிடம் அடமானம் வைத்து ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு முந்திய நாள் சாயுங்காலமே செங்கல்பட்டுக்கு வந்து விட்டதாக செட்டியார் சொன்னார். நான் உடனே செங்கல்பட்டுக்கு வந்தேன்; ரயிலடியிலும், செங்கல்பட்டு, நத்தம் முதலிய ஊர்களிலும் தேடினேன்; பலரிடம் விசாரித்தேன்; எஜமானைப்பற்றி செய்தி ஒன்றும் கிடைக்க வில்லை. போலீசாரிடமும் தெரிவித்தேன்; அவர்கள் ரயிலுக்கு வந்து அங்குள்ள சிப்பந்திகள், வண்டிக்காரர்கள் முதலியோரை விசாரித்தனர். கையில் பெருத்த பணமூட்டையோடு வந்த ஒரு ஐயர் இரவில் அகாலத்தில் வந்து பட்டணம் போக வேண்டு மென்று

தவித்ததாகவும் குதிரை வண்டியாவது மோட்டார் வண்டியாவது பட்டணத்துக்கு வருமோவென்று அவர் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் அவர்கள் சொன்னார்கள். தவிர, மூன்றாவது வகுப்பு ஜனங்கள் தங்குமிடத்தில் நாதனில்லாமல் கிடந்த ஒரு துணியையும் ஸ்டேஷன் மாஸ்டர் போலீசாரிடம் ஒப்புவித்தார். அந்தத் துணியை நான் பார்த்தேன். அது நம்முடைய எஜமானரின் அங்கவஸ்திரந்தான். பணத்தோடு நம்முடைய எஜமானரைத் திருடர் தூக்கிக்கொண்டு போயிருப்பார்களோ, அல்லது அவர் திருடரைத் துரத்திக் கொண்டு போய்விட்டாரோ என்று போலீசார் பலவாறு யூகித்து, மேலும் விசாரணை செய்கிறார்கள்; விவரத்தை மறுபடியும் எழுதுகிறேன். இந்தக் கடிதத்தை இராத்திரியில் எழுதினேனாகையால் தபால் தலை ஒட்டாமல் போட்டேன். தங்கம்மாளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். ஆபரேஷன் செய்யும்படி டாக்டர் துரையிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு **சேவகன், ரெங்கராஜு.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை கிட்டன் படிக்கக் கேட்ட கனகம்மாள் திக்பிரமை கொண்டாள். கிட்டனும் திகைப்படைந்தான். இருவரும் வாய்திறந்து பேச மாட்டாமல் ஊமைகளைப் போலாயினர். வில்லியம்ஸ் துரையின் முகம் மாறுதலடைந்தது. இந்தச் சிகிச்சையில், தமக்கு இருநூறு ரூபாய் கிடைக்குமென்று நம்பி யிருந்தார். தாம் இனிமேல் அங்கிருந்தால் ஆபரேஷனை இலவசமாக செய்யும்படி கனகம்மாள் வற்புறுத்துவாளென்று நினைத்தவராய், "சரி; நான் அவசரமாகப் போகவேண்டும். உங்களுடைய காரியங்களும், உங்களுக்கு வரும் ஆபத்துக்களும் வேடிக்கையாக இருக்கின்றன; எப்படியாவது செய்து கொள்ளுங்கள். நான் முடிவாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன். இந்த அம்மாளின் உயிர் இப்போது போகுமோ அடுத்த நிமிஷத்தில் போகுமோ என்று

நினைக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறது. ஆபரேஷன் செய்வதை இனி ஒரு நிமிஷமும் நிறுத்தக் கூடாது. இந்த அம்மாளின் புருஷனோ காணாமல் போயிருக்கிறார். அவர் வருகிறவரையில் நாம் காத்திருக்க முடியாது. இந்தக் கடிதத்தை நான் ஆதாரமாக வைத்துக் கொள்ளுகிறேன். நீ உத்திரவாதியென்று பத்திரம் எழுதிக் கொடுத்தால் போதுமென்று ஒப்புக்கொள்கிறேன். இதனால் எனக்குத் துன்பம் நேரிட்டாலும் அதற்கு நான் உடன்படுகிறேன். அது ஒன்று தான் என்னால் செய்யக்கூடிய உதவி. அவரிடமிருந்து இனி பணம் வராதென்பது இந்தக் கடிதத்திலிருந்து நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. உங்களுக்கு இந்த ஊரில் யாராவது சிநேகிதர்களாகிலும், பந்துக்களாகிலு மிருந்தால், அவர்களிடம் போய் பணத்தை மாத்திரம் நீங்கள் தயாரித்துக் கொண்டு வந்து விடுங்கள்; உடனே நான் காரியத்தை முடித்துவிடுகிறேன். நான் வேறு எவ்விதமான உதவியையும் செய்யமுடியாது. இனிமேல் நான் இந்த இடத்துக்கு வேளைக்கு வேளை வந்து கொண்டிருக்க முடியாது; இப்போது நான் எத்தனையோ வேலைகளைக் கெடுத்துக் கொண்டு வருகிறேன். இதுவரையில் எனக்கு உங்களால் செலுத்தப்படவேண்டியது ரூபாய் ஐம்பதுக்கு மேலாகிறது. நான் சொல்லக்கூடியதைச் சொல்லிவிட்டேன்; இனி உங்கள் இச்சைப்படி செய்யுங்கள்" என்று கூறிக் கொண்டே வெளியிற் போய்விட்டார்.

அந்த வில்லியம்ஸ் துரையின் சொற்களைக் கேட்ட கனகம்மாள் எதையும் சொல்லமாட்டாமல் திகைத்து நின்றாள். அதுகாறும் சாம்பசிவம் பத்திரம் எழுதிக் கொடுப்பதே முதன்மையான காரியமென்றும், அதனாலேதான் ஆபரேஷன் செய்யப்படவில்லை யென்றும் சொல்லிவந்த துரை, அப்போது பணத்திற்கு முதன்மை கொடுத்துப் பேசினதைக் கண்டு, மேலே என்ன செய்வதென்பதையறியாமல் மதிமயக்கங்கொண்டு கால் நாழிகை நேரம் வரையில் ஓய்ந்து உட்கார்ந்திருந்தாள்;

தங்களுக்கு மேன்மேலும் புதிய துன்பங்கள் வந்துகொண்டே இருப்பதை நினைத்து, தமது கதி கடைசியில் எவ்வாறாகுமோ வென்று ஐயமுற்று மனமாழ்கினாள்; பணத்தோடு காணாமற் போன சாம்பசிவத்தைப் பற்றியே பெரிதும் கவலைக் கொண்டாள். உத்தியோகம், செல்வம் முதலிய எல்லாம் ஒழியினும், தனது புத்திரன், நாட்டுப்பெண் முதலியோர் உயிருடனிருப்பதே பெரிய பாக்கியமென்று நினைத்த நினைவில் ஈசுவரன் மண்ணைப் போட்டுவிடுவனோ வென்று நினைத்தாள். முறையே சாம்பசிவம், தங்கம்மாள், மேனகா, வராகசாமி ஆகிய நால்வரைப் பற்றியும் நினைத்துக் கவலை கொண்டு கலங்கி வாய் பேசா ஊமையாய் சுவரோடு சுவராக ஒன்றி உட்கார்ந்திருந்தாள். அவளது நிலைமையைக் கண்ட கிட்டன் மிகவும் அச்சங்கொண்டு; “பாட்டி! பாட்டி! உடம்பு என்ன செய்கிறது?” என்று கேட்டான். அவள் சித்தபிரமை கொண்டவளைப் போலக் கண்களை உருட்டி உருட்டி விழித்து மறுமொழி கூறாமலிருப்பாள். கனகம்மாளே முதலில் இறந்து போய்விடுவாளோ வென்று நினைத்துப் பதறுவான் கிட்டன். கனகம்மாள், தங்கம்மாள் இருவரையும் படுக்க வைத்துவிட்டு; தான் என்ன செய்வதென்பதை நினைத்து அவன் பெரிதும் கலக்கமடைந்து தவிப்பான்; அவ்வூரில் சாம்பசிவத்துக்கு அறிமுகமானவர்களிடமெல்லாம் சென்று தங்களது நிலைமையைத் தெரிவித்து, கடனாகப் பணம் கொடுக்கும்படி கேட்டு வெறுங் கையோடு திரும்பினான். பணம் கிடைக்க வில்லை யென்பதைக் கேட்ட கனகம்மாளது மனக்குழப்பம் பெருங் குழப்பமாயிற்று. தங்கம்மாளோ கண்களைத் திறப்பதும் மூடுவதுமா யிருந்தாள்; மூச்சும் அடிக்கடி பெரு மூச்சாக வந்துகொண்டிருந்தது. முகத்திலும் நல்ல களை உண்டாயிற்று. அவளது முகத்தின் மாறுதல்களை கனகம்மாள் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அம்மாதிரி யான சின்னங்கள் தோன்றுவது கெடுதலென்று டாக்டர்

சொன்னது அவளது நினைவிற்கு வந்தது. தங்கம்மாளின் உயிர் சமீபகாலத்தில் போகப் போகிறதென்று நினைத்தாள்; கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது; அவள் உடனே தனது மார்பில் அடித்துக் கொண்டாள். "ஐயோ! என் பாக்கியமே! நீயும் போகிறாயா? போ; போ; பாவிகளாகிய நாங்கள் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்; எல்லாம் போய்விட்டது; இனிமேல் என்ன இருக்கிறது; எல்லோரையும் தின்று விட்டு ஜாம்பவானைப்போல நான் மாத்திரம் ஆயிரங்காலம் இருக்கவேண்டுமா? நானும் கிணற்றில் விழுந்து உயிரை விட்டு விடுகிறேன்; என் குடும்பம் அடியோடு பூண்டற்றுப் போகட்டும்" என்று பலவாறு பிரலாபித்தழுத சமயத்தில் தங்கம்மாள் வாயைத் திறந்து, "தாகமா யிருக்கிறது" என்றாள். அந்தக் குரல் கிணற்றிற்குள்ளிருந்து உண்டானதைப் போலத் தோன்றியது. அவள்தான் பேசினாளோ அல்லது வேறு எவளாகிலும் பேசினாளோ என்னும் சந்தேகம் உண்டாயிற்று. கனகம்மாள் வியப்பும் திகைப்பும் அடைந்தாள்; டாக்டர் துரை, சொன்னது நிஜமாயிற்றென்று நினைத்தாள்; தங்கம்மாளுக்கு மரணகாலம் வந்துவிட்டதென்று எண்ணினாள் என்றாலும் அவளுக்குத் தண்ணீராகிலும் கொடுத்து அவளது கடைசி ஆசையைப் பூர்த்தி செய்வோமென்று நினைத்தாள்; ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து அவளது வாயில் வைத்தாள். தங்கம்மாள் மிகுந்த ஆவலோடு சிறிதளவு தண்ணீர் பருகினாள். அடுத்த நொடியில், அவளது கண்கள் மூடிக்கொண்டன. அவள் அயர்ந்து பிணம்போலானாள். அதைக் கண்ட கனகம்மாள் கோவெனக் கதறியழத் தொடங்கி, "ஐயோ! தங்கமே! கடைசித் தண்ணீர் குடித்து விட்டுப் போகிறாயோ! இனிமேல் கண்ணைத் திறக்க மாட்டாயோ! பாழாய்ப்போன அந்த எமன் உன்னைக் கொண்டுபோகத் துணிந்தானே!" என்று மேன்மேலும் பெருங்கூச்சலிட்டு ஒப்பாரி வைத்தழுதாள். அதைக் கண்ட கிட்டனும் வாய்விட்டுக் கதறத் தொடங்கினான். அந்த விபரீதக் கூக்குரலைக் கேட்டு வெளியிலிருந்த ஜனங்களும்

வந்து கூடி, தங்கம்மாள் பரிதாபகரமாகக் கிடந்ததைக் கண்டு விசனித்து நின்றனர்.

அந்தச் சமயத்தில் ஒரு தபாற் சேவகன் அவ்விடத்தில் தோன்றி கனகம்மாள் யாரென்று உரக்கக் கேட்டான்; அதைக் கேட்ட யாவரும் திடுக்கிட்டு அவனது பக்கம் திரும்பினார்கள். கனகம்மாள் கிட்டன் ஆகிய இருவரும் தமது அழுகையைச் சட்டென்று நிறுத்தி அவன் என்ன சொல்லப் போகிறானோ வென்று ஆவலோடு அவனது முகத்தைப் பார்த்தனர்.

அவன், "கனகம்மாள் யார்?" என்று இன்னொரு முறை கேட்க அவள், "நான்தான்" என்றாள்.

அங்கிருந்த ஜனங்கள் யாவருக்கும் அந்த ஒரு நொடியும் ஒரு யுகமாய்த் தோன்றியது. அப்பொழுது தபாற்காரன், "உனக்கு முன்னூறு ரூபாய் தந்தி மணியார்டர் வந்திருக்கிறது; கையெழுத்துப் போடத் தெரியுமா?" என்றான்.

கனகம்மாள் தனது செவிகளை நம்பாமல் திகைத்தவளாய், "தெரியும்" என்றாள். அவன் உடனே அவளுக்கருகில் உட்கார்ந்து அவளது கையெழுத்தையும் இரண்டு சாட்சிகளின் கையெழுத்துக்களையும் வாங்கிக்கொண்டு முன்னூறு ரூபாய் எண்ணி அவளிடம் கொடுத்து விட்டு எழுந்து வெளியில் போய்விட்டான். அந்தப் பணம் யாரால் அனுப்பப்பட்டதென்பதையும் கேட்காமலிருந்த கனகம்மாள் பணத்தை ஒரு பக்கத்தில் போட்டு விட்டு மேலும் அழத்தொடங்கினாள். "இந்தப்பணம் இரண்டு நாழிகைக்கு முன் வந்திருக்கக் கூடாதா? உயிர் போனபின் எதற்காக வந்ததோ?" என்று கதறியழுதாள். அந்தப் பரிதாபகரமான நிலைமையைக் கண்ட ஜனங்கள் யாவரும் மிகவும் இரங்கி விசனித்து அவ்விடத்தை விட்டுப் போக மனமற்று நின்றனர். அவ்வாறு அரை நாழிகை சென்றது; கூட்டத்திலிருந்த ஒரு பெண்பிள்ளை தங்கம்மாள் கிடந்த தொட்டிலிற்கருகில் நெருங்கி அவளை உற்று நோக்கி;

"என்ன அம்மா மூச்சு வருகிறதே! அழுகிறீர்களே!" என்றாள். அதைக் கேட்ட யாவரும் வியப்படைந்து அருகில் நெருங்கிப் பார்த்தனர். கனகம்மாளும் உற்று நோக்கினாள். மூச்சு மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தது; உடனே கனகம்மாள் விரைவாகக் கிட்டனை அழைத்து இருநூற்றைம்பது ரூபாயை எடுத்துக்கொண்டு ஓடி டாக்டரிடம் கொடுத்து அவரை உடனே அழைத்துக் கொண்டு வரும்படி கூறவே, கிட்டன் அவ்வாறே பணத்தை எடுத்துக் கொண்டு வெளியிற் சென்று ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு காற்றாகப் பறந்து மறைந்து போனான்.

அப்பொழுது தங்கம்மாளுக்கு மூச்சு வருவதும் நிற்பதுமாக இருந்தது. டாக்டர் உடனே வருவாரோ என்றும், அதுவரையில் உயிர் நிற்க வேண்டுமே என்றும் கனகம்மாளும் மற்ற ஜனங்களும் நினைத்துப் பேராவல் கொண்டு நெருப்பின் மேல் கிடக்கும் புழுவெனத் துடித்தனர். அவ்வாறு ஒரு நாழிகை நேரம் கழிந்தது. கிட்டன் ஓடி வந்தான். டாக்டரை எப்போது காண்போமென்று ஆவல் கொண்டிருந்த ஜனங்கள் யாவரும் அவர் வருகிறாரா என்று பார்த்தனர். அவர் காணப்படவில்லை. ஒருகால் அவர் பின்னால் வருவாரோ வென்று நினைத்து யாவரும் கிட்டனது முகத்தை நோக்கினார்கள். அவனது முகம் மிகுந்த சந்தோஷத்தைக் காண்பித்தது. என்றாலும், அந்த ஒரு நிமிஷத்தில் கனகம்மாளின் ஹிருதயம் படீரென்று வெடித்துப் போகும் நிலைமையிலிருந்தது. அவள் கிட்டனது முகத்தைப் பார்த்து, "எங்கே அவர்?" என்றாள். கிட்டன் சந்தோஷத்தோடு, "பாட்டீ! பயப்படாதே; அக்காள் பிழைத்துக் கொண்டாள்" என்றான். அதைக் கேட்ட கனகம்மாளுக்கு ஒன்றும் தெளிவாகத் தோன்றவில்லை. அவன் மூடத்தனமாக ஏதோ உளறுவதாக அவள் நினைத்தாள். டாக்டர் வரவில்லை யென்ற ஆத்திரம் ஒரு புறம் பொங்கி எழுந்தது. உடனே அவள், "என்னடா உளறுகிறாய்? டாக்டர் எங்கே?" என்று வினவினாள். கிட்டன்,

"அவர் வரவில்லை. நாம் இந்த ஊருக்கு வந்த அன்றைக்கே டாக்டர் தம்முடைய வீட்டிலேயே ஆபரேஷனைச் செய்து விட்டாராம்; பணம் வரவில்லையே என்ற நினைவினால், உண்மையை நம்மிடம் சொல்லாமல் இதுவரையில் மறைத்து வைத்திருந்தாராம். தங்கம்மாள் எழுந்திருக்காமல் இருப் பதற்கும், உடம்பின் நோயை உணராமல் இருப்பதற்கும் இதுவரையில் ஒரு வகையான மயக்க மருந்தைக் கொடுத்து வைத்திருந்தாராம். அவர் இப்போது இன்னொரு மருந்தை அனுப்பி யிருக்கிறார். அதைக் கொடுத்தால், எல்லாம் சரியாய்ப் போகுமாம்" என்ற கூறியவண்ணம் தமது கையில் வைத்திருந்த ஒரு மருந்தை உடனே தங்கம்மாளின் வாயில் ஊற்றினான். அவன் சொன்ன விநோதமான வரலாற்றைக் கேட்ட கனகம்மாளும் மற்ற ஜனங்களும் அப்படியே திகைத்து வியப்படைந்து கல்லாய்ச் சமைந்து நின்றனர். அவ்வாறு ஐந்து நிமிஷ நேரம் சென்றது. தங்கம்மாளின் முகத்தில் ஒரு வகையான மாறுபாடு தோன்றியது; இரத்த ஓட்டமும் அழகும் திரும்பின. அவள் தூங்கி விழிப்பவளைப்போல தனது கண்களைத்தெளிவாகத் திறந்து கொண்டு, "இது எந்த இடம்?" என்றாள். அடுத்த நிமிஷம் அவள் தனது உடம்பை அப்புறம் இப்புறம் திருப்பி எழுந்து திண்டில் சாய்ந்துகொண்டு நாற்புறங்களையும் வியப்போடு பார்த்துக் கனகம்மாளை நோக்கி, "உங்களுடைய பிள்ளை எங்கே?" என்றாள்.

★★★★★★★★★

## 25வது அதிகாரம்

# பேய்க் கூத்து

பெருந்தேவியம்மாளும் கோமளமும் சாமாவையர் சமேதராக தென்னை, கமுகு, மா, பலா, மாதுளை முதலிய மரங்களும், பூத்தொட்டிகளும், வாவிகளும், மணல் மேடுகளும், சலவைக்கல் மேடைகளும், சம்பங்கிக் கொடிகள் நிறைந்த பன்னக சாலைகளும், சவுக்கண்டிகளும், விளையாடும் இடங்களும், மண்டபங்களும், மாடங்களும் பிறவும் நிறைந்த உன்னதமான அந்த மாளிகைக்குள் காலடி வைத்தவுடன், அவர்கள் தமது பழைய நிலைமையை முற்றிலும் மறந்து எப்போதும் பங்களாவிலேயே பிறந்து வளர்ந்து வந்தோரைப் போலவும், புராதனமாக மகா மேன்மையான நிலைமையில் இருந்தோரைப் போலவும் மாறிவிட்டனர். அழகிய இரமணீய மான அந்த வனமாளிகைக்குத் தாங்கள் எஜமான ரானதை அவர்களது மனதே ஒரு சிறிதும் நம்பவில்லை; பெருந் தேவியம்மாளும், கோமளமும் விக்கிரயப் பத்திரத்தைப் படித்துப் பார்த்துக் கொண்டனர்; பங்களாவின் ஒவ்வோர் இண்டு, இடுக்கு, மூலை முடுக்குகளையும், விடாமல் ஓடியோடிப் பார்த்து, அப்போதே கண் பெற்ற பிறவிக் குருடன் உலகத்தைப் புதிதாய்ப் பார்ப்பதைப்போல பெரிதும் வியப்படைந்து பார்த்துப் பெருமகிழ்வடைந்து, உணவையும் துயிலையும் நினையாமல், ஆநந்தப்பரவசமடைந்து சுவர்க்க லோகத்தில் அப்போதே நுழைந்தவரைப்போலக் காணப்பட்டனர். மாம்ச மலை போல விருந்த பெருந் தேவியம்மாள் மான் குட்டியைப்போலப் பூஞ்சோலைக்

குள்ளும், மணல் மேட்டிலும், ஓடித் துள்ளி விளையாடினாள்; அவர்களது வயதிலும் பத்து பத்து வருஷங்கள் குறைந்து போனதாகத் தோன்றின; அங்கு வந்தபின் இரண்டு மூன்று நாட்கள் வரையில் அவர்களுக்குப் பசியென்பதே தோன்ற வில்லை. இரவிலும் பகலிலும் சோலைகளில் உலாவுவதிலும், மாடியிலிருந்த மின்சார விசிறிகளைச் சுழற்றிவிட்டு அடியிலுள்ள சோபாக்களில் சாய்ந்து உல்லாசமாக இருந்து கதை பேசுவதிலும் அவர்கள் தங்களது பொழுதைப் போக்கினர்; பார்க்கு மிடமெல்லாம் பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்குகளைப் பகற் பொழுதிலும் கொளுத்தி வைத்து வேடிக்கை பார்த்தனர். உட்புறத்தில் அழகாக அமைக்கப் பட்டிருந்த கட்டில்கள், சோபாக்கள், மேஜைகள், நாற்காலிகள் முதலியவற்றில் அவர்கள் உட்கார்ந்து உட்கார்ந்து சுகம் அனுபவித்தனர். சாமாவையரும் சில நாட்கள் தமது வீட்டுக்கே போகாமல் அவர்களோடிருந்து அவர்களுக்கு ஒரு விளையாட்டுக் கருவியா யமைந்து உல்லாசமாகப் பொழுதைப் போக்கினார். அவர் வெளிக்கு மாத்திரம் சந்தோஷமாக விளையாடினார் எனினும், அந்தப் பங்களாவில் இருப்பது நெருப்புத்தணலில் இருப்பது போல அவரை வருத்தியது. கடைசியாகப் பொய்ப் பத்திரம் தயாரித்துப் பதிவு செய்ததனால் அவர் அவர்களிட மிருந்து இன்னொரு ஆயிரம் ரூபாயை அபகரித்துக் கொண்டார். எவ்வாறெனில், பங்களாவை தமது பேரில் வாங்கினால் அது 9500 ரூபாய்க்குக் கிடைக்குமென்று அவர் முன்னரே சொல்லி யிருந்தார். அது இப்போது பெருந்தேவி யம்மாளின் பேரில் வாங்கப்பட்ட தாகையால், அதனால் கப்பல்கார சாய்பு இன்னொரு ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கேட்பதாகச் சொல்லி மேனகாவின் பெட்டியிலிருந்த நகைகளில் சிலவற்றை விற்கச் செய்து மேலும் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு பத்திரத்தை 10,500 ரூபாய்க்கு எழுதி முடித்தார். கப்பல்கார சாயபுவைப் போல் வேஷம் போட்ட முகம்மதியனுக்கு அந்தப் பணத்திலிருந்தே அவர்

சன்மானம் வழங்கினார். நிற்க, அந்தப் பங்களாவின் வாடகைக்காக நூற்றைம்பது ரூபாயை நாகைப்பட்டணத்துக்கு இரகசியமாக மணியார்டரும் அனுப்பிவிட்டார். மிகுதிப் பணத்தை அவர் தமது செலவுக்காகப் பத்திரமாக வைத்துக் கொண்டார். வராகசாமியை அழைத்துவந்து, கும்பகோணம் வரதாச்சாரியாரின் பெண்ணை அவனுக்கு மணம்புரிந்து வைத்துவிட்டு, மறுநாளே எங்கேயாகிலும் ஓடிப்போக நினைத்து ஐயர் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். தாம் மேனகாவை விற்றதும், ஒரே இரவில் பதினாயிரம் ரூபாயைப் பறிகொடுத்ததும், தண்டவாளத்தில் இரவு முற்றிலும் நரகவேதனை அநுபவித்ததும், தெய்வ ரம்பையைப் போலத் தோன்றிய தாசி கமலத்தை அடைய விருந்த பெரும் பாக்கியம் தமக்குக் கிட்டாமல் தடைப்பட்டுப் போனதும், தாம் பிறகு பொய்ப் பத்திரம் செய்ய நேர்ந்ததும் ஒன்றன் பின்னொன்றாக அவரது மனத்தில் தோன்றி அவரை ஓயாமல் வதைத்தன வேனும், அவர் அவற்றை ஒரு சிறிதும் வெளிக்காட்டாமல், அவர்களோடு கூடவிருந்து நாட்டியமாடும் தேவடியாள் களுக்குப்பின்னால் தொடர்ந்து சென்று பாட்டுப்பாடித் தாளம்போடும் நட்டுவனைப்போல நடித்து வந்தார்; பெருந்தேவியம்மாள், கோமளம் ஆகிய இருவருடன் "நிலாப்பூச்சி", "நிழல் பூச்சி", "ஒளிந்து பிடித்தல்" முதலிய விளையாட்டுகளை நடத்தினார். பெருந்தேவியம்மாள் தன்னை முற்றிலும் மறந்தவளாய் வாய் ஓயாமல் ஜாவளிப் பாட்டுகளை வாரி வாரி, சண்டமாருதமாய் வீசிக் கொண்டே இருந்தாள். கோமளம், தனக்குத் தென்னை மரத்தில் ஏறத் தெரியுமென்பதை மற்ற இருவருக்கும் எதிரில் நிதரிசனமாகச் செய்து காட்டி தோள் தட்டினாள். தாமே பெரியவ ரென்றும், தமது புத்திசாலித்தனத்தினால், பெருத்த தந்திரம் செய்து, ஒரு நிமிஷத்தில் தாம் அபாரமான பணக்காரராக மாறிவிட்டதை நினைத்தும் அவர்களிருவரும் கரைகடந்த பெருமை பாராட்டிக் கொண்டனர்.

அவ்வளவு விசாலமான மாளிகையில் தாம் மாத்திரம் தனிமையாக இருப்பதில் சுகமில்லையென்று நினைத்து, சாமாவையரையும் அவரது மனைவியோடு அங்கு வந்து இலவசமாகக் குடியிருக்கும்படி அவர்கள் அநுமதி கொடுத்து விட்டனர்.

அவர்கள் அங்கே குடிபுகுந்த பிறகு நான்கு நாட்களில் ஒரு முகூர்த்த நாள் இருந்தது. வரதாச்சாரி முதலியோரை வரவழைத்து அன்றைய தினம் **நிச்சயதார்த்தம்** நடத்துவ தென்றும், அதற்கு மூன்றாம் நாள் திருப்பதியில் கலியாணத்தை முடித்துவிட வேண்டு மென்றும் அவர்கள் நிச்சயித்தனர். அதற்காக, உடனே வராகசாமியை வைத்தியசாலையிலிருந்து வரவழைக்க நினைத்து டாக்டரிடம் சாமாவையரும், பெருந்தேவியம்மாளும், இரண்டு நாட்களுக்கு முன்னரே சென்று விட்டனர்; தாம் கடற்கரையோரத்தில் பங்களா வாங்கி யிருப்பதால், அதற்குள் வீசும் நல்ல காற்றினால் வராகசாமி பங்களாவில் சீக்கிரம் குணமடைவானென்று தெரிவித்துக் கொண்டனர். வராகசாமியின் முழங்காற் புண் அப்போதும் ஆறாது இருந்தமையாலும், அவனது உடம்பில் இரத்தமே இல்லாமையால் அவன் அப்போதும் மெலிந்த நிலைமையில் இருந்தமையாலும், அவனோடு இரவு பகலாய் வெள்ளைக் காரப் பணிமகளிருந்து மருந்துகள் கொடுத்துவர வேண்டியது அவசியமாக இருந்தது. ஆதலால், டாக்டர் அவனை அனுப்ப மறுத்து விட்டார். இவர்கள் அவ்வளவோடு விடாமல் மேலும் வற்புறுத்தினர். மறுநாள் வராகசாமியின் தகப்பனாருக்குச் சிரார்த்த தினமென்றும், அதற்கு அவன் வந்தே தீர வேண்டு மென்றும் அவர்கள் உடனே பொய்யுரை மொழிந்தனர்; வராகசாமி முழுவதும் குணப்படும் வரையில் அந்த வெள்ளைக்காரப் பணிப்பெண் தமது பங்களாவில் அவனோடுகூட விருக்கலாமென்றும், அவளுக்காகும் செலவைத் தாமே கொடுத்து விடுவதாகவும் ஒப்புக்

கொண்டனர். துரையும் அதற்கு இணங்கினார். பெருந்தேவி, கோமளம், சாமாவையர் ஆகிய மூவரும் பங்களாவில் குடி புகுந்த தினத்திற்கு நான்காம் நாளே, வராகசாமியை அழைத்து வரக் குறிக்கப்பட்ட தினம். அன்று பகலிலேதான் சாமாவை யருக்குப் பெருத்த விருந்து நடந்தது.

அன்று அம்மூவரும் விலாப்புடைக்கத் தின்றபின் சோபாக்களில் உல்லாசமாக உட்கார்ந்துகொண்டனர். மின்சார விசிறிகள் யாவும் சுழன்று ஜிலு ஜிலென்று குளிர்ந்த கடற் காற்றை இறைத்து தேவியம்மாள் சாமாவையரைப் பார்த்து "இவ்வளவு பெரிய பங்களா இருப்பதற்கு, ஒரு மோட்டார் வண்டி இல்லாமற் போனால், கௌரவப்படாது. அடே சாமா! போனால் போகிறது. சம்பந்தி ஐயங்கார் கொடுக்கப்போகிற பதினாயிரம் ரூபாயில், ஐயாயிரம் ரூபாயில் ஒரு மோட்டார் வண்டி வாங்கி விடுவோம். நீ இப்போதே நல்ல வண்டியாகப் பார்த்துப் பொறுக்கி வை. கலியாணத்தை முடித்துக் கொண்டு நாம் திருப்பதியிலிருந்து வந்தவுடன், மோட்டார் வண்டியும் வந்து சேரவேண்டும்; நாம் உலாவப்போன வேளைகள் தவிர மற்ற வேளைகளில் வராகசாமியும், பங்கஜவல்லியும் சவாரி போய் சுகப்படட்டும். அவளுடைய அப்பா கொடுக்கும் பணத்தால் வாங்கும் மோட்டார் வண்டியை அவள்தான் முதலில் அநுபவிக்க வேண்டும்" என்றாள்.

**கோமளம்:-** ஏனடி அக்கா! நாம் ஒரு காரியம் செய்வோமே? நாம் இரவில் வந்திறங்கின உடனே பெண்ணையும் பிள்ளை யையும் நம்முடைய மோட்டார் வண்டியிலேயே வைத்து சின்ன மேளம், பெரிய மேளம், பாண்டு வாத்தியம், வாண வேடிக்கை முதலியவைகளுடன், ஊர்வலமாக அழைத்து வந்தால், அது எவ்வளவு அழகாயிருக்கும்! அப்படிச் செய்வோமே?

**பெருந்தேவி:-** (சந்தோஷத்தோடு) ஆமாடா சாமா! அப்படியே செய்துவிடுவோம். சம்பந்தி ஐயங்கார் நிச்சயதாம் பூலத்தின் போது பணத்தை இங்கேயே கொடுக்க மாட்டாரோ?

**சாமா:-** அவர் பெருத்த லக்ஷாதிபதி; எந்த நிமிஷத்திலும் அவரிடம் இருபதினாயிரம் முப்பதினாயிரம் கையிருப்பு இருந்து கொண்டே இருக்கும். ஆனால், அவர் முகூர்த்தத்தின் போதுதான் பணத்தைச் சம்பாவனை செய்து கொடுப்பார். அதுதான் ஒழுங்கு; அதற்கு முன் கேட்பது மரியாதைக் குறைவு. அவர்கள் நம்மைப் பற்றி இழிவாக நினைத்துக் கொள்வார்கள். ஆனால், நாம் ஒரு காரியம் செய்யலாம். நமக்கு ஒரு மோட்டார் வண்டி வேண்டுமென்று கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்து விடுவோம்; நாம் வரும் தேதியில், அதை இரயிலடியில் கொண்டு ஒப்புவித்துவிட்டு அவ்விடத்திலேயே பணத்தை வாங்கிக்கொள்ளும்படி அவர்களுக்கு எழுதி ஏற்பாடு செய்து கொள்வோம். முன் பணம் வேண்டுமானால் நூறு ஐம்பது கொடுத்து வைப்போம்.

**பெரு:-** அதுவும் நல்ல யோசனைதான். சம்பந்தி ஐயங்கார் ஒரு வேளை பணம் கொண்டுவரத் தவறிவிட்டால். நாம் கொடுக்கும் முன் பணம் போய்விடுமோ?

**சாமா:-**சரி; நல்ல பேச்சு! பணமில்லாமல் அவர் ஏன் வருவார்? சூரியன் தெற்கு வடக்காகப் போனாலும், அவர் சொன்ன சொல்லை மீறி நடக்கமாட்டார். அவர் நம்மைப்போல் நித்திய தரித்திரமா! (சாமாவையர் கண்ணைச் சிமிட்டிப் புன்னகை செய்துகொண்டு) ஆனால், இனிமேல் உங்களை நான் நித்திய தரித்திரமென்று சொல்லக் கூடாது. நீங்கள் பெருத்த பணக்கார ராய்விட்டீர்கள். என்னைப் போல நித்தியத் தரித்திரமா என்று சொல்வதே சரியானது; பெருந்தேவியம்மாள் மோட்டார் வண்டி வாங்கி விட்டால், தினந்தினம் சவாரிதான்; தானும், தங்கையும், நாட்டுப் பெண்ணுமாக, ஊரை இரண்டாக்கி விட்டு வருவாள். அவளை அப்புறம் கையால் பிடிக்க முடியுமா? ஒரு நாளைக்கு நம்மை இந்த மோட்டார் வண்டியில் உட்கார வைப்பாளா? வைக்கவே மாட்டாள். கோமளம் எங்களோடெல்லாம் பேசக் கூட மாட்டாள்; பெருமை யடித்துக் கொள்ளுவாள்.

**கோமளம் :-** (மிகவும் சந்தோஷமாகவும் உற்சாகத் தோடும்) அடே சாமா! நீ எப்போதும் உன்னுடைய அற்ப புத்தியை விடுகிறதே இல்லை. இப்போது பங்களாவை வாங்கியவுடனே முதலில் யாரைச் சரிசமானமாக அழைத்துக் கொண்டு வந்தோம்? யாருக்கு விருந்து நடத்தினோம்? அதை நீ நினைக்கவில்லையே? நீ இல்லாமல் ஒரு நிமிஷம்கூட எங்களுக்குப் பொழுது போகுமாடா? போடா பைத்தியக் காரா! அதென்ன சின்னச் சின்னப் பேச்சு சிங்காரப் பேச்சுப் பேசுகிறாயே! எங்களுக்கு இவ்வளவு ஐசுவரியம் வந்து விட்டதே என்று பொறாமைப் படுகிறாயோடா?

**பெரு:-** சேச்சே! சாமாவை அப்படி நினைக்காதேடி! ஆயிரம் பேர் இருந்தாலும் நம்முடைய சாமாவைப்போல் ஆவார்களா? அசட்டுத்தனமாக உளறாதே! அடே சாமா; உனக்கேன் இந்தச் சந்தேகம்? பங்களாவை வாங்கினால் என்ன? மோட்டாரை வாங்கினால் என்ன? எல்லாம் யாரால் வந்தது? நீ இல்லாதிருந்தால் இதெல்லாம் எப்படி வரும்? உன்னை மறந்தால் சாப்பாடு அகப்படுமா? நாங்கள் நன்றி கெட்ட பன்றிகளென்று நினைக்காதே; நாங்களுமென்ன டிப்டி கலெக்டர் வீட்டாரைப்போல அற்பர்களா, அகம்பாவம் கொண்டவர்களா?

**கோமளம்:-** அதனாலேதான் ஈசுவரன் டிப்டி கலெக்டர் வாயில் பக்காச் சேர் மண்ணை வாரிப் போட்டுக் குத்தி விட்டான். அவனுடைய உத்தியோகம் போய்விட்டது. வாய்க்கரிசிக்குக்கூட வழியில்லாமல் திருடன், வீட்டைத் துடைத்துக்கொண்டு போய்விட்டான். தான் அழகிலே சிறந்த பவளக்கொடி என்று கருவங்கொண்டு மினுக்கிய தேவடியாள் முண்டையான தங்கத்தின் காது மூக்குகளையெல்லாம் அறுத்து சூர்ப்பனகா பங்கம் செய்துவிட்டான். என்ன இருந்தாலும் மனிதருக்கு இவ்வளவு அகம்பாவம் உதவாது.

**பெரு:-** அவள் இத்தனை நாள் பிழைத்தாளோ? மாண்டு போனாளோ? நீ இதைக் கொண்டு திருப்தி யடைகிறாயே! எனக்கு மாத்திரம் இன்னமும் திருப்தி யுண்டாகவில்லை. நடந்ததெல்லாம் சரிதான். அந்தக் கனகி முண்டை திருடன் கையில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டாளே. அதுதான் என் மனசுக்குப் பெருத்த குறையாக இருக்கிறது. திருடன் அந்தக் கனகி முண்டையின் புடவையைப் பிடுங்கிக் கொண்டு திரௌபதி வஸ்திராபஹரணம் செய்து அப்படியே திகம்பரமாக நாற்சந்தியில் லாந்தர் கம்பத்தில் கட்டிவிட்டுப் போயிருந்தால் எனக்குப் பரம சந்தோஷமாக இருக்கும்! ஜனங்கள் வந்து வேடிக்கை பார்ப்பார்கள்.

**கோம:-** அந்தச் சமயத்தில், நான் போகவேண்டும்; காரி எச்சிலை அவளுடைய முகத்தில் துப்பிவிட்டு வரவேண்டும். ஏனடா சாமா! அவனுக்கு டிப்டி கலெக்டர் உத்தியோகம் தொலைந்து போய்விட்டது. இடுப்பிற்குத் துணிகூட வைக்காமல் திருடன் மழுங்கச்சிரைத்து விட்டானே; இனிமேல் பிண்டத்துக்கு அவன் என்னடா செய்வான்?

**சாமா:-** அந்த வேலை நமக்கெதற்கு? அவர்களுடைய சம்பந்தம் ஒழிந்துபோய்விட்டது. உடனே நமக்கு நல்ல காலமும் வந்து விட்டது. அவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன?

**பெரு:-** அந்தக் கனகி முண்டையின் அகம்பாவம் இன்னம் குறைந்திருக்காது. அவளும் அவனும் இந்த ஊருக்கு வர வேண்டும்; நம்முடைய பங்களா வாசலில் நின்று பிச்சை கேட்க வேண்டும். என் கையாலேயே ஒரு பிடி அரிசி போட்டுவிட்டு, சம்பந்திகளே! சௌக்கியமா? எங்கள் வாசல் பெருக்க ஒரு வேலைக்காரியும் மோட்டார் துடைக்க ஒரு ஆளும் வேண்டும். நீங்கள் வருகிறீர்களா என்று வயிற்றெரிச்சல் தீரக் கேட்டுவிட்டு வருவேன்.

**கோம:-** மேனகா இருந்தாலாகிலும் அவர்கள் பட்டணத்துக்கு வருவார்கள். இனிமேல் அவர்கள் இந்த ஊருக்கே வரமாட்டார்கள்.

**பெரு:-** மேனகா சிங்கப்பூரிலிருக்கிறாளோ, அல்லது கப்பலில் போய்க்கொண்டிருக்கிறாளோ? அவளை இப்போது பார்த்தால் நன்றாயிருக்கும். அவள் துலுக்கச்சியைப்போல துப்படியால் மூடிக்கொண்டிருப்பாள்.

**கோம:-** (சந்தோஷத்தினால் குதித்து) ஆமடா சாமா! அவளைத் துலுக்கச்சியாக்கினால், என்ன பெயர்வைத்து அவளைக் கூப்பிடுவான்?

**பெரு:-** அவளுக்கு துடப்பக்கட்டை பீபீ என்று பெயர் வைத்தால், அதுதான் அழகா யிருக்கும்; நைனாமுகம்மதுவின் மேல் விலாசம் உனக்குத் தெரிந்தால், அவனுக்குக் கடிதமெழுதி அவளுக்கு இந்தப் பெயரை வைக்கச் சொல்.

**கோம:-** ஆமா! அவள் இத்தனை நாள் துலுக்கன் வீட்டில் இருக்கிறாளே; ஆட்டுக்கறி, மாட்டுக்கறி யெல்லாம் தின்று தானே இருப்பாள்!

**பெரு:-** சந்தேகமென்ன! இத்தனை நாள் அவளுடைய ஜென்மம் கெட்டுப்பாழாய்ப் போயிருக்கும். நானாயிருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு முதல் நாளே உயிரை விட்டிருப்பேன். அந்த மானங்கெட்ட முண்டை பறையன் வீட்டில் கூட சோறு தின்று விட்டு வந்து விடுவாள்.

**கோம:-** அவள் இனி மேல் எப்படியாவது போகட்டும். வராகசாமியைப் பிடித்த சனியன் ஒழிந்தது; நமக்குப் பங்களா வந்தது. நல்ல காலமும் பிறக்கப்போகிறது. புதிய நாட்டுப் பெண் வரப்போகிறாள். அவளால் பெருத்த சொத்தும் கிடைக்கப் போகிறது.

**கோம:-** புதிதாய் வரப்போகிறவள் எப்படி இருப்பாளோ! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாய்ப் போகாமல், அவளாவது சரியாக இருக்க வேண்டுமே. இதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது.

**பெரு:-** ஏனடா சாமா! எனக்கு ஒரு யோசனை தோன்று கிறது. அப்படியே செய்துவிடுவோமே? நம்முடைய வராகசாமியோ இப்போது முன்மாதிரி இல்லை. தானே வீட்டுக்கு எஜமான் என்பதை அவன் இப்போது காட்ட ஆரம்பித்து விட்டான். அதற்கு அநுகூலமாக புதுப் பெண்டாட்டியும் அவனுக்குத் தலையணை மந்திரோபதேசம் செய்பவளாயிருந்தால், நம்முடைய ஆட்டம் ஒடுங்கிப் போகும். ஆகையால், அவர்கள் இரண்டு பேரையும் நாம் மருந்தினாலாவது, மந்திரத்தினாலாவது வசியப்படுத்தி விடுவோம். நைனா முகம்மது வீட்டுக்கு வந்த மலையாளத்து மந்திரவாதியை அழைத்துக் கொண்டு வருகிறாயா? அவனுக்கு நூறு இருநூறு கொடுத்துக் காரியத்தை முடித்துக்கொள்வோம்.

**கோம:-** (சந்தோஷமடைந்து) ஆமடி; அதுதான் நல்ல யோசனை; அப்படியே செய்துவிடுவோம். பின்னால் மேனகாவின் சங்கதி வெளியானால்கூட வராகசாமி நம்மை ஒன்றும் செய்யமாட்டான். நாம் சொல்வதைப்போல அடங்கி நடப்பான்.

**சாமா:-** இந்த யோசனை எனக்கு இரண்டு நாளைக்கு முன்னதாகவே தோன்றியது. உடனே நான் நைனா முகம்மதுவின் வீட்டுக்குப் போயிருந்தேன்; அவன் வீட்டில் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். மந்திரவாதி அங்கே காணப்படவில்லை. வேறு எங்கே இருக்கிறானென்பதும் தெரியவில்லை; இன்னொரு தரம் போய் விசாரித்துப் பார்க் கிறேன். இனிமேல் வராகசாமி வந்துவிடப் போகிறான். நாம் எந்தக் காரியத்தையும் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும்.

கோமளம்! மணி எவ்வளவு என்று பார்; என்னைச் சரியாக ஐந்து மணிக்கு டாக்டர் வரச் சொன்னார்.

**கோம:-** ஏனடா சாமா! இப்போது வராகசாமி வரும்போது, கூடவே அந்த வெள்ளைக்காரத் தாதியும் வருவா?

**சாமா:-** ஆம்.

**கோம:-** அவளுக்கு நாம்தான் சாதம் போடவேண்டுமா?

**பெரு:-** அந்தப் பறைக்கழுதைக்கு நாமேன் சாதம் போடுகிறது? கூடப்பிறந்தவர்களான நமக்கில்லாத அக்கறையும், பொறுப்பும் வழியில் போகிற சிறுக்கிக்கு வந்து விட்டதோ? என்னவோ நமக்குக் காரியம் ஆகவேண்டுமே என்று அதற்கு ஒப்புக்கொண்டேன். அவள் வந்தால் இரண்டு நாளைக்கு ஒரு மூலையில் விழுந்து கிடந்து விட்டுத் தொலையட்டும். போன ஜென்மத்தில் அவளிடம் நாம் கடன் பட்டிருக்கிறோம். அதை அவள் வாங்கிக் கொண்டு போகட்டும்.

**கோம:-** அடே சாமா! மணி 4.30 ஆகிறது.

**சாமா:-** சரி; நான் போய் வராகசாமியை அழைத்துக் கொண்டு இன்னம் அரைமணியில் வருகிறேன்- என்று சொல்லி விட்டு வெளிப்பட்டார். அதன் பிறகு பெண்டீருவரும் மிகவும் ஆவலோடு வழி பார்த்திருந்தனர். சரியாக ஐந்தேகால் மணியாற்று. வாசலில் மோட்டார் வண்டி வந்த ஓசை கேட்டது. உடனே சகோதரிமாரிருவரும் குதித்துக் கொண்டு வெளியில் ஓடினர்.

★★★★★★★★★★

## 26 - வது அதிகாரம்

# பழம் நழுவி பாலில் விழுந்தது!

**வா**சலில் வந்து நின்ற மோட்டார் வண்டியில் வைக்கப் பட்டிருந்த ஒரு தொட்டிலில் வராகசாமி படுத்திருந்தான். சாமாவையர் வண்டி ஓட்டுகிறவனுக்கருகில் உட்கார்ந் திருந்தார். பின் புறத்திலிருந்த முக்கியமான ஆசனத்தில் டாக்டர் துரைஸானியும், வெள்ளைக்காரப் பணிமகளும் உட்கார்ந் திருந்தனர். வண்டி உள்ளே வந்து நின்றவுடன் அவர்கள் யாவரும் கீழே இறங்கினார்கள். வராகசாமி இருந்த தொட்டில் உடனே கீழே இறக்கப்பட்டு உட்புறத்திலிருந்த ஒரு வசதியான அறைக்குக் கொண்டு போகப்பட்டது. அங்கிருந்த ஒரு கட்டிலில் வராகசாமி மெல்ல விடப்பட்டான். அவர்களோடு ஏராளமான மருந்துகளும் வந்து சேர்ந்தன. அப்போது டாக்டர் துரைஸானி வராகசாமியின் நாடியைப் பிடித்துப் பார்த்தபின் சில மருந்துகளைத் தயாரித்துப் பருகுவித்தாள். அவனுடன் எவரும் அதிகமாகப் பேசக்கூடா தென்று கண்டிப்பாகக் கூறினாள். பணிமகளை நோக்கி, சாப்பாட்டுக்குப் போகும் வேளைகள் நிற்க, மற்ற வேளைகளில் வராகசாமியை விட்டு அகலாமலிருந்து மணிக் கணக்கின்படி மருந்துகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் படி அவளிடம் கூறிவிட்டு சாமாவையர், சகோதரிகள் ஆகிய மூவரையும் அவ்வறையி லிருந்து வெளியேற்றிவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றனள்.

வராகசாமியின் உணர்வு, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே நன்றாகத் தெளிவடைந்திருந்தமையாயினும், முழங்காலில் எலும்பு முறிந்துபோன இடத்தில் இன்னமும்

புண் ஆறாமலிருந்தது. அவனது தேகத்தில் இரத்தமே சிறிதும் இல்லாமற் போயிருந்தமையால், அவன் தனது தலையை நிமிர்த்தவும் வல்லமையற்றுச் சோர்ந்து சோர்ந்து படுத்தான். அத்தகைய கேவலமான நிலைமையில் அவன் வைத்திய சாலையில் கட்டிலிலிருந்து தொட்டிலுக்கு நகர்த்தப் பட்டும், பங்களாவுக்கு வந்தவுடன் தொட்டிலி லிருந்து கட்டிலிற்கு நகர்த்தப் பட்டும், வண்டியின் ஓட்டத்தினால் அசைக்கப் பட்டும் மிகவும் அதிர்ச்சி யடைந்தமையால், டாக்டர் துரைஸானி பங்களாவைவிட்டுப் போன போது அவன் கண்களை மூடி உறங்கிக்கொண்டிருந்தான். தாங்கள் தாராளமாக வராகசாமி யுடன் பேசலாமென்னும் ஆவலோடு ஓடிவந்த சகோதரிமார் இருவரும், இரண்டு வெள்ளைக் காரிகளும் அவனைக் கட்டிக்காத்துத் தம்மை அருகில் நெருங்கவிடாமல் அதிகாரம் செய்ததைக் கண்டு கோபமடைந்து முகத்தைச் சுளித்துக் கொண்டு அப்புறம் போய்விட்டனர். வராகசாமி யோடு கூட தனிமையில் விடப்பட்டிருந்த வெள்ளைக்காரப் பணிமகள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மிகவும் கவலையோடும் சிரத்தையாகவும் வராகசாமியைக் கவனித்துக் கொண்டும், அவனது கைகளையும் கால்களையும் அன்பாக வருடிக் கொண்டும், அவன் விழித்தபோது அவனுடன் இனிமையாகப் பேசிக்கொண்டும் இருந்தாள். அவள் சிறிதும் கூசாமல் வராகசாமியின் உடம்பைத் தொட்டுத் தடவிக் கொடுத்துக் பெண்டாட்டியைப் போல அவனுக்குரிய காரியங்களை யெல்லாம் செய்ததையும், அவன் சிறிதும் வெறுப்பின்றி அவைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டதையும், அவள் அதிரூபலாவணியம் வாய்ந்த கந்தருவ ஸ்திரீயாயிருந்ததையும் கண்ட சகோதரிகள் இருவரின் மனதிலும் பொறாமைத்தீ மூண்டது. யாவற்றிற்கும் உரிமையுடைய தாங்கள் தூரத்தில் நிற்பதும், எவளோ அன்னியப் பெண்ணொருத்தி அவனோடு நிரம்பவும் அன்னியோன்னியமாகப் பழகி இணைபிரியா

திருப்பதையும் காண, அவர்களது வயிறு பற்றி எரிந்தது. எவ்வாறாயினும், அந்த வெள்ளைக்காரியை அதிசீக்கிரமாக வெளியில் ஓட்டிவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்ட சகோதரிமார் இருவரும், அவர்களிருந்த அறைக்கு அடிக்கடி வந்து அவர்கள் என்ன செய்கிறார்களென்று பார்ப்பதும், கூடிக்கூடித் தமக்குள் இரகசியம் பேசுவதும், கதவிற்கு வெளியில் மறைந்திருந்து அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்பதும், வெள்ளைக்காரப் பெண்ணிடம் கடுகடுத்துப் பேசுவதுமா யிருந்தனர். வராகசாமி பங்களாவுக்கு வந்தபிறகு, அவனுக்கு வீட்டு உணவு கொடுக்கப் பட்டது. பெருந்தேவியும், கோமளமும், அவனுக்கு ஆகாரம் கொடுத்தபோது வெள்ளைக்காரப் பெண் வெளியில் அனுப்பப் பட்டாள். ஆதலின், அவள் அந்தச் சொற்ப காலத்திற்குள் தனது இருப்பிடத்திற்குச் சென்று தனது போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு வந்துவிடுவாள். அப்புறம் அவள் இரவு பகலாக வராகசாமிக்கு அருகிலிருந்து அவனது நோயை யாற்றி இன்புறுத்திய வண்ண மிருந்தாள். உலகிலுள்ள பெண்டீர் யாவருமே வஞ்சகரென்றும், விபசாரகுணம் உள்ளவரென்றும் நினைத்து வெறுப்படைந்து, பெண் வாடையே தன்மேல் வீசலாகாதென்று நினைத்திருந்த வராகசாமியின் மனதை அந்த அழகிய மடமங்கை தனது நற்குணத்தாலும், மனமார்ந்த உபசரணைகளாலும் முற்றிலும் மாற்றி அவனைப் புதிய மனிதனாக்கி விட்டிருந்தாள். அவனது மனைவி மேனகா நாடகக்காரனோடு ஓடிப்போனாளென்று அவன் நினைத் திருந்த எண்ணத்தையும் அவள் மாற்றிவிட்டாள். மேனகா எப்படிக் காணாமல் போனாளோ என்னும் ஒரு சந்தேகமே அவன் மனதிலிருக்கும்படி பணிப்பெண் செய்திருந்தாள். மேனகா காணாமற் போனதற்குச் சகோதரிகள் உத்திர வாதிகளோ, அல்லது மேனகாவே உத்திரவாதியோ, அல்லது வேறு யாராகிலும் உத்திரவாதியோ என்பதை அவன் தகுந்த

சாட்சியமின்றி அவசரப்பட்டு நிச்சயிக்காம லிருக்கும்படி கூறி நீதி போதித்து, அவனது எண்ணத்தைப் பணிப்பெண் மாற்றிவிட்டாள். அந்த நிலைமையில், வராகசாமி, தனது மனைவி காணாமற் போனதைப் பற்றி உண்மையான விவரம் எப்போது கிடைக்குமோ வென்றும், அவள் பிரிந்ததைப்பற்றி பெரிதும் வருந்தியும் மிகுந்த ஆவல் கொண்டிருந்தான். அந்த வெள்ளைக்கார மங்கையினிடம் ஆழ்ந்த பிரியமும் பட்சமும் அவனது மனதில் உண்டாகி, அது படிப்படியாக வேர் ஊன்றி விட்டன. அவள் நல்ல உத்தமி யென்றும், வெள்ளைக்கார ஜாதியில் பிறந்தவளானாலும் அருமையான குணம் வாய்ந்த பத்தினிஜாதிப் பெண்ணென்றும் வராகசாமி நினைத்தான். அவளது ஜாஜ்வல்லியமான அழகும் அவனது மனத்தை உருக்கி நெகிழ்வித்தது. ஒரு நிமிஷநேரம் அவளைக் காணாவிடில் அவனது மனம் சலிக்காது. தான் போஜனம் செய்த காலத்திலும், அவள் தன்னுடன்கூட இல்லாமல் போய் விடுகிறாளே என்று அவன் நினைத்து வருந்தினான். தனது ஆபத்துக் காலத்தில் தன்னைக் காப்பாற்ற வந்த தெய்வப் பெண்ணென்றே அவளை அவன் மதித்தான். அவளில்லாவிடில் தான் அத்தனை நாளைக்குள் வைத்தியசாலையிலேயே மாண்டுபோ யிருக்க வேண்டு மென்று அவன் நினைத்தான். டாக்டர் துரைஸானி, முன்னோர் அதிகாரத்தில், அந்தப் பெண்ணைக் கடிந்து வேறு அறைக்கு அவளை மாற்றுவதாக வெருட்டியபோது வராகசாமி அதைப் பற்றி மிகவும் துன்புற்றதாகச் சொல்லப்பட்ட தல்லவா; அதன் பிறகு அவள் துரைஸானியிடம் போய், அவளது கோபத்தைத் தணித்து அவனுடனிருப்பதற்கு அநுமதி பெற்று வந்தாள். அந்த நாள் முதல் அவர்களது நட்பு நிமிஷத்துக்கு நிமிஷம் கனிந்துகெண்டே வந்தது. கடைசியில் அவர்கள் பங்களாவிற்கு வந்தபோது இணைபிரியாத அந்தரங்க சகாக்களாக ஆயினர். அவளுடன் இருப்பதே அவனுக்குப் பரமபதமாக இருந்தது. அவனுக்கு

உபசரணை செய்வதே அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. தவிர, டாக்டர் துரைஸானி மேனகாவைப்பற்றிய விவரங்களை எப்படியோ அறிந்திருந்ததாக வராகசாமிக்குத் தோன்றியது ஆகையால், அந்தப் பெண்ணின் உதவியால் அந்த வரலாற்றைத் தான் கிரகிக்கலாமென்பதும் அவனது கருத்து; அவர்கள் பங்களாவுக்கு வந்து மூன்று நாட்களாயின. அந்த வடிவழகியின் விடாமுயற்சியால் அவனது புண்களும் அநேகமாக ஆறிப்போயிருந்தன. அவன் கட்டிலிலேயே எழுந்து உட்கார்ந்து ஒத்திகை பார்த்ததன்றி தரையில் காலை ஊன்றி நின்றும் பார்த்தான். முழங்காலில் இன்னமும் சிறிது நோவிருந்த தனால், அவன் படுக்கையை அதற்குள் விலக்கி விடக்கூடாம லிருந்தது; டாக்டர் துரையும், டாக்டர் துரைஸானியும் நாளுக்கொரு முறை அங்கு வந்து, அவனது நிலைமையை ஆராய்ந்து பார்த்து விட்டு, பணிமகளுக்குரிய உத்தரவுகளைச் செய்தும் போயினர்.

மூன்றாம் நாள் வராகசாமி ஆகாரம் உட்கொண்ட சமயத்தில், அந்தப் பணிப்பெண் தனது இருப்பிடத்திற்குப் போய்த் தனது போஜனத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்தாள். அவளது அழகிய முகம் வழக்கப்படி, அன்றலர்ந்த தாமரை மலரைப்போல இருந்தது. ஆனால், வராகசாமியின் நிலைமையில் ஒருவகையான மாறுபாடு உண்டாயிருந்தது. அவனது முகத்தில் பெருத்த விசனமும், கவலையும், ஆத்திரமும் காணப்பட்டன. அவனது தேகம் படபடத்துக் காணப்பட்டது. அந்தக்குறிகளை நுட்பமாக உணர்ந்து கொண்ட அந்தப் பெண்மணி அவன் மேனகாவைப்பற்றி நினைத்து வருந்து கிறான் என்று நினைத்துக் கொண்டு மெல்ல அருகில் நெருங்கி, அவனது நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "நாளுக்கு நாள் உங்களுடைய உடம்பு குணமடைவதைக்கண்டு சந்தோஷப்பட்டு வந்தேன். இன்று உடம்பு நிரம்பவும் படபடத்துத்

தோன்றுகிறதே! காரணமென்ன?" என்று விநயமாகக் கேட்க, வராகசாமி மிகவும் துயர மடைந்தவனாய், "என்னுடைய உடம்பு குணமடைவதைக் கண்டு எவ்வளவு சந்தோஷப் படுகிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு நான் விசனப்படுகிறேன். என்னுடைய வியாதி அதிகரிக்கக் கூடாதா என்று நான் சுவாமியை வேண்டுகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட பேதையான அந்த நங்கை தான் இல்லாத காலத்தில் சகோதரிகள் அவனிடம் ஏதோ கலகம் விளைந் திருப்பதாக உடனே நிச்சயித்துக்கொண்டு புன்னகை செய்தவளாய் அவனிடம் நெருங்கி, "சீக்கிரமாக உடம்பு குணமடைந்து போனால், உங்களுடைய மனைவியைத் தேடி, அவள் காணாமல் போன விவரத்தை ஆராய்ந்தறிய வேண்டு மென்று இதுவரையில் சொல்லிக் கொண்டிருந்த நீங்கள், இப்போது அதற்கு மாறாகப் பேசுகிறீர்களே! காணாமல் போனவளைப்பற்றி ஏதாகிலும் செய்தி கிடைக்காதா? ஏன் இப்படி வருந்தவேண்டும்? உடம்பு நன்றாகச் செவ்வைப் படும் சமயத்தில், இப்படி அலட்டிக்கெள்ளலாமா?" என்று கேட்டவண்ணம் அவனது காலைத் தொட்டு வருடினாள்.

அதைக்கண்ட வராகசாமியின் துக்கம் அதிகரிக்க, கண்களிலும் கண்ணீர் பொங்கி யெழுந்தது; "ஆகா! விஷயத்தை நான் என்ன வென்று சொல்லுவேன்! நினைக்க நினைக்க எனக்கே சகிக்கவில்லை. நீ அதைக் கேட்டால் ஆச்சரியமடைவாய்" என்றான்.

**பணிப்பெண்:-** அது, காணாமற் போன மனைவியைப் பற்றிய விஷயமா?

**வராக:-** இல்லை இல்லை; இவர்கள் எனக்கு வேறு கலியாணம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். நாளைக்கு நிச்சய தாம்பூலம் நடக்கப்போகிறதாம். இன்னும் ஐந்தாறு

நாட்களில் திருப்பதியில் கலியாணம் நடக்குமாம்; இன்றைக்குச் சம்பந்தி வீட்டாரும் பெண்ணும் வந்து விடுவார்களாம். இதற்காகவே இவ்வளவு அவசரமாக என்னைப் பங்களாவுக்கு இவர்கள் அழைத்துக் கொண்டு வந்தார்களாம் - என்றான்.

அதைக் கேட்ட பணிப்பெண் திடுக்கிட்டு திகைப்பும் வியப்புமடைந்தாள். பூரணச்சந்திர பிம்பத்தை மேகம் மறைப்பதைப்போல அவளது முகக்களை மறைந்தது. மனம் கொதித்தெழுந்ததாகத் தோன்றியது. என்றாலும், அவள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டவளாய், "உங்களுடைய உடம்பு இன்னும் சௌக்கியமாக வில்லையே. இதற்குள் உங்களைத் திருப்பதிக்கு எப்படி அழைத்துக் கொண்டு போகிறது? திரும்பவும் உடம்பு கெட்டுப் போகுமே; இந்தக் காரியத்தை இப்போது செய்யலாமா வென்பதை நீங்கள் முதலில் டாக்டர் துரையிடம் யோசனை செய்வது அவசிய மாகத் தோன்றுகிறது. சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும். உங்களுடைய உடம்பைத் தேற்றிக் கொண்டல்லவா கலியாணம் செய்து கொண்ட பின் நீங்கள் சுகமா யிருக்கலாம்" என்றாள்.

**வராக:-** எனக்குக் கலியாணம் செய்துகொள்ள விருப்பமிருந்தாலல்லவா, டாக்டர் துரையைக் கேட்கவேண்டும் என்கிற அவசியம் ஏற்படும். நான் இருக்கும் நிலைமையென்ன! முதல் பெண்டாட்டி காணமற்போய் பதினைந்து நாளாகவில்லை. அவள் உயிரோடிருக்கிறாளோ, மாண்டு போனாளோ வென்பது தெரியவில்லை. அவள் மாண்டு போனதாக வைத்துக் கொண்டாலும், அந்தத் தீட்டுக் கூட இன்னம் கழிந்திருக்காது. தவிர, முதல் பெண்டாட்டியால் எனக்கு நேர்ந்த துன்பமே இன்னம் நீங்காமல், நான் உயிருக்கு மன்றாடும் போது எனக்கு இன்னொரு பெண்டாட்டி வேண்டி

யிருக்கிறதா? என்னுடைய மேனகாவைப்போல எனக்குப் பெண்டாட்டி வரப்போகிறது மில்லை; அவளால் நான் படும் பாட்டைப்போலவும் எவரும் அநுபவிக்கப்போறதுமில்லை; இந்த நிலைமையில் எந்த மூடன் கலியாணம் செய்து கொள்வான்? - என்றான்.

அதைக் கேட்ட பணிமகள் பலவகையான எண்ணங் களால் வதைபட்டவளாய் அவனை நோக்கிப் புன்முறுவல் செய்து, "காணாமல் போன மேனகாவின் விஷயத்தில் உங்களுக்கு இவ்வளவு இரக்கமும், தயையும், தருமநினைவும் இருப்பதைக்காண சந்தோஷத்தினால் என் மனம் உண்மையில் அப்படியே பொங்கி யெழுகிறது. பெண் பிள்ளைகள் விஷயமாக நீங்கள் முன்பு கொண்டிருந்த நினைவுக்கு மாறாக நீங்கள் இப்போது பேசுவதைக் காண நான் அடையும் ஆநந்தத்துக்கு அளவே இல்லை. நான் இத்தனை நாள் உழைத்தது வீணாக வில்லை. மேனகாவுக்குப் பதிலாக நான் உங்களுக்கு மனமார்ந்த நன்றியறிதல் செலுத்துகிறேன். அப்படித் தங்களுக்கு மணம் வேண்டாமென்று தோன்றுமாகில், தங்களுடைய கருத்தைச் சகோதரிமாரிடம் தெரிவித்து விடுகிறதுதானே; இதைப்பற்றி வருந்தி உடம்பை ஏன் கெடுத்துக் கொள்கிறீர்கள்?" என்று மிகவும் நயமாகவும், அந்தரங்கமான அபிமானத்தோடும், அவன் ஆயாசப்படா விதமாகவும் கூறினாள்.

**வராக:-** அப்படி நான் சொல்லிக் கலியாணத்தை எளிதில் தடுத்துவிடக் கூடுமானால், நான் இவ்வளவு தூரம் கவலை அடைவேனா? இவர்கள் இன்னும் சில காரியங்கள் செய்திருக் கிறார்கள். இவர்களே பெண்ணைப் பார்த்துக் கலியாணத்தை நிச்சயித்து தேதியையும் குறித்ததன்றி, பெண் வீட்டாரிடம் வரதட்சணை ரூபாய் பதினாயிரம் வாங்கி அதைக் கொண்டு இந்தப் பங்களாவை விலைக்கு வாங்கிவிட்டார் களாம்.

இப்போது இவர்கள் கலியாணம் செய்ய இணங்கா விட்டால், வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; எங்களிடம் அவ்வளவு பணம் கிடையாது - என்றான்.

அதைக் கேட்ட வெள்ளை மடவன்னம் மேன்மேலும் அதிகரித்த ஆச்சரிய மடைந்தவளாய், "நீங்கள் இல்லாத காலத்தில் உங்களுடைய அநுமதியின்றி இவர்கள் இவ்வளவு பெருத்த காரியங்களை யெல்லாம் செய்திருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வெள்கைக்காரியாகிய நாங்கள் பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் கண்டு மனதாரக் காதலித்துச் சம்மதித்த பிறகே, கலியாணம் செய்ய எத்தினிப்போம். நீங்கள் பெண்ணைப் பார்க்கக்கூட இல்லை. உங்களுடைய சகோதரிமார்களாகிலும் பெண்ணைப் பார்த்தார்களா இல்லையோ! ஒருவேளை இந்தப் பதினாயிரம் ரூபாய் வருவதற்காகவே இதைச் செய்கிறார்கள் போலிருக்கிறது. அப்படியானால், நீங்கள் பதினாயிரம் ரூபாயைக் கலியாணம் செய்து கொள்வதாக அருத்த மாகிறதன்றி, ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளுவதாக அருத்தமாக வில்லை; இவர்களுடைய சொல்லுக்கு நீங்கள் கட்டாயமாக இணங்குவீர்களென்றே செய்திருக்கிறார்கள் போலிருக்கிறது" என்றாள்.

**வராக:-** ஆம்; அப்படித்தான் நினைத்துச் செய்திருக் கிறார்கள். அவர்கள் உண்மையில் என்னுடைய நன்மையை நாடியே இப்படிச் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி சந்தேகமில்லை; அவர்களுடைய விருப்பப்படி நான் இதுவரையில் எந்த விஷயத்தையும் செய்து வந்தேன். ஆனால், இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம், என்னுடைய எண்ணம் வேறாக இருக்கிறது. எனக்கு வேறு கலியாணம் செய்து கொள்ளவே ஆசை இல்லை. தவிர, இவ்வளவு சீக்கிரத்தில் கலியாணம் என்ற சொல்லைக் காதால் கேட்கவும் கூசுகிறது.

முதற் பெண்டாட்டி போன இடந் தெரியவில்லை. பதினைந்து நாளைக்குள் வேறே கலியாணம் செய்து விட்டார்களென்று ஊரார் சிரிக்க மாட்டர்களா?

**பணிமகள்:-** ஆம்; உண்மையான விஷயம்; அதுவும் தவிர, உங்களுடைய முதல் மனைவி, எவ்விதமான களங்கமும் அடையாமல் திடீரென்று உங்களிடம் வந்து சேருவாளானால், அவளை நீங்கள் வேண்டாமென்று சொல்லுவது தரும மாகுமா? அல்லது இரண்டு பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டு எமவாதைப் படத்தான் உங்களால் முடியுமா?

**வராக:-** இத்தனை நாள் கழிந்தபின் அவள் இனிமேலா வரப்போகிறாள். அவள் போனவள் போனவளே! எனக்கும் பெண்டாட்டி இருந்தாளா என்பது சொப்பனமாக அல்லவா போய்விட்டது. அவள் வருவாளென்கிற சந்தேகத்தினால், கலியாணம் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அப்படி அவள் வருவாளென்பது எனக்குத் தோன்றவில்லை.

**பணிமகள்:-** அடுத்த நிமிஷத்தில் என்ன நடக்கப் போகிற தென்பது நமக்குத் தெரியுமா? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் ஈசுவரன் மனது வைத்தால் இந்த அண்டமே ஒரு நொடியில் புரண்டுபோகுமே. உங்கள் மனைவி திரும்பி வருவதுதானா ஓர் அருமையான காரியம்; அவளும் நல்ல பதிவிரதையின் வயிற்றில் பிறந்த உத்தமியா யிருந்து, நீங்களும் நல்லகுணமுடைய மனிதரா யிருந்தால், ஈசுவரன் உங்கள் இரண்டு பேரையும் ஒரு க்ஷணநேரத்தில் கூட்டிவைப்பான். எனக்கு எப்போதும் மனிதர் சகாயத்தில் நம்பிக்கையே கிடையாது. ஈசுவரன் எல்லாவற்றையும் நமக்குத் தெரியாமல் நடத்திவைக்கிறா னென்பதே என்னுடைய நம்பிக்கை - என்றாள்.

அப்போது அவர்களிருந்த அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. முதலில் சாமாவையர் வந்தார்; பிறகு

வரதாச்சாரியாரும், இன்னும் மூன்று மனிதரும் வந்தார்கள். கடைசியில் பெருந்தேவியம்மாள் வாசற்படியில் நாணிக் கோணி நின்று, "அடே வராகசாமி! சம்பந்திகள் வந்துவிட்டார்கள்; உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றாள். வெள்ளைக்காரப் பணிப்பெண் திடுக்கிட்டெழுந்து தூரத்தில் மறைந்து நின்றாள்; வராகசாமிக்கருகில் நெருங்கிய சாமாவையர், "வராகசாமி! இதோ இவர்தான் உன்னுடைய மாமனார், மற்றவர்கள் இவருடைய பந்துக்கள். நிச்சய தாம்பூலத்துக்காக வந்திருக்கிறார்கள்" என்றார். அதைக் கேட்ட வராகசாமியின் மனதில் கூரிய அம்பு பாய்ந்ததைப்போல இருந்தது. அவன் கண்களை மூடிக்கொண்டு மயங்கித் தலையணையில் சாய்ந்து விட்டான். சாமாவையர் மேலும் இரண்டொருதரம் கூப்பிட்டு பார்த்தார். அவன் பேசவில்லை. "சரி பையன் அலுப்பாக தூங்குகிறான் போலிருக்கிறது. கொஞ்ச நாழிகை கழித்து வருவோம்" என்று சாமாவையர் மற்றவர்களை அழைத்துக் கொண்டு வெளியில் போய் விட்டார். அந்த வெள்ளைக்காரப் பணிப்பெண் திரும்பவும் வராகசாமியின் கட்டிலண்டை வந்து அவனது மயக்கத்தைத் தெளிவிக்க, அவன் கண்களைத் திறந்து, "போய் விட்டார்களா?" என்றான்; "போய்விட்டார்கள்" என்றாள் பணிமகள்.

வராகசாமி மிகவும் விசனமடைந்தவனாய், "அடுத்த நிமிஷம் என்ன சம்பவிக்குமோ வென்று நீ சந்தேகித்தாயே! இப்போது என்ன சம்பவித்தது பார்த்தாயா? இவர்கள் ஏற்பாடு செய்தபடிதான் காரியம் நடக்கிறது. இந்தக் கலியாணத்தை எப்படி நிறுத்துவதென்பது தெரியவில்லை. நான் சொன்னால், இவர்கள் கேட்காமல் பிடிவாதம் செய்வார்கள். என்ன செய்வதென்பதே தோன்றவில்லை" என்றான்.

அதைக் கேட்ட அப் பெண்மணியும் சிறிது சிந்தனையிலாழ்ந்தவளாய், "இவர்கள் வந்து விட்டதனாலேயே

கலியாணம் நடந்துபோகு மென்பது என்ன நிச்சயம்; கைக்கெட்டியது வாய்க்கு எட்டாது போவதில்லையா? ஈசுவரனே துணை என்று அவனை நாம் முற்றிலும் நம்பி நல்ல வழியில் முயற்சிசெய்தால், அவன் நம்மை எப்படியும் காப்பான். நீங்கள் இதற்குள் நம்பிக்கையை இழக்க வேண்டாம். தைரியமாக இருங்கள்; இந்த விஷயத்தில் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நமது டாக்டர் துரைஸானிக்கு உங்களிடம் அந்தரங்கமான அன்பும் அபிமானமும் உண்டு. அவர்களை உடனே வரவழைத்து, விஷயத்தைத் தெரிவித்து, அவர்களுடைய உதவியை நாம் நாடுவோமானால், அவர்கள் ஏதாகிலும் தக்கயோசனை செய்து கலியாணத்தை நிறுத்தி வைக்கும்படி செய்வார்கள். உங்களுடைய குடும்ப விஷயங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அவர்களிடம் நீங்கள் பேசவேண்டாம். நானே பேசி காரியத்தை முடிக்கிறேன். அவர்களால் இந்தக் காரியம் முடியுமென்று எனக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிறது" என்றாள்.

**வராக:-** அது நல்ல யோசனைதான்; ஆனால் துரைஸானியை இப்போது யார் போய் அழைத்துக் கொண்டு வருகிறது?

**பணிப்பெண்:-** இதோ டெலிபோன் (Telephone) இருக்கிறதே! இந்த வழியாக நான் கூப்பிட்டு இப்போதே பேசுகிறேன் - என்றாள்.

அந்த இன்பவல்லியின் சமயோசிதமான கூரிய புத்தியைப் பற்றி அவன் மிகவும் மகிழ்ந்தவனாய், அப்படியே செய்யும்படி அநுமதித்தான்; அந்தப் பணிமங்கை, உடனே எழுந்துபோய் டெலிபோன் வாயிலாக டாக்டர் துரைஸானியுடன் பேசிவிட்டு வந்தாள்.

அப்போது அவர்களிருந்த அறையின் கதவு திறக்கப் பட்டது. "அண்ணா! அண்ணா!" என்று மெல்ல அழைத்துக்

கொண்டு கோமளம் உள்ளே நுழைந்தாள். அவளது இடது கையில் ஒரு தபாற் கடிதம் இருந்தது; வலது கையில் மைக்கூடும் பேனாவும் இருந்தன. வராகசாமி அவளைப் பார்த்து, "என்ன செய்தி?" என்றான்.

கோமளம், "இந்தத் தபாற் கடிதம் உனக்கு வந்திருக்கிறது. இது ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாம். தபால்காரன் உன்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு வரச் சொல்லுகிறான்" என்று கடிதத்தை அவனிடம் நீட்டினாள். அதைக் கேட்ட வராகசாமி, தனக்கு யாரிடத்திலிருந்து ரிஜிஸ்டர் கடிதம் வந்திருக்குமென்று யோசனை செய்து ஒரு சிறிது திகைப்படைந்தான். விபரமொன்றும் விளங்கவில்லை. அதை வாங்கி மேல் விலாசத்தைப் பார்த்தான். அது ஏதோ போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வந்திருப்பதாகத் தெரிந்தது. வராகசாமியின் ஆச்சரியம் கரைகடந்த தாயிற்று. அது எதைக் குறித்த கடிதம் என்பதை அறிய அவன் மிகவும் ஆவல் கொண்டான்; ரசீதில் அவன் உடனே கையெழுத்திட்டு அதை கோமளத்தினிடம் கொடுத்து அவளை அனுப்பியபின் கடிதத்தின் உறையைக் கிழித்து, உட்புறத்திலிருந்த காகிதத்தை விரைவாக வெளியில் எடுத்தான்; வெள்ளைக்கார மடந்தையும் அதிகரித்த வியப்பும் திகைப்பும் அடைந்து, கடிதத்தையும் அவனது முகத்தையும் மாறிமாறிக் கவனித்துக் கொண்டு அவனுக்கருகில் பணிவாக நின்று கொண்டிருந்தாள். அந்த உறைக்குள் ஒரு கற்றைக் காகிதங்கள் நூலில் வரிசையாகக் கோர்க்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அதை வராகசாமி பரபரப்போடு எடுத்துப் பிரித்து எல்லாவற்றிற்கும் மேலே இருந்த காகிதத்தைப் பார்த்தான்; அதன் தலைப்பில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

திருவல்லிக்கேணி ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ஐயர், வக்கீல் வராகசாமி ஐயங்கார் அவர்களுக்குக் கடிதம் - என்றிருந்தது.

அந்தக் கடிதம் தனக்கே வந்ததென்று தீர்மானித்துக் கொண்ட வராகசாமி அதிகரித்த வியப்போடு, மேலே என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று அறிய ஆவல் கொண்டு படிக்க வாரம்பித்தான்.

**கடிதம்**

**ஐயா!**

பெருத்த கற்றையாக அனுப்பப்பட்டிருக்கும் இந்தக் காகிதத்தைக்கண்டவுடன் உங்களுக்கு நிச்சயமாக ஆச்சரியமும் திகைப்பும் உண்டாகுமென்று நான் நம்புகிறேன். இது உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமான விஷயமாகையால், இதை அசட்டை செய்யாமலும் முற்றிலும் வாசித்து எனக்கு மறுமொழி எழுதுவீர்களென்று நம்புகிறேன். கீழே குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்களை நான் அறிந்து கொண்டது தெய்வத்தின் செய லென்றே தோன்றுகிறது. இந்த விஷயங்களை உங்களுக்குத் தெரிவித்தால், நீங்கள் இதனால் பெருத்த நன்மைகளை அடைவீர்களென்று நினைத்தே இதை நான் உங்களுக்கு அனுப்புகிறேன்.

ஐந்து நாட்களுக்கு முன் நான் என்னுடைய சொந்த அலுவலின் நிமிர்த்தமாய் தொளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிற்குப் போனேன்; உங்கள் வீட்டிற்குள்ளிருந்து ஒரு முகம்மதியன் வெளியில் வந்ததைக் கண்டேன். அவனுடைய வேஷமும், கபடப்பார்வையும் என் மனதில் உடனே ஒரு வகையான சந்தேகத்தை உண்டாக்கின. அவன் வாசலில் வந்தவுடன் திருடனைப்போல அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு தன்னுடைய கையிலிருந்த ஏதோ ஒரு காகிதத்தை மடித்து, சட்டைப்பைக்குள் இரகசியமாகச் சொருகி மறைத்துக் கொண்டான்; அந்தக் கண்டவுடன் என்னுடைய சந்தேகம் வலுத்தது; முற்றிலும் பிரம்மண ஜாதியார் வசிக்கும் அந்தத்

தெருவில் அவன் எதற்காக அந்த வீட்டிற்குள் நுழைந்திருப்பா னென்ற சந்தேகம் உண்டாயிற்று. அவன் ஒருவேளை பிச்சை கேட்கப்போய், ஏதாகிலும் நோட்டுகளை அபகரித்துக் கொண்டு வந்துவிட்டானோ என்னும் சந்தேகம் தோன்றியது. நான் அவனிடம் சென்று, "உள்ளே யாரைத் தேடிவிட்டு வருகிறீர்?" என்று கேட்டேன். அவன் தனக்கு அந்த வீட்டிலுள்ள வர்கள் அறிமுக மானவர்களென்றும், அவர்களிடம் ஒரு காரியமாக வந்து விட்டுப் போவதாயும் கூறினான். நான் உடனே அவனை என்னுடன் கூட அழைத்துக் கொண்டு உட்புறம் சென்றேன். அங்கே உங்களுடைய சகோதரிகளும் சாமாவையரும் இருந்தனர். அந்த முகம்மதியன் யாவனென்று அவர்களிடம் கேட்டேன். அவர்கள் அவன் யாவரோ பிச்சைக்காரன் என்றும், அவனைத் தங்களுக்குத் தெரியா தென்றும் சொல்லிவிட்டனர். என்னுடைய சந்தேகம் பெருத்த சந்தேகமாக மாறிவிட்டது. நான் உடனே அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய், அவனுடைய மூட்டை முதலியவற்றைச் சோதனை செய்து பார்த்ததில், அவன் ஒரு மந்திரவாதி என்பது வெளியாயிற்று. உங்களுடைய வீட்டிலிருந்து வந்தபோது அவன் சட்டைப் பையில் மறைத்துக் கொண்ட காகிதம் என்ன வென்று எடுத்துப் பார்த்தேன். அதில் இரண்டு கடிதங்கள் அகப்பட்டன. அந்தக் கடிதங்களை நாங்கள் படிக்கக்கூடாதென்று அவன் தடுத்தான். அதனால் என்னுடைய சந்தேகம் மிகவும் அதிகரித்தமையால், நான் அந்த இரண்டு கடிதங்களையும் உடனே படித்துப் பார்த்தேன். ஆகா! அவைகளைப் படித்தவுடன் என்னுடைய மனதில் உண்டான ஆச்சரியம் சொல்லிலடங்காததாய் விட்டது. அந்த இரண்டு கடிதங்களையும் இத்துடன் கோர்த்து உங்களுடைய பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். இரண்டு கடிதங்களி லொன்று, அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள ஜவுளி வர்த்தகம் நைனாமுகம்மது மரைக்காயரால் அவருடைய குமாஸ்தாவான உங்கள் அண்டை

வீட்டு சாமாவையருக்கு எழுதப்பட்டது. இரண்டாவது கடிதம், சாமாவையர், பெருந்தேவியம்மாள் ஆகிய இருவராலும் மேற்படி நைனாமுகம்மது மரைக்காயருக்கு எழுதப்பட்ட கடிதம்; இந்த இரண்டு கடிதங்களைப் படித்ததில், மேனகா என்னும் பிராமணப் பெண்ணை சாமாவையர், பெருந்தேவியம்மாள் ஆகிய இருவரும் மேற்படி நைனா முகம்மது மரைக்காயருக்கு விற்றுவிட்டு அவரிடம் பணம் வாங்கிக் கொண்டு வந்ததாகவும், அந்தப் பெண், அந்த முகம்மதியருடைய விருப்பத்திற்கு இணங்காமல் அவருடைய மனைவியின் உதவியால் தப்பித்து வேறொரு இடத்துக்கு வந்து விட்டதாகவும், அவளை அந்த மந்திரவாதியின் உதவியால் வசியப்படுத்தித் திரும்பவும் அழைத்துக்கொண்டு மரைக்காயர் சிங்கப்பூருக்குப் போய்விட வேண்டுமென்று முயன்றதாகவும் தெரிந்தன. அந்தப் பெண் பெருந்தேவியம்மாளுக்கு மகளென்பதும், சாமாவையருக்கு சகோதரி யென்பதும் குறிக் கப்பட்டிருந்தன. அவர்களிருவரும் வெவ்வேறு ஜாதி யாராகையால், அவர்கள் குறித்த உறவு முறைமை பொய்யான தென்று நான் உடனே நிச்சயித்துக் கொண்டேன். உண்மையில் அந்தப் பெண் யாவ ளென்பதை அறிந்துகொள்ள ஒருவகையான ஆசை உதித்தது. உங்களுடைய வீட்டிற்கு அடுத்த வீடுகளில் தந்திரமாக விசாரித்து உங்கள் மனைவியின் பெயர் மேனகாவென்று அறிந்துகொண்டேன். அப்போது எனக்கு இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது. சில நாட்களுக்கு முன் தஞ்சை டிப்டி கலெக்டர் துரையினிடத்திலிருந்து எங்களுக்கு ஒரு தந்தி வந்தது. அதில் தஞ்சை டிப்டி கலெக்டரான சாம்பசிவையங்கார் என்பவர் ரஜா இல்லாமல் இந்த ஊருக்கு வந்து உங்களுடைய மனைவியான அவருடைய பெண்ணை அழைத்துக் கொண்டு போனதாகவும், அது உண்மைதானா, வென்பதை இரகசியமாக விசாரித்துத் தெரிவிக்க வேண்டு மென்று எழுதி உத்தரவு செய்திருந்தார். அன்றைக்கு மறுநாள்

சாம்பசிவையங்காரே இந்த ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் மேற்படி தந்தியின் விஷயமாக நாங்கள் பேசியதிலிருந்து, அவர் சென்னைக்கு வரவில்லை யென்றும் பெண்ணை அழைத்துக் கொண்டு போகவில்லை என்றும் நாங்கள் உணர்ந்து கொண்டோம். அந்த விஷயமும் என்னுடைய நினைவுக்கு வந்தது. இவர்கள் மரைக்காயருக்கு விற்ற பெண், உங்களுடைய மனைவிதான் என்று நான் உடனே நிச்சயித்துக் கொண்டேன். அதன் பிறகு மேற்படி மரைக்காயர் வீட்டுக்குப் போனேன். அவர் நாகைப்பட்டணத்துக்குப் போயிருப்பதாக அங்கிருந்த வேலைக்காரன் கூறினான். அந்த மரைக்காயரின் மாமனார் சென்னைத் துரைத்தனத்தின் நிருவாக அங்கத்தினர்களில் ஒருவரான பெரியதம்பி மரைக்காயர் என்பதைக் கேள்விப் பட்டு அவரிடம் சென்றேன். அவரைக்கண்டு அவரிடம் இந்தக் கடிதங்களிற் குறிக்கப்பட்ட விஷயங்களைத் தெரிவித்து அவருடைய வீட்டில் உங்களுடைய மனைவி இருக்கிறாளா வென்று விசாரித்தேன். அவர் இந்தக் கடிதங்களில் காணப்பட்ட விஷயங்கள் உண்மையானவை யென்று சொன்னார். அவருடைய மகள், மேனகா வென்னும் பெண்ணை நடு இரவில் தமது பங்களாவுக்கு அழைத்து வந்தாள் என்றும், அவள் சில நாட்கள் வரையில் நோய் கொண்டு படுத்த படுக்கையாக தமது பங்களாவில் இருந்தாளென்றும், இராயப்பேட்டை வைத்தியசாலையின் டாக்டர் துரைஸானி அடிக்கடி வந்து சிகிச்சை செய்துவந்தாள் என்றும், துரைஸானியின் அனுமதிப்படி அவளும் தமது மகளான கோஷா ஸ்திரீயும் கடல் காற்று வாங்கும்படி மோட்டார் வண்டியில் கடற்கரைக்குப் போனார்களென்றும், அங்கே தற்செயலாக ஒருவர் மீது மோட்டார் வண்டி ஏறியதைக் கண்டு மேனகா மயக்கமடைந்தாளென்றும், அதன் காரணத்தை கேட்டறிந்த துரைஸானி நீங்களே மோட்டாரில் அறைபட்டவர்களென்று மேனகாவுக்குச் சொன்னதாகவும்,

அடுத்த தடவை துரைஸானி வந்தபோது உங்களுடைய சட்டைப்பையிலிருந்த இரண்டு கடிதங்களைக் கொணர்ந்து மேனகாவினிடம் கொடுத்ததாகவும், அவற்றில் தான் நாடகக்காரனோடு ஓடிப்போய்விட்டதாக பொய் எழுதப்பட்டிருந்ததைக் கண்டவுடன் உங்களுடைய மனைவி விவரிக்க முடியாத ஆத்திரமும், விசனமும் அடைந்தவளாகவும் கூறினார். உங்களுடைய மனைவி தனக்கு இவ்வளவு அவமானமும் அபகீர்த்தியும் வந்த பிறகு, தான் உங்களுடைய முகத்திலேயே விழிக்கக் கூடாதென்று நினைத்துக் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாக ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி வைத்துவிட்டு ஒருநாளிரவு அவருடைய பங்களாவை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் வெளியில் போய்விட்டார்களாம். பெரியதம்பி மரைக்காயர் பிறகு தமது ஆட்கள் பலரை விடுத்து கடற்கரை முதலிய இடங்களிலெல்லாம் தேடச் செய்தாராம். உங்களுடைய மனைவி அகப்படவில்லையாம். இந்த விஷயங்களை என்னிடம் தெரிவித்த மரைக்கா்யர், நாடகக்காரனால் எழுதப்பட்ட இரண்டு கடிதங்களையும், உங்களுடைய மனைவியால் கடைசியாக எழுதி வைக்கப்பட்ட துண்டுக் காகிதத்தையும் என்னிடம் கொடுத்து, அவற்றின் மேல் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படிக்கும் தங்களுடைய மனைவியை இன்னும் தேடிப் பார்க்கும்படிக்கும் உத்தரவு செய்தார்; உங்களுடைய மனைவியின் அங்க அடையாளங் களை நான் நன்றாக அறிந்துகொண்டு பட்டணம் முழுவதிலும் தேடச் செய்தேன்; அவள் எங்கும் காணப்படவில்லை. துண்டுக் கடிதத்தில் காணப்பட்டபடி கடலில் விழுந்து இறந்து போய் விட்டாளோ வென்னும் சந்தேகமே எனக்குத் தோன்றுகிறது. நாடகக்காரனால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இரண்டு கடிதங்களையும், உங்கள் மனைவியால் எழுதப்பட்ட துண்டுக் காகிதத்தையும் இதில் இணைத்திருக்கிறேன்.

இந்த விஷயத்தை நியாய ஸ்தலத்தில் விசாரணைக்குக் கொண்டுபோக உங்களுக்கு விருப்பமானால் தயவு செய்து எழுதுங்கள். நான் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறேன். இதனால் உங்களுடைய சகோதரிக்கும் தண்டனை கிடைப்பதன்றி உங்களுக்கும் பெருத்த அவமானம் ஏற்படும். இப்போது சிலருக்கே தெரிந்த இந்த இழிவான காரியம் பத்திரிகைகளில் அடிபட்டு ஊரூராய்ப் பரவும்; இதனால் உங்களுக்கு அவமானம் ஏற்படுமன்றி, எவ்விதமான அநுகூலமும், உண்டாகப் போகிறதில்லை. ஆனால், குற்றவாளிகளைத் தண்டித்தோமென்னும் ஒரு திருப்தி உண்டாகும் என்பதில் ஆக்ஷேபணையில்லை. நைனா முகம்மது மரைக்காயர் என்பவர் ஒன்றும் அறியாத சிறுவர்; துர்மந்திரியான சாமாவையருடைய போதனையால் அவர் இந்தக் காரியத் திற்கு உடன் பட்டார். என்றாலும், அவரைத் தண்டனைக்குக் கொண்டு வருவது நியாயமான காரியமே. ஆனால் அவரைத் தண்டனைக்குக் கொண்டு வருவதில், உங்களுடைய சகோதரியும் சிறைச்சாலைக்குப் போக நேரிடும்; உங்களுக்கு இழிவும் உண்டாகும். இவைகளைக் கருதி அவரைத் தண்டனைக்குக் கொண்டு வருவதற்கு நீங்கள் விரும்பமாட்டீர் களென்று நினைத்தே, உங்களுடைய அபிப்பிராயத்திற்கு இதை விட்டிருக்கிறேன். உங்களுக்கு விருப்பமானால், நான் உடனே நடவடிக்கை தொடங்குகிறேன்.

இந்த விஷயங்களைப்பற்றி நான் இரகசியமாகவே விசாரணை செய்தேன். செய்தபோது இன்னும் இரண்டொரு விஷயங்கள் வெளியாயின. அவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுவது அவசியம்.

நாடகக்காரனான மாயாண்டிப்பிள்ளை இந்த விஷயத்தில் உண்மையில் சம்பந்தப்பட்டிருக்கிறானா வென்பதைக் கண்டு

பிடிக்கும் நோக்கத்துடன், நான் வீராச்சாமிநாயுடு கம்பெனிக்குப் போய் விசாரணை செய்தேன். மாயாண்டிப்பிள்ளை தஞ்சையிலிருந்து ஒரு பெண்ணை இரகசியமாக அழைத்துக் கொண்டு போனது உண்மைதான் என்பதும், அவனுக்கும் இதற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்பதும் வெளியாயின. அந்த மாயாண்டிப்பிள்ளை வீராச்சாமிநாயுடு கம்பெனியின் வேலைக்கு வந்தபோது நாயுடுவுக்கு ஓர் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறான். அந்த ஒப்பந்தம் மாயாண்டிப்பிள்ளையின் கையால் எழுதப்பட்டு ரிஜிஸ்டர் கச்சேரியில் பதிவும் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப் பத்திரத்தை வாங்கி அதிலுள்ள எழுத்துக்களையும், உங்கள் மனைவியின் பெட்டியிலிருந்து அகப்பட்ட இரண்டு கடிதங்களிலுள்ள எழுத்துக்களையும் ஒத்திட்டுப் பார்த்தேன். இரண்டும் வெவ்வேறு மனிதரின் எழுத்தென்பது எளிதில் தெரிகிறது. இந்தக் கடிதங்கள் சாமாவையரால் சிருஷ்டிக்கப் பட்ட பொய்க் கடிதங்கள் என்னும் எண்ணம் என் மனத்தில் உண்டாயிற்று; ஓர் ஆளை அனுப்பி சாமாவையரைக் கொண்டு ஒரு கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு வரச் செய்தேன். அவருடைய எழுத்தும் வேறுமாதிரியாக இருந்தது. அவருடைய வீட்டில் இன்னம் வேறு ஆண்பிள்ளைகள் இருக்கிறார்களோ வென்று விசாரித்துப் பார்த்தேன். அவருடைய தம்பி ஒருவன் உத்தியோகமில்லாமல் இருப்பதாக உணர்ந்து, அவனைத் தந்திரமாக வரவழைத்து, அவனுக்குப் போலீசாபீசில் குமாஸ்தா வேலை செய்து கொடுப்பதாகச் சொல்லி, ஒரு மனு எழுதச் செய்து அதை வாங்கிக் கொண்டேன். அந்த மனுவின் எழுத்தும் உங்களுடைய மனைவியின் பெட்டியிலிருந்த கடிதங்களின் எழுத்தும் ஒன்றா யிருக்கின்றன. அவனே இந்தப் பொய்க் கடிதங்களை எழுதினவன் என்பது நிச்சயமாகத் தெரிகிறது; அந்த மனுவையும் இதனுடன் கோர்த்திருக்கிறேன். இந்த

விவரங்களை அறியவும்; இவற்றிலிருந்து, சாமாவையரும், உங்கள் சகோதரிமாரும் இவ்விதமான பொய்க் கடிதங்களைத் தயாரித்துப் பெட்டியில் வைத்துவிட்டு, உங்களுடைய மனைவியை மரைக்காயரிடம் விற்றார்கள் என்பதும், கடைசி வரையில் உங்கள் மனைவி குற்றமற்றவளா யிருந்து காணாமற் போயிருக்கிறாள் என்பதும் நிச்சயமாக விளங்குகின்றன. உங்கள் மனைவி நைனா முகம்மது மரைக்காயர் வீட்டிலிருந்து தப்பித்துக் கொண்டு போனது முதல் கடைசியில் தற்கொலை செய்துகொள்ளப் போனது வரையில், நடந்த விஷயங்க ளெல்லாம் இராயப்பேட்டை வைத்தியசாலையிலுள்ள டாக்டர் துரைஸானிக்கு நன்றாகத் தெரியும்; இந்த விசனகரமான விஷயத்தில், உங்களுக்கு என்னால் எவ்விதமான உதவி தேவையாயிருந்தாலும், அதை நான் சந்தோஷமாகச் செய்யத் தயாராக இருக்கிறேன். தேவையானவற்றிற்கு எழுதுங்கள்.

**சஞ்சீவி ஐயர்.**

-என்று எழுதப்பட்டிருந்த நீண்ட கடிதத்தை வராகசாமி இரண்டே நிமிஷத்தில் படித்து முடித்தான். அவனது உடம்பும் கைகால்களும் ஆத்திரத்தினாலே வெடவெடவென்று நடுங்கின. அது கனவோ நினைவோவென்றே சந்தேகம் உண்டாயிற்று. அவன் தனது கண்களை நம்பாமல் அவற்றைத் துடைத்துக்கொண்டு கடிதத்தை இன்னொரு முறை படித்தான். அவனது முகம் உடனே மாறுபட்டது; கண்கள் கோவைப் பழம்போலச்சிவக்க, அவற்றிலிருந்து தீப்பொறியும் இரத்தத் துளியும் தெறித்தன. திக்பிரமை கொண்டான்; அது ஆகாயமோ பூமியோ வென்பது தோன்றவில்லை. மனதில் சண்ட மாருதத்தைக் காட்டிலும் அதிகமான வன்மையுடைய எண்ணிறந்த உணர்ச்சிகள் தோன்றி உலகத்தையே போர்த்தன. ரௌத்திராகாரமான கோபம் பொங்கி யெழுந்து

கொந்தளித்தது; உடனே உலக்கையை எடுத்து பெருந்தேவி, கோமளம், சாமாவையர் ஆகிய மூவரின் மண்டைகளையும் ஒரே அடியாக அடித்துச் சுக்கல் சுக்கலாகப் பிளந்து காற்றில் தூற்றிவிடலாமா வென்று அவன் நினைத்தான். முற்றிலும் களங்கமற்றவளும் நிரபராதியுமான தனது மனைவி அநியாயமாகத் தற்கொலை செய்துகொண்டாளே என்ற ஆத்திரமும், துக்கமும், அழுகையும், பொங்கி யெழுந்தன; வீராவேசத்தோடு எழுந்த பலவகை உணர்ச்சிகளால் அவன் முற்றிலும் மேற்கொள்ளப் பட்டவனாய், என்ன செய்வ தென்பதை அறியமாட்டாமல் துடிதுடித்து சிம்மகர்ச்சனை செய்தான். ஹிரணியனது குடலைக் கிழித்து மாலையாக அணிந்துகொள்ளும் எண்ணத்தோடு தூணைப் பிளந்து கொண்டெழுந்த உக்கிர நரசிம்ம மூர்த்தியைப்போல படபடத்து அவன் கோபமே உருவாகக் கட்டிலைவிட்டு எழுந்திருக்க முயன்றான்; முதலில் அக்காள் முதலியோரிடம் சென்று அவர்களது வஞ்சகத்தை வெளியிட்டு யாவரையும் ஒரே வெட்டாக வெட்டிவிட நினைத்தான். அதே நிமிஷத்தில் எழுந்துபோய் புனிதவதியான மேனகாவைத் தேடலாமா வென்னும் எண்ணம் தோன்றியது. ஆனால், பலர் அதற்கு முன் தேடிப் பயனில்லாமல் போயிருக்க, தான் இன்னமும் தேடினால் மாத்திரம் தற்கொலை செய்து கொண்டவள் திரும்பி வருவாளோ வென்று நினைத்து அவன் நம்பிக்கையையும் தைரியத்தையும் இழந்தான்; கட்டிலை விட்டு எழுந்திருக்க இரண்டொரு முறை முயன்றான்; ஆனால், அவன் தனது முழங்காலை ஊன்றக் கூடவில்லை யாகையால், மிகவும் தத்தளித்தவனாய் மெத்தையில் சாய்ந்தான்; கடிதத்தைத் திரும்பவும் நோக்கினான்; கடிதத்தில் கோர்க்கப்பட்டிருந்த மற்ற கடிதங்களையெல்லாம் படித்தான்; மேனகாவை மரைக்காயருக்கு விற்றுவிட்டதாக எழுதப்பட்டிருந்த கடிதம் தன் தங்கை கோமளத்தினால் எழுதப்பட்டிருந்ததையும், அதன்

அடியில் சாமாவையரும், பெருந்தேவியும் கையெழுத்திட்டிருந்ததைக் கண்டான்; மேனகாவின் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட கடிதங்களின் எழுத்தும், சாமாவையரது தம்பியால் எழுதப்பட்டிருந்த மனுவின் எழுத்தும் ஒன்றாக இருந்ததைக் கண்டான்; மாயாண்டிப் பிள்ளையால் நாடகக்கார வீராச்சாமிநாயுடுக்கு எழுதிக் கொடுக்கப் பட்டிருந்த ஒப்பந்தப் பத்திரத்தின் எழுத்து முற்றிலும் வேறு மாதிரியாக இருந்ததையும் கண்டான். என்ன செய்வான்! அது இந்திர ஜாலமோ அல்லது உண்மைத் தோற்றமோ வென்ற சந்தேகம் அடிக்கடி எழுந்தது. அவனது சிரம் சுழன்றது; மூளை குழம்பியது. நெஞ்சம் பதறியது. கோபத்தினால் ஹா, ஹூ என உலப்பிப் பெருமூச்சு விடுத்தான்.

அவனது நிலைமை அப்படி இருக்க, ஏதோ கடிதம் வந்ததையும் அதைப் படித்தவுடன் அவன் இவ்வாறு விபரீதமான நிலைமையை அடைந்ததையும், கட்டிலைவிட்டு எழுந்திருக்க முயன்றதையும் கண்ட அந்த வெள்ளைக்கார மடந்தை விவரிக்க இயலாத பெருத்த கவலை கொண்டு மிகுந்த அச்சத்தோடு அவனிடம் நெருங்கி, அவனை அவ்வாறு ஒரு நிமிஷத்தில் மாற்றிய அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருப்பது என்ன விஷயமோ வென்று யோசனை செய்து பார்த்தாள். ஒன்றும் புலப்படவில்லை. அன்றலர்ந்த தாமரை மலரினும் அதிகரித்த குளிர்ச்சியும் இனிமையும் வீசிய சுந்தர முகத்தோடு அவள் பணிவாகக் கட்டிலின் அருகில் நின்று, "உங்களுடைய உடம்பு மிகவும் கேவலமான நிலைமையில் இருக்கிறது. இரத்தமே கிடையாது; நீங்கள் இப்படி ஆத்திரப்படலாமா? எழுந்திருக்கலாமா? இன்னம் நாலைந்து நாட்களில் நன்றாக எழுந்திருக்கக் கூடியவர்கள் இதனால் இன்னம் ஒரு மாசத்துக்கு மேல் படுக்கையில் இருக்க நேருமே; ஐயோ! கொஞ்சம் சகித்துக் கொள்ளுங்கள். அது தலைபோகும் விஷயமா

யிருந்தாலும் சரி, நீங்கள் இப்போது அதைப் பாராட்டினால் உங்களுடைய உயிருக்கே ஒரு வேளை ஆபத்து வந்தாலும் வந்துவிடும். வேண்டாம், வேண்டாம்; படுத்துக் கொள்ளுங்கள்" என்று சாந்தமாகவும் அன்போடும் கெஞ்சி மன்றாடினாள். ஆனால், விஷயம் என்னவென்பதைக் கேட்க அவள் துணியவில்லை. அவளது இங்கிதமான கனிமொழி யைக் கேட்டும் அவனது கோபம் சிறிதும் தணிவடையவில்லை. என்றாலும், முழங்காலில் நோயுண்டானமையால் அவன் தலையணை களிற் சாய்ந்து படுத்துக் கொண்டான். ஆனால், கைகளும், கால்களும், உதடுகளும் கண்களும் துடித்துக் கொண்டிருந்தன. ஒரே நொடியில் அவன் ஆயிரங் காரியங்களைச் செய்ய நினைத்தான்; ஆனால், எழுந்திருக்க மாட்டாமையால் இடுப்பொடிபட்ட நாகப்பாம்பைப்போல அவன் இருந்த இடத்திலிருந்தே சீறினான். "ஆகா! கடைசியில் நீ சொன்னபடியே காரியம் முடிந்திருக்கிறது! இதைப் படித்துப் பார்" என்று கூறிய வண்ணம் அந்தக் காகிதக் கற்றையை எடுத்து அவள்மீது வீசி எறிந்தான். அவள் அதை விரைவாக எடுத்தாள். எடுக்கும் போதே அவளது கைகால்களும் உடம்பும் நடுங்கின. பணிமகள் கடிதத்தையும் மற்ற காகிதங்களையும் ஐந்து நிமிஷத்தில் படித்து முடித்தாள். அவளது முகம் உடனே மாறுபட்டது. ஆனால், அவள் அப்போதும் சந்தோஷமடைந் தாளோ, அல்லது வருந்தினாளோ வென்பது அவளது முகத்தோற்றத்தினால் அறிந்துகொள்ளக் கூடாமலிருந்தது; அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது. என்றாலும், அவள் பணிவாகவும் நயமாகவும் பேசி அவனது ஆவேசத்தையும் ஆத்திரத்தையும் தணிக்க முயன்றாள். "நான் நினைத்தபடியே விஷயம் முடிந்தாலும் இதைப்பற்றி ஒரே காலத்தில் என் மனதில் இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. உங்களுடைய மனைவி கடைசி வரையில், மாசற்ற கற்புடையவளாயிருந்தா ளென்பதை உங்கள் மனம் திருப்தி யடையும்படி ஈசுவரனே

ருஜுப்படுத்தி யிருப்பதற்காக, நான் அடையும் ஆநந்தம் என் மனதில் அடங்கவே இல்லை. இதற்காக நான் அந்தக் கருணைவள்ளலை என் மனதார வாழ்த்துகிறேன். ஆனால், உங்களுடைய பல ஹீனமான நிலைமையில் இந்த ரகசியங்கள் வெளிப்பட்டு, உங்களைப் பொறுக்க முடியாத வாதைக்கு உள்ளாக்கிவிட்டதே என்பதே பெருத்த விசனமாக இருக்கிறது. தயவு செய்து கோபத்தை அடக்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய மனைவி தற்கொலை செய்து கொண்டது சரியான காரிய மாகையால், அதைப்பற்றி நீங்கள் விசனப்பட நியாயமில்லை. இப்போது உங்களுடைய வீட்டில் அன்னியர் பலர் வந்திருக்கின்றனர். அவர்கள் முன்பு இந்த அசங்கியமான விஷயங்கள் வெளியாவது உங்களுக்கு அவமானமல்லவா; அதையும் உங்களுடைய தேக நிலைமையையும் கருதி நீங்கள் இப்போது ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளுங்கள். இன்னம் நாலைந்து நாட்கள் பொறுப்பதனால், காரியம் கெட்டுப் போகாது. நீங்கள் செய்ய வேண்டுவதை அப்புறம் செய்து கொள்ளலாம். செய்ததை என்னவோ செய்து விட்டார்கள்; உங்களுடைய மனைவியோ திரும்பாமல் போய்விட்டாள். இப்போது நீங்கள் சண்டையிடுவதினால் போனவள் வரப்போகிறதில்லை. வீணில் உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். என் மேல் உங்களுக்கு உண்மையில் அன்பிருக்குமானால், என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அதை மெய்ப்பிக்க வேண்டும்" என்று மிகவும் உருக்கமாகக் கூறி அவனது மோவாயைப் பிடித்து வேண்டினாள்.

அந்த மோகனாங்கியின் வலையில் முற்றிலும் வீழ்ந்து கிடந்த வராகசாமியின் மன நிலைமை அதனால் ஒருவாறு தளர்வடைந்தது. என்றாலும், அவனது ஆத்திரம் இன்னமும் அப்படியே இருந்தது. "ஆகா! என்ன காரியம் செய்து

விட்டார்கள் கொலை பாதகர்கள்! அந்தக் கிராதகன் சாமாவையனாலல்லவா இவ்வளவும் நடந்திருக்கிறது! இது வரையில் அவனை யோக்கியன் என்றல்லவா நினைத்து மோசம் போனேன்! அடாடா! என்னுடன் கூடப்பிறந்தவர்கள் இப்படியும் செய்வார்களா! என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! உலகத்தில் இப்படியும் நடக்குமா!" என்ற கூறித் தனது விழியையும் மனதையும் ஒரே நிலையில் நிறுத்தி அப்படியே வியப்படைந்து வெறுவெளியை நோக்கினான். கால் நாழிகை வரையில் அவன் அப்படியே ஓவியம் போல் அசைவற்றிருந்தான். அவனது மனைவியின் கலியாண குணங்களும், அருமை பெருமைகளும், அவளது அற்புத வடிவமும் அவனது அகக்கண்ணில் தோன்றின. அவனது நினைவு முற்றிலும் மனைவியின் மீது திரும்பியது. அவன் வாய்விட்டுப் பிதற்ற ஆரம்பித்தான். "ஆ மேனகா! என் கண்ணே! என் பாக்கியமே! பரிசுத்த ஸ்வரூபிணியான உன்னை அடைய நான் யோக்கியதை அற்றறவனென்று நினைத்து நீ தற்கொலை செய்து கொண்டாயோ! ஐயோ! உன்னுடைய வயிற்றெரிச்சல் வீணாகுமோ! உன்னுடைய சாபம் ஏழேழு தலை முறைக்கும் விலகுமே! நான் எத்தனை ஜென்ம மெடுத்து எவ்வளவு தவம் செய்தாலும், உன்னைப் போன்ற விலையில்லா மாணிக்கத்தை நான் பெறுவேனோ! என்னைப் போன்ற பாதகன், துர்பாக்கிய சிகாமணி, தரித்திர மூதேவி இந்த உலகத்திலேயே ஒருவனும் இருக்க மாட்டான். கேவலம் நாயினும் கடையவனான என்னிடத்தில் மகா லக்ஷ்மியைப் போன்ற உத்தமி ஏன் நிலைத்து நிற்பாள்" என்று கூறினான். அவனது விசனம் காட்டாற்று வெள்ளம்போலப் பொங்கி யெழுந்து அவனை அழுத்தியது; மூர்ச்சித்து அப்படியே விழுந்து விட்டான். அப்போது அருகில் நின்ற அருங்குண அணங்கு அதைக் கண்டு பெரிதும் கலக்க மடைந்து துடி துடித்து, அவனது மூர்ச்சையைத் தெளிவிக்கத் தேவையானவற்றைச் செய்தாள்;

அதனால் அவனுக்கு என்ன கெடுதல் சம்பவிக்குமோ வென்று கவலை கொண்டு தவித்தாள்; பலவகையான சிகிச்சைகளை அரைநாழிகை நேரம் வரையில் அவள் செய்ய, அவன் திரும்பவும் விழித்துக் கொண்டான். அந்த மடந்தை அருகில் உட்கார்ந்து அவனைத் தன் மீது சார்த்திக்கொண்டு ஏதோ ஒரு மருந்தைப் பருகுவித்தாள். அவன் அப்போதும் குழம்பிய மனதோடு வெறு வெளியையும், தனக்கருகிலிருந்த பெண்மணியையும் நோக்கினான். கண்ணீர் வழிந்தது. "ஐயோ! மேனகா! உன்னை மேனகா என்று லக்ஷம் தடவை இனி நான் கூப்பிட்டாலும் உன்னுடைய அழகான முகத்தை இனி நீ காட்டுவாயோ; ஆகா! உன்னைப் பெண்தெய்வமென்றே சொல்லவேண்டும்! உன்னைக் கோவில் வைத்து வணங்கினாலும் தகும். பூலோகத்தில் மனிதன் அடையக்கூடிய பெரும் பேற்றை யெல்லாம் எனக்கு உதவிய கற்பகத் தருவாகிய உன்னையடைந்தும், சுகப்படக் கொடுத்துவைக்காத அதிர்ஷ்ட ஹீனனான எனக்கு இனி உன்னைக் காட்டிலும் மேலான எந்தப் பொருள் கிடைக்கப்போகிறது? நீ என்னை விட்டுப்போன பின், இனிமேல் நானும் உயிரோடிருந்தால், எனக்கு ஓயா விசனமே மிச்சமாகும். நானும் உயிரை விடுவதே இத்தனை விசனங்களுக்கும் மருந்து; என் உயிரே; என் கண்மணியே! என் கட்டிக்கரும்பே! கிளியைப்போலக் கொஞ்சுவாயே! நினைப்பதை யெல்லாம் காமதேனுவைப்போலக் கொடுப் பாயே! படித்தவள், கெட்டிக்காரி, பெரிய மனிதருடைய புத்திரி, என்ற அகம்பாவம் கொஞ்சமாகிலும் உண்டா! அதிர்ந்த சொல்லுண்டா! என் அதிர்ஷ்ட லக்ஷுமியாகிய நீ என்னைவிட்டுப் போக மனங்கொண்டாயோ! எல்லா வற்றையும் நன்றாக அறிந்த நீ தற்கொலை செய்து கொள்ள நினைத்தது ஆச்சரியமாக இருக்கிறதே! எத்தனையோ துன்பங்களுக் குள்ளாகியும் உன்னுடைய கற்பைக் காத்துக் கொண்ட நீ என்னிடம் வந்து சேரக்கூடாதா? நான் உன்மேல்

சந்தேகங் கொள்வேனென்று நினைத்தாயோ? நீ நேராக என்னிடம் வந்து உண்மையைச் சொல்லியிருந்தால், நான் கோபம் கொள்வேனா! ஒருநாளும் கொள்ளமாட்டேனே! என்னுடைய உண்மையான பிரியத்தை உள்ளபடி அறியாமலல்லவா நீ இப்படிச் செய்து விட்டாய்! அடி! மேனகா! என் வாயில் மண்ணைப் போட்டுவிட்டாயே! இந்தச் சண்டாளர் செய்ததைக் காட்டிலும் நீ செய்ததே பெருத்த கொடுமையாக வதைக்கிறதே!" என்று பிரலாபித்துக் கண்ணீர் சொரிந்து விம்மிவிம்மி அழுதான். தேற்றினும் தேறாமல் மிக்க பரிதாபகரமான நிலைமையிலிருந்து அவன் தவித்ததைக் காணச் சகியாமல் அந்த வெள்ளை மடவன்னம் பதறினாள். அவளது கண்கள் மழைபோலக் கண்ணீர் பெய்தன. அவள் அவனை மிகுந்த அன்போடும் பணிவோடும் குழந்தைபோலத் தடவிக் கொடுத்து, "விசனப்படவேண்டாம்; இது உங்களுடைய தேகத்துக்கு அவசியம் கெடுதல் செய்யும்; நாங்கள் இத்தனை நாட்கள் பட்டபாடெல்லாம வீணாய்ப் போகும். உங்களுடைய சம்சாரம் கடலில் விழுந்து தற்கொலை செய்துகொண்டது உண்மையானால், அவளுடைய பிரேதம் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும். அதைச் செம்படவர்கள் இதற்குள் எப்படியும் கண்டுபிடித் திருப்பார்கள். அப்படி ஒன்றும் நடக்காதிருப்பதால், அவள் உயிரை விட்டிருக்க மாட்டா ளென்று தோன்றுகிறது. நீங்கள் மோட்டார் வண்டியில் அறைபட்டு வைத்தியசாலையில் கிடந்ததை அவள் டாக்டர் துரைஸானியின் மூலமாக அறிந்ததாகத் தெரிகிறது. நீங்கள் இப்படிக் கிடக்கையில், அவள் உங்களை விட்டு இறந்துபோக நினைப்பாளா என்பதும் சந்தேகமாக இருக்கிறது. யாவற்றிற்கும் நீங்கள் இன்னும் மூன்று நான்கு நாட்கள் உடம்பை அலட்டிக் கொள்ளாமல் இருங்கள். அதற்குள் ஒருகால் உங்களுடைய சம்சாரத்தைப்பற்றி செய்தி ஏதாயினும் கிடைக்கலாம். இந்த விஷயங்களைப்பற்றி

உங்களுடைய சகோதரிமார்களிடத்திலும் அப்புறம் பேசிக்கொள்ளலாம். இப்போது நீங்கள் அவர்களுடன் பேசுவதே கூடாது. நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள்" என்று உருக்கமாகக் கூறி வேண்டினாள். மிகவும் இளகிய மனதையும், குழந்தையைப் போன்ற கபடமற்ற குணத்தையும் உடையவனான வராகசாமி தனக்குப் பேருபகாரம் செய்து வந்த அந்த வசீகர மங்கையின் சொல்லை மீற மாட்டாமல் சிறிது தணிவடைந்து திண்டில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு உள்ளூற வருந்திப் பாகாய் உருகி ஓய்ந்து போனான். அவள் மேன்மேலும் அவனைத் தேற்றிக் கொண்டே இருக்க, அவன் கால் நாழிகையில், உணர்வற்று அப்படியே உறங்கிப்போய் கடுந்துயிலில் ஆழ்ந்தான். அவ்வாறு ஒருமணி நேரம் கழிந்தது. அவன் திரும்பவும் விழித்துக் கொண்டான். பணிப்பெண் ஈரத்துணியால் அவனது முகத்தைத் துடைத்து நன்றாகச் சுத்தி செய்துவிட்டவளாய், "உடம்பு எப்படி இருக்கிறது? சொல்லுங்கள்; வைத்திய சாலையிலிருந்து நல்ல மருந்துகளை வரவழைக்கிறேன்" என்று கூறினாள். வராகசாமியோ அவளது சொல்லைக் காதில் வாங்கவில்லை. அவனது மனது முற்றிலும் மேனகாவின் மீதே சென்றிருந்தது. கண்கள் வெற்றிடத்தை உற்று நோக்கியவண்ண மிருந்தன. அவனது மனதில் பலவகைப்பட்ட நினைவுகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. கண்களில் கண்ணீர் ஊறி ஊறிப் பெருக்கெடுத்தது. அவன் கைகளால் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டவனாய், "மேனகா! மேனகா!" வென்று பிதற்றிக் கோவெனக் கதறியழத் தொடங்கினான்; சிரசிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு புலம்பி அழ ஆரம்பித்தான்; அடுத்த நிமிஷம் பற்களை நறநறவென்று கடித்து, "ஆகா! இப்படியா செய்தீர்கள்!" என்று கர்ச்சிக்கிறான். அவனிருந்த அறையின் கதவுகள் மூடப்பட்டிருந்தமையால், அவன் செய்த ஓசை அப்புறம் கேட்கவில்லை. அவனது பரிதாபகரமான

நிலைமையைக் கண்டு அச்சமும் நடுக்கமும் கொண்ட அந்த இளநங்கை, தன்னாலியன்ற வரை பெருமுயற்சி செய்து அவனது துயரத்தையும், கோபத்தையும் மாற்றிய வண்ணம் இருந்தாள்; அவன் ஆறுதலே அடையாமல், தன்னையும் உலகையும் தனக்கருகிலிருந்த அந்த இன்பவல்லியையும் மறந்து தனது வேதனைகளிலேயே மூழ்கிக் கிடந்தான். அப்போது, அவனுக்கு ஆகாரம் கொடுக்கும் வேளை வந்தது; பெருந்தேவியும், கோமளமும் வழக்கப்படி ஆகாரம் ஜலம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தனர். அதைக் கண்ட பணிமகள் அவர்களை வராகசாமியிடம் அப்போது விடக்கூடாதென்று நினைத்து, விரைவாக எழுந்து கதவண்டையில் ஓடி, வழிமறைத்து நின்று, "உடம்பு சரியான நிலைமையில்லை; இப்போது ஆகாரம் சாப்பிடமாட்டார்; இன்னம் அரைமணியில் நானே வந்து சொல்லுகிறேன். அப்போது கொண்டுவரலாம்" என்றாள். அதைக் கேட்ட பெருந்தேவியம்மாள் ஒருவாறு ஆத்திர மடைந்தவளாய், "கொஞ்ச நாழிகைக்குமுன் கோமளம் கடுதாசியைக் கொடுத்தபோது சரியாயிருந்த உடம்பில் இதற்குள் என்ன வந்துவிட்டது! உன்னுடைய அதிகாரம் கண்டிப்பா யிருக்கிறதே. புது மணியக்காரன்வந்து நெருப்பைக் கட்டிக் கொளுத்தி னானாம் என்பார்கள். அதைப்போல யாரோ வழியில் போகிறவளான நீ வந்து எங்களை அதிகாரம் செய்கிறாயே! எங்கள் வீட்டுப் பையனுக்கு உடம்பு சரியாக இல்லாவிட்டால் அதை நாங்கள் வந்து பார்க்கவேண்டாமா! எல்லாவற்றிற்கும் நீதான் அதிகாரி போலிருக்கிறதே! காணாமற்போன பெண்டாட்டிக்குமேல் நீ பெரும் பெண்டாட்டியாய் விட்டாய் போலிருக்கிறதே! விடிந்தால் நிச்சய தாம்பூலம்; இதுவரையில் சரியாயிருந்த உடம்பை நீதான் எப்படியோ கெடுத்திருக்கிறாய். இதற்குத்தான் வெள்ளைக் காரருடைய வைத்தியமே உதவாதென்று சொல்லுகிறது. வியாதியாயிருக்கிற

பையனுடன் கதவைச் சாத்திக் கொண்டு சிறு பெண்ணாகிய நீ ஓயாமல் இருப்பதனாலேதான் அவனுடைய உடம்பு கெட்டுப் போய்விட்டது. முன்னால் நீ பங்களாவை விட்டுப்போனால் அவனுடைய உடம்பு ஒரு நிமிஷத்தில் சரியாய்ப்போகும். பையனுக்கு நல்ல பாலிய வயசு. அவனைக் கட்டிப் பிடிக்கவும், அவனைத் தொடவும் அன்னியப் பெண்ணாகிய உனக்குக் கொஞ்சமும் லஜ்ஜையே இல்லையே! இதுதான் என்ன ஜென்மம்!" என்று பெருந்தேவியம்மாள் குறும்பாகவும் அதட்டியும் மொழிந்தாள். அந்த கன்னக்கொடூரமான மொழியைக் கேட்ட பெண்மணி வராகசாமியின் அபாயகரமான நிலையைக் கருதி, தனது கோபப் பெருக்கை அடக்கிக்கொண்டு புன்னகை செய்து, " அம்மா! என்மேல் உங்களுக்கு எவ்வளவு கோபமிருந்தாலும் அதை அப்புறம் காட்டுங்கள்; சொல்வதை எல்லாம் அப்புறம் சொல்லுங்கள்; இப்போது உங்களுடைய தம்பியின் உடம்பு சரியான நிலைமையில்லை. சற்று நேரத்துக்குமுன் ஏதோ கடிதம் வந்ததே; அதைப் பார்த்த முதல் அவர் பெருத்த கோபத்தோடு படுத்துக் கொண்டிருக்கிறார். என்னோடும்கூட அவர் சரியாகப் பேசவில்லை. நீங்கள் அவரிடம் இப்போது போனால் பெருத்த கலகம் உண்டாகுமென்று தோன்றுகிறது. உங்களுக்கு இஷ்டமானால் போய்ப்பாருங்கள். ஏன் வந்தோமென்று பிறகு நீங்களே விசனப்படுவீர்கள்; எனக்கென்ன அதிகாரமிருக்கிறது. நான் கூலிக்காரி; உங்களுடைய நன்மைக்காக வேலை செய்கிறவள். உங்கள் மனம் போலச் செய்யுங்கள்" என்று பணிவாகக் கூறினாள்.

அதைக் கேட்ட பெருந்தேவியம்மாள், "அந்தக் கடிதம் யாரிடத்திலிருந்து வந்தது? இப்படி அவன் கோபிக்கும்படி அதில் என்ன சங்கதி இருந்தது?" என்றாள்.

அதைக்கேட்ட பணிமகள், "விவரமொன்றும் எனக்குத் தெரியாது. காணாமல்போன சம்சாரத்தைப்பற்றிய சங்கதியா

யிருக்கலாமென்று தோன்றுகிறது. நீங்களே நேரில் போய்க் கேட்டுப்பாருங்கள்" என்றாள்.

அதைக் கேட்ட பெருந்தேவியம்மாள் மிகுந்த திகைப்பும் அச்சமு மடைந்து, ஒருக்கால் இரகசியம் வெளியா யிருக்குமோ வென்று சந்தேகித்தாள்; அவளது உடம்பு கிடுகிடென்று தானாக நடுங்கியது; என்றாலும், இரகசியம் ஒருக்காலும் வெளிவரா தென்று அவள் நினைத்து அடுத்த நிமிஷம் துணிவடைந்து, சிறிது யோசனை செய்தாள். பணிமகள் சொன்னபடி சிறிது நேரத்துக்குப் பிறகு வருவதே நல்லதென்று நினைத்து கதவைச் சாத்திக்கொண்டு கோமளத்தோடு வெளியிற் சென்றாள். பணிப்பெண் உடனே திரும்பி வராகசாமி இருந்த இடத்தை அடைந்தாள். அப்போது அவன் திரும்பவும் கண்களை மூடிக் கொண்டு துவண்டு கிடந்தான். தாயை நினைத்து உயிரழிந்து சோர்ந்து கிடக்கும் கன்றைப்போல ஏங்கி யிருந்த வராகசாமியின் முகத்தை, அந்த மடந்தை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே நெருங்கி நின்றாள். அவ்வாறு நெடுநேரம் கழிய அவன் விழித்துக் கொண்டான். அவனது முகம் விகாரப் பட்டுத் தோன்றி அவனது மனதிற்குள் நடக்கும் பெரும் போரைத் தெள்ளிதில் காட்டியது; களைப்பும், துக்கமும், ஆத்திரமும் வந்து மூடிக்கொண்ட அவன் முதல் நாளே உணவருந்தினவனாதலின் பெண்மணி அவனை நோக்கி, "நிரம்பவும் களைப்பாக இருக்கிறதே! சாப்பிடுகிறீர்களா?" என்று மெல்லக் கேட்டாள். அவன் மிகவும் வெறுப்பாக, "ஆம்; பெண்டாட்டியைத் தின்ற சண்டாளனுக்குச் சாப்பாடு வேண்டுமா? நான் இனிமேல் இந்த உடம்பை வளர்த்து உலகில் வாழவும் வேண்டுமா? எனக்கு ஆகாரமும் வேண்டாம்; மருந்தும் வேண்டாம்; பேசாமல் விட்டு விடுங்கள். உங்களுடைய வைத்திய சாலையில் விஷமிருந்தால் சிறிதளவு வாங்கிக் கொடுப்பாயானால் ஒரு நிமிஷத்தில் என்னுடைய துன்பங்களையும், உங்களுடைய சிரமத்தையும்,

என்னுடைய உயிரையும் ஒழித்து விடுகிறேன்" என்று மிகுந்த ஏக்கத்தோடு கூறினான். அதைக் கேட்ட பெண்ணரசி திரும்பவும் அவனைத் தேற்ற ஆரம்பித்தாள், "நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! உங்களுடைய ஜாதியில் புருஷன் இறந்தால், பெண்கள் மறு கலியாணம் செய்து கொள்ள முடியாது. ஆகையால் அவர்கள் விசனப்படுவது நியாயமே. நீங்களோ புருஷ சிங்கம். ஆயிரம் மனையாட்டிகள் வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ளலாம். உங்களுடைய சம்சாரம் மிகவும் நற்குணமுள்ளவள் என்பது, நீங்கள் சொல்லுவதிலிருந்து நன்றாக வெளியாகிறது. அவள் அநியாயமாக வஞ்சிக்கப்பட்டு, அதனால் தற்கொலை செய்து கொண்டது சகிக்க முடியாத துக்க சங்கதிதான். அதைப்பற்றி சந்தேகமில்லை. ஆனால், நீங்கள் அதன் பொருட்டு, உயிரை விட்டுவிடுவதாகச் சொல்லுவது சரியல்ல. உலகத்தில் அவள் ஒருத்திதானா நற்குண முடையவள்? அழகுடையவள்? ஈசுவர சிருஷ்டியில் எவ்வளவோ அற்புதமான அமைப்புகள் இருக்கின்றன. ஒருத்தியை ஒருத்தி மீறிய அழகும், நற்குணமும், வாய்ந்த ஸ்திரீ ரத்னங்கள் கோடாநு கோடியாக உலகில் நிறைந்திருக்கின்றனர். மேனகாவோடு சுகித்திருக்க இவ்வளவு தான் கொடுத்துவைத்த தென்று நீங்கள் மனதைத் தேற்றிக் கொண்டு, சிறந்தவளாகப் பார்த்து இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு, சந்தோஷமாக வாழ்வதே சரியான காரியம். உலகத்தில் சாவும் வாழ்வும் ஒவ்வொரு நாளும் ஏற்படும் விஷயம்; அதை மகா கொடிய ஆபத்தைப் போலவும், எங்கும் நடக்காத அசம்பாவிதமான தீங்கைப் போலவும் மதித்து அதற்காக நாமும் உயிரை விடுவது உலக வழக்கத்தில் சேர்ந்ததல்ல. இந்த விஷயத்தில் உங்களுடைய முக்கியமான சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. அவள் மனதார தானே வீட்டை விட்டுப் போகவுமில்லை; அவளுடைய கற்பும் கெடவில்லை. அவ்வளவோடு நீங்கள் திருப்தி அடையுங்கள்;

நாளைக்கு நிச்சயதாம்பூலம் மாற்றப்போகிறார்கள். சம்பந்தி, புதிய பெண் முதலியோர் வந்திருக்கிறார்கள். உங்களுடைய சம்சாரத்தின் முடிவு இதற்கு முன் தெரியாதிருந்தமையால், கலியாணத்தைத் தடுக்க நினைத்தீர்கள். இப்போதோ மேனகா இறந்து போய்விட்டாள். இனி நீங்கள் எப்படியும் வேறு கலியாணம் செய்து கொண்டே தீரவேண்டும். இவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். இதை நீங்கள ஏன் கெடுக்க வேண்டும்? கலியாணத்தை முடித்துக் கொள்ளுங்கள். இந்த முகூர்த்தத்தில் அதை நடத்த, உங்களுடைய தேகஸ்திதி இடங்கொடுக்காவிட்டால், இன்னும் சில நாட்களுக்குப் பிறகாகிலும், இந்தப் பெண்ணையே கட்டிக் கொள்ளுங்கள்; இந்தப் பெண்ணும் எல்லா விஷயங்களிலும் தகுந்தவளாகவே இருப்பாள். உங்களுடைய சகோதரிமார்கள் நன்றாகப் பார்த்துத்தான் பொறுக்கி யிருப்பார்கள். அவள் லக்ஷுப் பிரபுவின் மகளாம். அவளுடைய சொத்து முழுவதும் உங்களுக்கே வரப்போகிறதாம். கலியாணம் செய்துகொண்டு பங்களாவில் சுகமாக இருந்து இன்பம் அநுபவியுங்கள். நீங்கள் இப்படி அபரிமிதமாகத் துயரப்படுவதற்குக் கொஞ்சமும் நியாயம் இல்லை" என்றாள்.

அவள் அவ்வாறு அவனிடம் அந்தரங்கமான அபிமானத்தோடு உருக்கமாகப் பேசினாளெனினும் அவளது சொற்கள், எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பதைப் போல, அவனது ஆத்திரத்தையும் விசனத்தையும் பெருக்கின என்றாலும், தன்மீது ஆழ்ந்த பிரியத்தைக் கொண்டவளாய், பிரதிபலனைக் கருதாமல் ஓயாக் கவலைக்கொண்டு தனது உயிரைக் காப்பாற்றிவரும் அந்த உத்தமியிடத்தில் சிறிதும் கடுமையாக மொழிய மனமற்றவனாய் அவன் சிறிது தயங்கி ஒரு நிமிஷம் மௌனமா யிருந்த பின், "எத்தனை லட்ச ரூபாய் வந்தாலும், எந்தப் பங்களா வந்தாலும், தெய்வ ரம்பையே

எனக்குப் பெண்டாட்டியாக வர இணங்கினாலும், என் மனம் மாறி அவற்றில் விருப்பங் கொள்ளுமா? பதிவிரதா சிரோ மணியான என் மேனகாவைக்கண்ட கண்கள் இனி இன்னொரு பெண்ணைக் காணுமா? என் உயிருக்குயிரான அந்த அருங்குண உத்தமியைத் தொட்டணைத்த கைகள் இன்னொரு ஸ்திரீயைத் தீண்டுமோ? வேறு கலியாணம் என்ற சங்கதியையே, தயவு செய்து என்னிடம் பேச வேண்டாம்; இத்தனை நாட்கள் நீ இரவு பகலாய் ஒரு நிமிஷமும் என்னை விட்டகலாமல் என்னோடிருந்து நொடிக்கொருதரம் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து உதவின தெய்வமாகிய உன்னுடைய மனம் புண்ணாகும்படி நான் பேசுவது கூடாது. எவ்வளவோ பாடுபட்டு நீ காப்பாற்றிய உயிரை நான் ஒரு நிமிஷத்தில் விட்டுவிட நினைப்பது உன் மனசுக்குப் பெருத்த துன்பத்தைச் செய்யுமென்பது நிச்சயம். நான் இனிமேல் சுகப்படு வேனென்று நினைத்து நீ என்னைக் காப்பாற்றி விட்டாய். என் மேனகாவை இழந்த பிறகு நான் இனி ஆயுட் காலம் முழுதும் ஓயா வேதனைக்கே ஆளாயிருப்பேன். ஆகையால், அப்படி வேதனைப் படுவதைவிட, உயிரை விடுவதே மேலானது. நான் இதுவரையில் இந்த உலகத்திலுள்ள பெண்களில் மேனகா ஒருத்தி யிடத்திலேயே ஆசை வைத்தேன்; வேறு ஸ்திரீகளையே நான் மனதாலும் நினைத்ததில்லை. அவள் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொள்ள எப்படி உயிரை விட்டாளோ அம்மாதிரியே, நான் அவளை இழந்ததற்காக உயிரை விடவேண்டுமல்லவா? என் மேல் அவள் வைத்த பிரியத்துக்கு இந்த உலகமும் ஈடாகுமா? அவள் எனக்குத் தெய்வமாக வன்றோ இருந்தாள். அவளைப்போல என்மேல் யாராகிலும் பிரியம் வைப்பார்களா? ஒரு நாளுமில்லை" என்றான். அதைக் கேட்ட பணிமகள் புன்னகை செய்து, "அப்படியானால், நான் உங்கள் மேல் ஆழ்ந்த பிரியம் வைத்திருக்கிறேனென்றும், என்னைவிட்டு ஒரு நிமிஷங்கூடப் பிரிந்திருக்க உங்களால்

முடியவில்லை யென்றும் இதுவரையில் நீங்கள் சொல்லிக்கொண்டு வந்ததெல்லாம் பொய்தானே? என்மேல் அவ்வளவு வாஞ்சை வைத்தவர்களானால், என்னை விட்டு இறந்துபோக நினைப்பீர்களா? இப்படிச் செய்வதுதான் நியாயமா? நானும் இத்தனை நாட்கள் உங்களோடு இருந்து பழகினேன். உங்களுடைய மேன்மையான குணத்தையும், கபடமற்ற அன்பையும் காணக்காண, என்னுடைய மனதிலும் ஒரு வகையான வாத்சல்யம் உண்டாகிவிட்டது. உங்களுடைய நோய் நீங்கின பிறகு உங்களை விட்டு எப்படிப் பிரிந்து போகிற தென்னும் கவலையும் விசனமும் சென்ற சில நாட்களாக என்னை வதைத்துக் கொண்டிருக்கின்றன. பல வருஷங்களுக்கு முன் விட்டுப் பிரிந்த நண்பர் ஒருவரை யொருவர் கண்டு கூடியதைப்போல, நாமிருவரும் ஒருவரை யொருவர் கண்ட நேரம் முதல், இருவர் மனதிலும் ஆசையும், அன்பும், பற்றும் சுரந்து கொண்டே இருக்கின்றன. சென்ற இரண்டொரு நாட்களாக என் மனதின் நிலைமையை நான் ஊன்றிப் பார்த்தேன். அது விபரீதமாகத் தோன்றுகிறது. அதை வெளியிட நான் இதுவரையில் வெட்கப்பட்டுக்கொண்டிருந்தேன். இப்போது உங்களுடைய சம்சாரம் இறந்து போய்விட்டாள் என்ற செய்தியை அறிந்த பிறகு என்னுடைய மனதை வெளியிடத் துணிவு கொண்டேன். உத்தரவானால் சொல்லுகிறேன்" என்று மகிழ்ச்சி தவழ்ந்த முகத்தோடு விநயமாகக் கூறினாள். அதைக் கேட்ட வராகசாமி முற்றிலும் திகைப்படைந்தவனாய்ச் சிறிது மயங்கி, "உன் மனதை வெளியிடு" என்றான். அதைக்கேட்டு வெள்ளை மடமங்கை மகிழ்வோடு அவனது முகத்தை நோக்கி கேட்ட வண்ணம், "என் மனதை நீங்கள் இன்னமும் அறிந்துகொள்ள வில்லையா? அதை என் வாயாலேயே வெளியிடவும் வேண்டுமா? நான் கேட்கப்போவதை நீங்களே சொல்லிவிட்டீர்களே! மேனகாவுக்குப் பிறகு என்மேலேதான் நீங்கள் பிரியம்

வைத்ததாகவும், என்னை விட்டுப் பிரிய சகிக்க வில்லையென்றும் சொன்னீர்களே! அப்படி யிருக்க, அவளுடைய ஸ்தானத்தில் என்னை ஏற்றுக்கொள்ளும்படி நான் வாய்விட்டுக் கேட்கவும் வேண்டுமா? அந்தப் பாக்கியத்தைப் பெறுவதற்கு என்னைக் காட்டிலும் உயர்வானவள் எவளிருக்கப் போகிறாள்! என்னைக் காட்டிலும் அதிகமாக உங்களைக் காதலிப்பவள் மேனகாவுக்குப் பிறகு வேறு ஒருத்தியும் இருக்கமாட்டாளென்பது நிச்சயம். உங்களுடைய ஆபத்துக் காலத்தில் என்னைத் துணையாக வைத்துக் கொள்ள இணங்கின நீங்கள், உங்களுடைய சந்தோஷ காலத்திலும் என்னைத் துணையாக ஏற்றுக்கொள்வதே நியாயமல்லவா?" என்றாள்.

எதிர்பாராத அவளது சொல்லைக் கேட்ட வராகசாமியின் மனம் குழம்பியது; அவன் பெரிதும் வியப்படைந்தவனாய் தனது செவிகள் கேட்டது உண்மைதானோ வென்று சந்தேகமடைந்தான்; ஒருகால் அவள் வேசையோ என்றும், தான் அவளை உத்தமியென்று நினைத்தது தவறோ என்றும் நினைத்தான். ஒரு வெள்ளைக்காரி இந்திய ஜாதியனைக் கலியாணம் செய்து கொள்ள எளிதில் விரும்ப மாட்டாள் ஆகையால், அவள் திருட்டு நட்புக்கு ஆசைப்படுகிறாளென்றும், அவள் ஒரு வேசையென்றும், அவன் அவளிடம் கொண்ட அன்பினால் அதை மறைத்து, " நீ கூட என்னைப் புரளி செய்ய ஆரம்பித்து விட்டாயா? என்னுடைய உயிர்போகும் நிலைமையில் காப்பாற்றிய மகா பேருபகாரியும் உத்தமியாகிய நீயே என்னிடம் பரிகாசமாகப் பேசி என் மனதை வருத்த நினைத்தால், நிச்சயமாக இது எனக்குப் பொல்லாத காலமென்பதற்குத் தடையே இல்லை; இதைவிடக் கெட்ட காலம் எனக்கு இனி நேரப் போகிறதே இல்லை" என்று மிகவும் வருந்திக் கூறினான்.

அதைக் கேட்ட அந்தப் பூங்கொடி தனது ஸாகஸங்களை யெல்லாம் உபயோகித்து, "நான் புரளியாகச் சொல்லு வதாகவா நினைத்து விட்டீர்கள்! அப்படி நினைக்க வேண்டாம், நான் சொல்வது சத்தியமான விஷயம்; நான் பிறந்த முதல் இதுவரையில் உங்கள் ஒருவரைத்தான் காதலித்தேன். எத்தனையோ துரை மக்கள் என்னை மணக்க விரும்பினார் களானாலும், நான் அவர்களை மனதிலும் நினைக்கவில்லை. உங்கள் மேலேதான் என் முழுக் காதலும் ஏற்பட்டு விட்டது. ஆனால், வெள்ளைக்காரியாகிய என்னை எப்படி நீங்கள் மணப்பதென்று யோசிக்கலாம். அந்த ஆட்சேபத்தை விலக்குவது அரிதல்ல. என்னுடைய தந்தை பெருத்த உத்தியோகத்தில் இருக்கிறார். நான் அவருக்கு ஒரே பெண். அவருக்கு லட்ச லட்சமாகப் பொருளிருக்கிறது; அவ்வளவு செல்வமும் உங்களுக்கே வந்துவிடும். அவர் சிபார்சு செய்து உங்களுக்கு ஜட்ஜி உத்தியோகம் செய்துவைப்பார். உங்கள் விஷயத்தில் பெருத்த வஞ்சகம் செய்த சகோதரிகளின் முகத்தில் இனி விழிக்கமாட்டேனென்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். அவர்களைத் தவிர உங்களுக்கு வேறு உறவினர்கள் இல்லையென்றும் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் உடனே கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொள்ளுங்கள்; உடனே நான் உங்களை மணந்து கொள்கிறேன்; உங்களை நான் இந்திர போகத்தில் அமர்த்துகிறேன்; மனிதருக்கு வேறு என்ன வேண்டும்? பெருத்த செல்வம், உன்னதமான உத்தியோகம், இருப்பதற்கு இரமணீயமான மாளிகை, இணைபிரியாதிருந்து சுவர்க்கபோக மளிப்பதற்கு அந்தரங்கமான வாஞ்சையுள்ள காதலி; இவற்றைத் தவிர, வேறு எவ்விதமான சுகத்தை நீங்கள் பெறப்போகிறீர்கள்? என்னை மணப்பதால் இத்தனையும் ஒரு நொடியில் உங்களுக்குச் சித்திக்கும். ஏராளமான செல்வத்துடன் நாம் இரதியும் மன்மதனும்போல சகலவிதமான செல்வ போகங்களுடன் காலங் கழிக்கலாம். அப்படியே ஆகட்டு

மென்று ஒரு வார்த்தை சொல்லி அந்த ஒப்பந்தம் முடிவான தென்பதை, ஒரு முத்தத்தினால் முத்திரை வைத்து உறுதிப் படுத்துங்கள்'' என்று கூறி நாணிக் கீழே குனிந்தாள். அப்போது அந்தப் பைங்கிளியின் அழகு முன்னிலும் ஆயிரமடங்கு அதிகரித்துத் தோன்றியது. அவளது முகத்தில் யௌவன காலத்தின் களை ஜ்வலித்தது. வராகசாமியின் மனம் தத்தளித்தது. அவளது வசீகரமான இனிய சொற்களால் முற்றிலும் கவரப்பட்ட வராகசாமி, என்ன மறுமொழி சொல்வ தென்பதை அறியாமல் சிறிது நேரம் மௌனம் சாதித்தான்; திரும்பவும் அந்தக் கிள்ளை மொழியாள் அவனை நோக்கி, "தாங்களுக்கு என்மேல் கோபம் போலிருக்கிறது? ஆசை வெட்கமறியாது என்பார்கள். அதைப்போலத்தான் துணிந்து என் மனதை வெளியிட்டு விட்டேன். என்னை ஆக்குவதும் அழிப்பதும் உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளா விட்டால், நான் உங்களுடைய காலடியிலேயே உயிரை விடுவேனேயன்றி உங்களை விட்டு ஒரு நிமிஷமும் பிரிந்து உயிர் வாழமாட்டேன்'' என்றாள். அதைக் கேட்ட வராகசாமியின் மனம் பதறியது; உரை தடுமாறியது; கண்களில் கண்ணீர் துளித்தது. "பெண்மணி! என் மனம் படும் பாட்டை நான் என்ன வென்று சொல்வேன்! ஆகா! அதிர்ஷ்டஹீனனாகிய என்மேல் வாஞ்சையை வைத்ததனால், மேனகா இறந்தது போதாதா! என் விஷயத்தில் அந்தரங்கமான அன்பைச் சொரிந்து எனக்கு அமுத சஞ்சீவி போல அமைந்த பேருபகாரியான நீயும் என் பொருட்டு உயிரை விட வேண்டுமா? இதுவும் ஈசுவரனுடைய சோதனை போலிருக்கிறது. எனக்கு எவ்வளவோ அருமையான மனைவி வந்து வாய்த்தாள். அவளை வைத்துக் கொண்டு சுகமாக வாழ நான் கொடுத்து வைக்க வில்லை. அதன் பயனாக நான் எத்தனையோ வேதனைகளை அடைந்து இன்னமும் தவிக்கிறேன். என்னால் அவளுக்கும் சகிக்க முடியாத

இடர்களெல்லாம் வந்தன. கடைசியில் அவள் தன்னுடைய உயிரையே என் பொருட்டு தத்தம் செய்து விட்டாள். என் உயிர்போனாலன்றி இந்தப் பெருத்த விசனம் என் மனதை விட்டு அகலுமா? அருமையான மனைவியை இழந்த துக்கமும், சகோதரிகளான துஷ்ட முண்டைகள் எனக்குச் சகோதரி மார்களாக வந்து வாய்த்த துக்கமும் என் மனதை வாளைப் போல அறுக்க, நான் இரத்தக் கண்ணீர் விடும் சமயத்தில், எனக்கு வேறு கலியாணம் வேண்டுமா? இனி என் ஆயுட் காலத்தில் எந்த நிமிஷத்திலாகிலும் என் மனம் சந்தோஷம் என்பதை அறியுமா? நீயோ மகா பாக்கிய சாலியைப் போலத் தோன்றுகிறாய். உன்னுடைய மேன்மைக்குத் தகுந்தபடி, ஒருபோதும் துன்பத்தையே அடையாதவனும் அதிர்ஷ்டசாலியுமான நல்ல புருஷனை நீ அடைந்து சம்பூரண மான சுகத்தையடைய வேண்டும்; அதுவே என்னுடைய பிரார்த்தனை. நான் உன்மேல் கொண்டது, ஒரு குழந்தை தாயினிடம் வைக்கும் வாஞ்சையேயன்றி வேறுவிதமான ஆசையை நான் உன் விஷயத்தில் கொள்ளவே இல்லை. என்னுடைய நிலைமை முறிந்துபோன பாலின் நிலைமையைப் போலவிருக்கிறது. இனி நான் ஒரு நாளும் சுகப்படப்போகிறதில்லை. என்னைக் குபேர சம்பத்தில் கொண்டுபோய் வைத்தாலும், என் மனம் சந்தோஷப்படப் போகிறதில்லை. இத்தனை நாழிகை மேல் உலகத்தில் தெய்வமாக விளங்கும் என்னுடைய மேனகாவே திரும்பி பூலோகத்துக்கு வந்து என் மனதைத் தேற்றினாலன்றி இந்த விசனம் மாறக்கூடியதல்ல. தயவு செய்து கலியாண விஷயத்தைப் பற்றி இப்போது பேசவேண்டாம். என் மனம் பதறுகிறது" என்று கூறி அவளிடம் நயந்து வேண்டினான்.

அவனது அப்போதைய நிலைமை கல்லையும் கரைக்கத் தக்கதாகிய மிக்க பரிதாபகரமாக இருந்தது. அவனது

உருக்கமான சொற்களைக் கேட்ட அந்த மடந்தை, "ஆகா! மேனகாவின் பாக்கியமே பாக்கியம்! இவ்வளவு உறுதியும், அருமையான குணமும் வாய்ந்த ஏகபத்தினி விரதரான உங்களைப் புருஷனாக அடைந்த மேனகாவுக்கு அந்த ஈசுவரனும் நிகரில்லை; சுவர்க்கமும் நிகரில்லை. அவளுக்கு இதைப் பார்க்கிலும் பிரம்மாநந்தம் வேறுண்டோ! நீங்கள் சொல்வதெல்லம் சரியான நியாயந்தான். அவள் இப்போது உயிரோடிருந்தால், அவள் மேல் எவ்விதமான தோஷமும் கற்பியாமலும், அவளிடம் கொஞ்சமும் அருவருப் பில்லாமலும் அவளைச் சம்சாரமாக ஒப்புக் கொள்வீர்களா? அல்லது, இராமன் சீதையை நெருப்பில் விழுந்து விட்டு வரச் சொன்னதைப்போல நீங்களும் ஏதாவது ஆட்சேபனை சொல்லுவீர்களா?" என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி; "அடாடா! அவளை உயிரோடு காணும் அதிர்ஷ்டம் இனிமேல் எனக்கு உண்டாகுமா? அவளைத் தான் உயிரோடு அள்ளிக் கொடுத்து விட்டேனே! அவளை அழைத்துக் கொள்வேனா என்ற சந்தேகங்கூடவா கொள்ள வேண்டும்! அவள் மாத்திரம் திரும்பி வருவாளானால், அவளை என் குல தெய்வமாக வல்லவா வைத்து வணங்குவேன். மாசற்ற பத்தரைமாற்றுத் தங்கமாகிய என்னுடைய மேனகாவை இந்த ஜென்மத்தில் நான் இனிமேல் காணப்போகிறேனா!" என்று கரைகடந்த ஏக்கமும் விசனமும் அடைந்தவனாய் வருந்திக் கூறினான்; அதைக் கேட்ட அந்த மடமங்கை மிகவும் புன்னகைக் கொண்டு, "அப்படியானால் மேனகாவை ஏற்றுக் கொள்ளுங்கள். அவள் இந்த வெள்ளைக் காரியின் உடைக்குள் மறைந்துகொண்டிருக்கிறாள். அவள் இதுவரையில் எமலோகத்தில் இருந்தாள்; இப்போது சுவர்க்கலோகத்துக்கு வந்து விட்டாள்" என்று கூறிய வண்ணம், அதுவரையில் கழற்றாத வெள்ளைக்காரத் தொப்பியைக்

கழற்றிக் கீழே வைத்துவிட்டு ஆசையோடு அவனுக்கருகில் நெருங்கினாள். அவளது சொல்லைக் கேட்ட வராகசாமி திக்பிரமை கொண்டவனாய் அவளது முகத்தை உற்று நோக்கினான். அவளது சிரத்தின் கேசம், வெள்ளைக் காரியின் கேசத்தைப்போலப் பலவகையாக வரையப் பட்டிருந்தது. முகத்தில் வெள்ளை மா பூசப்பட்டிருந்தது. பல நாட்களாக அவளது குரலைக் கேட்கும் போதெல்லாம் அது அதற்குமுன் பழக்கமான குரலென்று அவனது மனதில் ஓர் எண்ணம் உதித்துக் கொண்டே இருந்தது; அவளது குரல் மேனகாவின் குரலைப் போல இருப்பதாக ஒவ்வொரு சமயத்தில் அவனது மனதில் பட்டதுண்டு. இப்போது தானே மேனகா வென்று அவள் சொன்னவுடன் அவளது குரலே அதைச் சந்தேகமற நிச்சயப் படுத்தியது; பலவகையான தலைமயிர்ப் பின்னலுக்குள்ளும், மேலே பூசப்பெற்ற மாவிற்குள்ளும் மறைந்து வேறுபட்டுத் தோன்றிய தனது மனைவியின் முகத்தை அவன் உடனே கண்டு கொண்டான். அவனது அப்போதைய நிலைமையை வருணிக்க யாராலாகும்! உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உரோமம் சிலிர்த்தது; ஆநந்தம் பரவியது; அவன் தன்னை மறந்து துள்ளிப் பாய்ந்து அவளை இழுத்துக் கட்டிலில் உட்காரவைத்து ஆவலோடு கட்டியணைத்து முத்தமிட்டு, "மேனகா! என் கண்ணே! என்னால் நீ எவ்வளவு கஷ்டத்துக்கு ஆளானாய்! ஆகா! என்ன காலம்! என்ன கோலம்!" என்று கூறிக் கண்ணீரைச் சொரிய, அவள் கரைகடந்த இன்பத்திலும் துன்பத்திலும் பொங்கிப் பொருமி விம்மி விம்மி யழ, இருவரும் தம்மை மறந்தவராய் வாய்திறந்து பேசமாட்டாமல் ஊமைகளைப் போல அந்த ஆலிங்கனத்திலேயே பிணைக்கப்பட்டு அசை வற்று ஆநந்தவாரிதியில் ஆழ்ந்துவிட்டனர்.

"மருங்கில்லா மங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர்;

கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசலும் வேண்டுமோ?"

என்றபடி அவர்களிருவரும் பேசலும் வேண்டுமோ? இருவர் மனதிலும் கரைகடந்து பொங்கி வழிந்த உவகை வெள்ளத்தில் புதைபட்டு லயித்து அரை நாழிகை வரையில் அவர்கள் அப்படியே கல்லாய்ச் சமைந்திருந்தனர்.

அந்தச் சமயத்தில், அவர்களிருந்த அறைக்கு வெளியில் ஏதோ பெரிய கூக்குரல் உண்டாயிற்று. பெருந்தேவியம்மாள் கோபமாக யாருடனோ உரக்கப் பேசி சண்டை யிடுவதாய்த் தோன்றியது; வரவர அந்த இரைச்சல் அதிகரித்தது. அவர்களிருந்த அறையின் வாசற்படிக்கருகில் நெருங்கி வருவதாகத் தோன்றியது; அந்தக் கூக்குரலில் கனகம்மாளின் குரலும் உண்டாயிற்று.

அப்போது பெருந்தேவியம்மாள், "அடி கனகி! நீ மானமுள்ளவளா யிருந்தால், திரும்பவும் என்னுடைய வீட்டுக்குள் அடி வைப்பாயா? என்னவோ செய்துவிடுவதாகப் பயமுறுத்திவிட்டுப் போனாயே? என்னடி செய்தாய்? கெட்ட கேட்டுக்குக் கொண்டைபோட்ட முண்டாசம்; உன்னுடைய பேத்திதான் நாடகக்காரப் பயலோடு ஓடிப்போய் விட்டாளே! அவளுக்கும் நாடகக்காரனுக்கும் குழந்தை பிறந்திருக்கிறதாம்; உன்னுடைய கொள்ளுப்பேரனுக்கு ஜாதகரணம் நாமகரணம் பண்ணிவைக்கப் போடி; இனிமேலே இங்கே உனக்கு என்ன வேலை? மாப்பிள்ளையை நீ பார்க்காவிட்டால், அவன் செத்துப் போய்விடமாட்டான்; போ வெளியில்; நாங்கள் நிச்சயதாம்பூலம் செய்யப் போகிறோம்;மொட்டை முண்டை யான நீ அபசகுனமாய்க் குறுக்கே வருகிறாயா? எடு துடைப்பக் கட்டையை" என்றாள். அதைக் கேட்ட கனகம்மாள் பொறுமையோடு, "பெருந்தேவியம்மா! என்னை எவ்வளவு

வேண்டுமானாலும் வைதுகொள். பெண்ணைக் கொடுத்ததற் காக இந்த மரியாதைகளை நாங்கள் அடைய வேண்டியது அவசியந்தான். கடைசியாக எங்களுடைய மாப்பிள்ளையை ஒருதரம் பார்த்துவிட்டுப் போகிறோம். அவர் செத்துப் பிழைத்தாரென்று நாங்கள் வைத்தியசாலையில் கேள்விப்பட்டோம்! பார்த்துவிட்டுப் போக வேண்டு மென்று வந்தோம்; பார்த்துவிட்டு உடனே போய்விடுகிறோம்" என்று நயமாக மறுமொழி கூறினாள்.

அதற்குள் சாமாவையர், "பெருந்தேவியம்மா! புதிய சம்பந்திகளுக்கெதிரில் சண்டை போடவேண்டாம்; இவர்கள், மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போகட்டுமே; அதனால் உனக்கு நஷ்டமென்ன?" என்றார்.

அதைக் கேட்ட பெருந்தேவி, "சரி; அப்படியானால் பார்த்து விட்டுப் போடி; இதோ இருக்கிறான். ஆனால் நீ அவனோடு பேச்சுக் கொடுப்பாயானால், பார்த்துக்கொள்; தலையைச் சிரைத்துக் கழுதை மேல் வைத்து வெளியில் ஓட்டிவிடுவேன்" என்று கூறியவண்ணம் வராகசாமி யிருந்த அறையின் கதவை படே ரென்று திறந்தாள்.

அப்போதே தமது உணர்வைப் பெற்ற வராகசாமியும் மேனகாவும் திடுக்கிட்டுத் தமது ஆலிங்கனத்தைத் தளர்த்தினர். உடனே மேனகா கட்டிலிலிருந்து விரைவில் எழுந்து தனது தொப்பியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, வெட்கமும், நாணமும் அடைந்தவளாய் ஒரு மூலையில் ஒதுங்கினாள். அறையின் வாசற்படியில் பெருந்தேவியம்மாள், கோமளம், சாமாவையர், கனகம்மாள், தங்கம்மாள், கிட்டன், வரதாச்சாரியார், இன்னம் அவரது பந்துக்களான ஏழெட்டு ஆண் பெண் பாலர் ஆகிய எல்லோரும் இருந்தனர். நோயாளியாயிருந்த வராகசாமியும், பணிப்பெண்ணான

வேண்டுமானாலும் வைதுகொள். பெண்ணைக் கொடுத்ததற்காக இந்த மரியாதைகளை நாங்கள் அடைய வேண்டியது அவசியந்தான். கடைசியாக எங்களுடைய மாப்பிள்ளையை ஒருதரம் பார்த்துவிட்டுப் போகிறோம். அவர் செத்துப் பிழைத்தாரென்று நாங்கள் வைத்தியசாலையில் கேள்விப்பட்டோம்! பார்த்துவிட்டுப் போக வேண்டு மென்று வந்தோம்; பார்த்துவிட்டு உடனே போய்விடுகிறோம்" என்று நயமாக மறுமொழி கூறினாள்.

அதற்குள் சாமாவையர், "பெருந்தேவியம்மா! புதிய சம்பந்திகளுக்கெதிரில் சண்டை போடவேண்டாம்; இவர்கள், மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போகட்டுமே; அதனால் உனக்கு நஷ்டமென்ன?" என்றார்.

அதைக் கேட்ட பெருந்தேவி, "சரி; அப்படியானால் பார்த்து விட்டுப் போடி; இதோ இருக்கிறான். ஆனால் நீ அவனோடு பேச்சுக் கொடுப்பாயானால், பார்த்துக்கொள்; தலையைச் சிரைத்துக் கழுதை மேல் வைத்து வெளியில் ஓட்டிவிடுவேன்" என்று கூறியவண்ணம் வராகசாமி யிருந்த அறையின் கதவை படீரென்று திறந்தாள்.

அப்போதே தமது உணர்வைப் பெற்ற வராகசாமியும் மேனகாவும் திடுக்கிட்டுத் தமது ஆலிங்கனத்தைத் தளர்த்தினர். உடனே மேனகா கட்டிலிலிருந்து விரைவில் எழுந்து தனது தொப்பியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, வெட்கமும், நாணமும் அடைந்தவளாய் ஒரு மூலையில் ஒதுங்கினாள். அறையின் வாசற்படியில் பெருந்தேவியம்மாள், கோமளம், சாமாவையர், கனகம்மாள், தங்கம்மாள், கிட்டன், வரதாச்சாரியார், இன்னம் அவரது பந்துக்களான ஏழெட்டு ஆண் பெண் பாலர் ஆகிய எல்லோரும் இருந்தனர். நோயாளியாயிருந்த வராகசாமியும், பணிப்பெண்ணான

யினும், விபச்சாரத்தில் மாத்திரம் நாட்டமில்லாத சுத்தனென்பதை அவர்கள் சந்தேகமற உணர்ந்தவராதலின், அப்படிப் பட்ட நிர்ணயமுள்ள மனிதன் தனது தேகம் கேவலமான நிலைமையில் இருக்கும்போது வெள்ளைக்காரப் பெண்ணோடு சரச சல்லாபம் செய்துகொண்டிருப்பானோ வென்று அவர்கள் பெரிதும் திகைப்படைந்தனர்; பெருந் தேவியும், கோமளமும் வெள்ளைக்காரப் பெண்ணின் மீது கரைகடந்த ஆத்திர மடைந்து அவளைத் தண்டிக்கப்போனது நியாயமென்றே நினைத்து அவர்களும் ஆத்திரத்தோடு வாளா நின்றுகொண்டிருந்தனர். பெருத்த பேய்களைப்போல பணிமகளின்மீது பாய்ந்த சகோதரிகள் இருவரும் பேரிடி முழக்கம் செய்து அவளைத் தாறுமாறாக வைது வருத்த முயன்றனர். அவளது சிரசிலிருந்த தொப்பியை கோமளம் தட்டி விடவே, அது நெடுந்தூரத்திற் கப்பால் போய் விழுந்தது. பெருந்தேவியம்மாள் கையை ஓங்கி அந்தப் பெண்ணின் கன்னத்தில் இடித்துவிட்டு, மெல்லிய மஸ்லின் துணியால் அழகாகத் தைக்கப்பட்டிருந்த அவளது வெள்ளைக்கார உடையைக் கையால் பிடித்திழுத்து, அவளை உதைக்கத் காலைத் தூக்கினாள்.

அவ்வாறு அவள் செய்த கொடுமையைக் கண்ட வராகசாமி அடக்க இயலாத ஆத்திரமும் வீராவேசமுங் கொண்டு, "அடி கோமளம்! அவளிடம் போகாதேயுங்கள். அவளைத் தொட்டால் கையை வாங்கி விடுவேன்; போகவேண்டாம்; வாருங்கள் இப்படி" என்று ஓங்கி அதட்டிக் கூச்சலிட்டவனாய்த் தனது சயனத்தை விட்டு எழுந்திருக்க முயன்றான். ஆனால், அவனால் எழுந்திருக்கக் கூடவில்லை. சகோதரிகளோ அவனது சொல்லைக் காதில் வாங்காமல் பணிப்பெண்ணை மேன் மேலும் வருத்தியதைக் கண்ட வராகசாமியின் கோபமும் ஆவேசமும் ஒன்றுக்கு நூறாய்ப்

பெருகின. அவன் தனது சகோதரிகளைத் தாறுமாறாக வையத் தொடங்கினான். "அடீ போக்கிரி முண்டைகளா! அவளைத் தொடவேண்டா மென்கிறேன்; அவளை அடிக்கிறீர்களா! இதோ உங்களுடைய மண்டையைப் பிளந்து விடுகிறேன். கொலை பாதகிகளா! அவளை யாரென்று நினைத்தீர்கள்? மேனகாவல்லவா அவள்; இனிமேல் அவளைத் தொட்டால், உங்களுடைய உயிரை வாங்கிவிடுவேன்" என்று பெருங்கூச்சலிட்டு அதட்டிக் கூறினான். அதற்குள் பணிமகளின் மேலிருந்த வெள்ளைக்கார உடைகளையெல்லாம் சகோதரிகள் கிழித்தெறிந்து விட்டனர்.

அப்போது கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக, வெள்ளைக்கார உடைக்குள்ளிருந்து மேனகா வெளிப்பட்டாள். அவள் தனது அழகிய பட்டுப் புடவையை உட்புறத்தில் உடம்போடு உடம்பாக இறுக்கிக் கட்டிக்கொண்டிருந்த காட்சி; கண்கொள்ளாத அற்புதக் காட்சியாக இருந்தது. அவ்விரு சகோதரிகளால் மேனகா மிகவும் வருத்தப்பட்டபோது, அவளது முகத்திலிருந்து வியர்வை ஒழுகிய தாகையால், அது அவளது முகத்திலிருந்த வெள்ளை மாவை முற்றிலும் கலைத்து அலம்பிவிட்டது. தலையின் பின்னல்களைத் தவிர, மற்ற பாகங்களிலிருந்து, அவள் மேனகாதான் என்பது எல்லோர்க்கும் தத்ரூபமாக உடனே தெரிந்தது; அவ்வாறு வெள்ளைக் காரிக் குள்ளிருந்து மேனகா தோன்றியது பீதாம்பரய்யர் ஜாலத்தைப்போல விருந்தது. அவள் மேனகா வென்பது தெரிந்தவுடன், சகோதரிகள் அவளை விட்டு விட்டனர். மேனகாவோ, தான் அடிபடுவதைச் சிறிதும் பொருட் படுத்தாமல், தனது கணவன் கட்டிலை விட்டு எழுந்து வந்து கீழே வீழ்ந்து விடுவானோ வென்று பெரிதும் கவலையும் அச்சமுங்கொண்டு கட்டிலண்டை ஓடி வராகசாமியை அமர்த்தினாள். எதிர்பாராத அந்த மாறுதலைக் கண்ட சகோதரி களிருவரும் திகைத்து, திக்பிரமை கொண்டு ஒன்றும் தோன்றப்

பெறாதவராய் பேச்சு மூச்சற்று ஒரு நிமிஷநேரம் ஸ்தம்பித்து நின்றனர். மேனகாவைக் கண்ட கனகம்மாளோ கன்றைப் பிரிந்து கண்ட தாயைப்போல, "ஆ! மேனகா!" என்று வீரிட்டுக் கத்திக் கொண்டு அம்பு பாய்வதைப் போல ஒரே பாய்ச்சலில் பாய்ந்து மேனகாவைப் பிடித்து இறுகத் தழுவி யெடுத்தாள். தங்கம்மாள், இன்னமும் தளர்வடைந்த நிலைமையி லிருந்தாளே அவள் தன்னை முற்றிலும் மறந்து கனகம்மாளைத் தொடர்ந்தோடி மேனகா, கனகம்மாள் ஆகிய இருவரையும் ஒன்றாகச் சேர்த்து ஆவலோடு ஆலிங்கனம் செய்தவளாய், " என் கண்ணே! உனக்கு என்னென்ன கஷ்டம் வந்ததம்மா!" என்று கூறி வாய்விட்டுக் கதறினாள். அவர்கள் மூவரும் அணைத்துக் கொண்டு அழுது ஆநந்தக் கண்ணீர் விடுத்துப் பாகாய் உருகிய காட்சி கல்லையும் கரையச் செய்யும் பரிதாபகரமான காட்சியாக இருந்தது. கனகம்மாளும், தங்கம்மாளும் குழந்தையை எடுப்பதைப்போல மாறி மாறி மேனகாவை எடுத்தணைத்து முத்தமிட்டு பிரலாபித்ததைக் கண்ட வராகசாமி விம்மி விம்மி யழுது தனது படுக்கையில் கிடந்து தத்தளித்தான்; அவனது மனதில் சகோதரிமாரின் மீது மிகுந்த கோபமும், ஆத்திரமும் பொங்கி யெழுந்தன; அவர்களது பெருத்த வஞ்சகத்தை அத்தனை மனிதருக்கும் முன்பாக வெளியிட்டு அவர்களை அவமானப்படுத்தி, தக்கவாறு தண்டிக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றி வதைத்தது.

திடீரென்று பெருத்த திகைப்படைந்த பெருந்தேவி இரண்டொரு நிமிஷத்தில் துணிவடைந்தாள். இரகசியம் முற்றிலும் வராகசாமிக்குத் தெரிந்துவிட்ட தென்பது அவளது மனதில் நிச்சயமாய்ப் பட்டதேனும் தான் துணிந்து வாயடி யடித்துத் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று அவள் ஒருவாறு உறுதி செய்துகொண்டாள். தமக்கு விஷயம் ஒன்றுமே தெரியா தென்று சொல்லிவிடவும், மேனகா நாடகக்காரனோடு சென்றவளென்றே அழுத்தந்திருத்தமாகக் கூறவும் தீர்மானித்துக்

கொண்டவளாய், அவள் மிகுந்த ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் காண்பித்து, "அடே வராகசாமி! என்ன காரியம் செய்தாய்! உன்னுடைய புத்தி இப்படிப் போகுமா! இவள் செய்த காரியத்தைப் பார்த்து ஊர் சிரிக்கிறதே! இந்தக் கூத்தாடிச்சியை நம்முடைய வீட்டில் சேர்க்கலாமா? நம்முடைய வீட்டில் இனிமேல் நாய்கூட ஜலபானம் செய்யாதே; முன்னால் இவர்களை யெல்லாம் வெளியில் போகச்சொல்; என்னுடைய பங்களாவில் இவர்கள் ஒரு நிமிஷமும் இருக்கக்கூடாது. போகச் சொல்" என்று பெருத்த கூச்சலிட்டு அதிகாரமாகக் கூறி வராகசாமியை அதட்டினாள். அதற்குமுன் அவன் தங்களது சொல்லை வேதவாக்கியமாக மதித்து அதன்படியே செய்து வந்ததைப் போல அப்போதும் அடங்கிப்போவானென்று பெருந்தேவியம்மாள் நினைத்தே அவ்வாறு கூறினாள். ஆனால், அந்த மருந்து இப்போது பலிக்காமல் போயிற்று. அவளது சொற்கள் எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பதைப்போல அவனது கோபத்தைக் கிளப்பி விட்டன; அவன் கோபங்கொண்ட ஆண் சிங்கத்தைப் போலானான். அவனது தேகமும் சொற்களும் படபடத்துத் தோன்றின; அவன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு "அடி துஷ்டை! வாயை மூடு!! இனிமேல் இவர்களைப் பற்றி அவமரியாதையாகப் பேசினால், நாக்கை யறுத்துவிடுவேன்; வீணாக என்னுடைய கோபத்தைக் கிளப்பிவிட்டு அவமானப் படாதே; நடந்த சங்கதி யெல்லாம் எனக்குத் தெரியும். என்னிடம் இனிமேல் வாலையாட்டாதே. என் முன்னால் நிற்காதே! போ வெளியில்; உன்னைப்பார்க்க கண் கூசுகிறது; துரோகி!" என்று உரக்கக் கூவினான்.

அதைக் கேட்ட பெருந்தேவியம்மாள் உடனே நரசிம்மாவதாரமெடுத்தவளாய், "என்ன கொலை சங்கதியடா நீ தெரிந்து கொண்டாய்? நாடகக்காரப் பயலோடு கெட்டலைந்து விட்டு வந்த விபசாரி நாய்க்கு வேஷம்போட்டு என்னுடைய

வீட்டுக்குள்ளே சேர்த்துக் கொண்டதுமன்றி, எங்களைத் தாறுமாறாகப் பேசி அதட்டுகிறாயா! என்னடா உன் புத்தி இப்படிக் கெட்டுப்போய்விட்டது. இவள் உன்னோடு கூட இருந்து மருந்துதான் போட்டுவிட்டாள். அதனாலே தான் நீ இப்படித் துணிந்து பேசுகிறாய்; தலைகால் தெரியாமல் ஆடுகிறாய்; மரியாதையாக இவர்கள் மூன்றுபேரையும் இந்தப் பங்களாவை விட்டுப் போகச் சொல்லுகிறாயா? இல்லாவிட்டால் நானே செருப்பாலடித்து ஓட்டட்டுமா? நம்முடைய குலமென்ன! கோத்திரமென்ன! நாடக்காரப் பயல் வீட்டில் பலநாள் இருந்து, சோறு தின்று, கட்டிப்புரண்டு விட்டு வந்திருக்கிறவளை மானமுள்ளவன் கையாலும் தொடுவானா? அநியாயமாய் ஜென்மத்தைக் கெடுத்துக் கொண்டாயேடா? போனது போகட்டும், உடனே இவர்களை வெளியில் போகச் சொல்; நீ பிராயச்சித்தம் செய்து கொண்டு விடலாம். இல்லாவிட்டால் புது சம்பந்திகள் பெண் கொடுக்க மாட்டார்கள்" என்று சடசடவென்று புளியம்பழங்களை உதிர்ப்பதைப் போலப் பேசி, கைகால்கள்ளை எல்லாம் நீட்டி நீட்டி நாடக மாடினாள்.

அதைக் கேட்ட வராகசாமிக்கு ரௌத்திராகாரமாகக் கோபம் பொங்கி யெழுந்தது. அவனது உடம்பு படபட வென்று துடித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது. அவன் மிகவும் மூர்க்கங் கொண்டவனாய் உடனே எழுந்து அக்காளது பற்களை உடைத்து விட வேண்டு மென்று நினைத்தான்; தனது கையிலிருந்த கடிதங்களை எடுத்துப் படித்து, இரகசியங்களை யெல்லாம் வெளியிட்டு அவளது இறுமாப்பை அடக்க எண்ணி அதைப் பிரித்தான். அந்தக் குறிப்பை நுட்பமாக உணர்ந்த மேனகா, கட்டிலுக்கருகில் அன்போடு நெருங்கி மற்றவர் செவிகளில் படாவிதமாக இரகசியமாகவும் வணக்கமாகவும் பேசத்தொடங்கி, "கோபம் வேண்டாம்; அக்காளுக்கு

அவமானம் வந்தாலென்ன? நமக்கு அவமானம் வந்தாலென்ன? வேண்டாம் பொறுத்துக் கொள்ளுங்கள்.” மகா பாதகியான பெருந்தேவியின் விஷயத்தில் மேனகா அவ்வாறு பரிந்து பேசியது வராகசாமியின் மனதிற்கு அருவருப்பைத் தந்தது. அவன் அவளைப் பாராமல் அதிருப்தியாக இன்னொரு பக்கம் திரும்பினான். அப்போது மேனகா, வராகசாமியிடத்தில் தன்னைக்குறித்து ஏதோ கோள் சொல்லுகிறாளென்று நினைத்துக்கொண்ட பெருந்தேவியம்மாள் மிகுந்த கோபத்தோடு மேனகாவைப் பார்த்து, “குடியைக் கெடுத்த ராக்ஷசி! என்னடி அவனுடைய காதில் மந்திரம் ஓதுகிறாய்? சட்டைக்காரி வேஷமா போட்டுக் கொண்டு வந்தாய்! இந்த வேஷம் போட, நாடகக்காரப் பயலிடத்தில் கற்றுக் கொண்டாயா? நீ எல்லா வேஷமும் போடுவாய்! நல்ல மானமுள்ள குடும்பத்தில் பிறந்தவள் இந்த மாதிரி வேஷம் போட்டுக் கொள்ளுவாளா? அவனுடைய காதிலே என்னடி குசுகுசு மந்திரம் ஓதுகிறாய்? மானங்கெட்ட நாயே! போ வெளியிலே; என்னுடைய பங்களாவிலே ஏனடி வந்தாய்? ஜாதி கெட்ட பஜாரி! ; கறுத்த மூளி!” என்று மிகவும் இழிவாக அவளை வைது, தூரத்திலிருந்தபடி காலையும் கையையும் தூக்கி நீட்டி நீட்டி, உதைப்பதாகவும், அடிப்பதாகவும் காட்டினாள். கனகம்மாள் தங்கம்மாள் ஆகிய இருவரது தேகமும் துடிதுடித்தன; அவர்கள் அவமானத்தில் குன்றிப் போய் அசைவற்று நின்றனர். மேனகா, பெருந்தேவிக்குப் பரிந்து பேசியதற்குப் பதிலாக பெருந்தேவி அவளை வைததைக் காண, வராகசாமியின் மனம் கொதித்தெழுந்தது. அவனது கோபம் அப்போது உச்சி நிலையை அடைந்தது. தேகம் முற்றிலும் வியர்த்து, வெடவெடவென்று ஆடியது. அந்த நிலைமையில் அவன் அக்காளை உருட்டி உருட்டி விழித்துப் பார்த்தான்; தனது கையிலிருந்த கடிதத்தை நோக்கினான். அதைக் கண்ட மேனகா திரும்பவும் அவனுக்கருகில் நெருங்கி

முன்னிலும் அதிக உருக்கமாக, “ அக்காள் சொல்வதை யெல்லாம் சொல்லிக் கொள்ளட்டும். நீங்கள் பதிலே பேசவேண்டாம். இந்தச் சாமாவையருக்கும், புது சம்பந்தி முதலியோருக்கும் இனிமேல் இங்கே என்ன வேலை இருக்கிறது? போகச் சொல்லுங்கள். எல்லாவற்றையும் நாம் அப்புறம் கேட்டுக் கொள்ளலாம்” என்று கூறி இரகசியமாக நயந்து வேண்டினாள். அப்போது திகைப்படைந்து நடுநடுங்கி ஒரு பக்கத்தில் நின்ற சாமாவையரை வராகசாமி பார்த்து, “அடே சாமா! இதுவரையில் உன்னை நான் மிகவும் யோக்கியனென்று நினைத்தேன். நீ செய்ததெல்லாம் வெளியாய்விட்டது. உன்னுடைய முகத்தைப் பார்க்கவும் கூசுகிறது. என் முன்னால் நிற்காதே, போய்விடு; இனிமேல் நீ எங்களுடைய வீட்டில் அடி வைக்கக்கூடாது. உன்னுடைய சிநேகிதர்களான சம்பந்தி களையும் அழைத்துக் கொண்டுபோ; நீங்கள் எனக்குக் கலியாணம் செய்து வைத்தது போதும்; நட வெளியில்” என்று கண்டிப்பாகவும் மிகுந்த அருவருப்போடும் கூறினான். அதைக் கேட்ட வரதாச்சாரியாரும் அவரது பந்துக்களும் வெட்கிக் கீழே குனிந்து கொண்டனர்; சாமாவையரோ சகிக்க இயலாத அவமானம் அடைந்தார். எனினும், ஏதோ விஷயத்தைச் சொல்லுவதற்காக தமது வாயைத் திறந்து கனைத்துக் கொண்டார். சாமாவையரையும் சம்பந்திகளையும் வெளியிற் போகும்படி வராகசாமி சொன்னதைக் கேட்ட பெருந்தேவியம்மாளது கோபம் முன்னிலும் பெருகியது.

அவள் சாமாவையரைப் பார்த்து அழுத்தமாக, “அடே சாமா! நீ போக வேண்டாம்; சம்பந்திகளும் போகவேண்டாம். என்னுடைய பங்களாவிலிருக்கும் உங்களை வெளியிலே போகச் சொல்ல யாருக்கு அதிகாரம் இருக்கிறது? வராகசாமிக் கென்ன தெரியும்? இந்த தேவடியாள் சிறுக்கியின் சொக்குப் பொடியில் மயங்கி இவன் இப்படி உளறுகிறான். இவன்

சம்பந்தியைப் போகச்சொன்னால், அவரிடம் வாங்கின பதினாயிரம் ரூபாயை எந்தப் பாட்டன் கொடுப்பான்! இந்தக் கழுதை முண்டை நாடகக்காரனிடம் பணம் வாங்கிக்கொண்டு வந்து வராகசாமியிடம் கொடுத்திருக்கிறாளோ! அடே வராகசாமி! உனக்கென்ன பைத்தியமாடா! சூத்திரனோடு ஓடிப்போனவளை அழைத்துக் கொண்டுவந்து நடு வீட்டிலே வைத்துக் கொண்டாயே! என்ன மானக் கேடடா இது? ஓடிவிடு வெளியில்; இல்லாவிட்டால், நானே கழுத்தைப் பிடித்து இதோ தள்ளப்போகிறேன்" என்று அதட்டிக் கூறினாள்.

அவளது சொற்கள் வராகசாமி பொறுக்கக்கூடிய வரம்பைக் கடந்தனவாய்ப் போயின. கோபத்தினால் சிவந்த அவனது முகம் படீரென்று வெடிக்கும்போலத் தோன்றியது. அவன் மேனகாவின் வேண்டுகோளையும் மறந்தவனாய், "அடி! அக்காள்! - சே! உன்னை இனி அக்காள் என்று சொன்னால் என்னுடைய நாக்கு அழுகிப்போகும். - நீங்கள் செய்த காரியமெல்லாம் எவருக்கும் தெரியாதென்று நினைத்து நீ ஆட்டம் போடுகிறாயா? உன்னை அவமானப் படுத்த வேண்டாமென்று என்னிடம் கேட்டுக் கொள்ளும் மேனகாவை நீ தாறுமாறாகத் தூஷிக்கிறாயா? விஷப்பாம்பே! இதோ பார்த்தாயா! கோமளம் எழுதிய இந்தக் கடிதம் என்னிடம் வந்திருக்கிறது. அதில் நீயும், சாமாவும் கையெழுத்துப் போட்டிருக்கின்றீர்கள். இதோ படிக்கிறேன் கேள்" என்று கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். அதற்குள் மேனகா அவனது காலைப் பிடித்துக்கொண்டு, "படிக்கவேண்டாம்; படிக்கவேண்டாம்; க்ஷமித்துக்கொள்ளுங்கள்; அக்காள் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். எனக்கு அவமானம் வந்தால் அதைப் பற்றி விசனமில்லை. அக்காளுக்கு அவமானம் வரக்கூடாது" என்று கெஞ்சி மன்றாடினாள்.

தாம் நைனாமுகம்மது மரைக்காயனுக்கு எழுதிக் கொடுத்த கடிதம் வராகசாமியிடம் வந்துவிட்டது என்ற சங்கதியை உணர்ந்தவுடன் பெருந்தேவியம்மாள் இடி யோசையைக் கேட்ட நாகத்தைப்போல நடுநடுங்கிப் பின் வாங்கினாள். முகம் கீழே கவிழ்ந்தது; அவள் சுவரில் சாய்ந்தாள். கோமளம் சாமாவையர் ஆகிய இருவரும் முக்காற்பாகம் உயிரை இழந்தவர்களாகக் கீழே கவிழ்ந்த சிரத்தோடு அசைவற்று நின்றனர். தாங்கள் செய்ததை இனி மறைக்க முடியாதென்று கண்டவுடன், அம்மூவரும் குலை நடுக்கமும் பெருந்திகிலும் கொண்டு நெருப்பின் மீது நிற்போரைப் போல மிகவும் தத்தளித்து நின்றனர். அந்த ஒரு நொடியும் ஒருயுகத்தின் நரகவேதனையை அவர்களது மனதில் உண்டாக்கியது. பெருத்த ஜனக் கும்பலுக்குமுன் நிருவாணமாக நிறுத்தப்படுவோர் எவ்வாறு வெட்கத்தினால் வதைப் படுவார்களோ அவ்வாறு அம்மூவரும் பெருவேதனை அடைந்தனர். அவர்களது தேகங்கள் ஒரு சாணளவாய்க் குன்றின. என்ன செய்வதென்பதை அறிய மாட்டாமல் அவர்கள் அடங்கிப் போயினர். அப்போது அவ்விடத்தில் அற்பமான ஓசையுமின்றி நிசப்தமே குடிகொண்டிருந்தது.

அதே நிலைமையில் அவர்களிருந்த அறைக்கு வெளியில் யாரோ மனிதர் வந்த காலடியோசை மிகுதியா யுண்டாயிற்று; அடுத்த நொடியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ஐயரும், போலீஸ் ஜெவான்கள் நால்வரும் போலீஸ் உடையில் பிரசன்ன மாயினர். சமய சஞ்சீவி ஐயர் ஒன்றையும் அறியாத பரம சாதுவைப்போல வராகசாமிக் கெதிரில் வந்து விறைப்பாக நின்று சலாம் செய்தார். அவ்வாறு செந்தலைப் பூச்சிகள் திடீரென்று அங்கே தோன்றியதைக் கண்ட ஆண் பெண்பாலர் யாவரும் திடுக்கிட்டு அச்சமும் திகைப்பும் அடைந்தனர். மேனகா, கனகம்மாள், தங்கம்மாள் ஆகிய மூவரும் நாணமுற்று ஒரு பக்கமாக விலகிக்கொண்டனர்.

காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்ததும் ஒத்ததைப் போல தமது குற்றம் வெளியான அதே நிமிஷத்தில் நாடகக் காட்சியைப் போல போலீஸார் வந்ததைக் கண்ட பெருந்தேவி, கோமளம், சாமாவையர் ஆகிய மூவருக்கும் அடி வயிற்றில் நெருப்பு விழுந்தது. போலீஸார் தம்மைப் பிடித்துக் கொண்டு போகவே வந்திருப்பதாக அவர்கள் நினைத்து விட்டனர். பேரச்சத்தினால் அவர்களது தேகங்கள் முற்றிலும் வியர்த்து வெடவெடவென்று நடுங்கின; அசைவற்று நடைப் பிணங்களைப்போலச் செயலற்று நின்றனர். அவர்கள் எதற்காக அப்போது வந்தார்களோவென்று பெரிதும் வியப்பும், திகைப்பும் அடைந்த வராகசாமியோ படுக்கையை விட்டு நிமிர்ந்து உட்கார்ந்து, "சஞ்சீவி ஐயர்வாள்! வாருங்கள், வாருங்கள்; இந்த நாற்காலியில் உட்காருங்கள்!" என்று மிகுந்த அன்போடு வரவேற்று சற்று தூரத்திலிருந்த ஒரு நாற்காலியைக் காட்டி உபசரித்தான். தனது விஷயத்தில் தெய்வம்போலத் தோன்றி பெரிதும் உழைத்துத் தனது கற்பை நிலை நிறுத்திய மகாநுபாவர் அவரே என்பதை ஒரு நொடியிற் கண்டு கொண்ட பெண்மணியான மேனகா உடனே விரைவாக நடந்து சற்று தூரத்தில் கிடந்த ஒரு நாற்காலியை எடுத்து வந்து வராகசாமிக் கருகில் போட்டு விட்டு அப்பாற் சென்றாள். அவளது நடையுடை பாவனைகள் அவளது மனதில் பொங்கி எழுந்த நன்றியறிவின் பெருக்கை ஆயிரம் நாக்குகள் கொண்டு வெளியிட்டு அவருக்கு மனப்பூர்வமான வந்தனம் செலுத்துவதைப்போலத் தெற்றெனக் காண்பித்தன. அவளே மேனகா வென்பதை நுட்பமாக உணர்ந்து கொண்ட சஞ்சீவி ஐயர் பரம சாதுவும் குற்றமற்றவளுமான அந்தக் கற்புக்கரசி அப்போதடைந்த பிரம்மானந்தமே, தாம் அவள் பொருட்டு எவ்வளவோ பாடுபட்டு முயற்சிகள் செய்ததற்குப் போதுமான கைமாறென நினைத்து மனங்கொள்ளா மகிழ்ச்சியை அடைந்தார். என்றாலும், அவர் தமது முகக்குறியை முற்றிலும்

மறைத்துக் கொண்டவராய் வராகசாமியை நோக்கி, "எனக்கு உட்கார நேரமில்லை. வந்த காரியத்தை உடனே முடித்துக் கொண்டு போகவேண்டும்" என்றார்.

உடனே வராகசாமி அந்தரங்க அன்போடு, "அண்ணா! நீங்கள் அனுப்பிய கடிதம் இப்போதுதான் வந்தது. உங்களுக்கு பதில் நாளைய தினம் எழுதலாமென்று நினைத்தேன். என் விஷயத்தில் நீங்கள் செய்த பேருதவிக்கு நான் என்ன பதிலுபகாரம் செய்யப்போகிறேன்! இந்தக் கடிதம் வந்திராவிட்டால், நானும் என்னுடைய சம்சாரமும், மற்றவரும் உயிரை விட்டிருப்போம். எங்களுடைய குடும்பமே சீர்குலைந்து அழிந்துபோயிருக்கும். நீங்கள்தான் ஈசுவரனைப் போல வந்து எங்களை யெல்லாம் காப்பாற்றினீர்கள். உங்களுடைய பெயருக்குத் தகுந்தபடியே நீங்கள் எங்களுடைய விஷயத்தில் அமிர்த சஞ்சீவிபோல வந்து உதவினீர்கள்" என்று கூறிய வண்ணம் கண்ணீர் விடுத்தான்.

சஞ்சீவி ஐயர் அதைப்பற்றி எவ்விதமான சலனமும் அடைந்ததாய்க் காட்டாமல் அலட்சியமாக, "நாங்கள் புண்ணியத்துக்கா செய்கிறோம்! சம்பளம் வாங்க வில்லையா! நான் செய்த காரியத்துக்காக சன்மானம் வாங்கவேண்டுமென்று எதிர்பார்க்கவே இல்லை. நீங்கள் அதைப்பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்? எனக்கு நாழிகையாகிறது" என்றார்.

வராகசாமி, "அப்படியானால் உங்களுக்கு என்ன காரியம் ஆகவேண்டும்? இந்தக் கடிதத்தின் சம்பந்தமாகத்தானே நீங்கள் வந்தது?" என்றான்.

சஞ்சீவி ஐயர் புன்னகை செய்து, "இல்லை, இல்லை; நம்முடைய சாமாவையரிடம் வராமல் நான் வேறு யாரிடத்துக்கு வரப்போகிறேன். உங்களிடத்திலெல்லாம் எனக்கு என்ன வேலை இருக்கிறது? வக்கீலும் போலீசாரும்

எப்போதும் எதிர்க்கட்சிகாரர்களல்லவா! நாங்கள் ஒரு குற்றவாளியை நியாய ஸ்தலத்துக்குக் கொண்டுபோய் அவனைத் தண்டிக்கவேண்டு மென்றால், நீங்கள் அவனை விட்டுவிடவேண்டுமென்று எதிர்வாதாடுகிறவர்கள் அல்லவா; உங்களிடம் எனக்கு வேலை இல்லை" என்று வேடிக்கையாகப் பேசியவண்ணம் சாமாவையரது பக்கம் திரும்பி, "ஐயரவாள்! நாங்கள் தங்களுடைய பேட்டிக்காக வந்திருக்கிறோம். தாங்கள் செய்த காரியத்துக்காக துரைத்தனத்தார் தங்களை மிகவும் மெச்சி தங்களுடைய கைக்கு ஒரு மெடல் அனுப்பி யிருக்கிறார்கள். தயவு செய்து கையை நீட்டுங்கள்" என்று கூறிய வண்ணம் ஜெவான்களை நோக்கி சைகை செய்ய, அவர்கள் நால்வரும் சாமாவையரைச் சூழ்ந்து கொண்டனர். ஐயரோ கையும் களவுமாய்ப் பிடிபட்ட கள்ளனைப்போலத் திருட்டு விழி விழித்து, "எதற்காக விலங்கு போடுகிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்க, சமயசஞ்சீவி ஐயர், "என்ன ஐயரவாள்! தங்களுக்குத் தெரியாத காரியமுண்டா? எத்தனையோ திறமையான காரியங்களையெல்லாம் செய்த தாங்கள் இதன் காரணத்தை அறிந்து கொள்ள முடியவில்லையா? தங்களுடைய நண்பரான வராகசாமி ஐயங்காருக்குத் தாங்கள் செய்த காரியம் அற்பமானதா? ஆனால், அதற்காகத் தங்களுக்கு இந்தச் சன்மானம் கிடைக்க வில்லை. அதற்கு வராகசாமி ஐயங்கார் மனது வைத்துச் சன்மானம் செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டு வராகசாமியைப் பார்த்து, "இவர் உங்களுக்குச் செய்ததை மாத்திரந்தானே நீங்கள் அறிவீர்கள்; அதைத் தவிர எவ்வளவோ அருமையான காரியங்களை யெல்லாம் இந்த மகான் செய்திருக்கிறார். இவருடைய சக்தி நரியைப் பரியாக்கின ஈசுவரனுக்குக் கூட வராது. இவர் அன்னியர் வீட்டு மனிதரை விற்பதில் மாத்திரம் தேர்ந்தவரென்று நினைத் தீர்களா? இல்லை இல்லை? அன்னியருடைய பங்களா முதலியவற்றையும் சொந்தக்காரருக்குத் தெரியாமல் விக்கிரயம் செய்வதிலும் இவர் மகா சமர்த்தர். பிச்சைக்கார சாயப்புவை

இவர் ஒரு நிமிஷத்தில் கப்பல்கார சாயப்புவாக மாற்றி விடுவார்; அப்பனைப் பிள்ளையாகவும், பிள்ளையை அப்பனாகவும் மாற்றுவார்; தம்முடைய தம்பியை நாடகக்காரனாக மாற்றுவார். இவருடைய அபார சக்தி யாருக்கு வரும்! இவர் என்ன செய்தார் தெரியுமா? இந்தப் பங்களாவை வாங்கியதாக உங்களுடைய அக்காளிடம் எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டாரோ தெரியவில்லை. அந்தப் பணத்தை இவரே எடுத்துக் கொண்டார்; தீத்தாரப்ப முதலி தெருவிலிருக்கும் கருவாட்டு வியாபாரியான ஒரு சாயப்புவிடம் போய் நூறு ரூபாய் கொடுத்தார்; அவரைக் கப்பல்கார சாயப்புவாக மாற்றினார்; விக்கிரயப் பத்திரம் தயாரித்தார்; மகாலிங்கையர் பிள்ளை சாமாவையர் என்பதற்குப் பதிலாக சாமாவையர் பிள்ளை மகாலிங்கையர் என்று தம்மை மாற்றிக் கொண்டு சப் ரிஜிஸ்டிரார் கச்சேரியில் சாட்சியாக ஆஜராயினார்; பங்களாவை வாங்கி விட்டதாகப் பொய்ப்பத்திரம் தயாரித்துப் பதிவு செய்து உங்களுடைய சகோதரியிடம் கொடுத்து விட்டார். பங்களாவின் உண்மையான சொந்தக்காரர் நாகைப்பட்டணத்தில் இருக்கிறார். அவருக்கு ஒரு மாசத்து வாடகைப் பணத்தை ரகசியமாக அனுப்பி விட்டு, பங்களாவைத் தமது வசப்படுத்திக் கொண்டு அதில் உங்களைக் குடிவைத்தார். இத்தனை திருவிளையாடல்களையும் செய்த இவர் ஒரு விஷயத்தை மாத்திரம் கவனிக்க மறந்து விட்டாரோ அல்லது அதைப் பிறர் கவனிக்க மாட்டார்களென்று நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை. சப் ரிஜிஸ்டிரார் கச்சேரியில் தம்முடைய கையின் ரேகை அடையாளம் இருக்குமேயென்பதையும், அதனால் பிறர் இந்த ரகசியத்தைக் கண்டு கொள்வார்களே என்பதையும் மறந்து விட்டார். இருந்தாலும் இவருடைய அபார வல்லமையை நாங்கள் மனதார மெச்சுகிறோம்; அதன் பொருட்டே நாங்கள் இந்த மரியாதையை நடத்த வந்தோம். அடே! ஜெவான்!

ஐயரவாளுடைய கையில் தோடாவைப் பூட்டி விடுங்கள்! ஊர்வலமாக மேளதாளத்துடன் ஜாம்ஜாமென்று ஐயரவாள் பவனி புறப்படட்டும்" என்றார். அதைக் கேட்கவே, இடி வீழ்ந்த கட்டிடத்தைப்போல சாமாவையருடைய மனமும் தேகமும் மீளா விதமாய் கல்கலத்துப் போயின; அவர் சித்தப்பிரமை கொண்டவரைப்போல மருண்டு மருண்டு விழித்து, ஓய்ந்து நின்று தவிக்கிறார்; வராகசாமி தம்மைக் காப்பாற்றுவானோ வென்று அவனை நோக்குகிறார். தாம் செய்ததெல்லாம் தவறென்றும் அவனிடம் கெஞ்சி மன்றாடுவதைப் போல அவரது பரிதாபகரமான முகம் தோன்றியது. பங்களா விஷயத்தில் தாம் முழுவதும் வஞ்சிக்கப்பட்டுப் போனதையும் எவ்வளவோ பாடுபட்டு நியாய வழியிலும் அநியாய வழியிலும் தேடிச் சேர்த்த ரூபாய் பதினாயிரத்தைந்நூறும் கூண்டோடு கைலாசம் போனதையும் கண்ட பெருந்தேவியும் கோமளமும் உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப் போல விழித்து பட்ட மரங்களோ வென்ன உணர்வு, பேச்சு மூச்சு முதலியவின்றி அசையாது நின்றனர்.

சமய சஞ்சீவி ஐயர் புன்முறுவலோடு வராகசாமியைப் பார்த்து, "நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். உங்களுடைய தீர்மானத்தைச் சீக்கிரம் தெரிவியுங்கள்" என்றார்.

அதைக் கேட்ட வராகசாமி, "நான் என்ன முடிவைத் தெரிவிக்கப்போகிறேன்? கடைசியில் என்னுடைய சம்சாரம் தற்கொலை செய்துகொள்ளவில்லை; டாக்டர் துரைஸானியின் உதவியால் என்னிடம் வந்து சேர்ந்துவிட்டாள். நியாய ஸ்தலத்துக்குப் போவதானால், நீங்கள் எழுதி யிருக்கிறபடி, எனக்குப் பெருத்த அவமானம்தான் உண்டாகும்; ஆகையால், நியாயஸ்தலத்துக்குப் போகாமலிருப்பதே நல்லதென்று தோன்றுகிறது" என்றான்.

சமய சஞ்சீவி ஐயர், "அப்படியா! நிரம்ப சந்தோஷம்! பழம் நழுவிப் பாலில் விழுந்தது! நெடுநாட்களாக விட்டுப் பிரிந்த சம்சாரத்தினிடம் தனிமையில் இரகசியமான பல விஷயங்களைப்பற்றிப் பேச நீங்கள் ஆவல்கொண்டிருப்பீர்கள்; ஆகையால், நான் உங்களுடைய சந்தோஷத்துக்கு இடைஞ் சலாக இன்னமும் இங்கே நிற்பது பாவம். நான் போய்விட்டு வருகிறேன்; நற்குண முடையவர்களை ஈசுவரன் காப்பாற்று வான்" என்று கூறிவிட்டு வெளியில் நடந்தார். ஜெவான்கள் வெளியில் நடக்கும்படி சாமாவையரைத் தூண்ட, அவர் அசையாமல் ஈயக் குண்டைப்போல அப்படியே நின்றார். அதைக்கண்ட இரண்டு ஜெவான்கள் உடனே தமது குட்டைத் தடிகளை எடுத்து இரண்டு விலாக்களிலுமுள்ள எலும்புகள் நொறுங்கும்படி நன்றாய் இடிக்க, ஐயர் அதைப் பொறுக்க மாட்டாமல், "ஐயோ! அப்பா!" என்று வீரிட்டு ஓசை செய்து மான்குட்டியைப்போலத் துள்ளி அறைக்கு வெளியில் அம்புபோலப் பாய்ந்தார்.

அதே நொடியில், அடுத்த பொக்கிஷ அறையிலிருந்து, "கூ! கூ! திருடன்! திருடன்! பெருந்தேவியம்மா! கோமளம்மா! திருடன்! திருடன்! வாருங்கள்! வாருங்கள்! ஓடுகிறான்! ஓடுகிறான்!" என்ற பெருத்த ஆரவார முண்டாயிற்று. அப்போது திடுதிடென்று சிலர் ஓடிய ஓசை உண்டாயிற்று; அதைக் கேட்டவுடன் அங்கிருந்தோர் யாவரும் பெருத்த அச்சமும் திகைப்பும் அடைந்தனர். வராகசாமியின் அறையிலிருந்து தப்பித்து அப்பால் போவதற்கு அதுவே சமயமென்று நினைத்த பெருந்தேவியம்மாளும் கோமளமும் ஓடினர்; கனகம்மாள், தங்கம்மாள், மேனகா ஆகிய மூவரும், வேடனைக் கண்ட மான்களைப்போல நடுநடுங்கி விழித்துக்கொண்டு நின்றனர். ஜெவான்கள் நால்வரும் சாமாவையரைச் சமயசஞ்சீவி ஐயரிடம் ஒப்புவித்துவிட்டு, ஓசையுண்டான இடத்தை நோக்கி

யோடினர்; பங்களாவை விட்டு வெளியிற் போகும் நினைவோடு காலை யெடுத்து வைத்த வரதாச்சாரியார் முதலியோர், திகைப்படைந்தவராய் திருடனைக் கண்டு பிடிக்கும் வரையில் தாம் வெளியிற் போகக் கூடாதென்று நினைத்து அவமானத்தினால் குன்றிப்போய் நின்றனர். சரியான பகல்வேளையில் திருடன் வருவானோ வென்ற வியப்பும் ஐயமும் அங்கிருந்த ஒவ்வொருவர் மனதிலும் குடிகொண்டு வதைத்தன.

இரண்டு நிமிஷ நேரத்தில் போலீஸ் ஜெவான்கள் நால்வரும், திருடனைப் போலக் காணப்பட்ட ஒரு முரட்டு மனிதனை இழுத்துக் கொண்டு வந்தனர். பின்னால் வந்தவளான பங்களாப் பெருக்கும் வேலைக்காரி, "என்ன அதிசியங்கறேன்! பட்டப்பகல்லே திருடன் பங்களாக்குள்ளாற வருவானோ! பனமரம் கணக்கா எம்பிட்டு ஒசரங்கறேன்! நல்லா இடுப்ப முறிங்க!" என்று வியப்போடு உரக்கக் கூவிக்கொண்டு ஓடி வந்தாள்.. அவளோடு கூட வந்த தோட்டக்காரன், "பணம் நவை உடுப்பு எல்லாம் வச்சிக்கிற அறையப் பாத்துல்ல நொளஞ்சுக்கினான்! நாங்க கூச்சப் போட்ட ஒடனே பூத்தொட்டி மறவுலேல்ல ஒளியறான். நானா உட்றவன்! தடியாலே நல்லா மொத்திட்டேன்" என்று கூறி தனது கையிலிருந்த மூங்கில் தடியைத் தூக்கி, இன்னமும் அடிக்க நினைப்பவனைப்போலக் காட்டினான். அவ்வாறு அவர்களிருவரும் தங்களது கீர்த்தியை வெளியிட்டபோது, அந்தத் திருடன் சஞ்சீவி ஐயருக்கு முன்னால் கொணர்ந்து நிறுத்தப்பட்டான். அவனை யாவரும் வலுவாக அடித்து விட்டன ராதலின், அவனது தேகத்திற் பலவிடங்களி லிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அவன் மயக்கங் கொண்டு துவண்டு விழுந்து தத்தளித்தவனாய், தனக்கு இன்னமும் எவ்விதமான தண்டனை கிடைக்குமோ வென்று பயந்து

அச்சத்தினால் மருண்டு மருண்டு விழித்தான். சஞ்சீவி ஐயரைக் கண்டவுடன் அவன் மிகவும் பரிதாபகரமான குரலில், "சாமி! மொதல்லே கொஞ்சுண்டு தண்ணி வேணும்; நான் திருடவல்லீங்க; என்னை அடிச்சுக் கொன்னுபுட்டாங்க" என்று தடுமாற்றத் தோடு கூறி மன்றாடிய வண்ணம் கீழே சாய்ந்துவிட்டான்.

அந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்ட சஞ்சீவி ஐயர் இரக்கங்கொண்டு தண்ணீர் வரவழைத்து அவனுக்கு உடனே கொடுத்துப் பருகுவிக்கும்படி செய்தார். ஐந்து நிமிஷத்தில் அவனது மூர்ச்சை தெளிந்தது; அவன் உடனே எழுந்து சஞ்சீவி ஐயரைப் பார்த்துக் கைகுவித்து, "சாமி! எசமாங்களே! ஒங்க புள்ளெகுட்டிங்க சொகமாயிருக்கணும்; என் உசிரெக் காப்பாத்தினீங்க; மவராசா! நான் திருடவல்லீங்க, நான் இருக்குறது செங்கப்பட்டுங்க" என்றான்.

சஞ்சீவி ஐயர், "அடே! பொய் சொல்லாதே; பொய் சொன்னால் இந்தப் பயல்கள் உன்மேல் நாயைப்போல விழுந்து கடித்து விடுவார்கள்; செங்கல்பட்டிலிருந்து இந்தப் பங்களாவுக்கு என்ன காரியமாக வந்தாய்? பங்களாவுக்கு வந்தவன் மற்ற இடங்களுக்குப் போகாமல், பொக்கிஷம் வைக்கும் அறைக்குப் போன காரணமென்ன?" என்றார். உடனே அந்த மனிதன், "நான் ஒரு அம்மாளுக்குக் கடுதாசி கொண்டாந்திருக்கிறேனுங்க. அந்த அம்மா இஞ்கே இருக்றாங் கன்னு சொன்னாங்க. வளிதெரியாமே உள்ளற வந்து புட்டேனுங்க: என்னெக்கண்டு திருடன் திருடன்னு ஆரோ கூவினாங்க. எனக்கு பயமா இந்திச்சு; ஓடினேனுங்க" என்றான். அதைக் கேட்ட யாவரும் ஆச்சரியமும் இரக்கமுங் கொண்டனர்.

உடனே சமய சஞ்சீவி ஐயர், "அடே! எந்த அம்மாளுக்கு கடுதாசி கொண்டுவந்தாய்? எடு அதை" என்றார்.

அதைக் கேட்ட அந்த மனிதன் தனது துணியிலிருந்த ஒரு முடிப்பை அவிழ்த்தவண்ணம், "காலையில் இருந்து எங்கெங்கே அலெஞ்சேனுங்க! அந்த அம்மாளேக் கண்டுபிடிக்க முடியல்லிங்க. ரயிலடியில் இக்குதே ராமசாமி முதலி சத்தரம்; அந்த சத்திரத்துலே இருப்பாங்க, கடுதாசியைக் குடுன்னு, அந்த ஐயா சொன்னாரு. அங்கே போனேன், இல்லே. அங்கே இருந்த காவக்காரன், யாராச்சும் தேடிக்கிட்டு வந்தா தொளசிங்கப் பெருமா கோயிலு தெருவுலே சாமா ஐயருன்னு ஒரு ஐயரு இருக்கறாரு; அவரு வூட்டுக்கு அனுப்பச் சொன்னாங்கன்னு சொன்னான். அங்கே போயிப் பாத்தேனுங்க தெரியுமா! இந்தக் கடுதாசியைப் பாருங்க. எல்லா வங்களாவேயும் தொரை மாரும், துலுக்கரும் இருக்காங்க. இந்த ஒரு வங்களாவேதான் ஐயமாரு இருக்கறாங்கன்னு கேள்விப்பட்டேன். இத்தேப் பாருங்க" என்று துணி முடிப்பிற்குள் துகையலாய்ப் போயிருந்த ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினான். சஞ்சீவி ஐயர் அதை வாங்கிப் பார்த்தார். அதன் மேல்விலாசம் அடியில் கண்டபடி எழுதப் பட்டிருந்தது.

"சென்னை பட்டணம் பார்க்கு ஸ்டேஷனுக் கருகிலுள்ள சர் சவலை இராமசாமி முதலியார் சத்திரத்தில் இறங்கி யிருக்கும், தஞ்சாவூர் டிப்டி கலெக்டர் சுவாமிகளுடைய தாயார் கனகம்மாள் அவர்களுக்கு. அனுப்பும் செங்கற்பட்டிலிருக்கும் ரெங்கராஜு"

என்று எழுதப்பட்டிருந்ததைப் படித்த சஞ்சீவி ஐயர் வராகசாமி இருந்த அறைக்குள் புன்னகை செய்தவண்ணம் நுழைந்து, "செங்கற்பட்டிலிருந்து ஒருவன் கடிதம் கொண்டு வந்திருக்கிறான். அவன் வழிதெரியாமல் பங்களாவுக்குள் நுழைந்துவிட்டான். அதற்குள், எல்லாரும் திருடன் திருடனென்று கூக்குரலிட்டு அவனை அடித்து முட்டாள்

தனமான காரியம் செய்து விட்டார்கள். டிப்டி கலெக்டருடைய தாயார் கனகம்மாளுக்கு செங்கல்பட்டி லிருந்து ரெங்கராஜு என்ற ஒருவன் அனுப்பி யிருக்கிறான்; அந்த அம்மாளிடம் இதைச் சேர்த்துவிடுங்கள்" என்று கூறியவண்ணம் கடிதத்தை வராகசாமியிடம் கொடுத்தார். "அந்த அம்மாள் இதோ இருக்கிறார்கள். நான் கொடுத்து விடுகிறேன்; இந்த ஆளை இருக்கச் சொல்லுங்கள்" என்று கூறியவண்ணம் வராகசாமி அதை வாங்கிக் கொள்ள, சஞ்சீவி ஐயர் வெளியிற் போய்விட்டார். வராகசாமி இருந்த அறையில் அப்போது கனகம்மாள், தங்கம்மாள், மேனகா ஆகிய மூவருமே ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றமையால், சஞ்சீவி ஐயர் போனவுடன் மேனகா விரைவாக ஓடிவந்து வராகசாமி இடத்திலிருந்து கடிதத்தை வாங்கினாள். செங்கற்பட்டிலிருந்து ரெங்கராஜுவால் எழுதப்பட்ட கடிதமென்பதைக் கேட்ட முதல் அதைப் பார்க்க ஆவல் கொண்டு துடிதுடித்து நின்ற கனகம்மாள், தங்கம்மாள் ஆகிய இருவரும், அதைப் படிக்கும்படி மேனகாவையே கேட்டுக்கொள்ள, அவள் வீணா நாதம் போன்ற தனது தீங்குரல் இனிமையைச் சொரிய அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் படித்தாள்:-

**கடிதம்**

"பெரியம்மாள் பாதங்களில் சேவக ரெங்கராஜு அநேக கோடி தெண்டனிட்டு எழுதும் செய்தி:- நான் இதற்கு முன் செய்கற்பட்டு ரயிலடியிலிருந்து எழுதி யனுப்பிய கடிதம் தங்களிடம் வந்திருக்கலாம். நான் பகற்கொள்ளைப் பாக்கத்துக்குப் போனதையும், செட்டியாரிடம் சங்கதிகளை யறிந்துகொண்டு மறுபடியும் செங்கற்பட்டிற்கு வந்ததையும், எஜமானரின் அங்கவஸ்திரம் மாத்திரம் அகப்பட்டதையும், போலீஸார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு எஜமானரைத் தேடிக்கொண்டிருந்த விஷயங்களையும் அந்தக்

கடிதத்திலிருந்து தாங்கள் அறிந்துகொண்டிருக்கலாம். எஜமானர் கடன் வாங்கிவந்த பணம் முற்றிலும் போய்விட்டதென்றே அப்போது நான் நிச்சயித்துக் கொண்டேன். அவரைப் போலீஸார் தேடியபடியால், நான் வீணில் அங்கே காத்திருப்பதில் பயனில்லையென்று நினைத்தேன். பணமில்லாமையால் ஆபரேஷனின்றி எஜமானி யம்மாளின் உயிர் போய்விடுமோ வென்று மிகவும் அச்சமும் கவலையுங் கொண்டவனாய் நான் உடனே தஞ்சாவூருக்குப் போய் பணத்திற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய நினைத்தேன்; எஜமானரைத் தேடிப் பிடித்துப் பட்டணத்தில் நீங்களிருக்கும் சத்திரத்தில் கொண்டு ஒப்புவிக்கும்படி போலீஸாரிடம் கேட்டுக் கொண்டேன்; எஜமானருடைய உத்தியோகம், அங்க அடையாளங்கள் முதலியவற்றை விரைவாக அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்களும் மிகுந்த இரக்கமும் விசனமும் அடைந்தனர்; எஜமானரை மிகுந்த சிரத்தையோடு தேடிப் பிடித்துக்கொண்டு போய் ஒப்புவிப்பதாக போலீஸார் எனக்கு வாக்குறுதி செய்தனர். நான் உடனே ரயிலேறி தஞ்சாவூருக்குப் போனேன். பணத்தை எப்படியாவது சேகரம் செய்தனுப்ப வேண்டுமென்று என்னாலானவரையில் முயன்று பார்த்தேன்; நான் பரம ஏழை யென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம். நான் இருக்கும் வீடோ வாடகை வீடு. வீட்டிலுள்ள பாத்திரங்களோ மண் பாத்திரங்கள்; என்னுடைய பெண்டாட்டியின் காது மூக்குகளில் வெறுந் துளைகளே ஆபரணங்களா யிருக்கின்றன. அவ்வளவு பெருத்த பிரபுவாகிய எனக்கும் இரு நூறு ரூபாய்க்கும் எவ்வளவு தூரம்! எனக்கு இந்த உலகில் இருபது காசு கூட பெறுமானமில்லை. கடன் வாங்கலாமென்று நினைத்து பலரிடம் போய் முயன்று பார்த்தேன். அவர்கள், உதவியற்ற பொன்னையும், வெள்ளியையும், மண்ணையும், கல்லையும் மதிக்கிறார்களே யன்றி உபயோகப்படும் மனிதனாகிய என்னை ஒரு பைசாவுக்கும் மதிக்கவில்லை;

பணம் எஜமானருடைய அவசரத்திற்கு வேண்டி யிருக்கிறது; ஒன்றுக்கு மூன்றாக அவரிடம் வாங்கிக் கொடுத்து விடுகிறே னென்று சொல்லிப்பார்த்தேன். என் சொல் செவிடன் காதில் சங்கை ஊதியதைப் போலாயிற்று. அதன் பிறகு நான் என்ன செய்வேன்; எனக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. எப்படியாவது பணம் வாங்கி யனுப்ப வேண்டுமென்று என்னைக்காட்டிலும் என்னுடைய பெண்டாட்டியே அதிக கவலைப்பட்டாள். சும்மாவிருக்க எங்களுக்குச் சகிக்கவில்லை. தலையை அடகு வைத்தாவது பணம் வாங்கி இந்த ஆபத்தில் உதவ வேண்டு மென்று என் சம்சாரம் இரவு பகலாய் என்னை இடித்தாள். என் மனது அதற்குமேல் உள்ளூற இடித்துக் கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் கூடிப் பேசிப் பேசிக் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தோம். எங்களுடைய ஒரே மகளான **பத்மாவதிபாயி** ருதுவாய் இரண்டு வருஷமாகிற தென்பதும், அவள் மிகுந்த அழகுடையவளென்பதும், நன்றாகப் படித்தவ ளென்பதும், அவளை நாங்கள் செல்வக் குழந்தையாக வளர்த்து வந்தோம் என்பதும் தங்களுக்குத் தெரியும். எத்தனையோ பெரிய மனிதர்கள் தங்களுடைய பிள்ளைக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேட்டிருந்தனர். தவிர, எங்களுடைய எதிர்த்த வீட்டில் **ஹீராசாமிராவ்** என்னும் பெயருடைய ஒரு வியாபாரி இருக்கிறான். அவனுக்கு மூன்று சம்சாரங்கள் இறந்து போய் விட்டார்கள். அவனுக்குப் பெண்களும், பிள்ளைகளும் மொத்தத்தில் பதினேழு பேரிருக்கிறார்கள். இப்போது அவனுக்கு வயது அறுபதாகிறது. அவன் எங்களுடைய பெண்ணை நான்காவது சம்சாரமாகக் கலியாணம் செய்து கொடுத்தால், ஆயிரம் ரூபாய் எங்களுக்குத் தருவதாகச் சில மாதங்களுக்கு முன் செய்தி சொல்லியனுப்பிய தன்றி, அதைப் பற்றி அடிக்கடி ஆள் மூலமாகத் தூண்டிக் கொண்டிருந்தான். கிளியைப்போல நாங்கள் வளர்த்து வரும் குழந்தையை

அவனுக்கு பலியிடுவதைக்காட்டிலும் அதை உயிருடன் கிணற்றில் தள்ளிவிடுவதே நல்லதென்று நினைத்து நாங்கள் அதற்கு இணங்க மாட்டோமென்று சொல்லிவிட்டோம். இப்போது எங்களுக்கு அந்த மனிதருடைய நினைவு வந்தது. அவனுக்கே பெண்ணைக் கொடுத்துவிட நாங்கள் தீர்மானித்தோம். எங்களுடைய குழந்தை பத்மாவதியை அழைத்து அவளிடம் எஜமானருக்கும் எஜமானியம்மாளுக்கும் வந்துள்ள ஆபத்துக்களை யெல்லாம் விவரமாய்த் தெரிவித்தோம். இருநூறு ரூபாய் இல்லாமையால் எஜமானியம்மாளின் உயிர்போகும் நிலைமையி லிருப்பதையும், அதற்காக நாங்கள் செய்துள்ள கலியாண ஏற்பாட்டையும் அவளிடம் வெளியிட்டோம்; விவரங்களைக் கேட்ட பத்மாவதி எஜமானியம்மாளின் நிலைமையைப் பற்றி மிகவும் வருந்தினவளாய் அவர்களுடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, தான் கிழவனாகிய ஹீராசாமிராவைக் கலியாணம் செய்துகொள்ளுவதாக முழுமனதோடு ஒப்புக்கொண்டாள். உடனே நான் அவனிடம் போய்; முதலிலே எங்களுடைய தீர்மானத்தை வெளியிடாமல், கடனாக இரு நூறு ரூபாய் கொடுக்கும்படி கேட்டேன்; அவன் கடன் கொடுக்க முடியாதென்று சொல்லியதன்றி, என் மகளைக் கலியாணம் செய்துகொடுப்பதானால் உடனே இரு நூறுக்கு நாநூறு ரூபாய் தருவதாயும், கலியாணத்தின்போது இன்னும் ஆயிரம் ரூபாய் தருவதாயும் கூறினான். மேலே பேச்சை வளர்க்காமல், அதற்கு நான் உடனே இணங்கினேன். ரூபாய் நாநூறை வாங்கி உங்களுக்கு ரூபாய் முன்னூறை தந்தி மணியார்டராக அனுப்பி விட்டு மிகுதி நூறு ரூபாயை எஜமானரைத் தேடும் செலவுக்காகக் கையில் ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டேன்."

என்று படித்த மேனகா, மேலே படிக்க மாட்டாமல் அவ்வளவோடு நிறுத்தினாள். ரெங்கராஜுவின் உண்மையான அன்பையும், இரக்கத்தையும், தயாள குணத்தையும், தங்கள்

பொருட்டு அவனும் அவனது மகளும் செய்த பெருத்த தியாகத்தையும் காண, மேனகா, தங்கம்மாள், கனகம்மாள், வராகசாமி ஆகிய நால்வரது மனமும் பாகாயுருக நன்றியறிவின் வெள்ளம் பொங்கியது. தேகம் பூரித்துப் புளகாங்கித மடைந்தது. உடனே கனகம்மாள் மிகவும் உருக்கமாக, "ஐயோ! பாவம்! ரெங்கராஜுவைப் போல வேறு மனிதன் உலகத்தில் கிடைப்பானா! அடாடா! என்ன குணம்! என்ன குணம்! கேவலம் சேவகனென்றும், படிக்காத முட்டா ளென்றும் ஜனங்கள் இழிவாக மதிக்கிறார்களே! படித்த முட்டாள்களிடம் இம்மாதிரியான உண்மைப் பரோபகாரமும், தியாக குணமும், வள்ளலின் தன்மையும் இருக்குமா? அவனுக்கு நாம் இந்த ராஜ்யத்தையே சன்மானம் செய்தாலும் அது ஈடாகுமா? ஆகா! மனிதனிருந்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும்! இப்படிப்பட்ட உத்தமனான புத்திரனை எந்தப் புண்ணிய வதியின் வயிறு தாங்கிப் பெற்றதோ?" என்று கூறிப் பெரு விம்மிதம் அடைந்தாள்.

அதைக் கேட்ட மேனகா, "அவனுடைய சம்சாரமும், பெண்ணும் நல்ல குணத்தில் அவனை மீறியவர்களாக இருக்கிறார்களே! புருஷன், பெண்ஜாதி, மகள் ஆகிய மூவரும் ஒரே மனதை உடையவராயும் நற்குணம் உடையவராயும் அமைவதைவிட, மனிதர் அடையும் பாக்கியம் வேறுண்டா! அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கைக்குச் சுவர்க்கபோகமும் ஈடாகாது" என்றாள்.

**தங்கம்மாள்:-** இவர்களுக்கு ஈசுவரன் ஒரு நாளும் குறைவு வைக்க மாட்டான் - என்று மிருதுவாகக் கூறித் தனது மனமார்ந்த நன்றியறிவைக் காட்டினாள்.

**கனகம்மாள்:-** சரி; மேனகா! மேலே படியம்மா! அவன் இன்னும் என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறானென்று பார்க்கலாம் - என்றாள்.

மேனகா மேலே படிக்கிறாள்:- "நான் உடனே வீட்டுக்குப் போய், விஷயங்களையெல்லாம், என் சம்சாரம், பெண் ஆகிய இருவரிடமும் தெரிவிக்க, அவர்களும் நானும் பெரிதும் சந்தோஷம் அடைந்தோம். எஜமானியம்மாளுக்கு உடனே ஆபரேஷன் நடைபெறு மென்றும், அவர்கள் பிழைத்துக் கொள்வார்க ளென்றும் நினைத்துக் கொண்டோம். போலீஸாரும் எஜமானரை எப்படியும் கண்டுபிடித்து விடுவார்களென்ற ஒரு துணிவும் என் மனதில் உண்டாயிற்று.

அதன் பிறகு நான், நம்முடைய எஜமானரை என்ன குற்றத்திற்காக துரைத்தனத்தார் வேலையிலிருந்து நீக்கினார்க ளென்பதைப் பற்றி நன்றாக விசாரணை செய்யத் தொடங் கினேன். எஜமானர் உத்தரவில்லாமல் இரண்டு தடவை பட்டணத்துக்கு வந்ததற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக அறிந்தேன். அவற்றில் முதல் தடவை அம்பாள் சத்திரத்தில் எஜமானர் முகாம் செய்திருந்த போது நானும் கூட இருந்தேனாகையால், அன்று அவர் பட்டணத்துக்குப் போனதாகச் சொன்னது அபாண்டமான கட்டுப்பாடென்பது நிச்சயமாயிற்று. நான் உடனே புறப்பட்டு அம்பாள் சத்திரத்துக்குப் போனேன். எஜமானர் அன்றைய தினம் அவ்வூர் கிராம முன்சீப்பு, கர்ணம் முதலியோரிடமுள்ள கணக்குகளிலும் அவ்வூர் தரும சத்திரத்திலுள்ள கணக்குகளிலும் கையெழுத்துச் செய்து தேதியும் போட்டிருந்தார். தவிர, அன்று போலீசாரால் பிடித்துக் கொண்டு வந்து ஆஜர் செய்யப்பட்ட ஒரு திருடனைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கும்படி ரிமாண்டு உத்தரவும் கொடுத்திருந்தார். அத்தனை விவரங்களையும் சந்தேகமற அறிந்து கொண்டு திரும்பி தஞ்சாவூருக்கு வந்தேன்.

எஜமானர் இரண்டாவது தடவை, பட்டணத்துக்கு வந்தது உண்மையே. ஆனால், அதற்குமுன் பெரிய கலெக்டர் ரஜா கொடுத்திருப்பதாக தாதில்தார் தாந்தோனிராயர் சேவகப் பக்கிரியின் மூலமாகச் செய்தி சொல்லி யனுப்பியதை, நானும்,

நம்முடைய வீட்டிலிருந்த பல சேவகர்களும், தாசில்தார் வீட்டிலிருந்த சேவகர்களும் அறிந்தோம். நான் மற்ற சேவகர்களை ஒன்றாய்க் கூட்டிக் கொண்டு பக்கிரியிடம் போனேன்; அநியாயமாகப் பொய்சொல்லி ஒரு பெருத்த அதிகாரியைக் கெடுத்துவிட்டதைப்பற்றி அவனை நாங்கள் எல்லோரும் தூஷித்தோம்; அவன்; தான் தாசில்தாரின் உத்தரவின்மேல் அப்படிச் சொன்னதாயும், அவ்வாறே பெரிய கலெக்டரிடத்திலும் சொல்லத்தயாராக இருப்பதாகவும் ஒப்புக் கொண்டான். மற்ற சேவகர்களும் எஜமானரிடம் பக்கிரி வந்து சொன்னது தமக்குத் தெரியுமென்று பெரிய கலெக்டரிடம் சொல்ல இணங்கினார்கள். உடனே நான், இந்த விவரங்களை யெல்லாம் குறித்து, பெரிய கலெக்டருக்கு உடனே ஒரு மனு எழுதி அதைக் கையிலெடுத்துக் கொண்டு போய் துரையைக் கண்டு அவரிடம் அதைக் கொடுத்தேன்; முதலில் அவர் என் சொல்லை நம்பாமல் என்மீது சீறி விழுந்தார். கடிதத்திற் கண்ட விஷயங்களை நான் திருப்திகரமாக ருஜுப்படுத்துகிறே னென்று விடாமல் மேன்மேலும் வற்புறுத்திச் சொன்ன பிறகு, அவர் நம்பிக்கை கொண்டவராய் அன்றைய தினமே புறப்பட்டு அம்பாள் சத்திரத்துக்குப் போனார்; கணக்குகளைச் சோதனை செய்தார்; டிப்டி கலெக்டர் உண்மையில் அன்றைய தினம் அங்கு வந்திருந்தார் என்பதைச் சந்தேகமற அறிந்து கொண்டார்; உடனே தஞ்சாவூருக்கு வந்தார்; பக்கிரி முதலிய சேவகர்களை விசாரித்தார்; எஜமானரின் மேல் தாசில்தார் பெரும் பகை கொண்டவரென்பதையும் தாம் ரஜா கொடுத்துவிட்டதாக தாசில்தார் பக்கிரியின் மூலமாகப் பொய் சொல்லி அனுப்பினார் என்பதையும் உணர்ந்து கொண்டார்; எஜமானர் விஷயத்தில் தாம் பெருத்த தவறையும் கொடுமையையும் செய்துவிட்டதைக் கண்டுகொண்ட கலெக்டர் துரை மிகவும் இரக்கங்கொண்டு மனநொந்து விசனித்து வருந்தினார். அதனால் தமக்கு எவ்விதமாக தீங்கு வரினும் வரட்டுமென்று

அவர் துணிவு கொண்டு துரைத்தனத்தாருக்கு இன்னொரு அறிக்கை யெழுதி உடனே அனுப்பினார். அதில், தாம் தாசில்தாருடைய வஞ்சகத்தால் ஏமாறிப்போய், இந்த விஷயங்களை யெல்லாம் அறிந்துகொள்ளாமல் டிப்டி கலெக்டரின் மேல் எழுதியதைப் பற்றி வருந்துவதாயும், டிப்டி கலெக்டருக்கு உடனே வேலையைக் கொடுத்துவிடவும் சிபார்சு செய்து எழுதியதன்றி, தாம் சீமைக்கு அவசரமான ஒரு காரியத்தின் நிமித்தம் போக வேண்டியிருப்பதால், தமக்கு ஆறுமாத காலம் ரஜா கொடுக்கும்படியாகவும் எழுதிக் கொண்டார். அந்த அறிக்கையின்மேல் துரைத்தனத்தாரின் உத்தரவு பிறக்க சில நாட்களாகுமென்று தோன்றியது ஆகையால், அதற்குள் நான் எஜமானரைத் தேடிப் பிடிக்க எண்ணங்கொண்டேன். துரைத்தனத்தாரிடத்திலிருந்து அநுகூலமாக உத்தரவு வந்தால், செங்கற்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அதை அனுப்பும்படி பெரிய கலெக்டர் துரையிடம் சொல்லிவிட்டு அன்றிரவே தஞ்சாவூரை விட்டுப் புறப்பட்டேன்" என்று படித்த மேனகாவின் கண்களில் ஆநந்தக் கண்ணீர் பொங்கி இரு கன்னங்களின் வழியாக வழிந்தமையால், எழுத்துக்கள் கண்களிற் படவில்லை; மேலே படிக்க மாட்டாமல் அவள் உடனே நிறுத்திவிட்டாள். அங்கிருந்த நால்வரும் ரெங்கராஜுவின் அரிய காரியங்களையும் பேருதவியையும் ஒப்பற்ற நாயக விசுவாசத்தையும் கண்டு மனங்கொள்ளா ஆநந்த மடைந்துகொண்டு விம்மி விம்மி யழுதனர்.

அப்போது வராகசாமி, "ஆகா! இந்தச் சொற்ப காலத்தில், எத்தனை விநோதமான காரியங்கள் நடந்திருக்கின்றன! ஒன்றை யொன்று தோற்கச் செய்கிறதே! எத்தனை ஆபத்துக்கள்! எத்தனை அவமானங்கள்! அடாடா! கேட்கச் சகிக்கவில்லையே!" என்றான்.

**கனகம்மாள்:-** என்ன ஆச்சரியம்! இத்தனையும் அந்தத் தாந்தோனிராயன் செய்த காரியமா! அடே சதிகாரா! உனக்கு என் பிள்ளை என்ன தீங்கையடா செய்தான்! எங்களைக் கெடுத்து விட்டு நீ எப்படியாவது பெண்டுபிள்ளைகளோடு சுகமாய் வாழப்பா! நாங்கள் கெட்டால் கெட்டுப் போகிறோம் - என்று மிகவும் வருந்திக் கூறினாள்.

அதற்குள் தங்கம்மாள் மேனகாவின் முகத்தில் துளித்த வியர்வை முத்துக்களை அன்போடு துடைத்துவிட்டு, “அம்மா! மேலே படி; உன்னுடைய அப்பாவைக் கண்டு பிடித்தானோ இல்லையோ அது தெரியவில்லையே; சீக்கிரமாகப் படி” என்று ஆவலோடு கூறி அவளை ஊக்கினாள். மேனகா மேலும் படிக்கிறாள்:-

“மறுநாள் விடியற்காலம் நான் செங்கற்பட்டுக்கு வந்து சேர்ந்து, நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய், இன்ஸ்பெக்டரைக் கண்டு, எஜமானரைப் பற்றி விசாரித்தேன். நான் அங்கிருந்து தஞ்சாவூருக்குப் போன மறுநாளே எஜமானர் அகப்பட்டுவிட்டாரென்று அவர் தெரிவித்தார். நான் அதைக் கேட்டு கரைகடந்த சந்தோஷ மடைந்தேனாயினும், அவர் சொன்ன மற்ற விவரங்களைக் கேட்க, என் மனம் பதறியது. என்னவென்றால், எஜமானர் பணத்தை இழந்ததற்கு மறுநாள் காலையில் பைத்தியம் பிடித்தவரைப் போலப் பிதற்றிக்கொண்டு செங்கற்பட்டுக்கு அருகிலிருக்கும் பாலாற்றங்கரைக்குப் போனதாயும், மிகவும் ஆழமாகப் போய்க்கொண்டிருந்த தண்ணீரில் அவர் அலட்சியமாக இறங்கியதாயும், உடனே தண்ணீரால் இழுபட்டு நிலைதப்பி ஆற்றோடு புரண்டு கொண்டு போனதாயும், அங்கிருந்த வழிப்போக்கர்களிற் சிலர் அவரை உடனே எடுத்துக் கரை யேற்றி மூர்ச்சைதெளிவித்து அவர் யாரென்று கேட்டதாயும், அவர் மேன்மேலும் பிதற்றியதாயும், அவர்கள் உடனே அவரைப் போலீஸ் ஸ்டேஷனில் கொணர்ந்து ஒப்பு

வித்ததாகவும் போலீஸ் இன்ஸ்பெக்டர் கூறினார். அந்த விவரத்தைக் கேட்கவே விவரிக்க முடியாமல் மனம் பதறியது. மேல் நடந்ததை அறிய ஆவல்கொண்டு நான் கேட்க, போலீஸார் உடனே அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டதாகவும், அங்கே அவர் சிகிச்சையில் இருப்பதாகவும் கேள்விப்பட்டு, உடனே நான் வைத்தியசாலைக்கு ஓடினேன்; என்னைக் கண்ட எஜமானர், "நீ யாரடா? ஏன் நிற்கிறாய்? போ அப்பால்" என்று முன்பின் தெரியாதவனைப் போலப் பேசிப் பிதற்றி என்மீது எச்சிலை உமிழ்ந்தார்; எல்லோரையும் அடிக்கவும் , உதைக்கவும் ஓடினார்; வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டார். நானும் அங்கிருந்த சிப்பந்திகளும் எதற்கும் மனந்தளர்வடையாமல் இரவு பகலாய் அவரை விட்டு அகலாமல் இருந்தோம். டாக்டர் மிகவும் தேர்ந்த நிபுணராதலால், அவர் அதற்குத் தக்க மருந்துகளை உபயோகித்து மிகவும் சிரத்தையோடும் அன்போடும் சிகிச்சை செய்து வந்தார். நான் கொண்டுபோயிருந்த பணத்திலும் ஐம்பது ரூபாய் அவரிடம் கொடுத்து நன்றாகக் கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டேன். அவரும் அவ்வாறே நன்கு கவனித்துப் பார்த்து வந்தார். என்னுடைய உயிரும் நினைவும் எஜமானரிடத்தில் பாதியும் எஜமானியம்மாளிடத்தில் பாதியுமாக தடுமாறிக் கொண்டிருந்தன; ஆனால் பட்டணத்தில் ஆபரேஷன் முடிந்திருக்கு மென்றும், எஜமானியம்மாள் செளக்கிய மடைந்திருப்பார்களென்றும் நினைத்து தைரியங் கொண்டு இத்தனை நாள் நான் எஜமானரோடு கூட இருந்தேன். உங்களுக்கு ஒரு கடிதம் எழுதக்கூட இதுவரையில் எனக்குச் சாவகாசம் கிடைக்காமல் போயிற்று; எஜமானருடைய உணர்வு படிப்படியாகத் தெளிவடைந்து வந்தது. நேற்றிரவு எஜமானர் முற்றிலும் தெளிவடைந்து நமது வரலாற்றை யெல்லாம் கேட்டார். அதைக் கண்டு நான் ஆநந்தப்பரவச மடைந்தவனாய் பட்டணத்திலும் தஞ்சாவூரிலும் நடந்த

விஷயங்களைச் சொன்னேன். எஜமானர் திடீரென்று எழுந்து என்னை அப்படியே பிடித்து அணைத்துக் கொண்டு என்னைப் பலவாறு புகழ்ந்தார்; பட்டணத்துக்கு உடனே பட்சியைப் போல பறந்து வந்துவிட நினைத்துத் துடித்தார். ஆனால், இன்னம் இரண்டு நாளைக்கு முன் வைத்தியசாலையை விட்டுப் போகக்கூடாதென்று டாக்டர் சொல்லித் தடுத்து விட்டார். ஆகையால், எஜமானர் இன்று காலையில் ஆளை அனுப்பச் சொன்னார்கள்; அதற்குள் இன்று காலையில் தஞ்சையிலிருந்து எஜமானருக்கு ஒரு பெருத்த சந்தோஷ சமாச்சாரம் வந்தது. துரைத்தனத்தார் பெரிய கலெக்டர் துரைக்கு ஆறுமாச காலத்துக்கு ரஜா கொடுத்து விட்டு, அவருக்குப் பதிலாக நம்முடைய எஜமானரையே தஞ்சாவூர் ஜில்லாவுக்கு பெரிய கலெக்டராக மாதம் முவ்வாயிரம் சம்பளத்தில் நியமித்திருக்கிறார்களென்றும், மறு நாளே வந்து வேலையை ஒப்புக்கொள்ளும்படியாயும் அதனால் தெரியவந்தது. அதைக் கேட்டவுடனே நான் அடைந்த குதூகலத்தையும் பிரம்மாநந்தத் தையும் சொல்லவும் கூடுமா! நான் அப்படியே எழுந்து ஆநந்தக்கூத்தாடி ஒரு நாழிகை வரையில் சந்தோஷத்தினால் பூரித்துப் பொங்கிப்போய் விட்டேன்; தெய்வங்களுக்கெல்லாம் வேண்டுதல் செய்துகொண்டு வாயாரத் துதித்தேன்; எஜமானரிடம் ஆயிரம் தடவை சொல்லிச் சொல்லி மகிழ்வுண்டாக்கினேன். ஆனால் எஜமானர் அவ்வளவு சந்தோஷ மடைந்தவராகத் தோன்றவில்லை. எஜமானி யம்மாள், குழந்தை மேனகா, மாப்பிள்ளை ஆகிய மூவர் க்ஷேமத்தைப் பற்றி ஒரு செய்தியும் தெரியாமலிருப்பதால், எஜமானருடைய மனசு பட்டணத்திலேயே நாட்டமுடையதா யிருந்தது; உங்களுக்கு உடனே தந்தி யனுப்ப நினைத்தோம்; ஆனால் விலாசம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆகையால், இந்த ஆளையே அனுப்பினோம். அவ்விடத்து விஷயங்களை அறிய வேண்டு மென்று எங்களுடைய மனம் துடிப்பது

அளவிலடங்காது; எங்களுடைய ஆவல் சகிக்கக்கூட வில்லை. எங்கள் மேல் அன்பு கூர்ந்து உடனே விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமாய் தங்கள் பாதங்களில் சாஷ்டாங்க தெண்டனிட்டுக் கேட்டுக் கொள்ளும் தங்கள் நிரந்தரமான சேவகன் ரெங்கராஜு."

என்று மேனகா கடிதத்தை முற்றிலும் மிகவும் பாடுபட்டுப் படித்து முடித்தாள். எத்தகைய கல் நெஞ்சரது மனத்தையும் இளக்கி உருக்கத்தக்க அத்தனை விஷயங்களைக் கொண்ட கடிதத்தை எவரும் படித்திருக்க மாட்டார்களென்பது மிகைப்படக் கூறிய தாகாது. கடிதத்தின் முடிவிலிருந்த விஷயங்களை உணர்ந்த வராகசாமி, மேனகா, கனகம்மாள், தங்கம்மாள் ஆகிய நால்வரும் எப்படிப்பட்ட நிலைமையில் இருந்தார்களென்பதை விவரித்துரைப்பதும் தேவையோ! அவர்கள் நால்வரும் தங்களுடைய பூத உடம்போடு அப்படியே சொர்க்க லோகத்தை யடைந்தவரைப்போலாயினர். சாம்பசிவத்திற்கு நேர்ந்த துன்பங்களையும், ரெங்கராஜுவின் நிகரற்ற ஜீவகாருணிச் செயல்களையும், இறுதியில், கருணைவள்ளலாராகிய ஜெகதீசனது அருள் நோக்கால், தமது பேரிடர்களெல்லாம் சூரியன் முன் இருளெனப் பறந்து போனதையும் மாறி மாறி நினைத்து நினைத்து நெக்குநெக் குருகி வாய்பேசா மங்கையராய் இன்பத்திலும் துன்பத்திலும் ஆழ்ந்து மிதந்து போயினர்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு தெளிவடைந்த வராகசாமி, கனகம்மாளை அன்போடு, "பாட்டீ! எனக்கு உடம்பு சௌக்கியமாகி விட்டது. நாமெல்லோரும் இப்போதே புறப்பட்டு செங்கற்பட்டுக்குப் போவோம்" என்று கரை கடந்த மகிழ்ச்சியோடு கூறினான். அதைக் கேட்ட மேனகா, தன் கணவனது இணையற்ற அன்பையும், பற்றையும் கண்டு பெருங்களிப்பும் புன்னகையும் கொண்டு, "சரிதான்; காலைக்

கீழே ஊன்றினால், முழங்காலில் இன்னமும் வலி உண்டாகிறதே. இந்த நிலைமையில் அவ்வளவு தூரம் பிரயாணம் செய்யலாமா? டாக்டர் துரைஸானியைக் கேட்டுக் கொண்டு நாளைக்காவது மறுநாளாவது போகலாம். உங்களுக்கும் அம்மாவுக்கும் உடம்பு சௌக்கியமாய் விட்ட தென்று ஒரு தந்தியனுப்புவோம்; அது போனால் அவர்களுக்கு ஆறுதலா யிருக்கும்" என்றாள். அதைக்கேட்ட வராகசாமி "இல்லை இல்லை; முழங்காலில் எனக்கு அவ்வளவு வலி உண்டாக வில்லை; இங்கிருந்து வாடகை மோட்டார் வண்டி அமர்த்திக் கொண்டு ரயிலுக்குப் போவோம். என்னை மெதுவாக ரயிலில் கொண்டுபோய் விட்டு விடுங்கள். நாம் எல்லோரும் முதல் வகுப்பு வண்டியில் ஏறிப் போவோம்; இந்தப் பிரயாணம் கொஞ்சமும் கஷ்டமாயிருக்குமென்பது தோன்றவில்லை. எனக்கு, மாமாவை உடனே பார்க்கவேண்டு மென்னும் ஆவல் துடிக்கிறது; இங்கே இருப்பதும் நெருப்பின் மேலிருப்பதைப்போல இருக்கிறது; வைத்தியத்தில் கைதேர்ந்த பெரிய டாக்டர்துரைஸானியாகிய நீயே என்னோடு கூட வரும் போது, எனக்கு என்ன கெடுதல் உண்டாகப் போகிறது. உடனே போவதே சரி" என்று மகிழ்ச்சியோடும் நயமாகவும் வற்புறுத்தியும் கூறினான்.

அதைக் கேட்ட மேனகா புன்னகை பூத்த முகத்தோடு, "அப்படியானால் தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம். தங்களுடைய உத்தரவுக்குமேல் இனி அப்பீல் ஏது? இங்கு மில்லை அங்குமில்லை; பாட்டீ! நம்முடைய கிட்டன் எங்கே காணோமே?" என்றாள்.

அதைக் கேட்ட கனகம்மாள், "அவன் முன் கோபி; மகா முரடன்; இந்தக் கலகத்தில், அவன் ஏதாவது முரட்டுத்தனமான காரியம் செயது விடப்போகிறானே என்று பயந்து நான்

அவனைப் பங்களாவுக்கு வெளியில் போயிருக்கும்படி அனுப்பிவிட்டேன். அவனை அழைத்து மோட்டார் வண்டி கொண்டுவரும்படி சொல்லுகிறேன்" என்று கூறியவண்ணம், வெளியிற் சென்று அங்கிருந்த கிட்டனைக் கண்டு, உள்ளே நிகழ்ந்த சம்பவங்களை அவனிடம் சுருக்கமாகக் கூறி மோட்டார் வண்டி யொன்று கொண்டு வரும்படி அவனை அனுப்பி உள்ளே வந்தாள்.

அவன் மோட்டார் வண்டி கொண்டு திருப்பிவர அரை நாழிகை நேரமாயிற்று. அதற்குள், மேனகா, நிகழ்ந்த விஷயங்களை யெல்லாம் சுருக்கமாக இரண்டு கடிதங்களில் எழுதி ஒன்றில் நூர்ஜஹானது விலாசமும், மற்றொன்றில் டாக்டர் துரைஸானியின் விலாசமும் எழுதி அவற்றை உடனே தபாலில் போடும்படி பங்களாவின் வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பினாள்.

*****

அதன் பிறகு சிறிது நேரத்தில், வராகசாமி, கிட்டன், கனகம்மாள், தங்கம்மாள், மேனகா முதலிய யாவரும் மோட்டார் வண்டியில் அமர்ந்து குதூகலமாக எழும்பூர் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர்.

*******-

28 வது அதிகாரம்

## கண்டு முதல்.

அதன்பிறகு மூன்று மாதகாலம் சென்றது. தஞ்சையில் ரயிலடிக்கருகில் ஒரு பெருத்த பங்களா விருந்தது. அது அரைக்கால் மயில் நீள அகலமுள்ள மதில்களால் சூழப்பட்டிருந்தது. தென்னை, கமுகு, மா, பலா, மாதுளை முதலிய தருக்கள் அடர்ந்த சோலையில் மயில்களும், மான்களும், குரங்குகளும் துள்ளி விளையாடின. குயில்கள் ஓயாமல் தமது தீங்குரலைக் கிளப்பி வீணாகானம் செய்து கொண்டிருந்தன. வரிசை வரிசையாக வைத்து அலங்கரிக்கபட்டிருந்த பூந்தொட்டிகளும், இங்கிலீஷ் குரோடன்களும் இரமணீயமாக அமைந்து காண்போர் கண்களையும் மனதையும் குளிர்வித்தன; எங்கும் வெண்கலச் சிலைகளின் வழியாக வெளிப்பட்டதண்ணீர், மழை பெய்தலைப்போல, புல்லடர்ந்த தலையிலும், பூஞ்செடிகளிலும் தாரை தாரையாக வீழ்ந்து குளிர்ச்சி செய்துகொண்டிருந்தது. பல்லாண்டுகளாக உயர்ந்து வளர்ந்த விழுதுகளை ஆயிரக்கால் மண்டபம் போல விடுத்து கம்பீரமாக நின்ற ஆலமரங்கள் எண்ணிறந்தவை, ஆங்காங்கு நின்று அந்த பங்களாவுக்குள் சூரிய வெப்பம் நுழையாதவாறு தடுத்துக் கொண்டிருந்தன. அந்த ஸ்தலம் ஒரு பெருத்த ரிஷியாசிரமம் போல அமைந்து, அதற்குள் செல்வோரைப் பரவசப்படுத்தி அவர்களது மனதில் பிரம்மானந்தத்தையும் சாந்தியையும் உண்டாக்கியது. அந்த உன்னதமான பங்களாவின் வாசலில் மதிட்சுவரின் இரண்டு பக்கங்களிலும் பளபளவென மின்னிய இரண்டு பித்தளைத் தகடுகள் அடிக்கப்பட்டிருந்தன. வலது

பக்கத்திலிருந்த தகட்டில், "தஞ்சை ஜில்லா கலெக்டர் சாம்பசிவம்" என்ற விலாசமும், இடது பக்கத்திலிருந்த தகட்டில், "தஞ்சை சப் ஜட்ஜ் வராகசாமி ஐயங்கார்" என்ற விலாசமும் காணப்பட்டன. அங்கு வருவோரைப் புன்னகை செய்து வரவேற்பவைபோல எதிரில் தோன்றிய பூந்தொட்டி களின் அணிவகுப்பு அமைக்கப்பட்டிருந்த அழகிய மூன்றடுக்கு மெத்தையுள்ள மாளிகை கம்பீரமாக நின்றது. அதன் வாசலில் வெள்ளிவில்லை, டாலி, டவாலி முதலிய அலங்காரங்களுடன் எண்ணிறந்த சேவகர்களும் போலீஸ் ஜெவான்களும் ஓசை செய்யாமல் பயபக்தியோடு நின்றும் உட்கார்ந்தும் காணப்பட்டனர்.

அந்த மாளிகையின் இரண்டாவது மெத்தையில் மிகவும் சிங்காரமாக அழகுபடுத்தப்பட்டிருந்த ஒரு கூடத்தில் சாம்பசிவையங்கார் சாய்மான நாற்காலி யொன்றில் படுத்திருந்தார். சுவர்ண விக்கிரகம்போல வொளிர்ந்த தங்கம்மாள் அவருக்குப் பின்புறத்தில் மறைவாக உட்கார்ந்துகொண்டு சிறிதளவு கிழிந்துபோயிருந்த தனது பட்டு ரவிக்கையைத் தைத்துக் கொண்டிருந்தாள். சாம்பசிவத்திற்கு எதிரில் கொஞ்சதூரத்திற்கப்பால், வெள்ளிக் குமிழ்கள் வைக்கப்பட்ட அகன்ற வழுவழுப்பான கருங்காலி மணைப் பலகையொன்றின் மேல் நார்மடிப்புடவை, துளசிமணி மாலை, மூக்குக்கண்ணாடி முதலிய அலங்காரங்களுடன் கனகம்மாள் மிகவும் ஆசாரமாக உட்கார்ந்திருந்தாள். அவளது கையில் பழைய காலத்துப் புஸ்தகமொன்று இருந்தது. அதன் முதல் பக்கத்தில், "துலா காவேரிப் புராணம்" என்ற எழுத்துகள் காணப்பட்டன. சற்று தூரத்திலிருந்த ஒரு புஸ்தக பீரோவின் மறைவில் ரெங்கராஜு அடக்கவொடுக்கமாக நின்று கொண்டிருந்தான்; அவனது உடம்பில் அப்போது சேவகன் உடைகள் காணப்படவில்லை. அவனும் ஒரு உத்தியோகஸ் தனைப் போலக் காணப்பட்டான்.

அவர்கள் நால்வரும் கபடமின்றி, மனத்தை விட்டு ஒருவரோடொருவர் அந்தரங்கமான அன்போடு ஏதோ விஷயங்களைப் பற்றி சந்தோஷமாகப் பேசி மகிழ்வடைந் திருந்தனர்.

அந்தச் சமயத்தில் சாம்பசிவம் கனகம்மாளைப் பார்த்து, "ரெங்கராஜுவுக்கு மாத்திரம் இங்கிலீஷ் தெரிந்திருந்தால், அவனுக்கு நான் ஒரு தாசில் வேலை செய்து வைத்திருப்பேன். அவனும் அந்த வேலையைத் திறமையாகப் பார்ப்பான். அந்த வேலை பார்ப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது. ஒன்றுமில்லை. வெறும் மிரட்டல்தான்" என்றார்.

அதைக் கேட்ட கனகம்மாள், "அவன் வேறே எந்த உத்தியோகத்துக்கும் போகவேண்டாம்; நம்முடைய பங்களாவுக்கே அவன் தாசில்தாராக இருக்கட்டும்; இந்தத் தாசிலுக்கு உங்களுடைய இங்கிலீஷ் ப்ரவையே வேண்டாம்; சர்க்காரில் தாசில்தாருக்குக் கொடுக்கும் சம்பளம் எவ்வளவோ அதை நீ கொடுத்துவிடு" என்று கூறினாள். சாம்பசிவம் "அப்படியே செய்வோம்" என்று ஒப்புக்கொண்டார்.

பிறகு கனகம்மாள் ரெங்கராஜுவைப் பார்த்து, "அப்பா ரெங்கராஜு! அப்படியே உட்கார்ந்துகொள்; எத்தனை நாழிகை நிற்கிறது பாவம்!" என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட ரெங்கராஜு சிறிது லஜ்ஜை அடைந்து பணிவாகத் தனது இரு கைகளையும் கூப்பி, "அம்மா! தாங்கள் பிரம்மகுலம்; நான் எவ்வளவு தங்களுடைய அபிமானத்தை யடைந்தாலும், நான் சேவகன்தானே; தங்களுக்கு நான் தொண்டு செய்யவே பிறந்தவன். எனக்கேன் அவ்வளவு பெருமை!" என்றான். அவனது உண்மையான பணிவையும் நற்குணத்தையும் கண்ட சாம்பசிவம், கனகம்மாள் ஆகிய இருவரது உள்ளமும் பூரித்துப் பொங்கியது.

கனகம்மாள், "அப்பா! ரெங்கராஜு! உன்னை நாங்கள் அன்னியனாகவே பாவிக்கவில்லை. நீ வேறென்றும் சாம்பசிவம் வேறென்றும் நான் எண்ணவே இல்லை. நீ முதற் பிள்ளை, சாம்பசிவம் இரண்டாவது பிள்ளை" என்று அன்பொழுகிய மொழிகளால் கூற, அவன் பெரிதும் நாணமடைந்து உட்காராமல் நின்று கொண்டே இருந்தான்.

பிறகு சில நிமிஷங்கள் வரையில் பேசாமலிருந்த சாம்பசிவம் கனைத்துக் கொண்டு, "நான் கலெக்டராக வந்த இந்த மூன்று மாச காலத்துக்குள் இந்த ஊரில் எத்தனை மாறுதல்கள்! பழைய உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் போய்விட்டார்களே! இப்போது எல்லாம் புது முகமாகவே இருக்கிறதே!" என்று வியப்போடு கூறினார்.

**கனகம்மாள்:-** அப்படி யார் போய்விட்டார்கள்?

**சாம்பசிவம்:-** பெரிய கலெக்டர் துரை சீமைக்குப் போய்விட்டார். கஜானா டிப்டி கலெக்டர் விளக்கெண்ணெய் சுப்பராய ஐயர் உபகாரச் சம்பளம் வாங்கிக் கொண்டு போய் விட்டார். போலீஸ் சூபரின்டெண்டெண்டோ திருச்சிக்கு மாற்றலாகி போய்விட்டார்; போலீஸ் இன்ஸ்பெக்டர் புளுகுமலைப் பிள்ளையோ போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப்பட்டிருந்த ஒரு திருடனை முரட்டுத் தனமாக அடித்துக் கொன்றதற்காக தீவாந்திர சிட்சை யடைந்து அநியாயமாகக் கெட்டுப்போய்விட்டார். நம்முடைய தாசில்தார் தாந்தோனிராயர் தான், நான் பெரிய கலெக்டராக வரப்போகிறேன் என்பதைக் கேட்டவுடன் ரஜா வாங்கிக் கொண்டு தம்முடைய சொந்த ஊராகிய நாமக்கல்லுக்குப் போய் விபரீதமான நிலைமையி லிருக்கிறார். இந்த மாதிரி எல்லோரும் போய்விட்டார்கள்.

**கனகம்மாள்:-** எனக்கு மற்றவரைப்பற்றியெல்லாம் அவ்வளவு விசனமில்லை. ஊருக்குப் போன இடத்தில் தாந்தோனிராயருக்கு வந்த ஆபத்தை நினைக்க நினைக்க எனக்கு நிரம்பவும் விசனமாக இருக்கிறது. ஏனடா! ரெங்கராஜு! அவருக்குச் சொத்து ஏராளமாக உண்டா? அவருக்குப் பக்கவாதம் (பாரிசவாதம்) வந்து கைகால் களெல்லாம் இழுத்துக் கொண்டு போய்விட்டதாம்; அதற்கு எல்லாப் பணமும் செலவாய் விட்டதாம். அந்த நோயும் தீராதாம். இந்த நிலைமையில் அவருடைய பெண்டு பிள்ளைகள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்?

**ரெங்க:-** நாங்கூட அப்பிடித்தான் கேள்விப்பட்டேன். அவுரு இருந்தவரையிலே பணத்தை யெல்லாம் சேத்து சேத்து மொத்தமாகத் தேவிடியாளுக்குக் கொடுத்து வந்தாரு. இப்போ ஊட்டிலே ஒரு காசுக்குக் கூட வழியில்லை. அவரோட பெண்சாதி பிள்ளைங்களெல்லாம் பெரிய மனிசரிடத்தி லெல்லாம் போயி யாசகம் வாங்கி வந்து அவருக்குக் கஞ்சி வாக்கிறாங்களாம்.

**கனக:-** ஆகா என்ன உலகம் இது! என்ன தலைவிதி! அடுத்த நிமிஷத்தில் நமக்கு எவ்விதமான கேவல நிலைமை உண்டாகும் என்பது தெரிகிறதே இல்லையே; என்ன உத்தியோகம்! என்ன வீண் பெருமை! எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை - என்றாள்.

அதைக் கேட்டு சிறிது நேரம் பேசாமலிருந்த சாம்பசிவம், "எனக்கு இதெல்லாம் ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ரெங்கராஜுவுக்கு நாநூறு ரூபாய் கொடுத்த கிழவனாகிய ஹீராசாமி ராவ் ஒரு நாளைய ஜுரத்தில் திடீரென்று செத்துப் போனதை நினைக்க நினைக்க, என் மனம் சந்தோஷத்தினால் பூரித்துப் போகிறது" என்று கூறி குழந்தையைப்போல சந்தோஷங் காட்டிப் புன் முறுவல் செய்தார்.

அதைக் கேட்ட கனகம்மாள் அன்பொழுக, "தெய்வமில்லாமலா உலகத்தின் காரியமெல்லாம் நடக்கிறது. எவ்வளவோ அருமையான குணமும், தயாள மனசையும் உடைய நம்முடைய ரெங்கராஜுக்கு ஈசுவரன் ஒருநாளும் குறைவு வைக்கமாட்டான். பத்மாவதிபாயின் புருஷன் திருச்சிராப்பள்ளியில் இருக்கும்போது, ஹீராசாமிராவ் பணத்தைக் கொடுத்து விட்டதனால் மாத்திரம், அவனுக்கு அவள் கிடைத்துவிடுவாளா! நல்ல அழகான வாலிபனுமான படித்தவனுமான சுந்தரராவ் காத்துக்கொண்டிருக்கையில், ஹீராசாமிராவல்ல, இன்னும் இந்த தேசத்து மகாராஜா ஆசைப்பட்டாலும் காரியம் பலிக்குமா? பத்மாவதிபாயி குழந்தையா யிருந்தாலும், அவளுடைய பெரும் புத்தியும், ஜீவகாருண்யமும் பெரியவர்களுக்குக்கூட வராது. அப்பேர்ப் பட்ட தங்கமான பெண் கலங்கியழும்படி ஈசுவரன் விடுவானோ? ஒருநாளும் விடமாட்டான். உலகத்தை யெல்லாம் படைத்துக் காத்தருள்பவனும் எல்லா வற்றையும் மறைவாக இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் சர்வக்ஞனுமான பகவானுக்கு நல்லவர்களைக் காத்து ரக்ஷிக்கத் தெரியாதா?" என்று மிகவும் உருக்கமாகக் கூறினாள்.

உடனே சாம்பசிவம் ரெங்கராஜுவை நோக்கி "இந்த சுந்தரராவ் உன்னுடைய அத்தை பிள்ளையா" என்றார்.

**ரெங்க:-** ஆமாங்க.

**கனக:-** பெண்ணுக்கு அவனைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைதானே?

**ரெங்க:-** ரொம்ப ஆசை. அவனை இங்கேயே கொண்டாந்து வச்சுக்கணும். அவுங்க ரெண்டுபேரும் சந்தோஷமாக இருக்கணுமுன்னுதான், எஜமான் கலியாணத்துக்காகக் குடுத்த ரெண்டாயிர ரூபாயிக்கும் நல்ல ஒரு மச்சு வீடு வாங்கினேன்.

**கனக:-** நல்ல யோசனைதான். அவனுக்கு இங்கேயே ஏதாவது உத்தியோகமும் செய்து வைத்து விடலாம்- என்றாள்.

அப்போது அந்த அறையின் வாசற்படியில் ஓசையின்றி இன்னொரு சேவகன் வந்து நின்று, ரெங்கராஜுவைப் பார்த்து ஒரு தபாற்கடிதத்தை நீட்டினான்; அதைக் கண்ட ரெங்கராஜு விரைவாகப் போய் அந்தக் கடிதத்தை வாங்கி, சாம்பசிவத்தினிடம் சென்று பணிவாக நீட்டினான். அதை அவர் வாங்கி மேல் விலாசத்தைப் பார்த்து விட்டு, "குழந்தை மேனகாவுக்கு வந்திருக்கிறது; கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வா!" என்றார். அதைக் கேட்ட கனகம்மாள், "எந்த ஊர் முத்திரை போட்டிருக்கிறது பார்!" என்றாள்.

சாம்பசிவம் அதைப் பார்த்து, "பட்டணத்திலிருந்து வந்திருக்கிறது" என்றார்.

கனகம்மாள், "நூர்ஜஹான் எழுதியிருப்பாள்; சரி; சீக்கிரமாய்க் கொண்டுபோய்க் கொடு. மாப்பிள்ளையும் உள்ளே இருக்கிறார். வெளியிலிருந்தே கூப்பிட்டுக் கொடு" என்று கூறினாள்.

உடனே ரெங்கராஜு அதை வாங்கிக்கொண்டு மூன்றாவது மாடிக்கு ஏறிச் சென்றான்.

மூன்றாவது மாடத்தில் இந்திர விமானம் போலவும், மன்மதனது சயனக்கிரகம் போலவும் கட்டில்கள், மெத்தைகள், ஸோபாக்கள், படங்கள், நிலைக்கண்ணாடிகள், மின்சார விசிறிகள், முதலிய எண்ணிறந்த பொருட்களால் அலங்கரிக்கப் பட்டிருந்த கூடத்தில் ஸோபாவைப்போல மெத்தை தைத்த பெருத்த நாற்காலி யொன்றில் வராகசாமி சந்தோஷமாய் சாய்ந்துகொண்டிருந்தான். அவனது காதிலும், கைகளிலும் வைரங்கள் ஜிலுஜிலென்று மின்னின. இரத்தின கம்பளம்

விரிக்கப்பட்ட சுத்தமான தரையில் கோமளாங்கியான மேனகா உட்கார்ந்துகொண்டு, வராகசாமியின் காலை எடுத்துத் தனது மடியின்மீது வைத்துக்கொண்டு விரல்களோடு ஏதோ விஷமம் செய்துகொண்டும், அவனை நோக்கி சல்லாப வார்த்தைகளை மொழிந்துகொண்டும் இருந்தாள். அன்பும், பணிவும் வடிவெடுத்த இன்பக் களஞ்சியமென உட்கார்ந்திருந்த அந்தப் பெண் பாவையின் மேனி முழுதிலும் வைரங்கள் நட்சத்திரங் களைப்போல சுடர்விட் டெரிந்தன. அவ்விரு யெளவனப் பருவத்தினரும் விண்ணுலகத்தைச் சார்ந்த கந்தருவ வகுப்பாரோ வென ஐயுறும்படி அற்புத ஜோதியாக விளங்கினர். அவர்கள் எவ்விதமான துன்பத்தையும் அடையாதவரைப்போல முழு மகிழ்வடைந்தவராகக் காணப் பட்டனர். மேனகாவின் வனப்போ முன்னிலும் ஆயிரம் மடங்கு அதிகரித்துத் தோன்றின தாயினும், அவளது நடத்தை மாத்திரம் மாறுபடாமலே இருந்தது. அதற்குமுன் அவள் தனது கணவனோடிருக்கையில் குதூகலமாகவும், ஹாஸ்யமாகவும், அடிக்கடி பேசி, அவனை மகிழ்விக்க முயலுவாள். இப்போதோ, எதிர்பாராத பெருத்த விபத்திற்பட்டு மீண்ட பிறகு, அவள் ஹாஸ்யமாகப் பேசுவதையே அடக்கிக் கொண்டாள். ஏனெனில் தன்னை தனது கணவன் பெருத்த ஸாகஸஸி என்ற நினைத்துவிடுவானோ என்ற அச்சத்தினால் அவ்வாறு தனது நடத்தையை மாற்றிக் கொண்டாள். எப்போதும், அவனிடம் பணிவு, அந்தரங்கமான வாஞ்சை, கபட மின்மை, மனதிற் குகந்தவிதம் ஒழுகுதல் முதலிய குணங்களையே கொண்டவளாய், நாராயணனோடு கூட இருந்து அவனுக்குத் தேவையானவாறு அமைந்து சுகங் கொடுக்கும் ஆதிசேஷனைப்போலவும், உயிரோடு ஒன்றுபடும் உடல் போலவும், உடலோடு பொருந்தி நிற்கும் நிழல் போலவும் அவள் தனது கணவனிடம் ஒழுகினாள். அவளை வராகசாமி மனதென்றே சொல்லலாம். அவனுக்கு எது

இன்பகரமானதோ அதுவே அவளுக்கும் இன்பகரமானது. அவனை மகிழ்விப்பதையே அவள் பெருத்த பாக்கியமாக மதித்தாள்; கதை சொல்லச் சொன்னால் கதை சொல்லுவாள்; காலைப்பிடி என்றால் அப்படியே செய்வாள். அவனுக்கு சேவை செய்வதில் எத்தனை இரவு பகல்கள் கழியினும் அவளுக்குச் சலிப்பென்பதே கிடையாது. அவனும் அவளைத் தனது உயிர் நிலையாகவும், எவருக்கும் கிடைக்காத ஒப்பற்ற பெருத்த பாக்கியமாகவும் மதித்தான். அவன் கச்சேரியில் வேலை செய்யும்போதுகூட மேனகாவின் இங்கித வடிவமே அவனது கண்களின் முன்பு தாண்டவமாடி நிற்கும்; அவ்வாறு அவர்கள் நொடியேனும் இணைபிரியாத ஜோடிப் புறாக்களைப்போலவும், நாகணவாய்ப் புட்களைப்போலவும், அன்றிலிணையைப் போலவும், ஓயாமல் ஒன்று பட்டிருந்தன ரெனினும், பழகப் பழக பாலும் புளிக்கு மென்னும் பழ மொழிக்கு மாறாக அவர்களிருவரது ஜீவனும் மனமும் காந்தமும் இரும்பும்போல ஒன்றுபட்டு ஒருருக் கொண்டன. அவர்களது நட்பு கரும்பை நுனியிலிருந்து தின்று கொண்டு அடிக்குப்போவதைப்போல ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் அதிகரிக்கும் இன்பம் பயப்பதாயும், சுவையுடைய தாயும் வளர்ந்து வந்தது. மேனகாவோ தான் ஜில்லா கலெக்டரது ஒரே பெண்ணென்பதையும், சப் ஜட்ஜியின் மனைவி யென்பதையும் சிறிதேனும் பாராட்டாமலும், செருக்கடையாமலும், தான் கணவனுக்கு உகந்தவிதம் நடக்க வேண்டிய மனைவி யென்பதையே கடைப்பிடித் தொழுகி வந்தாள். தற்காலத்தில் திடீரென்று பெரிய பதவிகளுக்கு வருபவரது மாளிகையி லுள்ள சில பெண்டீரைப்போல தனிமையில் சேவகர்களோடும் மோட்டார் வண்டிகளில் அமர்ந்து உலாவுவதும், சாமான்கள் வாங்கப் போகிறதும், சமையற்காரர் சேவகர் முதலியோருடன் லஜ்ஜையின்றிப்பேசி ஆண்பிள்ளைகளைப்போல அதிகாரம் செலுத்தி பிறர்

சந்தேகமும் கொள்ளத் தகுந்த விதத்தில் ஒழுகுவதும் மேனகாவுக்குச் சிறிதும் பழக்கமில்லை. துலையில் கனமுள்ள தட்டு தாழும், கனமில்லாதது உயரும் என்பதைப்போல, அடங்கி யொடுங்கி, இன்பங் கொடுப்பதாம் இன்பமடைந்து, அன்போடு வாழ்வதே அழகிய வாழ்வென நினைத்து, அவள் படிதாண்டாப் பத்தினியாக இருந்து, கண்டோர் வியக்கும் வண்ணம் நடந்து, பெண் தெய்வம் போல இருந்து வந்தாள்.

இத்தகைய அரிய இளங்காதலர் இருவரும் முன் சொன்னவாறு மகிழ்வே உருவாக உட்கார்ந்திருந்தபோது, ரெங்கராஜு வாசற்கதவை மெதுவாகத் தட்டி, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான்.

அவனது குரலை அறிந்த மேனகா திடுக்கிட்டெழுந்து வந்து கதவைத் திறக்க, சென்னையிலிருந்து வந்த கடிதத்தை அவன் மரியாதையாக அவளிடம் கொடுத்துவிட்டு அப்பாற் சென்றான்; அது தனது கணவனுக்கு வந்ததோ வென்று ஐயமுற்று அவள் உடனே மேல் விலாசத்தைப் பார்த்தாள். அதில் தனது பெயரே இருந்ததையும், அது நூர்ஜஹானது கையெழுத்தாக இருந்ததையும் காணவே, அவளது முகத்தில் அன்பும் ஆநந்தமும் பூத்தன; "நூர்ஜஹான் கடிதம் எழுதி யிருக்கிறாள்" என்று குயில்போல இனிமையாகக் கூறிய வண்ணம் அவனுக்கருகில் வந்தாள்; சமீபத்தில் வந்த அப்பொற்கொடியை வராகசாமி கரைகடந்த அன்போடு இழுத்து, தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் தனது பக்கத்தில் உட்கார வைத்து, இடது கரத்தால் அவளை அணைத்துக் கொண்டு, "எங்கே வாசி: என்ன எழுதியிருக்காள் என்று பார்க்கலாம்" என்று கூற, மேனகா கடிதத்தைப் பிரித்து, அடியில் வருமாறு படிக்கலானாள்:-

"அரிய சகோதரீ! மேனகா! நீ மிகுந்த அன்போடு எனக் கெழுதிய கடைசி கடிதம் வந்தது. பார்த்து நிரம்பவும்

மகிழ்வடைந்தேன். நான் இதுவரையில் எத்தனையோ புஸ்தகங்களில் கதைகள் படித்திருக்கிறேன்; அநுபவத்திலும் எத்தனையோ ஸ்திரீகளைக் கண்டிருக்கிறேன். ஆனால், உன்னுடைய நற்குணத்தைப் பெற்றிருந்த பெண்களை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்று மேனகா முதல் வாக்கியத்தைப் படித்தாள். அதைக் கேட்ட வராகசாமி கரை கடந்த மகிழ்வடைந்து, "ஆம்! உண்மையான விஷயம்" என்று கூறி மேனகாவின் கன்னத்தில் ஆசையோடு முத்தமிட்டு மேலே படிக்கும்படி தூண்டினான். மேனகா மேலும் படிக்கிறாள், - "என்றாலும், நானும் என்னுடைய தகப்பனாரும் செய்த அற்ப உதவியை மலையாக வளர்த்து, அதைப் பெரிதும் பாராட்டி நீ எழுதியிருப்பது என் மனதிற்கு நிரம்பவும் கஷ்டமாக இருந்தது; இனிமேல் அந்த விஷயத்தைப் பற்றி எழுதாமலிருக்கக் கோருகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை உனக்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். போலீஸ் இன்ஸ்பெக்டர் சஞ்சீவி ஐயரென்பவர் செய்த சில அருமையான தந்திரங்களினால் என்னுடைய புருஷர் தமது பழைய நினைவுகளையெல்லாம் சுத்தமாக விடுத்து இப்போது புதிய மனிதராக மாறிவிட்டார். அவர் இப்போது என்னிடத்தில் உண்மையான அன்பையும், காதலையும் கொண்டு நற்குணப் புருஷராக ஒழுகி வருகிறார். நாங்கள் இருவரும் திரும்பவும் சந்தோஷமாக காலம் கழித்து வருகிறோம். ஆண்டவன் அருளால் இனி எப்போதும் நாங்கள் இப்படியே இருப்போமென்று நிச்சயமாக நான் நினைக்கிறேன்; நேற்றிரவு என்னுடைய தகப்பனாரின் பங்களாவுக்கு நான் போயிருந்தேன். அப்போது உங்களுடைய யோகக்ஷேமங் களைக் கேட்டு என் தகப்பனார் மிகவும் ஆநந்த மடைந்தார்; உன்னுடைய புருஷனுக்குத் திடீரென்று தானாக சப் ஜட்ஜி உத்தியோகம் ஆனதாகவும், அது யாருடைய சிபார்சினால்

ஆனதென்பதைப்பற்றி என்னுடைய தகப்பனாரிடம் கேட்டெழுதும்படி நீ எழுதியிருந்தா யல்லவா? அதைப்பற்றி நான் அவரிடம் கேட்டேன். அவர் தாமே கவர்னரிடம் சிபார்சு செய்து அந்தவேலை கொடுக்கும்படி செய்ததாகவும், அந்த விஷயத்தை ரகசியமாக வைத்துக் கொள்ளும்படியாகவும் என்னிடம் தெரிவித்தார். இதை உன்னுடைய பர்த்தாவிடம் சொல்லவும்.

நான் இன்றைய காலையில் இன்னொரு விஷயம் என் புருஷனிடம் கேள்விப்பட்டேன். அதுவும் உனக்கு அவசியம் தெரியவேண்டியதே. எங்களுடைய கடையில் குமாஸ் தாவாவும், என் புருஷனுக்கு துர்மந்திரியாகவு மிருந்து உன் விஷயத்தில் வஞ்சகம் செய்தவரான சாமாவையருடைய கேஸ் நேற்றோடு முடிவடைந்ததாம். அவர் பங்களாவை விற்ற விஷயத்தில் பொய்யான பத்திரம் தயார்ப் படுத்தியதற்காகவும், ஆள் மாறாட்டத்திற்காகவும் ஐந்து வருஷம் கடினக் காவல் தண்டனை அடைந்தாராம். அதைக் கேட்க, நிரம்பவும் விசன முண்டாகிறது. அவருடைய கதி, கெடுவான் கேடு நினைப்பான் என்றபடி யானது.

தவிர, உன் விஷயத்திலும், என் விஷயத்திலும் கைம்மாறு கருதாது எவ்வளவோ பாடுபட்டு உதவி செய்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சமீப காலத்தில் போலீஸ் கமிஷனர் உத்தியோகம் கிடைத்திருக்கிறது; அவருடைய நற்குணத்திற்கும் சாமர்த்தியத்திற்கும் அந்தப் பதவி ஒரு பெருத்த சன்மானமா காது. ஆனால், அதிசீக்கிரம் அவர் இன்னம் உயர்ந்த பதவிக்கு வருவாரென்று என்னுடைய தகப்பனார் சொல்லுகிறார். நீ உன்னுடைய கடிதத்தில் கேட்டுக் கொண்டபடி என்னுடைய தகப்பனார் இந்த சஞ்சீவி ஐயரை விடுத்து உன்னுடைய நாத்திமார்களைத் தேடச் செய்தார்; அவர் அவர்களைத் தேடிப்பாராத இடமே சென்னையில் இல்லை; அவர்கள்

எங்கிருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. அவமானத்தைச் சகிக்க மாட்டாமல் அவர்கள் கிணற்றில், குளத்தில் விழுந்து உயிரை விட்டார்களோ, அல்லது தூரதேசத்திற்குப் போய் ஒளிந்து கொண்டிருக்கிறார்களோ ஒன்றும் தெரியவில்லை. பிறவியி லேயே துர்புத்தியைக் கொண்டு அதிலேயே பழகிவந்தார்கள். எப்போதும் அதன் படியேதான் நடந்து கொண்டிருப்பார்கள். பிறர் எவ்வளவு நற்புத்தி புகட்டினாலும், வருந்தினாலும் அவர்களது மனமும் குணமும் நடத்தையும் மாறவே மாறா தென்பது உலக அநுபவ மல்லவா! தவிர நீயோ மிகவும் தயாள குணமுடையவள்; உன்னுடைய நாத்திமார்கள் திரும்பி வந்தாலும் அவர்களைச் சிறிதும் துன்பப் படுத்த உனக்கு மனமிராது. நிற்க, அப்படிப்பட்ட கொடிய துஷ்டர்களை நீங்கள் உங்களோடு கூடவைத்துக் கொள்ளுவதும் தவறு, ஆதலால், அவர்கள் இவ்வாறு காணாமற் போனதே அநுகூலமான காரிய மென்பது என்னுடைய நினைவு; நடப்ப தெல்லாம் நன்மைக்கே என்பது பொய்யாகாதல்லவா!

ஆனால், என்னுடைய எஜமானர் மறுபடியும் இவ்வளவு நல்லவராக மாறுவாரென்று நான் கனவிலும் நினைக்க வில்லை. ஆண்டவனருளால் நான் இப்போது மிகவும் சந்தோஷமாக இருந்து வருகிறேன். உன்னை இன்னொரு முறை எப்போது பார்ப்போ மென்னும் ஆவல் ஒன்றே என் மனத்தை வதைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் ஆண்ட வனுடைய அருள் எப்போது உண்டாகுமோ தெரியவில்லை.

நான் இன்று காலையில் நமது டாக்டர் துரைஸானியைப் பார்த்து, நீ அனுப்பிய சன்மானமாகிய ரூபாய் ஆயிரத்தையும் அந்த அம்மாளிடம் சேர்ப்பித்தேன். அதைப் பெற்றுக் கொள்ளவே அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆனால், உன் விஷயத்தில் அவர்கள் வைத்திருக்கும் அந்தரங்கமான அன்பை என்னவென்று சொல்வேன்! நீயும் புருஷனுமாக நீடுழி

சந்தோஷித்து வாழ, தாம் கடவுளை வேண்டிக் கொள்வதாக எழுதச் சொன்னார்கள். ஆகா! அவர்கள் மாத்திரம் இல்லா திருந்தால், உன்னுடைய கதி எப்படியா யிருக்கு மென்பதை நினைக்க இன்னமும் என் மனம் பதறுகிறது. சர்க்கார் வைத்திய சாலைக்குள் அன்னிய மாதாகிய உன்னைப் பணிப்பெண்ணைப் போல பொய் வேஷம் தரித்துக் கொண்டு போய் வைப்பது எவ்வளவு துணிகரமான காரியம்! அது மேலதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தால், அவர்களுடைய உத்தியோகமே போய்விடு மல்லவா! மகா துன்பகரமான விபத்தில் நீ இருந்தது பற்றி, தங்களுக்கு நேரக்கூடிய தீங்கையும் மதியாமல்; அவர்கள் இப்படிப்பட்ட மகா துணிகரமான காரியத்தைச் செய்தார்கள். அப்படிப்பட்ட அரிய பேருப காரியான அந்த அம்மாளை மாத்திரம் நாம் நமது உயிருள்ளளவும் நன்றி யறிதலோடு நினைத்தே தீரவேண்டும்.

என்னுடைய அன்பையும், ஆசையையும் கொள்ளை கொண்ட அருங்குண சகோதரியே! உங்களுடைய க்ஷேமத்தை அப்போதைக் கப்போது எழுதி யனுப்பும்படி பன் முறையும் வேண்டுகிறேன்; உனக்கு சமஸ்த சாதனமும், சர்வ மங்களமும் உண்டாவதாக.

**இங்கனம்**

**பிரியமான சகோதரி நூர்ஜஹான்**

- என்றிருந்த கடிதத்தை மேனகா படித்து முடித்து வராக சாமியை நோக்கினாள்.

அவன் ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்து மிதந்தவனாய் மிகுந்த பிரேமையோடு அவளை நோக்கி, “அடாடா! என்ன பிரியம்! என்ன அன்பு! ஜாதியாவது மதமாவது! அன்பின் பெருக்குக்கு எதுதான் தடையாக நிற்கும்! எல்லா உயிர்களிடத்தில் சமமான

இரக்கமும், பூத தயையும் எவர்கள் காட்டுகிறார்களோ அவர்களே தெய்வங்களைப் போன்றவர்கள்;அவர்களே உறவினர்; அவர்களே நண்பர்கள்; அவர்களே தாய் தந்தை சகோதரிகள்; அவர்களே உண்மையான விவேகிகள். என்னோடு கூடப்பிறந்த சகோதரி என் விஷயத்தில் மகா கொடியவளாக மாறிப் போனாள். யாரோ ஒரு மகம்மதியப் பெண் வேறு மதத்தினளான உன் விஷயத்தில் கொண்டுள்ள கரைகடந்த அன்பும் சகோதரி வாஞ்சையும் எப்படி இருக்கின்றன பார்த்தாயா? எனக்கு வாய்த்த சகோதரியைக் காட்டிலும் உனக்கு வாய்த்த சகோதரியே இணையற்றவள்; எந்த மதத்தினராலும் தெய்வமாக வைத்து வணங்கத் தக்கவள். நீ எப்போதும் அதிர்ஷ்டசாலிதான்!" என்று பெருத்த மகிழ்வோடு கூறி, அவளைக் கரைகடந்த பிரேமையோடு அணைத்துக் கொண்டான்; அவள் ஆநந்த பரவச மடைந்தவளாய், "தடையில்லாமல் நான் அதிர்ஷ்டசாலிதான்; இப்பேர்ப்பட்ட புருஷ உத்தமரை நாதனாக அடைந்ததை விட நான் அடையக்கூடிய அதிர்ஷ்டம் வேறு என்ன இருக்கிறது" என்று கூறி மனங் கொள்ளா வாத்சல்யத்தோடு வராகசாமியை அணைத்து முத்தமிட்டு ஸரச ஸல்லாபம் புரியத் தொடங்கினாள்.

**சுபம்! சுபம்!! சுபம்!!!**

**நிறைந்தது**

## நற்சாட்சிப் பத்திரம்

பெருமை சான்ற வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்கட்கு

**நெஞ்சுகந்த வந்தனம் க்ஷேமோபரி**

"தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
கற்றோரிற் சிரோரத்தினம் போன்றோரே!

என, ஆன்றோரில் சிறப்பு வாய்ந்துள்ள நாயனார் வாக்குக் கிணங்க, புகழுடம்பை எடுத்துள்ளாரில் நீவிர் ஒருவர். என்னெனில், சலமிகு புவியிலுள்ள மக்கள் நலவழியில் பிரவேசித்து நற்கதி யடைய , கல்வியில் வல்லோர் பல்லோரிடம் சென்று கேள்வி முயன்று ஒழுக; இக்கலி காலக் கொடுமையின் மிகுதியால் தவறுற்ற எம்போலியர்கள், நீதி பக்தி ஞானம் முதலியவை அடைய, கைம்மாறு கருதாது மிக்க ஆர்வத்துடனும் முயற்சியுடனும் தங்களால் வெளிவரும் நாவல்களில் தளிர் விட்டு வளரும் திகம்பர சாமியார் என்னும் நாவலின் பக்கம் உற்றாலும் தொட்டாலும் பார்த்தாலும் வாசித்தாலும் காந்தங் கண்ட இரும்புபோல் மனதை விட்டு அகலாதென்பது திண்ணம். நாவல் வல்லோர் பலர் வெளியிட்டுள்ள பல்லாயிரம் நாவலுள் தங்களால் வெளிவந்த இந் நாவல் நடுநாயகமென உரைக்கத்தக்க சிறப்பு வாய்ந்துள்ளது. **கல்வி கரையில், கற்பவர் நாட்சில, மெல்ல நினைக்கில் பிணிபல.** ஆதலின், பல நாவலுள் ஆராயப்பெற்ற மேன்மை வாய்ந்துள்ளது இதுவேயென யாவரும் கற்கத்தக்கது; இந்நூலை வாசிப்போருக்கு இதிலுள்ள விஷயங்கள் மனத்தை விட்டு அகலென்றாலும் அகலா. "**ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமைக்கும் ஏமாப்புடைத்து**" என்ற வாக்கியம் மெய்யென நிரூபிக்க, இந்நூல் ஆராய்ந்துள்ளாரே தெள்ளிதி லறிவர். ஆதலின், செய்யாமற் செய்த இப்பேருதவிக்கு யாம் அளிக்கத் தக்க கைம்மாறு இவணில்லை என யாம் அறிந்தும், **நாடொப்பன செய்** என்ற வாக்குக் கிணங்க, இச் சங்கத்தார் இந் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கலா னோம். கல்விமான்களனைவரும் இதுபோன்ற நாவல்களை வாசித்துக் கொண்டாடி மகிழ்வுற்று நாவலாசிரியர் உற்சாகமும் மகிழ்வையும் அடையுமாறு, தக்க பயனளிப்பார்களெனக் கேட்டுக் கொள்ளுகின்றனம்.

*மணப்பாறை* **(Sd) K.N. NARAYANASWAMY PILLAI**
*18.1.1921* *காரியதரிசி, திராவிட சங்கம்*

# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்

## திகம்பர சாமியார்








1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா வினோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா வினோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா வினோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா







... ... ... இதற்கு மேலும் வருவார் !